தொல் தமிழர் வரலாறு

பகுதி - 2

ம.சோ. விக்டர்

தொல் தமிழர் வரலாறு

(பகுதி - 2)

ம. சோ. விக்டர்

யாத்திசைப் பதிப்பகம்

50, அண்ணா நகர்

அரியலூர் – 621 713

அலைபேசி: 98432 73914

தொல் தமிழர் வரலாறு
(பகுதி – 2)

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 9843273914

© ஆசிரியர்

முதற்பதிப்பு : 2019

பக்கம் : 456
படிகள் : 1200

பதிப்பு :
யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் - 621 713
அலைபேசி: 98432 73914

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : 500/-

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

ஆய்வாளர் ம.சோ. விக்டர் ஐயாவின்

தொல் தமிழர் வரலாறு

என்கின்ற வரலாற்று சிறப்புமிக்க நூலை

தமிழர்குடிகள், பிரித்தானியா - இங்கிலாந்து

வெளியிட உதவி புரிந்தவர்கள்:

ஆர்.பி.சாமி பறையர் இங்கிலாந்து,

இராதாகிருஷ்ணன்ஆறுமுகம் பள்ளர் இங்கிலாந்து,

அ.கெர்மிசு பரவர் இங்கிலாந்து,

ஜான் மைக்கேல் கவுண்டர் இங்கிலாந்து,

கவி (எ)காளிதாஸ் வீரகுடி வெள்ளாளர் இங்கிலாந்து,

செந்தூர்பாண்டியன் நாராயணன் நாடார் இங்கிலாந்து,

க.நவநீதகிருட்டிணன் பறையர் ஸ்காட்லாந்து,

ப.அன்பழகன் வேளார் (குயவர்குடி) புதுக்கோட்டை சிங்கப்பூர்,

வ. வேல்குமரன் முதலியார், வேளாளர்குடி இங்கிலாந்து,

க. செந்தில்நாதன், கொங்குவெள்ளாளர் இங்கிலாந்து,

ஆ. பா. கார்த்திகேயன்பிள்ளை (வெள்ளாளர்குடி) சவுதி,

த.விக்னேஸ்வரன் பிள்ளை (சைவ வெள்ளாளர்) போலந்து,

முனைவர் **கு.மோகன்ராஜ்** பறையர் (ஈசரேல்நாடு),

ச.சேதுராமலிங்கம் தேவர் (கள்ளர்குல தொண்டைமான்) இந்தோனேசியா,

நாகராஜன் சண்முகம் செங்குந்த முதலியார் இங்கிலாந்து,

ம.சு.கருணாகரன் வன்னியக்கவுண்டர் இங்கிலாந்து,

மேலும் பெயர் குறிப்பிட விரும்பாத மற்ற தமிழர் குடி உறவுகளும்...

செம்மொழிச் சித்தர், முதுமுனைவர், செந்தமிழ் அந்தணர் இளங்குமரனாரின் சான்றுரை

வெற்றியர் திரு. விக்டர்

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் – 620 101.
திருச்சி மாவட்டம்.

தமிழ்த் திருவாளர் ம.சோ. விக்டர் அவர்கள் அரிய தமிழ்ப் பற்றாளர்; ஆழ்ந்த ஆய்வாளர், பாவாணர் கருத்து களில் பயின்ற தோய்வாளர்; அவர் கண்ட கொள்கைகளைப் பலப்பல நூல்களால் நிறுவி வரும் மொழி நல மீட்பாளர்.

தமிழன் தோன்றிய குமரிக் கண்டம்;

அவன் பேசிய மொழி தமிழ்;

அத்தமிழே உலக மொழிகளின் தாய்மொழி;

தமிழே ஆரியத்துக்கு மூலம்;

திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி ஆவது தமிழே;

என்னும் கொள்கைகளை உலகப் பேரறிவர் சான்றொடும் உள்ளார்ந்த ஆய்வொடும் நிறுவுவதே தமது வாழ்வாகக் கொண்டு, அசைக் கொணாச் சான்றுகளுடன் நூல்களைப் படைத்தவர் பாவாணர்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள், தம் ஆழிய ஆய்வொடும், கால வளர்ச்சியாலும் தம் உள்ளொளியாலும் மேலும் மேலும் அக்கொள்கைகளை நிறுவ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப்

படைத்துவரும் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். அவர் தம் நூல்களை இயல்பான ஓட்டத்தில் தடையின்றிக் கற்கவும் தெளிவுறவும் வாய்ப்பாம் வகையில், வனப்புற ஓர் ஒழுங்கில், நல்ல கட்டமைப்பில் அச்சிட்டு, உலகத் தமிழர்க்குக் கொடை யாக வழங்க வல்ல "யாத்திசைப் பதிப்பகமாம்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள் பன்மொழிப் புலமையாளர்; நுனிப்புல் மேயாத நுண்ணிய கல்வியர். தொல்காப்பியச் செல்வம், சங்க நூல்வளம், திருக்குறள் தோய்வு, காப்பியக் கவின் யாவும் ஒருங்கே கைவரப் பெற்றவர். புலமையர் வழக்கோடு பொதுமக்கள் வழக்கையும் ஊன்றி அறிந்து, உரிய வகையில் போற்றும் ஆற்றலர். இயல்பான ஆற்றோட்ட நடையில் எழுதவும் வல்லவர். ஆதலால், தம் பெயரை நிறுவு வார் போல், "வெற்றி" மேல் வெற்றிப் படைப்புகளைச் செய்து வருகின்றார்.

"க" என்னும் எழுத்துப் பற்றி விளக்கி ஒரு நூல்,

"எல்-யா" என்னும் இருமை ஒரு சொல் பற்றி ஒரு நூல்,

உலகளாவிய தமிழ், உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், எபிறேய மொழியில் தமிழின் வேர், தமிழும் சமற் கிருதமும், தமிழும் செமிட்டிக் மொழியும், இந்திய மொழி களின் தாய் தமிழே, பஃறுளி - யூப்ரடீசு, குமரிக்கண்டம், குமரிக்கண்டமும் ஆப்பிரிக்கக் கண்டமும், தமிழும் ஆரியமும், மேற்கிலும் தமிழ், வாழும் தமிழ், தமிழ் மணம், சேயோன், சேயன், தமிழரின் எண்ணியல், வானியலும் தமிழரும், சிந்துவெளி நாகரிகம், தமிழும் எபிறேயமும், பாபிலோனியர் தமிழ், தமிழ்நாட்டுக் கிறித்துவம், இசுலாம் தமிழர் சமயமே என அடுக்கடுக்காக ஆய்வு நூல்களைப் படைத்து வருபவர்.

ஓய்விலாப் படைப்பாளியாம் திரு. ம.சோ. விக்டர் அவர்களின் நூல்கள் "தனித்தனி முனைவர் பட்டம் பெறத் தக்கவை" எனினும், பட்டம் பற்றிக் கவலைப்படாமல், கருதாமல், கடமை புரிதலே பிறவிப் பேறு எனக் கொண்டு, தொண்டு புரிந்து வரும் தோன்றல் அவர்.

பன்முகப் பார்வைப் படைப்பவராம் திரு. ம.சோ. விக்டர், நன்முகத் தோற்றத்தர்; நவில் தோறும் நயமாம் நூல்போல், பழகுந்தொறும் "தேனோடு பால் கலந்த" இனியர். தமிழ்த் தொண்டரை மதிப்பவர். தமிழ்த் தொண்டரொடு தாமும் தொண்டராய் ஊன்றி நிற்பவர். மேலும் மேலும் அவர் படைப்புகள் தமிழ் வளமாய்த் தொடருமாக! இன்பமே மல்குக.

இரா. இளங்குமரன்

ஆசிரியர் உரை

தமிழருடைய வரலாறு ஈராயிரம் ஆண்டுகளுக்குட்பட்டதுதான் என்றும், தமிழ் இலக்கியங்களின் வரலாறு ஆயிரத்து ஐநூறு ஆண்டுப் பழமை கொண்டதுதான் என்றவாறு, தமிழ்ப் பகைவர்கள் அடிக்கடி கூறி வருகின்றனர். தமிழைச் செம்மொழியாக அறிவித்த நடுவண் அரசு, தமிழ் மொழியில் இலக்கியங்கள் தோன்றி ஆயிரம் ஆண்டுகளாகிவிட்டன; அதனால் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க முடிவு செய்தோம் எனக்கூறினர். இவ்வறிவிப்பினைக் கேட்ட தமிழர்கள் கொதித்துப் போயினர். தங்களது எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். சரிபரவாயில்லை, இன்னும் ஐந்நூறு ஆண்டுகளைக் கூட்டிச் கொள்ளுங்கள் என்று பிச்சையிடுவதைப் போல், செயபால் ரெட்டி என்ற அமைச்சர்அறிவித்தார். செம்மொழித் தகுதி அறிவிப்பிலேயே தமிழ் சிறுமைப்படுத்தப்பட்டது. அதுபற்றி எவரும் கவலைப்பட வேண்டாம், செம்மொழி என்று அறிவித்துவிட்டார்களே, அதுவே போதும் என்று இங்குள்ளவர்கள் பெருமிதம் கொண்டனர்.

தமிழைச் செம்மொழியாக நடுவண் அரசு அறிவித்ததால், தமிழுக்கு என்ன பயன்? ஆண்டுக்கு சில கோடிகள் நடுவண் அரசு வழங்கும் என்றனர். அத்தொகையினைக் கொண்டு தமிழை வளர்த்து விடலாம் என்றனர். நடுவண் அரசு அளிக்கும் தொகை, தமிழ்நாட்டு அரசிடம் இல்லையா? அதனைத் தமிழக அரசே செலவிட முடியாதா? செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்ததில் தமிழின் பெருமை உயர்ந்துவிட்டதா? தமிழ் மொழி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது போலவும், நடுவணரசு அதற்கு உயிர் கொடுத்துவிட்டது போலவும், ஒரு நாடகத்தை அரங்கேற்றினர். கடந்த நான்காண்டுகளில், செம்மொழி நிறுவனம், தமிழ் மொழிக்கெனப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாகவும் அறிவித்துள்ளனர்.

தமிழ்மொழியின் வரலாறு ஈராயிரம் ஆண்டுகளுக்குட் பட்டதா? சங்க காலத்தின் அளவுகோல் என்ன? தொல்காப்பி யருடைய காலம் யாது? முதல், இடைச் சங்கங்கள் உண்மையில் இருந்தனவா? உலக நாகரிகங்களின் வரிசையில், தமிழர் நாகரிகம் எந்தக் கால அளவைக் கொண்டது? தமிழ்மொழிக்கும் மூத்த மொழி இருந்ததா? தமிழருடைய வரலாறுதான் என்ன? தமிழருடைய வரலாறு எக்கால அளவில் தொடங்கிற்று?

மேற்கண்ட கேள்விகளுக்கு விடைகாண இதுவரை எவரும் முன்வரவில்லை. அவ்வாறு முன் வருவோருக்கும் எந்த உதவியும் கிட்டவில்லை. செம்மொழித் தமிழுக்கென்று மாநாடு நடத்தப்பட்டது. பல கோடிகள் செலவு செய்யப்பட்டன. 800க்கும் மேற்பட்ட கட்டுரைகள் பெறப்பட்டு, மலராக வெளிவந்தது. அக்கட்டுரைகளில் தமிழ் மொழி, தமிழர் நாகரிகம், தமிழர் வரலாறு பற்றி ஏதாவது புதிய செய்திகள் வந்தனவா?

சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகம் அன்று, அது திராவிட நாகரிகம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. சிந்துவெளி மொழியில், தமிழ்ச் சொற்களைவிட, கன்னடச் சொற்களே மிகுந்து காணப்படுகின்றன என கட்டுரைகள் படிக்கப்பட்டன. திராவிடம் என்ற மூலத்தினின்றே தமிழ் என்றவொரு மொழி பிரிந்தது என்பதை நிலைநாட்ட முற்பட்டனர். குமரிக் கண்டத்திலேயே திராவிட நாகரிகம் வேரூன்றியிருந்தது என ஒருவர் கட்டுரை படித்தார். திராவிடம் என்பது மூத்தமொழியென்றால், அம்மொழி எக்காலத்தில் தோன்றியது? அதற்கு எழுத்து வடிவங்கள் உண்டா? திராவிடர் என்போர் யாவர்? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடைகளை எவரும் சொல்லவில்லை. செம்மொழி மாநாட்டில், திராவிடம் போற்றப்பட்டது.

தமிழருடைய வரலாற்றைத் தோண்டியெடுத்து அவற்றைக் காலவாரியாகத் தொகுக்க வேண்டும் என்ற சிந்தனை எவருக்கும் இல்லை. உலகின் மூப்புடைய இனம் எது? அது வாழ்ந்திருந்த காலம் எது? அவர்கள் பேசிய மொழி என்ன? அவர்களுடைய நாகரிகம் எவ்வாறு வளர்ந்தது? இக்கேள்விகள், மனித இனத்தின் மாண்புகளை வெளிக்கொணர வைக்கும். மேற்கண்ட கேள்விகளுக்கு விடை காண முற்பட்ட ஆய்வா ளர்களின் குழு, உலகின் முதல் இனம் ஆப்பிரிக்க இனமே என

அறிவித்தது. இந்த ஆய்வினை, அய்க்கிய நாட்டு அவையின் ஒரு கிளையாகிய "யுனெஸ்கோ" நிறுவனமே மேற்கொண்டது. பதின்மூன்று தொகுதிகளாக பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களில், அத்தொகுப்பு வெளியிடப்பட்டது. இன்று உலகமொழிகளில் 52க்கும் மேல், அவ்வாய்வுத் தொகுப்பை மொழிமாற்றம் செய்து கொண்டுள்ளனர்.

ஆப்பிரிக்க வரலாற்றுத் தொகுப்பு, பல்வேறு உண்மைச் செய்திகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. அத்தொகுப்பு வெளிவந்து 40 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. அத்தொகுப்பு பற்றிய செய்திகள்கூட, தமிழ்நாட்டுத் தமிழ் வளர்ச்சி நிறுவனங் களுக்குத் தெரியவில்லை. அத்தொகுப்பில் காணப்படும் பல்வேறு செய்திகள், தமிழருடைய வரலாற்றைத் தொட்டு நிற்கின்றன. ஆப்பிரிக்க மொழிகள் பற்றி ஆய்வு செய்த மதாம் பிளாவட்ஸ்கி, "ஆப்பிரிக்க மொழிகளின் மூல மொழிகளாக மூன்று மொழிகளைக் கூறுகின்றார். அம்மூன்று மொழிகளும் எகிப்திய, எத்தியோப்பிய, மெசப்பத்தோமிய மொழிக் குடும் பத்தின் கிளைகளாக உள்ளன என்றும் அதன் வழியில் கிளைத் தவையே என உறுதி செய்துள்ளார். இந்தப் பின்னணியில், இம்மூன்று மொழிகளும் எவ்வாறு தோன்றின என்ற கேள்வி எழுகின்றது. இம்மொழியினை "முன்மொழி" (Proto - language" என்று கூறுகின்றனர். மதாம் பிளாவட்ஸ்கி பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். தமிழ்மொழியை உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்ற சிந்தனையில்லாதவர். உண்மையான, நடுநிலையான ஆய்வாளர். மேற்கண்ட மூன்று மொழிகளும் தமிழ் மொழியி னின்றும் கிளைத்தவைகளே என்கிறார். தமிழ்மொழிக்கு அவர் அளித்துள்ள சான்றிதழ், தமிழ் அறிஞர்களின் கண்களைத் திறந்திருக்க வேண்டாமா?

தமிழாய்வு நிறுவனங்கள் செய்ய வேண்டிய பணிகளை, பல்கலைக்கழகங்கள் ஆற்ற வேண்டிய பணிகளை, அரசுகள் மேற்கொள்ள வேண்டிய பணிகளை, வாய்ப்புகள் இல்லாத, பொருள் இல்லாத, ஒரு சில தமிழ் அறிஞர்கள் செய்து வருகின்றனர். அம்முயற்சிக்குக்கூட ஒத்துழைப்புக் கிடைப்ப தில்லை.

தொல் தமிழர் வரலாற்றைத் தோண்டியெடுத்து ஆராய் வதற்கு, தமிழ் இலக்கியங்களில் தேவையான சான்றுகள் இல்லை. குடியேற்றத் தமிழர்கள் பதிவு செய்துள்ள பல்வேறு

ஆவணங்களே இன்று நமக்குத் துணை நிற்கின்றன. களிமண் தட்டுகளிலும், பாப்பிரஸ் தாள்களிலும், கல்வெட்டுகளிலும் காணப்படும் பல்வேறு ஆவணங்களும், அகழ்வாய்வுகளில் தோண்டி எடுக்கப்பட்ட பொருட்களும், சமய நூல்களும், மரபுச் செய்திகளும், மூத்தோர் குறிப்பிடும் செய்திகளுமே இன்றைக்கு ஆய்வுகளுக்கேற்ற சான்றுகளாக எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மெசபத்தோமிய - பாபிலோனியச் சமயக் குறிப்புகள், அசீரியச் சமயக் குறிப்புகள், போனீசியச் சமயக் குறிப்புகள், எகிப்தியச் சமயக் குறிப்புகள் துணை நிற்கின்றன. சிறப்பாக எபியேற மொழியில் எழுதப்பட்டுள்ள தோரா (விலிலியம்), அரபு மொழியில் தொகுக்கப்பட்ட குர்ஆன் ஆகிய சமய நூல்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இந்திய இலக்கியங்களில் இரிக்கு வேதம், தமிழரின் வரலாற்றை விளக்கும் சிறந்த ஆவணமாகும். இரிக்கு வேதத்தின் உட்பொருளை உணர்ந்து கொண்டால், தொல்தமிழர் பற்றிய ஏராளமான செய்திகளை நாம் அங்கே காணலாம்.

சமய இலக்கியங்களைச் சான்றுகளாக எடுப்பதால், சமயக்கொள்கைகளைப் பரப்புரை செய்வதாகக் கருதக்கூடாது. ஆனாலும் சமய இலக்கியங்கள் தரும் வரலாற்றுச் சான்றுகளையும் மறுக்க இயலாது. மேற்கித்திய இலக்கியங்களை ஆராய்ந்து தமிழர் வரலற்றைக் காண எடுக்கப்பட்ட இம்முயற்சி, முற்றிலும் முதன்மையானதும், தமிழ் ஆய்வுலகத்துக்குப் பொருத்தமானதுமாகும். இந்நூலில் விளக்கப்பட்டுள்ள செய்திகளை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் எனக் கருத இயலாது. அப்படிக் கருதினால் அது ஆய்வாக இருக்காது. இந்நூலைப் படிப்பவர்கள், ஆய்வுக் குறிப்புகளைக் கூர்ந்து நோக்கி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இது ஒரு முயற்சியின் தொடக்கமே. படித்துப் பயன் பெறுங்கள்.

ம.சோ. விக்டர்

பொருளடக்கம்

	சான்றுரை	7
	ஆசிரியர் உரை	10
1.	மோவாபியர்	17
2.	அமோனியர்	22
3.	தாமர்கள்	25
4.	உன் கரையர்கள்	29
5.	வைசம் பாயனர்	37
6.	ஈழம்	46
7.	கல்தேயம்	49
8.	கனானியர்	50
9.	கெனியர்	51
10.	மிடியர்	52
11.	அராபியர்	53
12.	கிரேக்கர்	59
13.	கிரேக்கச் சமயம்	73
14.	ஈத்தியர்	79
15.	ஆரியர்கள்	86
16.	சிந்துவெளி	88
17.	ஆரியர் சார்புக் கண்ணோட்டம்	96
18.	ஆரியர் தர்மம் யாது?	105
19.	ஆரியரும் சமற்கிருதமும்	113
20.	உலக மொழிக் கொள்கை	116
21.	பூ – சமற்கிருத வேர்ச்சொல்	117
22.	சமற்கிருத மொழியின் தோற்றம்	121
23.	வேதங்கள்	133

24.	இருக்கு வேதம்	146
25.	ருக்கு – இருக்கு	149
26.	உருத்திரர்	151
27.	ஆதித்தியர்	152
28.	அசுவினியர்	154
29.	இந்திரன்	156
30.	உஷா	162
31.	வாயு	167
32.	அய்த்திரேய உபநிடதம்	173
33.	புருஷ சூக்தம்	177
34.	தமிழரின் படைப்புக் கதை	180
35.	வேதம் கூறும் வானியல்	187
36.	விண் ஞானம் – விஞ்ஞானம்	190
37.	ஆண்டுக் கணக்கு	196
38.	அவிசித்து	203
39.	உரோகிணி	204
40.	புணர்வசு	206
41.	வேதமும் கணக்கியலும்	206
42.	யுகம் அல்லது உகம்	209
43.	தசை – சதை	216
44.	யாசூர் வேதம்	220
45.	மகாலெட்சுமியின் சிறப்பு	222
46.	சாம வேதம்	226
47.	சாம வேதமும் கர்நாடக இசையும்	227
48.	தமிழரின் தோலிசைக் கருவிகள்	228
49.	சோமயாகம் செய்வது எவ்வாறு?	232
50.	அதர்வண வேதம்	234
51.	தமிழ்ச் சித்தர்கள்	239
52.	அதர்வண வேதப் பச்சிலைகள்	243
53.	வேதங்களும் திருமணமும்	245
54.	வேதங்கள் – பொதுக்கருத்து	249

55.	சிந்துவெளித் தமிழர்கள்	259
56.	கி.மு. 7500 இந்திய அரசு	261
57.	தொன்மைக்கால எழுத்து முறைகள்	266
58.	இந்தியாவின் முதன்மொழி சமற்கிருதம்?	278
59.	சிந்துவெளிச் சிந்தனைகள் – எஸ்.ஆர். இராவ்	284
60.	சிந்துவெளி எழுத்துமுறை	286
61.	சிந்துவெளி ஆய்வுகள் – எஸ்.ஆர் இராவ்	304
62.	சிந்துவெளி ஆய்வுகள் – அங்கோ பர்ப்போலா	307
63.	மீன்	316
64.	வடம்	320
65.	முருகு	325
66.	வேள்	330
67.	சிந்துவெளி மக்கள் திராவிடர்களா?	333
68.	சிந்துவெளிச் சமயம்	336
69.	சிந்துவெளிக் கடவுள்	346
70.	சிந்துவெளி மொழி	358
71.	சிந்துவெளி மக்கள் யாவர்?	368
72.	குமரிக்கண்ட அழிவு	371
73.	நான்கு நிலக் கடவுளர்	380
74.	சேயோன்	384
75.	மாயோன்	385
76.	வேந்தன் – இந்திரன்	386
77.	வாரணன்	391
78.	கொற்றவை	392
79.	குறிஞ்சி	395
80.	முல்லை	400
81.	மருதம்	403
82.	நெய்தல்	408
83.	பாலை	414
84.	தமிழ்மொழியின் மரபுகள்	418

மோவாபியர் (Moabs)

மோவாப்:

இசுராயெல் நாட்டிற்குத் தெற்கே அமைந்துள்ள உப்புக்கடல் அல்லது சாக்கடல் என்ற ஏரிக்குக் கிழக்கே, ஆறுநான் (Arnon) என்ற ஆற்றுக்குத் தெற்கே அமைந்திருந்த ஒரு சிறிய நாடே மோவாப் எனப்பட்டது.[464] நெல்சன் குளூயெக் (Nelson Glueck) என்ற ஆய்வாளரின் கருத்துப்படி, கி.மு. 2300 - 2000 ஆண்டுகளில் மிகச்சிறந்த நகரிய நாகரிகத்தில் இந்நாடு திளைத்திருந்தது. கி.மு. 1900 முதல் 1300 வரையிலான காலத்தில், இந்நாகரிகம் முடிவுக்கு வந்தது. இதற்கான காரணம் யாதெனத் தெரியவில்லை. வெளிநாட்டவர் படையெடுப்பு, இயற்கைப் பேரிடர் வறட்சி போன்ற காரணங்களை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இக்கால அளவில் மோவாப் நாட்டில் மக்கள் வாழ்ந்திருக்கவில்லை எனவும் கருதலாம். கி.மு. 1300 ஆண்டுகளில், அதாவது இசுராயெல் மக்கள் எகிப்திலிருந்து திரும்பு முன்னர், ஒரு வேளாண்மையுடன் தொடர்புடைய நகரிய நாகரிகம் அங்கே துளிர்த்தது. அது ஓர் அரசாகவும் உருவெடுத்தது.[465] கி.மு. 600ஆம் ஆண்டு வரையிலும், அதாவது இசுராயெல் ஆட்சி நீடித்தது வரையிலும், மோவாப் அரசும் நிலை கொண்டிருந்தது.

புகழ்பெற்ற கல்வெட்டான, மேஷ மன்னனுடைய கல்வெட்டு (Mesha's edict) அந்நாட்டின் மக்களைப் பற்றியும், மொழியைப் பற்றியும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எபிறேய மக்களும் (இசுராயெல்) மோவாபியரும் ஓரினத்தின் இரு கிளைகளே என்பதை அக்கல்வெட்டு மெய்ப்பிக்கின்றது. மோவாபியரின் மொழி ஏறக்குறைய எபிறேய மொழியே என்று கருதலாம்.[466] இவ்விருவருடைய வழக்குகளும் வழக்காறுகளும் ஒன்று போலவே காணப்பட்டன. நெல்சனின் கருத்துப்படி, எகிப்தினின்றும் மீண்ட எபிறேய மக்களை, தம் நாட்டின் வழியே செல்ல, மோவாபியர் இசைவளிக்கவில்லை.

நாட்டுக்குள் நுழைய தடைவிதித்ததால், அம்மக்கள் மாற்று வழியில் கனான் நாட்டை அடைந்தனர் என்று கொள்ளலாம். இதனை விவிலியமும் உறுதி செய்கின்றது. இதற்கான காரணம் யாதென தெளிவாக விளக்கப்படவில்லை யென்றாலும், மோசேயின் தலைமையை மோவாபியர் விரும்பவில்லை என்றே தோன்றுகிறது. மேலும் மோசே தோற்றுவித்த புதிய சமயத்தையும் மோவாபியர் ஏற்றுக் கொள்ளவில்லை. தங்க ளுடைய முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த சமய, வணக்க முறைகளையே அவர்கள் பின்பற்றி வந்தனர் எனவும் சொல் லப்படுகின்றது.

மோவாபிய மக்களின் முன்னோர்கள் பற்றி இருவகை யான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வில்சன் (A. Wilson) என்பாருடைய கருத்துப்படி, சேத் (shet) என்ற மரபினர் வழிவந்தவர்கள் என்பதை எகிப்தியக் குறிப்புகள் தெரிவிக் கின்றன. எகிப்திய மன்னன் ராம் சேஸ் (1301 - 1234 கி.மு.) இப்பகுதியை வென்றதாக, எகிப்தியக் குறிப்புகள் கூறுகின்றன. எகிப்தியப் படைகள், செங்கடலில் மூழ்கியது அல்லது திரும்பிச் சென்றது என்ற நிகழ்வின் அடிப்படையில், மீண்டும் எகிப்தியரின் மேலாண்மை, மோவாபில் நிகழவில்லை என அறியலாம். பின்னர் 600 ஆண்டுகள் தனித்தன்மையுடன் ஆண்டனர். பிளேசர் (Tiglath Pilesar III) என்ற அசீரிய மன்னன் (கி.மு. 745 - 727) சாலமனு என்ற மோவாப் பகுதியைத் தன் ஆட்சியுடன் இணைத்துக் கொண்டான். சென்னகரிப் (Senna-cherib - சின்னக் கரியவன்) என்ற காமுசுண்டபி (செமோசு நாடு - chemosh Nadap) என்ற பகுதியை இணைத்துக் கொண்டான். பின்னர் பல்வேறு படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கி.மு. 630 ஆண்டுகளில், மோவாப் பாபிலோனிய ஆட்சிக்குத் திரை செலுத்தி வந்ததாகச் செய்திகள்கூடப் பெறுகின்றன. வில்சன் மேற்கண்ட செய்திகளைத் தொகுத்துக் கூறியுள் ளார்.[467]

மற்றொரு செய்தியின்படி, உலோத் என்பவனுடைய மரபினர் மோவாபியர் என்று சொல்லப்படுகின்றது.[468] இதன் பின்னணியை அறிய உலோத்து என்பவனுடைய குறிப்புகள் பற்றிக் காணலாம். உலோத்து (Lot) என்பவன், அபிறகாமின் ஒன்றுவிட்ட உடன் பிறப்பாகும். நாகோர் என்பவனின் பெயரர் களில் ஒருவன். இப்பெயருக்கான விளக்கத்தை எவராலும்

அளிக்க இயலவில்லை. இது இயற்பெயரின்றும் திரிபுபட்ட சுருக்கப் பெயராக இருக்கக்கூடும். இப்பெயர் இவனது பெற்றோர்களால் வைக்கப்பட்டதா அல்லது பிற்காலத்தில் அறியப் பட்டதா என்பதும் தெரியவில்லை. அரண் என்ற நகரிலிருந்து (Haran) கனான் நாட்டுக்கு அபிறகாம் புறப்பட்டபோது உலோத்தும் உடன் சென்றதாக விவிலியம் கூறுகின்றது.469 (ஆதி. 12:4) இவனுக்கும் ஒரு பெரிய குழுவினர் இருந்ததாகவும், கால் நடைகள் இருந்ததாகவும் விவிலியம் தெரிவிக்கின்றது. இரண்டு குழுக்கள் ஒன்றிணைந்து செல்லும்போது ஏற்பட்ட பிணக்குகளால், உலோத்து அபிறகாமைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டதாக விவிலியச் செய்திகள் கூறுகின்றன.

உலோத்து (உலவு - உலத்து என்றவாறு சுற்றி அலைந்தவன் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கலாம்) சோதோம் என்ற நகரில் வாழ்ந்திருந்தான். அந்நகரை கடவுள் தீக்கிரையாக்கி அழித்தபோது, உலோத்துவையும் அவன் மனைவி, மற்றும் இரு மகள்களையும் காத்து மீட்டதாக விவிலியம் செல்கிறது.[470] (ஆதி. 19:1-26) ஊரைவிட்டு வெளியேறும்போது, கடவுளின் அறிவுரையை மீறி, உலோத்துவின் மனைவி பற்றி எரிகின்ற ஊரைத் திரும்பிப் பார்த்தபோது, உப்புச் சிலையானாள். (இதற்கு அறிவியல் காரணங்களையும் தற்கால ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.) உலோத்து தன் இரு மகள்களுடன் ஊருக்கு வெளியே ஒரு குகையில் வாழ்ந்திருந்தான். உலோத்துக்கு ஆண் குழந்தையில்லை என்பதாலும், திருமண வயதில் இரு பெண்களை எவரும் மணக்க முன்வரமாட்டார்கள் என்பதாலும், தம் தந்தைக்கு மதுவைக் கொடுத்து அவன் மூலம் ஆளுக்கொரு மகன்களைப் பெற்றெடுத்துக் கொண்டனர் என்று விவிலியம் கூறுகிறது.[471] (துணை ஆகமம், 2:9; சங்கீதம், 83:9)

இவ்வாறு முறைகேடாகப் பிறந்த (சிலர் அவ்வாறு நிகழவில்லை என்றும் கூறுகின்றனர்) இரு ஆண் குழந்தைகளும், தந்தைக்குப் பிறந்ததால், மிஅப் (Me - ab) என்றும், பென் அம்மி (Ben-ammi) என்றும் பெயர் சூட்டப்பட்டனர்.[472]

மி-அப் என்பதற்கு, தந்தையிடமிருந்து (பெற்றெடுக்கப்பட்டது) என்பது பொருளாகும். இது எபிறேய மொழிப் பெயராகும்.

மி என்ற சொல், மெய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகவே உள்ளது.

மெய் என்பது உடலை அல்லது மகனைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

அப் (Ab) என்பது, அப்பா (Abba) என்ற சொல்லின் எபிரேயமொழிச் சுருக்கமாகும். எனவே, மி-அப் என்ற பெயர், அப்பாவினால் கொடுக்கப்பட்ட மகன் என்ற பொருளைத் தருகின்றது. இந்த மி-அப் என்ற சொல்லே, மோ - ஆப் எனத் திரிந்ததாக விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உலோத் வழியில் பிறந்த மற்றொரு குழந்தையின் பெயர் பென் - அம்மி (Ben - Ammi) என்பதாகும். இப்பெயருக்கு இரத்த உறவில் பிறந்த மகன் (son of my blood relation) என்பதே பொருளாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பென் (Ben) என்ற எபிரேயச் சொல்லுக்கு, தந்தைக்குப்பின் (after my father) என்பதே பொருளாகும். பொதுவாக தந்தையின் பெயரையும் இணைத்தே ஒருவனுடைய பெயர் இன்றும் அரபுமொழியில் கூறுவது வழக்காக உள்ளது. பென் என்ற சொல், பின் (Bin) என்று அரபுமொழியில் சொல்லப்பட்டுள்ளது. அபு பென் ஆதம் (Abu - Ben - Adam) என்பது எபிரேயப் பெயராகும். ஒசாமா - பின்லேடன் (Osama - Bin - Laden) என்பது அரபுப் பெயராகும். யாமன் என்ற தமிழ்ச்சொல், தென்திசைக்கு உரியவன் என்ற பொருளைத் தரும். (யா = தெற்கு) பென் - யாமன் என்ற பெயர், பெஞ்சமின் என்று கிரேக்க மொழியில் சொல்லப்பட்டுள்ளதை நோக்குக. யாக்கோபுவின் கடை மகளும், தெற்குப் பகுதியில் பிறந்தவனுமான பென் - யாமன் அவ்வாறு சொல்லப்பட்டான்.

அம்மி (Ammi) என்ற சொல், அம்மா என்ற சொல்லோடு தொடர்பு கொண்டது. அம்மாவுக்கும் குழந்தைக்கும் இரத்த உறவுண்டு. அதுபோலவே, அம்மாவுடன் பிறந்த தாய் மாமனை, அம்மான் என்று அழைப்பதும் தமிழ் மரபு. அம்மான், தாயுடன் இரத்த உறவு கொண்டவன். அம்மாவுடன் உறவு கொள்பவன் அப்பா. அம்மாவுடன் உறவைத் தவிர்த்த, மகளுடனான அப்பாவின் உறவை அம்மி என்ற எபிரேயச் சொல் விளக்கு கின்றது. மி-அப், பென் அம்மி ஆகிய இரண்டு சொற்களையும், எபிரேய மொழியில் பொருள் காண்பதைவிட, தமிழ் மூலத்தில் பொருள் கொண்டால், ஆழமான பொருள் வெளிப்படும். இவ்விரு பெயர்களிலும் உள்ள பொருளின் ஆழத்தை, எபிரேய மொழி அறிஞர்கள் முழுமையாக விளக்கவில்லை என்றே கருதவேண்டியுள்ளது. பென் - அம்மி வழிவந்தோரை, அமோனியர் என்று குறிப்பிட்டுள்ளனர். (விளக்கம் அடுத்த தலைப்பில் காண்க).

மேற்கண்ட செய்திகளின்படி, மோவாபியர் என்போர், உலோத்து என்பவனின் மரபினரே என்று சொல்லப்படுவதால், மோவாபியரும் எபிறேய இனத்தவரே என்பதை உறுதி செய்யலாம். ஏற்கனவே, போனீசியரும் எபிறேய இனத்தவரே என்பதை விளக்கப்பட்டுள்ளது. மோவாபியரும், மோசே வழி எபிறேயரும் முரண்பட்டதற்கான காரணங்கள் பல உள்ளன. நாகோர் என்பவனின் வழியினரில், அபிறகாம் மட்டுமே, ஒரு கடவுள் கொள்கையைக் கொண்டவனாக அறியப்படுகிறான். மற்றவர்கள் (தெரா, பெத்து - எல் - லெபன் போன்றவர்கள்) பல கடவுளர் கொள்கையைக் கொண்டவர்களாகவே இருந் துள்ளனர். யாக்கோபுவிடம் முரண்பட்ட லெபன், உன் கடவுள் - என் கடவுள் என்றவாறு இருகடவுளரையும் வைத்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்ட நிகழ்வும் விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளது. மோசே, அபிறகாம் வழியில் ஒரு கடவுள் கொள்கையை ஏற்றுக் கொண்டு புதிய சமயத்தைத் தோற்றுவித்தவன். மோசேயின் கொள்கையில் முரண்பாடு கொண்ட பிற எபிறேய இன மக்கள், தனித்தனிக் குழுக்களாகவே செயல்பட்டனர் என்பதைக் காண முடிகின்றது. மோசேயின் சமயம், எபிறேய மக்களை பல கூறுகளாகப் பிரித்துவிட்டது எனலாம். போனீசியர், மோவாபியர், அமோனியர், உகாரியர், அறமியர், எடோமியர் போன்ற இனத்தாரும், இனத்தால் எபிறேயர்களே என ஆவணங்கள் தெளிவுபடுத்துகின்றன. மேற்கண்ட இனத்தாரின் வரலாறுகள் கி.மு. 3000 ஆண்டு களுக்கு முன் அறியப்படவில்லை. எனவே, இந்தியாவினின்றும் குடிபெயர்ந்த எபிறேயக் குழுவினர் பெரும் எண்ணிக்கையில் மேற்கே சென்றிருக்க வேண்டும் என எண்ண வாய்ப்புகள் உண்டு. போர்க் குழுக்களாகவோ வணிகக் குழுக்களாகவோ அவர்கள் இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

எபிறேய குழுக்களில், மோசே தலைமையிலான குழு, தனியே பிரிந்து சென்று விட்டதாகக் கருதலாம். இது எபிறேய மக்களில் பெரும்பான்மையோர் குழு கூட்டமாக இருந்திருக்க இயலாது. எகிப்தில் அடிமைப்பட்ட எபிறேயர்களுடன், மேற் கண்டவர்களும் இருந்தனர் என ஆய்வாளர்கள் கருதுகின் றனர். எனவே, எபிறேய மக்கள், சமயத்தின் அடிப்படையி லேயே முதன் முதலில் பிளவு பட்டனர் எனக் கருதலாம். பின்னர் மோவாபியர் கூட்டமும் தமக்கென வாழ்க்கை வழி களைத் தேர்வு செய்து கொண்டு வாழ்ந்தனர். மோவாபியரும்

இசுராயெல்லாரும் தொடர்ந்து பகைமை கொண்டிருந்த தாகவே செய்திகள் கூறுகின்றன.

போனீசியர்கள் வணிகத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதுபோலவே, மோவாபியர், கால்நடை வளர்ப்பில் அக்கரை காட்டினர். வடக்கு மோவாப் பகுதியில் சிறிதளவே வேளாண்மை நடைபெற்றது. பார்லி கோதுமை போன்ற தவசங்களைப் பயிரிட்டனர். பெரும்பாலோர் கால் நடை களை வளர்த்தலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந் தனர். மேழ (Mesha) மன்னனின் குறிப்புகளிலிருந்து, அவன் ஒரு ஆயர்களின் மன்னனாகவே கருத இடமுண்டு. இசுராயெல் நாட்டின் கட்டுப்பாட்டில் சில காலம் மோவாப் இருந்தபோது ஆண்டுக்கு ஓரிலக்கம் *(1,00,000)* ஆடுகளையும், அவற்றின் மயிர்களையும் கொடுத்ததாக விவிலியம் கூறுகிறது.[473] (II Kings, 3:4), இசுராயெல் மோவாபின் மீது படையெடுத்தபோது, ஏராளமான ஆடுகள் உணவுக்காகக் கொடுக்கப்பட்டன. சுருக்கமாகக் கூறினால், மோவாபின் பொருளியல் கூறுகள், கால்நடைகளையே சார்ந்திருந்ததாக அறியலாம்.[474] (JBC p. 641)

மோவாபியர்கள் செம்மோஷ் (Chemosh) என்ற கடவுளை வழிபட்டு வந்தனர். செமோஷ் சூரியக் கடவுளே. இக்கடவுள், வால் (Vaal), பால் (Baal) போன்ற கடவுளரின் மறுதோற்றமே. மோவாபியரின் சமயம் மற்றும் வணக்க முறைகள் பற்றி, விளக்கமான செய்திகள் எவையும் கிடைக்கவில்லை.[475]

மோவாபின் சிறப்புகள் பற்றி, விவிலியம் இருட்டடிப்பு செய்து விட்டதால், அதுபற்றி எதனையும் அறிய இயலவில்லை. பாபிலோனியருடைய படையெடுப்புக்குப் பின்பு, அந்நாடும் மக்களும், வரலாற்றில் மறைந்து போயினர். இருப்பினும் மேஷ மன்னனின் கல்வெட்டு, இன்றைய ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்து, அவர்கள் பற்றிய செய்திகளை வெளிக் கொணர வாய்ப் பாக அமைந்தது. மோவாப் என்பதே தமிழ்மூலச் சொற்களால் உருவான பெயரே என்பதும், மேஷக் கல்வெட்டு, தமிழ் எழுத் துக்களின் வளர்ச்சியைக் காட்டுகின்றன என்பதும் தொன்மைக் கால தமிழ் இனத்தின் கிளையாகவே மோவாபியரைக் கருதலாம்.

அமோனியர்கள் (Ammonites)

முன் தலைப்பில் சொல்லப்பட்ட உலோத்து என்பவனின் மற்றொரு மகளிடம் பிறந்தவனே பின் - அம்மி என்பவனா

வான். இவன் வழிமக்களே அமோனியர்கள் என்று அறியப்படு கின்றனர். எனவே, மோவாபியரும் அமோனியரும் உலோத்து வழியில் பிறந்த பங்காளிகள் ஆவர். இவர்கள் யாபோக்கு (தென் போக்கு அல்லது தென் பார்வை) என்ற ஆற்றுப் பகுதியை தென் எல்லையாகக் கொண்டு வாழ்ந்தவர்களாவர். இவர்கள் அறமியர் என்றும் (Arameans) சொல்லப்படுகின் றனர். அபிறகாம் என்ற பெயரின் நடுவில் உள்ள சொல்லான அறம் என்பது, யூப்ரதீசு - தைகிரிசு ஆறுகளுக்குட்பட்ட பகுதிகளைக் குறிப்பது. எனவே, உலோத்தும் அப்பகுதியைச் சார்ந்தவனே. அதன் வழியில் பெயரின் காரணமாக அமோனி யர்கள் என்றும், இடத்தின் காரணமாக .அறமியர் என்றும் சொல்லப்பட்டனர்.[476]

மோவாபியரும், அமோனியரும் பங்காளிகள் என்பதால், இவ்விரு மக்களும் பலவாறு ஒற்றுமையுடனே வாழ்ந்திருந் தனர். இரு மக்களுக்கும் எதிரான போர்களில் இருவரும் இணைந்தே செயல்பட்டுள்ளனர். இசுராயெல் இனத்தாரைத் தம் பகையாகவே கருதி வந்துள்ளனர். இசுராயெல் மக்கள் அபிறகாம் வழியனராகவும், இவர்கள் உலோத்து வழியின ராகவும் கருதப்பட்டாலும், இவர்களிடையே காணப்பட்ட பகை, ஆபிறகாம் உலோத்து காலத்திலேயே உருவானதாகும். அபிறகாமும் உலோத்துக் இணக்கத்துடனே பிரிந்து போயினர் என்று விவிலியம் கூறினாலும், உட்பகை தொடர்ந்திருந்தது என்பதை பிற்கால நிகழ்வுகள் உணர்த்துகின்றன. எபிறேயர் இனத்தின் ஒரு பிரிவாகவே அமோனியர் கருதப்படுகின்றனர். எனவே, அவர்களது தாய்மொழி எபிறேயமே என்பதும் தெளிவு. பிற்காலத்தில் அமோனியர் பேசிவந்த, அறமாயிக் (Aramaci) என்ற மொழியை மோவாபியரும், எபிறேயரும் பேசி வந்தனர் என்பதால், இம்மூன்று பிரிவுகளும் ஓர் இனமே என்பதும் தெளிவாகின்றது.[477]

அமோனியர், அறமியர் என்றும் அழைக்கப்பட்டனர். அறமாய்க் என்பது அவர்களது மொழியாகும். அறம் என்பது அவர்களின் வாழ்ந்த இடத்தையும், வாய் என்பது மொழி யையும் குறித்து, அறம்வாய் என்ற தமிழ்ச் சொற்களே, அறமாயிக் எனத் திரிந்தன எனலாம். இயேசு கிறித்துவும்கூட அறமாயிக் மொழியையே பேசி, தன் அறிவுரைகளையும் அம்மொழியிலேயே கூறினார். அறமியர் என்ற அமோனியரின்

பிரிவினர் தம்மை சாம்சும்மிம் (Zamzummim) என அழைத்துக் கொண்டனர். இறபாயிம் (Rephaim) என்று பிறர் இவர்களை அழைத்தனர். இதற்கு இறந்துபட்ட முன்னோர் (ancestors) என்பதே பொருளாகுமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சம்சும் என்ற சொல், செம்மை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாக இருக்கலாம்.

அமோனியர், இசுராயெல் (எபிறேயர்) மக்களிடையே உணரப்படும் பகைமை பல போர்களாக வெடித்தன. மோவாபியருடன் இணைந்து இசுராயெல் மக்களை எதிர்த்தனர். தாவீது மன்னனுடன் இவர்களுக்குப் பகைமை மூண்டிருந்தது.478 (II சாமு., 10:1-11)

எபிறேயர்கள் எகோஆ தெய்வத்தை வணங்கி வருகையில், அமோனியர்கள் அவர் தம் கடவுளை ஏற்கவில்லை. எபிறேயர் - அமோனியர் பகைமைக்கு இதுவே முதற்காரணம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். போலி (Folly) என்ற அவையே அவர்களது வழிபாட்டு மன்றமாகக் கருதப்படுகின்றது. எபிறேயர்களின் கடவுளை பலவாறு அவர்கள் தூற்றி வந்தனர். இவ்வாறான பல்வேறு நிகழ்வுகளால், மோசே உருவாக்கிய புதுசமயமே (யூதசமயம்) ஒன்றாக இருந்த எபிறேயர்களைப் பல பிரிவுகளாகக் கூறுபோட்டது எனலாம். போனீசியர், மோவாபியர், அமோனியர் என அப்பிரிவுகள் தொடர்ந்தன.

தற்காலத்தில் ஜோர்டான் (Jordan) நாட்டின் தலைநகரமாக அறியப்படும் அம்மான் (Amman) அம்மோன் இனத்தாரின் நினைவைப் போற்றும் பெயராகும். இந்நகரம் ஏற்கனவே அறியப்பட்டிருந்த இறபாயிம் அல்லது இறபா (Rabbah) என்ற பழைய தலைநகர் இருந்த இடத்தின் புதிய பெயராகும்.

நாகாசு (Nahas) என்பவன் அமோனிய மன்னனாவான். நாகம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. நாகம் என்றே எபிறேய மொழியும் கூறுகிறது. சாவுல் (Saul) என்ற இசுராயெல் மன்னனோடு நாகாசு பகைமை பாராட்டி வந்தான். அவனுக்கு தாவீது (மன்னனாகுமுன்) உதவிகள் செய்து வந்தான். தாவீது - சாவுல் பகைமையே காரணமாகும். பிற்காலத்தில் நாகாசு மன்னனின் மகனோடு (அனன் - Hanun) தாவீது போர் செய்து, அப்பகுதியையும் இணைத்துக் கொண்டான்.[479] (I சாமுயெல், 11:1). எபிறேயர்கள் சில இலக்கம் மக்களே இருந்தபோதும்,

தங்களுக்குள் பிளவுபட்டு, போர் நடவடிக்கைகளிலும் அவ்வப் போது ஈடுபட்டனர்.

அமோனியர்களைப் பற்றிய குறிப்புகள், கி.மு. 1200 முதலே அறியப்படுவதால், அக்காலத்துக்கு முன்பு அவர்கள் நாடற்றவர்களாக இருந்தனர் என ஆய்வாளர்கள் கருதுகின் றனர். அறமாயிக் மொழியும் அக்காலம் தொட்டே பேச்சு வழக்கிற்கு வந்தது எனவும் கருதலாம். தற்காலத்து ஜோர்டான் நாடே, அக்காலத்து அமோனியர் நாடாகும். பிற்காலத்தில் அமோனியரின் மரபினரில் பலர் இசுலாத்தில் இணைந்தனர் அல்லது இணைக்கப்பட்டனர் எனக் கருதலாம். தற்காலத் திலும் ஜோர்டான் நாட்டில் மன்னர் மரபு உள்ளது.

அமோனியர்கள், எல் கடவுளையே வழிபட்டு வந்தனர். மலக் (Molek) எனப்பட்ட அக்கடவுள், மலைக்கடவுளே. மலை, மலக் எனத் திரிந்துள்ளது. அமோனியர் மரபிலிருந்தும் சாலமன் தன் மனைவியர் சிலரைத் தேர்வு செய்து கொண் டான். அவர்களின் விருப்பப்படி, மலக் கடவுளுக்கும் ஒரு கோயிலைக் கட்டிக் கொடுத்தான். அது எருசலேம் நகரின் கிழக்குப் பகுதியில் இருந்தது. இந்நிகழ்வு பலரால் எதிர்க்கப் பட்டது.[480] (எரேமியா, 9:25; எசுரா, 21:33)

தாமர்கள் (Edomites)

இதாம் (Edom) என்று சொல்லப்பட்ட ஒரு சிறிய நாடு, சாக்கடலுக்குத் தெற்கே, அகாபா வளைகுடாவரை (செங் கடலின் வடகிழக்கு மூலை) நீண்டிருந்த, செயிர் (seir) என்ற பகுதியில் அமைந்திருந்தது. பாலத்தீனத்தின் தென்கிழக்குப் பகுதியில் இருந்ததாக விவிலியம் கூறுகிறது. செரத் (Wadi Zered) என்ற ஆற்றின் தென்பகுதியில் அமைந்திருந்தது.[481] இதாம் நாட்டின் தலைநகரம், சிலை எனப்பட்டது. சிலை என்ற தமிழ்ச் சொல் சிலா (sela) என்று தாம மொழியில் சொல்லப்பட்டுள்ளது. மலை என்ற பொருளைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிலை என்ற தமிழ்ச்சொல் மலை யையும் குறிக்கும். பாறை என்ற பொருளிலும் அறியப்பட்ட தாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (பாறை - பத்ரோ என கிரேக்கத்தில் திரிந்தது.) இந்நாட்டில், கி.மு. 1300 வாக்கில், தாமர்கள் குடியேறியதாகக் கருதப்படுகின்றது.[482] அதற்கு முன்பு அங்கு வாழ்ந்து வந்த ஓரியர்கள் (Horites) என்ற நாடோடி

இனத்தவர் வாழ்ந்திருந்தனர். அவர்களைப் போரில் வென்ற தாமர்கள், தங்களுக்கென ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டனர். எகிப்தினின்றும் எபிறேய மக்கள் வெளியேறுவதற்குச் சில ஆண்டுகள் முன்னதாக இந்த உருவாக்கம் நிகழ்ந்தது. இந்த ஓரியர்கள் வெளிநாட்டவர் என்றும், செமிட்டிக் இனத்தைச் சாராதவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது.[483]

இதாம் நாடு, ஒழுங்கற்ற இரு பகுதிகளைக் கொண்டது. t l gF½Æ± ghRuh v¬ wef uK « (Bazra), தென் பகுதியில் தெமண் (Teman) என்ற நகரமும் இருந்தன.[484] தெமன் என்பது, தென்மண் (southern city) என்ற தமிழ்ப் பெயரின் திரிபாகும். தென்மண் - தெமண். இந்நாட்டில் வேளாண்மையும், கால் நடை வளர்ப்பும் சிறப்பாகச் சொல்லப்படவில்லை. இயற்கையில் அப்பகுதியில் மிகுந்திருந்த செம்பும் இரும்பும் வெட்டியெடுக்கப்பட்டு, அத்தொழிலே சிறப்புற்றிருந்தது. மேற்காசியப் பகுதிக்கான இக்கனிமங்களை இதாம் நாடே வழங்கியது எனலாம். மேலும் அரேபியாவிலிருந்து எகிப்துக்குச் செல்லும் அரசபாட்டை (Kings route) என்ற பெருவழிச் சாலை, இந்நாட்டின் குறுக்கே சென்றதால், எப்போதும் ஆரவாரமான போக்குவரத்தும், வணிகர்கள் கூட்டமும் காணப்பட்டன. இவ்வாறு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களை சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்ற தாமர்கள், உலக அறிவில் சிறப்புற்றிருந்தனர்.[485]

தாம் என்ற அவர்தம் மொழிச்சொல், சிவப்பு என்ற பொருளைக் குறிக்கும். தாமம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு சிவப்பு, செம்மை என்பதே பொருள். தாமம் பற்றிய விளக்கம், ஆதாம் என்ற பகுதியில் ஏற்கனவே தரப்பட்டுள்ளது. செம்மண் மிகுந்து காணப்பட்டதால் அந்நாடு தாம் - இதாம் என அழைக்கப்பட்டது. தாம் என்பது எபிறேய மொழிச் சொல் என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம். இதாம் என்பது, இத்தகைய செம்மண் மிகுந்த நாடு என்ற பொருளைத் தரும். பெயரிலேயே தமிழ்ப் பெயரைக் கொண்ட நாடு இது. இவர்கள் பேசிய மொழியும் எபிறேய மொழியே. (ஒரு சில மாற்றங்களுடன்). இவர்களையும் செமிட்டிக் குடும்பத்தில் ஆய்வாளர்கள் இணைக்கின்றனர். அரேபியாவிற்கும் எகிப்திற்கும் பாலமாக இப்பகுதி அறியப்பட்டதால், இந்நாட்டு மக்களோடு இணக்கமாகவே இருக்க வெளிநாட்டினர் விரும்பினர்.

தாமநாட்டில் ஏற்கனவே வாழ்ந்து வந்தவர்கள் ஓரியர்கள் எனப்பட்டனர். ஓரியர் (Hori) என்ற தமிழ்ச் சொல்லுக்கு நாகர்கள் என்றும், மலைவாழ் மக்கள் என்றும், தமிழில் பொருளுண்டு. நாகன் என்ற பெயர் ஏற்கனவே, செமிட்டிக் மற்றும் எபிறேய மொழிகளில் காணப்படுகின்றது. எனவே, ஓரியர்கள் என்ற நாகர்கள், தமிழ் இனத்தின் ஒரு கிளையே எனக் கருதலாம். வடக்கு மெசபத்தோமியாவில் ஓர் அரசை நிறுவிய ஊரியர்கள் (Hurrains) எபிறேய மொழியில் ஓரியர்கள் (Hori) என்றே சொல்லப்பட்டுள்ளதால், தாம நாட்டில் வாழ்ந் திருந்தோர், மெசபத்தோமியாவின் ஊரியர்களே என ஆய்வா ளர்கள் கருதுகின்றனர்.[486] இவர்கள் செமிட்டிக் இனத்தையோ, கிரேக்க இனத்தையோ (Indo-European) சார்ந்தவர்கள் அல்லர் என்றும், இவர்கள் வெளிநாட்டினரே என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அபிறகாம் வாழ்ந்திருந்த காலத்தில், இவர்கள் தாமநாட்டில் குடியேறினர் என்று விவிலியம் கூறுகிறது.[487] (ஆதி. 14:6) அம்மக்களின் தலைவனாக செயிர் (Seir) என்பவன் சொல்லப்படுகிறான்.[488] (ஆதி. 36:20) செயிர் என்பதற்குத் தமிழில் சினம் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது; குற்றம் எனவும் பொருள் கொள்ளலாம்.

ஓரியர்கள் ஆற்றல் மிகுந்த போர் வீரர்கள் என்றும், அவர்கள் கி.மு. 2200 வாக்கில் தான் முதன்முதலாக அறியப்படு கின்றனர் என்றும் வரலாறு கூறுகிறது. எபிறேய மக்களைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள தகுதிகள், விளக்கங்கள் அனைத்தும் ஓரியர்களுக்கும் பொருந்தும் என்பதாலும், எபிறேயர்களைப் போல, இவர்களும் வெளிநாட்டினரே எனக் கருதப்படுவ தாலும், இவர்களும் எபிறேய மக்களினமே எனக் கருத இடமுண்டு. ஓரியர்களைப் பற்றிய பல்வேறு செய்திகளும், அவர்களைத் தமிழ் முன்னோர்களோடு இணைக்கின்றன. எகிப்து நாட்டில் அடிமைப்படாத எபிறேய இனமாக ஓரியர் களைக் கருதலாம். ஒட்டு மொத்தமாக எபிறேய மக்களும் எகிப்தில் அடிமைப்பட்டது போன்ற தோற்றத்தை விவிலியம் கூறுவதும் ஆய்வாளர்களின் பார்வையில் தவறான செய்தி யாகவே கருதப்படுகின்றது. எகிப்தில் அடிமைப்பட்ட எகிப்தி யரின் எண்ணிக்கையைக் காட்டிலும், வெளியே வாழ்ந்திருந்த எபிறேயர்களின் எண்ணிக்கை மிகவும் கூடுதலானது. விவிலியம், யாக்கோபுவின் 12 கிளையினரை மட்டுமே முன்னிறுத்தி, மற்ற வர்களைப் பற்றி எதுவும் கூறாமல் விட்டுவிட்டது. ஆனாலும்

விவிலியத்தில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ள சிற்சில குறிப்புகள், உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்றன.

தாம நாட்டை கி.மு. 1300 ஆண்டுகளில் வென்று, ஓரியரைப் புறங்கண்டு புதிய ஆட்சியைத் தொடங்கியவர்கள், யாக்கோபுவின் உடன்பிறப்பான ஈசா என்பவனின் மரபினரே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[489] ஈசாவும் யாக்கோபுவும் உடன்பிறப்புகள் (உலக வழக்கில் அண்ணன் தம்பி என்பர்), அதாவது உடனுக்குடன் பிறந்த இரட்டையர்களாவர். இரபேக்காவின் வயிற்றிலேயே இருவருக்கும் போர் மூண்டதாகவும், யார் முதலில் இவ்வுலகைக் காண்பது என தள்ளுமுள்ளு நடைபெற்றதாகவும் நகைச்சுவையாகக் கூறுவர். இறுதியில் ஈசாவே முதலில் பிறக்க, அவனது கணுக்காலைப் பற்றியவாறே யாக்கோபு உடன்பிறந்தான். (முதலில் பிறந்தவன் இளையவன் என்றும், பிறகு பிறந்தவனே மூத்தவன் என்ற கருத்தும் உண்டு.) ஈசா சிறந்த வில்லாளன் ஆனான். யாக்கோபு இடையனாக இருந்தான். பிறப்பிலிருந்தே இருவரும் முரண்பாடுகளைக் கொண்டிருந்தனர். ஈசா தனது தலைச்சன் பிள்ளை உரிமையை யாக்கோபுவுக்கு விற்றுவிட்டான் என்ற செய்தி விவிலியத்தில் காணப்படுகிறது. தலைச்சன் பிள்ளைக்கென சில உரிமைகள், எபிறேய மக்கள் இனத்தில் உண்டு. (இந்த தலைச்சன் உரிமை என்பது முற்றிலும் தமிழ் மரபைச் சார்ந்தது எனலாம். தற்போதும் நாட்டுப் புறங்களில் அந்த உரிமைகள் வழங்கப்படுகின்றன.)

ஈசா ஓரி இனப் பெண்டிர் இருவரை மணந்து கொண்டு தாம நாட்டில் வாழ்ந்து வந்தான் என்பர். பெருஞ்செல்வனாகவும் அவன் அறியப்படுகிறான். எகோ ஆ கடவுள், ஈசாவுக்கென தாம நாட்டையும், யாக்கோபுவுக்கென இசுராயெல் நாட்டையும் அளித்தார் என்பர். யாக்கோபு தன் தாய்மாமன் மகளிர் இருவரை வடக்கே சென்று (ஊர் நகரப் பகுதியில்) மணந்து கொண்டான். ஈசா, யாக்கோபு பற்றிய செய்திகளில் பல உண்மையில் நிகழ்ந்தனவா என ஆய்வாளர்கள் ஐயுறுகின்றனர். யாக்கோபை முன்னிறுத்த, சில நிகழ்வுகள் இணைக்கப்பட்டிருக்கலாம் என்பர். இருப்பினும் இசுராயெல் மக்களும் தாம நாட்டு மக்களும் ஓரின மக்களே என்பதை, பிற்காலத்திய மரபினரும் உணர்ந்திருந்தனர் என்பர்.

விவிலியம் யாக்கோபுவை சிறப்பித்துக் கூறும் அளவிற்கு, ஈசாவைப் பற்றிக் கூறவில்லை. மேற்கண்ட இருநாட்டவரும் பங்காளிகள் என அறியப்பட்டாலும், சாவுல் தாவீது போன்ற மன்னர்கள், தாம நாட்டைத் தம் ஆட்சிக்குட்படுத்தியிருந் தனர். அதற்கான காரணம் யாதெனில், தாமநாடு வணிகப்பாட் டையாக அமைந்திருந்ததும் (Commercial route) அந்நாட்டில் செம்பு இரும்பு போன்ற கனிமங்கள் கிடைத்ததுமே என்பர். மேலும் அகாபா வளைகுடாவில் இசுராயெல் துறைமுகம் (ஓபீர் என்பது) சாலமன் காலத்தில் நிறுவப்பட்டது. எனவே முற்றிலும் பொருளியல் மற்றும் வணிகக் கூறுகளின் அடிப் படையில், தாம நாட்டை இசுராயெல் நாடு தன்வயப்படுத்தி யிருந்தது.

இசுராயெல் மக்கள் எகோஆ கடவுளை வழிபட்டனர். ஒரு கடவுள் கொள்கையைக் கொண்டிருந்தனர். தாம நாட்டவர் தம் முன்னோர் வழிவந்த வணக்கமுறைகளைக் கொண்டிருந்தனர். பல கடவுளர் வழிபாடு, தாமநாட்டவரிடம் காணப்பட்டது. கோ (Quo) மலக் (Malek) ஆகிய கடவுள் பற்றிய செய்திகள், தாமநாட்டில் அறியப்படுகின்றன. பல்வேறு பெண் கடவுளரையும் வழிபட்டனர். அமோனியரின் கடவுளரே இவர்களது தெய்வங்களாயிருந்தனர். ஐ (ai) என்ற கடவுளும் வணங்கப்பட்டான். களி மண்ணால் செய்யப்பட்ட பல்வேறு கடவுளரின் உருவங்கள், தற்கால அகழ்வாய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[490] தாம நாட்டவர், எபிறேயர் வழிவந்த தமிழரே என்க.

உள் கரை (Ugarit)

போனீசியாவின் வடபகுதியில் அமைந்திருந்த நகரம். இதனை நாடு என அழைப்பதும் கூடப் பொருத்தமாயிராது. தன்னாட்சி கொண்ட நகரமாகவே அதனைக் கருதலாம். போனீசிய நகரங்களைப் போல் அல்லாமல், இந்நகரம் கடற்கரையினின்றும் உள்ளே அமைந்திருந்தது. மேல் கரை (Melkar) என்ற சொல், போனீசிய மொழியில் அறியப்பட்டு, அது கடற்கரை (மேற்குத்திசை)யைக் குறித்தது போன்று, உள் கரையிடம் என்று சொல்லப்பட்ட நகரமே, உகரிட் எனத் திரிந்தது. உள் + கரை + இடம் = உக்கரையிடம் - உக்கரிட் என்றவாறு திரிந்தது என்க. முற்றிலும் தமிழ்ச் சொற்களின் திரிபுப் பெயரால் அந்நகர் அழைக்கப்பட்டது எனலாம்.

சிரிய நாட்டின் இராஸ் சாம்ரா (Ras shamra) என்ற தற்கால நகரமே, அக்காலத்தில் உக்கரிட் என்று அழைக்கப் பட்டது. இது ஒரு குறுங்குடாப் பகுதியில் அமைந்திருந்ததும், இந்நகருக்கு மேற்கிலிருந்து வந்த அச்சுறுத்தலுக்குப் பாது காப்பாய் இருந்தது. கி.பி. 1928ஆம் ஆண்டில், இராஸ் சாம்ரா நகர் அகழ்வாய்வுக்குட்படுத்தப்பட்டது. பிரெஞ்சு வரலாற்று ஆய்வுக் குழுவொன்று, கி.பி. 1933 வரை தொடர்ந்து அந்நகரை அகழ்வாய்வு செய்தது. அதன்பின்னரும் பல்வேறு ஆய்வாளர்கள் 1946 வரை அப்பணிகளை மேற்கொண்டனர். அகழ்வாய்வில் ஏராளமான, வியக்கத்தக்க உண்மைகள் வெளிப்பட்டன. பல்வேறு களிமண் தட்டுகளும், அவற்றில் எழுதப்பட்டிருந்த செய்திகளும் ஆய்வாளர்களைத் திகைப்பில் ஆழ்த்தின. அச் செய்திகளை அப்போது அவர்கள் படித்துப் புரிந்து கொள்ள இயலாதவாறு இருந்தாலும், அடுத்தடுத்து அம்மொழி படிக் கப்பட்டு, புரிந்து கொள்ளப்பட்டது. அக்களிமண் தட்டுகளில் காணப்பட்ட செய்திகளை மாரிக் குறிப்புகளும் (Mari texts), அமர்ணா குறிப்புகளும் (Amarna texts of Egypt), போகஸ்கோய் (Boghaskoy) குறிப்புகளும் உறுதிப்படுத்தின.[491]

உக்கரிட் என்ற இடம், கி.மு. 4000 ஆண்டுகளில் மக்களின் குடியிருப்பாக இருந்துள்ளது. கி.மு. 2400 - 2200 ஆண்டுகளில் அந்நகரம் பெருந்தீயினால் பேரழிவைச் சந்தித்துள்ளது. கி.மு. 1900 ஆண்டுகளில், எகிப்தியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. எகிப்திய மன்னர் மரபின் 18 மற்றும் 19 மரபுகள் காலத்தில், உகரிட் நகரம் தனது படைப்புகளின் உயர்ந்த நிலையிலும், மிகச் சிறந்த நகரிய நாகரிகத்திலும் சிறப்புற்றிருந்தது. கி.மு. 1365 ஆம் ஆண்டில் மிகப் பெரிய நில நடுக்கத்தால் அந்நகர் தரை மட்ட மானது. இருப்பினும் அடுத்த சில ஆண்டுகளில், அந்நகர் புதுப்பிக்கப்பட்டது. கி.மு. 1200 ஆண்டுகளில் மேற் கொள்ளப்பட்ட பிலித்தியரின் படையெடுப்பு, அந்நகரை வீழ்ச்சியுறச் செய்தது. உகரிட் நகரில் அமைந்திருந்த அரண் மனையும், பல கோயில்களும் வீழ்ந்தன. பயன்படுத்தப்பட்ட பொருட்களும் அதன் எச்சங்களும், சமயம் தொடர்பான இலக்கியங்களும், மக்கள் வாழ்ந்திருந்த வீடுகளின் எச்சங்களும் அறியப்பட்டன.[492]

அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட களிமண் தட்டுகளில், உகரிட் மொழியில் எழுதப்பட்ட ஏராளமான குறிப்புகள்

கிடைத்தன. அவை, கனானிய, அக்காடிய, எகிப்திய மொழிகளில் காணப்பட்டாலும், செய்திகள் உகரிட் எழுத்து முறை தொடர்பான குறிப்புகளும், ஆணைகளும், அரசின் சட்டங்களும், அவர்களது பொருளியல் வருவாய்களும், அவர்கள் மேற் கொண்ட வணிகமும், அம்மக்களின் தொழில்கள் பற்றிய குறிப்புகளும், அந்நகர மக்களின் அன்றாட வாழ்க்கை பற்றிய செய்திகளும் என்றவாறு பல்வேறு சான்றுகளை அக்களிமண் தட்டுகள் வெளிப்படுத்தின. உகரிட் நகர மக்களின் இனம், மொழி, சமயம் நம்பிக்கைகள், வணக்க முறைகள், கடவுளர்கள் பற்றியும் அவை விளக்கின.[493]

அக்களிமண் தட்டுகளில் அறியப்பட்ட செய்திகளில், சிறப்புக் குரியவை யாதெனில், எபிறேய மொழியில் எழுதப் பட்டிருந்த குறிப்புகளே எனலாம். அக்குறிப்புகள் உகரிட் நகர மக்களில் கற்றறிந்தவரால் எழுதப்பட்டவையே என்றும், எபிறேய குழுவினர் எவரும் அவற்றைப் பதிவு செய்யவில்லை என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அக்குறிப்புகளில் காணப்படும் பல்வேறு செய்திகள், எபிறேய மொழியில் எழுதப்பட்ட விவிலியத் தோடு, பலவாறு ஒற்றுமைப்படுகின்றன. குறிப்பாக, உகரிட் மொழியில் எழுதப்பட்டிருந்த பாடல்களும் கவிதைவளும் விவிலியத்தின் கருத்துகளையும் கொள்கைளையும் சார்ந்துள்ளன. அம் மக்களின், “மேக ஒட்டி” (rider of the clouds) என்ற பாடல், பால் (Baal) கடவுளைப் பற்றியது. இப்பாடல், எபிறேயர்களின் கடவுளான எகோஆ என்ற தெய்வத்தையும், அவர்தம் பண்புகளையும், பால் தெய்வத் துக்கு ஏற்றிச் சொன்னவாறு அமைந்துள்ளன. மேலும் விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கீதம் எனும் பாடல்கள், இசையாவின் திருமறையுரைகள், விண்ணின் நீர்த்துளி நிலத்தை வளப்படுத்துவது, கொடி முந்திரிச் சாற்றின் உருவகம் என ஒற்றுமைகள் விரிகின்றன.[494]

எபிறேய மக்களைப் போன்று ஒரு கடவுள் கொள்கையை உகரிட் மக்கள் கொண்டிருக்கவில்லை. இவர்களுடைய சமயமும், கடவுளரும், வணக்க முறைகளும் முற்றிலும் தமிழர் சார்ந்தே காணப்படுவதும், மற்ற மேலை இனத்தாரைவிட, தமிழ் சமயத்தோடு அவர்கள் கொண்டிருந்த நெருங்கிய உறவுகளும் வெளிப்பட்டுள்ளன. பெண் கடவுளரும் அம்மக்களின் வழிபாட்டுக்குரியவர்களாயிருந்தனர். அடிப்படையில், இயற்கை

சார்ந்த சமயமாகவே அது கருதப்படுகிறது. உகரிட் மக்களின் கோயில்களும், அங்கு நிகழ்வுற்ற சடங்குகளும் சமயத்தின்பால் அவர்களுக்கு பிடிப்பைக் காட்டுகின்றன. உகரிட் மக்களின் முழுமுதற் கடவுளாக எல் என்ற தெய்வம் முன்னிலைப்படுத் தப்பட்டுள்ளது. இந்த எல் கடவுளை, காளை உருவத்திலும் அவர்கள் வழிபட்டனர் (El the bull). எல் கடவுளை முதியவ ராகவும், வயதான தோற்றத்திலும் அவர்கள் உருவகப்படுத்தி யுள்ளனர். கிறித்துவ சமயத்தின் தந்தை (father) என்ற கடவுள் நிலையைப் போன்று, எல் கடவுள் கருதப்பட்டதாக ஆய்வா ளர்கள் கருதுகின்றனர். எல் கடவுளின் மகனாக, பால் கருதப் பட்டான். எல் - பால் பற்றிய செய்திகளில் பல புரியாமலும் குழப்பமாகவும் உள்ளனவென்றாலும், பல்வேறு செய்திகள் தெளிவாக உள்ளன. எல் என்ற முழுமுதற் கடவுள், சில மனைவியரைப் பெற்றிருந்தான். அவர்களில் கடல் பெண், ஆற்றுப் பெண், விடியற்காலைப் பெண் என்றவாறு அவர்கள் விளக்கப்பட்டுள்ளனர். (sea, river and dawn). இப்பெண்கள், தமிழர் தொன்மக்கதைகளில் சிவனின் மனைவியராக அல்லது உமையின் பல பிறப்புகளாக அறியப்பட்டுள்ளதை நோக்குக. யம் (yam), நகர் (Nahar), அஷர் (Asher) என்றவாறு சொல்லப் பட்டுள்ள மூன்று சொற்களும் அயம், நகர், உழை (விடியற் காலம்) என்ற மூன்று தமிழ்ச் சொற்களின் பெயரால் சற்றே திரிபுபட்டுள்ளன எனலாம்.

பாபிலோனிய அசுத்தார் (Ashtar), உக்ரிட் பெண்கடவு ளாகவும்அறிப்படுகிறாள். பாலியல் நுகர்வு, ஆற்றல், வலிமை, போர் ஆகிய கூறுகளின் தெய்வமாகவும் கருதப்படுகிறாள். அனத் (Anath) என்பவள், பால் தெய்வத்தின் தங்கையும், மனைவியுமாவாள். அசுத்தார் - அனத் ஆகிய பெண் கடவுளர் இருவரும் பல்வேறு நிலைகளில் ஒற்றுமையுடன் காணப்படு கின்றனர். இவர்களைப் பிரித்து அறிவதும் கூட சிக்கலாகவே உள்ளது எனலாம். இவ்விரு பெண் கடவுளரைப் பற்றிய செய்திகள், சிற்பங்களாக எகிப்தியக் கோயில் ஒன்றில் செதுக் கப்பட்டுள்ளன.[495]

ஆய்வாளர் கின்சுபெர்க் (H.L. Ginsberg) உக்ரிட் கடவுளைப் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளார். எல் கடவுள் தனது மனைவியரான யம், நகர் ஆகியவர்களுக்கென பெரிய மாளிகை யொன்றைக் கட்ட இசைவளித்தான். இதனால் சினம் கொண்ட

பால் கடவுள், அவ்விருவர் மீதும் போர் தொடுத்தான். தேவரு லகில் குழப்பம் தோன்றவே, பாலுக்கும் மாளிகை அமைக்க ஆணையிடும்படி எல் கடவுளை தேவர்கள் வலியுறுத்தினர். இம் மாளிகை ஆறு நாளில் கட்டி முடிக்கப்பட்டது. ஏழாம் நாளில் நிறைவு பெற்றது. விவிலியத்தின் படைப்பு அதிகா ரத்தில் சொல்லப்பட்டுள்ள ஆறுநாள் படைப்பை ஒப்பு நோக்குக.[496]

எல் கடவுள், லோத்தன் (Lotan) என்பவனோடு போரிட்டு வெற்றி பெறுகிறான். உலுத்தன் (கெட்டவன்) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே லோத்தன் என்பதால், மோட் (Mot) என்ற சாவுக்கடவுள் (மடி - மடிதல் = இறத்தல்) பற்றியும் சொல்லப் பட்டுள்ளது. பால் கடவுளை, ஆழியன் பால் (Alian Baal) என்றும் குறிப்பிடுகின்றனர். இவன் எல் கடவுளின், கடல் மனைவிக்குப் பிறந்தவனாவான். ஆழி என்ற தமிழ்ச்சொல், ஆழியன் என்ற சரியான தமிழ்ச் சொல்லால் அறியப்பட் டுள்ளது. எல் - ஆழியன் பால் கடவுளர் பற்றிய செய்திகள், சிவன் - முருகன் பற்றிய செய்திகளை ஒற்றுமைப்படுத்துகின்றன.[497]

ஏறக்குறைய நடுத்தரைக் கடலுக்கும் கிழக்கே இருந்த நாடுகளில், எல் கடவுளே முழு முதற்கடவுளாக அறியப்படு கிறான். கனானியர், எபிறேயர், மோவாபியர், அமோனியர், இதாமியர், உள்கரையர் என்ற உகரிட் மக்கள் அனைவரின் கடவுளாகவும் எல் கருதப்பட்டு வணங்கப்பட்டான். எல் என்பது தமிழ்ச் சொல்லே என்றும், அது ஒளியைக் குறித்தது என்றும் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் ஒளியை யே தம் முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதற்கான இலக்கியச் சான்றுகள் நிறைய உள்ளன. தீ (ஒளி) என்ற சொல்லிலிருந்தே, தேவன் என்ற சொல் விரிந்தது பற்றியும் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது.

தமிழர்கள், கடவுள் ஒளியாக இருப்பவர் என்ற நம்பிக் கையைக் கொண்டிருந்தனர். ஒளி என்ற தமிழ்ச் சொல்லுக்கு வெளிப்படுதல் என்றும் மறைந்திருத்தல் என்றும் பொரு ளாகும். இதன் மூலம், கடவுள் ஒளி உருவானவர் என்றும், அவர் மறைந்திருப்பவர் என்றும் ஒளி என்ற சொல்லால் அறிய லாம். அல் என்ற மூலத்தினின்றே எல் என்ற சொல் பிறந்தது. அல் என்பது மறைவு, இருட்டு, கருமை ஆகியவற்றைக் குறிக்கும். அல் என்ற தமிழ்ச் சொல்லே, அரபு மொழியில் அல்லா எனத்

திரிந்தது. அல்லாஹ் (Allah) என்பர். அல்லா என்ற சொல், தமிழ்ப் பொருளின் ஆழமான சிந்தனையில் தோன்றியதாகும். ஆ என்ற ஈற்றுச் சொல்லுக்குத் தொடக்கம் என்றும், அல் என்பதற்கு மறைவு என்றும் பொருள் கொள்ளலாம். அல்லா, தொடக்கத்தில் இருந்தவர், இருப்பவர் என்றும், அவருக்கு உருவமில்லை என்றும் விளக்குகின்றது.

மேற்கித்திய சமய இலக்கியங்கள் கூறும் செய்திகள் அனைத்தும், தமிழரின் மெய்யியல் சார்ந்தவைகளே எனக் கூறலாம். எடுத்துக்காட்டாக, விவிலியம் தரும் செய்திகளின் விளக்கங்களைக் காண்போம். கடவுளுக்கு உருவமில்லை என்பது பொதுவான சிந்தனை என்றாலும், அதனை விவிலியம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பேரண்டத்தையும், அண்டத்தையும், உலகையும், கோள்களையும், விண்மீன்களையும், சூரியனையும் நிலவையும் படைக்கு முன்பே இருந்தவரான கடவுள், முதன் முதலில் தன் உருவத்தையே வெளிக்காட்டு வதாக விவிலியம் கூறுகிறது. முதன் முதலில் கடவுள் ஒளியைப் படைத்தார் என்ற கூற்று, கடவுள் தன்னையே, தன் உருவத் தையே முதலில் வெளிப்படுத்தினார் எனக் கொள்ளுதல் சிறப் பானது.

ஒளியாக நான் இருக்கிறேன் என்ற அறிவிப்புதான், ஒளியை முதன்முதலில் படைத்ததின் மூலம் வெளிப்படுகின்றது. அந்த ஒளியின் வெளிச்சத்திலேயே மற்றவை படைக்கப்பட்டன. இதற்கு விவிலியத்தில் மேலும் பல சான்றுகள் கொடுக்கப்பட் டுள்ளன. எபிறேய மக்கள், செங்கடலைக் கடந்து வந்தபோது, கடவுள் ஒளிப்பிழம்பாக நின்று வழிகாட்டுவதை ஒப்பு நோக்குக. சினை மலையில், மோசேவுக்குக் காட்சியளித்த இறைவன், தன்னை ஒளி வடிவிலேயே வெளிப்படுத்தியதாக விவிலியம் கூறுகிறது. முதலில் படைக்கப்பட்ட ஆதாம், தன் மகனுக்கு அப் - எல் (Ab - el) என்ற பெயரையே சூட்டுகிறான். தன்னைப் படைத்த கடவுளுக்கு நன்றி சொல்லும் வகையில், தன் மகனுக்கும் கடவுள் பெயரையே சூட்டினான். அப் என்பது, அப்பா என்ற எபிறேயச் சொல்லின் (Abba) சுருக்கமாகும். தந்தையாகிய கடவுள் ஒளியாக இருக்கிறார் என்பதே, அப் - எல் என்ற பெயருக்கான விளக்கமாகும்.

கடவுள் ஒளியாகத் திகழ்கிறார் என்பதற்கு, தமிழ் இலக் கியங்கள் பலவற்றினின்றும் சான்றுகளைக் காட்ட இயலும்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே! என்பது, ஒளியாகத் திகழும் கடவுளைப் போற்றுவதே. சைவ - வைணவச் சமய இலக்கியங்களும் ஒளியைப் போற்றுகின்றன. வள்ளலாரும் கடவுளை ஒளிவடிவிலேயே கண்டார் என்பதை நோக்குக.[498] நான் உலகிற்கு ஒளியாய் இருக்கிறேன் என்பது விவிலியம் தரும் செய்தி. மேலைக் கடவுளான எல், தமிழ்க் கடவுளே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

உகரிட் மக்கள் இனத்தால் எபிரேயர்களே என்பதால், எபிரேயச் சமயத்தில் (அது சீர்திருத்தம் செய்யப்பட்ட பிறகும்) உகரிட் சமயக் கொள்கைகள் பரந்து காணப்படுகின்றன. எபிறேய மக்களின் வழியில் கனானிய சமயத்திலும் பல சமயச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் புகுந்தன. இவ்வாறான பல்வேறு இனக்குழுக்களிடையே கலந்து போன வழக்குகளும் வழக்காறுகளும் பிற்கால ஆய்வாளர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தின. எவர் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள் உள் நாட்டினரா வெளிநாட்டினரா என்ற ஆய்வு முடிவுகளில் முரண்பாடான கொள்கைகள் வெளியிடப்பட்டன. மேலே சொல்லப்பட்ட பல நாட்டுக் குழுக்களிடையே காணப்பட்ட தொன்மக் கதைகளைப் போன்று, மேலும் சற்று கூடுதலாகவே உகரிட் தொன்மக் கதைகள் உள்ளன.

தொல் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள் (மேலை நாட்டுக் குடியேற்றங்கள்):[499]

1. குமரிக் கண்டத்துத் தமிழரின் நகரிய நாகரிகப் பண்பாட்டுக் காலம் : கி.மு. 50000 - 18000.
2. குமரிக் கண்டப் பேரழிவு : கி.மு.18000 - 12000.
3. தமிழரின் சிந்துவெளிக் குடியேற்றம் : கி.மு.12000.
4. தமிழரின் மேலை நாட்டுக் குடியேற்றம் (மெசபத்தோமியா, எகிப்து, பாலத்தீனம்) : கி.மு.11000 - 10000.
5. செமிட்டிக் மக்களின் (நோவா மரபினர்) நிலைப்பாடு : கி.மு. 10000 - 5000.
6. சுமேரியர் குடியேற்றம் : கி.மு. 5000 - 4000.
7. சுமேரியரின் நாகரிகத் தாக்கம், ஆட்சி : கி.மு. 4000 : 2500.
8. எபிறேய மக்களின் (சிந்துவெளி மக்கள்) குடியேற்றம் : கி.மு. 3000 - 2500.

9. எபிறேய மக்களிடையே கிளைத்த பிரிவுகள் : கி.மு. 2000 - 1000.
10. பாபிலோனியர் காலம் (ஆட்சி) : கி.மு. 2000 - 500.
11. அசீரியர் ஆட்சிக்காலம் : கி.மு.1500 - 500.
12. உக்ரிட் மக்களின் எழுச்சி : கி.மு.1500.
13. போனீசியர்கள் : கி.மு. 2000.
14. அமோனியர்கள் : கி.மு.1500.
15. இதாமியர்கள் : கி.மு.1300.
16. மோவாபியர்கள் : கி.மு.1300.
17. பிற சிறு இனத்தார் (மிடியர்கள், அமோரியர், மலக்கியர், கெனியர்கள், மெடியர்கள்) : கி.மு.1500.

குறிப்பு: மேற்கண்ட கால அளவுகள் பல்வேறு நூல்களினின்றும் திரட்டப் பெற்றவை.

வைசம் பாயனர்

தமிழர்களின் தாய்நிலமான குமரிக்கண்டம் பற்றிய செய்திகள், கடந்த காலத்தைக் காட்டிலும் தற்போது விரிவாகவும் விளக்கமாகவும், புதுப்புது சான்றுகளுடனும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கடந்த காலத்திலும், இக்காலத்திலும் குமரிக்கண்டக் கொள்கையைப் பலர் ஏற்க மறுப்பதும், அதுவோர் தமிழ் உணர்வாளர்களின் கற்பனைக் கண்டம் என்றும் கூறிவருவதும் கண்கூடு. குமரிக் கண்டம் கற்பனையே எனக் கூறுபவர்கள், பிரம்மா உலகத்தைப் படைத்ததும், சமற்கிருதம் பிரம்மாவின் மொழியே என்று கூறுவதும், இராமன், 1,74,000 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தான் என்பதும் வரலாற்று உண்மைகள் எனக் கூறத் தயங்குவதில்லை. குமரிக்கண்டக் கொள்கையை எதிர்ப்பவர்கள், தமிழ்ப் பகைவர்களே. அப்பகைவர்களுக்குத் துணை போகும் தமிழர்களும் உள்ளனர். அவர்களுக்குத் தமிழின் மீதுள்ள பற்றைவிட சமயப்பற்றே மிகுந்து காணப்படும். சமயப்பற்றைப் பிடித்துக் கொண்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் யாதெனில், தங்களுடைய சாதிப்பற்றே எனலாம். எவ்வகையிலாவது குமரிக்கண்டக் கொள்கை நிறுவப்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பவர்கள் மேல்சாதிக்காரர் எனச் சொல்லிக் கொள்பவர்களே. சூத்திரர் எனப்படும் தமிழர்களே குமரிக்கண்டக் கொள்கையைப் பற்றி நிற்கிறார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

குமரிக்கண்டம் கி.மு.18000 - 12000 ஆண்டுகளில் சிறுகச் சிறுக அழிந்துபட்டது என்ற உண்மை தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளது. மேலை நாட்டவரும் தற்போது குமரிக் கண்டக் கொள்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மொழியியல் அறிஞர் நோவாம்சுகி (Noamsky) கூட, தமிழே உலகின் முதன் மொழியாக இருந்திருப்பதற்கான காரணங்கள் வலுவுள்ளதாக இருக்கின்றன எனக் கூறுகிறார். தமிழ் மொழியை ஒதுக்கிவிட்டு, முதன்மொழிக் கொள்கையை ஆராய இயலாது

என்பதும் அவரது கருத்தாகும். பாவாணர் கையிலெடுத்த குமரிக் கண்டக் கொள்கை, அவர் காலத்துக்குப் பிறகு மேலும் வலுப்பெற்று வருவதை அறியலாம். ஆங்கிலேயர்கள் திணித்த ஆய்வு முறைகளால் அக்கொள்கையை நிறுவ இயலாது என்பதை உணர்தல் வேண்டும். நிலவியல், புவியியல், ஆழ்கடல் ஆய்வியல், தொன்மரபுச் செய்திகள், இலக்கியச் செய்திகள், உலகச் சமய இலக்கியங்கள் கூறும் செய்திகள் என்றவாறு பல்வேறு தலைப்புகளில் குமரிக்கண்டக் கொள்கை ஆய்வு செய்யப்படல் வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். இத்தலைப்புகளில், ஆழ்கடல் ஆய்வியல் தற்போது தொடங் கப்பட்டுள்ளது. ஒரு சில ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்ற தலைப்புகளில் பல ஆய்வுகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளன. இத்தலைப்புகளில் கவனத்தில் கொள்ளக் கூடியதும் முதன்மையானதும் என்று கருதப்படுவது மொழி யியல் ஆய்வாகும். இந்த ஆய்வும் கூட இன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் குமரிக் கண்டம் என்ற ஆய்வு நூலைக் காண்க.)

முதல் மாந்தன் தோன்றியது குமரிக்கண்டத்தில் தான் என்ற கருத்துக்கு ஏற்புடைய ஆய்வு முடிவுகள் இன்று வெளி வரத் தொடங்கியுள்ளன. அடுத்த பத்தாண்டுகளில், குமரிக் கண்டக் கொள்கை, ஆய்வு நோக்கில் நிறுவப்பட்டு விடும் எனலாம். முதல் மாந்தன் தோன்றிய நாட்டில்தான் முதன் மொழியும் தோன்றியது என்பதை மறுப்பதற்கில்லை. பல்லா யிரம் ஆண்டுக்கால பட்டறிவின் பயனாக வானியல், அறிவியல், எண்ணியல், கணக்கியல், கட்டிடவியல், கலையியல் போன்றவை வளர்ந்தன. குமரிக் கண்டத்தில் அறியப்பட்டிருந்த இந்த இயல்கள் தொடர்பான நூல்களும் பலவாறு இயற்றப்பட்டன. குமரிக்கண்ட அழிவின்போது மறைந்துபோன அந்நூல்கள் பற்றிய குறிப்புகளை, உயிர் பிழைத்தோர் தம் மரபினருக்கு அளித்தனர். அவ்வாறு செவிவழியாகச் சொல்லப்பட்ட பல செய்திகளும் பலநாட்டு இலக்கியப் பதிவுகளாக உள்ளன.

ஐந்திறம் என்ற நூல் குமரிக் கண்டத்தில் அறியப்பட்டிருந் ததாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. தொல்காப்பியர் அந்நூலில் கண்டிருந்த அறிவியலில் தேர்ச்சி பெற்றிருந்தார் என்பர். உண்மையில், ஐந்திரம் என்பது பற்றிய தெளிவான விளக்கங்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. ஐந்திரம்

என்றவாறு இடையின ரகரத்தைப் பயன்படுத்தி, அச்சொல் சமற்கிருதச் சொல்லே எனப் பலரும் கூறி வந்துள்ளனர். வல்லின றகரம் அச்சொல்லுக்கான ஆழத்தையும் பொருளையும் விளக்குவதாக உள்ளது எனலாம். குமரிக் கண்டத்தில் வாழ்ந்திருந்த மயன் என்ற பெருந்தச்சன், ஐந்திறம் என்ற நூலை இயற்றியதாக, பெருந்தச்சர் கணபதி தனது ஆய்வுக் கட்டுரைகளில் வெளிப்படுத்தியுள்ளார். மயனுக்கு பன்னிரு மாணாக்கர்கள் இருந்ததாகவும், அவர்களும் ஐந்திறத்தில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்றும், அவர்கள் வழியிலேயே ஐந்திறநூல் வடநாட்டிலும், உலக நாடுகளிலும் பரவியது என்றும் கூறுகிறார்.

உலகப் பெருந்தச்சன் மயன் பற்றிய செய்திகள் சமற்கிருத இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. அந்தந்த இலக்கியங்கள் எழுதப்பட்ட காலத்தில் மயன் வாழ்ந்திருந்தாகக் கருதப்பட்டாலும், ஔவையார் என்ற பெண்பாற் புலவரைப் போன்றே, ஐந்திற நூலில் தேர்ச்சி பெற்றிருந்தவர்கள், மயன் என்றே சொல்லப்பட்டார்கள் எனக் கருத இடமுண்டு. அமெரிக்க நாடான மெக்சிகோவில் அறியப்படும் மாயா நாகரிகம், மயன் உருவாக்கியதே என்று பெருந்தச்சர் கணபதி கூறுகிறார். தமிழரின் தொல் தொழிலான கட்டிடக் கலையின் அனைத்துக் கூறுகளும் மாயா நாகரிகத்தில் காணப்படுவதாகவும் கூறுகிறார். பெருந்தச்சர் கணபதி முன்வைக்கும் பல ஆய்வுக் கருத்துகளை, மென்மேலும் ஆய்வு செய்ய வேண்டும்.

மயன் பற்றிய செய்திகளில் கால முரண்பாடுகள் பெருமளவில் உள்ளன. மயனுடைய மகளாக மண்டோதரி (இலங்கை வேந்தன் இராவணனின் மனைவி) சொல்லப்படுகிறாள். இராமாயணக் காலம் கி.மு. 16000 ஆண்டுகள் என்று சொல்லப்படுவதும் ஏற்கக்கூடியதாக இல்லை. பாண்டவர்களுக்குக் கட்டிக் கொடுத்த அரக்கு மாளிகை, மயனுடைய கை வண்ணமே என்று மகாபாரதம் கூறுகிறது. மயன் எழுதிய நூல்களாக, வாஸ்து சாத்திரம், சோதிடக் கணிதம் (Jyotirgamita), சூரிய சித்தாந்தம், ஐந்திறம் வானியலும் (Astro physics), ஆழ்கடல் ஆய்வியலும், ஒக சாத்திரமும் என்றவாறு பல்வேறு துறைகளில் அவை சொல்லப்படுகின்றன. பிரம்ம சூத்திரம் என்பது, சிற்ப மற்றும் கட்டிடக் கலை நுட்பங்களை விளக்குகின்றது. ஐந்திறம் என்ற நூல் இயல், இசை, நாடகம், சிற்பம், கட்டிடக் கலை என்ற ஐந்து துறைகளைச் சார்ந்த நூல் என

விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நூல்கள் அனைத்தும் மயன் என்ற பெருந்தச்சனால் எழுதப் பெற்றவை என சமற்கிருத இலக்கியமான "வைசம்பாயனம்" கூறுகிறது.[500] இந்த நூலில் தமிழ்மொழி பெயர்ப்பு எனக் கருதக் கூடிய தொகுப்பு, தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழில் அறியப்பட்டிருந்த மேற்கண்ட நூல்களை, மயனோ அல்லது மயன் என்ற பெயரில் பலரோ எழுதியிருக்க வேண்டும். தமிழ் மூலம் கிடைக்கவில்லையென்றாலும் சமற்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ள வைசம்பாயனம் நூலை, ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்ப்புலவர் ஒருவர் மொழி பெயர்த்துள்ளார். உரைநடைக் கவிதை போன்று உள்ள அந்நூல் 18 அல்லது 19 ஆம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். சங்க காலத்து நடையோ, இடைக் காலத்து மரபோ, அந்நூலில் காணப்படவில்லையென்றாலும், பல்வேறு தமிழர் தொடர்பான செய்திகளை அந்நூல் விளக்குகிறது. இறையனார் அகப்பொருள், சிலப்பதிகாரம், புறநானூறு ஆகிய இலக்கியங்களில் சொல்லப்பட்ட செய்திகளை மேலும் மெருகூட்டி வைசம்பாயனம் விளக்குகின்றது.[501] குறிப்பாக, குமரிக்கண்டம் பற்றியும், தமிழரின் கலைத்திறம் பற்றியும் விரிவாக விளக்குகின்றது. அந்த வகையில் இந்நூல் தமிழுக்குப் புதிய வரவு என்பதோடு, ஆரியர்களும் தமிழரின் சிறப்பை அறிந்திருந்தனர் என்பதை அறியலாம்.

நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதாம்

– சிலப்பதிகாரம்[502]

மயனைப் பற்றியும் மயன்மரபு பற்றியும் தொல்தமிழர் செவிவழிச் செய்திகளாக பலவற்றை அறிந்து கூறிவந்துள்ளனர். எனவே அனைத்துக் கலைகளின் முதல்வன் மயனே என்பது தமிழர் மரபுச் செய்தியாகும்.

வைசம்பாயனர் என்ற சமற்கிருதப் புலவர் யாத்த வைசம்பாயனம் என்ற நூலின் தமிழாக்கத்தில் அவரைப் போற்றிப் புகழும் பாடலும் இடம் பெற்றுள்ளது. வைசம்பாயனர் என்ற பெயர், நிகழ்வுகளைத் தொகுத்து (சம்பவங்களை)க் கொடுத்தவர் (வைத்தவர்) என்ற பொருளால் அறியப்படும்.

நிலந்தரு திருவில்வேந்தன் நெறிமுறை நிலைத்துவாழி
பொலந்தரு தேவிகண்ட புனிதமா நெறியும்வாழி
வலந்தரச் செய்யவந்த வைசம்பா யனரும்வாழி
நலந்தரும் ஆடல்வல்லான் நன்னெறி வாழிவாழி
– வைசம்பாயனம், 1208

குமரிக்கண்டம் பற்றியது:

பெருமலை யொருபுறத்தே திருமலை மறுபுறத்தே
பெருங்கடல் ஒருபுறத்தே இருங்கடல் மறுபுறத்தே
திருவுறச் சூழ்ந்ததாலே செழுவளம் கெழுமிச்சூழ
ஒருபெரும் கன்னிநாடு குமரிநா டௌவுரைத்தார். – வை. 864

ஏழெடு நாடுதோறும் ஏழிசை முழக்கங்கண்டான்
ஏழெடு நாடுதோறும் விண்கலம் இயக்கியன்று
ஏழெடு நாடுவாழ எழிற்கலை ஆய்வுகண்டான்
ஏழெடு நாடுவாழ ஏற்றமும் அளித்தான் அன்றே – 101.

குமரியற் றீவேயென்றும் குமரிமா நிலமேயென்றும்
குமரிமா எல்லையென்றும் கோடுறும் குமரியென்றும்
குமரிமாப் பரப்பிலன்று கோட்டமும் அமைத்த சிற்பி
குமரிமாப் பரப்பிலன்று கோட்டையும் அமைத்தானன்றே – 656.

பலதுளி யாறுபாயும் பைம்பொழில் சூழ்ந்தநாடு
பலகலை அறிஞர்வாழும் பெருந்திருக் குமரிநாடு
பலவளம் சிறந்தேயோங்கும் பாண்டியன் ஆட்சிநாடு
நிலந்தடு திருவில்வேந்தன் நெறிமுறை கண்டநாடு – 1047.

குமரிநன் னிலத்திலன்று குணமுறும் கலைகள்ஆய்ந்து
குமரியாள் அருளினாலே கூர்மதி நனிவிளங்க
அமர்பொருள் கருவிகண்டான் ஆற்றலும் ஆண்மைமிக்க
அமர்நிலை வீழும்ஓங்க அருங்கலை வளர்தானன்றே – 102.

பலதுளி யாற்றினோரம் பைம்பொழில் சூழ்ந்திருக்க
பலதுளி யாற்றினோரம் பெருமரம் விழுதின்ஓங்க
பலதுளி வெள்ளம்போன்று பெருங்கலை வளர்ச்சியாகி
பலதுளி வளத்தைப்போன்று வளர்ந்தன கலைகளெல்லாம்
– 143.

குமரிக்கண்டத்தில் மயன் வளர்த்த அறிவியல் தொடர்பானவை; அறிஞனாகத் திகழ்ந்த மயன் முல்லையூர் எனும் ஊரில் பிறந்தவன்; சிற்பம், கட்டிடம், இலக்கியம், கடல்செலவு

என்றவாறு பற்பல துறைகளில் சிறந்து விளங்கினான். மயனை முன்னிறுத்திச் சொல்லப்பட்ட செய்திகள், உண்மையில் குமரிக்கண்டத்தில் சிறப்புற்றிருந்தவை எனக் கொள்ளுதல் சிறப்பானது.

தவமணி முடியணிந்து சிவாரம் பொருளைப்போற்றி
சிவநெறி முழுதுணர்ந்து செந்தமிழ் வளர்க்கும் மேலோன்
சிவக்கலைச் சிற்பமோங்க தெருட்கலை ஆடல்ஓங்க
தவக்கலை நெறியுணர்ந்து தமிழ்க்கலை வளர்த்தானன்றே
– 655.

மயன்கலை விளங்குதற்கு மாக்கடல் முல்லையூரில்
மயன்கலைக் கூடம்கண்டு மன்னனுங் காட்டுகண்டான்
மயன்கலைத் திறத்தையோர்ந்து நிலந்தரு திருவில்வேந்தன்
மயன்கலை வளர்வதற்கு வகுத்தனன் பலவும் செய்தான்– 727.

ஆழ்கடல் முல்லையூரை யணிகலைக் கூடமென்று
ஆழ்கடல் முல்லையூரில் அமைத்தனன் மாட்சியாலே
ஆழ்கடல் துறைமுகத்தை அழகுற வைத்தமாட்சி
ஏழ்கடல் புகழேகொண்டான் நிலந்தரு திருவில்வேந்தன்– 728.

கடல்கண்டான் கடலிலுள்ள கனப்பொருள் மாட்சிகண்டான்
அடல்கண்டான் ஆகியன்று ஆண்மையும் ஆற்றப்பெற்று
கடலினைக் கடந்தேசென்று பற்பல தேயம்சென்று
திடமுடன் கலைவளர்க்கச் செறிநிலை நிலையும்கண்டான்
– 82.

சிற்பியாய் சிற்பம்செய்து சித்தனாய் வாழ்ந்துகாட்டி
வெற்பெலாம் எழுத்தேநீட்டி வனமெலாம் நடந்துசென்று
பற்பல தேயம்என்று அற்புதம் புரிந்தமாட்சி
சிற்பியாம் மயனின் ஆடல் எவருணர்ந்து ஆற்றவல்லான் – 637.

கணிதமாக் கலையுணர்ந்து கணிதத்தால் வானநூலை
கணிதமாத் தத்துவத்தை கவின்பெற வரைந்தமாட்சி
கணிதத்தின் ஆய்வினாலே ககனமும் கடலும்மண்ணும்
கணிதத்தால் விரித்துவரைந்த கலையெலாம் கண்டுஆய்வோம்
– 417.

நவக்கோளை நன்குஆய்ந்து நவக்கலை இனிதின்ஓர்ந்து
நவயியல் முறையுணர்ந்து நன்னிலைக் கலையைக்கண்டு

நவமுறை நுட்பம்கண்டு நற்கலை விளக்கும்மாட்சி
நவபுலத் தியலினாலே நெறிநிலைக் கலையைக் காண்டீர்
– 886

ஒன்பது கோள்கள்கண்டு மூவொன்பான் விண்மீன்கண்டு
பன்னிரு இல்லம்கண்டு பக்குவ முறையும்ஓர்ந்து
நன்னிலை மீன்கள்ஆய்ந்து நவநிலை உணர்ந்துதேர்ந்து
தன்னியல் ஆகக்கூறும் தனிநிலைக் கணிதம்காண்பீர் – 889

பைந்தமிழ் இயக்கங்கண்டேன் செந்தமிழ்க் கலையேகண்டேன்
செந்தமிழ்க் கலையேகண்டேன் செந்தமிழ் இயலேகண்டேன்
செந்தமிழ் இசையே கண்டேன் செந்தமிழ் நடமுங்கண்டேன்
செந்தமிழ் ஆற்றல் கண்டேன் செந்தமிழ்த் திறத்தினாலே
– 275

பாண்டிய மன்னன்கண்டான் வேண்டிய பரிசிலீந்தான்
தூண்டிய பரியுமீந்தான் துதிக்கைமேல் உலாவுங்கொண்டேன்
பாண்டிய மன்னனாலே பற்பல கலைவளர்த்தேன்
பாண்டிய மன்னனாலே பன்னிரு நூறுங்கண்டேன் – 229.

மேற்கண்ட உரைநடைச் செய்யுட்களில், வரலாற்றுத் தொடர்பான முரண்பாடுகள் இருப்பினும், குமரிக் கண்டத்தில் அறிவியல் வளர்ந்த செய்திகள் வெளிப்படுகின்றன. ஐந்திறம் என்பது இயல், இசை, நாடகத் தமிழோடு, சிற்பம் மற்றும் கட்டிடக் கலைகள் பற்றிய நுணுக்கங்களை விளக்கும் நூலே சொல்லப்பட்டுள்ளது. ஐந்திறம் என்பதற்குப் பல்வேறு விளக்கங்களை அறிஞர்கள் அளித்தனர். பாவாணர், அது சோதிடக் கலை நூல் என்று கூறினார். பொதுவில், ஐந்திறம் என்பது அறிஞர் தகுதிபெற, ஐந்து திறமைகளை வளர்த்த நூல் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

குறிப்பு: மேற்கண்ட தகவல்கள், பெருந்தச்சர் கணபதி அவர்கள் பதிப்பித்து, பாண்டியன் அண்ணாமலைப் பதிப்பகம் வெளியிட்டுள்ள வைசம்பாயனம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. பெருந்தச்சர் கணபதி, தமிழ் இனத்துக்கும், மொழிக்கும், கட்டிட மற்றும் சிற்பக் கலைகளுக்கும் பெருமை சேர்த்தவர். குமரியில் வள்ளுவன் சிலையை வானுயர வடித்த தமிழ்மகன் அவர். நிகழ்காலத்தின் மயன் என்று அவரைக் கூறுதல் பொருத்தமானது.

பெருத்தச்சர் கணபதி அவர்கள், இந்தியக் கட்டிடக் கலைகள் பற்றியும் தமிழ்நாட்டுத் தொன்மரபுக் கட்டிடக் கலைகள் பற்றியும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுள் ளார். அக்காலத்தில் பெருந்தச்சர்களே பொறியியல் அறிஞர் களாகத் திகழ்ந்துள்ளனர். அத்தமிழ் மரபில் தோன்றிய பெருந் தச்சர் கணபதி, தமிழரின் கட்டிடக்கலை உலகளாவி விரிந்து பரந்து காணப்படுகின்றது என்ற உண்மைகளைத் தமது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். கம்போடியாவின் ஆங்கோர்வாட் சிவாலயமும், மெக்சிகோவின் மயன் நாகரிகக் கட்டிடங்களும், எகிப்தின் பிரமிடுகளும், தமிழ்க் கட்டிடக் கலையின் தொடர்ச்சியே என்றும், அக்கட்டிடங்களை உருவாக்கியதில் தமிழ்ப் பெருந்தச்சர்களின் பங்கு குறிப்பிடத் தக்கது என்பதையும் விளக்கியுள்ளார். வரலாற்றில் முதன் முதல் அறியப்படும் பாபிலோன் கோபுரம் பற்றிய செய்திகள், அது தமிழர்களால் உருவாக்கப்பட்டதே என்பதை மெய்ப் பிக்கின்றன. இத்தகைய செய்திகளை வரலாற்று நோக்கில் ஆய்வாளர்கள் விளக்குவதைக் காட்டிலும், கட்டிடக் கலைஞர் என்ற தகுதியில் பெருந்தச்சர் கணபதி அவர்கள் விளக்குவது சிறப்புக்குரியதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதுமாக அமையும். தமிழரின் மேலை நாட்டு, கீழை நாட்டுக் குடியேற்றச் செய்தி களுக்கு, வலுவான சான்றுகளை பெருந்தச்சர் கணபதி அவர்கள் எடுத்துவைத்துள்ளார்.

ஒரு புள்ளியில் தோன்றும் அலைகள், சதுர வடிவில் விரிந்து எங்கும் பரவும். அச்சதுர அலைகள் மேல்நோக்கி எழுச்சி பெற்று, பிரமிடுக் காட்சியாக மிளிரும். அவை நுண் சக்தி அலைகள் (manifest from of the unmanifest) எனப்படும். இவ்வலைகள், முப்பக்க அலைகளாகி (three dimentional pyramid) முதல் தோற்றம் பெறுகின்றது. இந்நிலையைத் தோற்று விப்பது மூலக்காலம் (Time source, absolute time and absolute space) எனப்படும். இதன்வழியில் பிரமிடு என்பது மாந்த ஆன்மாவின் அறிவியல் வடிவம் என்று மெய்யியல் விளக்கமும் சொல்லப்படுகின்றது. இதனை விளக்கும் மயன் விளக்கப் பாடங்களாவன:

அடித்தளம் விரிந்ததாகி அவைமேலே குறுகிச்செல்ல
படித்தளம் போல்விளங்கும் படித்தளமாகி நின்று
குடித்தளம் அமைத்ததாலே, குணநிலைவடிவே கண்டு
அடித்தள நிலைக்கேஏற்ற முடித்தளம் அமையும் காண்பீர்.

முடித்தள உச்சியன்றோ மூலத்தை நன்குணர்த்தி
முடிமுதற் பொருளேயாக்கி முழுப்பொருள் நிறைந்தமாட்சி
முடித்தளம் வெளியில்தேக்கி முடித்தளம் வளியால் ஆக்கி
முடித்தளம் ஒளியிசைக்க முயல்வதே சிற்பமென்றார்.

தஞ்சை பெரிய கோயிலும், ஆஸ்கோர் வாட் சிவாலயமும், எகிப்தின் பிரமிடுகளும் மெக்சிகோவின் கோயில்களும், மேற் கண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டப் பெற்றவை கள்தாம் என கணபதியார் உறுதி செய்கிறார். பிரமிடுகளும், மயன் நாகரிகக் கோபுரங்களும் அண்மையில்தான் (19ஆம் நூற்றாண்டில்) ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்டன. அவ்வாய்வு களின் முடிவில் வெளியிடப்பட்ட பொறியியல் நுட்பத்தைத் தான் மேற்கண்ட பாடல்கள் விளக்குகின்றன.

வைசம்பாயனம் நூலில் கண்டுள்ள பல நிகழ்வுகள் தொன் மக் கதைகளாகவே உள்ளன. குறிப்பாக, கால அளவுகளில் காணப்படும் முரண்பாடுகள், ஆய்வாளர்களால் ஏற்கப்படா தவை. சமற்கிருத இலக்கியங்களில் காணப்படும் செய்திகளை, கால வரம்புக்குள் கொண்டுவர இயலாது. இருப்பினும் தொன்மக் கதைகளில் காணப்படும் பல செய்திகள், உண்மை நிகழ்வுகளின் மிகைப்படுத்தப்பட்டவைகளாக உள்ளன. குமரிக் கண்டம், அந்நிலத்தின் மக்களின் வாழ்க்கை முறை, அறிவியல் செய்திகள், கடல்செலவு, வானியல் அறிவு போன்ற பல்வேறு செய்திகளை, ஆய்வுகளுக்கான துணைச்சான்றுகளாக ஏற்றுக் கொள்வதில் தவறேதுமில்லை. வைசம்பாயனம் என்ற நூலில் கண்டுள்ள செய்திகளை, ஆய்வியல் கண்ணோட்டத்தில் அணுகி, உண்மை நிகழ்வுகளைப் பெறமுயற்சிகள் மேற் கொள்ள வேண்டும். சமற்கிருத இலக்கியங்களும், கடந்தகால வரலாற்றை அறிவிக்கும் வரலாற்றுச் சான்றுகளைக் கொண் டுள்ளன என்பதை உணர்தல் வேண்டும்.

உலகிற்கு அறிவியல் கலையை அளித்தவர்கள் குமரிக் கண்ட தமிழ் மக்களே என்ற கருத்துக்கு ஏற்புடையதாக உள்ள வைசம்பாயனம், தமிழ் ஆய்வாளர்களுக்கு ஒரு புதிய வரவே எனக் கூறுதல் மிகையன்று.

ஈழம் (Elam)

ஈழம் என்பது மிகவும் தொன்மையான தமிழ்ச் சொல் லாகும். குமரிக்கண்டத்திலேயே ஈழம் என்ற பகுதி அறியப் பட்டிருந்தது. ஏழ்தெங்க நாட்டின் வடபகுதியாக ஈழம் இருந்தது. எழு - எழுதல் என்ற சொல்லின் பொருள் ஈழத்தில் உண்டு. ஏழ் தெங்கநாடு, ஏழு நிலப்பிரிவுகளாக இருந்தது. இவற்றில் ஒன்றே ஈழம் எனப்பட்டது. ஈழம் என்ற சொல்லுக் கான பெயர்க் காரணங்கள் பலவாறு சொல்லப்படும். எழுதல் அல்லது தோன்றுதல், ஏழில் ஒன்று, மக்களால் ஈர்க்கப்பட்ட நிலப்பகுதி என விரியும். ஈழம் என்பதற்கு நீர்ப்பிடிப்புள்ள நிலப்பகுதி என்ற பொருளும் உண்டு. அதனாலேயே அங்கு தெங்கு விளைந்தது. குமரிக் கண்டத்தின் வடபகுதியாக, இன்றைய தமிழகத்தோடு இணைந்திருந்த ஈழம், குமரிக்கண்ட அழிவின்போது, தனித்தனியாக மாறிப்போயிற்று. இலங்கை என்ற தீவிற்குரிய பெயராகவே ஈழம் சொல்லப்பட்டது. இலங்கை என்பது பிற்காலச் சொல்லாகும். இச்சொல்லுக்கு, தோன்றுதல் (newly existed) என்பதே பொருளாகும். நீரிடையே தோன்றும் நிலப்பகுதியை இலங்கை என்பர். இக்கருத்தை நீலகண்ட சாத்திரியாரும் வலியுறுத்துகிறார்.[503] கோதாவரி ஆற்றின் நடுவே உள்ள ஒரு நிலத்திட்டை, இலங்கை எனச் சுட்டுகிறார். இலங்கை என்பதே, லங்கா என சமற்கிருதத்தில் திரிந்தது. லங்கா என்ற சொல்லின் நீட்சியே லிங்க என்ற சமற்கிருதச் சொல்லாகும். இலங்குதல் என்பது, கண்ணுக்குப் புலனாதல் என்ற பொருளில் அறியப்படும். இலங்கை என்ற சொல், புதியதாகத் தோன்றிய நிலப்பரப்பு என்ற பொரு ளையும் தருவது, அதன் பழைய பெயரே ஈழம் ஆகும். சிலோன் என்பது, சிங்களம் என்ற சொல்லை, ஆங்கிலேயர் திரித்துச் சொன்னதாகும். இன்று, ஈழம் என்பது, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களைக் குறிக்கின்றது.

குமரிக்கண்ட அழிவின்போது, ஈழத்தினின்றும் வெளி யேறிய மக்கள் குழுவொன்று, மேற்கே சென்று குடியேறியது.

முதன்முதலில் மெசபத்தோமியாவில் குடியேறிய நோவா என்பானின் மரபினரில் ஒரு கிளையாகவே அக்குழுவைக் கருதலாம். மேலும் நோவா என்பவன், ஈழத்துக்காரன் என்பதற் கான செய்திகளும் உள்ளன. ஈழத்தினின்றும் குடிபெயர்ந்த தமிழர்கள், தங்களது பகுதியின் பெயரையை புதிய குடியிருப் புக்கும் சூட்டிக் கொண்டனர். அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர், தம்நாட்டின் பகுதிகளைக் குறிக்கும் பெயர் களையே வைத்துக் கொண்டனர் என்பதை ஒப்பு நோக்குக. கி.மு. 10000 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட தமிழரின் குடியி ருப்புப் பகுதி, ஈழம் என்ற பெயரால் மேற்கே அழைக்கப் பட்டது.

ஈழம் (Elam) என்ற தனித்தமிழ்ச் சொல்லை, கிரேக்கர்கள் எலாம் என்று தவறாக ஒலித்தனர் அல்லது தங்களது ஒலிப்பில் கூறினர் எனலாம். ஏற்கனவே அறம் என்ற சொல்லை, அறாம் (Aram) என மாற்றி ஒலித்ததை விளக்கியுள்ளோம். ஈழத்தை எலாம் எனக் குறிப்பிட்டதைப் போலவே, அம்மக்களை எலாமைட் (Elamite) எனவும் பதிவு செய்தனர். இச்சொல், தமிழுக்குத் தொடர்பில்லாத சொல்லைப் போல் உணரப் பட்டது. இடன் என்ற தமிழ்ச்சொல், ஈடன் (Eden) என மாற்றி ஒலிக்கப்பட்டதும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஓர் ஆய்வாளர், எலாமைட் என்ற சொல் எவ்வாறு தோன்றியது என விளக்கம் கேட்டார். மேற்கண்ட விளக்கத்தை அவரிடம் கூறியபோது, பொருந்தாத விளக்கம் என்றும் நகைப்பிற்குரியது என்றும் பதில் கூறினார். மேலைநாட்டு இலக்கியங்கள் பற்றித் தெரிந்திராத ஆய்வாளர்கள்தான் நகைப் பிற்குரியவர்கள் என எண்ணுதல் சரியானது. வரலாற்றின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாத அந்த ஆய்வாளர், இப்படி யெல்லாம் விளக்கம் சொல்லி, தமிழைக் கெடுத்துவிடாதீர்கள் என்றும் அறிவுரை கூறினார். உண்மையில், மேற்கித்திய இலக் கியங்கள் தரும் செய்திகள் விளக்கங்களை, பொது நிலை யினரும், தமிழ் உணர்வாளர்களும் புரிந்து கொள்கின்றனர். இப்புரிதல் ஆய்வாளர்களிடையே காணப்படவில்லை.

பாபிலோனுக்குக் கிழக்கே அமைந்திருந்த ஈழம் என்ற தொல்தமிழ்க் குடியேற்றநாடு பற்றி விரிவான செய்திகள் கிடைக்கவில்லை. தைகிரீசு ஆற்றுச் சமவெளிக்கு வடகிழக் கிலும், கிழக்கிலும் அறியப்பட்ட ஒரு சிறிய நாடே ஈழம்

எனப்பட்டது. அப்பகுதியில் குடியேறிய மக்கள் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. ஈழம் என்ற சொல்லுக்கே பொருள் தெரியவில்லை என்றும், அது எம்மொழியில் உள்ளதென்பதும் அறியப்படவில்லை என்றும், ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஈழம் என்ற சொல்லுக்கே பொருள் தெரியாத ஆய்வாளர்களால், அங்கு முதலில் குடியேறிய மக்களைப் பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் கி.மு. 2700 ஆண்டுகளில், அப்பகுதியில் மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை உறுதி செய்கின்றனர். தொடக்கத்தில் ஈழத்தை பெருஞ் செல்வம் படைத்த ஒரு சிலரே ஆண்டு வந்தனர் என்பர். முறையான அரசு எதுவும் தொடக்கத்தில் அறியப்படவில்லை. கி.மு. 2300 ஆண்டுகளுக்குப் பிறகே ஈழம் பற்றிய செய்திகள், சில ஆவணங்களில் பதியப்பட்டுள்ளன. பாபிலோனை ஆண்ட சார்கோன், சின்ன மாறன் (Maran turns as Naram) ஆகியோரின் ஆளுகையில் ஈழம் இடம் பெற்றிருந்தது. பாபிலோன் நாட்டுக்கு நட்பு நாடாகவும், சில காலங்களில் பகைநாடாகவும் ஈழம் இருந்துள்ளது.[504]

ஈழத்தை ஆண்ட மன்னர்களாக குத்தூர் அல்லது கூத்தூர் நாகுந்தன் (Kutur Nakunta) என்றவனும் அவனது தந்தை நாகுந்தன் என்பவனும் அறியப்படுகின்றனர்.[505] நாகுந்த என்ற சொல், நாய்குந்துதல் அல்லது அமர்தல் என்றவாறு அறியப் படும். வடஇந்திய மாநிலங்களில் பெரும்பாலோர் இவ்வாறே அமர்ந்திருப்பர். முசுகுந்தன் என்ற சொல் ஏற்கனவே தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. (முசு = குரங்கு). குந்தன் - குந்தி என்பவை தமிழ்ச் சொற்களே. (குந்தாணி = உரல்). ஈழம், கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகு அசீரிய, பாபிலோனிய, பாரசீக ஆட்சிக்குட்பட்ட பகுதியாகவே இருந்துள்ளது. ஈழமக்கள், பல்வேறு தெய்வங்களை வழிபட்டு வந்தனர். பல கடவுளர் வணக்கமுறையை, எசக்கியெல் என்பார் கண்டித் துள்ளார். எகோ ஆ என்ற கடவுளின். விருப்பப்படி, ஈழம் அடிமைப்பட்டது என்பது எசக்கியெல்லின் கருத்தாகும்.[506] (எசக். 27:9) இசையா என்னும் மறை அறிஞர், ஈழமக்கள் மிகச் சிறந்த வில்லாளிகள் (archers) என்று கூறுகிறார்.[507] (இசையா, 22:6).

ஈழமொழியையும் எலாமைட் என்றே குறிப்பிடுகின்றனர். இம்மொழியை செமிட்டிக் குடும்ப மொழிகளோடு இணைத்

துள்ளனர். இம்மொழி, ஏறக்குறைய மேற்காசியாவின் பழைய மொழிகளோடு தொடர்புடையது. சுமேரிய மொழியிலும், ஈழமொழியின் சொற்கள் விரவிக் கிடக்கின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்து. கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகு, ஈழம் தனது தனித்தன்மையை இழந்துவிட்டதால், வரலாற்றின் பிற்காலங்களில் அந்நாடு மறக்கப்பட்டது.

கல்தேயத்தார் (Chaldeans)

கல்தேயம் (chaldea) என்பது கிரேக்கமொழிச் சொல்லாகும். கருமை என்ற சொல், அந்நாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. காய் + இடம் = காயிடம், கருமையான இடம் அல்லது நிலம். பாபிலோனுக்குத் தெற்கே அறியப்படும் சிறிய நாடு. ஈழத்தைப் போன்று பரப்பளவில் சிறியது. ஒரு சில காலங்கள் தவிர்த்து (கி.மு. 10-8) ஒரு நூற்றாண்டு அளவிலேயே அவர்களது ஆட்சி நிலை பெற்றிருந்தது. கருமையான நிலம் என்பதை எபிரேய மொழியில் காயிடம் அல்லது காசடிம் (Kasadim) என அழைத்தனர். அக்காடிய மொழியில் அந்நாடு கல்து (Kaldu) என அழைக்கப்பட்டது.[508] எபிரேய மொழிச் சொல்லின் பொருளைக் கொண்டு, கல்து என்பதும், கல்தியா என்பதும் கருமையைக் குறித்ததே என அறியலாம். ஆனாலும், ஆய்வாளர்கள் சரியான விளக்கங்களை அளிக்கவில்லை. (கன் என்பது கருமையைக் குறித்த தமிழ்ச்சொல். கன் - கல் என விரிந்தது.)

பாபிலோனியப் படையெடுப்பில் வீழ்ந்த கல்தேயம் (கி.மு. 560), மீண்டும் தன்னாட்சித் தகுதி பெறவில்லை. கல்தேயத்தார், எபிரேய மக்களின் ஒரு கிளையினரே என்று கருதப்படுகின்றனர். பொதுவாக இவர்களது இருப்பிடம் ஊர் நகரில் இருந்தமையால் ஊர் நகரத்துக் கல்தேயத்தார் (Chaldeans of Ur) என்றே அழைக்கப்பட்டனர்.[509] அபிறகாம் பிறந்தது ஊர் நகரத்தில்தான் என்பதை நோக்குக. அபிறகாம் - மோசே வழியில் செல்லாது. பழைய சமயத்திலேயே அவர்கள் நிலைத்திருந்தனர். பாபிலோனியர் சோதிடக் கலையில் சிறந்து விளங்கினர் என்று கூறப்படுவதுண்டு. அதற்கான சோதிட மூலத்தைக் கற்றுத் தந்தவர்கள் கல்தேயச் சோதிடர்களே. பாபிலோனிய மன்னன் நெபூக்கதெனசோர் கண்ட கனவினை கல்தேயச் சோதிடர்களால் விளக்கிக் கூற இயலாத நிலையில் தான் - எல் (Dan - el) என்ற அறிஞர், விளக்கிக் கூறினார்

என்றும், எகோஆக் கடவுளின் அருள் அவருக்கு இருந்தது என்றும் விவிலியம் கூறுகிறது. (தானியெல், 2:2; 5:11). எபிறேய இனத்தின் கிளையினராக கல்தேயத்தார் கருதப்படுவதால், இவர்களும் தமிழ் இனத்தின் ஒரு கிளைமரபினரே எனக் கருத லாம்.

கனானியர் (Canaanites)

எகிப்துக்கும் சிரியாவுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி கனான் நாடு என்றழைக்கப்பட்டது. எபிறேய மக்களை எகிப்தின் அடிமைத் தளையினின்றும் மீட்ட மோசேயின் சீடனான ஓசுவா என்பான், கனான் நாட்டைவென்று, அதற்கு இசுராயெல் என்று புதுப்பெயர் சூட்டினான். அந்நாட்டின் பழங்குடி மக்களே கனானியர் எனப்பட்டனர். கனானியர் என்போர், எபிறேய செவிவழிச் செய்திகளின்படி, நோவாவின் பெயரனும், ஆம் என்பவனின் மகன் வழி மக்களுமாவர். ஆம் என்பவனை (மகனை) நோவா கடிந்து கொண்டதால், நோவா வின் நல்லெண்ணத்தில் அவன் இடம் பெறாமற் போனான் என்று விவிலியம் கூறுகிறது. அதனால், செம் என்ற மூத்த மகனுக்கு இணையாக அவன் மரபினர் வளரவில்லை என்பர். அதன் தொடர்ச்சியாகவே கனான் நாட்டை எபிறேயர் வென்றனர் என்றும் சொல்லப்படுகின்றது.[510]

கனான் (Canaan) என்ற சொல்லுக்கான பொருளை அறிய இயலவில்லை என்பர். இருப்பினும் செம்பழுப்பு நிறம் (purple) என்றவாறு கூறி, அங்கு நெய்யப்பட்ட கம்பளி ஆடைகளை அச்சொல் குறிக்கிறது என்று கூறுவர். இது உண்மையான பொருளன்று என மறுக்கும் ஆய்வாளர்களும் உள்ளனர். எனவே, கனான் என்ற சொல்லுக்கான பொருளை மேலை ஆய்வாளர்களால் தர இயலவில்லை என்பதே உண்மை நிலையாகும்.[511] தமிழ்க் கண்ணோட்டத்தில் அச்சொல்லை நம்மால் விடுவிக்க இயலும். கனான் என்பது, கன்னன் அல்லது கறுப்பன் என்ற சொல்லின் திரிபே எனலாம்.

கன்னுதல், கறுத்தல் எனப்படும்.

கன் = கறுமை; கன்னல் = கறுமை; கன்னங்கரேல் என்ற சொல்லை நோக்குக. நோவா, தமிழனே என்பதால், அவன் பெயரனும் கன்னங் கறுமையாக இருந்தது பற்றி கன்னன் என்றே அழைக்கப் பட்டான் என்க. கன்னன் - கனான் எனத்திரிந்தது.

கன் - கண் எனவும் விரிந்தது. கண் என்பதும் கறுமையைக் குறித்தது.

கண் - கண்ணன் = கறுமை நிறத்தான்.

கருமை - கறுமை விளக்கம் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது.

கனானியர், நோவா வழி தமிழர்களே என்க.

கெனியர்கள் (Kenites)

மேற்காசிய வரலாற்றில் கெனியர் என்ற மரபு ஒரு குழப்ப மானதும் புதிரானதாகவும் கருதப்படுகின்றது. இவர்களை இசுராயெல் (யூதர்கள்) இனத்தாரோடு ஆய்வாளர்கள் தொடர் புபடுத்தவில்லை.[512] இவ்விருவரும் வெவ்வேறு இனத்தார் என்றே முடிவு செய்துள்ளனர். இவர்களது முன்னோர்கள் யாவர்? அவர்கள் எந்நாட்டினர் என்ற விளக்கம் அளிக்கப் படவில்லை. இருப்பினும் கி.மு. 1000 ஆண்டுகளில், இசுரா யெல் நாட்டிலும், அதனைச் சுற்றியிருந்த நகர்ப் புறங்களிலும் அறியப்பட்டுள்ளனர். யாக்கோபுவின் 12 மகன்கள் வழி மரபினரில் யூதா என்ற மரபும் ஒன்று. இம்மரபு எக்காலத்தும் மோசேயுடன் உடன்பட்டிருக்கவில்லை. ஆதலால் இம்மர பினர் சிறப்புகள் எதுவுமின்றி மற்றவரால் புறக்கணிக்கப்பட் டிருந்தனர். இந்த யூதா மரபுடன் கெனியர்கள் மிகவும் நெருக் கமாக இருந்தனர். இவர்களிடையே காணப்பட்ட உறவுக்கு விளக்கங்கள் எவையும் அளிக்கப்படவில்லை. இதனால் சாவுல் என்ற மன்னன் யூதா மரபை வெறுத்து ஒதுக்கியபோது, கெனியர்களையும் வேட்டையாடினான். கால ஓட்டத்தினால் ஏற்பட்ட மாற்றத்தினால், யூதா மரபைச் சார்ந்த தாவீது மன்னன் ஆனான். இதனால் கெனியர்களும் சிறப்பு பெற்றனர் என்பதை விவிலியம் விளக்குகின்றது.

இக்கெனியர்கள் பற்றிய செவிவழிச் செய்தியில், இவர்கள் ஆதாமின் முதல் மகனான காயன் என்பானுடைய மரபைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகின்றனர்.[513] ஆதாம் மேற் காசியப் பகுதியில் வாழ்ந்திருக்கவில்லை என்பதை திருக்குர் ஆன் உள்ளிட்ட நூல்கள் விளக்குகையில், ஆதாமின் மகன் மரபினர் எவ்வாறு மேற்காசியாவில் இருந்தனர் என்பதற்கும் விளக்கம் இல்லை. ஆதாம் இலங்கையில் வாழ்ந்திருந்ததாக திருக்குர்ஆன் தெரிவிக்கின்றது. ஆதாமின் இரு மகன்களுடைய கல்லறைகள் இராமேசுவரத்தில் இருப்பதாக நம்பப்படுகிறது. தமிழ்நாட்டிலிருந்து இம்மரபினர் எவ்வாறு மேற்காசியா வுக்குச் சென்றனர் என்பதற்கான குறிப்புகள் இல்லை.

கெனியர்கள் நாடோடி இனத்தவர் என்றும், கம்மியர் (smiths) தொழில் செய்து வந்தனர் என்றும் சொல்லப்பட்டுள்ளனர். (தமிழ்நாட்டில் ஈயம் பூசுபவர் போன்று) நிலையாக ஓரிடத்தில் அவர்கள் இருப்பதில்லை. இதற்கான காரணமாகச் சொல்லப்படுவது, அவர்களது முன்னோனாகிய காயன், கடவுளால், நாடோடியாய் அலையுமாறு ஆணையிடப்பட்டான் என்பதே.

காயன் என்பதற்கு, காய்ச்சுபவன் என்ற பொருள் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. அவனைக் கன்னான் என்றும் அழைப்பர். கன்னன் = கறுப்பன்; கன்னான் = கருமான் என்க. கன்னான் என்ற சொல்லே, கெனியன் (Keniyan) எனத் திரிபுபட்டுள்ளதைக் காணலாம். இவர்கள் யூதா மரபுடன் நெருங்கியிருந்தாலும், எகோஆ கடவுளை இவர்கள் வணங்கவில்லை. பல கடவுளரை வணங்கினர்.

மிடியர்கள் (Midians)[514]

சினை மலைப் பகுதியில் வாழ்ந்திருந்த இடையர் இனமாக இவர்கள் கருதப்படுகின்றனர். அபிறகாம் சாராவுக்குப் பிறகு, கெத்தூரா (Kethura) என்ற பெண்ணை மணந்து கொண்டதாகவும், அவளுக்குப் பிறந்தவனே மிடியன் என்றும் அழைக்கப்பட்டான். இவன் மரபினரே மிடியர்கள் எனப்பட்டனர். மிடியன் என்ற சொல்லுக்கான பொருள் தெரியவில்லை என்கின்றனர். இருப்பினும் தமிழுக்கே உரிய ன் விகுதியில் முடியும் அப்பெயர் தமிழ்ப் பெயராகவோ அல்லது திரிபுப் பெயராகவோ இருந்திருக்கலாம். இடையன் என்ற சொல்லும்கூட மிடையன், மிடியன் எனத் திரிபு பட்டிருக்கலாம். அபிறகாமின் வழிவந்த இம்மக்கள் எல் கடவுளையே வழிபட்டு வந்தனர். அக்கடவுள் சினை மலையில் குடியிருப்பதாகவும் கருதினர். எல்சடை (El Shaddai) என்ற கடவுளின் பெயருக்கு, மலைத் தொடரில் குடியிருக்கும் கடவுள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. சடை என்ற தமிழ்ச் சொல், சடுத்தல் அல்லது நீளுதல் என்ற பொருளைத் தருவது. தமிழ்க் கடவுளான சிவன் சடையன் என்றும் சொல்லப்படுவதை ஒப்பு நோக்குக.

சினை மலையில் இருந்த மிடியர்களின் கடவுள்தான், மோசேவுக்குக் காட்சியளித்ததாக விவிலியம் கூறுகிறது.

அக்கடவுளை எகோ ஆ என்று மோசே பெயர் சூட்டியிருக்க வேண்டும் என்பர். இந்த மிடியர்களின் சமயத்தலைவனாக, எத்துரோ என்பவன் இருந்தான். இவனுடைய மகளையே மோசே மணந்து கொண்டான். எத்துரோ தன் கடவுளுக்கு எகோ ஆ என்ற பெயரும் உண்டு என மோசேயிடம் கூறியிருக்க வேண்டும். எகோ ஆ என்ற பெயர் கடவுளுக்குச் சொல்லப்பட்டதின் பின்னணி எதுவும் தெரியவில்லை.

மிடியர்கள் மலைப்பகுதியில் ஆடுமாடுகளை மேய்த்து வந்த இடையர்களாகச் சொல்லப்பட்டுள்ளனர். மலைப் பகுதியில் சிறிய அளவில் வேளாண்மையும் செய்துவந்தனர். எகிப்துக்குச் செல்லும் பெருவழியில் சினைமலைப்பகுதி இருந்ததால், சிலர் வணிகர்களாகவும் இருந்தனர் என்பர். அபிறகாம் வழியில் வந்த இம்மக்களோடு, மோசே திருமண உறவு கொண்டதால், விவிலியத்தில் இம்மக்கள் குறிப்பிடப் பட்டுள்ளனர். எகிப்தினின்றும் மீண்ட எபிறேய மக்களுக்கு, பல்வேறு உதவிகளையும் செய்துள்ளனர். எனினும் பிற்காலத்தில் எபிறேய மக்களோடு (இசுராயெல்) நல்லுறவு கொண்டிருக்கவில்லை. மோசேவுக்குப் பிறகு அம்மக்கள் வரலாற்றில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கிரேக்க மொழியில் இவர்கள் மதியன் (Madian) என்று சொல்லப்பட்டுள்ளனர். சில ஆய்வாளர்கள், இசும எல் என்ற அபிறகாமின் மூத்த மகன் வழிவந்த அராபியருடன் இம்மக்கள் தொடர்புடையவர்கள் என்ற கருத்தையும் முன்வைக்கின்றனர். மதினா என்ற அரபு நாட்டு நகரத்துக்கும், மதியர்கள் என்ற பெயருக்கும் தொடர்புகள் உண்டு என்பது சில ஆய்வாளர் களின் கருத்து. அபிறகாம் தமிழனே என்பதால், இம்மக்களும் தமிழ் மரபின் கிளையே எனக் கூறுதல் பொருத்தமானது.

அராபியர் (Arabs)

செங்கடல் முதல் பாரசீக வளைகுடா வரை விரிந்து காணப்படும் பெருநிலப்பரப்பும் தீவக்குறையுமான பகுதியே அராபியரின் நாடெனப்படுகின்றது. அராபியா அல்லது அரேபியா என்றவாறு அழைக்கப்படும் அந்நாடு வரலாற்றுக் காலத்துக்கு முன்பே அறியப்பட்டிருந்தது. அரேபியாவின் மையப்பகுதியில் அமைந்துள்ள பாலை நிலம், வடக்கே மெச பத்தோமியா, மேற்கே பாலத்தீனம் ஆகிய நாடுகளைப் பிரித்தது.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூலில், அராப் என்ற பெயர் நாடோடி (nomad) என்றும் (இசையா, 13:20), கொள்ளையர் (Bandit) என்றும் (எரேமியா, 3:2), கிழக்கின் மக்கள் என்றும் (sons of the east) சொல்லப்பட்டுள்ளனர். எபிறேய மொழியில், பென் கிடிம் (Ben-Kedem) என்று அறியப்படுகின்றனர். இதற்கு கிழக்கின் மக்கள் என்பதே பொருளாகும். கீழிடம் என்ற தமிழ்ச் சொல்லே, கிடிம் எனத்திரிந்துள்ளது. அரேபியா சிறப்புக்குரிய வணிகர்களைக் கொண்டிருந்த நாடென்றும், ஏராளமான கனிமங்கள் பிற நாடுகளுக்கு அங்கிருந்து கொண்டு செல்லப் பட்டனவென்றும் அசீரியக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அராபியர் செமிட்டிக் இன வழி மக்களே என உறுதிசெய்யப் பட்டுள்ளது.[515]

தமிழ்நாட்டுக்கு மேற்கில் அமைந்துள்ள அரேபியாவுடன் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே, வணிகத் தொடர்புகள் இருந்திருக்க வேண்டும். சிந்துவெளியினின்றும் சென்ற வணிகர்கள், அரேபியாவின் கிழக்கு எல்லையான பாரசீக வளைகுடா வழியே சென்றதற்கான சான்றுகள் உள்ளன. உலோத்தள் (Lothal) என்ற துறைமுகத்தினின்றும் பாபிலோன் சென்ற மரக்கலங்கள், தங்குவதற்கும் உணவு மற்றும் நீரினைப் பெறுவதற்கும், அரேபியாவின் கிழக்குப் பகுதிகளில் நங்கூர மிட்டன. சுமேரியர்களும், இந்த வழியாகவே பாபிலோனை அடைந்ததாக அறியப்படுகின்றது. தற்போதைய கத்தார் என்ற நாடு, தலை மண் என்ற தமிழ்ப் பெயரால் அக்காலத்தில் அழைக்கப்பட்டது. அது தில் மண் (Dilmun) என்றவாறு திரித்துக் கூறப்பட்டுள்ளது.

அரேபியா என்ற சொல்லுக்கான தெளிவான விளக்கம் தரப்படவில்லை. இருப்பினும் வளமற்ற பயிரிடப்படாத நிலம் (barren land) அல்லது பாலை நிலம் (desert) என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது.[516] தமிழ்க் கண்ணோட்டத்தில் அரவாய் அல்லது அரிவாய் என்றவாறு பொருள் கொள்ளலாம். இரண்டு கடற்பகுதிகளால் (செங்கடல், பாரசீகக் கடல்) அரியப்பட்ட அல்லது துண்டிக்கப்பட்ட நிலப்பகுதி எனப் பொருள் கொள்ளலாம். அரவாய் - அரபா எனத்திரிந்தது, கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு, அராபியர்களின் வருகை தமிழகத்தில் பரவலாக அறியப்பட்டது. தமிழ்க் குறிப்புகள் அவர்களைத் துருக்கர் (Turks) என்று குறிப்பிடுகின்றன. யவனர் என்பதும்

அராபியரைக் குறித்ததே எனவும் சிலர் (தவறாகப்) பொருள் கொள்கின்றனர். வணிகர்களாகவே தொடக்கத்தில் அறியப் படும் அராபியர், இடைக்காலச் சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் காலங் களில் பரவலாக அறியப்பட்டுள்ளனர். குறிப்பாக, மேற்கு கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் அரபு வணிகர்களின் நட மாட்டம் மிகுந்து காணப்பட்டது. நபிகள் நாயகம் காலத்தி லேயே, சேரமன்னன் சேரமான் பெருமாள், மக்காவுக்குச் சென்ற தாகம். அங்கு இசுலாத்தைத் தழுவியதாகவும் செய்திகள் கூறுகின்றன. நபிகள் நாயகம் காலத்திலேயே, கொச்சியில் முதல் பள்ளிவாயில் (mosque) திறக்கப்பட்டதாகவும் அறிகிறோம்.

அரேபியாவின் தொடக்கக் கால மக்கள், அந்நாட்டின் மூன்று பகுதிகளில் வாழ்ந்திருந்ததாக தாலமி கூறுகிறார்.[517] பெத்ரியா, பெலிக்சு, தெசர்ட்டா (Petrea, Felix and Deserta) என்று அம்மூன்று பகுதிகளையும் அவர் குறிப்பிடுகின்றார். அரேபிய நிலவியாளர்கள் ஐந்து பகுதிகளாக அந்நாட்டைப் பிரித்தனர்.[518] (Tibamah, al - Hijaz, an - Najid, al - Yaman). அந்நிலப் பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்களை மூன்று இனங்களாப் பிரித்தனர். அய் அரபு (ai - Arabul), சமூத் (Samud), தாசம் (Tasm) என்றவாறு அவர்கள் அறியப்படுகின்றனர்.[519] இம்மூன்று இனத் தாரும், செம் (shem) என்ற நோவாவின் முதல் மகன் வழியினர் என்று கருதப்படுகின்றது. இடைமகனான ஆம் (Ham) என்பவன் மரபிலும் அரேபியர் இருந்தனர் என்று சில குறிப்புகள் கூறுகின்றன. செம் என்பானின் மூன்றாம் அல்லது நான்காம் தலைமுறையினனான ஆத் (Aad) என்பவன், அரேபியாவில் குடியேறியதாக, செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. ஆதி அல்லது முதல் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபாகவே, ஆத் என்ற சொல் உணரப்படுகின்றது. பாபிலோனில் கட்டப்பெற்ற முற்றுப் பெறாத கோபுர நிகழ்வுக்குப்பின் இக்குடியேற்றம் நிகழ்ந்ததாகக் கூறுவர்.

நோவா, தமிழனே என்றும், அவனது மக்கள் பேசிய மொழி தமிழே என்றும், அது முதன்மொழி (Proto - language) என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், அதற்கான விளக்கங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளன. அம்முதன் மொழி திரிபு பட்ட நிலையில் பாபிலோனிலிருந்து வெளியேறிய மக்கள் பலமொழிகள் பேசும் இனங்களாக மாறிப் போயினர் என்ற

விவிலியச் செய்தியின்படி, ஆத் என்ற முதல்வன் வழியில் திரிபு பட்ட மொழியே அரபு என்று சொல்லப்படுகின்றது. எனவே, அரபு மொழியும் தமிழின் கிளைமொழியே என்பதற்கான வலுவான சான்றுகள், தற்காலத்தில் தமிழ் - அரபு மொழியியல் அறிஞர்களால் முன்வைக்கப்படுகின்றது.

ஆத் என்பவன், அல் - அப்காப் (al - Abqaf) என்ற பகுதியில் குடியேறி, அப்பகுதி மக்களின் தலைவனாக விளங்கினான். அவனுக்குப்பின் அவனது மகன் சதாத் (Shaddad) என்பவன் ஆட்சிப் பொறுப்பேற்றான். தன் தந்தையின் நினைவாக, ஆதன் (Adan) என்ற பெரு நகரைக் கட்டி முடித்தான். மிகப்பெரிய அரண்மனையையும் கட்டுவித்தான். பொன்னும் மணிகளும் கொண்டு அம்மாளிகை அழகுற மிளிர்ந்தது. நகரில் பல தோட்டங்களையும் உருவாக்கினான். ஈரம் (Iram) என அதற்குப் பெயரிட்டான். நீர்ப்பிடிப்பு நிறைந்த பகுதி என அச்சொல் அறியப்பட்டிருக்கலாம். கடவுள் உருவாக்கிய ஈடன் தோட்டத் துக்கு மாற்றாக இத்தோட்டமும் நகரமும் உருவாக்கப் பட்டது. இறைவனுக்கு எதிரான எண்ணம் கொண்டிருந்த மன்னனின் கனவு தகர்ந்தது. ஒரு நாளில், வானத்தில் முழங்கிய பேரிடியொன்று அந்நகரைத் தாக்கி அந்நகரைத் தரைமட்ட மாக்கியது.[520] பாலை மணலில் புதைந்து போயிற்று. தபாரி (Tabari) என்ற ஆய்வாளர், முஅவியா என்ற தமஸ்கசின் முதன் காலிபா காலத்தில், புதையுண்ட அந்நகரம் கண்டறியப்பட்ட தாகக் கூறுகிறார். ஆத் என்பவனின் மரபினர் பற்றிய விரிவான செய்திகள் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் அவன் மரபினர் யாமனில் வாழ்ந்திருந்ததாக அறியப்படுகின்றது. யாமன் என்பது. யாமன் அல்லது தென்பகுதி நிலம் என்ற தமிழ்ப் பொருளைக் கொண்ட சொல்லாகும். சதாத் கட்டிய ஆதன் என்ற நகரம், சரியான தமிழ்ச் சொற்பெயரைக் கொண்டதே. ஆதன் என்பதற்கு முதல்வன், தலைவன் என்ற பொருள் தமிழில் அறியப்படும். ஆதி என்ற சொல்லின் நீட்சியே ஆதன் ஆகும். ஆதிபகவன் (குறள்), ஆதிசேடன் (பரிபாடல்), ஆதி மந்தி (அகநானூறு); ஆதன் தந்தையார் என்கிற ஆந்தையார், ஆதன் அவினி (ஐங்குறுநூறு), ஆதன் அழிசி (புறநானூறு) ஆகிய தமிழ்ச் சொற்களை ஒப்பு நோக்கலாம்.

சமூது (Samud) என்ற மரபினர், பெலிக்சு அரேபியாவில் குடியேறியதாக தாலமி கூறுகிறார். இம்மக்கள் உயரமான

உருவமும், கட்டுக்கோப்பான உடலையும் கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் மலைகளைக் குடைந்து குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டனர். அம்மலைக் குகைகளை இப்போதும்கூட காணலாம் என தாலமியும் பிளினியும் கூறுகின்றனர்.[521]

மூன்றாவது மரபினரான தாசம், மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் குடியேறினர். இப்பகுதி முழுவதும் அல் - யாமன் எனப்பட்டது. அரபு மொழியில் அல் என்ற முன்னொட்டுச் சொல், The என்ற ஆங்கிலச் சொல் சுட்டும் பொருளைக் குறிப்பது. The Yaman என்பதை, அல் யாமன் என்று அரபுமொழியில் கூறுவர். இம்மக்களுடைய வரலாறும் தெளிவுபடுத்தப்படவில்லை.[522]

ஆத் மரபினரும் சமூத் மரபினரும் தங்கள் முன்னோர் கடைப்பிடித்து வந்த பல கடவுளர் வழிபாட்டு முறையைக் கொண்டிருந்தனர். இதுபற்றி குர்ஆன் கூறும்போது, அல்லா என்ற ஒரு கடவுளை ஏற்காத அம்மக்களைத் திருத்த ஊது (Hud) என்ற இறைத்தூதரை இறைவன் பணித்தார் என்றும், அதனை ஏற்க மறுத்த மக்கள் அல்லாவினால் ஒறுக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிடுகின்றது. சமூத் மரபினருக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர் சாலி (Salih) என்பவரின் அறிவுரைகளும் கேட்கப்படவில்லை.

அராபியர்கள் பற்றிய மற்றொரு குறிப்பு யாதெனில், தற்காலத்தில் அராபியர்கள் அனைவரும் யோக்தான் அல்லது கதான் என்ற தலைவன் மரபில் தோன்றியவர்களே என்பதாகும். விவிலியம் தரும் செய்தியின்படி, யோக்தானுடைய 13 மக்கள் மரபும் (ஆதி. 10:26), கெத்துராவின் 6 மக்கள் மரபும் (ஆதி. 25:1), இசுமயெல்லின் 12 மக்கள் மரபும் (ஆதி. 25:12) அராபியர்களாக அறியப்படுகின்றனர்.

அரபுமொழியென்பது ஒரு செம்மொழியாகக் கருதப்படுகின்றது. குர்ஆனுடைய பதிவுகள் அனைத்தும் அரபு மொழியில் சொல்லப்பட்டுள்ளன. மொழி என்றவாறு, அல்லுகா (The language) என அரபு மொழி அறியப்படுகின்றது. அரபு மொழியின் மூலம் செம் என்பானின் செமிட்டிக் மொழியே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[523] வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட அரபு மொழிக்கும், நபிகள் நாயகம்

காலத்து (கி.பி. 750) அரபு மொழிக்கும் வேறுபாடுகள் உள்ளன. அரேபிய தீவுக்குறையின் தொடக்ககாலத்து மக்கள் பேசிய மொழி, அப்போதே சில கிளைகளாக மாறிப்போயின. இசுலாத்தின் எழுச்சிக்குப் பிறகு, மேற்காசியாவில் பேசப்பட்ட அனைத்து மொழிகளையும் (எபிறேயம் தவிர்த்து) அரபு மொழி உள்வாங்கிக் கொண்டு, புதிய அரபாக உருவெடுத்தது. இதனால், எகிப்து, பாலத்தீனம், சிரியா, துருக்கி போன்ற நாடுகளில் பேசப்பட்ட வட்டார மொழிகள் வழக்கிழந்து போயின. அரபு இசுலாத்தின் சமய மொழியாக்கப்பட்டதால், இசுலாம் பரவிய நாடுகளில் எல்லாம், அரபு மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்காலத்தில் எகிப்து நாட்டில் மூன்று வகையான அரபு மொழிகள் பேசப்படுவதாகக் கூறுகின்றனர்.[524] அன்னைத் தமிழும் சென்னைத் தமிழும் போன்று அறிக.

அரபு மொழியின் நெடுங்கணக்கு முறை, தமிழை ஒத்ததே எனலாம். அ, இ, உ, ஐ, ஒ என்ற உயிர்க் குறில்களும் (Vowels) அதற்கிணையான ஆ, ஈ, மாத்திரை நீண்ட ஐகாரம், ஓ, ஊ என்பவை உயிர் நெடில்களுமாகும். தமிழில் அறியப்படும் ஔ (aw) என்ற ஒலியும் அரபு மொழியில் உண்டு. 28 எழுத்துகளும் ஒலிகளும், 4 ஒலிகளும் (எழுத்து ஒன்றே) எ, ஊ, ஔ ஆகியவை ஒரே எழுத்தில் சிறிது வடிவ வேறுபாட்டுடனும், எ என்ற ஒலி, இ, ஐ என்றவாறு இரண்டாகியும் ஒலிக்கப்படும். 28 எழுத்துக் களும், நான்கு ஒலிகளுமாக ஏறக்குறைய தமிழின் 33 ஒலிகளில், 32 ஐப் பெற்றுள்ளது. ஆய்த எழுத்து அரபுமொழியில் இல்லை.[525]

தமிழ்த்திரிபு கொண்ட சில அரபுச் சொற்களாவன:[526]

அபு (Abu) = அப்பா; அமா = அம்மா; அபா = அப்பா.
பகர் அல்லது நகர் (Bahr or Nahr) = ஆறு. நகர் என்ற சொல்லே,
பெட் (Beit) = வீடு.
பிர்க்கட் (Birket) = நீர்க்கட்டு, ஏரி.
தம் (Dam) = அரத்தம், குருதி.
கரா (Hara) = கரை அல்லது நீண்ட சந்து.
கான் (Khan) = கோன், அரசன்.
மம்மிசி (Mamnisi) = அம்மாவின் வீடு, பிறந்தகம்.
சவுக் (Souk) = சதுக்கம்.
உரா (Ura) = அரா, பாம்பு.
வடி (Wadi) = வடிகால், சிற்றோடை.

விக்கல (Wikala) விக்க (விற்க), வணிகத் தொடர்பான சொல்.

பதாஹ் (Badha) = பதாகை.

சுக்கான் (Sukkam) = சுக்கான், மரக்கலக் கருவி.

பில் (Fil) = பிளிறு (யானை)

தர்கத் (Darhat) = தரு, மரம்.

மக்கபாரா (Makkapara)= கல்லறை, மக்கும் பாறை.

சலா (Sala) =சாலை.

கிரேக்கம் (Greece)

வரலாற்று காலத்தில் எழுச்சி பெற்ற முதல் நாடு கிரேக்கம் ஆகும்.[527] பாபிலோனியர், சுமேரியர், எகிப்தியர், எபிறேயர் போன்ற கீழை நாடுகள் நாகரிகத்திலும் ஆட்சி அதிகாரங் களிலும் சிறப்புற்றிருந்த காலங்களில், கல்வியறிவற்ற, பொரு ளியல் கூறுகளில் மிகவும் பின் தங்கிய நாடாக கிரேக்கம் இருந்தது. அக்கால அளவுகளில் அதனை நாடு என்று சொல்வது கூட பொருத்தமாயிராது. ஒவ்வொரு வட்டாரத்தின் ஊர்களும் தனித்தனியாப் பிரிந்து கிடந்தன. வேளாண்மைக் கேற்ற வளமான மண் அங்கு இல்லை. தொழில்களால் அப்பகுதிகள் சிறப்பு பெற்றிருக்க வில்லை. மக்கள் வறுமையில் வாடினர். இவ்வாறான சூழலில் எகிப்து, பாபிலோன், பாலத்தீனம் போன்ற நாடுகள் வேளாண்மையிலும், தொழில்களிலும், நகரிய நாகரிகங்களிலும், வணிகத்திலும் சிறப்புற்றிருந்தன. எனவே, தங்கள் வறுமையைக் களைந்து பொருளீட்டும் நோக்கில், ஏராளமான கிரேக்கர்கள் மேற்கண்ட நாடுகளில் குடியேறினர். பயிற்சியற்ற தொழிலாளர்களாகப் பணியாற்றினர். கீழை நாடுகளின் கல்வி, பண்பாடு, நாகரிகம், தொழில் ஆகிறவற்றைக் கற்றனர். அக்காலங்களில், போனீசியர் என்ற வணிகர்களுக்கு, உலகெங்கும் சுற்றிவந்து வணிகம் செய்ய ஆட்கள் தேவைப்பட்டனர். போனீசியர் கப்பல்களில் பணியாற்றியவர்களில் பெரும்பாலோர் கிரேக்கர்களே.

கிரேக்கர்கள் தங்கள் வட்டாரங்களில் பேசி வந்த மொழி களும் வெவ்வேறானவை. இலக்கணமற்ற, எழுத்து வடிவங்கள் இல்லாத, கொச்சை மொழிகளை அவர்கள் பேசிவந்தனர். சுமேரிய, பாபிலோனிய இலக்கியங்கள் போன்று எவையும் அக்காலத்தில் அவர்களிடம் இல்லை. சுற்றிலும் கடலைக் கொண்டிருந்த அந்நாட்டினர், மீன் பிடித்தலையே முதல் தொழிலாகக் கொண்ருந்தனர். கி.மு. 2000 ஆண்டுகளில்

இத்தகைய சூழ்நிலையே கிரேக்கத்தில் நிலவியது. நல்ல உயரமும், திடமான உடற் கட்டும் கொண்டிருந்த கிரேக்கர்கள், மிகக் கடினமான பணிகளையும் செய்வதற்குரியவர்களாயிருந்நனர். பலர், கீழை நாடுகளின் போர்ப்படையில் கூட பணியாற்றி வந்தனர். அவ்வாறான கீழை நாட்டுத் தொடர்புகள், கிரேக்கர் களின் அறிவுக் கண்களைத் திறந்தன. வணிகம் உள்ளிட்ட பல்வேறு தொழில்களைக் கற்றனர். பாபிலோனியர், ஆசிரியர், எகிப்தியரிடம் நாட்டை ஆளும் வித்தைகளைக் கற்றனர். சுருக் கமாகக் கூறுவதாயின், கிரேக்கம் என்ற நாட்டை உருவாக்கும் சூழலை, கீழை நாடுகள் அமைத்துக் கொடுத்தன. கீழை நாட்டில் பேசப்பட்ட செமிட்டிக் மொழிகளும் கூட, கிரேக்க மொழியில் கலந்தன. அதுவரையிலும் கிரேக்கர்கள் அறிந்தி ராத எழுத்து முறைகளை, போனீசியர்களிடமிருந்து கற்றனர். கி.மு. 1300 ஆண்டுகளில், போனீசிய வணிகரான காட்மசு என்பவன் (Cadmus) என்பவன், தாங்கள் உருவாக்கிய புதிய எழுத்து முறையை கிரேக்க நாட்டில் அறிமுகம் செய்தான். அம்முறையை நடை முறைக்குக் கோண்டுவந்த கிரேக்கர்கள் தங்கள் மொழியையும் சீர்திருத்திக் கொண்டனர். அடுத்த சில நூற்றாண்டுகளில், கிரேக்க மொழியில் இலக்கியங்கள் எழுதும் அளவிற்கு முன்னேறினர். கிரேக்கத்தின் புதிய தோற்றத்திற்கு, கீழை நாடுகள் பெரிதும் துணை நின்றன என்றால் அது மிகை யன்று. [528]

அவ்வாறு பல்வேறு நாடுகளுக்கும் செல்வதற்கான வாய்ப் புகளைப் பெற்ற கிரேக்கர்களுக்கு, தங்கள் நாட்டையும் ஒருங்கிணைந்து ஓர் அரசை நிறுவ வேண்டும் என்ற சிந்தனை மோலோங்கியது. அதுவரையில் அறியப்படாதிருந்த நாடு என்ற புவியியல் அமைப்பை உருவாக்க முயன்றனர். தனித் தனியாகப் பிரிந்து கிடந்த ஊர்களையும் நகரங்களையும் ஒருங்கிணைத்து, புதிய அரசியல் வரம்பிற்குள் கொண்டு வந்தனர். கி.மு.1000 ஆண்டுகளில் புதிய சிந்தனைகளால் எழுச்சி பெற்ற கிரேக்கம் ஒரு நாடாக உருவாவதற்கான சூழல்கள் தோன்றின. கீழை நாடுகளில் பெற்றிருந்த பயிற்சிகளால், நகரங்கள் புதுப் பொலிவு பெற்றன. மொழி வளர்ந்தது. இலக் கியங்கள் எழுதப்பட்டன. தொழில்கள் வளர்ந்தன. தங்களது திறமைகளை ஒருங்கிணைந்து, அனைத்துத் துறைகளிலும் முன்னேறினர்.

கி.மு. 700 ஆண்டுகளில் தாங்கள் ஒருங்கிணைத்த நாட்டுக்கு எல்லன் (Hellen) என்ற புதுப் பெயரைச் சூட்டிக் கொண்டனர். எல்லன் என்ற நாடு உருவான போது, அந்நாட்டிற்கென பொதுவான மொழியைப் பெற்றனர். பல்வேறு நாகரிகங்களி டமிருந்து பெற்ற நம்பிக்கைகளின் அடிப்படையில், புதிய சமயம் உருவாயிற்று. நகரங்கள் பெருகின. நகரிய நாகரிகம் வளர்ந்ததால், கட்டிடங்கள் கட்டும் கலையும் வளர்ந்தது. அதுவரையில் எந்தச் சிறப்புகளும் பெற்றிராத எல்லன் நாடு, தனக்கென பல அடையாளங்களைப் பெறத் தொடங்கியது. யூத மக்களைப் போன்று, கடவுளால் தெரிந்து கொள்ளப் பட்ட மக்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ள, எந்தச் சமய அடித்தளமும் அவர்களுக்கு இருந்ததில்லை. கி.மு. 500 ஆண்டு களில், கீழை நாடுகளுக்கு இணையாக, இன்னும் ஒருபடி மேலே வளர்ந்திருந்த எல்லன் நாடு, கீழை நாடுகளுக்கு மேலாண்மை செய்யும் அளவிற்கு வளர்திருந்தது. போலிசு (Polis) எனப்பட்ட நகரங்களே, எல்லன் நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நின்றன.[529]

கிரீசு (Greece) என்ற பெயர் பிற்காலத்தில் இணைக்கப் பட்ட பெயராகும். எல்லன் என்பது முதற்பெயராகும். இப்பெ யரும் கூட, கீழை நாட்டில் வழிபடப்பட்டுவந்த எல் என்ற கடவுளின் பெயராக சூட்டப்பட்டதே. தற்காலப் பெயரும் கூட, எல்லன் கிரீசுக் குடியரசு என்றே (Hellenic Republic of Greece) என்றே சொல்லப் படுவதை அறியலாம். தொடக்கத்தில் நகரங்கள் தனித்தனி ஆட்சிப் பகுதிகளாக இருந்தன. அவை களை கி.மு. 350 ஆண்டுகளில் எழுச்சி பெற்ற மாசிடோனிய மன்னன் பிலிப்பு என்பவன் நன்றாக ஒருங்கிணைத்தான். மாசிடோனியா என்பது, கிரேக்கத்தின் மையப் பகுதியில் இருந்த நாடாகும். அடுத்த சில ஆண்டுகளில், கிரேக்கத்தையும் அதன் சுற்றுப் பகுதிகளில் இருந்த தீவுகளையும் ஒருங் கிணைத்து, ஒரு புதிய எழுச்சி மிக்க நாட்டை பிலிப்பு உருவாக் கினான். அவனுடைய மகனான அலெக்சாந்தர், பிலிப்புவின் கனவுகளை நனவாக்கிய தோடு, அது வரையிலும் கிரேக்கம் அறிந்திராத புதிய கிரேக்கத்தை உருவாக்கினான். அக்காலத்தில் வல்லரசுகளாக அறியப் பட்டிருந்த பாபிலோன், அசீரியா, எகிப்து, பாலத்தீனம் போன்ற நாடுகளை வென்றான். ஒரு காலத்தில் பணியாட்களாக வேலை பார்த்த நாடுகளை, தம் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தான். அலெக்சாந்தர் காலத்தில்

மிக விரிந்து பரந்து கிடந்த பாரசீகப் பேரரசை வீழ்த்தினான். தொடர்ந்து இந்தியாவின் சிந்து வெளிப் பகுதிவரை முன்னேறினான். அக்காலத்தில் உலகம் என்ற அறியப்பட்டிருந்தது, கிரேக்கம் முதல் இந்தியா வரையிலான நிலப்பகுதிகளே. அந்நிலப்பகுதிகளுக்குக் கிரேக்க நாடு தலைமையேற்றது. கி.மு. 300 ஆண்டுகளில், தம்மை எதிர்ப்போர் எவருமில்லை என்ற அளவில், அரசியல் அதிகாரத்தின் உச்சாணிக் கொம்பில் கிரேக்கம் உயர்ந்தது. இத்தகைய அரசியல் அதிகாரம், அது நாள் வரை எந்த நாடும் பெற்றிராத உயர்வு ஆகும்.[530]

ஏராளமான நாடுகளை வென்ற கிரேக்கம், தன்னுடைய அரசியல் அதிகாரங்களை விரிவு படுத்தியதோடல்லாமல், ஏராளமான செல்வங்களுக்கும் உரிமை பெற்றது. அச்செல்வங்கள் கிரேக்க நகரங்களை வளப்படுத்தவும், கலை, இலக்கியம், அரசியல், அறிவியல் போன்ற துறைகளில் அந்நாடு முன்னேறவும் வழி வகுத்தன. அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த கிரேக்கம், தன்னுடைய சாயலை உலக நாடுகளின் மீது பரவ விட்டது. அது வரையில் இலக்கிய மொழிகளாக அறியப்பட்டிருந்த எபிறேயம், அக்காடியம், பாரசீகம் போன்ற மொழிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. கிரேக்க மொழியைக் கற்பதையே உலகம் விரும்பியது. அதுவே உலகின் சிறந்த இலக்கிய மொழி என்றும் கருதப்பட்டது. கிரேக்கர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில், கிரேக்க மொழி எளிதாகப் பரவியது. இந்தியாவின் வடமாநிலங்களிலும் கிரேக்க மொழியின் தாக்கங்கள் மிகுந்தன. உலகிலேயே உயர்தனிச் செம்மொழியாக, கிரேக்கம் கருதப்பட்டது. அக்காலங்களில் தான் விவிலியம் கூட, கிரேக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்டதோடு, விவிலியத்தின் இறுதிப் பகுதிகள் கூட, கிரேக்க மூலத்திலேயே எழுதப்பட்டன. கிரேக்க மொழியைக் கற்றிருந்தவர்களே, அறிஞர்களாகக் கருதப்பட்டனர். இத்தகைய எழுச்சியை 1000 ஆண்டுக்கால இடைவெளியில் கிரேக்கர்கள் நிகழ்த்திக் காட்டினர். கிறித்துப் பிறப்புக்கு முந்திய நூற்றாண்டு, உலக நாடுகளின் தலைமை நாடாக கிரேக்கத்தை உயர்த்தியிருந்தது. குறிப்பாக எகிப்து, பாலத்தீனம், பாபிலோன், பாரசீகம் உள்ளிட்ட நாடுகளில் கிரேக்கக் குடியேற்றங்கள் பெருமளவில் தோன்றின. எகிப்தில் உருவாக்கப்பட்ட புதிய நகரமான அலெக்சாந்திரியா, பிற்கால வரலாற்றில் சிறப்புக்குரிய நகரமாக மாறியது. புதிய நகரங்களை போலீஸ் (Polis) என கிரேக்கர்கள்

அழைத்தனர். இச் சொல், பாடி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாக இருக்கலாம்.

கி.மு. 1900 முதல் கி.மு. 400 வரையிலான கால அளவு களில், கிரேக்கம் நஞ்சையடிகப்பட்ட நிலம் போல், பல்வேறு போர்களினால் சிதைந்து சின்னாபின்னமாகிறது. பல்வேறு ஆசிய இனத்தாரும் (Úlasgians, Achaens, Acolians, Ionians, Dorians) கிரேக்கத்தில் தங்களது ஆளுமைகளை நிலை நாட்ட முயன்றனர். கி.மு. 371 முதல் (லூத்ரா போர்) மாசிடோனி யாவின் இரண்டாம் பிலிப்பு ஆட்சிப் பொறுப்பேற்கும் வரை (கி.மு. 338) தலைமையற்ற நாடாக கிரேக்கம் விளங்கியது. புகழ்மிக்க பேச்சாளரான தெமஸ்தனீசின் உரைகளால் உதவி பெற்ற இரண்டாம் பிலிப்பு, பெரும்பான்மையானவர்களால், தலைமைப் பொருப்புக்குத் தேர்வு செய்யப்பட்டான். இருப் பினும் கிரேக்கப் படைகளை ஒருங்கிணைக்க பிலிப்புவால் இயலவில்லை. பாரசீகத்திற்கு எதிரான போர்களில், கிரேக்க வீரர்கள் ஈடுபடுவதில் தயக்கம் காட்டினர். இச்சூழலில், பிலிப்புவின் பகைவர்கள் கி.மு. 336 இல், பிலிப்புவைக் கொன் றனர். ஆனால் பிலிப்புவின் 20 அகவையே நிரம்பிய அவனது மகன் அலெக்சாந்தர், தனது தந்தையின் பகைவர்களை முறியடித்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்றான்.

கிரேக்க வரலாற்றில் புதிய வரலாற்றைப் படைத்த அலெக்சாந்தர், கி.மு. 334 ஆம் ஆண்டின் கோடை காலத்திற்கு முன்பு ஆசியாவில் நுழைந்தான். அடுத்த 11 ஆண்டுகளில் உலக வரலாற்றில் எவருமே தொட்டிராத மாபெரும் வெற்றி இலக் குகளைத் தொட்டான். நீலாறு (Nile) முதல் சிந்துவரையிலான விரிந்த பரந்த அக்கால உலகை வென்றெடுத்தான். தனது ஆசானும் அரசியல் வழிகாட்டியுமான அரிஸ்டாட்டில் (Aristotie) கூறிய அறிவுரைகளின்படி, கிரேக்கத்தோடு பார சீகத்தை இணைத்தான். அவன் வென்றெடுத்த நாடுகளில் 30க்கும் மேற்பட்ட நகரங்கள் அவன் பெயரால் அழைக்கப்பட்டன. கி.மு. 323 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் பாபிலோனில் இறந்தபோது, அவனது படைத் தலைவர்களிடையே தோன்றிய அதிகாரப் போட்டிகள், கிரேக்கப் பேரரசைக் குழப்பத்தில் ஆழ்த்தின. அதன் பின்னர் கி.மு. 48 ஆம் ஆண்டில் போம் பேயின் (Pompay) படைத் தலைவனான சூலியஸ் சீசர் (Julius caeser) கிரேக்கத்தை வென்றான். கி. பி. 42 இல் சீசர் கொலை

யுண்டான். அவனைக் கொள்வதற்குக் காரணமாயிருந்த புருட்டுசும் காசியசும் தற்கொலை செய்து கொண்டனர். மார்க் அந்தோனி, கிளியோபாத்ராவுடன் எகிப்துக்கு ஓடிப் போனான். அகஸ்தஸ் சீசர் உரோமப் பேரரசன் ஆனான். ஏறக்குறைய கிரேக்கத்தின் ஆளுமை முடிவுக்கு வந்தது. உரோமர்களின் செல்வாக்கு ஐரோப்பாவில் உயர்ந்தது.[532]

கிரேக்க நாட்டில் கி.மு. 40000 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்திருந்தனர் என்று அறிவியாளர் கூறுகின்றனர். அவர்கள் வேளாண்மைத் தொழிலை அறியாதவர்கள் என்றும், வேட்டை யாடியே உணவு தேடிக் கொண்டவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. விவிலியம் தரும் செய்தியின் படி, நோவாவின் இடை மகனான யாபெத்து என்பவனின் மகனான யாவன் (Yaavan) என்பவனின் மரபினரே கிரேக்கத்தில் குடியேறினர் என அறியலாம். பாபிலோனில் முற்றுப் பெறாத கோபுர நிகழ்வுக்குப் பிறகு, அவர்கள் குடியேறினர் என்பர். தற்கால ஆய்வுகளின் படி கி.மு. 8000-7000 ஆண்டுகளில் யாவன மரபு கிரேக்கத்தில் குடியேறியது எனலாம். அம்மரபினர் கிரேக்கத்தைச் சுற்றியிருந்த தீவுகளிலும், கருங்கடல் பகுதி யிலும் விரிந்தனர். எனவே, விவிலியச் செய்தியின்படி தமிழ்க் குடியினரே கிரேக்கத்தில் குடியேறினர் எனக் கருதலாம்.

யாவன் என்பானின் மரபினரை யாவனர் என்றே அழைத் தனர். யாவன் என்ற சொல்லை விவிலியம் பயன்படுத்துகிறது. (ஆதியாதமம், 10:2) யாவன் என்ற எபிறேயச் சொல், கிரேக்க மொழியில் அயோன் (Ion) எனத் திரிபு பட்டுள்ளது.[533] யாவன் என்ற சொல்லுக்கான மூலச் சொல் யா (Yaa) என்பதை எபிறேய மொழி தெளிவுபடுத்துகிறது. யா என்பதற்கு தெற்கு (south) என்றும் பொருள் கூறுகிறது. இதே போன்று யாமன் (Yaaman) என்ற சொல்லும் எபிறேய மொழியில் காணப்படு கின்றது. இச்சொல்லுக்கும் தெற்கு என்ற பொருளே சொல்லப் பட்டுள்ளது.

Yaavan:[534] the son of the south.(Gen. 10:2)
Yaaman:[535] the son of the south. (Gen. 35:16)

யாவன் என்பதும், யாமன் என்பதும் திரிபுபடாத தமிழ்ச் சொற்களே என அறியலாம். குமரிக்கண்ட அழிவிற்குப் பின், அங்கு மாண்டு போன தமிழ் மக்களின் மறுஉலகத் தலைவனாக,

யாமன் என்பதைப் பணிந்து, சிவன் ஆணையிட்டதாக, திருமந்திரம் கூறுகிறது.[536] "தென் திசைக் கோர் வேந்தனாம்" என்று சொல்லப்பட்ட யாமன் என்ற சொல், தென் திசை வேந்தன் என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளதை ஒப்பு நோக்குக. யாமன் என்ற சொல், எமன் என்று மருவியது. இதனை யமன் என்று சமற்கிருதம் கூறுகிறது. யமன் என்ற தென் திசைக் கடவுள் பற்றி சமற்கிருத இலக்கியங்களில் காணப்படுவதால், அவனை ஆரியக் கடவுள் என்றே கருதினர். யகர ஒற்றில் தமிழில் சொல் தொடங்காது என்ற விதிப்படி, யமன் - எமன் என்றும், நமன் என்றும், ஞமன் என்றும் சொல்லப்பட்டான். யாமன் என்பதே முதற் சொல் என்பதை, தமிழ்ப் புலவர்களே அறிந்திருக்கவில்லை. இது தமிழ் புலவர் களின் அறியாமையால் விளைந்ததா அல்லது படியெடுத்த வர்கள் செய்த பிழையா எனக் கண்டுபிடிக்க இயலவில்லை. முன்னோர்கள் தவறாகக் குறித்திருந்தாலும், தற்கால ஆய்வு களில் அது பிழையான சொல்லே எனக் கண்டு, யாமன் எனத் திருத்திக் கொள்வதே சரியானதாகும்.

போனீசியர்கள், கி.மு. 2000 ஆண்டுகளிலேயே தமிழகத் தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். கி.மு. 1000 ஆண்டுகளில், முசிறித் துறை முகத்திலிருந்து ஏராளமான பொருட்களை சாலமன் தேவாலய மற்றும் அரண்மனைப் பணிகளுக்காக எடுத்துச் சென்றனர். ஏற்கனவே கூறியுள்ளபடி, போனீசியரின் மரக்கலங்களில் கிரேக்கர்களே பணியாற்றி வந்தனர்.[537] கிரேக்கர்களை முதன் முதலில் தமிழகத்திற்கு அறிமுகம் செய்தவர்களும் போனீசியர்களே எனலாம். போனீ சியர்கள் கிரேக்கர்களை யாவனர் என்றே அறிமுகம் செய்தனர். யாவனர் என்ற சொல்லை போனீசியர் அறிந்திருந்தனர். எவ்வாறெனில் அவர்களும் எபிரேய மக்களே என்பதாலும், யாவனர் அல்லது யாவன் என்ற சொல்லை அவர்கள் அறிந் திருந்தாலும், சரியான சொல்லையே அவர்கள் பயன்படுத் தினர் என்பதை அறியலாம். ஆனால் தமிழ் இலக்கியங்கள் யாவனரை, யவனர் என்றே குறிப்பிடுகின்றன. இந்தப் பிழை எவ்வாறு நிகழ்ந்தது எனத் தெரியவில்லை. தற்காலத்தில் தமிழ் ஆய்வாளர்கள், அயோன் (Ion) என்ற சொல்லிலிருந்தே யவனர் என்ற சொல் திரிந்ததாகக் கூறுகின்றனர். இது தவறான கருத் தாகும். கிரேக்கக் குறிப்புகளில் அயோன் என்ற சொல், பிற்காலத்திலேயே பயன்படுத்தப் பட்டுள்ளது. மேலும் யாவன்

என்ற எபிறேயச் சொல்லின் திரிபே அயோன் என்பது என மேலை ஆய்வாளர்கள் தெளிவு படுத்தியுள்ளனர். (Ion, the Greck word is derived from Yaaman, the Hebrew word. the origin of Ion comes from Yaaman. In the Table of Nations Yaavan is the son of Yaapeth- Genesis, 10:2). விவிலிய அகராதியிலும் இச்செய்தி தெளிவு படுத்தப்பட்டுள்ளது.[538] (D.O.B.,P. 414)

தமிழ் அறிஞர்கள் திரிவுச் சொல்லான அயோன் என்பதே மூலச் சொல் என தவறாக நினைத்துவிட்டனர். அவர்களுக்கு எபிறேய மொழியில் இருந்த மூலச் சொல்லான யாவன் பற்றித் தெரிந்திருக்க வில்லை. தற்காலத்திய மொழி ஆய்வுகள், யவனர் என்ற சொல் பற்றிய தெளிவான கருத்தை வெளியிடுவதால், நம்முடைய கருத்தை தமிழ் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள் வார்கள் என எதிர் பார்க்கலாம்.

எனவே, தமிழ் நாட்டில் யாவனர்கள் சங்க காலத்துக்கு முன்பே (சங்க காலம் எதுவென்பதிலும் தெளிவு இல்லை. நம்முடைய ஆய்வின் படி, சங்க காலம் கி.மு. 1000 ஆண்டு களுக்கு முற்பட்டது என்பதாகும்.) அறிமுகமாயினர் என்பது உறுதி. மணிமேகலையும் சிலப்பதிகாரமும் யாவனர்கள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. போனீசியர்களோடு பயணித்து கடல் அறிவினைப் பெற்றுக் கொண்ட யாவனர்கள், கிறித்துப் பிறப்பாண்டுகளில் (கி.மு. 500 முதல்)தங்களுடைய மரக்கலங் களை இயக்கியே தமிழகத்தோடு வணிகம் செய்யலாயினர். ஏழடி உயரமும், நல்ல உடற்கட்டும் கொண்டு விளங்கிய யாவனத் திருநங்கையர் தமிழ் மன்னர்களின் அந்திப் (அந்த) புறங்களில் காவல் காத்தனர். மன்னர்களுக்கு மெய்க் காப்பா ளர்களாகவும் விளங்கினர். கிரேக்க நாட்டில் ஒளிவ நெய்யை (Olive oil) ஊற்றி எரிக்கப்படும் ஓதிம விளக்குகள், அரண்மனை களில் பயன்படுத்தப்பட்டன என்று பெரும் பாணாற்றுப் படை கூறுகின்றது.[539]

வேள்வித் தூணத்து இசைஇ யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசை கொண்ட – 316–317.

அரண்மனையில் மெய்க் காப்பாளர்களாகப் பணியாற்றிய யாவனர்கள் பற்றி முல்லைப் பாட்டு விளக்குகின்றது.[540]

அரசரின் பள்ளியறைக் காவலரான யாவனர்.
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை

மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றடித்து
வலிபுனர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமான் நல்லில்
திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவிற்
படம்புகு மிலேச்சர் உழையர் ஆக. –– 59 –– 66.

கிரேக்கர்கள் தமிழ் நாட்டில் பணியாற்றத் தொடங்கிய காலம், அந்நாடு வறுமையில் வாடிய காலமாகும். கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன்பு என்க. சங்ககாலம் கி.மு. 500 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்க. மேற்கு ஆசியாவின் பல நாடுகளிலும் பணியாற்றிய கிரேக்கர்கள், அவர்களுடைய கிழக்கு நாடுகளின் அறிமுகங்களால், தமிழகத்துக்கும் வந்தனர் எனத் தெளியலாம்.

கிரேக்க நாட்டினின்றும் கொண்டுவரப்பட்ட கண்டு சருக்கரையை அகிலில் சேர்த்துப் புகைக்கும் போது அதன் புகை மணம் மேலும் கூடும். இத்தகையை கண்டு சருக்கரை வெண்ணிறமானது என்பர்.

குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு-[541] சிலப்பதிகாரம், 4:35. குடதிசை: மேற்குத்திசையென்றும், யவன நாடென்றும் அடியார்க்கு நல்லார் உரை கூறுகின்றது.

சிலப்பதிகாரம் கூறும் யாவனர் பற்றிய மேலும் சில செய்திகளாவன:

கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயறை வறியா யவனர் இருக்கையும்.[542] – 5 : 9 – 10

கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க் கயிராது புக்கு[543] – 14 : 66 –67

வன்சொல் யவனர் வளநா டாண்டு[544] – 28 : 141.

வன்சொல் யவனர் வளநாடு பெருங்கல்[545] –29 : 25 : 1.

பதிற்றுப்பத்து:

நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து[546]
–பதிற்றுப்பத்து, 2 : பதிகம்.

மணிமேகலை, யவனத் தச்சர் என்று குறிப்பிடுகின்றது.[547] (19 : 108). செம்புத் தொழில் சார்ந்த கைவினைக் கலைஞர்களாக இருந்திருக்க வேண்டும். மரத்தச்சர்களாகவும் இருந்திருக்க லாம்.

கிரேக்கச் சிந்தனையாளர்கள்[548] இடைக்காலத்தில் இத்தாலியில் வெடித்த மறுமலர்ச்சியைப் போன்று, கி.மு. 1000 முதல் 500 வரையிலான கால அளவுகளில் கிரேக்கம் சந்தித்த அரசியல் போர்கள், வெற்றிகள், தோல்விகள், ஆட்சிமுறைகள், அடக்குமுறைகள், மாந்த உரிமை மீறல்கள், சமயம், சமயத்தில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கடவுளர்கள், சமயக் கொள் கைகள் போன்ற பல கூறுகள் மறுமலர்ச்சிக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. எரடோட்டஸ் என்ற அறிஞர், பழங்கால நிகழ்கால வரலாறுகளைத் தொகுத்தார். உலகின் முதல் வரலாற்றறிஞர் என்ற பெருமை அவருக்கு அளிக்கப் பட்டுள்ளது. புதிய மெய்யியல் கொள்கைகளையும் பகுத் தறிவுக் கொள்கைகளையும் பல்வேறு கோணங்களில் பலர் ஆய்வு செய்யத் தொடங்கினர். மெலிடஸ் (Miletus) என்ற அறிஞர், 600 கேள்விகளுக்கான விடைகளை அளித்தார். கடவுள் யார்? அவர் தொடக்கமும் முடிவும் இல்லாமல் இருப்பது எப்படி? கடவுள் உண்மையில் இருக்கின்றாரா? என்பன போன்ற தொன்மச் சமயங்கள் கூறியவற்றிற்கு, அறிவியல் முறையில் விடைகளைத் தந்தார். அவரது விடைகள் கடவுள் நம்பிக்கையுடையவர்களை எரிச்சலடையச் செய்தன. அவருடைய மாணவர் இருவர் (Anaximander/ Anaximenes) தொடக்கம், முடிவு பற்றிய சிந்தனைகளைத் தூண்டினர்.

விவிலியம் கூறும் வெள்ளக் கதையில் வரும் நோவா என்பவன், கிரேக்கக் கதையில், தெக்காலியன் (Dekalion) என்பான், மரக் கலம் செய்துகொண்டு வெள்ளத்தினின்றும் மீண்ட செய்தி சொல்லப்பட்டுள்ளது.[549] தற்கால ஆய்வாளர்கள், பனி உருகல் காலமான வெள்ளைக் காலத்தில் கிரேக்க நாடு எத்தகைய இடர்ப்பாடுகளுக்கும் உள்ளாக வில்லை என்று கூறுகின்றனர். வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகள் பற்றிய எந்தத் தடைகளும் கிரேக்கத்தில் இல்லை என புவியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும் மற்ற நாடுகளின் சமயங்கள் கூறும் வெள்ளக் கதை, கிரேக்க நாட்டிலும் சொல்லப்பட்டது. இது பாபிலோனிய, சுமேரிய, எபிறேயச் சமயங்களின் தாக்கங்களே என ஆய்வா

ளர்கள் கருதுகின்றனர். கிரேக்கத்தைச் சூழ்ந்த வெள்ளம் தெற்கிலிருந்தே வந்தது என்றும் குறிப்பிட்டுள்ள கிரேக்கக் கதை, அதன் நாயகனான தெக்காலியன், வெள்ளக் காலத் திற்குப் பிறகு புதிய மாந்த இனத்தை, பாறைகளிலிருந்து உருவாக்கினான் என்று கூறுகிறது. பாம்பின் பற்களிலிருந்தும் மாந்தர் உருவாக்கப்பட்டனராம். (இக்கதையில் சொல்லப் பட்டுள்ள தெக்காலியன் என்ற பெயர் தெற்கு+ஆழியன், தெக்காழியன் - தெக்காலியன் என்றவாறு, தமிழ்ச் சொற்களின் திரிபுகளாகவே உள்ளன. தெற்கு ஆழியைச் சார்ந்தவன் என்ற குறிப்பு கடல் கொண்ட குமரிக் கடலையே குறிக்கின்றது எனலாம். உலகில் சொல்லப்பட்ட வெள்ளக் கதைகளின் சூழலும், பின்புலமும், மாந்தப் பெயர்களும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே.

இந்தக் கிரேக்கக் கதை, பொய்யென்றும், அறிவுக்கும் சிந்தனைக்கும் புறம்பானது என்றும் அனசி மண்டரும் அனசி மனசும் வாதிட்டனர். சமயங்கள் மாந்த ஒற்றுமையைக் குலைப்பன என்றும், போர்களற்ற புதிய உலகை படைக்க, புதிய தத்துவச் சிந்தனைகளை விதைத்தனர். இவ்வுலக வாழ்க் கையே உண்மையானது என்பதை விளக்கினர்.

பித்தகோரஸ்[550] என்ற கணக்கியல் அறிஞர் (கி.மு.530), கணிதத்தில் புதிய தன்னுடைய கண்டுபிடிப்புகளை வெளியிட் டார். மிகச் சிறந்த மெய்யியல் கொள்கைகளையும் வெளியிட் டார். எகிப்தின் பிரமிடுகளைப் பற்றிய கணக்கியல் நுட்பங் களை அறிய முயன்றார். எரகிளித்துஸ்[551](Heracleitus) என்ற அறிஞர், எல்லாமே வெளிப்படையாக இருக்க வேண்டும்; மறைக்கப்பட வேண்டியவை ஒன்றுமில்லை, என்றார். மாந்தர் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். போரே அனைத்து இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் தந்தை (காரணம்) என்றார். இவரே வரலாற்றையும், புவியியல் அறிவையும் ஒழுங்கு படுத்தினார். Histroy எனப்படும் ஆங்கிலச் சொல்லுக்கான மூல கிரேக்கச் சொல்லான Historia என்ற சொல்லை அறிமுகம் செய்தவர் இவரே. இச்சொல்லுக்கு கிரேக்க மொழியில் “மறுபடியும் தேடு” (Research) என்பதே பொருளாகும்.

இப்போ கிராட்டஸ்[552] (Hippocrates) என்ற மருத்துவர் , கோயில்களில் பூசாரிகள் செய்த தேவ மருத்துவத்தை இகழ்ந்

தார். மருத்துவத் துறையில் புதிய மருந்துகளை அறிமுகம் செய்தார். அவர் மருத்துவம் தொடர்பாக எழுதிய 58 நூல்களும் (Corpus Hippoeraticum) அதுவரை அறியப்படாத மருத்துவ உண்மைகளை வெளிப்படுத்தின. தூசிடெஸ், செனோபோன் (Thucydes/ Xenophon) போன்றவர்கள் அரசியல் துறையில் மறுமலர்ச்சிக்குக் கருத்துகளை வெளியிட்டனர்.[553]

மேற் சொல்லப்பட்டவர்களைக் காட்டிலும் இன்றைய உலகம் அறிந்த புகழ் பெற்ற அறிஞர் சாக்ரடீஸ்[554](Socretes) ஆவார். (470 கி.மு.) இளைஞர்களைச் சிந்திக்கத் தூண்டினார். ஏன் எதற்கு, எப்படி, என்று கேள்விகளைத் தொடுக்க வைத்தார். புதுப்புது கடவுளர்கள் அறிமுகமானபோது, அக்கடவுளர்களை எதிர்த்தார். இதனால் இளைஞர்களைக் கவர்ந்தார். இளைஞர்களைத் தவறான திசைக்கு அழைத்துச் செல்வதாக நடுவர் மன்றத்தில் நிறுத்தப்பட்டார். நச்சுக் கோப்பையை மகிழ்வுடன் சுவைத்து தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

எம்பிடாக்கில்ஸ், லியூசிப்பஸ், டெமாக்ரடீஸ் போன்றோர் அணுக்கொள்கை பற்றி ஆய்வு செய்தனர்.[555] டெமாக்ரடீசு (கி.மு.370) விளக்கிய அணுக் கொள்கை அதுவரை அறியப்படாத விளக்கங்களைக் கொடுத்ததாகக் கூறுவர். நான்கு வகையான அணுக்களை (நிலம், நீர், தீ, வளி)ப் பற்றிய அறிவியல் கொள்கையொன்றை வகுத்தார். டெமாக்ரடீசைப் பற்றி எழுதும் காரல்மார்க்ஸ், டெமாக்ரடீஸ் தனது இடைக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார் என்றும், அரைகுறையான ஆடையை உடுத்தியிருந்த துறவியொருவரிடம் அணுக் கொள்கைபற்றிக் கேட்டறிந்தார் என்றும், அதனையே தன்னுடைய கொள்கையாகப் பதிவு செய்தார் என்றும் பதிவு செய்துள்ளார். அத்துறவியை gymnosophist என்று காரல் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.[556] இது கிரேக்கச் சொல்லாகும். gymno என்பதற்கு அம்மணம் என்பதே பொருளாகும். அம்மணம் என்ற தமிழ் சொல்லே, கிம்மணோ எனத் திரிந்தது என்க. உடற்பயிற்சி செய்பவர்கள், இடுப்பில் ஒரு சிறு ஆடையை அணிந்து பயிற்சியை மேற்கொள்வர். ஏறக்குறைய அம்மண நிலையாகவே அதனைக் கருதலாம். gymo என்பதனின் நீட்சியே gymnastics என்று திரிந்தது.

டெமாக்ரடீஸ் சந்தித்த துறவி இடுப்பில் மட்டும் ஆடையுடுத்தியவாறு கருதப்படும் வடபுலத்துத் தமிழ்க் கணியர்களே

எனலாம். கடவுள் மறுப்புக் கொள்கை கொண்ட அவர்கள் பிற்காலத்தில் ஆரியர்களால் ஆசீவகர்கள் எனத் தூற்றப் பட்டனர். தமிழ்க் கணியம், ஏற்கனவே அணுக் கொள்கை பற்றி அறிவித்திருந்தது. உயிர், உள்ளம், மனம் பற்றிய புரியாத சிந்தனைகளைப் பற்றிய விளக்கங்களைத் தமிழ்க் கணியம் விளக்கியிருந்தது. அணுவைப்பற்றி மணிமேகலைக் கூறும் செய்திகளைவிட சிறப்பாக டெமாக்ரடீஸ் கூறிவிடவில்லை. தமிழ்க் கணியத்தின் அணுக் கொள்கை குடத்திலிட்ட விளக் காய் குறுகிய வட்டத்திலேயே ஒளியைத் தந்தது. கிரேக்கர் களின் உலகளாவிய அரசியல் வெற்றி, டெமாக்ரடீஸை உலகிற்கு அணு அறிவியலராகக் காட்டி விட்டது. இருப்பினும் டெமாக்ரடீஸின் அணு அறிவு இந்தியன் தந்ததே என்பதை கார்ல் மார்க்ஸ் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அணுக்களைப் பற்றி மணிமேகலை கூறும் செய்தியா தெனில், பேரண்டத்திலும் அண்டத்திலும் காணப்படும் தொட்டு உணரப்படும் பொருட்கள், உயிரினங்கள் ஆகியவை நான்கு வகையான அணுக்களால் ஆனவை. அவ்வணுக்கள் கூடுவதும் பிரிவதுமாயிருக்கும் அவ்வாறு கூடிப் பிரியும் போது அவை புதுப்புது தோற்றங்களைப் பெறும். அவை நிலம், நீர், தீ, வளி எனப்படும். மலை, உடம்பு, மரம் என்றவாறு கூடும், பின்னர் பிரியும். இவ்வாறான கூடலும் ஊடலும் நிகழ்வதை அறிய வல்லதே உயிர் எனப்படும்.

எல்லையில் பொருள்களில் எங்கும் எப்பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்படு கின்ற
வரம்பில் அறிவன் நிறைநூல் பொருள்களை
துரந்தரும் உயிரோடு ஒருநாள் வகையானது
அவ்வணு உற்றும் கண்டும் உணர்ந்திடப்
பெய்வகை கூடிப் பிரிவதும் செய்யும்
நிலம் நீர் தீக்காற்று எனநால் வகையின
மலைமரம் உடம்டபெனத் திரள்வதும் செய்யும்
அவ்வகை அறிவது உயிரெனப் படுமே[557]

– மணிமேகலை, 27: 110 – 119

அண்டத்திலுள்ள மா அணுக்கள் கெடுவதுமில்லை, சிதை வதுமில்லை. ஒவ்வொரு அணுவும் தனித்தன்மை கொண்டவை. ஒன்று மற்றொன்றாக மாறாது. அணுவானது இரண்டாகிப்

பிளவாது. உரலில் இட்டுக் குத்தப்பட்ட அவல் தட்டையாவது போல், அணு தட்டையுமாகாது.

> ஆதியில் லாப் பரமா அணுக்கள்
> தீதுற்று ஆவதும் சிதைவதும் செய்யா
> புதிதாய்ப் பிறந்தொன்று ஒன்றிற் புகுதா
> முதுநீர் அணுநில அணுவாய்த் திரியா
> ஒன்று இரண்டாகப் பிளப்பதும் செய்யா
> அன்றியும் அவல்போல் பரப்பதும் செய்யா[558].
>
> – மணிமேகலை, 27: 126–131

ஒவ்வொரு பொருளிலும் நான்கு அணுக்களும் இருக்கும். எந்த அணுக்கள் மிகுந்துள்ளதோ அந்த அணுவை அதன் பெயரால் அழைக்கிறோம். அவை, 100: 75: 50: 25 என்ற கணக்கில் இருக்கும்.

> நிறைந்த இவ் வணுக்கள் பூதமாய் நிகழிற்
> குறைந்தும் ஒத்தம் காடா வரிசையின்
> ஒன்று முக்கால் அரை காலாய் உறும்.
> துன்று மிக்க அதனால் பெயர்சொலப் படுமே[559]
>
> – மணிமேகலை,27: 138 – 141.

மணிமேகலை, சமயக்கணக்கர் தந்திரங் கேட்ட காதையில் (27), 110 முதல் 289 வரையிலான, ஏறக்குறைய 200 வரிகள், அணுவைப் பற்றிய தமிழரின் கொள்கையை விளக்குகின்றன. இத்தகைய சிறப்புக்குரிய அறிவியல் பகுதியை தமிழரில் எத்தனை பேர் படித்திருப்பர்? எத்தனை பேர் அறிந்திருப்பர்? தமிழர்களே அறிந்திராத அணுக் கொள்கை பற்றிய செய்திகளை உலகத்தார் எவ்வாறு அறிந்திருக்க இயலும். அதனாலேயே கிரேக்கத்தின் டெமாக்ரடீஸை அணுவியலின் தந்தை எனப் பதிவு செய்து விட்டனர்.

மேலே சொல்லப்பட்ட கிரேக்க அறிஞர்களின் வறலாற்றைப் பார்ப்போமானால், அவர்களில் பெரும்பாலோனோர் பாபிலோன் அல்லது எகிப்தில் தங்கள் இளமைக் காலத்தில் வாழ்திருந்த உண்மை வெளிப்படும். கிரேக்க அறிவியல் என்பது, உண்மையில் பாபிலோனிய, எகிப்திய அறிவியலே. இவ்விரண்டு மக்களின் அறிவியலும் தமிழரின் அறிவியலே. வரலாற்றில் கண்டு பிடித்தவர்களின் பெயர்கள் மறைந்து போயின. அக்கண்டு பிடிப்புகளை விளக்கிச் சொன்னவர்கள் கண்டுபிடிப்பாளர்களாகக் கருதப்பட்டனர்.

வரலாற்றில் மற்றொரு தவறான பதிவு, வானியலைக் கண்டுபிடித்தது கிரேக்கங்களே என்பதாகும். கல்தேயத்தாரும், பாபிலோனியரும். எகிப்தியரும் வானியல் அறிவில் சிறந்து விளங்கினர் என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. தமிழரின் வானியல் தொடர்பான செய்திகள் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றன. கிரேக்க வானியல் அறிஞ ரான தாலமி (Ptolomy), தான் கண்டுபிடித்ததாகக்கூறி, 1022 விண்மீன்களுக்குப் பெயர்களைப் பதிவு செய்தார். அப்பதிவுகள், அல்மாகஸ்ட் (al- magest) என்ற நூலில் விளக்கப்பட்டுள்ளன.[560] அல்மாகஸ்ட் என்ற பெயரே, தமிழ்த் திரிபுப் பெயராகும். மாகம் என்பது கருமையைக் குறிக்கும். மாக விசும்பு என்பது கரிய வானம் அல்லது இரவு நேரத்து வானம் என்று பொருள் படும். விசும்பு = வானம்.

மாசறு விசும்பின் மறுநிறங் கிளர[561] – மணிமேகலை, 6 : 5.

முந்நீர் நாப்பட் டிற்சுடர் போலச்
செம்மீ னிமைக்கு மாக விசும்பின் [562]– புறநானூறு, 60 : 1–2.

மாகம் - மாகஸ்ட் எனத் திரிந்தது என்க.

தாலமியின் 1022 விண்மீன் பெயர்களை ஆய்வு செய்யுங் கால், அவைகளில் பெரும்பாலானவை தமிழ்த் திரிபுப் பெயர் களாகவே உள்ளன. (ஆசிரியரின் வானியலும் தமிழரும் என்ற நூலைக் காண்க) 27 விண்மீன் கூட்டங்களுக்கும் தாலமி பெய ரிடவில்லை. அவற்றில் 14 கூட்டங்களுக்கு மட்டுமே பெயரிட் டுள்ளார். பெயரிட்டுள்ளவைகளும் தமிழ்ப் பெயரின் திரிபு களாகவே உள்ளன. ஒளியுரு என்ற சொல் plead எனவும், ஆடரா என்ற சொல், அய்ட்ரா எனவும், ஓரையன் - ஓரியன் எனவும், பொல்லுதல் போலக்ஸ் எனவும் திரிபுபட்டுள்ளன.

கிரேக்கச் சமயம்:

கிரேக்கச் சமயத்தை ஆய்வு செய்தால், அச்சமயத்தில் அறியப்படும் கடவுளர்கள், பல்வேறு நாடுகளில் வழிபடப் பட்டுவந்தவர்கள் என்பது தெரியவரும். கிரேக்கர்களுக்கென தனியொரு சமயப் பின்னணி இருந்ததாகத் தெரியவில்லை. கிரேக்கச் சமயம் தனியொரு சமயம் என்று கூறுவதைவிட, மேற்காசிய நாடுகளில் பின்பற்றப்பட்ட வணக்க முறைகளின் தொகுப்பே எனலாம். தற்காலத்தில் ஆய்வாளர்கள், கிரேக்கச்

சமயத்தை இந்திய - ஐரோப்பியத் தொகுப்பு (Indo - European) என்கின்றனர். இந்திய நாட்டை அவர்கள் இணைத்ததற்கான காரணம் யாதெனில், இந்தியக் கடவுளரின் தாக்கங்கள் நிறை யவே கிரேக்கச் சமயத்தில் காணப்படுகின்றன. இத்தாக்கங்கள், கிரேக்கர்கள் இந்தியாவுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பு நிகழ்ந்தனவா அல்லது பின்பு நிகழ்ந்தனவா எனத் தெரிய வில்லை என்கின்றனர். பாபிலோனிய, சுமேரிய, சின்ன ஆசியச் சமயங்களின் கூறுகளும் கிரேக்கச் சமயத்தில் வெளிப்பட்டுள்ளன.

இடிக்கடவுள் (god of thunder bolt)[563]:

மழை இடியுடன் தொடர்புடைய கடவுள் பற்றிய செய்திகள் ஏற்கனவே தமிழ்நாட்டிலும், ஆரிய நாகரிகத்திலும், பாபிலோனியச் சமயத்திலும் அறியப்பட்டுள்ளன. குறிப்பாக ஈத்தியர் (HiHites) எனப்படும் வடக்கு மெசபத்தோமியாவில் இக்கடவுள் முழுமுதற்கடவுளாக அறியப்படுகின்றான்.

விலங்குகள் வணக்கமுறை[564]:

அச்சம் தரும் விலங்குகள், வணக்கத்துக்குரியவைகளாக இருந்தன. குறிப்பாக பாம்பை கிரேக்கர்கள் வணங்கி வந்தனர். பெண் கடவுளர்கள், பாம்புகளைப் பிடித்த நிலையில் உள்ள சிலைகள் ஏராளமாக உள்ளன. மீன், ஆமை, ஆடு, காளை, பசு, ஓநாய், கரடி, மான் புரவி என்றவாறு அப்பட்டியல் விரியும். இவையின்றி கல், மலை, மரங்கள் என்றவாறு இயற்கையின் படைப்புகளையும் வழிபட்டனர். இவைகளில் காட்டு விலங்கு களும், வீட்டு விலங்குகளும் அடங்கும்.

காளை வழிபாடு[565]:

காளை வழிபாடு சிறப்புக் குறியதாக இருந்தது. காளையின் உருவம் தாங்கிய சிலைகள் அறியப்படுகின்றன. பாதி மாந்தனும், பாதி காளையுமாகக் காட்சியளிக்கும் மினோதார் என்ற கடவுள், காளைக் கடவுளே. மனிதன் + தார் (காளை) என்ற தமிழ்ச் சொற்களே மினோதார் எனத் திரிந்துள்ளன.

வேல் வணக்கமுறை[566]:

சேயுஸ் என்ற கடவுளின் கையில் வேல் உள்ளவாறு சிலைகள் உள்ளன. வேல் மட்டுமே தனியாகவும் வணங்கப் பட்டது.

கல் வணக்க முறை[567]:

கல்லையும் தெய்வமாக வழிபட்டனர். ஒவ்வொரு நாளும் அக்கல்லைக் கழுவி, அதற்கு நெய் வார்த்து வழிபடுவது அவர்களது வழக்காயிருந்தது. திருவிழா போன்ற சிறப்பு நாளில், அக்கல்லுக்கு ஆடையையும் போர்த்தினர்.

மந்திர மாயங்கள்:[568]

தீய உருக்களை விரட்டவும், போர்களைத் தவிர்க்கவும், போர்களில் வெற்றி பெறவும், வாழ்க்கையில் செல்வம் சேர்க்கவும், வருங்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், மந்திர தந்திர நடவடிக்கைகளில், கிரேக்கப் பூசாரிகள் ஈடுபட்டனர். மக்கள் பெருந்திரளாக வந்து பூசாரிகளிடம் குறிகள் கேட்டனர்.

இறந்தோரையும் வணங்கினர்:[569]

முன்னோர்களை வழிபடுவதை பற்றிய செய்திகள், கிரேக்கக் குறிப்புகளில் காணப்படுகின்றன. இறந்தோரை சிலர் எரித்தனர், பலர் புதைத்தனர். இறந்தவர்கள் மறு உலகில் சிறப்புடன் வாழ, அவர்களுக்கு உணவும் நீரும் தேவைப்படும் என நம்பினர். எரித்தால் இறந்தவனின் உயிர் அழிந்து விடும் என்றும், புதைத்தால் அது வாழ்ந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கைகள் இருந்தன. இறந்தவர்களை எரிக்கும் வழக்கு அரிதாகவே காணப்பட்ட தென்றாலும், அது ஈத்தியர்களின் வழக்காக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. பல்வேறு கூறுகளில் ஈத்திய - கிரேக்க (Hittite-Greco relations) உறவுகள் பற்றி ஆய்வாளர்கள் விரிவாக விளக்கியுள்ளனர். (இந்த உறவுகளின் தொடர்ச்சியை ஆரியர்கள் என்ற தலைப்பில் காண்க)

கோள்களே கடவுளர்கள்:

சன், மூன், மார்ஸ், வீனஸ், ஜுபிடர், மெர்க்குரி, சாட்டர்ன் என்றவாறு அறியப்படும் கோள்கள், கிரேக்கக் கடவுளர்களாக அறியப்படுகின்றனர். இவர்களில் ஜுபிடர் (வியாழன்), வீனஸ் (வெள்ளி), மெர்குரி (புதன்) ஆகியவை சிறப்புக்குரியவர்களாவர். மேற்கண்ட பெயர்களை தாலமியே வைத்ததாகக் கருதப்படுகின்றது. மேற்கண்ட பெயர்களில் காணப்படும் தமிழ் பேரினைக் குறித்து அறிவோம்.

சுன் (ஞாயிறு-Sun) : சுன் என்ற பேர்ச்சொல் நீண்டு, சுல் - சூர் -சூரியன் என்று சொல்லப்பட்டது.

சுன் - சுன் என விரிந்தது - Sun எனப்பட்டது.

சுள் - சுல் என விரிந்தது - Sol - Solar எனப்பட்டது.

சூரியன் - சூரியா என சமற்கிருதத்தில் திரிந்தது.

செஞ்சுடர் அல்லது செம்மைச் சுடர் சுருங்கி, செம் (Shem) என எபிறேய மொழியில் சூரியனைக் குறித்தது.

முன் (நிலவு - Moon) : முன்னி வருவது, இரவுக்கு முன்பே தெரிவது அல்லது விண்மீன்களுக்கு முன்பே தெரிவது.

முன்னுதல் = முந்துதல்; முன் - மூன் - Moon எனப்பட்டது.

சோம்புதல் = மயங்குதல் ; சோம - Soma (சமற்கிருதம்).

மார்ஸ் : மறியென்பது ஆட்டைக் குறிக்கும். கிரேக்கத்தில் செம்மறி களே மிகுந்திருந்தன. செம்மறி - சிவப்பு ஆடு.

மறி என்ற தமிழ்ச் சொல்லே, மார்ஸ் - Mars எனத் திரிந்தது (செவ் வாய்)

மெர்குரி : புதன். சூரியன் ஒளிவட்டத்தில் எப்போதாவது பார்க்க இயலும் கோள்.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து போகும்.

சூரிய ஒளியில் புதைந்து போவதால், புதன் எனப்பட்டது.

புத் (சமற்கிருதம்).

மாறித் தெரியும் குறியாக (புள்ளியாக) புதன் அறியப்படுவதால்,

மாறுகுறி என்ற தமிழ் சொல்லே, மெர்குறி எனத் திரிந்தது.

ஜூபிடர் : யா பாத்தர் (Yaapather) என்பதே, ஜூபிடர் எனப்பட்டது.

பாத்தர் = தந்தை (Pather) - ஆங்கிலத்தில் Father.

பாத்தர் என்பது போத்து (தந்தை) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

போத்து - பித்தா - பித்ரு என சமற்கிருதத்தில் திரிந்தது.

தந்தையே குடும்பத்திதில் பெரியவர் என்ற கருத்தில், கோள்களில் பெரியது வியாழன் (குரு), பாத்தர் எனப்பட்டது.

வீனஸ் : Venus. இச்சொல்லில் அறியப்படும் Ven என்பது வெண்மை யைக் குறித்தது. தமிழில் வெள்தீ - வெள்ளி எனப்பட்டது.

சாட்டர்ன் : சாத்து என்ற தமிழ்ச் சொல்லே, சாப்த் என எபிறேய மொழியில் திரிந்தது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. சாத்துநாள் - சாப்த் - சாட்டர் எனத் திரிந்தது. சாத்து - செப்தோ என்றும் கிரேக்க மொழியில் சொல்லப்பட்டது.

வீக் (Week) : வாரத்தைக் குறித்த ஆங்கிலச் சொல்

வீக்கம் : வளர்ச்சி, நீட்சி. தொடரும் ஏழு நாள். கால அளவு.

வீக்கம் - வீக் எனத் திரிந்தது.

மன்த் (month) : முன்னுதல் - மூன். (Moon) . மூன் - மன்த் எனத் திரிந்தது.

இயர் (Year) : ஈர்தல் என்பது இரண்டாக்குதல் எனப்படும்.

ஓராண்டு, தென் செலவு - வட செலவு என ஈரப்பட்டது. (பிரிக்கப் பட்டது)

ஈர் - ஈரா என்று எபிறேய மொழியில் மாதத்தைக் குறித்தது.

(வளர் பிறை - தேய் பிறையைக் கருத்தில் கொண்டு).

ஈர் - இயர் என ஆங்கிலத்தில் திரிந்தது.

மேற்கண்ட கோள்களுக்கு தாலமி பெயரிட்டார் எனக் கூறுவது, அப்பெயர்களை அவர் கண்டுபிடித்து அறிமுகம் செய்யவில்லை என்பதையே காட்டுகிறது. அனைத்துப் பெயர்களும் தமிழ் மூலத்தில் உள்ளதை நோக்குக. இவ்வாறான திரிபுப் பெயர்களையே தாலமி வைத்தார் என அறியலாம்.

அப்போலோ (Appollo):[570] தந்தைக் கடவுள். அப்பா என்ற சொல் திரிந்திருப்பதை நோக்குக.

சேயுஸ் (Zeus):[571] மகன் கடவுள் வேலை வைத்திருந்தவன். ஒளிம்பஸ் என்ற மலையில் வீற்றிருந்தவன். சேய் என்பது மகனைக் குறித்த சொல்லாகும். சேய் - சேயுஸ் எனத் திரிந்தது. ஏறக்குறைய தமிழ்க் கடவுள் முருகனைப் போன்றவன். கார்த்திகைப் பெண்டிர் எழுவர் என்பது கணக்கு. கார்த்தீ மீன் கூட்டத்தில் ஒரு மீன் ஒளியிழந்து காணப்படுவதால், அதனை ஆறு என கணக்கிட்டனர். ஆறு பெண்கள் முருகனை வளத்ததாகக் கதை. சேயுஸ் என்ற கடவுளை ஏழு புறாக்கள் (ஒளியிழந்த மீனையும் கணக்கில் சேர்த்துக் கொண்டனர்) வளர்த்ததாக, கிரேக்கத் தொன்மம் கூறுகிறது. குன்றுகளைக் குடியிருப்புகளாகக் குமரன் கொண்டிருந்ததுபோல் ஒளிம்பஸ் மலையையே தன் குடியிருப்பாகச் சேயுஸ் கொண்டிருந்தான்.

ஒலிம்பஸ் மலை (Mt. Olympus):[572] கிரேக்கத்தின் புகழ் பெற்ற மலை. அம்மலைச் சாரல்களில் ஒளிவ மரங்கள் (Olive trees) ஏராளமாகக் காணப்பட்டன. பச்சைப் பசேல் என்ற இலைகளைக் கொண்டிருக்கும் ஒளிவ மரம் 30 முதல் 40 அடிகள் வரையிலும் வளரக் கூடியவை. அதன் விதைகள் (தமிழ்நாட்டு இலுப்பை விதைகளைப் போல்) தரும் நெய், விளக்கெரிக்கவும், சமையலுக்கும் பயன்பட்டது. மேற்காசிய நாடுகளிலும் ஒளிவ மரங்கள்

அறியப்பட்டிருந்தன. ஒளிவ நெய், சிறப்புக்குரிய வணிகப் பொருளாகவும் கருதப்பட்டது. தமிழ்நாட்டில் அக்காலத்தில் தீவட்டிகளைப் பயன்படுத்த இலுப்பை நெய்யையே பயன்படுத்தினர் என்க.

ஒளியைத் தரும் விளக்குகளுக்கு ஊற்றப்படும் நெய், ஒளி நெய், - ஒளிவ நெய் எனப்பட்டது. ஒளி என்ற தமிழ்ச் சொல்லே, ஒளிவ எனத் திரிந்தது. அம்மரங்கள் வளர்ந்திருந்த மலை ஒளிவ மலை எனப்பட்டது. தமிழில் ஒலிம்பஸ் என எழுதுவது தவறானதாகும். ஒளிம்பஸ் என எழுதுவதே தமிழ் மூலத்தை வெளிப்படுத்தும்.

அந்த ஒளிம்பஸ் மலையருகே நடந்த உடற்றிறன் போட்டிகள் ஒளிம்பிக் எனப்பட்டது. Olive - Olymous - Olympic ஆகிய சொற்கள் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே.

வானியலும், அரசியல் கோட்பாடுகளும், மக்களாட்சி முறைகளும், பகுத்தறிவுக் கொள்கைகளும், மெய்யியல் கோட்பாடுகளும், அணுக் கொள்கையும், கணக்கியலும் கிரேக்கர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டவை என்று வரலாற்றில் பதிவு செய்து விட்டனர். மாந்த வாழ்க்கைக்குத் தேவையான அத்துணைத் தத்துவங்களையும் கூறிய திருவள்ளுவரின் பெயர், கி.பி 17 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே உலகிற்குத் தெரிந்தது. மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் வகுத்துக் கொடுத்த தொல்காப்பியரை இன்னும் கூட, உலக மொழியில் அறிஞர்கள் அறிந்து கொள்ளவில்லை. வானியலையும் கணக்கியலையும் அறிவியலையும் அறிமுகம் செய்த கணியர்கள் வரலாற்றில் மறைக்கப்பட்டனர். பகுத்தறிவுக் கொள்கையைத் தனது பாடலில் வடித்த பக்குடுக்கை நன்கணியர் பற்றி (புறம் - 96) இவ்வுலகம் இன்னும் கூட அறிந்து கொள்ளவில்லை. அரசியல் அறிவை அறிமுகம் செய்த இளங்கோவடிகள் குடத்திலிட்ட விளக்கானார். அணுவியல் பற்றி விளக்கிய சீத்தலைச் சாத்தனாரை தமிழர்களே இன்னும் அறிந்திருக்கவில்லை. தமிழ்நாட்டில் பூத்துக் குலுங்கிய 100 பூக்களின் பட்டியலைத் தந்த கபிலரை தாய்வரவியல் (Botanical) அறிஞர்கள் அறிந்திருக்கவில்லை. வரலாற்றில் மறைக்கப்பட்ட தமிழ் இனம், தனது பெருமைகளை மீட்டெடுத்துக் கொள்ள முறையான தமிழ் வரலாற்றைத் தொகுக்க, தமிழ் அறிஞர்களோ, தமிழ்ப் பல்கலைக் கழகங்களோ, தமிழ் நாட்டரசோ முன் வரவில்லை. ஒரு சிலர் எடுக்கும் முயற்சிகளுக்கும்

பண உதவிகளும் கிடைப்பதில்லை. செல்வம் படைத்த தமிழர் ஒன்று சேர்ந்து, தமிழர் வரலாற்றைத் தொகுக்க முன் வர வேண்டும்.

ஈத்தியர் (Hittites)

வடக்கு மெசபத்தோமியாவில், கி.மு. 1600 ஆண்டுகளில் எழுச்சி பெற்று, ஆட்சியை நிறுவிய இனமாக ஈத்தியர் என்ற இனம் அறியப்படுகின்றது.[573] முற்றிலும் இவர்கள் செமிட்டிக் இனத்தைச் சாராதவர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது. கி.மு. 1000 ஆண்டுகளில் (சாலமன் காலத்தில்), தங்களுடைய ஆட்சி எல்லைகள் சுருக்கப்பட்டு, ஒரு சிறு குழு அரசு போல், அறியப்பட்டனர்.[574] (I kings, 10 : 23). வட மெசபத்தொமியின் சிறு நிலப்பகுதியே அவர்களுக்கு உரியதாய் இருந்தது. சாலமன் காலத்தில் அறியப்படும் உரியர்கள் (Hurrains) என்ற இனத்தார், ஈத்தியரின் பிற்காலக் கிளையே என ஆய்வாளர்கள் கருது கின்றனர். இவர்களுடைய நிலைப்பாடு வடக்கு மெசபத்தொமி யாவில், கி.மு. 2400 தொடங்கி, கி.மு. 1600 இல் எழுச்சியைக் கண்டு, கி.மு. 1000 ஆண்டுகளில் வலுவிழந்து போனவர்களாகக் காட்சியளிக்கின்றனர். இம்மக்களை தற்கால வரலாற்று ஆய்வாளர்கள், இந்திய - ஐரோப்பிய இனமாகக் கருதுகின் றனர். இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் அம்மக்களில் சில குழுக்களுக்கு இந்தியாவுடன் ஏற்பட்ட தொடர்புகள் காரண மாகவே, தொடக்க கால மக்களையும் சேர்த்து, இந்திய - ஐரோப்பியர் என்றனர்.[575] கி.மு. 1530 ஆண்டுகளில், பாபி லோனை வீழ்த்தினர். முன்னதாக எகிப்தையும் வெற்றி கண்டு, ஒரு நூற்றாண்டுக் கால ஆட்சியை எகிப்தில் உருவாக்கினர்.

வரலாற்றில் கி.மு. 1600 ஆண்டுகளில் வலுவான ஓர் அரசை சின்ன ஆசியாவிலும், சிரியாவின் தெற்குப் பகுதி வரையிலுமான எல்லைகளைக் கொண்டு நிறுவினர். சின்ன ஆசியாவில் நூறாண்டுகள் இவர்களது ஆட்சி தொடர்ந்தது.[576] இவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இவர்கள் இயற்றி நடை முறைப் படுத்தியிருந்த சட்டத் தொகுப்புகள், (கி.மு. 1450) களிமண் தட்டுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஏறக்குறைய 200 சட்ட விதிகள் அவற்றில் குறிப்பிடப் பட்டிருந்தன.[577] இச் சட்ட தொகுப்பை உருவாக்கிய மன்னன் பெயர் தெரியவில்லை. பொதுவாக அக்காலத்தில் சட்டங்களை மன்னர்களே உருவாக்கினாலும், அவை கடவுளே உருவாக்கிக் கொடுத்தவை

எனக் கருதியதால், தங்களுடைய பெயர்களை அத்தொகுப்பு களில் இணைப்பதில்லை.

பாபிலோன் கோபுர நிகழ்வுக்கு பின் பிரிந்து போன மக்களை, செமிட்டிக், ஆமெட்டிக், இந்திய - ஐரோப்பியர் என மூன்று பிரிவுகளாக ஆய்வாளர்கள் பிரித்தனர். இந்திய - ஐரோப்பியர் எனவும், இந்திய - ஐரேராப்பிய மொழி எனவும் ஆய்வாளர்கள் பெயர் கொடுத்தற்கான காரணம் யாதெனில், இந்திய - ஐரோப்பிய இனம் என்று கருதப்பட்ட சின்ன ஆசியா, சிரியா, கிரேக்கம், கருங்கடல் பகுதிகளில் தற்காலத்தில் பேசப் படும் மொழிகளுக்கும், வட இந்திய மொழிகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைக் கருத்தில் கொண்டே அவ்வாறு பெயர் சூட்டினர் எனலாம். (The family of canguages spoken over the greater part of Europe and Asia as far as northern India - Oxford concise, p. 725). மொழியியல் ஆய்வுகள் தொடங்கப்பட்ட காலத்தில், ஐரோப்பிய மொழிகளுக்கும் வட இந்திய மொழி களுக்கும் இருந்த தொடர்புகளை வைத்து அவ்வாறு முடிவு செய்தனர். அவ்வாறெனில் வட இந்திய மக்கள் ஐரோப்பியரா? அல்லது ஐரோப்பியர் வட இந்தியாவினின்றும் குடி பெயர்ந் தவர்களா? என்ற கேள்விகளுக்கு இதுவரையில் ஆய்வாளர்கள் தெளிவான விடைகளைக் கூறவில்லை. மொழிகளிடையே காணப்பட்ட ஒற்றுமைகளைக் கருத்தில் கொண்டு அவ்வாறு முடிவு செய்தனர். அதற்கான முன் வரலாறு என்ன என்பதை எவரும் அறிவிக்கவில்லை. வட இந்திய மொழிகள் என அவர்கள் கருதுவது சமற்கிருதத்தையும் அதன் கிளை மொழி களையும் என்க.

மொழிப் பாகுபாடு பற்றிய அவர்தம் கொள்கை, அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட கொள்கைகள் அனைத்துமே முழுமை யான, சரியான, உண்மையான தகவல்களை அளிக்கவில்லை. மேற்கிந்திய மொழி ஆய்வாளர்களின் மொழிக் கொள்கையில், ஏராளமான இடைவெளிகள் உள்ளன. அவை தொடர்ச்சியாக அமைந்திருக்கவில்லை. அவர்கள் கூறிய கொள்கைப் படி, செமிட்டிக் மொழிக்கும் இந்திய மொழிகளுக்கும் தொடர் பேதும் இல்லை யென்றனர். சென்ற நூற்றாண்டில் வெளியிடப் பட்ட நிக்கோலஸ் இலெகோவரி என்பாருடைய கிழக்கும் திராவிடர்களும் என்ற நூல், வட இந்தியர்கள் பாபிலோனி யர்களே என்ற கருத்தை வலியுறுத்துகிறது. எனவே, மொழிக்

கொள்கையில் மேலை நாட்டு ஆய்வாளர்கள் இன்னும் கூட சரியான நிலைப்பாட்டுக்கு வரவில்லை என்பதை உணரலாம்.

இந்திய - ஐரோப்பிய மொழிக் கொள்கை, ஒரு பகுதி உண்மையானது என்பதில் தவறில்லை. வடக்கு மெசபத்தோமியா, (அனதோலியா) ஆசியா மைனர், கருங்கடல் பகுதி நாடுகள், கிரேக்கத்தின் பல பகுதிகளில் அக்காலத்தில் பேசப்பட்ட மொழிகளுக்கு இடையே நெருக்கமான தொடர்புகள் இருந்தன. ஆனால் கிரேக்க மொழி செம்மைப்படுத்தப்பட்ட போது, ஏராளமான சுமேரிய, செமிட்டிக் சொற்கள் கிரேக்கத்தில் கலந்தன. கி.மு. 2000 ஆண்டுகளில் பேசப்பட்ட கிரேக்க மொழிக்கும் கி.மு. 500 ஆண்டுகளில் பேசப்பட்ட கிரேக்க மொழிக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

அந்த வகையில் ஈத்தியர் பேசிய மொழி, கிரேக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்ததைப் போலவே, சமற்கிருதத்தோடும் தொடர்புடையதாக இருந்தது என்பதே, ஆய்வாளர்களின் கருத்து. லூவியன் (Luwian) என்ற மொழியும், பழயிக் (palaic) என்ற மொழியும் கூட, ஈத்திய மொழியோடு தொடர்புடையதென்பர். இம்மொழிகளும் கூட வெளிநாட்டு மொழியான சுமேரிய மொழியோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தன என்பது புரியாத புதிராக உள்ளது. சுமேரியம் தமிழே என உறுதி செய்யப்பட்டுள்ளது. இது போன்ற சூழல்களில், சுமேரியத்தைத் தேடி ஆய்வாளர்கள் சென்றிருக்க வேண்டும். ஆனால் ஆய்வுகளைத் தொடரவில்லை. பழைய ஈத்தியர் மொழியின் பல்வேறு ஆவணங்கள் தற்போது கிடைத்துள்ளன. அவை பட எழுத்துகளாக உள்ளன. (heirogliyphic). அவற்றைப் படிக்க இயலவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இம்மொழியை அட்டி (Hatti) என்றும் கூறுகின்றனர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், ஒவ்வொரு மேலை மொழிகளையும் தனித்தனியே ஆய்வுசெய்த மேலை நாட்டவர், கிழக்கித்திய மொழிகளோடு அவைகளைத் தொடர்புபடுத்திப் பார்க்க வில்லை. கிழக்கித்திய மொழிகளில் சமற்கிருதத்தை மட்டுமே அவர்கள் ஒப்பிட்டுப் பார்த்தனர். சமற்கிருதம் தனி மொழியென்றும், அதன் கிளைகளே வட இந்திய மொழிகள் என்றும், உறுதி செய்யப்பட்டது பழைய கொள்கைகளாகும். சமற்கிருதமும் தமிழின் கிளை மொழியே என்ற உண்மை தற்போது வெளிப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றைப் பொருத்தவரை, குறிப்பாகத் தமிழர் வரலாற்றைப் பொருத்தவரை ஈத்தியரின் வரலாறு, இவ்விரு வரலாறுகளுடன் தொடர்பு கொண்டுள்ளதால், ஈத்தியர் பற்றிய ஆய்வுகளை மேலும் தொடர வேண்டும்.

கி.பி 1906 ஆம் ஆண்டில், துருக்கி நாட்டில் உள்ள போகாஸ் கோய் என்ற இடத்தில் (Boghazkoy) அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்பகுதி அக்காலத்தில் அனதோலியா என்று அழைக்கப்பட்டது. அது ஒரு காலத்தில் ஈத்தியரின் தலை நகராக இருந்தது. அந்த நகரம் அதன்வழியிலேயே அகழ்வாய் வுக்குத் தேர்வு வெய்யப்பட்டது. தோண்டத் தோண்ட கிடைத்த பொருட்கள், ஆய்வாளர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கின. மிகப் பெரிய நகரம் ஒன்று (மொகஞ்சதாரோவைப் போன்று) புதைந்து கிடைந்ததைக் கண்டனர். ஏறக்குறைய (10000) பத்தாயிரத் துக்கு மேற்பட்ட களிமண்தட்டுகளைக் கண்டெடுத்தனர். மேற்காசியாவில் கிடைத்த களிமண் தட்டுகளின் எண்ணிக் கையில் இதுவே மிகப் பெரியதாகும். இத்தட்டுகள், போகஸ் காய் நகரைச் சுற்றிலுமிருந்த ஊர்களிலும் கண்டெடுக்கப் பட்டன. இவை, கி.மு. 3000 ஆண்டுக்கால அளவைச் சார்ந் தவைகளாக மதிப்பிடப்பட்டுள்ளன. இக்களி மண் தட்டுகள், மேற்காசிய நாடுகளைப் பற்றிய புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தன. [579] ஆனால் இந்த நாகரிகத்துத்குரிய மக்கள் ஈத்தியர்தாமா என் பதில் குழப்பங்கள் மிகுந்தன. எவ்வா றெனில், இப்பகுதியில் ஈத்தியர்ககளின் நிலைப்பாடு கி.மு. 1900 ஆண்டுகளிலேயே அறியப்படுவாதாக ஆய்வாளர்கள் கருது கின்றனர். அது உண்மை யெனில், கி.மு. 3000 ஆண்டுகளில் அங்கு வாழ்ந்திருந்த மக்கள் யார் என்பதற்குச் சான்றுகள் இது வரை கிடைக்கவில்லை. களி மண் தட்டுகளில் பல, சுமேரிய எழுத்துக்களை ஒத்துள்ளன வென்பதால், சுமேரியர்களின் சில குழுவினர் போகோஸ் கோய் நகரில் குடி யேறியிருக்கலாம் என்ற கருதுகோள் எழுகின்றது.

ஈத்தியர் வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட் டுள்ளது. பழைய அரசு (கி.மு. 1900), ஈத்தியப் பேரரசு (கி.மு. 1600), புதிய அரசு (கி.மு. 1200) என்றவாறு பிரிக்கப்பட்ட நிலையில், கி.மு. 800 இல் அசீரியர்களின் படையெடுப்பிற்குப் பிறகு காணாமல் போய் விட்டது. [580]

ஈத்தியர் வரலாற்றை ஓரளவுக்கு விவிலியம் முன்னெடுத்துச் செல்கிறது. நோவா என்பவனுடைய மகனான செம் என்பவன் மரபில் தோன்றியகனான் என்பவனின் மகன் எத்து (Heth) என்பவன் மரபினரே ஈத்தியர் என்று விவிலியம் கூறுகிறது.[581] (ஆதி. 10 : 15) இச் செய்தியால், ஈத்தியர் செமிட்டிக் மரபினரே என்பது தெளிவாகின்றது. யாவன் மரபினர் கிரேக்கம் சென்று குடியேறியது போல், எத்து மரபினர் வடக்கு மெசபத்தோமியாவில் குடியேறினர். எத்துவின் உடன் பிறந்தான் கனானில் குடியேறியதால் ஈத்தியர் பலரும் கனான் நாட்டில் குடியிருந்தனர் என்னும் விவிலியம் கூறுகிறது.

கி.மு.1700 ஆண்டுகளின் அறியப்படும் இக்சோஸ் (HYKSOS) என்ற மரபினர் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இவர்கள் கி.மு. 1720 ஆண்டுகளில், எகிப்தை வென்று அங்கு நூறாண்டுக் கால ஆட்சியை நிறுவினர். இவர்களை இடையர்களின் அரசர்கள் (Shepherd Knigs) என்று கூறுகின்றனர். இவர்களுக்கும் ஈத்தியர்களுக்கும் உள்ள தொடர்புகளை விளக்கச் சான்றுகள் இல்லை. இக்சோஸ் எந்த மரபினர் எள்றும் தெளிவுபடுத்தப் படவில்லை. ஆனாலும் மானதோ (Manetho) என்ற எகிப்திய வரலாற்று அறிஞர், யாக்கோபுவின் மகன், எகிப்து நாட்டில் மிகப்பெரிய அரசியல் அதிகாரத்தில் இருந்ததாக விவிலியம் கூறுகிறது. இவன் காலத்தில் இசுராயெல் (கனான்) நாட்டில் ஏற்பட்ட வற்கடம் (பஞ்சம்) காரணமாக, தங்கள் இனத் தலைவன் ஆளும் எகிப்துக்குப் பல நூறு மக்கள் குடி பெயர்ந்தனர். கி.மு. 1700 முதல் கி.மு. 1250 வரையிலான கால அளவில் அவர்கள் எகிப்தில் இருந்தனர். இக்கோஸ் மரபும் எபிறேய இனத்தைச் சார்ந்ததே என்பதால், அம்மக்களை அரவணைத்துக் காத்தது.[582]

கி.மு. 1580 ஆம் ஆண்டில், எழுச்சி பெற்ற எகிப்தியக் குடி மரபின் 18 ஆம் மரபு இக்சோஸ் அரசை வீழ்த்தியது. அவ்வரசின் பாதுகாப்பில் இருந்து எபிறேயர்களை அடிமைப்படுத்தியது.[583] இவ்வாறு அடிமைப் படுத்தப்பட்ட எபிறேயர்கள், கி.மு. 1250 ஆண்டுகளில் மோசே தலைமையில் எகிப்தை விட்டு வெளியேறிய போது, அம்மக்களின் தொகை 10 இலக்கத்துக்கு மேல் இருந்ததாக விவிலியம் கூறுகிறது. இக்கணக்கின்படி, குடியேறிய எபிறேய மக்களின் தொகையை கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இந்த இக்கோஸ் மரபினரே, முதன் முதலில் போரில் புரவி களைப் பயன்படுத்தினர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எகிப்தின் மீதான படையெடுப்பில், தேர்களை இழுத்துச் செல்ல புரவிகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் எகிப்தில் அடுத்து வந்த மன்னர் மரபுகள் புரவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். புரவி மீது தனி ஆள் அமர்ந்து பயணம் செய்வது, போரிடுவது போன்ற வித்தையை எப்போது அறிமுகம் செய்தனர் என்பதற்கானச் சான்றுகள் இல்லை. ஆனாலும் கி.மு. 300 ஆண்டுகளில் கிரேக்கரும், அதன்பின்னர் உரோமரும் புரவி மீதமர்ந்த போர் மறவர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. [584]

இக்கோஸ் மரபினர் புரவிகளைப் பயன்படுத்திய காலங் களில், ஈத்தியரும் புரவிகளைப் பயன்படுத்தியதாக அறிய முடி கின்றது. எனவே, மேற்காசியாவில் போர்களில் புரவிகளை அறிமுகம் செய்தவர்கள் இக்கோஸ் மற்றும் ஈத்திய மரபினரே என்பது தெளிவாகின்றது. இதன் அடிப்படையில், இவ்விரு மக்களும் ஒரு மரபினராயிருக்கலாம் என்றும், அல்லது ஒரு பகுதியைச் சார்ந்த நல்லுறவு கொண்ட மக்களாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. புரவிகளைப் பற்றிய படங்களும், குறிப்புகளும் சுமேரிய களிமண் தட்டுகளில் காணப்படுகின்றன. புரவிகள் பற்றிய குறிப்புகள் சிந்து வெளியில் காணப்படவில்லை. பல்வேறு உருவங்களில் அறியப்பட்ட புரவிகள், உயரமானவை களாகவும், நல்ல உடற்கட்டு உள்ளவைகளாகவும் இருந்தன. மேலைநாட்டுப் புரவிகள் இந்தியப் புரவிகளைக் காட்டிலும் ஆற்றலில் சிறப்புற்றிருந்தன. பிற்காலங்களில், அராபியர்கள் புரவிகளைக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் விற்பனை செய்தனர். கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பே, போனீசியர்கள் புரவிகளைத் தமிழ் நாட்டில் விற்பனை செய்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

மேற் கண்ட செய்திகளின் அடிப்படையில் இந்தியாவில் அறியப்படும் ஆரியர்கள் புரவிகளைப் பயன்படுத்தினர் என்ற செய்தியால், வட இந்தியாவில் புரவிகளை அறிமுகம் செய்த வர்கள் ஆரியர்களே என்ற கருத்தும் உண்டு. அது உண்மை யாகவும் இருக்கலாம். ஆரியர்கள் ஈத்தியப் பகுதி இசைத்தா ருடன் தொடர்புடையவர்கள் என்பதற்கானச் சான்றுகள் கடந்த காலங்களைக் காட்டிலும், தற்காலத்தில் மிகுதியாகக்

கிடைக்கின்றன. எனவே, வடக்கு மெசபத்தோமியாவிலிருந்தே (அனதோலியா) ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்ற கருது கோளும், அவர்கள் ஈத்தியர்களே என்ற கருத்தும் வலுப்பெற்று வருகின்றன. (மேலும் விரிவான செய்திகளை ஆரியர்கள் என்ற தலைப்பில் காண்க.)

கி.மு. 1900 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட ஈத்தியர்களின் பழைய அரசு தோற்றுவிக்கப்பட்டது. இடைக்காலத்தில் ஏற்பட்ட (300 ஆண்டுகளில்) படையெடுப்புகளும் குழப்பங்களும் நாட்டில் அமைதியின்மையைத் தோற்றுவித்தன எனலாம். இக்காலத்தில் பல்வேறு இனத்தாரும் அந்நாட்டில் நுழைந்து, புதிய குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். இரண்டாம் அரசு பொறுப் பேற்ற காலத்தில் அந்நாட்டில் பலமொழி பேசும் மக்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக்குழப்பங்களின் அடிப்படையில், கி.மு. 1600 முதல் கி.மு. 1300 வரையிலான கால அளவுகளில், சில குழுக்கள் இந்தியாவில் நுழைந்திருக்க வேண்டும். இவர்களே ஆரியர்கள் என அழைக் கப்பட்டிருக்க வேண்டும். மேற்காசியாவில் எந்த இனமும் ஆரியர்கள் என அழைக்கப்பட்டதற்கானச் சான்றுகள் இல்லை.

ஆரியர்கள்

இந்திய வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் கூட, விடுவிக்க இயலாதப் புதிராய் விளங்குபவர்கள் ஆரியர்களாவர். ஆரியர் களின் தோற்ற நாடு எது? அவர்களது முன்னோர் யாவர்? அவர்கள் பேசிய மொழி என்ன? அவர்கள் எக்காரணம் கொண்டு இந்தியாவுக்குள் நுழைந்தனர்? அவர்கள் இந்தியா வுக்குள் நுழைந்த காலம் எது? என்பன போன்ற கேள்விகளுக்கு இன்று வரையிலும் கூட தெளிவான விடைகள் கிடைக்க வில்லை. ஆனால், ஆரியர்கள் இந்தியாவின் தொன்மக் குடிகள் அல்லர் என்பதும், அவர்கள் மேலை நாட்டிலிருந்தே இந்தியா வுக்கு வந்தனர் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆரியர் களின் வரலாற்றைக் கூறுவதில் ஆய்வாளர்கள் முரண்படுகின் றனர். ஆனால் ஒன்று மட்டும் ஆசியர்களைப் பொருத்துத் தெளிவாகத் தெரிகின்றது. திட்ட மிட்டே, தங்கள் வரலாற்றை ஆரியர்கள் மறைத்துள்ளனர். பல்வேறு இலக்கியங்களைப் படைத்தாதக் கூறிக் கொள்ளும் ஆரியர்கள், அவ்விலக்கியங் களில், தங்களுடைய வரலாற்றைப் தெளிவுபடுத்தாமல் திட்ட மிட்டே மறைத்துள்ளனர். பல்வேறு ஊகங்களுக்கும் இட மளித்து, தங்களுடைய பழைய வரலாற்றை எவரும் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதை உணர்ந்து, அந்நோக்கத்தில் வெற்றியும் பெற்றுள்ளனர். தங்களுடைய பழைய கால வரலாறு பற்றிய செய்திகளை, பலநூறாயிரம் ஆண்டுகள் முன்னெடுத்துச் சென்று, தாங்கள் இந்தியாவின் தொன்மைக் குடிகளே என்ற போர்வையில் மறைத்து, மக்களுக்கு வெளிப் படுத்தியுள்ளனர்.

உலகப் புகழ் பெற்ற இத்தாலிய அரசியல் மேதை மாக்கி யவல்லி பின் வருமாறு கூறுகிறார். "எந்தக் கருத்தை மக்களிடம் திணிக்க வேண்டுமோ, அதனை மக்களிடம் நேரிடையாகக் கூறாதீர்கள். அவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட் டார்கள். சமயத்தின் பெயரால், கடவுளின் பெயரால் அதனைக் கூறுங்கள். அப்போது உங்கள் கூற்று ஏற்றுக்கொள்ளப்படும்."

பிற்காலத்தில் மாக்கிய வல்லி கூறியதை, பலநூறு ஆண்டு களுக்கு முன்பே செயல் படுத்தியவர்கள் ஆரியர்கள். மேலும் மாக்கிய வல்லி கூறுகிறார், "சமூகக் சுட்டமைப்பை பிளவு படுத்துங்கள். பிளவு படுத்தப்பட்ட சமூகத்தில், செல்வம் படைத்த பணக்காரர்களை உங்கள் பக்கம் ஈர்த்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் காலப் போக்கில் எங்கள் சொற் படி நடக்க முன் வருவார்கள்."

ஆரியர்களுடைய கொள்கை தொடக்கத்தில் இருந்தே, மாக்கிய வல்லி கூறிய அறிவுரையைச் சார்ந்தே அமைந்திருந்தன. மன்னர்களையும், பெருந் செல்வர்களையும் தம்பக்கம் ஈர்த்துக் கொண்ட ஆரியர்கள், அவர்கள் மூலமாகவே, தாங்கள் எண்ணி யதை நிறைவேற்றிக் கொண்டனர். சமூகக் கட்டமைப்பில் ஆரியர்களே உயர்வானவர்கள் என்றும், மன்னனுக்கும் மக்க ளுக்கும் நாட்டுக்கும் வழி காட்டப் பிறந்தவர்கள் என்றும் தங்களைத் தாமே அவர்கள் அழைத்துக் கொள்ளவில்லை. அதனை, கடவுளர்களே கூறியதாக, கற்பனையான தொன்மக் கதைகளைப் புனைந்து கொண்டனர். பகவத் கீதையில், கடவுளே சாதிக்கட்டமைப்பை உருவாக்கியவர் என்றும் அக்கட்டமைப்பைத் தகர்க்க எவரும் முயலக் கூடாது என்றும் அவ்வாறு தகர்க்கப்படும் காலங்களில், தாமே பிறப்பெடுத்து வந்து, அக்கட்டமைப்பைத் தகர்த்தவர்களை ஒறுப்பேன் என்றும் கூறுவதாகப் பதிவு செய்யப்பட்டள்ளது. மன்னன், தனது குடிகளிடையே காணப்படும் சாதிக் கட்டமைப்பை பேணிக் காக்க வேண்டும் என்றும், அவ்வாறு செயல்படாத மன்னர்களைத் தூக்கி எறிய மக்கள் முன் வர வேண்டும் என்றும், பகவத் கீதை மேலும் கூறுகிறது.

ஆரியர்களே இந்தியாவின் தொன்மை குடிகள் என்ற கருத்தைப் பரவலாக விதைத்த ஆரியர்களின் கூற்றை, பல நூறாண்டு மக்கள் நம்பிவந்தனர். மன்னர்களும் ஏற்றுக் கொண்டிருந்தனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு, இந்திய நாடு வெளிநாட்டவரின் ஆளுகையின் கீழ் வந்தபிறகு, மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டன. ஏறக்குறைய அடிமைகள் போன்றே மக்கள் வாழ்ந்தனர். வெளி நாட்ட வரின் ஆளுகைக் காலம், ஆரியர்களுக்கு மேலும் அதிகாரங் களையும் உயர்வுகளையும் ஏற்படுத்திக் கொடுத்தன. இந்திய நாட்டில் எந்த இனத்தோடும் உறவில்லாத ஆரியர்கள், அந்த

இனங்கள் அழிந்துபடுவது பற்றியும், அடிமைகளாக இருப்பது பற்றியும் மகிழ்ந்தனரே அன்றி, கவலைப் படவில்லை. கல்வி மறுக்கப்பட்டதால், மக்கள் சிந்திக்கும் ஆற்றலை இழந்தனர். ஆரியர்கள் அரசுச் சார்புடையவர்களாக இருந்தனர். பாரசீகர், இசுலாமியர், போர்த்துக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்ற வரிசைப்படி இந்தியாவை ஆண்ட அனைத்து தரப்பி னருக்கும் அறிவுறையாளர்களாக ஆரியர்களே இருந்தனர். இவர்களின் ஆதரவோடு, இந்தியாவின் தொன்மக்குடிகள் ஆரியர்களே என்ற கருத்தை மக்களிடையே நிலை நிறுத்தினர். தாம்தான் இந்தியாவின் தொன்மக்குடிகள் என்ற எண்ணமே இந்திய மக்களிடம் ஏற்படவில்லை. தங்களுடைய பெருமைகள் அனைத்தையும் இழந்துபோயினர். ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளாக இந்நிலை நீடித்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் டெல்லிக்கும் இலா கூருக்கும் இடையே தொடர்வண்டி இருப்புவழி போடப் பட்ட போது, இடையே காணப்பட்ட பலநூறு மண்மேடு களைச் சரி செய்ய வேண்டியிருந்தது. இம்மண் மேடுகளைத் தகர்த்த போது, பல்வேறு இடங்களில் குடியிருப்புகள் இருந்த தற்கான தடயங்கள் கிடைத்தன. அவைகளை அப்புறப்படுத்தி விட்டு இருப்பு வழிப் பணிகள் முடிக்கப்பட்டன. பின்னர் குடியிருப்புத் தடயங்கள் கிடைத்த மண் மேடுகள் இருந்த இடங்களை, ஆங்கிலேயர்கள் அகழ்வாய்வு செய்து பார்க்க விரும்பினர்.

சிந்துவெளி நாகரிகம் :

ஜான் மார்ஷல் என்ற ஆங்கிலேய அதிகாரியின் தலை மையில் ஒரு குழு அகழ்வாய்வுப் பணிகளைத் தொடங்கியது. மோகஞ்சதாரோ, களிவங்கன், உலைத்தளம், சூரக்கோட்டை, தாயம்மா பாத், வனவெளி, தொலவிரை, துவரை ஆகிய இடங்கள் ஆய்வு செய்யப்பட்டவைகளில் சிறப்பான இடங் களாகும். முகிழ்ந்ததாரை என்பதே மோகஞ்சதாரோ என திரிபு பட்டுள்ளது. தாரோ என்பது தாரை என்ற நீரைக்குறித்த தமிழ்ச் சொல்லாகும். தாரோ என்ற பெயரில் மேலும் பல ஆற்றங்கரை ஊர்கள் அறியப்பட்டுள்ளன. மேற்கண்ட பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன வென்பதை ஒப்பு நோக்குக.

களிவங்கன் (Kalibangan) : களிமண் சார்ந்த வளைவான ஊர்.

உலைத்தளம் (Lothal) : ஆலைகள் நிறைந்த துறைமுகப் பட்டினம்.

சூரக்கோட்டை (Surakota) : கோட்டை அரண் நிறைந்த ஊர்.

தாயம்மா பாத் (Daimabad) : பாத் என்பது பாரசீகச் சொல், பட்டி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு. எபிறேய மொழியில் பெத் (Beth) எனப்பட்டது.

வனவெளி (Banavali) : காட்டுப் பகுதியாக இருக்கலாம்.

துலைவிரை (Dolavira) : வணிக நகரமாக இருக்காலம்.

துவரை (Dwaraka) : கடற்கரை நகரம், நுழைவாயில்.

மேற்கண்ட இடங்களில் விரிவான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. [585] இவைகளில் சிறப்புக்குரிய நகரமாக அறியப்பட்டது மோசஞ்ச தாரோ ஆகும். இந்நகரம் இருந்த இடம் இப்போது பாகித்தானில் இசுலாமாபாத் அருகே உள்ளது. இந்நகரில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களும், காணப்பட்ட நகரமைப்பும், ஆய்வாளர்களை அதிர்ச்சிக்குள் ளாக்கின. அகன்ற தெருக்களும், காற்றோட்ட முள்ள தனி வீடுகளும், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட பொதுக் குளியல் அறையும், நீர் வழித்தாரைகளும், பொது மன்றமும், இன்னோரென்ன அமைப்புகளும், அந்நகரை, முற்றிலும் நகரிய நகரமாக வெளியுலகுக்குக் காட்டின. மாட்டு வண்டிச் சக்கரங்கள் இன்று போலவே இருந்தன. நெடுங்காலமாக மாற்றப்படாமல் இயக்கப்பட்டு வந்த ஊர்தியாக மாட்டு வண்டியைக் கருதலாம். மேலும் மக்கள் பயன்படுத்திய மட்கலங்கள், உலையில் சுடப்பட்டனவாய் இருந்தன. பொன், வெள்ளி, செம்பு ஆகிய மாழங்களில் அணிகலன்கள் வார்க்கப் பட்டிருந்தன. முத்தும் மணியும் அவர்கள் பயன்பாட்டில் இருந்தன. பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதற் கான பொருட்களைப் பயன்படுத்தினர். வழவழப்பாக வடிவமைக்கப்பட்ட வட்டவடிவமான செப்புத் தகடு, முகம் பார்க்கப் பயன் படுத்தப்பட்டது. துலை, துலைக்கற்கள், நீட்டலளவைக் கருவிகள், கோணங்களை அளக்கும் கருவிகள், செம்பினாலான கத்திகள் வாட்கள், வேளாண்மைக் கான கலப்பைகள் என்றவாறு அகழ்வாய்வுக் கண்டு பிடிப்புகள் விரியும். [586] (மேலும் செய்திகளை, சிந்துவெளித் தமிழர் என்ற தலைப்பில் காண்க).

இந்திய வரலாற்றில் எந்த நிகழ்வோடும் தங்களை இணைத்துக் கொள்ளும் ஆரியர்களும் அவர்தம் சார்புடைய வர்களும்., எந்த ஆய்வுகளின் முடிவுகளும் அறிவிக்கப் படுமுன்பே, சிந்துவெளி நாகரிகம், ஆரிய நாகரிகமே என அறிவித்துக் கொண்டனர். எந்த அடிப்படையில் அதனை ஆரிய நாகரிகம் எனக் கூறினார்கள் என்பது பற்றி துளியும் அவர்கள் வெட்கப்படவில்லை. அது ஆரிய நாகரிகம் இல்லை என மெய்ப்பிப் பதற்கான சான்றுகளை மற்றவர்களால் தர இயலாது என்ற நம்பிக்கையில் கூட அவ்வாறு கூறி இருக்கலாம். ஆனால் அடுத்த பத்தாண்டுகளில், ஆரியச் சார்புடைய ஆய்வாளர்கள் கூறிவந்த ஆரிய நாகரிகம் என்ற கூற்று ஆட்டம் கண்டது. 1924 முதல் 1934 வரையிலான பத்தாண்டுகளில், பல்வேறு ஆய்வாளர்கள், சிந்துவெளி நாகரி கத்தின் உண்மை வரலாற்றை அறிய பெரிதும் முயன்றனர், உழைத்தனர்.

1933 ஆம் ஆண்டில், பம்பாய் கல்லூரி ஒன்றில் பேராசிரி யராகப் பணியாற்றி வந்த அருள்திரு ஈராஸ் பாதிரியார், சிந்துவெளி அகழ்வாய்வுப் பகுதிகளில் தமது கவனத்தைச் செலுத்தினார். அங்கு கிடைத்த பல்வேறு பொருட்களையும் ஆய்வு செய்தார். அங்கு அறியப்பட்ட சொற்களையும், எழுத்து களையும் ஆய்வு செய்தார். அங்கு கிடைத்த படங்களைக் கூர்ந்து நோக்கினார். அவர் வெளி நாட்டினராக இருந்த தாலும், பன்மொழிகளை அறிந்திருந்ததாலும், சிந்து வெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் அல்ல என்ற முடிவுக்கு வந்தார். ஏற்கனவே கொங்கிணி, மராத்தி, தெலுங்கு போன்ற தென் னிந்திய மொழிகளை அவர் அறிந்திருந்தார். தமிழில் அவருக்கு நேரிடையான தொடர்பு இல்லை யென்றாலும், அவருடன் பணியாற்றிய தமிழ் அறிந்த பாதிரியார் ஒருவரின் துணை கொண்டு தமிழையும் ஓரளவு கற்றிருந்தார். (ஈராஸ் பாதிரி யாருக்குத் தமிழைக் கற்றுத் தந்த பாதிரியார், பின்னர் திருச்சி ராப்பள்ளி, தூய வளனார் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்றார் என்று கூறப் படுகின்றது.) தமது ஆய்வுகளின் முடிவாக சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என முதன் முதலாக, அதிரடியாக அறிவித்தார். [587] திராவிடம் என்ற சொல், 1930 களில், தமிழையே குறித்தது எனலாம். என்றாலும் ஈராஸ் பாதிரியார் எடுத்துக் காட்டி விளக்கிய சொற்கள், தமிழ்ச் சொற்களாகவே இருந்தன. அதுமட்டுமல்லாது, சிந்து வெளி

மொழிக்கும், சுமேரிய மொழிக்கும் உள்ள தொடர் புகளையும் முதன் முதலில் அறிவித்தவர் ஈராஸ் பாதிரியே ஆவார். மேலும் பல சிந்துவெளிச் சொற்கள், செமிட்டிக் மற்றும் எபிறேய மொழிகளோடும் தொடர்பு கொண்டுள்ளதை வெளிப்படுத்தி னார். (தமிழுக்கும் எபிறேய மொழிக்கும் இடையே காணப் பட்ட தொடர்புகளை, கி.பி. 1810 ஆம் ஆண்டிலேயே, சென்னை மாநில ஆட்சியாளர் திரு. பிரான்சிசு ஒயிட் எல்லீசு துரை மகனார் வெளிப்படுத்தினர் என்பது நோக்கத்தக்கது. 588 எல்லீசு கூறிய செய்திகளையே கால்டுவெல் வழி மொழிந்தார் என்க).

ஈராஸ் பாதிரியாரின் அறிவிப்புக்குப் பிறகு, வால்டர் எ. பேர் சர்விஸ் (Walter A. Fair servis), ஜான் மார்ஷல் (Sir John Marshal), அஸ்கோ பர்போலா (Prof. Asko Parpola), நோரோசோல் (Y. Knorosow), சங்காலியா, (H.D. Sankalya), லால் (B.B. Lal) போன்றோர், ஈராஸ் பாதிரியாரின் முடிவுகளை வழி மொழிந் தனர். எஸ். ஆர். இராவ் (S.R. Rao) போன்றவர்கள், சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே எனக்கூறினர்.[589] பெரும்பான்மை யான ஆய்வாளர்கள், ஆரிய நாகரிகம் என்ற கொள்கைக்கு எதிராக இருந்ததால் ஆரியச் சார்பாளர்கள் கூறிய விளக் கங்கள் தவறானவை எனப் புறந்தள்ளப்பட்டன.

சிந்துவெளி நாகரிகம் வெளிப்பட்ட பிறகு, தமிழ் நாட் டிலிருந்த தமிழ் அறிஞர்களிடம் புதிய உணர்வுகள் மேலிட்டன. தமிழரின் தொன்மைக்கால வரலாற்றை, சிந்துவெளி நாகரிகம் உலகிற்குப் பறைசாற்றியதில் பெருமை கொண்டனர். அதன் பிறகு தமிழருடைய வரலாற்றை மீண்டும் தோண்டியெடுக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிட்டது. தொடர்ந்து தேவ நேயப் பாவாணர், இரா. மதிவாணன், பூர்ண சந்திர ஜீவா ஆகியோர் கொடுத்த விளக்கங்கள் சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என உறுதி செய்தன. [590] சிந்துவெளி ஆய்வுகள் தமிழரின் தொன்மைக் கால வரலாற்றுக்கு முதல் படியாகி, தொடர்ந்து சிந்துவெளிக்கு நெருக்க மான தொடர்புகள் கொண்ட சுமேரிய, செமிட்டிக் நாகரிகங்களும் ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்டன.

ஆரியர்களும் அவர்தம் சார்புடையவர்கள் அதுவரை கூறிவந்த ஆரியர்தம் வரலாறு, உண்மைகளுக்குப் புறம்பானது என்பதையும், பொய்களையே புனைந்து கட்டித் தமது இனத்தை உயர்த்திப் பிடிக்க முயன்றனர் என்பதையும்

தமிழர்கள் உணர்ந்தனர். ஈராயிரம் ஆண்டுகளாகக் கூறிவந்த ஆரியக் கொள்கைகள் மறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்று கூறப்பட்ட ஆரிய இலக்கியங்களும் மறு ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்டன. இதன் அடிப்படையில் பல்வேறு உண்மைகள் வெளிவரலாயின.

ஆரியர்கள் பற்றிய சிந்தனைகள் மேலும் மேலும் வளர்ந்தன. ஆசிரியர்களின் முன்னோர்கள், நடு ஆசியாவில் வாழ்ந்திருந் தனர் என்றும், கிழக்கு ஐரோப்பாவினரே எனச் சிலரும், அவர்களது தாய் நாடு எதுவெனத் தெரியவில்லை எனச் சிலரும் கருத்துரைத்தனர். பாலகங்காதர திலகர், ஆரியர்கள் வாழ்ந்திருந்த நாடு வட முனைப் பகுதியே என்றார். முற்றிலும் பனிக்கட்டிகள் சூர்ந்திருந்த குளிர் நாட்டில் வாழ்ந்திருந்த ஆரியர்கள், குளிரின் கொடுமையைத் தாங்கிக் கொள்ள இயலாமல், வெப்பநாடாகிய இந்தியாவுக்கு வருகை தந்தனர் என்றார். அதன் அடிப்படையிலேயே உருத்திரனை கைலாயம் என்ற பனிமலையில் குடியமலர்த்தினர் என்று கூறினார்.

நமது ஆய்வுகளில் அறிப்படும் செய்திகளின் அடிப் படையில், ஆரியர்கள் வடக்கு மெசபத் தோழியா அல்லது அனதோலியா என்ற நாட்டில் இருந்தே (தற்காலத்திய துருக்கி நாடு) இந்தியாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும் என்பது நமது ஆய்வின் முடிவாகும். இதனை 2004ஆம் ஆண்டு முதல் பதிவு செய்து வருகின்றோம்.[591] ஆரியர்கள் பேசி வந்த மொழி பற்றிய சான்றுகள் கிடைக்கவில்லை யென்றாலும், பிற்காலச் சமற் கிருத மொழியில், ஈத்திய (Hittite) மொழிச் சொற்கள் பெரு மளவில் கலந்திருப்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின் றனர்.[592] ஈத்தியர்களின் வரலாற்றை நோக்கும் போது, ஈத்திய - ஆரியத் தொடர்புகள் உருப் பெறுகின்றன. ஈத்திய மொழி, இந்திய - ஐரோப்பபிய மொழியினம் என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. கி.மு. 1600 - 1300 ஆண்டுகளில் அங்கு நிலவிய அமையின் மையும், பாதுகாப்பின்மையையும் கருதியே, ஈத்தியரில் ஒரு பிரிவினர் பாரசீகத்தைக் கடந்து சிந்துவெளியில் குடியேறி இருக்க வேண்டும் என்ற கருது கோள் முன்வைக்கப்படுகிறது. ஈத்திய மரபு, அனதோலிய மரபின் ஒரு பிரிவாகவே கருதப் படுகின்றது. ஈத்திய மரபும் அரசும் இடையர்களின் மரபு என

உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய ஆரியரும் இடையர்களே என்ற கருந்து ஒற்றுமைப்படுகிறது. தங்கள் கால் நடைகளை மேய்க்கவும், மேற்பார்வையிடவும், புரவிகளை ஆரியர்கள் பயன்படுத்தினர் என்ற கருத்தின் அடிப்படையில், புரவிகளைப் பயன்படுத்தவும், புரவிகளைப் போரிலே ஈடுபடுத்தவும் முயன்று வெற்றிகண்டவர்கள் ஈத்தியரும், இக்கோஸ் மரபினருமே என்று வரலாறு தெளிவு படுத்துகிறது. மேலை நாடுகளில் ஈத்தியர்கள் முதன்முதலில் புரவிகளை அறிமுகம் செய்து பயன்படுத்தியது போன்றே, இந்தியாவில் புரவிகளின் பயன் பாட்டை அறிமுகம் செய்தவர்கள் ஆரியர்கள் என்பதும் உறுதி செய்யப் பட்டுள்ளன.

ஈத்தியர்கள் தங்கள் நாட்டில் பிணங்களை எரித்தார்கள் என்ற கூற்று, ஆரியர்களது வாழ்க்கை முறையோடு ஒற்றுமைப் படுகின்றது. சமற்கிருத மொழியே ஆரியரது மொழி என்ற கூற்றை வரலாற்று ஆய்வாளர்கள் உறுதிப் படுத்தினாலும், அது உண்மையல்ல என்ற கருத்து தற்பொது வெளிப்பட் டுள்ளது. வட இந்தியாவில் ஆரியர்களால் பிற்காலத்தில் பேசப்பட்ட சமற்கிருதமே வட இந்திய மொழிகள் எனவும், அது பற்றியே, ஏற்கனவே இந்திய - ஐரோப்பிய மொழியாகக் கருதப்பட்ட ஈத்திய மொழியோடு சமற்கிருதம் ஒற்றுமைப் படுகிறது எனவும் கருதி, இந்திய - ஐரோப்பிய மொழிகள் என்ற சொற்றொடரை மேலை நாட்டவர் வகுத்தனர்.

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்த போது அவர்கள் பேசிய மொழி சமற்கிருதம் அன்று என்பதை பல்வேறு ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. ஆரியரின் தாய் மொழி ஈத்திய மொழியுடன் தொடர்புடையது. ஈத்திய மொழி, செமிட்டிக் மொழியோடு தொடர்புடையது. செமிட்டிக், தமிழின் கிளைமொழியே என்பதை, ஏற்கனவே விளக்கியுள்ளோம். எனவே, ஆரியரின் தாய் மொழியிலேயே தமிழின் தாக்கங்கள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஆரியர்களின் தாய் மொழி, ஈத்திய மொழியே என்பதை ஏற்றுக் கொள்ளலாம். இந்தியாவுக்குள் ஆரியர் நுழைந்த போது, சிந்துவெளியில் பேசப்பட்ட தமிழ் மொழியுடன், ஆரியரின் மொழி கலந்து, புது மொழி யொன்று தோன்றியது. அம்மொழியையும் சமற் கிருதம் எனக் கூற இயலாது. எனவே, ஆரியம் - சமற்கிருதம் என்பது வெவ்வேறு மொழிகளாகும். சிலர் ஆரியம் - சமற்

கிருதம் - வடமொழி என்றவாறு குறிப்பிட்டு, அது ஒரே மொழியைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். அது முற்றிலும் தவறான கண்ணோட்ட மாகும். ஆரியம் என்பது, ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்த போது பேசிய மொழி. அது தற்போது வழக்கிழந்து விட்டது. அதில் எந்த வொரு இலக் கியமும் எழுதப் படவில்லை. அம் மொழியின் வரிவடிவங் களும் இந்தியாவில் அறியப்பட வில்லை. அதற்கான பதிவு களும் இல்லை. ஆரியர்கள் தங்கள் தாய்மொழியை அடுத் தடுத்து வந்த நூற்றாண்டுகளில் கைவிட்டனர். பிற்காலத்தில் மறந்தே போயினர். பிற்கால ஆரியர்களின் மொழி சிந்து வெளித் தமிழ் மொழியுடன் கலந்து பேசப்பட்ட மொழியாகும்.

ஆரியர்கள் எக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தனர் என்ற கேள்விக்குப் பொதுவான விடையாக, கி.மு 2000 ஆண்டுகள் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஆரிய வேதங்கள், பல இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவிக்கப்பட்டன என்று கூறுகின்றன. இது மிக உயர்ந்த கற்பனையாகும். ஆரிய இலக்கியங்கள் கூறும் ஆரியரது காலம், வரவாற்றுக் காலமே. வரலாறு பற்றி எதுவும் தெரியாத அக்காலத்து மக்கள் அதனை உண்மைச் செய்தி யென்றே நம்பினர். சில ஆய்வாளர்கள் கி.மு. 2000 - 1500 ஆண்டுக் கால இடைவெளியில் ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும் என்ற கருதுகோளை முன் வைக்கின்றனர். ஆரியருடைய வருகையின் போது, சிந்து வெளி நாகரிகம் முற்றிலுமாக முடிவு பெற்றிருந்தது. இறுதியாக அறியப்பட்ட அறப்பா நாகரிகமும், ஆரியர் வருமுன்பே முடிவுற்றதாக (கி.மு. 1800) ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வடக்கு மெசபத்தோமியாவில், அம்மக்களிடையே காணப் பட்ட குழப்பங்களும், போர் அச்சுறுத்தல்களும், பல்வேறு இனங்களால் அந்நாடு சூறையாடப்பட்டதும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாலிக் காபூர் படையெடுப்பின் போது தமிழ்நாட்டில் நிலவிய அச்சவுணர்வும் குழப்பமும் போன்ற அதேநிலை, ஈத்திய சமூகத்திடையே காணப்பட்டது எனலாம். தங்கள் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப் பின்மையைக் கருதிய அம்மக்கள், அந்நாட்டை விட்டு நான்கு திசைகளிலும் வெளியேறினர். கி.மு. 1600 - 1300 ஆகிய கால அளவுகளில் ஏற்பட்ட குழப்பங்கள், கி.மு. 1300களில் அங்கு புதிய அரசு தோற்றுவிக்கப்பட்ட பிறகே முடிவுக்கு வந்தது எனலாம். இந்தக் குழப்பங்களின் விளைவாகவே, அம்மக்களில்

சில குழுவினர் கிழக்கு நோக்கிப் புலம் பெயர்ந்தனர். பாரசீக நாட்டில் அவர்கள் தங்க முயற்சி செய்தனர். ஆனால் பாரசீக மக்கள், ஆரியரை விரட்டியடித்தனர். மேற்கில் செல்ல இயலாத நிலையில், ஆரியர் மேலும் கிழக்கு நோக்கி வந்தனர்.

இவ்வாறு பாரசீகருக்கும், ஆரியருக்கும் இடையே நடை பெற்ற மோதல்களின் காரணமாக, இவ்விரு மக்களும் பகைமை கொண்டனர். இப்பகைமை பல நூற்றாண்டுகள் வரை தொடர்ந்தது. இப்பகைமை பற்றிய குறிப்புகள், அவ்விரு மக்களின் இலக்கியங்களிலும் பதிவு செய்யபட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தேவர்களை நல்லவர்கள் எனக் கூறும் வேதங்களுக்கு மாறாக தேவர்களைத் தீயவர்கள் என பாரசீகச் சமயம் கூறுகிறது. பாரசீகருக்கு எதிர் மறையான கருத்தை ஆரியர் கொண்டிருந்தனர். இப்பகைமையின் வெளிப்பாடாக, பிற்கால பாரசீகர், இந்தியாவில் நிலைத்த ஆரியர்களைத் திருடர் என்றும் கூறினர் ஆரியன் என்றால் திருடன் என்ற கருத்து, பாசிகர்களின் உணர்வுகளில் காணப்பட்டது. ஆனால், ஆரியர்களை இந்திய மக்கள் ஏற்றுக் கொண்டனர். இதுவே இந்தியர்கள் செய்த தவறான செயலாகும். பாரசீகத்தில் ஆரியர்கள் நிலை பெற்றிருந்தால், இந்தியாவில் நடை முறைப் படுத்திய சாதிக்கட்டமைப்பை பாரசீகத்திலும் ஆரியர்கள் செய்திருப்பர். பாரசீகர்களிடம் ஆரியப் பருப்பு வேகவில்லை என்பதையே வரலாறு கூறுகிறது.

மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் பார்க்கும் போது, கி.மு. 1600 - 1300 கால அளவுக்குட்பட்டே, ஆரியரின் இந்திய நுழைவு நடைபெற்றது எனலாம். சிறப்பாகக் கூறுவது என்றால், பாசீகத்தில் அவர்கள் இருந்த காலத்தை நீக்கினால், கி.மு.1400-1300 ஆண்டுகளிலே ஆரியரின் வருகை இந்தியாவில் அறியப்பட்டிருந்தது எனலாம். சில ஆய்வாளர்கள் கூறுவது போல், கி.மு 2000 ஆண்டுக்கால அளவிற்கான சான்றுகள் எவையும் முன் வைக்கப்படவில்லை. அறப்பா நாகரிக காலத் திலேயே ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்ற கூற்றுக்குச் சான்றுகள் இல்லை. சிலர் அறப்பா நகரின் அகழ்வாய்வுகளில் புரவிகளின் எலும்புக் கூடுகள் கிடைத்தன என்று கூறு வதையும் ஏற்க இயலாது. எவ்வாறெனில், புரவிகள் மாந்தப் பயன்பாட்டிற்கு வந்தது கி.மு. 1700 ஆண்டுகளில்தான் என ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர்.

பல ஆய்வாளர்கள், சிந்துவெளியில் புரவிகள் இருந்ததற் கானச் சான்றுகளைச் கொடுத்து விட்டால், சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே என நிறுவி விடலாம் என்று நினைக்கின்றனர். அதற்கு மாறாக, சிந்து வெளியில் புரவிகளே இருந்திருக்கவில்லை யென எதிர் அணியின் மல்லுக் கட்டு கின்றனர். சிந்து வெளியில் ஆரியருடை நிலைப்பாடு புரவியி னால் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை. இயற்கையின் படைப்பில் உலகெங்கும் புரவிகள் இருந்தன என உயிரியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அக்கண் ணோட்டத்தில் இந்தியவிலும் புரவிகள் இருந்தன. வெப்ப நாட்டுப் புரவிகள் குட்டையாக விருந்தன. அவை, விரைந்து செல்லப் பயன்படுவதில்லை. அதன் காரணமாகவே மேலை நாட்டுப் புரவிகள், அவை உயர்ந்தும் வலிமையுடனும் அறியப்பட்ட தால், இந்தியாவில் இறக்கு மதி செய்யப்பட்டன. அவைகளும் இந்தியாவின் வெப்பத்தைத் தாக்குப் பிடிக்க இயலாமல் இறந்துபட்டன. பண்டைத் தமிழ் மன்னர்கள், மேலை நாட்டுப் புரவிகளுக்கென ஏராளமான தொகைகளைச் செலவிட்டனர். தமிழ்வழக்குப்படி "ஆனை விலை, குதிரை விலை" என்ற சொல் உரை இவ்வாறு தோன்றியது. எதிர் காலத்தில் சிந்து வெளியில் புரவிகள் பற்றிய தடயங்கள் கிடைத்தால் கூட, அது ஆரிய நாகரிகத்துக்குச் சான்றாக அடையாது. எனவே, ஆரியரின் இந்திய வருகை, கி.மு. 1400 ஆண்டுகள் எனக் கூறலாம்.

ஆரியர் பற்றி ஆரியர் சார்புடையோர் கண்ணோட்டம்:

ஆரியர்கள், மக்களில் முதல் குடியினரே என்பதை ஆரியரல்லாத மக்களில் பெரும்பாலோர் முற்காலத்தில் ஏற்றுக் கொண்டனர், தற்காலத்திலும் சிலர் ஏற்றுக் கொண்டு வருகின்றனர். குறிப்பாகத் தமிழ் நாட்டில், சைவப் பிள்ளை மார், ஆரியத்தலைமையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள். ஆலயங்களில் சமற்கிருதத்திலேயே மந்திரங்கள் ஓத வேண்டும் என்றும், அதையும் பிராமணர்களே செய்ய வேண்டும் என்றும், தமிழ் மந்திரங்களை ஆலயங்களில் புகுத்தக் கூடாது என்றும், பிராமணர் அல்லாதாரை அர்ச்சகர்கள் ஆக்கக் கூடாது என்ற கருத்தையும் கொண்டவர்கள். இவர்களை "சத்சூத்திரர்கள்" என சிறப்புப்பட்ட மளித்து பிராமணர்கள் போற்றுகின்றனர். சத்சூத்திரன் என்றால், அடிமைகளில் தலையான அடிமை

என்று பொருளாகும். தமிழ் நாட்டிலுள்ள ஆதீனங்கள் அனைத்தும், அவர்களின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன. சைவப் பிள்ளைமார் தவிர்த்த பிற சாதியார் எவரும் ஆதீனத் தலைமைக்குத் தகுதியற்றவர்கள் என மரபுச் சட்டம் கூறுவதாக தெரிவிக்கின்றனர்.

தொடக்கத்தில் ஆரியர்கள் சிந்து வெளி ஆற்றங்கரையில் குடியேறிய போது, அங்கு வாழ்ந்திருந்த இந்தியர்களின் (தமிழர்கள்) வாழ்க்கைத் தரம், ஆரியர்களின் தரத்தினும் உயர் வானதாக இருந்தது. நாட்டுப் புறங்களும் நகரங்களும் செல்வச் செழிப்பில் வளர்ந்திருந்தன. வேளாண்மையும் தொழில்களும் வாணிகமும் சிறந்திருந்தன. முற்றிலும் மாறுபட்ட சூழலில் இருந்த இந்தியாவை ஆரியர் விரும்பினர். கால் நடைகளை வளர்த்தல் என்ற தொழிலையும் தொடர்ந்தனர். தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை, பண்டமாற்று முறையில், ஆனைந்தைக் கொடுத்து, தவசங்களைப் பெற்றனர். இந்திய மொழியையும் கற்றனர். ஒரு சில நூற்றாண்டுகளில், இந்திய மக்களோடு இரண்டறக் கலந்தனர். தங்களது மேய்ப்புத் தொழிலைக் குறைத்துக் கொண்டனர்.(ஆரியரின் கால் நடைகளை விரித்திறன் என்ற மன்னன் கவர்ந்து சென்று குகையினில் அடைத்த செய்தியை இரிக்கு வேதம் கூறுகிறது.)

இந்தியர்கள், தங்கள் முன்னோர் வகுத்த வழக்காறுகளை உறுதியாகப் பின்பற்றி வருவதை உணர்ந்த ஆரியரிகள், இந்தியர்கள் வணங்கி வந்த தெய்வங்களையே வழிபடத் தொடங்கினர். (ஈத்தியர்களுக்கென்று சமயம் என்ற ஒன்று இருந்ததில்லை என்றும் அங்கு குடியேறிய வெளி நாட்டவர் வணங்கிய தெய்வங்களையே தாமும் வணங்கியதாக ஈத்தியர் வரலாறு தெரிவிக்கின்றது.) நான்கு நிலத்துக் கேற்ற கடவுள்களை வழிபட்டு வந்த இந்தியர், ஐம்பூதங்களையும், எண்ணற்ற நாட்டுப்புறத் தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர். இந்தியர்கள் வழிபட்டு வந்த தெய்வங்களின் பட்டியலை இரிக்கு வேதத்தில் காணலாம். ஏற்கனவே தங்களது தாய் நாட்டில், காளையையும் பசுவையும் வணங்கி வந்தனர். இந்தியாவில் காளையை சிறப்புக்குரிய தெய்வமாக வணங்கி வருவதைக் கண்ட ஆரியர், பசுவை தங்கள் வணக்கத்துக் குரிய தாக்கிக் கொண்டனர். இந்தியர்களிடம் வழக்கிலிருந்த ஏராளமான தொன்மக்கதைகளை, ஆரியர் கேட்டறிந்தனர். இக்கதைகளையே பிற்காலத்தில்

மேலும் மெருகேற்றி அத்தொன்மக் கதைகளைக் கூறியவந்த வர்கள் தங்கள் முன்னோர்களே என்று மக்களை நம்ப வைத் தனர்.

இந்திய மக்களின் வாழ்க்கை முறைகளுக்கு மாறுபட் டிருந்த ஆரிய நடை முறைகளால், இந்திய மக்கள் ஆங்காங்கே, ஆரியர்களை எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வாறான பகை உணர்வு மென்மேலும் வளரத் தொடங்கிய நிகழ்வுகளை, இரிக்கு வேதம் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றது. இந்தி யர்கள் வழிபட்டு வந்தர் தெய்வங்களின் மழைக் கடவுளான இந்திரனை, ஆரியகள் போற்றத் தொடங்கினர். மருத நிலக் கடவுளாக, இந்தியர்களால் வழிபடப் பட்டு வந்த இந்திரன், கால் நடைகள் உண்பதற்கான மழையைத் தந்து, பயிர் பச்சைகளைச் செழிக்கச் செய்வான் எனவும் நம்பினர். மேலும் தீ, காற்று, வானம், நீர், நிலம் ஆகியவற்றோடு பல்வேறு தேவதைகளையும் வழிபட்டனர். ஆரியர்கள் வழிபட்ட கடவுளரின் பெயர்கள் இரிக்கு வேதத்தில் பதிவு செய்யப்பட் டுள்ளன. அக்கால ஆரியர்களின் வாழ்க்கை முறை, இந்திய மக்களோடு எவ்வாறு ஒற்றுமைப்பட்டது, முரண்பட்டது என்ற செய்திகளை, இரிக்கு வேதம் தெளிவாக விளக்குகின்றது.

ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிய காலத்தில், இந்திய மக்களிடம் ஒரு சமய நம்பிக்கையே இருந்தது. அச்சமயத் துக்குப் போட்டியாக எந்தச் சமயமும் உருவாகவில்லை. மேற்காசியாவில் மோசே என்பான், எபிறேய மக்களுக்கான தனிச்சமயத்தை உருவாக்குவதற்கு முன்பு, அந்நாடுகளில், சமயத்தின் பேரால் எந்தப் பூசல்களும் நிகழ்ந்ததாக வரலாறு கூறவில்லை. மோசேயின் காலத்துக்குப் பிறகே, மேற்காசி யாவில் சமயப் பூசல்கள் வெடித்தன. (கி.மு. 1250 ஆண்டு களுக்குப் பிறகு என்க). அதே நிலையை இந்தியாவிலும் காண லாம். ஆரியர்கள் குடியேறிய காலத்தில், இந்தியாவில் சமயப் பூசல்கள். எதுவுமில்லை. மக்கள் ஒரு சமயத்தையே (அது தமிழர் சமயமே என்பதை, ஆசிரியரின் தமிழர் சமயம் என்ற நூலில் காண்க) பின்பற்றி வந்தனர்.

ஆரியரின் வருகைக்குப் பின்னர், தமிழர் சமயமாகிய இந்திய சமயத்தை, ஆரியர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். அதன் தொடர்ச்சியாகப் பல் வேறு சடங்குகளைத் திணித்தனர். விலங்குகளைக் கடவுளருக்குக்

காவு கொடுக்கும் நடை முறை தொன்று தொட்டு இந்தியாவில் நடை முறையில் இருந்தது. அந்த நடைமுறையை ஆரியரும் பின்பற்றினர். ஏராளமான விலங்குகள் ஆரியரின் சடங்குகளில் காவு கொடுக்கப்பட்டன. சிந்துவெளிப் பகுதிகளில், வானு யர்ந்த கோபுரங்களைக் கொண்ட கோயில்கள் இருந்ததற் கானச் சான்றுகள் இதுவரையிலும் கிடைக்க வில்லை. இதனால் மக்கள் சமய வழிபாட்டு முறைகளில் முழுமையாக ஈடுபடவில்லை எனக் கூற இயலாது. தமிழர்களின் தாயகமான குமரிக்கண்டத்தில், வானுயர்ந்த கோயில்களைக் கட்டி அவர்கள் வழிபட்டிருக்க வேண்டும். அக்கோயில்கள் இயற்கையின் சீற்றங்களால் அழிந்துபட்டதை அறிந்திருந்த தமிழர்கள், வருங்காலகளில் உயரமான கட்டிடங்களைக் கட்டுவதைத் தவிர்ப்பது நல்லது என உணர்ந்திருக்க வேண்டும். சிந்துவெளியில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகள் கூட அதற்கான காரணங்களாக இருக்கலாம். (தற்காலத்தில் சப்பானியரின் நில அதிர்வுத் தற்காப்பு நடவடிக்கைகளை ஒப்பு நோக்குக). எனவே, உயரம் குறைந்த கோயில்களை அவர்கள் உருவாக்கியிருக்க வேண்டும். (அகழ்வாய்வு செய் பவர்கள், கட்டிடத்தின் அடித்தளத்தின் ஆழத்தைக் கொண்டே கட்டிடத்தின் உயரத்தை உறுதி செய்கின்றனர்.) எனவே, சிந்து வெளியில் அறியப்பட்ட கோயில்களைக் கூட ஆய்வாளர்கள் குடியிருப்புகளாகக் கருதி இருக்கலாம்.

கோயில்களுக்கும் வீடுகளுக்கு வேறுபாடுகள் தெரியப் படாமல் இருந்திருக்க வேண்டும். ஆரியர்கள், தங்களுக் கென எந்த வழிபாட்டு இடங்களையும் கட்டிக் கொள்ளவில்லை. அவர்களது கொள்கைப்படி, முழுமுதற் கடவுளாக எவரையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. மேலும் இலிங்க வழிபாடு களை நடைமுறைப் படுத்தி வந்த இந்தியர்களின் சமய உணர்வு களிலிருந்து ஆரியர்கள் மாறுபட்டிருந்தனர். தொன்று தொட்டு கல்லை வழிபட்டு வந்த தமிழர்களின் நடைமுறை, மேற்காசி யாவின் அனைத்து நாடுகளிலும் அறியப்பட்டிருந்தது. இலிங்க வழிபாடு என்று பிற்காலத்தில் அதற்குப் பெயர் சூட்டப் பட்டது. திறந்த வெளிகளில், ஆரியர்கள் சமயச் சடங்குகளை நிகழ்த்தினர். வடக்கு மெசபத் தோமியாவின் அனதோலியா (Anatolia) வே, ஆரியரின் தாய்மண் என்ற அளவில், அங்கு நடைமுறையில் இருந்த சடங்கு முறைகளோடு, இந்திய முறைகளையும் ஆரியர்கள் இணைத்துக் கொண்டனர். தமிழ்ப்

பூசாரிகளின் சடங்கு முறைகளும், அன தோலியச் சடங்கு முறைகளும் இணைந்ததே ஆரியச் சடங்கு முறைகள் எனலாம்.

தீயை வழிபட்டவர்கள் தமிழர்களே. தீ என்ற தமிழ்ச் சொல்லில் இருந்தே கடவுளைக் குறித்த பல்வேறு சொற்கள் தமிழில் விரிந்தன. அவை உலக மொழிகளிலும் அறியப்படு கின்றன. எனவே, தீயை வணங்கும் முறையை அறிமுகம் செய்தவர்கள் ஆரியர்களே என்பதற்கான சான்றுகள் எவையும் இல்லை. யூத சமயத்தின் பல்வேறு குறிப்புகளிலிருந்து கடவுள் தன்னை தீப்பிழம்பாகவே, மாந்தனுக்குக் காட்டினார் என்பதை அறியலாம். குண்டத்தில் நெருப்புவார்த்து அதில் நெய்யூற்றி வழிபடுவ தென்பது, தமிழரின் சடங்கு முறையே. ஆரியரின் தொடக்ககால அவ்வேள்விகளில், ஏராளமான விலங்குகள் வெட்டி எரிக்கப்பட்டன. இந்நிகழ்வுகள் எதிர் மறையான வினைகளைத் தோற்றுவித்தன. விலங்குளை வெட்டிக் காவு கொடுப்பதை நிறுத்த வேண்டும் என தமிழ்ச் சிந்தனையாளர்கள் வலியுறுத்தத் தொடங்கினர். தமிழர்களும் விலங்குக் காவுகளை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தினர். இதற்கு மக்களிடம் வரவேற்பும் இருந்தது. மேலும் ஆரியர் களுக்கு வேள்விகளுக்காக அளிக்கப்படும் தொகைகளும் கூடு தலாயிருந்தன. சுருக்கமான செலவில் கடவுளை வழிபட்டவர் களுக்கு, ஆரிய சடங்குகள் பெருஞ் செலவைத் தோற்றுவித்தன. ஒரு வேள்வியில் கிடைத்த வருமானம் ஓராண்டிற்கு அவர் களுக்குரிய வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகட்டும் வகையில் இருந்தது. செல்வர்களே வேள்விகளைக் செய்ய முன் வந்தனர். செல்வர்களுக்கு, வேள்விகள் செய்வதால் ஏற்படும் பயன்கள் பற்றி ஆரியர்கள் மிகைப்படக் கூறி, அவர்களைத் தம்பால் ஈர்த்தனர். மழை பொழியவும் வேளாண்மை சிறக்கவும், மக்கள் நலமுடன் வாழவும் ஒவ்வொரு ஊரிலும் ஆண்டுக்காண்டு வேள்விகள் நடத்த வேண்டும் என ஆரியர்கள் கூறிவந்தனர். இப்புதிய நடைமுறையால் ஈர்க்கப்பட்ட சிலர், ஆரியருக்கு ஊக்கம் கொடுத்தனர். நாடெங்கும் வேள்விகள் பெருகி, ஏராளமான விலங்குகள் வெட்டப்பட்டதை அறிந்த அறிஞர் களும் அறவோரும் வேள்விகளைத் தடை செய்ய வேண்டும் என்ற நெருக்குதலைக் கொடுத்தனர். கடவுளின் பெயரால் மக்களின் செல்வம் ஆரியர்களால் சுரண்டப்படுவதை எதிர்த் தனர். அனைத்துக்கும் மூலம் கடவுளே என சொல்லப்பட்ட தால், அந்தக் கடவுளே இல்லை என்றும், கடவுள் பேரால்

நடக்கும் கொடுமைகளைத் தொடரவிடக்கூடாது என்றும் வலியுறுத்தினர். இந்தக் கொள்கைக்கு மக்களிடமும் வர வேற்பு கிடைத்தது. அதன் அடிப்படையில் உருவானதே சமண சமய மாகும்.

சமண சமய மென்பது, வடபுலத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டதே. அவர்களை ஆசீவகர்கள் என்று ஆரியர்கள் நையாண்டி செய்தனர். சீவகன் என்றால் வாழ்பவர்கள் என்றும் சீவகர்கள் என்றால் வாழத் தெரியாதவர்கள் அல்லது இறந்துபடுகின்றவர்கள் என்றும் பொருளாகும். தமிழ்ச் சிந்தனையாளர்களுக்கு ஆரியர்கள் வைத்த நக்கலான பெயர் ஆசீவகர் என்பதாகும். நக்கலும் நையாண்டியும் செய்த ஆரியர்கள், ஆசீவகர்களின் தாக்குதல் களை எதிர் கொள்ள இயலாமல் அதிர்ச்சிக் குள்ளாயினர். சமணத்தின் தாக்குதல் களை எதிர் கொள்ள, தங்களது சமயச் சடங்குகளில் பல மாற்றங்களைச் சொய்து கொள்ளலாயினர். விலங்குகளைக் காவு கொடுப்பதை நிறுத்தினர். அவற்றிற்குப் பதிலாக அவியுணவையும், பொரி, சோறு, அவல், நெய், காய் கறிகளையும் வேள்விகளுக்குப் பயன்படுத்தலாயினர். இச் செய்தியை இரிக்கு வேதம் தெரிவிக்கின்றது.

சமணத்தின் தாக்குதல்களைத் தொடர்ந்து, அடுத்து தோன்றிய புத்த சமயம், மேலும் பல நெருக்கடிகளை ஆரியர் களுக்குக் கொடுத்தது. வேள்விகளின் புதிய முறையைப் புகுத்திய பின்பு நிலைமை சரியாகி விடும் என எதிர்பார்த்த ஆரியர்களுக்கு, வேள்விகளே தேவையல்லை என்ற புத்தரின் அதிரடித்தாக்குதல், ஆரியர்களை நிலை குலையச் செய்தது. கடவுள் மறுப்புக் கொள்கையை வலியுறுத்திய புத்தர், ஆரியர் களின் அனைத்து நடவடிக்கைகளும், மக்களை ஏமாற்றிச் சுரண்டும் செயல்களே என்று உரைத்தார். சமணம் தொடங்கி வைத்த மறுமலர்ச்சி, புத்தர் காலத்தில் மேலும் வலுப் பெற்றது. தங்களது கொள்கைகளை மக்களிடையே எடுத்துக் செல்ல, சாதகக் கதைகளை புத்த சமயத்தினர் படைத்தனர். ஏராயமான புத்த சமய இலக்கியங்கள் தோன்றின. சமணமும் புத்தமும், இரு முனைகளில் ஆரியர்களைத் தாக்கின. வட இந்தியாவின் பெரும் பகுதியை இவ்விரு சமயங்களும் தம் வயப் படுத்திக் கொண்டன. இவ்வாறான தாக்குதல்களால் நிலை குலைந்து போன ஆரியர்கள், சமூகத்தில் தங்கள் செல்வாக்கை நிலை

நாட்டப் பெரிதும் போராடினர். ஏறக்குறைய 800 ஆண்டு காலம், ஆரியர்களின் செல்வாக்கு (கி.மு. 700 முதல் கி.பி. 100 வரை) குறைந்து போனது. அதிரடியான மாற்றங்களை மேற் கொள்ள வேண்டிய சூழலுக்கு ஆரியர்கள் தள்ளப்பட்டனர். அது நாள் வரையிலும் கூட, ஆரியர்களுக் கென எழுதப்பட்ட எந்த இலக்கியங்களும் இல்லை. ஆனால் சமண புத்த இலக்கியங்கள் ஏராளமாகப் படைக்கப்பட்டன. அரசுகளும், செல்வர்களும், ஆரியர்களைக் கைவிட்டனர். இடையில் சந்தி ரகுப்தன் காலத்தில் சிறிது எழுச்சியைப் பெற்ற ஆரியர்கள், அசோகன் காலத்தில் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டனர். மௌரியப் பேரரசு புத்த சமயத்தைச் சார்ந்திருந்ததால், ஆரியர் களின் நிலை அன்றாட உணவிற்கும் ஆலாய்ப் பறக்க வேண்டி யதாயிற்று.

பல்வேறு உத்திகளைக் கையாண்ட ஆரியர்கள், இழந்த செல்வாக்கை மீண்டும் பெற வன்முறையிலும், கொலைகள் புரியும் எல்லை வரை சென்றனர். அசோகனின் பெயரனைக் கொன்றனர். தங்களுக்குச் சார்பான ஓர் அரசை கிறித்துப் பிறப்பாண்டுகளின் தோற்றுவித்துக் கொண்டனர். ஏறக் குறைய 800 ஆண்டுகள் புறந்தள்ளப்பட்டிருந்த ஆரியர்களுக்கு, புதிய நம்பிக்கையின் ஒளி, கி.பி. முதல் நூற்றாண்டு முதல் தென்படலாயிற்று. ஓர் ஆரியப் பிராமணனைக் கொண்டு, புத்த சமயத்தை இரு கூறாகப் பிளந்தனர்.[593] புத்தரை கடவுள் பிறப்பாளராகவும் (அவதாரமாகவும்) ஏற்றுக் கொண்டனர். தங்களுடைய மறுபிறப்புக் கொள்கையை புத்த சமயத்தில் திணித்ததோடு, கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டி ருந்த புத்த சமயத்தில், புத்தரையே கடவுளாக்கினர். இதற்கு புத்த சமயத்தில் ஊடுருவிய ஆரியர்களும் துணை புரிந்தனர். புதிய புத்த சமயத்தைக் கொண்டு சமண சமயத்தை எதிர் கொண்டனர். ஏறக்குறைய புதிய புத்த சமயம், ஆரிய மயமாக் கப்பட்டு, ஆரியர்களின் சமயக் கொள்கை களோடு ஒற்றுப் போயிற்று. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு, வேதங்கள் நூல்களாக எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டன. அது முதற் கொண்டு, புத்த சாதகக் கதைகளுக்கு மாற்றாக புராணங்கள், இதிகாசங்கள், சுமிருதிகள் என ஆரிய இலக் கியங்கள் படைக்கப்பட்டன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு, புதிய எழுச்சியுடன் ஆரியம் நடை போடத் தொடங்கியது.

கிறித்து பிறப்பாண்டுகளுக்குப் பிறகு ஈராயிரம் ஆண்டு களாக (இடைக்காலச் சோழர் ஆட்சி 200 ஆண்டுகள் தவிர்த்து) தமிழ்நாட்டைத் தமிழர் அல்லாதவர்களே ஆண்டு வந்துள் ளனர். இடைக்காலச் சோழர்களும் ஆரியப் பிராணர்களின் அறிவுரைகளின் பேரிலேயே ஆட்சியைத் தொடர்ந்தனர். இக்காலத்தில் தான் நாடெங்கும் பிராமணர் குடியிருப்புகளும் சதுர்வேதி மங்கலங்களும் தோற்றுவிக்கப்பட்டன. அனைத்து ஊர்க் கோயில்களிலும் பிராமணார்களே அர்ச்சகர்களாக்கப் பட்டனர்.[594] படிப்படியாக தமிழ்மொழி ஆலயங்களிலிருந்து அகற்றப் பட்டது. சமற்கிருதம் ஆலயங்களில் புகுந்தது. தமிழ் மக்களுக்கு முறையான கல்வி ஈராயிரம் ஆண்டுகளாக மறுக் கப்பட்டது. தொடங்கப் பட்ட பள்ளிகளும், பிராமணர்களுக் கான வேத பாட சாலைகளாக இருந்தன. தன் முயற்சியில் அங்காங்கே ஒரு சிலர் தமிழைக் கற்று புலமை பெற்றனர். தமிழரின் இசை, ஆரியமயமாக்கப்பட்டது. தமிழரின் நாடகத் தமிழ், பரத நாட்டிய மாயிற்று. முத்தமிழும் முடக்கப்பட்டன. கல்வியறிவற்ற தமிழர்களை, சாதிகளின் பேரால் மேலும் பிரித்துப் போட்டனர். விடுதலை உணர்வும், தன் மான உணர்ச் சியும் துளியும் அற்றுப் போன தமிழன், அண்டிப் பிழைக்க வந்த வெளி நாட்டவனுக் கெல்லாம் கை கட்டி ஊழியம் செய்தான். அச்சவுணர்வு தமிழனின் குருதியில் ஊறிப் போயிற்று. சிந்தனையாளர்களாக விருந்த ஒரு சில தமிழரும் ஒடுக்கப் பட்டனர். ஊர்கள் தோறும் பிராமணனே தலைமைப் பொறுப் பேற்றான். கல்வி அவனுக்கு மட்டுமே உரிமையாயிருந்தது. அடுத்தடுத்து தமிழகத்தை ஆண்ட அனைவருக்கும் அறிவுரை வழங்கும் இடத்தில் பிராமணன் இருந்தான். ஆங்கிலேயர்கள் ஈட்சிக் காலத்தில் மாநில அவைகள் தோற்றுவிக்கப்பட்டு, 1920 முதல் தமிழ்நாட்டை, கடந்த 90 ஆண்டுகளாக ஆட்சி செய்த முதலமைச்சர்களில், தமிழன் ஆண்ட காலம், 11 ஆண்டுகள் மட்டுமே தமிழ் நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் தலைமைப் பொறுப்பேற்க, தமிழனால் இயலவில்லை.[495]

வட இந்தியாவைப் பொருத்தவரை, கி.பி. 700 ஆண்டு களுக்குப் பிறகு, ஆங்கிலேயர் ஆட்சிகாலம் வரை, வட இந்தியா வெளி நாட்டவரால் ஆளப்பட்டு வந்தது. எவன் ஆண்டாலும், ஆரியப் பிராமணர்கள் ஆட்சியாளர்களுக்கு அணுக்கமாயி ருந்தனர். இசுலாமிய மன்னர்கள் ஏறக்குறைய 1000 ஆண்டுகள் வட இந்தியாவை ஆண்டனர். அவர்களை இந்திய மண்ணுக்கு

அழைத்ததே பிராமணர்கள் தான் என்பதை வரலாறு கூறுகிறது. முகமது கோரியை வரவழைத்து, வஞ்சகமாக பிரிதிவிராஜ் சவுகானை வீழ்த்தினர். அத்துடன் இந்தியரின் ஆட்சிக்குத் கல்லறை கட்டப்பட்டது. இசுலாமியரின் அரவணைப்பில் வாழ்ந்திருந்த ஆரியர்கள், அடுத்து வந்த ஆங்கிலேயருக்கும் அணுக்க நண்பர்களாயினர். வங்காளத்தின் முதல் நடுவர் மன்றத் தலைவனும் ஆளுநருமாயிருந்த வில்லியம் ஜோன்ஸ் (William Jones) என்பானை தம்வயப்படுத்தி, ஆரிய சமயத்தை இந்து சமயம் என்று பெயர் மாற்றிக் கொண்டு, அதுவே இந்திய சமயம் என்றும் அறிவிக்கச் செய்தனர்.[496] மனு (நீதி) நூலை, இந்தியர்களுக்குத் தீர்ப்பு வழங்கு வதற்கான அடிப்படைக் சட்டங்களாக அறிவிக்கச் செய்தனர். சமற்கிருத மொழிக்கென பல்வேறு கல்வி நிலையங்களை தோற்றுவிக்கச் செய்தனர். அதற்கென ஆங்கிலேயரிடமிருந்து பொருளுதவியும் பெற்றனர். இந்தக் கொடுமைகளையெல்லாம் எதிர்த்துக்கேட்க, வடக்கே எவருக்கும் துணிச்சல் இல்லாமற் போயிற்று. சீக்கியர்களும், ஜாட்டுகளும், யாதவகளும், தாழ்த்தப் பட்டவர்களும், தங்க ளுக்குள் இணைந்துவிடாதபடி, பிராமணர்கள் பார்த்துக் கொண்டனர். மொத்தத்தில் இந்தியர்கள் கல்வியறிவற்ற அடிமைகள் ஆக்கப்பட்டனர். இதுவே, பிராமணர்களின் வெற்றி பற்றிய சுருக்கமான வரலாறாகும்.

இனி ஆரியரின் சமயத்தாக்கங்கள் இந்தியர்களை எவ்வாறு கட்டுப்படுத்தியது என்பதைப் பார்க்கலாம். ஆரிய வேதங் களைக் கற்ற பிராமணரல்லாத இந்தியர்களில் ஒரு சிலரே, ஆரிய சமயத்துக்குப் பாதுகாவலராக இருந்தனர். கடந்த கால ஆரியரின் வரலாற்றை அறியாத அவர்கள், சமய நம்பிக்கை களில் தங்கள் ஈடுபடுத்திக் கொண்டு, ஆரிய வேதமே உயர்ந்த வேதம் என நற்சான்றுகளை வழங்கினர். தமிழகத்தில் வாழ்ந் திருந்த ஆரியச் சமயச் சார்பாளர்கள், இரிக்கு வேதத்தை முதன் முதலாக தமிழில் மொழி பெயர்த்து, அவ்வேதக் கருத்துகளை விளக்கினர். தமிழர் சமயங்களில் காணப்படாத அரிய, உயர்ந்த கருத்துகளும், சிந்தனைகளும், வேதங்களில் பொதிந்து கிடப்பதாகப் பரப்புரை செய்தனர். அவர்கள் பார்வையில் திரட்டப்பட்ட செய்திகளின் தொகுப்புகளை அடியிற் காண லாம்.

"உலகில் தற்போது பெரும்பாலான மக்களால் கடைப் பிடிக்கப்பட்டு வரும் சமயங்கள் எட்டு. அவை ஜாரதுரஷ்டிரம் (ஆரியம்), புத்தம், சமணம், சைவம், வைணவம், சீக்கியம், இசுலாம், கிறித்துவம் எனப்படும். முன்னவை ஆறும் வேதக் கொள்கைகளை (ஆரியத்தை) அடிப்படையாகக் கொண்டவை. பின்னவை இரண்டும் யூத சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. யூத சமயம் என்பது, ஆரியதர்மத்தை அடிப் படையாகக் கொண்டதே."[597] - சென்னை, இராயப்பேட்டை, வேதப்பிரவசன மந்திரத்து சிவத்தியாநா நந்த மஹர்ஷி, 4.8.1933, ரிக்வேத ஸம்ஹிதை என்ற நூலின் முன்னுரையிலிருந்து.

மகரிஷி ஒரு தமிழர்; துறவியுமாவார்; சமற்கிருதம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் புலமை மிக்கவர். தமிழில் கவிபாடும் ஆற்றலும் கொண்டவர். இப்பெருமகனார் கூறுவ தென்னவென்றால், "உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் ஆரியத்தினின்றோ அல்லது ஆரியக் கொள்கையினின்றோ பிறந்தவை," என்பதே. சைவம், வைணவம் உள்ளிட்ட சமயங் களும் ஆரியத்தினின்றே பிறந்தன என்பது அவர்தம் கூற்று. சைவத் திருப்பதிகள் 108 என்பர். அவற்றில் 96 திருப்பதிகள் தமிழ் நாட்டில் தான் உள்ளன. சைவத்திற்கான தலைப்பதி, தில்லை என்று கூறுவர். வைணவத்துக்கான தலைமை இடம், திருவரங்கம் என்பர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழர் களே. பன்னிரு திரு முறைகளும் நாலாயிரத் தேவப் பனுவல் களும் தமிழில்தான் உள்ளன. உலகின் மிகச் சிறந்த மெய்யியல் நூல்களில் ஒன்றான சிவஞான போதம் தமிழில் தான் உள்ளது. மகிரிஷி எந்த அடிப்படையில் சைவமும் வைணவமும் ஆரியத் தினின்று பிறந்தன எனக் கூறுகிறார் என்பது விளங்கவில்லை.

ஆரிய தர்மம் என்பது யாது?

உடலை வறுத்தி தவம் மேற் கொள்வதை விட, ஆன்மீகத் தைப் பற்றி நிற்பதே ஆரிய தர்மம் என்று சொல்லப்படுகின்றது. ஆன்மீகம், செயல் (கர்மம்), அறிவு (ஞானம்) என்றவாறு இரு பிரிவுகளைக் கொண்டது. செயல் வழியென்பது உடலை வறுத்தித் தவம் நோற்பது. அறிவு வழி யென்பது, நோன்பு களைத் தவிர்த்து, மந்திரங்கள் வழி நிற்பது. முதல் வழியைப் பின்பற்றியவர் அசுரர் என்றும், இரண்டாம் வழியைப் பின்பற் றியவர் தேவர் என்றும் சொல்லப்படுகிறது. இதன் மூலம் தேவரும் அசுரரும் ஆரியரே என்ற கருத்து நிலை நிறுத்தப் படுகிறது.

தேவம், சுரம் ஆகிய இரண்டு சொற்களும் தமிழ்ச் சொற்களே. இவை யிரண்டுமே செம்மையைக் குறிப்பன. அதாவது சிவப்பைக் குறிப்பன.

அசுரம் என்பது கறுமையைக் குறித்தது. சுரம் = செம்மை; அசுரம் = கறுமை.

இதன் மூலம் ஆரியர்கள் சிவத்தத் தோலை உடையவர்கள் என்றும், அசுரர்கள் கறுத்தத் தோலை உடையவர்கள் என்பதும் விளங்கும்.

கறுமை என்றுமே தமிழர்களின் நிறமாயிருந்தது.

இரிக்கு வேதம் தேவர்களைப் போற்றுவதைக் காட்டிலும் அசுரர்களையே பெரிதும் போற்றுகிறது. ஆரியர்கள் அறிவு வழியைக் கொண்டவர் என்பதை உறுதி செய்துள்ளனர்.

அசுரர்கள் நோன்பிருத்தலை சிறப்பெனக் கருதுபவர்கள்.

எனவே கொள்கை அளவிலேயே இவ்விரு வகுப்பாருக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன.

இரிக்கு வேதம் அசுரர்களையே போற்றுவதால், அசுரர் களும் ஆரியத்தினின்று பிரிந்தவர்களே என பிற்காலத்தில் சொல்லிக் கொண்டனர். அதனால் பிற்கால ஆரியர்கள், அறிவு வழியோடு, நோன்பு வழியையும் கடைப்பிடிக்கத் தொடங் கினர். உடலை வறுத்தாத அறிவு வழியே சிறந்தது என்று கூறிவந்த ஆரியர்களின் மனமாற்றத்துக்குக் காரணம் வேதம் அசுரர்களைப் போற்றியதே.

வேதத்தில் சொல்லப்படும் இந்திரன், வாயு, அசுவினி, தீ, வாரணன், மித்திரன், குத்திரன் ஆகியோரெல்லாம் அசுரர்களே.

இவ்விரு வழிகளையும் இணைத்துச் சொல்லப்பட்டது தான் "வைதீக தர்மம்" எனப்பட்டது. இதன் மூலம், தமிழரின் சடங்குகளையும் வணக்க முறைகளையும் ஆரியர்கள் ஏற்றுக் கொண்டனர் என்பது தெளிவாகின்றது. வைதீகத்தை விளக் குவன புராணங்கள் எனப்பட்டன. இந்த வைதீக தர்மத்தை நிலை நாட்டும் வகையில் ஆகமங்கள் எழுதப்பட்டன.

ஆகமங்கள் எனப்படுவது கோயில் கட்டுவது, பூசைகள் செய்வது, மந்திரங்கள் ஓதுவது என விரியும். இவ்வாறான ஆகமங்கள், வணக்க முறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விதிகளாகக் கூறுவதாகும்.

ஆகமம் என்பதே தமிழ்ச் சொல்லாகும். ஆகம் என்ற சொல் நெஞ்சாங் கூட்டைக் குறிக்கும். ஆலயம் என்பதே, மாந்த

உடல் போன்று உருவகம் செய்யப்பட்டது. அம்மாந்த உடலில் மார்புப் பகுதியே சிறப்புக் குரியதாகக் கருதப்பட்டதால், ஆலயம் தொடர்பான அனைத்து விதிகளும் ஆகமம் என்று சொல்லப்பட்டன.

புராணங்கள் 18 என்று கருதப்படுகின்றன. இந்த 18 புராணங்களின் உட்பொருளும், சூழல்களும், அவை நடை பெற்றதாகக் கருதப்படும் இடங்களும், தமிழ் நாட்டை முதன்மைப் படுத்துகின்றன. சிவபுராணமும், ஸ்கந்த புராணமும் அவைகளில் அடங்கும். சிவனும் முருகனும் ஆரியக் கடவுளர் என்பதை எவரும் ஏற்கப் பொவதில்லை.

புராணங்கள் வைதீக தர்மத்தை விளக்குவதற்காக எழுதப் பட்டவை என்று கூறுவதும் பொருத்தமானதன்று. ஆரியத்தை எதிர்த்து மக்களின் வரவேற்பைப் பெற்ற புத்த சாதகக் கதை களுக்கு மாற்றாகவே புராணங்கள் எழுதப்பட்டன என்பதும் கூட சரியான சொல்லாகாது. மொழி மாற்றம் செய்யப் பட்டன. புத்த சாதகக் கதைகளுக்கு மாற்றுக் கதைகளாகச் சொல்வதற்கு ஆரியர்களிடையே எந்தக் கதைகளும் இல்லை. எனவே, தமிழில் இருந்த தொன்மக்கதைகளை, சமற்கிருதத்தில் மொழிமாற்றம் செய்து கொண்டனர். இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டது கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே, கி.மு. 200 ஆண்டுகளுக்கு முன்பு சமற்கிருதத்துக்கு வரிவடிவம் அறிமுகப்படுத்தப்படவில்லை. அவை வாய் மொழியாகவே சொல்லப்பட்டு வந்தன.

ஆகமங்கள், கோயில் கட்டும் முறைகளையும், கோயில் வழிபாட்டு முறைகளையும் விளக்குவன. கோயில்கள் கட்டக் கூடிய பொறியியல் அறிவு, ஆரியர்களுக்கு இருந்ததற்கானச் சான்றுகள் இல்லை. இவர்கள் சிந்துவெளிப் பகுதிகளில் எந்தக் கோயிலையும் கட்டியதாகத் தகவல்கள் இல்லை. தங்கள் வேள்விகளைத் திறந்த வெளிகளிலேயே அவர்கள் நிகழ்த்தி வந்தனர். தமிழில் அறியப்பட்டிருந்த தொன்மக் கதைகள் புராணங்களாயின. ஆலய விதிகள் ஆகமங்கள் ஆயின. இந்த மொழி பெயர்ப்புகள் கூட சரியாகச் செய்யப்பட்டனவா என்ற கேள்வியும் எழுகின்றது. தமிழில் சொல்லப்படாத பல்வேறு செய்திகளை, அவை பகுத்தறிவுக்கு பொருந்தாத நிலையிலும், புராணங்களில் இணைத்துக் கொண்டிருக்க வேண்டும். எவ்வா றெனில் முறையற்ற பாலியல் நுகர்வுகள் தொடர்பான செய்தி

களைத் தமிழ் இலக்கியங்களில் காண முடிவதில்லை. குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்பை கருத்தில் கொண்டும், ஒழுக்க நெறிகளைப் பின்பற்றியுமே தமிழ் இலக்கியங்கள் எழுதப்பட்டன. ஆனால் மொழிபெயர்க்கப் பட்ட புராணக்கதைகளில் ஏராளமான பாலியல் நெறிப்பிறழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் திருவல்லிக்கேணி பார்த்த சாரதித் திருக்கோயிலில் கண்டெடுக்கப்பட்ட ஓலைச் சுவடிகளில், ஆகம விதிகள் தமிழில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டறிந்தனர். அக்கட்டிலேயே, அதன் சமற்கிருத மொழிபெயர்ப்பும் முற்றுப் பெறாமல் இருந்துள்ளது. அம்மொழி பெயர்ப்பை தமிழ் மூலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், சமற்கிருத மொழி பெயர்ப்பில் ஏராளமான தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதனை மொழி மாற்றம் செய்தவர், அப்பணியை முற்றிலுமாக முடிக்கவில்லை.[598] அதற்குள் இறந்துவிட்டார் போலும். இந்த ஒரு நிகழ்வே, மற்ற மொழிமாற்ற நிகழ்வுகளுக்குச் சான்றாக உள்ளது. மொழி மாற்றம் செய்யப்பட்டவுடன், தமிழ் மூலத்தை அழித்திருக்கிறார்கள். அருள் மிகு பார்த்தசாரதியின் அருளால், தமிழ் மூல ஆகமம் தப்பிப் பிழைத்து விட்டது என்றே சொல்ல வேண்டும்.

தேவ சாதி ஆரியருக்கு பிருகஸ்பதி, பிருகணாஸ் பதி, பிரசாபதி ஆகியோர் ஆரியர்களாம். அசுர சாதி ஆரியருக்கு பிருகு, சுக்கிரன், துவட்டன், விசுவரூபன் ஆகியோர் ஆரியர்களாம்.[599] அசுர சாதி ஆரியர்களின் பெயர்கள் எல்லாம் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.

உரைகளை விரித்துப் பெருக்கிச் சொன்னவன் பிருகு எனப்பட்டான்

சொக்கு - சொக்கன் - சொக்கிரன் - சுக்கிரன் என்றானது வெள்ளியைக் குறிக்கும்.

மாழங்களைத் துவட்டிக் கருவிகளைச் செய்த கம்மாளன் துவட்டன் எனப்பட்டான்.

விசும்பு உருவன், விசுவரூபன் எனப்பட்டான்.

பிருகு - முத்தமிழில் இயற்றமிழைக் கையாண்டவன்.

வெள்ளி - அந்த இயற்றமிழுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவன், விரிவுரையாளன்.

துவட்டன் - தமிழரின் பொறியியல் அறிவை விளக்கியவன்.

விசுவரூபன் - வானியல் அறிஞன்.

பெயர்களின் உட்பொருளிலேயே, அரசு சாதியினரின் அறிவுத்திறன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சமற்கிருத, வேத அறிஞர்கள் ஆரியரின் கொள்கைகளில் இருந்த குறைபாடுகளை உணர்ந்திருந்தனர். அவை தவறானவை என்றும் கொண்டனர்.

சமயச் சடங்குகளில் கொல்லப்பட்ட விலங்குகளைத் தடுத்து நிறுத்துமாறு கூறி, அதனை கொள்கையாக வடித்தது புத்த சமயம் என்றும், ஆரியரின் சாதிப் பிரிவினையைக் கண்டிக்கத் தோன்றியதே சமண சமயம் என்றும், ஆரியக் கொள்கைகளின் தவறுகளை, அதன் சார்பாளர்களே ஏற்றுக் கொள்கின்றனர். ஆரிய சமயத்தைச் சீர் திருத்தம் செய்யவே புத்த சமண சமயங்கள் தோன்றின என்ற கருத்தை ஏற்பவர்கள், புத்த சமண சமயங்களின் மீது ஆரியம் தொடுத்த தாக்குதல்கள் பற்றிக் கூறுவதில்லை. புத்த சமண சமயங்கள் பிற்காலத்தில் ஆரிய எதிர்ப்பை கைவிட்டன என்றும் ஆய்வாளர்கள் கருது கின்றனர். புத்த சமயம் ஏற்றுக் கொண்ட பாழி மொழியால், சமற்கிருதத்தின் வளர்ச்சி தடைப்பட்ட தாகவும் கருதுகின் றனர். பாழி என்பதை, பாலி என்று கூறுவதற்கான காரணம் யாதெனில், வடக்கித்திய மொழிகளில் ழகர ஒலிப்பு இல்லை என்பது தான். பாழி என்பது வெறுமையைக் குறிப்பதாகும். மாந்தன் எந்தப் பற்றும் இன்றி வெறுமையைக் கைக்கொள்ள வேண்டும் (emptyness) என்ற அடிப்படையில், பாழி என்ற சொல் வைக்கப்பட்டது.

ஆரியத்துக்கென ஆகமங்களும், புராணங்களும் அறிமுகம் செய்யப்பட்ட நிலையில், அவற்றில் கருத்து வேறுபாடு கொண்டு முரண்பட்ட சிலர், அசுர மார்க்கத்தையே வலியுறுத்தினர். இதனைக் கண்டிக்க எழுத்து நூலே மீமாம்சம் என்று சொல் லப்படுகின்றது. இது வைதீக தர்மத்தை வலியுறுத்துவதாகச் சொல்லப்பட்டது. இதிலும் கூட முரண்பாடு உண்டு. மீ + மாம்ச என்பதற்கு உயர்வான உடல் என்பதே பொருளாகும். உடல் தொடர்பானவை லோகாய்தம் என்ற பகுத்தறிவு வழியைக் காட்டுவதாகும். அசுர மார்க்கம் தவறானவை என்பதை வலியுறுத்தவே உபநிஷத்துகள் தோன்றின என்பது ஆரியர் வரலாறு. கர்ம மார்க்க மாகிய அசுர மார்க்கத்தை

ஒழிப்பதற்கு உத்தர மீமாம்சம் எழுதப்பட்டதாகக் கூறுவர். கடவுள் இல்லை என்று கூறும் உலகாய்தம் என்ற நூலையும் கூட, ஆரியர்களே எழுதியதாகக் கூறுவதுதான் முரண்பாடு களின் உச்ச நிலையாகும். ஆரியருடைய சமய வரலாற்றை உற்று நோக்குபவர்களுக்கு, ஒரு கருத்து தெளிவாக விளங்கும். அது யாதெனில் தமிழரின் வணக்க முறைகளையும் தமிழ் மரபுகளையும் ஆரியத்தில் கலக்க விடாமல் தடுப்பது தான் எனலாம். இப்போராட்டத்தில் தமிழ் மரபுகளை முற்றிலுமாக ஆரியர்களால் களைய இயலவில்லை. இறுதியில் தமிழர் வழியான அசுர மார்க்கத்தையும், ஆரிய மார்க்கத்தையும் இணைத்து "வேதாந்தம்" என்ற ஒற்றுமைப்பட்ட கொள் கையை (Compromised doctrine) உருவாக்கினர். வேதாந்தம் என்ற சொல்லுக்கு, வேதம் முடிவு பெற்ற காலம் என்பதே பொரு ளாகும். இச்சொல்லைக் கொண்டே, வேதகாலம் என்று ஒன்று இருந்ததாகவும், அது முடிவு பெற்றதாகவும் கூறுகின்றனர். வேதம் முடிவு பெற்ற வேதகாலம் எதுவென்பதை எவரும் விளக்க முன்வரவில்லை.

புத்த சமயக் கோட்பாடுகளையும், சமணக் கொள்கை களையும் அடிப்படைகளாகக் கொண்டே, கிறித்துவ சமயம் மேற்கே தொடங்கப்பட்டது என்பது ஆரியச் சார்பாளர் களின் கருத்து.[600] இது எந்த அளவிற்கு உண்மை என்பதை அவர்களே மெய்ப்பிக்கவில்லை. கிறித்துவமும் இசுலாமும் கூட ஆரிய சமயத்தின் கிளைகளே என்பதையும் வலியுறுத்தி வருகின்றனர். கிறித்துவ சமயம் தனது கொள்கைகளில் மக்களை ஈர்க்க, ஆள்பிடிக்கத் தொடங்கியதாகவும் ஒரு குற்றச் சாட்டைக் கூறுகின்றனர். தலைகளின் எண்ணிக்கையைப் பெருக்க கிறித்துவ சமயம் மேற்கே எந்த உத்திகளைக் கையாண்டதோ, அதே உத்திகளைப் பின்பற்றியே சைவ - வைணவ கூட்டத்திற்கும் ஆள் சேர்க்க முயன்றனர் என்பது ஆரியத் தரப்பு குற்றச் சாட்டாகும்.

சைவ - வைணவச் சமயங்களைப் பிரித்தற்கு, எந்தத் தமிழரும் முன்னிற்க வில்லை என்பதை வரலாறு கூறும். ஆரியச் சமயத்தில் பிடிப்புடன் இருந்தவர்களே ஒன்றாக இருந்த தமிழர் சமயத்தைக் கூறு போட்டனர் என்பது கடந்த கால வரலாறு. துவைதம், அத்வைதம், விசிட்டாத்துவைதம் என்ற முரண்பாடு கொண்ட கொள்கைகளை அறிவித்தவர்

களும் ஆரியப் பிராமணர்களே. இவை மூன்றும் கடவுளை முன்னிறுத்தவில்லையென்பதும், ஆரியர்களையே முன்னிறுத்தி, பிராமணர்களையே கடவுள் தகுதியில் அறிவித்தன என்பதும் வெளிப்படையான உண்மைகளாகும். பரம் பொருளை முன்னி றுத்திய தமிழர் சமயம், பிராமணர்களால் கூறுபோடப்பட்டது. ஆதி சங்கரரும் இராமானுசரும் தமிழகத்தில் ஏற்படுத்திய குழப்பங்கள், இனக் கலவரங்களாகவும் படுகொலைகளாகவும் வெடித்தன. புத்த சமயத்தினரின் விகாரங்கள் கொள்ளையடிக் கப்பட்டன. சமணர்கள் 6000 பேர் கழுவிலேற்றப் பட்டதாக அவர்களே கூறுகின்றனர். இவ்வாறு கழுவிலேற்றப்பட்ட வர்கள் அனைவரும் வடக்கேயிருந்து வந்தவர்கள் அல்லர். அனைவரும் தமிழர்கள். சைவ - வைணவச் சமயங்களுக்கு பிராமணர்களே தலைமைதாங்கினர். தங்களுக்கென ஆள் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பிராமணர்கள், ஆட்கள் கிடைக்காமல் போனதால், தங்கள் சொற்படி நடந்து கொண்ட அனைவரையும் பிராமணர்களாக மாற்றினர். பிராமணர் தகுதி கிடைத்த மகிழ்வில், தமிழர்கள் பூணூலை அணிந்து கொண்டு, அவர்களின் அடிப்பொடி யார்களாயினர். இன்று தமிழகத்தில் அறியப்படும் சிவாச் சாரியார்கள், பட்டாச்சாரியர்கள் அனைவரும் தமிழர்களே.

ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்த ஒரு சில நூற்றாண்டுகளில் இந்தியர் ஆரியர்களுடன் கலந்து போயினர். இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு அறியப்பட்ட ஆரியன் எவனும் தற்போது இந்தியாவில் இல்லை. கிறித்துப் பிறப்பாண் டுகளிலேயே ஆரியர் மறைந்து போயினர். இன்றைக்கு மூல ஆரியக்குருதி உள்ளவர் எவரும் இந்தியாவில் இல்லை. ஆரியர் என்றோ மறைந்து விட்டனர். ஆனால் ஆரியம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உழைப்பில்லாமல் வாழவும், உலக இன்பங் களைத் துய்க்கவும், ஆரியம் என்ற கொள்கை சிலருக்குத் தேவைப்பட்டது. அத்தகைய தன்னலக்காரர்களே தங்களை இன்னும் ஆரியப் பிராமணர் என்று சொல்லிக் கொண்டிருக் கின்றனர். எந்தப் பிராமணனும் ஒரு தொழிலாளியாக, வேளாண்மைக் காரனாக, கருமானாக, கட்டிடத் தொழிலாளி யாக இருந்ததே இல்லை. சேற்றில் கால் வைக்காமல் சோற்றில் கைவைக்கும் தந்திரத்தைக் கற்றவர்கள். பிராமணப் பெண் களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

பிராமணனின் கடமை வேதங்களைக் கற்பதும் மந்திரங்கள் ஓதுவதுமே என்று மனு நூல் கூறுகிறது. இன்று பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்பவரில் எத்துணை பேர் வேதங்களைக் கற்கின்றனர். மந்திரம் ஓதுகின்றனர். வழக்கறிஞராகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், அரசாங்கப் பணியாளர்களாகவும், பெரு முதலாளிகளாகவும் தங்கள் தொழிலை பெருக்கிக் கொண்ட பிராமணர்கள் தான் மனு நூலைக் கடைப்பிடிக்காத குற்றவாளிகள் ஆவர். பிராமணன் ஒதுக்கிய வேதங்களைக் கற்கவும், மந்திரங்களை ஓதவும் பிறரை அவர்கள் விடுவதில்லை. தங்களுடைய தன்னலத்துக்காக எந்த விதியையும் அவர்கள் தகர்த்தெறிபவர்களாகவே உள்ளனர். அவர்களுக்குப் பொது நன்மை என்பதும், மாந்த நேயம் என்பதும் இருந்திருந்தால், மக்களைச் சாதிகளின் பேரால் பிளவு படுத்தியிருக்க மாட்டார்கள். எனவே, ஆரியர்கள் மறைந்து போயினர், ஆரியம் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

"உண்மையில் சைவமே கிறிஸ்துவத்தைப் போன்ற ஸத்புத்திர மார்க்கமாகும். வைஷ்ணவமே இசுலாம் போன்ற மார்க்கமாகும். இந்நான்கு மார்க்கங்களுமே முன்னிருந்த ஆரிய தர்மங்களையும், அசுர தர்மங்களையும், யூததர்மங்களையும் தொலைக்கத் தலைப்பட்டன. பழைய காலத்திலிருந்த சுவர்க்க நரகங்களை மாற்றி கைலாசம், வைகுண்டம், பரமண்டலம் முதலிய சாசுவத லோகங்களை இம்மதங்கள் கிருஷ்டித்தன. வேத மதத்தில் காணப்பட்ட ஸமரஸ பாவனையையும் மோட்சத்தையும் இவை மறைக்கலாயின". - ரிக்வேத ஸம்ஹிதை என்ற நூலின் முன்னுரை.[601]

"துவைத, அத்வைத விகிட்டாத்துவைத் கொள்கைகளை முற்றிலுமாக வேத ஆரியர் புறந்தள்ளுகின்றனர். இவை வேத தர்மத்துக்கு எதிரானவை என்றும் கூறினர். வேதங்களை ஒதுக்கி விட்டு, திருமுறைகள், பிரபந்தங்கள், புராணங்கள் ஆகிய இவைகளை முன்னிறுத்துகின்றனர். இவை வேதங்களுக்கு இணையாகாதவைகளாகும். வேதவித்யார்த்தி, வேத பூஷணம், சுதுர்வேத சாகர புஷணம் என்று தங்களுக்குத் தாங்களே பட்டங்களைச் சூடிக் கொண்டு, வேதங்களை பிழைப்புப் பொருளாக்கித் திரிகின்றனர்." தமிழ்ப் பிராமணர்களைப் பார்த்து ஆரியப் பிராமணர்கள் கூறும் கருத்தே மேலே சொல்லப்பட்டதாகும்.

சமற்கிருதப் பண்டிதர்களை நோக்கி, "வேதத்தில் பல்வேறு தேவதைகள் சொல்லப் பட்டிருக்கின்றார்களே! அவர்கள் எல்லோரும் கடவுள்களா? அல்லது மனிதர்களா அல்லது கடவுள் தன்மை பெற்ற மனிதர்களா" எனக் கேட்டால் அவர்கள் தரும் விடையாதெனில், அத்தேவைதைகள் உருவங் களைப் பெற்றவைகள் அல்லர் என்றும், கடவுளுடைய குணங்களையே அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்றும் விடை தருகின்றனர். இவ்வாறு கேள்வி கேட்பவர்களுக்கு எதிர்க் கேள்வியும் தொடுக்கின்றனர். கிறிஸ்தவ வேதத்தில் வணங்கப்படும் அர்ச்சிய கிஷ்டவர்கள் (புனிதர்கள்) கடவுள் களா அல்லது மனிதர்களா அல்லது கடவுள் தன்மை பெற்ற மனிதர்களா என்று கேட்கின்றனர். ஒரு தவறான கொள்கை யைச் சுட்டிக் காட்டும் போது, மற்றொருவர் கடைப்பிடிக்கும் அதே கொள்கையைப் பொன்றவற்றைச் சுட்டிக் காட்டுவ தென்பது, தாங்கள்தப்பித்துக் கொள்ளக் கையாளும் ஓர் உத்தியாகும்.

ஆரியரும் சமற்கிருதமும்:

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த போது சமற்கிருதம் என்ற ஒரு மொழி இருந்ததா என்பது ஐயத்துக்குரியதே. "கீர்வாணம் என்பது வேதபாஷைக்குப் பெயராகும்.[602] அதனின்றும் விருத்தியடைந்த பாஷையே இப்போது சமஸ் கிருதம் என்று கூறப்படுவது. கீர்வாண இலக்கணத்தை (அதாவது வேதப் பிராதி சாக்கியங்களை அல்லது மந்திர ஒழுங்கை)ப் பின்பற்றியே தமிழ் வளர்ந்தோங்கியது என அறிக." ரிக்வேத ஸம்ஹிதை, முன்னுரை, பக்கம் XIX.

வேதங்கள் சமற்கிருதத்தில் சொல்லப்பட வில்லை என்பதை மகிரிஷி விளக்குகிறார். அது கீர்வாணம் என்ற மொழியில் சொல்லப்பட்டது என்கிறார். கீர்வாணம் என்பது என்ன மொழி? கீழ் வாணம் என்பதே, கீர்வாணம் எனப் பட்டது. வாணம் என்பது பெரியது, தலைமையானது என்ற பொருளைத் தருவது. கீழ்வாணம் என்பது கிழக்கு நாட்டின் தலைமை மொழி என்ற பொருளைத் தருவது. கீர் வாணம் என்பது தமிழ்ச் சொல்லே. (கீழ் + தீ = கீர்த்தி ; மூழ் + தீ = மூர்த்தி எனத் திரியும்.) வாணன் என்பவன் தலைவன்; தலைமைப் பொறுப்பில் உள்ளவன். தமிழ்வாணன், மருதவாணன், முல்லைவாணன் ஆகிய பெயர்களை ஒப்பு நோக்குக. வாணி

பெண்பாற் பெயர். வாணி - தலைவி கலைவாணன் - கலை வாணி. தலையாயது, முதன்மையானது என்ற பொருளில் முதன் மொழியும் வாணம் எனப்பட்டது. ஆகாச வாணி என்ற சொல்லை ஒப்பு நோக்குக. கீர் வாணம் என்பது தமிழையே குறிக்கும். அதனின்று சமற்கிருதம் தோன்றியது என்பது விளங்கும். கீர்வாணம் என்பது என்ன மொழியென்று அறிந் திராத சமற்கிருதப் பண்டிதர்கள், அது தமிழ் மொழியே என அறிந்திருந்தும் அதனை மறைத்த ஆரியப் பண்டிதர்கள், கீர்வாணம் என்ற மொழியைப் பற்றி விளக்கவில்லை. எனவே, வேதங்கள், சமற்கிருதத்தில் சொல்லப்படவில்லை என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

சிந்துவெளியில் தமிழர்கள் குடியேறிய காலம் தொட்டு, கி.மு. 10000 ஆண்டுகள் தொடக்கம் தமிழ் மொழியே பேசப் பட்டு வந்தது. கி.மு. 2000 ஆண்டுகளில் கூட, வட இந்தியாவில் வட்டாரப் பகுதிகளிலும், தமிழ்த் திரிபு மொழிகள் பேசப் பட்டு வந்தன. அக்காலம் வரை வெளிநாட்டவர் எவரும் சிந்துவெளிப் பகுதிக்குள் நுழைய வில்லை என்பதால், தமிழ் மொழியின் தனித்தன்மை பாதுகாக்கப்பட்டு வந்தது. அறப்பா நாகரிகம் முடிவுற்ற போது, மக்கள் பல்வேறு திசைகளிலும் பரவி வாழத்தலைப்பட்டனர். போக்குவரத்தும், செய்தித் தொடர்புகளும் இல்லாதிருந்த அக்காலத்தில், தமிழ் மொழி பல்வேறு மொழிகளாகத் திரிந்து போனது. எனினும் மூலச் சொற்கள் யாவும் தமிழாகவே இருந்தன. ஆரியருடைய வருகையால், தமிழ் மொழி சிதைந்து விடவில்லை. ஆரியரின் வருகைக்காலத்தில் தமிழ் பல்வேறு கிளை மொழிகளாகத் திரிபு படத் தொடங்கியது.

கி.மு. 1000 ஆண்டுகளில், தனித்தமிழ் மொழி பேசப்பட வில்லை எனக் கருதலாம். தமிழினின்றும் கிளைத்த மொழி களில் பிராகிருதம் முதன்மை மொழியாகக் கருதப்படுகிறது. பிராகிருதம் ஏறக்குறைய தமிழ் மொழியே என்ற கருத்தையும் ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். சமற்கிருத அறிஞர் மோனியர் வில்லியம்ஸ் என்பார். சமற்கிருதம் அல்லாத பிற மொழிகள், பிராகிருதம் என அழைக்கப்பட்டதாகக் கூறுகி றார்.[603] க்குரு என்பது மொழியைக் குறித்தும், பிர என்பது, பிற என்றும் அறியப்படுகின்றது. செம்மைப் படுத்தப்பட்ட மொழி சமற்கிருதம் என்றும், பிற மொழிகள் பிராகிருதம் என்றும் சொல்லப்பட்டன என்பது அவரது கருத்து.

பிராகிருத என்ற சொல்லுக்கு மூலம் (original), இயற்கை யானது (natural), சீரானது (normal), இயல்பானது (ordinary), புழக்கத்திலுள்ளது (usual), செம்மைப் படுத்தப் படாதது (unrefined), வட்டாரத்திற்குட்பட்டது (provinvial) தாழ்ந்தவன் (low or vulgar man), பெண்கள் பேசும் கொச்சை மொழி (spoken by the women of inferior characters) எனவிரியும்.[604] எனவே பிராகிருதம் என்ற சொல், இந்தியாவில் சமற்கிருதத்துக்கு முன்னும், பின்னும் இந்திய மக்களால் பேசப்பட்டு வந்த மூல மொழி என்பது தெளிவாகிறது.

பிராகிருத மொழி, சௌரசேனி (Sauraseni), மகராஷ்டிரி (Maharashtri) அபப்ரான்சா (Apabhransa), பைசாசி (Paisaci) என நான்கு மொழிகளாகக் கிளைத்தது என சமற்கிருத அகர முதலி கூறுகிறது. மேற்கண்ட நான்கு மொழிகளுமே, சமற்கிருதம் அளவிற்குத் தரம் வாய்ந்தவைகள் அல்ல என்பது கருத்து. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பிராகிருதம் இந்தியப் பழங்குடி மக்கள் பேசி வந்த சொச்சை மொழி என, சமற்கிருத விளக்கம் கூறுகிறது. (ப.703)

கி.பி.1852 ஆம் ஆண்டில் சமற்கிருத மொழி பற்றி பதிவு செய்யப்பட்ட குறிப்பில், ஆரிய மொழிகள் பல இருந்தன வென்றும், அவைகளில் சமற்கிருதமே மூத்த அக்கையென்றும் ஆங்கிலமே இளைய தங்கை என்றும் சொல்லப்பட்டுள்ளது. இவ்விரு மொழிகளோடு ஆறு ஐரோப்பிய மொழிகளை ஆரியக் குடும்பத்தில் இணைத்தனர். கெல்டிக் (Keltic), எல்லனிக் (Hellenic), இத்தாலியம் (Italic) தென்தோனியம் (Tentonic), சுலாவோனியம் (Slavonic), இலித்து வேனியம் (Lithuanian) என அவை சொல்லப்படும். ஆசிய ஆரிய மொழிகளாக சமற் கிருதம், பிராகிருதம், பாழி, அருத்தமாகதி, பாரசீகத்தின் செண்ட் (Zend), பழைய அக்கமேனியம் (Akkamenian), புஷ்டு (Pushtu) என்பவை சொல்லப்படும்.[605]

மேற்கண்ட மொழிகளை ஆரியக் குடும்பமாக வகைப் படுத்தியவர்கள், இம்மொழி கூற்றுக் கெல்லாம் முன் மொழி யாக, தாய் மொழியாக, எம்மொழி இருந்தது என்பதைக் கூற வில்லை. இவற்றுக்கு முன் மொழிகளாக இரண்டு மொழிகள் இருந்திருக்க வேண்டும் என்பர். அவைகளே மேற்கண்ட மொழிகளின் பெற்றோர் ஆவர். அப்பெற்றோரை, பெயரில் லாப் பெற்றோர் என்றும் (namess parents), அறிய இயலாத

பெற்றோர் என்றும் (unknown parents) குறிப்பிடுகின்றனர். அப்பெற்றோர் மொழி, மைய ஆசியாவின் எங்கோவோர் இடத்தில் பேசப்பட்டது என உறுதியாகக் கூறு இயலா விடினும், பால்க் (Balkh), சோக்தியானா (Sogdiana) மற்றும் ஒக்சுஸ் ஆற்றுப் பகுதிகளில் (River Oxus) பகுதிகளில் பேசப்பட் டிருக்க வேண்டும் என்பர். எனவே, ஆரிய மொழிகளின் பிறப்பிடம் ஐரோப்பாவே என்றும், இந்தியா அல்ல என்றும் கூறி வைத்தனர். இவைகளுக்கான முதன் மொழியை தெரி விக்கவில்லை.

கி.பி. 1732 ஆம் ஆண்டில் ஸ்குளோசர், ஈக்காரன் என்ற மேலை நாட்டு மொழியில் ஆய்வாளர்கள், நோவா பேசிய மொழியினின்றே, இந்திய - ஐரோப்பிய (ஆரிய மொழிகள்) கிளைத்ததாகக் கூறினர். அவர்கள் கூற்றின் முடிவில், நோவா பேசியது என்ன மொழி என்று குறிப்பிடாமல், அதனை முன்மொழி (Proto - language) என்று குறிப்பிட்டனர். இந்த முன் மொழியிலிருந்தே செமிட்டிக், ஆமெட்டிக், இந்திய - ஐரோப்பிய மொழிகள் தோன்றின என்பது அவர்களது கருத்து. ஆரிய மொழிக் குடும்பம் பற்றி மேலே சொல்லப்பட்டுள்ள கொள்கையின்படி, செமிட்டிக் - இந்திய ஐரோப்பிய மொழிகளுக்கிடையே உள்ள வேர்ச் சொற்கள் மாறுந்தன்மை கொண்டவை என்றும் (inflective), வெவ்வேறானவை என்றும் கூறினர். [606] எனவே, ஆரிய மொழிகள் பற்றிய தோற்றம், இதுவரை தெளிவாக்கப்படவில்லை. ஆனால் அடிப்படையில் செமிட்டிக் - ஆரிய மொழிகளிடையே காணப்பட்ட வேர்ச் சொல் விரிவுகளை ஏற்றுக் கொண்டனர்.

எடுத்துக் காட்டாக, செமிட்டிக் மொழிகளில் ஒன்றான அரபு மொழியில் மூன்று உயிர்மெய்கள் சேர்ந்தே ஒரு வேர்ச் சொல்லை உருவாக்குகின்றன என்றும், சமற்கிருதத்தில் ஓரெ ழுத்தே வேர்ச் சொல்லாக அமைந்துள்ளது என்றும் விளக் கினர். க - த - ப (K - T - B) என்று மூன்று உயிர் மெய்கள் இணைந்து வேராகி, அவை எவ்வாறு விரிகின்றன என்பதை எடுத்துக்காட்டினர். சமற்கிருதத்தில் பூ (Bhu) என்ற ஓரெ ழுத்துச் சொல், வேராகி நின்று எவ்வாறு விரிகின்றது என்பதை யும் விளக்குகின்றனர்.

பூ (Bhu) என்ற சமற்கிருத வேர்ச் சொல்லுக்கு, நிலைத் திருத்தல் (to be, to exist) என்றவாறு பொருள் கூறினர். பூ என்ற

வேர், பவ (Bhava) = வாழ்தல்; பாவ (Bhaava) = நிலைத்திருத்தல்; பாவன (Bhavana) = காரணமாயிருத்தல்; பாவின் (Bhavin) = நிலைப்பாடு; பூ அல்லது பூமி (Bhu or Bhumi) = உலகம் அல்லது நிலம்; பூதார (Bhudhara) = நிலத்தை தாங்குதல், மலை; பூ - தார - ஜா (Bhu - dhara - ja) = மலையில் பிறந்த, மரம்; பூ ப (Bhu - pa) = இவ்வுலகைப் பாதுகாப்பவன், மன்னன்; பூ புத்ர (Bhu - putra) = மன்னனின் மகன் ; உத் பூ (Ud - Bhu) = மேலெழுதல், என்றவாறு விளக்கியுள்ளனர். (சமற்கிருத அகராதி, V- XIII).[607]

பூ என்ற வேர்ச் சொல், சமந்கிருத மொழியில் உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளர். பூ என்ற வேர்ச் சொல் தமிழில் இருந்ததை அவர்கள் அறிந்திருக்க வில்லை. 19 ஆம் நூற்றாண்டின் மொழி ஆய்வுகள், சமற்கிருத மொழியையே மூல மொழியேன உறுதி செய்த நிலையில் எடுக்கப்பட்ட முடிவுகளாகும். அப்போதிருந்த சூழலில், தமிழ் மொழி பற்றிய விரிவான ஆய்வுகளை எவரும் மேற்கொள்ளவில்லை. தமிழ் அறிஞர்கள், இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றிருந் தனர். ஆனால் மொழியியல் ஆய்வு பற்றிய தெளிவான விளக்கங்களைத் தரவில்லை. தமிழ்ச் சொல் எது, தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொல் எது என்பதை இனம் காண்பதில் தமிழறிஞர்களிடையே முரண்பாடுகள் இருந்தன. ஒரு சொல்லின் வேரைத் தொட்டு, அது தமிழ்ச் சொல்லா, தமிழ்த்திரிபுச் சொல்லா என்பதை, பாவாணரே அடையாளம் காட்டினார். சமற்கிருதச் சொற்கள் என அறிவிக்கப்பட்ட பல நூறு தமிழ்ச் சொற்களை, இன்று வேர்ச்சொல் ஆய்வுகள் மூலம், அவைகள் தமிழ்ச் சொற்களே என நிறுவமுடிகின்றது. மத்திய (மத்ய - சம) என்ற தமிழ்ச் சொல், சமற்கிருதச் சொல்லென மயங்கி, மையம் - நடுவம் போன்ற சொற்களைப் பயன்படுத்தலாயினர். அமரர் என்பது சரியான தமிழ்ச் சொல்லே. அதுவும் தவறாக நோக்கப்பட்டது. இவ்வாறு பல நூறு சொற்களைக் காட்டலாம். தம்மால் உணர இயலாத, வேர்ச் சொல்லைக் காண இயலாதவர்களே இவ்வாறான தவறான முடிவுகளை மேற்கொள்கின்றனர். சமற்கிருதம் தனி மொழியன்று, அது எந்தக் கிளை மொழிகளையும் தோற்று விக்கவில்லை ; அது தமிழினின்றும் பிரிந்து சென்ற மொழியே என்பதை இன்று உறுதிப் படுத்தியுள்ளோம். எனவே, இரு நூறாண்டுகளுக்கு முன்பிருந்த மொழிக் கொள்கையை இன்று நாம் ஏற்க வேண்டியதில்லை. உலக மொழிகளை தமிழ்க்

கண்ணோட்டத்தில், இன்று தமிழர்களே மேற் கொண்டு வருவதால், இந்த ஆய்வு முடிவுகள் மேலை நாட்டவரைச் சென்றடைய சில ஆண்டுகள் ஆகலாம்.

ப் என்ற மெய்யும் ஊ என்ற உயிரும் இணைந்த பூ என்ற ஓரெழுத்துச் சொல், இயற்கையில் நிகழும் செயலால் உருவானதே. வாய் நிறைய காற்றை நிரப்பி அதனை விரைவாக வெளியேற்றும் போது, வாயின் குறுகிய வழியே செல்லும் காற்று, 45 பாகைக் கோணத்தில் விரிந்து பரவுவதை உணர லாம். இதனைக் கண்ணால் பார்க்க விரும்பினால், வாய் நிறைந்த நீரை வெளியே விரைந்து உமிழும் போது, அதன் விரைவையும் பரவலையும் காணலாம். இதன் அடிப்படையி லேயே, பூ என்றால் வெளியேறுதல், பரவுதல் என்ற பொருள் தமிழில் அறியப்பட்டது. பிற்காலத்தில் பூ என ஊதினான் என்ற சொல்வழக்கும் தோன்றியது.

பூ : மலர்ந்து விரிவதால் மலர், இலை என்று சொல்லப்பட்டது.

மலர்ந்து விரிவதே அழகுணர்வைத் தருவதால், அழகு என்றும் அறியப்பட்டது.

அழகுடன் பொலிந்தும் உணரப்பட்டதால், பொலிவு என்றும் பொருள் தந்தது.

ஒரு குறுகிய இடத்தினின்றும் விரிவதால், கூர்மை என்றும் பொருளாகியது.

தீப்பொறி வெடித்துச் சிதறி பரவுவதால் தீ யென்றும் சொல்லப் பட்டது.

வெளியேறிச் சிதறும் பொருள் துளித்துளியாக இருப்பதால் நுண்பொடி எனப்பட்டது.

பூ : மலர், தாய்வரங்கள் தரும் காயின் முதல் நிலை.

கோட்டுப்பூ (of branches), கொடிப் பூ (of creepers), நீர்ப்பூ, நிலப்பூ (of herbs), என தமிழர் நான்கு வகையாகப் பிரித்தனர்.

பூ : தமிழர்கள் சூடிக் கொண்ட பூக்களாவன :

வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை.

இப்பூக்கள் பெற்றிருந்த மருத்துவக் குணம் கருதி அணிந்தனர் என்க.

பூ என்ற சொல்லை முன்னொட்டாகக் கொண்டு ஏராளமான சொற்கள் தமிழில்பிறந்தன.

பூமி : சமற்கிருதச் சொல். பூமீ என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு.

பூ : நிலம், தரை, மலை, உலகம் எனவிரியும்; மீ = உயர்வு, மேன்மை

பூ : விரிந்தது, பரந்தது. வானுலகு, கீழுலகு, பூவுலகு (மூன்று உலகங்கள்)

பூமீ : விரிந்து, பரந்து உயர்ந்துள்ள உலகம். பூமீ - பூமி எனத்திரிந்தது.

பொம் முதல் = பெருத்தல், உருண்டு திரண்டிருத்தல்.

பூ வேந்தன், பூ முடி மன்னன் ஆகியவை மன்னனைக் குறித்தவை. அவன் ஆளுகின்ற பரந்த நிலப்பரபை விளக்குபவை.

உத்பூ (சமற்கிருதம்) : மேல் எழுதல் (to raise up).

உள் + பூ = உப்பூ - உப்பு.

உப்பு : பெருத்தல், உயர்தல்.

உப்பு என்ற தமிழ்ச் சொல்லே, உத்பூ எனத் திரிந்தது.

சமற்கிருத மொழியில் சொல்லப்படாத, விளக்கப்படாத பல்வேறு செய்திகள், பூ என்ற சொல்லை விளக்கித் தமிழில் உள்ளன.

பூ என்ற சொல், சமற்கிருத மொழியின் வேர்ச் சொல் எனக் கூறுவதும், முதல் சொல் என முடிவு செய்வதும், மொழிகள் பற்றி அறியாதவர்கள் மேற்கொண்ட முடிவுகளாகும். தமிழின் ஆழமும், தொன்மையும் அறிந்திராத சமற்கிருத அறிஞர்கள் கொடுத்த விளக்கங்கள் அக்காலத்தில் ஏற்கப்பட்டிருக்கலாம்.

ஆரிய மொழிக் குடும்பம் என்றவாறு மேலை மொழிகள் ஆறும், இந்திய மொழிகள் சிலவும் சொல்லப்பட்டுள்ளன.

இந்த நூலின் முற்பகுதியில், கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு மேலை நாடுகளில் வாழ்ந்திருந்த இருபதுக்கும் மேற்பட்ட இனங்கள் பற்றியும், அவர்தம் மொழிகள் பற்றியும், அவை எவ்வாறு தமிழ் மூலத்தைக் கொண்டுள்ளன என்பது பற்றியும் விளக்கியுள்ளோம். இந்த இருபதுக்கும் மேற்பட்ட இனங்கள் பற்றிய செய்திகள், தமிழில் இது வரை வெளி வந்ததில்லை என்பதை நோக்க வேண்டும். ஏறக்குறைய கிரேக்கம் முதல், இந்தியா வரையிலான நிலப்பகுதிகளில் வார்ந்திருந்த மக்களின் மொழிகள் பற்றியும் விளக்கியுள்ளோம். அம்மொழிகளுக்கெல்லாம் மூல மொழி தமிழாகவே இருந்தது பற்றியும் விளக்கியுள்ளோம். இந்நிலையில் ஆரியக் குடும்ப மொழிகளின் முதன் மொழி எதுவெனத் தெரியவில்லை என சமற்கிருத ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்நூலில் கண்டுள்ள விளக்கங்கள், மொழியை ஆய்வு செய்த ஐரோப்பிய அறிஞர்

களுக்கு விளங்காத விடைகள், தமிழ்க் கண்ணோட்டத்தில் உலக மொழிகளை ஆய்வு செய்தால், நன்கு விளங்கும் என்ற உண்மையை தற்காலத்து சமற்கிருத அறிஞர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ், ஆரியக் குடும்ப மொழிகளுக்கு மட்டுமல்லாது, உலக மொழிகளுக்கே தாயாக விளங்குவதை, நடுநிலையான மொழியியல் ஆய்வாளர்களால் உணர முடியும். தமிழ் மொழியைச் சிறுமைப் படுத்தவும், சிதைக்கவும், தமிழின் பெருமைகள் வெளிப்படாது தடுக்கவும் நினைக்கும் தமிழ்ப் பகைவர்களுக்கு, முத்தமிழின் மேன்மையும், சிறப்பும், பொலிவும் தொன்மையும் எக்காலத்தும் புரியாது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இரு நூறுக்கும் மேற்பட்ட சமற்கிருத அறிஞர்கள் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து (1760 முதல் தற்காலம் வரை) சமற்கிருதத்தை ஆய்வு செய்துள்ளனர். அவர்கள் எழுதிய நூல்கள் பல ஆயிரம் பக்கங்களைக் கொண்டவை. ஒருவராவது, சமற்கிருத மொழி எப்போது தோன்றியது, அது யாரால் செம்மைப் படுத்தப்பட்டது, சமற்கிருத எழுத்துகள் எக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டன, வேதங்கள் முதலில் ஏன் சமற்கிருத மொழியில் சொல்லப்படவில்லை என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகளைத் தரவேயில்லை சமற்கிருத இலக்கியங்கள் தரும் தொன்மக்கதைகளைச் சான்றுகளாக எடுத்துக் கொள்பவர்கள்.

தமிழ்த் தொன்மங்களுக்குச் சான்றுகள் இல்லையெனவும், குமரிக் கண்ட நிலைப்பாடு நம்பகத் தன்மையற்றது எனவும் கூறுகின்றனர். ஆய்வுகளின் அளவு கோல்கள், சமற்கிருத மொழிக்கு வளைந்து கொடுப்பதையும், தமிழ் என்றால் மறுப்பதையும் கண்கூடாகக் காண்கிறோம். இது போன்ற ஒரு தலைச்சார்பான நடவடிக்கைகளால்தான், செம்மொழியான சமற்கிருதத்தின் மீதும் தமிழருக்கு வெறுப்பை ஏற்றுகின்றனர். சமற்கிருதத்துக்குப் பகை மொழி தமிழ் என்ற உணர்வுகளைத் தூண்டி விட்டதனால், சமற்கிருத மொழியின் பெருமைகளைக் குறைத்துவிட்டனர். சமற்கிருத மொழி மீது தமிழர்களுக்கு என்றுமே வெறுப்போ, பகைமையோ இருந்ததில்லை. ஏனெனில், அது தமிழன் உருவாக்கிய மொழி; தமிழின் கிளை

மொழி; அதனைத் தமிழனே அழிக்க முற்பட மாட்டான் என்பதை சமற்கிருத ஆய்வாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சமற்கிருத மொழியின் தோற்றம் எப்போது?

இக்கேள்விக்கு ஒருவரும் விடை கண்டு விடக் கூடாது என்பதே சமற்கிருத மொழிச் சார்பாளர்களின் விருப்பமாகும். கடந்த காலங்களில் பல்வேறு அறிஞர்கள் கொடுத்த கருது கோள்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை என ஒதுக்கப்பட்டன. அவ்வாறு ஒதுக்கித் தள்ளும் சமற்கிருத அறிஞர்களும், சமற்கிருத மொழியின் தோற்றக் காலத்தைக் கூறுவதில்லை. நெருக்கடியான சூழல் வரும் போது பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பிரம்மாவால் தோற்றுவிக்கப் பட்டு, மாந்தனுக்குத் கற்பிக்கப்பட்ட மொழியே சமற்கிருதம் எனக் கூறித் தப்பித்துக் கொள்கின்றனர்.

கி.மு. 1800 ஆண்டுகளில் அறப்பா நாகரிகம் அழிந்து பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிந்து வெளி நாகரிகம் முற்றிலும் அழிந்து போனதற்கு, ஆறுகளின் வெள்ளப் பெருக்கே காரணம் என்று பாசம் போன்ற ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மண்மூடிப்போன ஊர்களும் நகரங்களும், பல அடுக்குகள் (layers) கொண்ட மண் மேடுகளாகவே உள்ளன என்றும், போர், தீ, உள்நாட்டுக் கலவரம் போன்றவை ஏற்பட்டு அழிந்ததற்கானச் சான்றுகள் கிடைக்கவில்லை என்றும் கூறுகின்றனர். ஆற்றங்கரை நகரங்களில் வாழ்ந்திருந்த மக்கள், உள் நாடுகளில் சென்று வாழத் தலைப்பட்டனர். பலர் மேற்கில் புலம் பெயர்ந்தனர்.

அடுத்த 500 ஆண்டுகளில், சிந்துவெளிப் பகுதிகளில் தெளிவற்ற அரசியல் சூழ்நிலை நிலவியது. வட்டாரத் தலை வர்கள் எழுச்சி பெற்று சிறுசிறு நாடுகளாகப் பிரித்துக் கொண்டனர். ஒன்றாக இருந்த சமூகக் கட்டமைப்பு பிரியத் தொடங்கியது. தமிழ் மொழி சிறுபான்மையோரால் பேசப் பட்டு பெரும்பான்மை மக்களின் மொழிகள் திரிவு மொழி களாயின. அத்திரிபு மொழிகளுக்கென எழுத்துகளோ இலக்கி யங்களோ அக்காலத்தில் எதுவுமில்லை. மாறிவரும் சூழ்நிலையில், தமிழ் மொழியின் தளர்ச்சியைத் தடுத்து நிறுத்த வட புலத்துத் தமிழறிஞர்கள் முடிவு செய்தனர். தமிழ் நாட்டிலும் புதிய மலர்ச்சி தோன்றியது. தமிழ் எழுத்துகளைப் பொருத்தவரை,

தமிழ் நாட்டிலும் சிந்து வெளியிலும் ஒரே வரி வடிவங்களே பயன்பாட்டில் இருந்தன என்பதை, பல்வேறு கல்வெட்டுச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

சிந்துவெளியில் பயன்பாட்டிலிருந்த தமிழ் எழுத்துகளே இன்று பெருமளவில் கிடைத்துள்ளன. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்பதை உணர்ந்த அறிஞர் குழு, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. கி.மு. 1500 ஆண்டுகளில், எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது எனலாம். அப்புதிய எழுத்துகள், பழைய தமிழ் எழுத்துகளை ஒட்டியே வடிவமைக்கப்பட்டன. மக்களுக்கு குழப்பமில் லாமல் இருக்கும் வகையில், பழைய - புதிய எழுத்துவடிவங்கள் பயன் படுத்தப்பட்டன. கொடு மணல், இலங்கை போன்ற இடங்களில் கிடைத்துள்ள சான்றுகளில் இரண்டு எழுத்து முறைகளிலும் எழுதப்பட்ட தமிழ்ச் சொற்கள் அறியப்பட் டுள்ளன.

யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழகத்தின் பேராசியர் இந்திரபாலா, யாழ்க் பாணத்துக்கு அருகிலுள்ள அணைக் கோட்டை என்ற இடத்தில், சிந்துவெளியின் பழைய எழுத்து முறையும், புதிய முறையும் இணைந்து செதுக்கப்பட்ட கல் வெட்டொன்றைக் கண்டு பிடித்தார். “தீவுகோ” என எழுதப் பட்டிருந்த அக்கல்வெட்டு இரண்டு முறைகளிலும் எழுதப் பட்டிருந்தது. பழைய தென் ஆற்காடு மாவட்டம் கீழ்வாளை என்ற ஊரில் பழைய சிந்துவெளி எழுத்துகள் பொறிக்கப் பட்ட கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டது. அது “நா வாய்த் தேன்”, என்று எழுதப்பட்டிருந்தது. ஆந்திராவின் கன்மவடக்கல் என்ற ஊரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில், சிந்து வெளி எழுத்தில் “கலிங்கு நக்க நந்தி” என்ற பெயர் பொறிக்கப்பட் டிருந்தது.

சிந்துவெளி எழுத்துகளே தமிழ்நாட்டிலும் பயன்பாட்டில் இருந்ததை மேற்கண்ட சான்றுகள் உணர்த்துகின்றன. இவ்வாறு சீர்திருத்தம் செய்யப்பட்ட புதிய தமிழ் எழுத்து முறையைத்தான் “பிராமி” என்று ஆரியர்கள் கூறினர். பிராமி என்பதற்கு தலைமையானது முதன்மையானது, முந்தியது, பெருமைக் குரியது, உயர்வானது என்றவாறு சமற்கிருதத்தில் பொருள் விரியும். இந்த பிராமி முறையை ஆரியர்கள் தாங்களே

அறிமுகம் செய்ததாகக் கூறுகின்றனர். இந்தப் பிராமி முறை தமிழ் எழுத்து முறையே என்றும், தமிழர்களே இம் முறையை அறிமுகம் செய்தனர் என்றும் சமற்கிருதப் பேராசிரியர் வாக்கன்கர் (Wakankar) கூறுகிறார். உயிர் 12, மெய் 18, என 30 எழுத்துகளைக் கொண்ட தமிழ் நெடுங்கணக்கு முறையே பிராமி எனப்பட்டது.

இம் முறையைத் தழுவியே வடபுலத்தில் புதிதாகத் திரிந்த மொழிகள் தங்களுக்கென எழுத்து வடிவங்களை அமைத்துக் கொண்டனர். அவைகளில் பிரா கிருதமும் ஒன்று. காலப் போக்கில் திரிபு மொழிகள், சிற்சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இறுதியாக சமற்கிருதத்துக்கு வரிவடிவம் அறிமுகம் செய்யப்பட்டபோது, தமிழ் எழுத்து முறையை முதன் மையாகக் கொண்டு வரிவடிவங்களை அமைத்துக் கொண்டனர். தமிழ் எழுத்தினின்றும் எவ்வாறு சமற்கிருத வரிவடிவங்கள் உருவாக்கப்பட்டன என்பதை பட்டியலைப் பார்த்து தெளிக.

இப்புதிய வரிவடிவங்கள் எழுதுவற்கும், எழுதியதைப் படிப்பதற்கும் எளிமையாக இருந்ததால், தமிழகத்துக்கு வந்த போனீசியர்கள், இப்புதிய முறையை ஏற்றுக்கொண்டு, தங்கள் நாட்டில் அறிமுகம் செய்தனர். இது பற்றிய செய்தி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. போனீசிய எழுத்து முறையையே, கிரேக்கம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பின்பற்றின. உலகமெ லாம் தமிழ் சென்று பரவியதைப் போல. தமிழன் உருவாக்கிய எழுத்து முறையே இன்று உலக மொழிகளில் பெரும்பான்மை யோரால் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆங்கிலம் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகள் கையாண்டு வரும் எழுத்து வடிவங் களின் மூலம், தமிழன் உருவாக்கித் தந்ததே என்பது வரலாற்று உண்மையாகும்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அசோகனுடைய நல்லொழுக்க உரைகள், இந்திய மொழிகளில் கல்வெட்டு களாக நாடெங்கும் செதுக்கப்பட்டன. ஏறக்குறைய 18 மொழி களுக்கும் மேல் அக்கல் வெட்டுகள் இருந்தன. ஆப்தானித் தானம் தொடங்கி, தமிழ் நாட்டின் தகடூர் எல்லை வரை அவை பரவிக் காணப்பட்டன. அக்கல்வெட்டுகளில் பயன் படுத்தப்பட்ட எழுத்துகள், தமிழரின் புதிய எழுத்துகளே. மொழிகள் வேறாயினும் எழுத்துகள் ஒன்றாயிருந்தன. தமிழகத்

தொல்லியலாளர்கள் சிலர், அசோகனுடைய எழுத்து முறையைப் பின்பற்றியே தமிழ் எழுத்துகள் தோன்றின என்று கூறிவந்தனர். மேலும் ஒருவர் சமற்கிருதத்தின் எழுத்து முறைகளே தமிழ் எழுத்துகளின் முன்னோடி என்றார். கி.மு. 200 ஆண்டுகளுக்கு முன்புவரை, தமிழுக்கு வரிவடிவம் இருந்த தில்லை என்றார் மற்றொருவர். இவர்கள் அனைவரும் தமிழ் நாட்டு அரசின் தொல்லியல் துறையில் இயக்குநராகவும், ஆய்வாளர்களாகவும் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற வர்களாவர். கி.பி. 200க்கு முன்பு தமிழில் எழுத்துவடிவம் இருந்ததில்லை என்றால், சங்க இலக்கியங்களும், தொல்காப் பியமும் எவ்வாறு எழுதப்பட்டன? அதற்கு விளக்கம் அளித் தார் மற்றொருவர். சங்க காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்றும், தொல்காப்பியம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்றும் கூறினார். இப்படிப் பட்ட தமிழ்ப்பகைவர்களை தொல்லியல் துறையில் சேர்த்ததே தமிழக அரசு செய்த மிகப் பெரிய தவறாகும்.

கி.மு. 1500 ஆண்டுகளில், தமிழ் இலக்கிய உலகில் ஏற்பட்ட மாற்றம், புதிய எழுத்துப் புரட்சியே ஆகும். அதன் தொடர்ச்சியாக, பல்வேறு புதிய மொழிகளும் வரிவடிவங் களைப் பெற்றன. அடுத்து தோன்றிய புதிய மொழி, காலச் சூழல்களைக் கருத்தில் கொண்டு தோற்று விக்கப்பட்டதாகும். சிந்து வெளி நாகரிகம் முடிவுற்ற பின்னர் தோன்றிய புதிய அரசுகள், தங்கள் மேலாண்மையை மெய்ப்பிக்கப் போர்களில் ஈடுபட்டன. நாடெங்கும் அரசியல் பகைமை முற்றியது. அரசாங்கத்தின் ஆவணங்கள், புதிய எழுத்து முறையில் எளிதாக எழுதப்பட்டு படிக்கப்பட்டன. இதனால், அரசின் கமுக்க மான செயல்பாடுகளை, ஆவணங்களாகப் பதிவு செய்ய இயலவில்லை. இந்தத் தேவையை நிறைவு செய்வதற்கு மக்கள் அறிந்திராத கமுக்க மொழி யொன்று தேவைப்பட்டது. ஒரு சில அறிஞர்கள் கூடி, வட இந்தியப் பகுதிகளில் திரிபுபட் டிருந்த மொழிகளில் உள்ள சொற்களைக் கூட்டியும் குறைத்தும் திரிபுபடுத்தியும் ஒரு மொழியை உருவாக்கினர். அம்மொழியின் சொற்கள், புதிய எழுத்து முறையில் எழுதப் பட்டிருந்தாலும், பொருளை அறிய இயலவில்லை.

அக்காலத்து மன்னர்களின் வருவாய், வேளாண்மை யையும் வணிகத்தையும் சார்ந்தே இருந்தது. வணிகத்துறையில்

பல்வேறு போட்டிகள் நிலவின. உள்நாட்டு வெளிநாட்டு வணிகர்கள் தங்கள் தொழிலை விரிவு படுத்தவும், தங்களது வரவு செலவுக் கணக்குகளை பிறர் அறியாதவாறு எழுதி வைக்கவும் கமுக்கக் குறியீடுகளை அக்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். இவ்வணிகர்களுக்கு மன்னர்களின் உதவியினால், அக்கமுக்க மொழி பற்றிய குறிப்புகள் தரப்பட்டன. மன்னர்களும், வணிகர்களும் தொடக்கத்தில் பயன்படுத்தத் தொடங்கிய அம்மொழிக்கு கீர்வாணம் எனப் பெயர் சூட்டினர். கீர்வாணம் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. இந்தக் கீர்வாணம் நாளடைவில் பலராலும் பயன்படுத்தப்பட்டது. பலருக்கு அறிந்த மொழி கமுக்க மொழி என்ற தகுதியை இழந்தது. இந்தக் கீர்வாணம் பல்வேறு மொழி பேசு பவர்களுக்கும் பொது மொழியாக உருவாயிற்று. இந்தக் கீர்வாணம் செம்மைப் படுத்தப்பட்ட பிறகு, அதற்கு சமற்கிருதம் என்ற பெயரைச் சூட்டினர். தொடக்கத்தில் சமணர்களே இம்மொழியைப் பயன்படுத்தி வந்தனர். பின்னர் தங்கள் சமய மொழியாக அர்த்தமாகதி என்ற மொழியைப் பின்பற்றினர். சமணர்கள் கை விட்ட கீர்வாணத்தை, புத்த சமயம் ஏற்றுக் கொண்டு, சில ஆண்டுகளில், தமக்கென பாழி மொழியை உருவாக்கிக் கொண்டு, கீர்வாணத்தைக் கைவிட்டது. தங்கள் தாய் மொழியை மறந்து, வட இந்திய வட்டார மொழிகளில் பேசிவந்த ஆரியர்கள், இறுதியாகக் கீர்வாணத்தைக் கையிலெடுத்துக் கொண்டனர். தொடக்கத்தில் ஆரியர்கள் ஏற்றுக் கொண்ட கீர்வாணத்துக்கும் பிற்கால சமற்கிருதத்துக்கும் பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை.

ஆரியர்கள் ஏற்றுக் கொண்ட கீர்வாணம், நூற்றாண்டுகள் தோறும் பலமாறுதல்களைக் கண்டது. புதுப்புது சொற்கள் இணைக்கப்பட்டன. 18க்கும் மேற்பட்ட வட இந்திய மொழிகளின் தாக்கங்கள் கீர்வாணத்தில் இருந்தன. அப்போதும் கீர்வாணம் புதிய எழுத்து முறைப்படியே எழுதி படிக்கப் பட்டது. இந்தக் கீர்வாணத்தின் காலம் கி.மு. 1000 முதல் கி.மு. 300 வரை என்பது, பிற சான்றுகளுடன் ஒப்பிட்டு எடுக்கப் பட்ட முடிவு. கி.மு. 300 ஆண்டுகளுக்குப் பிறகே கீர்வாணம் செம்மை படுத்தப்பட்டு சமற்கிருதம் ஆயிற்று. தொடக்க கால கீர்வாணத்துக்குத்தான் பாணினி, இலக்கணவுரை எழுதினார். பாணினின் இலக்கணத்தில் பொலிவு பெற்ற கீர்வாணம், சமற்கிருதம் என்ற பெயரைப் பெற்றது. அடுத்து கி.மு. 300

ஆண்டுகளில் இந்தியாவிற்கு வந்த கிரேக்கர்கள், தங்களுடைய நிற அடிப்படையில் ஆரியர்களோடு தோழமை கொண்டனர். பலநூறு கிரோக்கச் சொற்கள் சமற்கிருத்தில் கலந்தன. அது போன்று பல நூறு சமற்கிருதச் சொற்கள் கிரேக்கத்தில் கலந்தன. அலெக்சாந்தருடன் இந்தியாவுக்கு வந்திருந்த கிரேக்க அறிஞர்களில் சிலர் இந்தியாவிலேயே தங்கிவிட்டனர். பலர் தாய் நாடு திரும்பினர். கிறித்துப் பிறப்பாண்டுகளில் மேற்கே கிரேக்க மொழியும், கிழக்கே சமற்கிருதமும் புதிய பொலிவைப் பெற்றன. அப்போது கூட சமற்கிருதத்துக் கென தனி வரி வடிவங்கள் அறிமுகப் படுத்தப்பட வில்லை. இக்குறையை ஆரியர்களும் கிரேக்கர்களும் இணைந்து சரி செய்தனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், சமற்கிருதத்துக் கென புதிய எழுத்து முறை அறிமுகம் செய்யப்பட்டது. ஏற்கனவே கிரேக் கர்கள், போனீசியரின் எழுத்துமுறையை ஏற்றுக் கொண்ட வர்கள் என்ற செய்தியின் அடிப்படையில், போனீசிய (புதிய தமிழ் முறையே) எழுத்து முறை தந்த கிரேக்க வரிவடிவங் களோடு, இந்திய வரிவடிவங்களை இணைத்து சமற்கிருத வரிவடிவங்களை உருவாக்கினர்.

கீர்வாண மொழியில் க,ச,ட,ப போன்ற ஒலிப்புகள் இடத்திற்கேற்ற வாறு (தமிழைப் போன்று) ஒலிக்கப்பட்டன. ஆனால் சமற்கிருதம் தோற்றுவிக்கப்பட்ட பிறகு க,ச,ட,ப போன்ற ஒலிகளை வேறு படுத்தி ஒலிப்பதற்கான தனித்தனி எழுத்துகளை உருவாக்கிக் கொண்டனர். க (ka) க்க (kka) க (ga) போன்ற ஒலிகளை வேறுபடுத்த எழுத்துகள் இணைக்கப் பட்டன. இதுவரை இந்திய அளவில் கிடைத்துள்ள ஒரு இலக்கம் கல்வெட்டுகளில் 60000 க்கும் மேற்பட்ட கல்வெட் டுகள் தமிழிலும், மற்றவை பிற மொழிகளிலும் அறியப் பட்டுள்ளன. அவற்றில் கி.மு. 200 ஆண்டுகளுக்கு முந்திய கல் வெட்டுகளில் எவையும் சமற்கிருத மொழியில் இல்லை. எனவே தான், சமற்கிருத மொழிக்கு எழுத்துகள் கி.மு. 200க்குப் பிறகே தோன்றின என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது கல் வெட்டுகளை, குறிப்பாக சமற்கிருத கல்வெட்டுகளை ஆய்வு செய்த அறிஞர்கள், கி.பி. 200 தொடங்கி கி.பி. 1700 வரையி லான கால அளவுகளில், சமற்கிருத எழுத்துகளில் மாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் சமற்கிருத எழுத்து முறையிலிருந்துதான் தமிழ்மொழிக்கு

எழுத்து முறை வந்தது என்பது எவ்வளவு நகைச்சுவையானது என்பதை புரிந்து கொள்ளலாம்.

சமற்கிருத மொழியும், கி.பி. முதல் நூற்றாண்டுக்குப் பிறகு, இந்தியாவுக்கு வந்த வெளி நாட்டவரின் மொழிகளின் சொற்களையும் இனைத்துக் கொண்டு வந்துள்ளதை அறிய லாம். அதே போல், ஆங்கிலேயர் காலத்தில் ஏராளமான சமற்கிருத சொற்கள் ஆங்கிலத்தில் இணைக்கப்பட்டன. Jungle, stand போன்ற சொற்கள் சமற்கிருதத்தினின்றும் ஆங்கிலத்தில் இணைக்கப்பட்டவை. தற்காலத்தில் இந்தியும் ஆங்கிலமும் இணைந்து Hinglish என்ற கலப்பு மொழியில் பேசி வருகின்றனர்.[608] (Hinglish : A blend of Hindi and English in particular a variety of English used by speakers of Hindi. Oxford Couise/ p.674). ஆங்கிலம் என்பது 100 விழுக்காடு பிறமொழிச் சொற்களால் உருவாக்கப்பட்ட செயற்கை மொழியே. எனவே தான் மோனியர் வில்லியம்சு கூறுவார். “சமற்கிருதம் அக்கை மொழி, ஆங்கிலம் இளைய தங்கை மொழி”, என்று.

முடிவுரை

இதுவரை அடியேன் எழுதியுள்ள 50 நூல்கள் (11800 பக்கங்களுக்குமேல்) குமரிக்கண்டம், தொல் தமிழர், தொல் தமிழரின் மேலை நாட்டுக் குடியேற்றம், தமிழர்தம் வானியல், எண்ணியல், சமயவியல், சமூகவியல், மொழியியல் போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆய்வு நோக்கில் விளக்கப்பட்டுள்ளன. தொல்தமிழரின் வரலாற்றை அறிய தமிழ் இலக்கியங்களும், சமற்கிருத இலக்கியங்களும் துணைபுரிகின்றன என்றாலும் முழுமையான செய்திகளை அவை தந்து விடவில்லை. சங்க காலத்துக்கு முற்பட்ட வரலாற்றை அறிவ தென்பது இயலாத தாக உள்ளது. தொன்மக்கதைகளையும், செவிவழிச் செய்தி களையும் வழக்குகளையும் வழக்காறுகளையும் கொண்டு முற்றிலுமாக நிறுவ இயலாது. இது நாள் வரை அதற்கான முயற்சியில் தமிழ்நாட்டில் ஆய்வாளர்கள் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அவ்வப்போது சில அறிஞர்கள், தமது ஆய்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். குமரிக் கண்டம் நிலை பெற்றிருந்தகாலம், அது அழிவுபட்ட காலம், தொல்காப்பியர் காலம், மூன்றாம் தமிழ்ச் சங்கம் நிலைபெற்றிருந்த காலம் ஆகியவை பற்றித் தெளிவான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. இதன் வழியில், தமிழ

ருடைய வரலாறு கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்படவில்லை என்ற பரவலான கருத்தை விதைத்துவிட்டனர்.

தமிழகத்தில் அவ்வப்போது அறியப்படும் பாறைக் குறியீடுகள், கல்வெட்டுகள், முது மக்கள் தாழிகள், கட்டிட இடிபாடுகள் ஆகியவைகளை, கி.மு.1000 ஆண்டுகளிலேயே அடக்கி விடுகின்றனர். தமிழருடைய வரலாறு கி.மு 10000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறவும் மெய்ப்பிக்கவும் சரியான சான்றுகள் கிடைக்கவில்லை. பற்று மேலிடுவதாலும், உணர்வுகளின் உந்துதல்களாலும் சொல்லப்படும் செய்திகளை வரலாறு ஏற்றுக் கொள்வதில்லை. இச்சூழல்களில் சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகள், 1924 முதற் கொண்டு வெளிவரத் தொடங்கின. தொடக்கத்தில் அது ஆரிய நாகரிகமே என்று உறுதி செய்யப்பட்டு பாடநூல்களிலும் பதிவு செய்யப்பட்டன. 1932 ஆம் ஆண்டில் அருள் தந்தை ஈராஸ், சிந்துவெளி ஆய்வு களில் ஈடுபட்டு, அது தமிழர் நாகரிகமே என முதன் முதலாக அறிவித்தார். அதற்குப் பின்னர், ஆய்வாளர்களின் கண் ணோட்டம் திசை திரும்பியது.

ஆய்வாளர்கள் இரு கூறுகளாகப் பிரிந்தனர். ஆரியத் தைத் தாங்கிப் பிடித்த ஆய்வாளர்களும், அக் கொள்கையை ஏற்க மறுத்த ஆய்வாளர்களும் தத்தம் நோக்கில் ஆய்வுகளை மேற்கொண்டனர். இந்த ஆய்வுகளில் பல மேற்கித்திய ஆய்வா ளர்களும் தம்மை ஈடு படுத்திக் கொண்டனர். குறிப்பாக நிக்கோலஸ் இலெகோவரி என்பார், அது பாபிலோனிய நாகரிகத்தின் தொடர்ச்சியே என்றார். சிந்துவெளி மக்களின் தாயகம் பாபிலோன் பகுதியே என்று திட்டவட்டமாக அறிவித்தார். அவ்வாறு அவர் கூறியதற்கான வலுவான சான்று களும் இருந்தன. பாபிலோனியத்தின் அனைத்துக் கூறுகளும், சிந்துவெளியில் அறியப்பட்டிருந்தன. இருவரது மொழி, பண்பாடு, வழக்குகள் வழக்காறுகள், நகரியநாகரிகத் தடங்கள் அனைத்தும் ஒற்றுமைப்பட்டன. சிந்துவெளியில் அறியப்பட் டவர்கள் ஆரியர்களே என்ற கருத்துமாறி, தமிழர்களே என திசை திரும்பிய பிறகு, அவர்கள் பாபிலோனியர்களே என்ற பார்வையும் பதிவாகியது. பாபிலோனிய - சிந்துவெளி மக்களிடையே காணப்பட்ட உறவுகளின் அடிப்படையில், இந்தியாவில் மக்கள் இருந்ததில்லை, அவர்கள் மேற்கிலிருந்தே கிழக்கு நோக்கி குடிபெயர்ந்தார்கள் என்ற கொள்கையும் சொல்லப்பட்டது.

குமரிக்கண்டக் கொள்கை பற்றி அறிந்திராதவர்கள், சிந்துவெளி மக்களை மேற்கில் இருந்த மக்களோடு தொடர்பு படுத்தினர். குமரிக்கண்ட அழிவிற்குப் பிறகு, தெற்கிலிருந்து வடக்கில் புலம் பெயர்ந்த தமிழர்களே சிந்துவெளி மக்கள் என்ற கருத்து இன்று மெய்ப்பிக்கப் பட்டுள்ள தோடு, பாபி லோனியரும் சிந்துவெளியிலிருந்து குடியேறிய தமிழரே என்ற கொள்கையும் பலவாறான சான்றுகளால் இன்று ஏற்கப் பட்டுள்ளது. இந்த நோக்கு, அண்மைக் காலத்தில் உணரப்பட் டதே. இதற்கான சான்றுகளை பாபிலோனிய இலக்கியங்களே தருகின்றன என்பதை அறியலாம். வெள்ளக் காலத்துக்குப் பிறகு, மேற்கில் புலம் பெயர்ந்த தமிழர் கி.மு. 12000 - 1000 ஆண்டுகளில், அங்கே தங்களது குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டனர்.

முதல் குடியேற்றத்தைத் தொடர்ந்து பலரும் பலகாலங் களில் சிந்துவெளியினின்றும் மேற்கே சென்று குடியேறினர். அடுத்து அறிப்படும் குடியேற்ற மக்கள் சுமேரியர்களே. சுமேரியர்கள், கி.மு. 5000 - 4000 ஆண்டுகளில் புலம் பெயர்ந் தனர். முதல் குடியேற்ற மக்களைப் போலன்றி, சுமேரியர்கள் படைகொண்டு சென்று, பாபிலோன் பகுதியை வென்று அங்கு நிலையான ஆட்சியை உருவாக்கினார்கள். அவர்களது ஆட்சிக் காலம், மேற்கில் நகரிய நாகரிகத்துக்கு வித்திடப் பட்ட காலம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சுமேரி யர்கள் எக்காரணம் பற்றி மேற்கே படையெடுத்துச் சென்றனர் என்பது பற்றி தெளிவான காரணங்கள் விளக்கப்படவில்லை யென்றாலும், வணிகம் தொடர்புடைய தாகவே அப்படை யெடுப்பு கருதப்படுகிறது.

கி.மு. 10000 ஆண்டுகள் முதல் தொடர்ந்த மேலை நாட்டுக் குடியேற்றங்களால் கிழக்கிற்கும் மேற்கிற்கும் நிலையாள தொடர்புகள் உருவாயின. அக்காலம் தொட்டே தமிழ் நாட் டிற்கும் பாபிலோனுக்கும் இடையே வணிகத் தொடர்புகள் வலுப்பெற்றிருந்தன. உலோத்தல் துறை முகமும், முசிறித் துறை முகமும் மேற்கித்திய வணிகத்தின் கீழை நாட்டு மையங்களா யிருந்தன. மூன்றாவதாக அறியப்படும் குடியேற்றம், கி.மு. 3000 ஆண்டுகளில் மூன்றாவதாக அறியப்படும் குடியேற்றம். கி.மு. 3000 ஆண்டுகளில் நடை பெற்றதற்கானச் சான்றுகள் கிடைக் கப் பெற்றுள்ளன. இவர்களே வரலாற்றில் அறியப்படும் எபிரேய மக்களாவர். எபிரேய மக்கள் பற்றிய பல்வேறு செய்திகள், அவர்கள் தமிழர்களே என்பதையும், அவர்கள்

மேலை நாட்டைச் சாராதவர்கள் என்பதையும் விளக்கு கின்றன. இவ்வாறு 7000 ஆண்டுகளாக தொடர்ந்து புலம் பெயர்ந்த தமிழர்கள், மெசபத்தோமியா, பாபிலோன், பாலத் தீனம், அரேபியா, எகிப்து, எத்தியோப்பியா போன்ற நாடு களில் பல்கிப் பெருகினர். முதல் குடியேற்ற மக்களை செமிட்டிக் இனத்தார் என்றும் இரண்டாவது குடியேற்ற மக்களை சுமேரியர் என்றும், மூன்றாவது குடியேற்ற மக்களை எபிறேயர் என்றும் வரலாறு சுட்டுகிறது. இம் மூன்று குடி யேற்ற மக்களும் கி.மு. 2000 ஆண்டுகளில் கலந்து போயினர். கி.மு. 1000 ஆண்டுகளில் நடுத்தரைக் கடலுக்குக் கிழக்கே யிருந்த நாடுகளில் அறியப்பட்ட மக்கள் அனைவரும், தமிழ் இனத்தின் கிளைகளாகவே கருதப்பட்டனர். மேற்கே அமைந் திருந்த இயற்கைச் சூழல்களுக்கு ஏற்றவாறு, தங்களுடைய வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொண்டனர். அப்பகுதியின் நிலத்துக் கேற்ற வேளாண்மையும், காலச் சூழலுக்கேற்ற உடைகளும், திரிபுபட்ட தமிழ் மொழியும், குடியேற்றங்களால் மாறிப் போனவைகளே. ஒவ்வொரு குடியேற்றத்தின் போதும் கொண்டு செல்லப்பட்ட தமிழ்மொழி, ஏற்கனவே கிளைத்த மொழிகளோடு கலந்து, வட்டாரத்துக்கு ஒரு மொழி என்ற அளவில் திரிந்து போனது. கி.மு. 1000 ஆண்டுகளில் அப்பகுதி களில் அறியப்பட்டிருந்த அக்காடியம் (பாபிலோன்), சுமேரியம், ஈழம், கல்தேயம், எபிறேயம், கனானியம், அரபு, எகிப்தியம், எத்தியோப்பியம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும் தமிழ்மொழியின் மூலமும் வேரும் விரவிக் கிடப்பதை, தற்கால ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

அண்மைக் காலத்தில் தான் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மேலை மொழிகள் ஆய்வுகளுக் கெடுத்துக் கொள் ளப்பட்டன. மேலை நாட்டு ஆய்வாளர்கள் தொடங்கி வைத்த அப்பணிகள், அவர்களால் முழுமையாக முடிக்கப்படவில்லை. மேற்கண்ட மொழிகள் அனைத்தும் ஒரு மூல மொழியினின்றே தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை உறுதி செய்தனர். அம்மூல மொழியை முன்மொழி (Proto language) எனவும் குறிப்பிட்டனர். அந்த முன் மொழி எது வென்பதை அவர் களால் உறுதி செய்ய இயலவில்லை. காரணம், மேற்கண்ட மொழிகளில் பல்லாயிரம் சொற்களுக்கான வேரினையும் மூலத்தையும் அவர்களால் கண்டு பிடிக்க இயலவில்லை. தங்கள் இயலாமையை பெருந்தன்மையுடன் அவர் ஏற்றுக் கொண்டிருப்பது நமது ஆய்வுகளுக்குப் பேருதவியாக இருந்தது

எனலாம். பொருள் தெரியவில்லை என அவர்கள் பட்டிய விட்ட சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாகவே இருப்பது வியப்புக் குறியதாகும். பல சொற்களுக்குத் தவறான பொருளையும், மேலும் பலவற்றிற்கு ஐயப்பாடான பொருளையும் மேலும் பல சொற்களுக்கு வேரும் மூலமும் காண இயலவில்லை யென்றும், அச் சொல்லுக்கான பொருளும் விளங்கவில்லை யென்றும் தெரிவிக்கின்றனர்.

தொல்தமிழர் வரலாறு என்று இந்நூலில் விளக்கப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டவை. நம்முடைய நோக்கில் எச்செய்தியையும் இணைக்கவில்லை. அச்செய்திகளுக்கான புதிய பார்வையும், புதிய அணுகுமுறைகளும் நம்முடையவை. இதுவரையிலும், மேற்கித்திய வரலாற்று நிகழ்வுகளை, தமிழ் நோக்கில் முழுமையாக எவரும் அணுகவில்லை என்பதால், இந்நூலில் கண்டுள்ள செய்திகளை பலருக்கு வியப்பாகவும், சிலருக்கு ஏற்றுக் கொள்ள இயலாதவைகளாகவும் இருக்கக் கூடும். தமிழுக்குப் புதிய ஆய்வான இந்நூல், எதிர்காலத்தில் ஆய்வுக்குட் படுத்தப்பட வேண்டும் என்பதே நமது அவா. எந்த ஆய்வும் முழுமை பெற்றுவிடுவதில்லை என்பதால் எதிர்கால ஆய்வுகள் மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்தலாம்.

மேலை நாட்டு ஆய்வாளர்கள் கூறும் முன்மொழி (proto language) எதுவென அறிய இயலவில்லை என்ற கூற்றின் அடிப்படையில், மேலை வரலாற்றுச் செய்திகளைக் கொண்டே, அதன் வழி உட்புகுந்து ஆய்வு செய்து, அந்த முன்மொழி தமிழே என்பதை நிறுவுவதற்கானச் சான்றுகளை இந்நூலில் அளித்துள்ளோம். தொல்தமிழர் வரலாற்றின் பெரும் பதிவுகள் மேலை இலக்கியங்களில்தான் பொதிந்து கிடக்கின்றன என்ற அடிப்படையில், இனிமேல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

செம்மொழியாம் தமிழ்மொழியின் தொன்மையை ஆராயவும், அதற்கான பொருள் உதவிகளை அளிப்பதற்கும் என நிறுவப்பட்ட செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தமிழ் மொழியின் கிளை மொழிகளான அயன் மொழிகளை ஆய்வு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ் - சமற்கிருதம் - செமிட்டிக் மொழிகள் பற்றிய ஒப்பாய்வினை மேற்கொள்வதற்காக அளிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை, செம்மொழி நிறுவனத்திடம் 2008 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டது. பின்னர் 2011 ஆம் ஆண்டில் மீண்டும்

நினைவூட்டுதல் செய்து அறிக்கை தரப்பட்டது. இதுநாள் வரையிலும் கூட, இந்த அறிக்கைகளைப் பெற்றுக் கொண்ட தற்கான பதில் கடிதத்தைக் கூட செம்மொழி நிறுவனம் அளிக்க வில்லை யென்பதோடு, திட்ட அறிக்கையைக் கிடப்பில் போட்டு விட்டது. இது தொடர்காகப் பலமுறை நேரில் அணுகியபோது பல்வேறு காரணங்களை (நொண்டிக் சாக்கு என்று நாட்டுப் புறங்களில் கூறுவர்)ச் சொல்கின்றனர். இந்த அறிக்கை அளிக்கப்பட்ட பிறகு, பலருக்கு இலக்கங் கணக்கான உரூவாக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனம் தொடங்கப்பட்டதற்கான நோக்கமே இன்று திசைமாறிப் போய்விட்டது. மொழி ஆய்வுகள் மேற்கொள்ள, வேறு பல அறிஞர்கள் அளித்துள்ள திட்ட அறிக்கைகளும் இதுவரை ஏற்கப்படவில்லை. செம்மொழி நிறுவனம் உதவி அளிக்கா விட்டால், ஆய்வாளர்கள் தங்கள் முயற்சிகளை நிறுத்திவிடப் போவதில்லை. ஒரு பல்கலைக்கழகமோ அல்லது நிறுவனமோ மேற் கொள்ள வேண்டிய ஆய்வுப் பணிகளைத் தமது பொருளைச் செலவிட்டு மேற்கொண்டு வரும் ஆய்வாளர் களும் தமிழறிஞர்களும் இன்றும் உள்ளனர். அவர்களுக்கு எந்த உதவியையும் எவரும் செய்ய முன்வருவதில்லை. தமிழன் தன்னைத் தவிர எவரையும் அறிஞராக மதிப்பதில்லை ஏற்ப தில்லை என்ற நிலை இருக்கும் வரை, தமிழ் சற்று தாமத மாகத்தான் பெருமை பெறும். தமிழின் ஆழத்தையும் தொன் மையையும் அறிய இயலாதவர்களை, தமிழ் சார்ந்த நிறுவனங் களுக்கு அதிகாரிகளாக பணிக்கவும் கூடாது.

உலகில் முதன் மொழி தமிழே. முதல் இனம் தமிழரே என்பதை, தமிழ்மொழியையும் இனத்தையும் உயர்த்திக் கொள்ளக் கூறிவருகின்றனர் என்று நகையாடுவதையும் காண் கிறோம். தமிழைப் பற்றி ஆய்வு, உணர்வு மேலிட்டால் உந்தப் பட்டதன்று. முற்றிலும் வரலாற்று, அறிவியல் அடிப்படை களில் மேற் கொள்ளப்பட்டது மொழியியலின் அடிப்படை களைச் சார்ந்து நிற்பது. மொழியும் இனமும் தான் ஒரு நாட் டுக்குப் பெருமை சேர்ப்பன. இந்தத் தகுதிகள் இல்லாதவர்கள் நகையாடுவதைப் புறந்தள்ள வேண்டும்.

"உலகில் பல மொழிகள் உள்ளதாகப் பலரும் கருது கின்றனர். நம்முடைய பார்வையில் உலகில் இரண்டு மொழி களே உள்ளன. ஒன்று தமிழ், மற்றவை தமிழினின்றும் கிளைத்த திரிபுபட்ட பிற மொழிகள்."

வேதங்கள்

வேதங்கள் எக்காலத்தில் எழுதப்பட்டன என்ற கேள்விக்குத் தெளிவான விடையை இதுவரை எவரும் கூறவில்லை. ஒவ்வொரு ஆய்வாளரும் வெவ்வேறான கால அளவுகளைக் கூறிவந்துள்ளனர். உண்மையில் வேதங்கள் ஆரியர்களின் இலக்கியங்கள் தாமா? அதனை எழுதியவர்களும் ஆரியர்களா என்பதில் கூட ஆய்வாளர்கள் முரண்படுகின்றனர். ஆனாலும் வேதங்கள் ஆரிய இலக்கியங்களே என பரவலாகப் பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆரியர்கள் எந்த நோக்கத்திற்காக வேதங்களைப் படைத்தனர்? அவைகளில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் சமூகக் கட்டமைப்பிற்குப் பயன்தரக் கூடியனவா? வேதங்கள் படைக்கப்பட்ட பின் அதன் விளைவுகள் எவ்வாறு இருந்தன? இக்கேள்விகளுக்கு விடையளிப்பதும் கடினமான ஒன்றே.

வேதம் என்பது பரம் பொருளால் படைக்கப்பட்டது என்றும், இப்பேரண்டம் படைக்கப்பட்ட காலத்திலேயே, பரம் பொருள் வேதத்தையும் படைத்தார் என்றும் சொல்லப் படுகிறது. பரம் பொருளால் சொல்லப்பட்ட வேதம், காற்றில் ஒலி அலைகளாக எங்கும் பரவியதாகவும், அதனை இருடிகள் (ரஷிகள்) என்ற முனிவர்கள், தமது தவவலிமையால் ஈர்த்து, வேதத்தை வெளிப்படுத்தினர் என்பது ஒரு நம்பிக்கையாகும். அம்முனிவர்கள் தாங்கள் அறிந்து வெளிப்படுத்தினர் என்றும், அவற்றை வியாசர் என்ற முனிவர் நான்காகப் பிரித்தார் என்பதும் வேதம் பற்றிய செய்தியாகும். பாணினி வேதங்கள் மூன்று எனத் தமது அட்டத்தியாயி நூலில் குறிப்பிடுகிறார். மனுவும் அவ்வாறே மூன்று எனக் குறிப்பிடுகிறார் (வேதம் த்ரயாம்). எனவே இவ்விருவர் காலத்திற்குப் பிறகே வியாசர், வேதத்தை நான்காகப் பிரித்தார் எனலாம்.

வேதம் எதற்கு நான்காகப் பிரிக்கப்பட்டது? மிகப்பெரிய படைப்பான வேதம் நீண்ட நெடுங்காலம் நிலைத்திருக்கவும்,

பாதுகாக்கப்படவுமே அது நான்காகப் பிரிக்கப்பட்டது என்பர். வர இருக்கின்ற கலியுகத்தில் வேதம் அழிந்து போகாமல் இருக்க, வேதத்தை ரிக், யசூர், சாம, அதர்வணம் என வியாசர் பிரித்தார் என்பர். பிரித்து, அவற்றை சுமந்து, பைலர், சைமினி, வைசம் பாயனர் என்ற நான்கு முனிவர்களிடம் அளித்தார். சுமந்து முனிவரிடம் ரிக் வேதத்தையும், வைச பாயனரிடம் யசூர் வேதத்தையும், சைமனியிடம் சாம வேதத்தையும், பைலரிடம் அதர்வண வேதத்தையும் அளித்தார் என்பர். இந்த முனிவர்களிடம் வியாசர் அந்தந்த வேதத்துக்கான நூலை சுவடிகளில் எழுதிக் கொடுக்கவில்லை. வாய்மொழியாகவே கொடுத்தார். அதனை உள்ளத்தில் பதிவு செய்து கொண்ட மேற்கண்ட நான்கு முனிவர்களும், தத்தம் மாணவர்களுக்கு அறிவித்தனர். இவ்வாறு பல நூற்றாண்டுகள், வாய்வழி இலக்கியமாகவே (oral tradition) வேதங்கள் பாதுகாக்கப்பட்டன என்பர். வேதங்கள் முனிவர்களால், காற்றலைகளின்றும் ஈர்க்கப்பட்டு, அவை மற்றவருக்கு வெளிப்படுத்தப்பட்டு, இறுதியில் வியாசரால் தொகுக்கப்பட்டு, பிரித்தளிக்கப்பட்டது. இந்நிகழ்வுகள் நடைபெற்ற காலத்தையே வேதகாலம் என்று கூறுகின்றனர்.

வேதகாலம் என்பது எந்தக் கணக்கின்படி அறியப்படுகின்றது? வேதகாலம் என்பது கி.மு. 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று மாக்சு முல்லர் கூறுகிறார். பால கங்காதர திலகர், வேதகாலம் 8000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கிறார். வேதங்களை ஆய்வு செய்த செர்மானிய அறிஞர்கள், வேதகாலம் என்பது 25000 ஆண்டுகளுக்கும் கூடுதலானது என்பர். மேலும் உலகில் தோன்றிய முதல் இலக்கியம் வேதமே என்பது பலரது கருத்து. தயானந்த சரசுவதி என்பார் வேதகாலம் 28 சதுர் யுகங்களைக் கொண்டது என்றும், அதன் காலம் இன்றைக்கு 1960853036 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுகிறார்.[609] கிருதயுகம் அல்லது சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என அவை நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. கிருதயுகம் 17,28,000 ஆண்டுகள்; திரேதாயுகம் - 12,96,000 ஆண்டுகள் - துவாபரயுகம் - 8,64,000 ஆண்டுகள்; கலியுகம் - 4,32,000 ஆண்டுகள் என்பது ஒரு கணக்கு. இவ்வாண்டுகளைக் கூட்டி, 28 ஆல் பெருக்கி வரும் ஆண்டுகளே, வேதம் தோன்றிய காலம் என்பது மதிப்பீடு.

இதன் மூலம் தெரிவிக்கும் கருத்து யாதெனில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வேதம் படைக்கப்பட்டது என்பதே.

பரத்துவாச முனிவர் 1200 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந் தார். அக்காலம் முழுவதும் வேதங்களைப் படிப்பதிலேயே செலவிட்டார். ஆனாலும் முற்றிலும் அறிய இயலவில்லை. வேதங்களை முற்றிலும் அறிய இயலாமல் இறந்துவிடுவோ மோ என்ற உணர்வு முனிவருக்கு இருந்தது. இந்திரன் அதனை யுணர்ந்து, முனிவரின் ஆயுளை மேலும் 400 ஆண்டுகள் நீட்டித்துக் கொடுத்தான். அதனால் மகிழ்வுற்ற முனிவர், வேதங்களை அடுத்த 400 ஆண்டுகளில் அறிந்து முடித்துவிட வேண்டும் என விரும்பினார். இந்திரன் அவருக்கு எதிரே மூன்று மலைகளைத் தோற்றுவித்தான். ஒவ்வொரு மலையி லிருந்தும் ஒரு பிடி மண்ணை எடுத்து வந்து, முனிவரிடம் கொடுத்தான். மேலும் கூறினான், 11 முனிவரே நீர் இதுவரை கற்றுள்ளது இந்த மூன்று பிடி மண்ணைத்தான். எதிரே தெரியும் மூன்று மலையளவையும் கற்க உமது வாழ்நாள் போதாது, என்றான். இந்தக் கதை வேதம் மூன்றாயிருந்தது என்பதையும், வியாசரே அதனை நான்காகப் பிரித்தார் என்றும் சொல்லப்படுகின்றது.[610]

வியாசர் ஏன் வேதத்தை நான்காகப் பிரித்தார்? ஐந்து, ஆறு, ஏழு என்ற அளவில் பிரித்திருக்கக் கூடாதா? இக்கேள் விக்கு நேரிடையான விளக்கம் இல்லையென்றாலும், ஏதோ வோர் அடிப்படையில் தான் வியாசர் நான்காகப் பிரித்திருக்க வேண்டும் என்ற கருத்து தோன்றுகிறது. வியாசர் காலத்துக்கு முன்பு நான்கு வகையான சமயமுறைகள் இருந்திருக்க வேண்டும். அச்சமய முறைகள் வழிவழியாக மக்களின் வாழ்க்கையோடு நிலை கொண்டிருத்தல் வேண்டும். அதன் அடிப்படையிலேயே வேதம் நான்காகப் பிரிக்கப்பட்டது எனக் கருதலாம். சமய வழிபாட்டு முறைகள் நான்கு என்ற மரபு அக்காலத்தில் இருந்தது என்பதையே, வியாசரின் பிரிப்பு உணர்த்துகிறது. வேதச் சமயமே முதன்மையானது எனக் கூறப்படும் போது, அதற்கு முன்பும் ஒரு சமயம் இருந்த என்ற சிந்தனை தோன்றுகிறதல்லவா!

வேதம் என்ற சொல்லுக்கான பொருள் என்ன? அறிவு (knowledge) என்று பொருள் கூறுகின்றனர்.[611] வேதம் என்ற சொல்லுக்கு மக்கள் நடுவே பிடிப்பு ஏற்பட்டதாலும், அது

பரம்பொருளின் வாய்மொழி என நம்பப்பட்டதாலும், பைபிளும் வேதம் என்றே கிறித்துவர்களால் சொல்லப்பட்டது. தமிழரின் வேதம் திருக்குறள் என்று சொல்லப்படுகின்றது. தமிழ் வேதம் என நாலாயிரத் தெய்வப் பனுவலைக் குறிப்பி டுவர். பன்னிரு திருமுறைகளும் வேதநூலே எனலாம். வேதம் என்பது சமற்கிருதச் சொல் என்பர். தமிழில் சமயம் எனக் கூறுவர். சமைத்தல் என்றால், படைத்தல் அல்லது உருவாக் குதல். சமூகத்தில் அறநெறிகளைப் படைப்பதால், அது சமயம் எனப்பட்டது மறை என்ற சொல்லும் தமிழில் உண்டு. தீமைகளை நீக்கு என்ற பொருளில் சொல்லப்பட்டது என்க.

விள் என்ற தமிழ் மூலச் சொல்லுக்கு உடை, பிள, இரண்டாக்கு என்பதே பொருளாகும். ஓட்டை உடைத்து இரு கூறாக்கி, முளை வெளியே தோன்றுகிறது. இச்செயலை, விண்டு துளிர்த்தல் என்கிறோம். விள் + துளிர் என அறியலாம். விள் + து = வித்து எனப்பட்டது. வித்து, விதை என்றும் சொல் லப்பட்டது.

விதை = பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லுமாக அறியப்படும்.

விதை = உருண்டை அல்லது நீள் உருண்டை வடிவில் உள்ள மூலம். அம்மூலத்தில் இருந்தே முளைவிட்டு, இலைவிரித்து, கிளை பரப்பி, செடியாக, மரமாக அது விரிவடைகின்றது. மாந்தனின் மூளை அல்லது அறிவும், விதை போன்றே செயல்படுவதாகச் சொல்லப்பட்டது. தந்தையின் அறிவும் ஆற்றலும் மகனுக்கும் இருக்கும் என்பது உலக வழக்கு.

விதையொன்று போட சுரை ஒன்று முளைக்குமா?

இங்கு விதை என்பது தந்தையின் அறிவையும் ஆற்றலையும் குறிக்கின்றது. எனவே விதை என்பது அறிவு, திறமை, ஆற்றல் ஆகியவைகளின் உள்ளடக்கம் எனலாம். விதை வெடிக்க நீரும் நிலமும் வெப்பமும் தேவைப்படுவதைப் போல, அறிவும் ஆற்றலும் பெருக கற்பித்தல் தேவைப்படுகிறது. விதையை அல்லது அறிவை வளப்படுத்துவது பெருக்குவது கற்பித்தலால் நிகழ்கின்றது. விதை என்ற அறிவு திறன்பெறும் போது, அது வித்தை எனப்படுகின்றது. வித்தை, வித்யா என சமற்கிருதத்தில் திரிந்தது.

வித்தை (த) - வித்யா (ச) : அறிவு, கல்வி, திறமை, ஆற்றல், கைவினைத் தொழில், கண்கட்டி வித்தை என்றவாறு விரியும்.

வித்து - வித்தை - வித்யா என விரியும் சொல்லில் தோன்றியுள்ள சமற்கிருதச் சொற்களாவன:

வித்தியா சாலை : கல்லூரி, பல்கலைக்கழகம்.

வித்தியா தத்துவம் : கலையின் ஒரு பிரிவு.

வித்தியா தரிசிகள் : பள்ளிகளைக் கண்காணிக்கும் அதிகாரிகள் (Inspectors).

வித்யா தானம் : வறிய மாணவர்களுக்கு இலவயமாகக் கல்வியைக் கற்பித்தல்.

வித்யா பாரகன் : கலை, அறிவியல் மாணவன்.

வித்யாப்பியாசம் : பட்டறிவுப் பயிற்சி.

வித்யாரம்பம் : முதல் வகுப்பில் சேர்தல்.

வித்யார்த்தி : தனியொரு துறைக்கான மேற்படிப்பு மாணவன் (scholar).

வித்யாவந்தன் : கற்றறிந்தவன்.

வித்துவான் : புலவன், அறிஞன்.

வித்யா (ச) மேலும் விரிந்து வேதம் (ச) என்றானது.

வேதம் : அறிவு (knowledge) என்றே பொதுப் பொருளைத் தரும்.

வேதம் என்ற சொல், வேத கலாபம், வேதக்காரன், வேத சாத்திரம், வேத சாத்திரி, வேதசாட்சி, வேதசாரம், வேதநாயகன், வேத நூல், வேதபாரகர், வேதப்புத்தகம், வேத வியாசன் என விரியும்.

வேதாந்தம் : உத்தர மீமாஞ்ச நூலில், வியாசன் கூறியுள்ள தத்துவ மொழிகள்.

விள் - வித்து - விதை - வித்தை என்றவாறு விரிந்தது.

வித்யா - வேதா - வேதம் என சமற்கிருதத்தில் திரிந்தன. எனவே, வேதம் என்ற சொல், தமிழ் மூலத்தைக் கொண்டதே என்க.

வேதம் என்ற சமற்கிருதச் சொல்லுக்கு "மேலான அறிவு" (Supreme knowledge) என்றும், அறிவியல் (Science) என்றும் பொருள் கூறுவர்.

வேதங்கள் இறைவனிடமிருந்து கேட்கப்பட்டதால் சுருதி எனப்பட்டது. சுருதியை மறக்காமல் இருக்க அடிக்கடி மனப் பாடம் செய்து கொண்டே இருக்கவேண்டும். அதனால் சுருதி, சுமிருதி (Smruti) எனப்பட்டது.

சுமிருதி நூல் வடிவில் அல்லாமல், வாய்வழியே கற்று படிக்கப்பட்டதால், அது ஆம்னாயம் என்றும் சொல்லப் பட்டது.

ஒரு வேதம், நான்காகப் பிரிக்கப்பட்டு, அந்நான்கும் நான்கு முனிவர்கள் பொறுப்பில் விடப்பட்டன. அந்நால்வரும்

தம் வழிவந்த மாணவர்களால் நான்கு வேதங்களையும் மறையாமல் காத்தனர். நாளடைவில் ஒவ்வொரு வேதத்துக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் மாணவர்களாகி, வேதங்களை வெளிப்படுத்தினர். இவ்வாறு நான்கு வேதங்களும் பல்லாயிரம் முனிவர்களால் எடுத்துரைக்கப்பட்டன. இவ்வாறு பலரும் வேதங்களுக்குக் கூறிய விளக்கங்கள் தனித்தனி கிளை வேதங்களாயின. அவை வேதங்களை ஒட்டியும், மாறுபட்டும் இருந்தன. இந்தக் கிளை வேதங்களைச் சாகைகள் என்றனர். சாகை என்றால் சமற்கிருதத்தில் கிளை (branch) என்பது பொருளாகும்.[612] சாகை என்பதற்கு குடிசை வீடு என்ற பொருளும் உண்டு. ஜாகா என்பர். இப்போதும் பிராமணர்கள் தங்கள் வீடுகளை, ஜாகைகள் என்றே குறிப்பிடுவர்.

கை என்ற தமிழ்ச் சொல்லுக்கு நீண்ட என்பதே பொருளாகும்.

சாய்கை என்பது நீண்டு சாய்ந்திருக்கும் கிளையைக் குறிக்கும்.

அக்கிளைகளால் குறைகாலத்தில் கட்டப்படுவதே சாய்கை - சாகை எனப்படும்.

சாகை வீடு என்ற வழக்குச் சொல், இன்றும் நாட்டுப்புறங்களில் உள்ளது.

சாகை - ஜாகை - ஜாகா எனத் திரிந்தது.

வேதத்திலிருந்து அறிந்து கொண்ட பல்வேறு உண்மைகளை அறுவர் நூல்களாகப் படைத்தனர். அவை, சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம், நியாயம், வைசேடிகம் எனப்படும். முறையே இவைகளை, கபிலர், சைமினி, பதஞ்சலி, வியாசர், கோதமர், கணாதன் ஆகியோர் இயற்றினர். இவை வேதத்திற்கு அளிக்கப்பட்ட விளக்கங்கள் எனக்கூறினர். சாங்கியம் என்ற நூல், கடவுள் மறுப்பை வலியுறுத்துவது. மீமாம்சம் உலக வழக்குகள் பொருட்களைப் பற்றிக் கூறுவது. வேதாந்தம் முரண்பாடான வேத விளக்கங்களைக் கொண்டது. நியாயம் ஒலிகள், மாந்தச் செயல்கள், பொருட்களின் மீதான விருப்பங்களை விளக்குவது. வைசேடிகம் முற்றிலும் உலகம் சார்ந்தது. மேற்கண்ட நூல்கள், வேதங்களை விளக்க இயற்றப்பட்டன என்பதில் முரண்பாடுகள் உண்டு. கவிலன் (கபிலன்), செய்முனி (சைமினி), பதஞ்சொல்லி (பதஞ்சலி), வியலாசன் (வியாசர்), கோதாமன் (கோதமர்), கணியன் (கணாதன்) ஆகிய பெயர்கள், தமிழ் மூலத்திலேயே உள்ளன. மேற்கண்ட ஆசிரியர்களில் எவரும் ஆரியராக இருந்திருக்க வாய்ப்பில்லை.

வேதகாலத்தில் பத்து முனிவர்கள் இருந்ததாகவும், அம் முனிவர்களின் மரபுகளே (கோத்திரங்கள்) பிற்காலத்து ஆரிய ருக்குக் குலப் பெயராய் அமைந்தது என்றும் கூறுவர். இக் கோத்திரங்களின் பட்டியலை சுநாகர் ஒரு சுலோகத்தில் குறிப் பிடுகிறார். அந்த சுலோகத்தின் தமிழாக்கத்தை சிவத்தியாநா நந்த மகிரிஷி எழுதியுள்ளார்.[613]

கண்ணுவர், அங்கிரர், காணும் அகத்தியர்,
வண்ணச் சுநகர், வளர்விசு வாமித்திரர்,
நண்ணிய வத்திரி, நாடும் வசிட்டரோடு
ஒண்ணிய காசிபர் ஓங்கு பத்ர்யாச்சுவர்
எண்ணும் சமதக்கினியே. – ரிக்வேத ஸம்ஹிதை, ப. 43.

மேற்கண்ட பத்து முனிவர்களின் பெயர்களும் தமிழாக அல்லது தமிழ் மூலத்தைக் கொண்ட பெயர்களாகவே உள்ளன.

வேதப்பாடல்களை இயற்றியவர்களின் பெயர்கள் வருமாறு: 1. விசுவாமித்திர மரபின் மது சந்தஸ், 2. கண்ணுவன் மகன் மேததிதி, 3. சுநச்சேபன், 4. ஆங்கீரசன் மகன் இரணிய தூபன், 5. கோரன் மகன் கண்ணுவன், 6. கண்ணுவன் மகன் பெரிசுக் கண்ணுவன், 7. ஆங்கிரசன் மகன் சவியன், 8. கோதமன் மகன் நோதசன், 9. சக்தியின் மகன் பராசரன், 10. ரகுகணன் மகன் கோதமன், 11. கோதமன், 12. ஆங்கீரசன் மகன் குத்துசன், 13. மரீசி மகன் காயபன் (காசிபன்), 14. அபன் மகன் திருதன், 15. கட்சீவரன் என்றவாறு விரியும் மேற்கண்ட பெயர்களில் காணப்படும் தமிழ் மணத்தை நுகர்க. மேற்கண்டவர்களில் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவரே பலரும் அறியப்படுகின்றனர். இதனால் வேதப்பாக்கள் இயற்றப்பட்ட காலம் ஒரு குறிப் பிட்ட காலம் அளவுக்குட்பட்டதே எனலாம்.

வேதம் (இரிக்குவை மட்டுமே குறிக்கும்) இயற்றப்பட்ட காலம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அனைவரும் வலியுறுத்துகின்றனர். ஆனால் ஆரியரின் இந்திய வருகை கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகே என்று வரலாற் றாய்வாளர்கள் கூறுகின்றனர். வேதம் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டதென்றால், வேதத்துக்கும் ஆரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனலாம். பின்னர் ஆரியர்கள் வேதம் தம்முடையதே என்று எவ்வாறு கூறுகின்றனர்? வேதம் என்பது ஒரே கால அளவில் இயற்றப்பட்டது அன்று. வேதம் மூன்று நிலைகளாக அறியப்படும்.

1. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையுமுன்பாக இருந்த வேதம். இதனை வேதம் என்று அக்காலத்தில் எவரும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்க இயலாது.

2. ஆரியர்கள் இந்தியாவில் வாழ்ந்திருந்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட பட்டறிவுகள்.

3. பழமையான வேதமும், ஆரியரின் பட்டறிவும் கலந்த புதிய வேதம்.

எனவே, பழங்காலம் தொட்டு, வேதம் தொகுக்கப்படும் காலம் வரையிலும், பல நூற்றாண்டுகள் வாய்மொழியாகவே பல தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வேத வியாசர் வேதங்களைப் பிரித்துத் தொகுத்தார் என்ற குறிப்பு உள்ளது. அதனை எழுத்து வடிவில், சுவடிகளில் அவர் பதிவு செய்தாரா என்ற கேள்வி எழுகின்றது. தற்போது கிடைத் துள்ள சான்றுகளின் படி சமற்கிருத மொழிக்கான எழுத்து வடிவம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே அறியப் படுவதால், வேதங்கள் அதற்குப் பிறகுதான் எழுத்துவடிவில் பதிவு செய்யப்பட்டன எனலாம். வேதங்கள் மற்றும் சமற்கிருத மொழியைப் பற்றி விரிவாக ஆய்வு செய்த 19ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த மோனியர் வில்லியம்சு (Monier Williams) வேதம் பற்றிய குறிப்புகளை, தனது ஆங்கில - சமற்கிருத அகராதியில் பதிவு செய்துள்ளார். வேதம் (Veda) என்ற சொல்லுக்கு அவர் கொடுத்துள்ள விளக்கத்தில்,

"Veda : Knowledge, true or sacred knowledge, or lore, knowledge of ritual. Number of certain celebrated works which constitute the basis of the first p eriod of the Hindu religion (these three works were p rimarily three, viz. 1. the rig veda, 2. the yajur veda (of which there are, however two divisions, taitiriya - samhita, vajasaneyi - samhita), 3. the Sama veda; these three works are sometimes called collectively trayi, the trip le veda or three fold knowledge, but the rig veda is really the only original work of the three and much the most ancient and oldest of its hymns being assigned by some who rely on certain astrological calculations to a p eriod between 4000 and 2500 B.C., before the settlement of the Aryans in India; and by others who adop t a different reckoning to a p eriod between 1400 - 1000 B.C., when Aryans had settled down in the P unjab...."

என்று தொடர்ந்து எழுதுகிறார்.[614]

மோனியர் குறிப்பிடும் செய்திகளாவன:

1. வேதம் என்பதற்கு அறிவு என்பதே பொருளாகும்.

2. இந்து சமயத்தின் தொடக்க காலத்தில் (இந்து சமயம் என்ற பெயர் அக்காலத்தில் இல்லை. அது கி.பி. 1793ஆம் ஆண்டில் வில்லியம் ஜோன்ஸ் என ஆங்கிலேயரால் சூட்டப் பெற்றது) ரிக், யசூர், சாம வேதங்கள் அறியப்பட்டிருந்தன.

3. இவை மூவேதங்கள் என்று சொல்லப்பட்டன.

4. இம்மூன்றில் ரிக்வேதமே பழமையானது.

5. ரிக் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள வானியல் தொடர்பான செய்திகள் அனைத்தும் ஆரியர்கள் இந்தியாவிற்கு வருமுன்னரே, அதாவது கி.மு. 4000 ஆண்டுகளில், இந்தியப் பழங்குடியினரால் (தமிழர்களால்) கண்டறியப்பட்டு தொகுக்கப்பட்டவை.

6. கி.மு.1400 - 1000 ஆண்டுகளில் ஆரியர்கள் பஞ்சாபில் குடியேறிய போது, ஏற்கனவே இந்தியப் பழங்குடியினர் கூறியிருந்த கருத்து களைத் தழுவியும், மாறுபட்டும் பலவற்றை வேதத்தில் இணைத்துக் கொண்டனர்.

மேற்கண்ட செய்தியில், எண் 5 இல் குறிப்பிட்டுள்ள வானியல் தொடர்பான குறிப்புகள், ஆரியருடையதன்று என்ற உண்மையை, மோனியர் வில்லியம்சு தெளிவுபடுத்துகிறார். எனவே வேதக் குறிப்புகள், ஆரியர் வருமுன்னரே இயற்றப் பட்டன என்பது வேதத்தின் முதல் நிலையாகும். ஆரியர்கள் பஞ்சாபில் குடியேறிய பிறகு, அங்கு தங்களுக்கேற்பட்ட பட்டறிவின் அடிப்படையில், பல செய்திகளைத் தந்துள்ளனர். இது இரண்டாவது நிலையாகும். வேதவியாசர் இந்த இரண்டு கால அளவிலான வேதத்தைக் தொகுத்தபோது, தமது கருத்துக்களையும் வேதத்தில் இணைத்துக் கொண்டனர். வியாசரை தொகுப்பாளர் (compiler) என்று கூறுகின்றனர். அது முற்றிலும் தவறான கண்ணோட்டமாகும். வியாசரை தொகுப் பாளர் என்று கூறுவதைவிட, விளக்கவுரையாளர் என்று கூறுவதே பொருத்தமானதாகும். எவ்வாறெனில், வியாசர் என்பது அவரது இயற்பெயர் அன்று. விளக்கவுரை எழுதிய தால் வியாசர் எனப்பட்டார். அது காரணப் பெயராகும்.

வியல் (தமிழ்) : எங்கும் விரிந்து பரந்து நிற்பது.

வியல் : அகலம், விரிந்துள்ள காடு, விரிந்த பெருமை, புகழ்.

வியல் + ஆழன் : விரிந்து பரந்து பெருத்துள்ள கோள், வியாழன்.

வியவு : பரந்து விரிந்த வழி; வியவன் = பயணி.

விய - வியா என சமற்கிருதத்தில் திரிந்தது. விய - வியா - வியாபி (ச.).

வியல் என்ற தமிழ்ச் சொல்லின் சமற்கிருதத் திரிபுகளும் வியவாக உள்ளன.

வியாகரணம் (விரிந்த அறிவு), வியா கூலம் (தொடர் கலக்கம்), வியாக்கியானம் (விரிந்த உரை), வியாக்கிரம் (விரிந்து தாவும் கால்கள்), வியாசம் (எங்கும் பரவும் நோய்) வியாபாரம் (விரிவான வணிகம்), வியாபி (பரந்திருத்தல்) என விரியும்.

எனவே, வியாசன் என்ற பெயர், விரிவுரையாளன் என்ற பொருளையே தருவதோடு, தமிழ் மூலத்தைக் கொண்ட பெயருமாகும். வேதத்தின் பல பகுதிகளை இயற்றிய ஆசிரியர்களின் பெயர்கள், தமிழ் மூலத்தைக் கொண்டவைகளாக உள்ளன. அவர்கள் வடித்த வேதப்பாடல்கள் அனைத்தும், ஆரியரின் வருகைக்கு முன்பு இயற்றப்பட்டவைகளாகும். அதன் மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரியர்கள் பல செய்திகளைத் திணித்துள்ளனர். ஒவ்வொரு நிலையிலும் இயற்றப்பட்ட வேதப்பாடல்கள் அக்காலத்திய நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்றன.

1. தொடக்கத்தில் வேதப்பாடல்கள், வானியலை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் வணங்கி வந்த ஐம்பூதங்களான தீ (அக்கினி), நீர் (இந்திரன்), நிலம் (பூமாதேவி), வளி (வாயு), வானம் (ஆகாயம்) ஆகியவற்றோடு திதி (தென்மண்டலம்), அதிதி (வட மண்டலம்), வசுக்கள் - ஆதித்யர்கள் - விசுவதேவர்கள் (விண்மீன்கள்), சூரியன், நிலவு (சோமம்), அஸ்வினி முதல் ரேவதி உள்ளிட்ட மீன் கூட்டங்கள், வருணன், மித்திரன், பூசன், துவஷ்டன், ருத்திரன், விஷ்ணு, சரசுவதி, உஷா என்றவாறு, பல்வேறு வானியல் தொடர்பானவைகளையும் வணங்கி வந்துள்ளனர். கோள்களும் இவைகளில் அடங்கும்.

2. வானியல் தொடர்பானவற்றிற்கு, மாந்த உருவம் கொடுத்து, கற்பனைக் கதைகளாக்கி, அவைகளை வணக்கத்துக்குரியவர்களாக்கினர். மாந்தனின் வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட அனைத்தும் வணக்கத்துக்குரியவைகளாயின. விலங்குகளும் இந்தப் பட்டியலில் அடங்கும்.

3. பழமையான இந்தியக் குடியினராகிய தொல்தமிழ்க் குடியினர் பல கடவுள் வணக்க முறைகளைக் கொண்டிருந்தனர் என்பதை

வேதமும், வேதத்திற்குப் பிறகு கிடைத்துள்ள பிறசான்றுகளும் தெளிவுபடுத்துகின்றன.

4. பழங்காலத்து இந்தியக் குடிகளின் சமயமே, வானியலை அடிப் படையாகக் கொண்டதுதான்.

5. மேற்கண்ட கடவுளரிடம் தங்கள் விருப்பங்களைத் தெரிவித்து வேண்டிக் கொண்டனர்.

ஆரியரின் கண்ணோட்டத்தில் வேதக் கருத்துகளில் மாறுதல்கள் தோன்றின.[615]

1. இந்தியக் குடியினரின் கடவுள்களையே ஆரியரும் ஏற்றுக் கொண்டனர். புதிய தெய்வங்கள் எவரையும் (பிரம்மாவைத் தவிர) அவர்கள் அறிமுகம் செய்யவில்லை.

2. ஆரியர்கள் இந்தியக் கடவுளரை ஏற்றிப் போற்றியதோடு, தங்கள் தேவைகளை வெளிப்படுத்தவும் தயங்கவில்லை.

3. தம் விருப்பத்தின் ஒரு பகுதியாக, தமது பகைவரை (தமிழர் களை) ஒழித்துக் கட்ட கடவுளர் உதவி புரிய வேண்டும் என்ற கோரிக்கைகளையும் வைத்தனர்.

4. வேதத்தின் பல்வேறு இடங்களில், நூற்றுக்கணக்கான சூழல் களில், தங்கள் பகைவரை ஒழிக்க யாகங்கள் செய்துள்ளனர். இது முதல் நிலை வேதக் கருத்துக்கு மாறுபட்டதும் முரண்பட்டது மாகும்.

5. பகைவர்களாக ஆரியர்கள் காட்டிய மக்கள், இந்தியப் பழங்குடி யினரே எனலாம்.

6. வேதங்களின் பெரும்பாலான செய்திகள், தங்கள் பகைமீது ஏவி விடப்பட்ட போர்களையே சுட்டுகின்றன.

வியாசரின் பார்வையில் மேலும் வேதக் கருத்துகள் விரிந்தன.

1. முதல் இரண்டாம் நிலையிலான வேதம் எவ்வாறு இருந்தது என்பதற்கானச் சான்றுகள் இல்லை. எனினும் அவ்வாறான நிலைகள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

2. வேதவியாசர் அனைத்துச் செய்திகளையும் தொகுத்து, விளக்க மாக வேதத்தை அளித்தார். அதுவே இன்று அறியப்படும் வேத மாகும். திருத்தப்பட்ட புதிய வேதத்தில் வேத வியாசரின்

காலத்தில் தாக்கங்களும் இடம்பெற்றன. வியாசரின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். எவ்வாறெனில், பாணினி (கி.மு. 5ஆம் நூற்றாண்டு என்பர்) தனது நூலில் வேதம் மூன்றே எனக் குறிப்பிடுகிறார். அம்மூன்றையும் நான்கு வேதங்களாகப் பிரித்தார் என்ற செய்தியால், பாணினியின் காலத்துக்குப் பிறகே வியாசர் வாழ்ந்திருந்தார் என்பது அறியக் கிடக்கின்றது.

3. வியாசரின் தொண்டர்களாகக் கருதப்படும் சுமந்து, பைலர், சைமினி, வைசம்பாயனர் போன்றோரும், கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்களே.

4. வியாசர் வேதங்களை வாய்மொழியாகத் தமது சீடர்களிடம் அளித்தாரா அல்லது ஓலைச் சுவடிகளில் அளித்தாரா என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஓலைச் சுவடிகளில் அளித்திருந்தால், அது சமற்கிருத மொழியில் எழுதப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

5. சீடர்களின் சீடர்கள் கற்றுத் தெளிந்த வேதங்களை, கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே சமற்கிருதத்தில் எழுதினர்.

6. எழுதப்பட்ட காலத்திலும் பல்வேறு கருத்துகள் திணிக்கப் பட்டிருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, மனு என்பவர் எழுதிய மனு (நீதி!) நூல், கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தென்பர். கி.பி. நான்காம் நூற்றாண்டு எனவும் சிலர் கூறுகின்றனர். அம்மனு நூல் எழுதப்படாமல் வாய்வழியே சொல்லப்பட்டு, நூற்றாண்டுத் தலைமுறைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு வந்தது. ஆங்கிலேயர் இந்தியாவின் முதல் நடுவர் மன்றத்தை கல்கத்தாவில் தொடங்கிய போது, இந்தியர்களுக்கு எந்தச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்குவ தென்று தெரியாமல் தடுமாறினர். அப்போது வங்காளத்தின் ஆளுநராக இருந்தவரும், நடுவர் மன்றத் தலைவராக இருந்த வருமான வில்லியம் ஜோன்சு, கிறித்துவர்களுக்கு பைபிளையும், இசுலாமியருக்குக் குர்ஆனையும், சீக்கியர்களுக்குக் கிரந் தத்தையும் அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கப்படும் என அறிவித்தார். இச்சமயங்களைச் சாராத பிறரை இந்துக்கள் என அறிவித்தார்.[616] அதுவரை இந்தியச் சமயத்துக்குப் பெயரே இல்லாமல் இருந்தது. இந்துக்களுக்கு எதன் அடிப்படையில் நீதி வழங்குவது என பிராமணர்களைக் கேட்டபோது,

எங்களிடம் இந்தியர்களுக்கான மனுநீதி நூல் உள்ளதெனக் கூறினர். அச்சட்டத் தொகுப்பை அவர்கேட்டபோது, அதன் மூலத்தைத் தேடிக் கண்டுபிடிக்க காலக் கெடுவொன்றையும் கேட்டனர். அக்காலக் கெடுவிற்குள் தாங்கள் கேள்விப்பட்டிருந்த, அறிந்திருந்த, பிறர் கூறிய செய்திகள் அனைத்தையும் தொகுத்து, அக்காலச் சூழலில் தமக்குப் பாதுகாப்பெனக் கருதிய சில சட்டக்குறிப்புகளையும் இணைத்து, முதன் முதலாக மனுநீதி நூல் ஒன்றை ஆளுநரிடம் அளித்தனர். அந்த நூலில், மனு சொல்லியதும் சொல்லாததுமான பல சட்டக் குறிப்புகள் இருந்தன என்று அம்பேத்கர் உள்ளிட்ட ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே, மனுநூல் என்பது, கி.பி. 1793ஆம் ஆண்டில் எழுதப்பட்டதே என்க.

மனுநூலைப் போன்றே காலம் தோறும் பல்வேறு சேர்க்கைகள், வேதங்களில் இணைக்கப்பட்டன. இறுதியாக எழுதப்பட்ட வேத நூல்களில் ஏற்கனவே விடுபட்டுப் போயிருந்த தமிழரின் அறிவியல், வானியல், கணக்கியல், ஆன்மவியல் போன்ற செய்திகள் இணைக்கப்பட்டன. எனவே வேதம் என்பது சிந்துவெளிக் காலம் தொடங்கி (கி.மு. 10000) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலான பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்புகளாகவே உள்ளன என்பது அந்நூல்களை உன்னிப் பார்த்து ஆய்வு செய்தவர்களால் உணரமுடியும்.

7. குறிப்பாக சமண புத்த சமயங்கள் தோன்றி வளர்ந்த காலங்களில், ஆரியர்களின் செல்வாக்கு அடியோடு தளர்ந்து போயிற்று. இந்தியக் குடிகள், ஆரியரை வெறுத்த காலம் அது. அக்கால அளவில் இணைக்கப்பட்டவைகளே. ஆரியர்களின் பகைவர்களைப் பற்றிய செய்திகளாகும். இச்சமயங்கள் ஆரியர்களை எந்த அளவிற்கு புறந்தள்ளின என்பதை, வேதங்கள் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் சுட்டுகின்றன. பகைவரை வீழ்த்த கடவுளிடம் வேண்டுவது தொடர்பான செய்திகள், ஆரியர்கள் அக்காலத்தில் அச்சத்தில் இருந்தனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

எனவே, வேதம் என்பது தொல் தமிழர் வணங்கி வந்த தெய்வங்களையும், அவர்களது வானியல் உருவகக் கதைகளையும் அடிப்படைகளாகக் கொண்டு, ஆரியர்கள் வட இந்தியாவில் பெற்ற பட்டறிவின் தொடர் நிகழ்வுகளை மையப்படுத்தி, வேதவியாசரால் விரித்துரைக்கப்பட்ட நூலே

எனக் கருதலாம். இந்நூலை உருவாக்கியதில் ஆரியரின் பங்கு எவ்வளவு என உறுதியாகக் கூற இயலாது. எவ்வாறெனில் தமிழரின் அனைத்து வணக்க முறைகளையும் தமதாக்கிக் கொண்ட ஆரியர்கள், அவைகளைத் தம்முடையதாகவே சிற் சில மாற்றங்களோடு அறிமுகம் செய்துவிட்டனர். எனவே, வேதம் என்பது தமிழர்களின் வாழ்க்கைச் சூழல்களில், ஆரியர்கள் புகுத்திய கொள்கைகளின் தொகுப்பே எனக் கூறுதல் மிகையன்று.

வேதங்களில் காணப்படும் தமிழரின் மரபுகள், வழக்குகள், வழக்காறுகள் தெளிவாக உள்ளன. வேதங்களில் பயன்படுத்தப் பட்டுள்ள சமற்கிருத மொழியின் பலநூறு சொற்கள் தமிழா கவும், தமிழ்த் திரிபாகவும் உள்ளன. தமிழரிடையே வழக்கில் இருந்த தொன்மக் கதைகள், வேதக் கதைகளாகக் காட்டப் பட்டுள்ளன. தமிழர் சமயத்தைத் தமதாக்கிக் கொண்ட ஆரியர்கள், தமிழர் மீது பகைமையை தோற்றுவிக்கும் கருத் துகளை வேதங்கள் முழுவதிலும் நிறைத்துள்ளனர். தமிழரின் மெய்யியல் கொள்கைகள் ஆரியப் பூச்சுகளாக வெளிப்பட் டுள்ளன. தமிழரின் அறிவுச் செல்வங்களைத் தம்முடையன போல் காட்டும் நேர்த்தியான, கமுக்கமான, தந்திரமான நடவடிக்கைகளில் ஆரியர்கள் சிறந்து விளங்கினர் என்பதை மறுக்க இயலாது. ஆரிய மரபினரின் முன்னோர்கள் என அறியப்படும் சில இனங்களும், இக்கைதேர்ந்த (திருட்டு)க் கலையை பலவாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதை மேலை வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன.

இருக்கு வேதம்

இனி, இருக்கு வேதம் சொல்லுகின்ற செய்திகளை, தமிழ்க் கண்ணோட்டத்தில் காண்போம்.

வியாசர் இருக்கு வேதத்தை பைலர் என்ற முனிவருக்கு அறிவித்தார். பைலர் பலருக்கு அறிமுகம் செய்தார். வழிவழி யாக இருக்கு வேதம் பரவலாக அறியப்பட்டது. இருக்கு வேதம் சமற்கிருத மொழியில் எழுதப்பட்ட காலத்தில் (கி.பி. 200) சமற்கிருதம் பலராலும் அறியப்பட்டிருக்கவில்லை.[617] எக் காலத்தும் சமற்கிருதம் மக்களின் பேச்சு மொழியாக இருந்த தில்லை யாதலால், வேதம் படிப்பவர்கள் மட்டுமே சமற்கிரு தத்தைக் கற்றனர். கி.பி. 18ஆம் நூற்றாண்டில், ஏராளமான

ஐரோப்பியர்கள், குறிப்பாக செர்மானியர்கள் சமற்கிருதத்தைக் கற்க ஆர்வம் கொண்டிருந்தனர். பலர், ஆரியரைக் காட்டிலும் மிகுந்த புலமையும் பெற்றிருந்தனர். குறிப்பாக மாக்சு முல்லர், வில்சன், மோனியர் வில்லியம்சு போன்றோர் சமற்கிருதத்தில் பல்வேறு நூல்களைப் படைத்தனர்.[618] மாக்சுமுல்லர் இருக்கு வேதத்தைத் திறம்பட ஆய்வு செய்தார். வில்சன் இருக்கு வேதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இந்நூலே சமற்கிருத மொழி அறியாதவர்கள், இருக்கு வேதத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவியது. மோனியர் வில்லிம்சு மூன்று இலக்கத்திற்கும் மேற்கொண்ட சமற்கிருத - ஆங்கில அகராதியைத் தொகுத்தார். இந்திய சமற்கிருதப் பண்டிதர்கள் எவரும் செய்யாத மிகப்பெரிய பணியாக அந்த அகராதி அமைந்திருந்தது. ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் பர்ரோ, சமற்கிருதத்துக்கு தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளுக்கும் உள்ள உறவுகளைப் பற்றி ஆய்வு செய்தார். மேலை நாட்டவரே, இந்தியாவிலும், உலக அளவிலும் இருக்கு வேதம் பற்றிய செய்திகளைப் பரப்பினர்.

தமிழ் நாட்டவரும், இவ்வாங்கில மொழி பெயர்ப்பு களைப் படித்த பின்னரே அவ்வேதம் பற்றிய தெளிவைப் பெற்றனர். அதற்கு முன்பாக தமிழர்கள் சமற்கிருத மொழியைக் கற்க வாய்ப்பில்லாமல் இருந்தது. ஒரு மொழி பரவலாகப் பேசப்படுவதற்கு அம்மொழியைப் பேசுகின்ற மக்கள் கூட்டம் பெருமளவில் இருக்கவேண்டும். அம்மொழியை வளர்க்கவும் அறிஞர்கள் வேண்டும். அறிஞர்களுக்கு உறுதுணையாக ஆட்சியாளர்கள் இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட மக்கள் பேசுகின்ற மொழியிலேயே சமய வழிபாட்டு முறைகளும் இருக்க வேண்டும். இத்தகைய தகுதிகள் எவையும் சமற் கிருதத்துக்கு இல்லாமற் போனது. சமற்கிருதம் கற்றிருந்த அறிஞர்களின் படைப்புகளைப் படிக்கவும் புரிந்து கொள் ளவும் மக்கள் இல்லாமற் போயினர். வீடுகளிலோ, கடைத் தெருவிலோ, பணியிடங்களிலோ எங்குமே சமற்கிருதம் பேசப் படவில்லை. முற்றிலுமாக அது சமய மொழியாகவும், அறிஞர் மொழியாகவுமே தனிமைப்பட்டுப் போனது. சமற்கிருத இலக்கியங்களை பிராமணர்கள் மட்டுமே படிக்கவும், மற்றவர் மறுக்கப்படவுமான சூழல்கள் இருந்தன. இப்போதும்கூட தமிழர்கள் சமற்கிருதம் கற்பதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன.

சமற்கிருதம் உலக மொழிகளில் செம்மொழியாகப் போற் றப்படுகின்றது. அது முற்றிலும் செம்மொழிக்கான தகுதி பெற்ற மொழியே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஏராளமான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சமற்கிருத மொழி இயல்பானதும் வளமையான சொற்களைக் கொண்ட மொழியுமாகும். அதனாலேயே மேலை நாட்டவர் இந்திய ஐரோப்பிய மொழிகளில் அக்கை மொழி சமற்கிருதம் என்றும், இளைய தங்கை மொழி ஆங்கிலம் என்றும் குறிப்பிடுகின்றனர். இந்திய மொழிகளில் தமிழுக்கு இணை யான செம்மொழி சமற்கிருதம் மட்டுமே எனலாம். சமயத் தொடர்புகளால் வளர்ந்த சமற்கிருதம், பிராமணர்களின் பிடிவாதப் போக்கினால் மக்கள் பேசும் மொழியாக மாற வில்லை. சூத்திரர்கள் வேதங்களைப் படிக்கக் கூடாது என்ற ஆரிய நிலைப்பாடு, சமற்கிருதம் வளர்ச்சியடையாமற் போன தற்கான காரணங்களில் ஒன்றாகும். சமற்கிருத மொழியை மக்கள் மொழியாக மாற்றத் தவறிய குற்றத்தைப் புரிந்தவர் களும் பிராமணர்களே.

சமற்கிருதமே உயர்ந்த மொழியென்றும், தெய்வீக மொழி யென்றும், மற்றெந்த மொழிகளிலும் கடவுளோடு தொடர்பு கொள்ள இயலாது என்ற அடாவடித்தனமான, கடவுளுக்கே விருப்பமில்லாத ஒரு கொள்கையை ஆரியர்கள் மற்ற மொழிக் காரர்கள் மீது திணித்ததால், ஆரியர் மீதிருந்த வெறுப்பு சமற்கிருத மொழிக்குத் தாவியது. உண்மையிலேயே சமற்கிருத மொழியைச் சிறுமைப் படுத்தியவர்கள் பிராமணர்களே.[619] குறிப்பாக தமிழ்மொழியைச் சிறுமைப்படுத்தியதோடு, தமிழ் இலக்கியங்களில் பலவற்றை சிதைத்தும் தாறுமாறாக மொழி மாற்றம் செய்தும், தமிழை நீச மொழி என இழித்தும் பழித்தும் கூறிய பிராமணர்களின் செயல்பாடுகளால், சமற்கிருத மொழியின் மீது தமிழர்களுக்கு வெறுப்பு ஏற்படவும், பகையுணர்வு கொள்ளவும் காரணமாயிருந்தவர்களும் பிராமணர்களே. இசுலாமியர் தமது சமய மொழியாக அரபுமொழியைக் கொண்டிருந்தாலும், தமிழைச் சிதைத்து அரபுமொழியைத் தமிழர் மீது திணிக்கவில்லை என்ற உண்மையை பிராம ணர்கள் புரிந்து கொள்ளவில்லை. மேலும் இசுலாமியர்களின் தமிழ்ப் பற்றை குறைத்து மதிப்பிடவும் இயலாது. இந்த நடைமுறையை பிராமணர்கள் பின்பற்றத் தவறினார்கள். சமற்கிருதத்தின் மீது தமிழர்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு,

சமற்கிருத இலக்கியங்கள் மீதும் படர்ந்தது. குறிப்பாக வேதங் களைப் பற்றிய அறியாத தமிழர்கள் கூட, வேதங்களை இழிவு படுத்திப் பேச முற்பட்டனர். இவற்றிற்கெல்லாம் அடிப்படை யான காரணம், பிராமணர்களின் தலைக்கனமும் அடாவடித் தனமுமே என்றால் அது மிகையன்று.

சமற்கிருத மொழி பற்றி அறிந்த தமிழன் எவனும் அம் மொழியை வெறுக்க மாட்டான். சமற்கிருத மொழியை உருவாக்கியவர்களும் தோற்றுவித்து வளர்த்தவர்களும் ஆரியர்கள் அல்லர் என்பதை பிராமணர்கள் உணரவேண்டும். சமற்கிருதம் என்றமொழியை உருவாக்கித் தந்தவர்கள் தமிழர் களே என்பதும், தமிழே சமற்கிருததுக்கும் தாய்மொழி என்பதும் வரலாற்று உண்மைகளாகும். தமிழன் உருவாக்கிய சமற்கிருதத்தை தமிழனே அழிக்க முற்படமாட்டான். இடைக் காலத்தில் சமற்கிருத மொழியைக் கையில் எடுத்துக் கொண்ட ஆரியர்கள், அம்மொழியை தமக்குரியதாக்கிக் கொள்ள விரும்பினர், ஏற்றுக் கொண்டனர். பிற்கால சமற்கிருத மொழிக்கு அரும்பணிகளும் ஆற்றினர். குறிப்பாக கிரேக்கரின் இந்திய வருகைக்குப் பிறகு சமற்கிருதத்தை செம்மொழித் தகுதிக்கு மாற்ற ஆரியர்கள் அயராது உழைத்தனர். உழைப்பில் வெற்றியும் கண்டனர்.

மோனியர் வில்லியம்சின் கருத்துப்படி தொடக்க காலத்திய வேதம், சமற்கிருதமொழியில் சொல்லப்படவில்லை. மாறாக அது தமிழிலேயே சொல்லப்பட்டது. அடுத்த நிலையில் சமணர்களும் புத்தர்களும் தமக்கென புதுப்புது மொழிகளை வளர்த்துக் கொண்டபோது, வேதக் கருத்துகள் பிராகிருத மொழியில் சொல்லப்பட்டன. கிறித்துப் பிறப்பாண்டுகளுக்கு சற்று முன்பின்னாகவே வேதங்கள் முற்றிலுமாக சமற்கிருத மொழியில் எழுதப்பட்டன.

ருக்கு:

வேதம் என்ற சொல், வித்து என்ற தமிழ் மூலத்தில் திரிந்ததே என அறியலாம். இருக்கு என்ற சொல்லும் தமிழ் மூலத்தைக் கொண்டதே. ரிக்கு என சொல்லப்படும் அந்தச் சொல், உருக்கு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். ஒரு பொருளை உணர்த்த சொல்லப்படும் வரிகளே ருக்கு எனப் பட்டது. பல ருக்குகளின் தொகுப்பே அவ்வேதம் ஆகும்.

தேவர்களை அழைத்து அவர்களுக்கு விருந்து கொடுத்து மகிழ் வித்து, தமக்கு வேண்டிய தேவைகளை அவர்களிடத்தில் கூறி அதனைப் பெற்றுக் கொள்ளும் உத்தி, வேதத்தில் பல இடங் களில் காணப்படுகின்றது.

உருக்கு : கெட்டியான ஒன்றை இளக வைத்தல், நெகிழ வைத்தல். (to melt). கெட்டியாக ஒன்றை மேலும் மேலும் அடித்து, துவட்டி அதன் வடிவத்தை மாற்றுதல். பொதுவாக மாழங்களைக் காய்ச்சி வடித்தல் என்ற பொருளில் அறியப்படும்.

உருக்கு : விடாப்பிடியாக பற்றியிருக்கும் ஒருவருடைய எண்ணத்தை மாற்றுதல். பிடியினின்றும் தளர்த்துதல், தன் எண்ணத்துக்கு இசைவாகத் திருப்புதல். தன் கருத்தை ஏற்கச் செய்தல். (to convince).

பிறர் சிந்தனையை மாற்றுதல் உருக்கு என்றும், தன் சிந்தனை யிலேயே தளர்வைக் காணுதல் உருகு என்றும் சொல்லப்படும்.

உர் என்ற வேர்ச்சொல் நீண்டு உரு எனப்பட்டது.

உரு : மாந்த சிந்தனையில் அறியப்படும் வடிவம்.

உருக்கு: அவ்வடிவத்தில் செய்யப்படும் மாற்றம்.

உருக்கு - ரிக்கு என சமற்கிருதத்தில் திரிந்தது.

உருக்கு வேதம் : தேவர்களை அழைத்து, அவர்களுக்கு விருந்து வைத்து, அவர் மனங்களை மகிழ்வித்து, அவர்தம் சிந்தனை களைத் தம்பக்கம் ஈர்த்து, தம் தேவைகள் சரியானவையே என அவர்களுக்கு உணர்த்துதல். ருக்கு வேதம் முழுவதும், இவ்வாறான உருக்கும் செயல்களே நிகழ்வதைக் காணலாம். இச்செயலை வேண்டுதல் (Prayer) என்றும் கூடச் சொல்லலாம். ருக்கு வேதம் மந்திரங்களுக்கு சிறப்பளித்திருப்பதை நோக்குக. திரும்பத் திரும்பத் தன் விருப்பத்தைக் கூறுவது, கேட்பவரின் மனதை இளகச் செய்யும். ஒரு முறை கூறுவது வேண்டுதல் (Prayer). அதனையே திரும்பத் திரும்பக் கூறுவது மந்திரம் (chanting). இந்த உத்தி ருக்கு வேதம் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ருக்கு வேதம் என்பது, தமிழ் மூலத்தின் திரிபுச் சொற்களே.

ருக்கு வேதத்தில் கடவுளரைப் பற்றிய செய்திகள் இல்லை. மாறாக, தேவர்களைப் பற்றிய செய்திகளே மிகுந்து காணப்படு கின்றன. 33 என்ற எண் எப்படி வந்தது? இதுவும் ஓர் உருவகமே.

தமிழில் உள்ள எழுத்து மற்றும் ஒலி அமைப்பான குறுக்கணக்கு முறையே, 33 தேவர்களுக்கும் மூலமாக உள்ளதை அறியலாம்.

12 ஆதித்தர்கள் = தமிழின் 12 உயிரெழுத்துகளை உருவகம் செய்வோர்.

11 உருத்திரர்கள் = சொல்லின் முதலெழுத்தாக வரும், தமிழின் 10 மெய்கள் மற்றும் ஆய்தம் 1.

8 வசுக்கள் = சொல்லின் முதலெழுத்தாக வராத மெய்கள்.

2 அசுவினியர் = வசத்காரனும் பிரசாபதியும் எனப்படும், தமிழின் குற்றியலுகரம் மற்றும் குற்றியலிகரம் என்ற ஒலிகள்.

33 = தமிழின் அடிப்படையான எழுத்தொலிகள் 33.

இந்த உருவகம், ஒவ்வொரு தமிழ் எழுத்தையும் ஒலியையும் ஒவ்வொரு தேவர்களாகச் சுட்டுகின்றது. வேதம் குறிப்பிடும் தேவர்கள், தமிழின் உருவகங்களே என்க. இதே கருத்தின் அடிப்படையில் பாபிலோனியக் கடவுளர் 3300 என்றும், சுமேரியக் கடவுளர் 330 என்றும், பிற்காலத்தில் ஆரியத் தொன்மங்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள் என்றும் கூறுகின்றன. இது தமிழ் எழுத்துக்கள் உருவாக்கிய தமிழ்ச் சொற்களைக் குறிக்கும் உருவகமாகும். நம்மில் பலர், 33 கோடி தேவர்கள் என்ற கதை, நம்பக் கூடியதா என்று கேட்டனர். அதன் உட்பொருளை நம்மில் பலர் அறியாமற் போயினர். உண்மையில் 33 கோடி தேவர்கள் என்பது, தமிழில் அறியப் படும் கோடிக்கணக்கான சொற்களையே குறிக்கும். இதன் உட்பொருள் யாதெனில், தமிழில் எண்ண முடியாத சொற்கள் உள்ளன என்பதே. இந்த உருவகம் பற்றிய செய்தியைப் பரி பாடல் தெளிவுபடுத்துகிறது.[620]

> **திதியின் கிறாரும் விதியின் மக்களும்**
> **மாசில் எண்மரும் பதினொரு கபிலரும்**
> **தாமா இருவரும் தருமனு மடங்களும்**
> **மூவேழு உலகமும்** – பரிபாடல் 3:7–10.

உருத்திரர்கள்:

தமிழில் ரகரம் சொல்லுக்கு முதல் எழுத்தாக வருவ தில்லை. ரகரம் உள்ள அதன் தொடர் எழுத்துகளுக்கு முன்பாக, தமிழின் உயிரெழுத்துக்கள் வரும். ருக்கு என்ற சொல்லுக்கு முன் அறியப்படும் உகரம் போல, ருத்திரர் என்ற சொல்லுக்கு முன் உகரம் இருக்கும். உருத்திரர் என்பதே தமிழ்ச் சொல்லாகும்.

உரு : உருவம், வடிவம், கண்ணுக்குப் பளிச்சென புலனாகும் பொருள் அல்லது நிறம்.

உருத்து : இடர்ப்படத்து, நெருக்கு என விரியும்.

வானில் குறிப்பிட்ட சில விண்மீன்கள், செவ்வொளியை உமிழ் பவை. அவை வெறுங் கண்களுக்கே பளிச்செனத் தோன்றும். கண்களை உருத்தும் அவ்வொளிகளாகிய விண்மீன்களையே,

உருத்திரர் என்றனர். கபிலர் எனப் பரிபாடல் குறிப்பிடுவது, கப்பு நிறம் அல்லது செந்நிறத்தையே என்க.

கப்பு - கப்பிலம் - கபிலம் - கபிலர் என விரிந்தது.

உருத்திரர்களின் கணக்கு பலவாறாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்த உருத்திரர்களுக்குத் தலைவனாக, உத்திரன் சொல்லப்படுகிறான். இந்த உருத்ரன் என்ற மீன், ஓரியன் கூட்டத்தில் மிகுந்து ஒளிரும் ஆதிரை அல்லது திருவாதிரை என்ற மீனே. அவனையே சிவனாகத் தமிழ்த் தொன்மங்கள் கூறுகின்றன. வேதத்தில் சொல்லப்படும் விளக்கங்களைவிட, உருத்திரனைப் பற்றித் தமிழ்த் தொன்மங்கள் விரிவாகப் பேசுகின்றன. உருத்திரனையும் அசுரன் என்றே ருக்கு வேதம் கூறுகிறது. மிருகவ்யதன் என்கிற கத்திரி மீன், சர்வன் என்கிற ஆயிலியம் அல்லது கண் செவி, மூலத்தின் முதல் தெய்வமான நிருதி, பகன், முடப்பனை எனப்படும் அனுசம், பெருந் தலைவன் என்ற அசா, ஐந்திரம் எனப்படும் ஆந்திரமீடா, ஆதிரை போன்றோர் உருத்திரர்களாகச் சொல்லப்பட்டுள்ளர். மகாபாரதம் மேற்கண்ட பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

ஆதித்தியர்கள்:

பொதுவாக ஆதித்தன் என்ற சொல், கதிரவனைக் குறிக்கும். இச்சொல், ஆதீ என்ற இரு தமிழ் மூலச் சொற்களால் ஆனது.

ஆ = இது ஓரெழுத்து ஒரு சொல்லாகும். இது தொடக்கத்தைக் குறித்தது.

தீ = இது ஒளிரும் விண்மீன்களைக் குறித்த பழந்தமிழ்ச் சொல்லாகும்.

ஆதீ = தொடக்கத்தில் இருந்த ஒளி. ஆதீ - ஆதி எனச் சுருங்கியதாகவும் கொள்ளலாம். ஆதி என்ற தமிழ்ச் சொல்லில், தொடக்கம் + ஒளி ஆகிய இரண்டு பொருள் அடங்கியுள்ளன. சமற்கிருதம் கூறும் ஆதி என்ற சொல்லில், தொடக்கம் என்ற பொருள் மட்டுமே உள்ளது. ஒளி என்ற பொருள் இல்லை. ஆதி என்பது ஒரு சொல்லாகவே சமற்கிருதத்தில் அறியப்படுகின்றது. அதற்கும் அங்கு விளக்கமான வேர்ச் சொல் காட்டப்படவில்லை.

Aadi (Sans.)[621]: beginning, beginning with, the god beginning with Indra, the first maker, creator. (g. 136).

அதிதி என்ற சொல் சமற்கிருதத் தொன்மங்களில் காணப் படுகின்றது. ருக்கு வேதப் பெண் கடவுளரில் ஒருவர். பல இடங்களில் அதிதி பற்றி ருக்வேதம் பேசுகிறது. அதிதி என்ற

சொல்லுக்கான பொதுப்பொருள் முழுமை, பிரிக்கப்படாத, எல்லையற்ற மகிழ்ச்சிக்குரிய எனப் பொருள் விரியும்.[622] (entire, unbroken, boundless, happy, p. 18) சிறப்புப் பொருளாக தக்சனின் மகள், காயவனின் மனைவி, ஆதித்தர்களின் தாய் என ருக்கு வேதம் கூறுகிறது.[623] (R.V. VII : 101 : 15).

அதிதியும் ஒரு வானியல் உருவகமாகும். தீ என்பது விண் மீனையும், தீதீ என்பது விண்மீன்களையும் குறிக்கும். காயம் என்பது வானத்தை, குறிப்பாக கரியநிற வானத்தைக் குறிக்கும். விண்மீன்களும் வானமும் இணைந்ததால், தீதீ என்ற சொல், பிரிக்கப்படாத, எல்லையற்ற என்ற பொருளைக் குறித்தது. தமிழர்கள் குமரிக்கண்டத்தில் வாழ்ந்திருந்தவர்கள். அதனால் அக்கண்டத்துக்கு மேலே தெரியும் விண்மீன்களைப் பற்றித் தெளிவாக அறிந்திருந்தனர். நிலநடுக் கோட்டிலும், அதற்குத் தெற்கேயும் அமைந்திருந்த குமரிக்கண்டம் தென்பகுதி நிலமாகக் கருதப்பட்டது. இதனையே தெக்கன் (தக்சன்) என்ற பெயர் உணர்த்துகிறது. தென்பகுதியைச் சார்ந்தவன் தெக்கன் என்பது, குமரிக்கண்டத்தை உருவகப்படுத்துவது. தீதீ என்பவை, தென் கோள வானத்தில் அறியப்பட்ட விண்மீன்கள். அதற்கு எதிர்ப்புறம் அமைந்தது வடகோள வானம். தெற்கிற்கு எதிர்ச்சொல்லாக, அதாவது தீதீக்கு எதிரச் சொல்லாக, அதீதீ என்பது சொல்லப்பட்டது. தீதீ, திதி எனவும், அதீதீ, அதிதி எனவும் வேதத்தில் திரித்துக் கூறப்பட்டுள்ளது.

தென்னாட்டின் தந்தைக்குப் (தெக்கனுக்குப்) பிறந்த அதிதி, வடவானிற்கு (காயவனுக்கு) மணமுடித்துக் கொடுக்கப் பட்டாள். காயம் - காயவன், காசிப எனத் திரிந்தது. காயன் கரிய உடலைப் பெற்றிருந்தவன். வடக்கே ஒளிரும் மீன்கள், அதிதீயின் மக்களாகச் சொல்லப்பட்டனர். அதிதி பிற்காலத்தில் சிவனுடைய மனைவியாக (உழையவள்)வும், தெக்கனுடைய மகளாகவும் (பார்வதி) சொல்லப்பட்டாள். தெற்கே பிறந்த உழையவள் அல்லது உமையவள், வடக்கே கைலாயத்தில் இருந்த சிவனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டாள். மேற் கண்ட செய்திகள் அனைத்தும் வானியல் உருவகங்களே. அதிதியின் மக்களாக ஆதித்தர்கள் சொல்லப்பட்டுள்ளனர். அதீதீயின் மக்கள் ஆதீதீயர் எனப்பட்டனர், ஆதித்தியர் என்றும் சொல்லப்பட்டனர்.

வசுக்கள்:

வசு (Vasu) என்ற சமற்கிருதச் சொல், நல்லது, (நன்மை செய்தல்) சிறந்தது மேன்மையானது என்ற பொதுப் பொருளைத் தருவதாகும். (good, beneficient, excellent) வேதத்தில் ஒளிமிகுந்த உடுக்களாகவும், தேவர்களாகவும் சொல்லப்பட்டுள்ளனர். விஷ்ணு புராணம் 8 வசுக்களைக் குறிப்பிடுகின்றது. ஆப (Aapa) - நீர்; துருவ - வடமீன் (Pole star), சோம (நிலவு), தவ அல்லது தர - மலை; அனில - காற்று; அலை - நெருப்பு; உஷா உழை, பிரபாச அல்லது பிரகாச - ஒளி எனப்படும். ருக்கு வேதம், ஆதித்யர்கள், மாருதி, அசுவினிகள், இந்திரன், உஷா, ருத்ரா, வாயு, ருத்தன் என எண்மரைக் குறிப்பிடுகிறது. வயம் என்ற தமிழ்ச்சொல் கொடுத்தல் எனப் பொருள்படும். இலவயம் - இலவசம். தமிழ் யகரம், சகரமாகத் திரியும். வய - வச - வசு.

வசு என்பதற்கு உதவுகின்றவர்கள் (Benefient) என்ற பொருளும் உண்டு.

இரட்டையர்கள் இருவர்:

இந்த இரட்டையர் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. சிலர் வானமும் புவியும் (Dyans and Prithvi Hearen and earth) என்றும், சிலர் இந்திரனும் பிரசாபதியும் என்றும், மற்றும் சிலர் மருத்துவர்களான அசுவினிகள் என்றும் கருதுகின்றனர். (p. 30) 33 தேவர்களில், இந்த இரட்டையர் இணைப்பு தவிர்க்க இயலாதது.

அசுவின் (Ashvin) என்ற சொல்லுக்கு, புரவி மீது அமர்ந்து செல்லும் ஒரு நாள் பயணம் (a horse riding in one day) என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. பாணினி இக்கருத்தை உறுதிப் படுத்துகிறார்.[624] (பாணினி, 5:2:19). அசுவ (Asva) என்பது புரவியைக் குறித்த சமற்கிருதச் சொல்லாகும். அசுவினியர் என்போர், புரவி மீதமர்ந்து வானத்திலிருந்து வரும் மருத்து வர்கள் (Doctors or Physicians) ஆவர். புரவியைப் பற்றி பல்வேறு செய்திகள் வேதத்தில் காணப்படுவதால், இச்செய்திகள் கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன்பின்னாக வேதக் கதைகளில் இணைக் கப்பட்டிருக்க வேண்டும் என்பது கருத்து. புரவிகளின் பயன் பாடு முதன்முதலில் கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகே அறியப் பட்டது என்ற நூலில் சொல்லப்பட்டுள்ள முன் செய்தியை நினைவு கூர்க.

இந்திரன்[625]: இருக்கு வேதத்தில் 1028 பாடல்கள் உள்ளன எனக் கூறுகின்றனர். இவற்றில் இந்திரனைப் பற்றி மட்டுமே 250க்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன என்பதால், வேதம் இந்திரனை எவ்வாறு போற்றிப் புகழ்கின்றது என உணரலாம். இந்திரன் போர்க் கடவுளாகவே (warrior god என்பது ஆங்கி லேயரின் மொழி பெயர்ப்பு) கருதப்படுகிறாள். உண்மையில் கடவுள் தகுதியில் வைக்கப்படவில்லை. தேவர்களுக்குத் தலைவன் என்று கூறப்பட்டாலும், இந்திரனை அசுரன் என்றே வேதம் சுட்டுகிறது. இந்திரன் மழையோடும், இடியோடும், மின்னலோடும் தொடர்புபடுத்தப்படுகிறான். இவனுடைய சிறப்புக்குரிய போர்க்கருவி இடி ஆய்தமே (thunder bolt). இதனைத் துவட்டன் (துவஷ்டா) வடிவமைத்துக் கொடுத்த தாக வேதமும் புராணங்களும் கூறுகின்றன. இந்திரன் ஆரியக் கடவுளே என்றும், ஆரிய இனத்தின் ஒரு பிரிவினரான திரிட்சு (Tritsu) என்ற பழங்குடியினர், இந்திரன் போன்றதொரு தெய் வத்தை வழிபட்டதாக, ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்திரன் ஆரியக் கடவுள் அல்லன் என்றும், இந்தியப் பழங்குடியினரின் கடவுளே என்றும் மாற்றுக் கருத்துகளும் உள்ளன.

சமற்கிருதத்தில் இந்த்ரா (Indra) என்ற சொல்லை இரண் டாகப் பிரிக்கின்றனர். இந்த் (Ind) என்றும் ரா (Ra) என்றும் இரண்டு சொற்களாக உள்ளன. இந்த் என்ற சொல்லுக்கு துளி (drop) என்றும், ரா என்பதற்கு வெற்றி பெறு (conquer) என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது ('. 166) இருக்கு வேதம் இந்த்ர என்பதற்கு மழைத்துளி என்றே பொருள் கூறுகிறது. மாக்சு முல்லர் பிந்து (Bindhu) என்பதே மூலச்சொல் என்று கூறுகிறார்.[626] வேதத்தின் இந்த் என்ற சொல், குறிப்பாக சோமத் தேறலைக் குறிக்கின்றது. சோம நீரையும், சோமத்தையும் கூட (நிலவு) அச்சொல் குறிப்பிடுகிறது. நிலவு, நிலவின் உருவத்தில் ஏற்படும் மாறுதல்கள், நிலவின் ஒளி ஆகியவற்றையும் இந்த் என்ற சொல் விளக்குகிறது. பிராமணங்கள், இந்த் என்ற சொல் நிலவை மட்டுமே குறிக்கும் என்றும் கூறுகின்றன. பிற்காலத்தில் செம்மொழிச் சமற்கிருதம், தேறல்கள் (some juice) என்ற பொருளைத் தருகின்றது.

எனவே, இந்த் என்ற சொல், நீரோடு தொடர்புடையது என்க. ரா என்ற சொல், வெல்லுதலைக் குறிக்கின்றது. போரைக் குறிக்கின்றது. இதனால், இந்த்ரா என்பது, நிலவோடு தொடர்

புடைய சொல் என்றும், இந்திரனுக்கு விருப்பமானது சோமக் கள்ளே என்றும் கூறுகின்றனர். இந்திரன், மழைக் கடவுளாக வும், மழையோடு தொடர்புடைய இடி மின்னலுடனும் தொடர்புபடுத்தப்படுகிறான். மழை, கருமேகத்தைக் கலைத்து நீராகப் பொழிகின்றது. கருமேகம், நீரின் முந்திய நிலை என்றாலும், கருமேகத்தை அல்லது காரிருளை தீய உருக்கள் (demons) என்றும், அதனை வென்று வீழ்த்தி மழையாகப் பொழிகிறான் என்றும் உருவகம் செய்துள்ளனர். இந்தக் கருமேகத்தை விரித்திரன் என்று தொன்மங்கள் கூறுகின்றன. வானத்துத் தேவர்களுக்கு இந்திரனே தலைவன், அவனுடைய செயல்களும் போர்களும் மக்களுக்கு நன்மைகள் புரிந்தன என்பதால், இந்திரனைப் போற்றிப் புகழ்ந்து பாக்கள் வடிக் கப்பட்டன எனக் கூறியுள்ளனர். ஆனால் பிற்காலப் புராணங் கள் இந்திரனை பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய முக்கட வுளருக்கு அடுத்த நிலையில், ஆற்றல் குறைந்தவனாகச் சுட்டு கின்றன. இன்னும் பிற்கால சமற்கிருத இலக்கியங்கள், தேவர் களின் தலைவன் என்ற தகுதியை விநாயகனுக்கு வழங்கு கின்றன, ஸ்கந்தனுக்கும் அளிக்கின்றன. எனவே, ஒவ்வொரு காலத்திலும் தேவகணங்களுக்குத் தலைவனாக இந்திரன், ஸ்கந்தன், விநாயகன் ஆகியோர் சொல்லப்பட்டுள்ளனர்.

பிற்காலச் செய்திகள் இந்திரனை கிழக்குத் திசைக் காவலனாகப் பதவி இறக்கம் செய்துள்ளன. ஆதித்தர்களில் ஒருவனாகவும் சொல்லப்பட்டுள்ளான். நாள் செல்லச் செல்ல இந்திரனின் புகழைச் சிதைக்கின்ற வகையில் செய்திகள் உள்ளன.[627] சுநேந்திரா, இராசேந்திரா, பர்வதேந்திரா என்ற அடைமொழிகளாலும் இந்திரன் அழைக்கப்பட்டான்.

இந்திரன் பற்றிய மற்ற விளக்கங்கள்:

1. வேதாந்த நூலில், இந்திரன் முதல் நிலையில் (supreme being) சொல்லப்படுகிறான்.
2. வலது கண்ணின் கருமணி (pupil) இந்திரனாகவும், இடது கண் கருமணி அவன் மனைவி இந்திராணி என்றும் சொல்லப்பட்டுள் ளனர்.
3. பதினான்கு என்ற எண்ணை இந்திரன் என்ற சொல் குறிக்கின்றது.
4. சூரியக் கடவுள்.

5. இலக்கண ஆசிரியன், பச்சிலை மருத்துவன்.

6. கொடிய நஞ்சு.

7. ஓகத்தின் இருபத்தியாறாம் பகுதி (பகேசி - Pagasi)

8. மாந்தனின் ஆன்மா.

9. மாந்த உடலில் நிறைந்துள்ள ஆவி (spirit).

10. இரவுப் பொழுது.

11. சம்புத்தீவின் ஒன்பது பகுதிகளில் ஒன்று, என விரியும்.[628]

மேற்கண்ட ஒவ்வொரு பொருளுக்கு மான கதை யொன்றும் இந்திரனோடு பின்னப்பட்டுள்ளது. நாகரிகமான சொற்களால் இந்திரனை சமற்கிருத இலக்கியங்கள் கூறினாலும், அடிப்படையில் அவன் குடிகாரன் (சோமக்குடியன்), கூத்திக்கள்ளன் (ஆயிரம் கண்களைப் பெற்றவன்) என்ற சிந்தனையே விஞ்சி நிற்கின்றது.

இருக்கு வேதத்தின் பவ்வேறு இடங்களில் இந்திரன் - விருத்திரன் போர் பற்றிய செய்திகள் விரிந்து கிடக்கின்றன. விருத்திரனை ஓர் அரக்கனாக வேதம் கூறுகிறது. இருட்டு, கருமேகம் கரிய உருவம் ஆகிய சொற்களால் விருத்திரன் அழைக்கப்படுகிறான். ஆரிய எதிர்ப்பாளர்கள், அவன் தமிழனே என்றும், ஆரிய - தமிழன் போராகவே இந்திர - விருத்திரப் போர் உள்ளது என்றும் கூறுகின்றனர். வேறுசிலர் ஆரியர்கள் இந்திரனை விருத்திரன் மீது ஏவி அவனைக் கொன்று போட்டனர் என்றும் கூறுகின்றனர்.

விரித்திறன் அல்லது விரி திறமைகள் பலவாறு விரிந்த ஆற்றலுடையவன் என்ற பொருள் அப் பெயரில் காணப் படுவதையும் சுட்டிக் காட்டுகின்றனர். காரிருள் கருமேகமான விரித்திரன், வானத்துக்கும் புவிக்கும் உள்ள தொடர்புகளைத் துண்டித்து, இடையில் தடையாக இருக்கத்தான் என்றும், இந்திரன் அக்கருமேகத்தை உடைத்து, இடி மின்னலால் தாக்கி, அதனை மழை நீராக்கி, உலகில் பொழிவித்து, மக்களுக்கு நன்மை செய்தான் என்றும் சொல்லப்படும் கதை, உண்மையில் மழைப் பொழிவை விளக்கும் உருவகமே எனக் கருதலாம். இந்திரன் கையில் இடி மின்னலால் உருவாக்கப் பட்ட வஜ்ராயுதம் (வைர ஆய்தம்) இருந்ததாகக் கூறுவதும், அதனை தேவதச்சனான, துவட்டன் செய்து கொடுத்தாகக் கூறுவதும் கற்பனைக் கண்ணோட்டமே எனலாம்.

துவட்டனை (துவஷ்டா எனத் திரிந்துள்ளது) மயன் என்றும், அவனே தோழில் நுட்பத்தின் தந்தை என்றும் தமிழ்த் தொன்மங்கள் கூறுகின்றன. விசுவகர்மா என்றும் மயன் சொல்லப்படுகிறான்.

இந்திரனைப் பார்த்துத் தமக்கு இலக்கணம் கற்றுத் தருமாறு பாணினி கேட்டதாகவும் அதற்கிணங்க இந்திரன் பாணினிக்கு இலக்கணம் கற்றுத் தந்ததாகவும், அது பாணினிக்குப் புரிய வில்லையென்றும் ஒரு தொன்மம் வடக்கே உண்டு. பின்னர் ஸ்தந்தனிடம் (முருகன்) முறையான இலக்கணத்தைப் பாணினி கற்றான் என்பர். இக்கதை வழியே பாணினி கற்றுக் கொண்டது. தமிழ் இலக்கணத்தின் முறைகளையே எனக் கருதலாம்.

சமற்கிருத விளக்கப் படி, இந்த் என்பது மழையையும் ரா என்பது வேந்தன் என்ற பொருளிலும் அறியப்படும். அரன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ரா எனப்பட்டது. அர் - அரி என விரிந்தது. அரன், ஒறுப்பவன், ஒறுக்கின்ற மன்னன் அல்லது வேந்தன் என்பதே பொருளாகும். இந்த் என்ற சொல், சிந்து என்ற வாறு, மகா பாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த, தனித்தமிழ்ச் சொல்லே என்க. சில் என்ற மூலச் சொல், சிறிய, சிற பொருட்கள், சிறிய துண்டுகள் எனப் பொருள்படும். சில் என்பது, ஒரு பொருளினின்றும் சிதறிய அல்லது தெறித்த சிறு துண்டுகளாகும்.

சில்லு, பாறைகளை உடைக்கும் போது சிதறும் சிறு கற்கள்.

சில் - சின் சினை என்றவாறும், சில் - சில என்றவாறும், சில் - சில்லு - சிந்து என்றவாறும் தமிழில் அச் சொல் விரியும்.

சில் என்பது பொதுவாகக் கெட்டியான பொருளையும், சிந்து நீர்ப் பொருளையும் சுட்டும்.

சிறு சிறு துளிகளாக விழும் மழை நீரை சிந்து என்ற சொல் குறிக்கும்.

சில் + து = சிந்து என்றானது.

சிந்து + அரன் = சிந்திரன், மழை.

சி என்ற எழுத்து, இ என்ற எழுத்தாகவும் சொல்லப்பட்டு, அல்லது தவறாகப் படியெடுக்கப்பட்டு, சிந்து - இந்து எனத் திரியும் வாய்ப்புகளுண்டு.

சிமையம் என்ற சொல், படியெடுத்தவர்கள் அவ்வெழுத்தைத் தவறாக நோக்கி, இமையம் என திரித்து எழுதியதாகவும் கூறுவர். (தற்காலத்தில் தட்டச்சு செய்பவர்களும் கூட இத்தவறுகளைச் செய்கின்றனர்).

சிந்திரன் - இந்திரன் எனப்பட்டது. மழைக்கான கடவுள் என்ற பொருளைத் தருவது.

சங்க இலக்கியங்கள் இந்திரன் பற்றிய செய்திகளைத் தருகின்றன. திருவள்ளுவர் இந்திரன் என்ற சொல்லை, மன்னன் அல்லது வேந்தன் என்ற பொருளிலேயே பயன் படுத்தியிருக் கிறார். (இந்திரனே சாலுங்கரி). தமிழில், இந்திரன் மருத நிலக் கடவுளாகக் கருதப்படுகிறான். மருத நிலத்தின் வேளாண் மைக்கான நீரைத் தருவதால், இந்திரன் மருத நிலக் கடவுள் ஆனான். தமிழர் சமயத்தின் அடிப்படை, கதிரவனை மைய மாகக் கொண்டதாகும். அக்கதிரவனையே முழு முதற் கடவுளாகத் தமிழர் போற்றினர். சிவந்து காணப்பட்ட கதிர வனே சிவன் எனப்பட்டான். (பிற்காலத்தில் விஷ்ணுவையும் இணைத்தனர்). ஆதிமூலம் எனப்படுவது கதிரவனே. இக்கதி ரவனின் மறு உருவங்களே அல்லது கதிரவனோடு தொடர்பு கொண்ட கடவுளரே, தமிழர் வகுத்த நான்கு நிலங்களின் தெய்வங்களாயினர்.

சேயோன் : குறிஞ்சி நிலக்கடவுள் (முருகன் என்றது பிற்கால வழக்கு).

கார்மேகம் : மால் என அறியப்பட்டு முல்லை நிலக் கடவுளானான். மேகம் நீர்த்துளிகளின் தொகுப்பே என்க.

இந்திரன் அல்லது மழை : மருத நிலக்கடவுள்.

வாரணன் : நெய்தல் நிலக்கடவுள்.

கதிரவனோடு தொடர்புடைய கடவுளரே நான்கு நிலக் கடவுளுமாவர். தமிழரில் பெரும்பான்மையோர் தேர்வு செய் திருந்த வேளாண்மை தொழிலுக்குரிய கடவுளும் இந்திரனே. அதனால் இந்திரனுக்கு மிகப் பழங்காலத்தில் இருந்தே தமிழ் நாட்டில் விழா எடுக்கப்பட்டது.[629] சங்க இலக்கியங்கள் கூறும் இந்திர விழா, சித்திரை முதல் நாள் தொடங்கி, முப்பது நாளும் தொடர்ந்து நடைபெறும். வைகாசி முதல் நாள் இந்திரவிழா நடைபெறும் சித்திரையில் தமிழர் இந்திர விழா கொண் டாடியதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அக்கா லத்திலேயே கதிரவன் (நிலநடுக்கோட்டில்) குமரிக் கண்டத்தின் உச்சிக்கு வருவான். மகரத்திலிருந்து நிலநடுக் கோட்டுக்கு வரும் கதிரவனின் காலமே. தமிழ் நாட்டின் வெப்பக் காலமாகும். அதுவே ஆண்டின் தொடக்கமாகவும் இருந்தது. தமிழர்கள் பிற்காலத்தில் குடியேறிய மெசபத்தோமியா, பாபிலோன், பாலத்தீனம் போன்ற நாடுகளில் சித்திரைக் காலத்திலேயே,

அம்மக்களும் ஆண்டுத் தொடக்கத்தைக் கைக்கொண்டிருந் தனர். எனவே, இந்திர விழா என்பது, கதிரவனுக்கும் மழைக்கும் நன்றி சொல்லும் விழாவாக மாறியது. இந்திரவிழா சங்க காலத் துக்குப் பிறகு கொண்டாடப் படவில்லை. அதன் எச்சங் களாக, இக்காலத்தும் சித்திரை முழுநிலவு நாளன்று, பல்வேறு அரிசிச் சோறுகளைச் சமைத்து, நிலவொளியில் அமர்ந்து உண்ணும் வழக்கு (சித்ரான்னம் என்பர்) உள்ளது என்பதை அறியலாம்.

பொங்கல் விழா, சங்க காலத்தில் நிகழ்வுற்றதற்கானச் சான்றுகள் இல்லை. பொங்கலை, கதிரவனுக்கும் மழைக்கும் நன்றி கூறும் தமிழர் திருவிழா என்று கூறுகின்றனர். பொங்கல், கதிரவன் மகரத்திலிருந்து உச்சத்துக்கு வரத் தொடங்கும் காலமாகும். பொங்கள் விழாவின் முதல் நாளில், போகி என்ற நிகழ்வைக் கொண்டாடுகின்றனர். போகி என்ற பெயர் இந்தி ரனுக்கு உண்டு.[630] எனவே, பொங்கல் விழா என்பது, இந்திர விழாவிற்கு மாற்று விழாவே எனக் கருத இட முண்டு. பொங்கல் விழா எக்காலம் முதல் தமிழகத்தில் கொண்டாடப் பட்டு வருகின்றது என்பதற்குத் தெளிவான சான்றுகள் கிடைக்க வில்லை. என்றாலும் பொங்கல் விழா, இந்திரனையும் போற்றும் விழாவாகவே கருதலாம்.

இந்திரனைப் பற்றிய தொன்மக் கதைகள் ஏராளமாகத் தமிழ் மரபில் காணப்படுகின்றன. வானுலகப் படையில் தலை வனாக இந்திரன் கருதப்படுகிறான். இருப்பினும் முழுமுதற் கடவுள் என்ற தகுதி இந்திரனுக்கு இல்லை. இந்திரனுக்கு இருந்த தகுதிகள் அனைத்தும் முருகனுக்கு மாற்றப்பட்டன. முருகனை குறிஞ்சி நிலக்கடவுள் எனக் கூறுவதை விட, குறிஞ்சி மருத நில இணைப்புக்கடவுள் எனக் கூறுவதே பொருத்த மானது.[631] (ஆசிரியரின் சேயன் என்ற நூலைக் காண்க). இன்னும் பிற்காலத்தில் விநாயகன் வழிபாடு (கி.பி. 600) தமிழகத்தில் புகுத்தப் பட்ட பிறகு, முருகனுடைய பொறுப்பான வானவர் தலைவன் என்ற தகுதி, விநாயகனுக்கு மாற்றப்பட்டது. அதனாலேயே அவன் கணபதி என்று அழைக்கப்பட்டான். கணம் என்பது தேவர்களைக் குறித்தது.

வேதம் போற்றும் இந்திரன் நீராக அல்லது வெள்ளமாக உருவகப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவனுடைய பகை வனாகச் சொல்லப்படும் விருத்திரன், கருமேகமாகக் குறிக்கப்

படுகிறான். "மழையைத் தடுக்கும் மேகங்களைப் பிளக்கிறாய்! அதனால் ஓ இந்திரனே! உன்னை நாங்கள் புகழவிரும்புகி றோம். உன்னால் எங்களுக்கு அனைத்துச் செல்வங்களும் கிட்டும்", என வேதம் இந்திரனைப் புகழ்கின்றது. "பறவையின் குஞ்சுகளைப் போல, மலை இடுக்குகளில் ஒளிந்திருந்தாய்", என்பது, மழை நீரையே உருவகப்படுத்துவதாகக் கொள்ள லாம். "பல அணைகளை உடைத்து நீரின் கதவுகளைத் திறந்ததாய்" என்ற குறிப்பு, சிந்து ஆற்றில் கட்டப்பட்டிருந்த (தமிழர்களால்) அணைகள், வெள்ளத்தால் உடைந்து போன செய்தியைக் குறிப்பிடுகிறது. சிந்து வெளி நாகரிகத்தின் அழிவிற்குக் காரணம் வெள்ளப் பெருக்கே என ஆய்வாளர்கள் கருதுவதை வேதம் உறுதி செய்கிறது.[632] வெள்ளத்தால் நாடும் நகரங்களும் அழிந்தன என்ற செய்தியை, "ஓ! இந்திரனே! நீ 90 நகரங்களை அழித்தாய்", என்ற வேதக் குறிப்பு வெளிப்படுத்து கிறது. எனவே, இந்திரன் என்பவன், நீர் மற்றும் வெள்ளத்தின் உருவகமே எனக் கொள்க.

வாக் சூக்தம்: [633] வாக் என்பது ஒரு தேவனாகச் சொல்ல பட்டுள்ளது. அந்தத் தேவ மாந்தனை பிரகற்பதியானவர் உலகிற்கு அனுப்பி வைத்தார். அவன் உலகில் உள்ள அனைத்து பொருட்களுக்கும், கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்திருக்கும் பொருட்களுக்கும் கூட பெயர் வைத்தான். அவன் வைத்த பெயர்களே இன்று நிலைத்துள்ளன. இந்த வாக் வன்மை யானவன், ஆற்றலுள்ளவன். அவனைப் பற்றிக் கொள்பவர்கள் ஞானிகளாவர், ஆற்றளுள்ளவர்களாவர், அறிஞர்களாவர், முனிவர்களாவர், அந்தணனாகக் கூட ஆவர்.

வாக் பெண்ணாகவும் சொல்லப்படுகின்றான். அவள் ருத்திரன் வசுக்கள், ஆதித்யர், விசுவதேவர்களுடன் நட்பு கொண்டிருக்கிறாள். வருணன், மித்திரன், இந்திரன், அக்கினி, அசுவினிகளுக்குப் பின்புலமாக இருக்கிறாள். சோமன், துவட்டன், பூசன், பகன் போன்றோருக்கு உதவி செய்கிறாள். அறிவைச் சேர்க்கவும் செல்வத்தைச் சேர்க்கவும் அவளையே அறிவானிகள் பயன்படுத்திக் கொள்வர். அவள் வந்தால்தான் மொழி தோன்றும் மொழியின் வாயிலாக தேவரும் மன்னர் களும் உறவாடுகின்றனர், உரையாடுகின்றனர்.

வாக் என்ற ஆற்றல் பற்றி வேதம் மேற் கண்டவாறு கூறுகின்றது. இந்த வாக் யார்? மேலே சொல்லப்பட்ட

செய்திகளை உன்னிப் பார்ப்பவர்களுக்குப் புரிந்திருக்கும். அது வேறொன்றுமில்லை வாக்கு தான். வாக்கு என்ற தமிழ்ச் சொல், அல்லது மொழிகள் வாக்கு எனப்படும். வாக்கு கொடுத்தல், வாக்குவாதம் என்ற வழக்கில் உள்ளன. வக்காலத்து என்ற பாரசீகச் சொல்லின் மூலமும் வாக்கு என்ற தமிழ்ச் சொல்தான்.

வாக்கு என்ற தமிழ்ச் சொல், வார்த்தை என்றும் சொல்லப்படும். வார்த்தை சமய்கிருதச் சொல்லெனச் சிலர் மயங்குவர். அது தமிழ்ச் சொல்வேர் என்பது தொடரும் சொற்கள் அல்லது சொல் என்றும், தை என்பது அவற்றை இணைப்பது என்றும் அறியப்படும். வார்த்தை என்பதே பலவாறு திரிந்து Word என ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்றது.

வாக் என்பது பிரகஸ்பதியினின்றும் தோன்றியது என வேதம் கூறுவது, வாக்கிற்கு மூலமாணவன் கடவுளே என்ற கருத்தை உணர்த்தும். வாக்கு என்ற சொல்லால், கடவுள் இவ்வுலகில் உள்ள பொருட்களுக்கும், உயிர்களுக்கும் பெயர்களை இட்டான். அந்தச் செயலை, சொல்லை, ஒரு தேவமாந்தன் போல் உருவகம் செய்துள்ளனர். உண்மையில் வாக் என்பது கடவுளே என்பது கருத்து.

விவிலியச் செய்தியில், வாக் என்பது வார்த்தை என்று சொல்லப்பட்டுள்ளது. கடவுளை வார்த்தை (Word) என்றே விவிலியம், கூறுகிறது.[634] கடவுளே வார்த்தையானார் என்று விவிலியம் கூறும் செய்தியை, வாக் என்ற சமற்கிருதச் சொல்லுடன் ஒப்பு நோக்கலாம். விவிலியத்தில் கடவுள் ஆதாமை அழைத்து உலகின் பொருட்களுக்குப் பெயர் வைக்கச் சொன்னார் என்ற குறிப்பு உள்ளது. வேதத்தில் வாக் தன்னிலே புறப்பட்டு வந்து பெயர் சுட்டுவதாக உள்ளது. மேலும் வாக் என்பது மொழியையும் சுட்டுகிறது. அறிஞர்களும், அறிவாளிகளும், ஆற்றலுள்ளவர்களும், முனிவர்களும் வாக் பற்றுதலோடுதான் அவ்வாறு விளங்கினார்கள் என்று கருத்து, மொழியாற்றல் பற்றிய கருத்தையே விளக்குகிறது எனலாம். வேதத்தில் வாக் ஒரு தேவமாந்தனாக உருவகம் செய்யப்பட்டுள்ளது.

உஷை அல்லது உஷா :

ருக்கு வேதத்தில் சொல்லப்படும் பெண், தேவதை என்றும் சொல்லலாம். இவள், கதிரவன் தோன்று முன்னர்

தோன்றி, கதிரவன் வரவை நெறிப்படுத்துகிறாள். கதிரவனின் தேர்ச் சக்கரங்களைச் சரி செய்கிறாள். காரிருளில் மூழ்கி 30 நாழிகைகள் கழித்த கதிரவன் கருமையாகிவிடுகிறான். அவனுக்கு மீண்டும் ஒளியைத் தருபவள் இந்த உஷையே. விடிந்தும் விடியாத காலைப் பொழுதில் உஷை தோன்றுகிறாள் என்பது வேதக் குறிப்பு. உஷை என்பவளும் ஒரு வானியல் உருவகமே. கதிரவன் இருளில் மூழ்குவதால் கருத்துப் போவதில்லை. கதிரவனே செம்பிழம்பாய் இருப்பதால், அதற்கு ஒளியைத் தருவார் என்று எவருமில்லை. ஆனாலும் உஷை, கதிரவனோடு இணைத்துச் சொல்லப்படுகிறாள்.

"தேவியான உஷையே! நீ கதிரவன் தோன்றுமுன்னரே தோன்றுகிறாய். உனது புன்னகையால், இருள் விலகுகின்றது. எப்போதும் எங்களுக்கு ஏராளமான செல்வங்களை அளிப் பவளாய் இருப்பாயாக. கதிரவன் தோன்று முன்னர் நீ வருவ தால், உன்னைக்கண்டதும் விண்மீன்கள், இரவுத் திருடர் களைப் போல ஓடி ஒளிந்து கொள்கின்றன. ரஜனியை விலக்கும் உஷையே! எங்களுடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்."

மேற்கண்டவாறு உஷை, வேதத்தில் போற்றப்படுகிறாள். கதிரவனோடு இருக்கும் தொடர்பு காரணமாக, உஷையைப் பார்வதி என்றும், கதிரவனைச் சிவன் என்றும் பிற்காலத் தொன்மங்கள் உருவகம் செய்தன.

உஷை என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

உஷ் (Ush) என்ற சமற்கிருதச் சொல்லுக்கு எரித்தல் (burn), ஒறுத்தல் (punish) தூய்மைப் படுத்துதல் (cleaner) என்றவாறு பொருள் சொல்லப்படுகின்றது.[635]

உஷா : காலைப் பொழுது (morning), விடியல் (dawn), காலை ஒளி (morning light).

உஷையைப் பற்றிப் பல்வேறு தொன்மக் கதைகள் உள்ளன.

உஷ் என்ற சமற்கிருத மூலச் சொல்லுக்கான வேர்ச் சொல்லைக் காண இயலவில்லை.

உழை என்ற தமிழ்ச் சொல்லே, உஷை எனக் திரிந்தது என்க.

அல் என்ற வேர்ச் சொல், எல் என விரிந்தது. அல் = இரவு; எல் = பகல்.

எல் - உல் என விரிந்தது; உல் - உழ் என்றானது.

உழ் - உழ : இரண்டாக்கு, பிரி, பிளவுபடுத்து. என்றவாறு பொருள் விரியும்.

உழ : நிலத்தைப் பிள, பிளவு படுத்து. உழ - உழு என வினைச் சொல்லானது.

உழு : நிலத்தைப் பிளவு படுத்துதல். உழவன் - உழுதல் என்றவாறு கொள்க.

உழை : பிளத்தல், தெறித்தல், குறத்தல் எனவிரியும்.

உழை : வினைச் சொல், வியர்வை சிந்து, வேலை செய், பணியாற்று, உழைத்தல்.

உழைத்தல் என்பது, ஏதோவொன்றை இடமாற்றம் செய்தல் என்ற அடிப்படைப் பொருளில் அறியப்படும்.

உழை என்பதற்கு இடம் என்ற பொருளும் உண்டு.

இரவு, பகலாகும் நிகழ்வு நடக்கும் பொழுதையே உஷை என்று கூறுவர். அச்செயல் முதலில் கிழக்குத் திசையிலேயே நிகழ்கின்றது. அதனால் உஷஸ் என்பதற்கு கீழ்த் திசை என்ற பொருளும் உண்டு.

உழை → உஷா → ஆஷஸ் → ஏஷியா (Asia) என்ற ஆங்கிலத்தில் திரிந்தது.

Asian : The eastern part.

Asian : according to British tradition, Asian is Indian. (Oxford)

ஆகியா என அழைக்கப்படும் கண்டம் (continent), கீழ்த்திசைப் பெரு நிலம் என்ற பொருளில் சொல்லப்பட்டது.

உழை (தமிழ்) --- உஷை (சமற்கிருதம்) - ஏஷியா (ஆங்கிலம்).

உஷை என்பதற்கு தூய்மை என்ற பொருளும் உண்டு (Chastise) என்பதை மேலே காண்க. இதே பொருளில், அரபுச் சொல், கற்புடைய பெண்டிர் என்று பொருள்படும். மறியன்னை (Mary), கதீஜா (Kadhijia), பாத்திமா (Fatima) போன்றோரை இசுலாமிய மரபு. தூய்மையாவைர்கள் எனக் குறிப்புடுகிறது.[636] (Is.En.,p.39)

உழையே கதிரவனுக்கு ஆற்றலைத் தருபவன் என்ற கருத்தில் தான் சிவ-சக்தி வணக்கமுறை தமிழர்களால் ஏற்கப்பட்டது.

உமை என்பது, அம்மா என்ற சொல்லின் சுருக்கமாகும். உமை-உமா (ச) எனப்பட்டது.

சோமன்: ருக்கு வேதம் கூறும் சோமன், சிறப்பான தேவர்களில் ஒருவனாவான் சோமன் என்பது நிலவைக் குறித்த சொல் என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. சோமச் செடியிலிருந்து இறக்கப்படும் மது (அது மதுவல்ல, செடிச் சாறு என்றே சிலர் குறிப்பிடுகின்றனர்.) சோமச் செடி என்பது கஞ்சாச் செடியே என்பது சிலரது கருத்து. மற்ற சிலர் அது, சமையலுக்குப் பயன்படுத்தப் படும் நறுமணப் பொருள் என்றும்

கூறுகின்றனர். சோம்பு என வழக்கில் உள்ள சோமம் (Asclapias acida or sarcosfemma viminali's) என்பர். சோமபானம் என்பது சோமச் செடியினின்றும் இறக்கப்படும் சாறு (the acid drink of the sarcostemma) என்பது.[637] இந்த சோமச் சாறு ஆரியர்களின் முன்னோர்கள் வாழ்ந்திருந்த வடக்கு மெசபத்தோமியப் பகுதியில் (அனதோலியாவில்) அறியப்பட்டிருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே, சோமச் சாறு, இந்தியர்களால் பயன் படுத்தப்பட்டதே, பின்னர் ஆரியர்கள் அதனைப் பயன்படுத்தினர் என்பதும் தெளிவாகின்றன. சோமச் செடியென்பது இந்தியாவி லேயே பெருமளவில் அறியப்பட்டது.

சோமச் செடியானது, முழுநிலவு நாளன்றே, தனது தண்டு களில் பெருமளவில் நீரைத்தேக்கி வைத்திருக்கும் என்பர். எனவே, அந்தநாளில் தான் சோமச் சாறு பிழியப்பட்டது. நிலவுக்கும் அச்செடிக்கும் உள்ள தொடர்பு பற்றியே அது சோமச் செடி எனப்பட்டது. சமையலுக்குப் பயன்படுத்தப் படும் சோமம் (சோம்பு) உடலின் வெப்பத்தைத் தணிக்கும் மருத்துவ குணம் கொண்டதால், நிலவும் தண்மையைக் கருதி, அந்நறுமணப் பொருளும் சோமம் என்று அழைக்கப்பட்டது.

Sacrotemma என்ற இலத்தீன் சொல், சோமச் செடியைச் குறித்த தாய்வரவியல் பெயராகும். மூலத்தண்டிலிருது கிளைத்த தண்டுகள் மிகுந்திருப்பது என்பது பொதுவான பொருள். மூலத்தண்டிலிருந்து கிளைத்த தண்டு ஒரு முக்கோண வடிவத்தை அவ்விடத்தில் உருவாக்கும். இவ்வாறு பல முக்கோணப் பகுதிகள் அச்செடியில் தெரியும். இலத்தீன் மொழியில் Sacro என்பதற்கு இடுப்பிலுள்ள முக்கோண எலும் பைக் குறித்து, அதன் நடு முக்கோணப் பகுதியை விளக்கும் சொல்லாகும். (ஆன்மா என்ற உயிர் அந்தமுக்கோணப் பகுதியில் உள்ளது என்பது நம்பிக்கை. குண்டலினி நம்பிக்கையை ஒப்பு நோக்குக.)

யாகத்தின் போது, சோமச் சாறு முதன்மைப் பொருளாக வைக்கப்படும். யாகம் செய்வோர் அச்சாற்றினைப் பருகுவர். அழைக்கப்படும் தேவர்களுக்கும் படைப்பர். சோமச் சாற் றினை பருகி மகிழ்ந்த தேவர்கள், யாகம் இயற்றியவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றுவர். தற்காலத்தில் மதுவிருந்து அளிக்கப்படும் நடைமுறையை ஒப்பு நோக்குக. ருக்கு வேதத் தேவர்களில் சிறப்புக்குரியவன் சோமன் ஆவான்.

குமரிக் கண்டத்துப் பாண்டியர் திங்கள் மரபினர் என்றே அறியப்படுகின்றனர். உலகின் பல நாகரிகங்கள், திங்களைத் தெய்வமாகவும் வணங்கின. சில ஆணாகவும் நிலவை உருவகம் செய்துள்ளன. 27 மீன் கூட்டத்திலும் ஒவ்வொரு நாளும் திங்கள் தங்கிச் செல்வது பற்றி தொன்மக்கதைகளும் உண்டு. நாள் காட்டியின் மூலம் நிலவே எனலாம்.

வாயு: ஐம்பூதங்களில் ஒன்று. வளி என்றும், காற்று என்றும் அழைக்கப்படும். உலகின் ஈர்ப்பு விசையின் காரணமாக, வளி வெளியேற இயலாத நிலையில், உலகைச் சுற்றிய அதன் பரப்பு, வளி மண்டலம் எனப்படும். காற்று என்ற தமிழ்ச் சொல், கால்+து என்றவாறு பிரியும். கால் என்பதற்கு இயக்கம் என்பதே பொருளாகும். தொடர்ந்து உலகைச் சுற்றிவரும். கால் என்ற காற்றின் வீசும் தன்மைகளைக் கருதியே காலம் (time) என்ற சொல் உருவாயிற்று.

காற்றை சமற்கிருதத்தில் வாயு என்றனர். மரூத் என்றும் சண்டமரூத் என்றும் சொல்லப்படும். பலவகையான குணங் களைக் கொண்ட தனித்தனி உறுப்புகளின் கலவையே காற்று அல்லது வாயு எனப்படும். உயிர்வாயு, நீர்வாயு என்றவாறு அவை பிரிவுபட்டுள்ளன. வேய் என்ற தமிழ்ச் சொல், பரந் திருந்தல், பரவுதல் என்ற பொருளைத் தருவது. கூரை வேய்தல் (மேய்தல் வழக்குச் சொல்) என்ற செயலை ஒப்பு நோக்குக. எங்கும் வேய்ந்திருக்கும் காற்றை, வேய் - வேயு - வாயு என சமற்கிருதம் திரித்துக் கொண்டது. வாயு என்பது பொதுச் சொல்லாகும். பிராணவாயு, ஜலவாயு, அமிலவாயு என அவை பிரிவுபடும்.

வள்ளுதல் என்றால் பெருத்திருத்தல் அல்லது உப்பியிருத்தல் என்று பொருள்படும்.

வள் - வள்ளி = உப்பியுள்ள கிழங்கு, உருண்டு திரண்ட உருவம் கொண்ட குறிஞ்சிப் பெண்.

வள் - வளி = பரவியிருத்தல்.

வளி - வளி = பரவலான இடம்.

வாயு, ஒரு தேவனாக வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதன் விரைவுத் தன்மையைக் கருதி, வாயு காற்றிலும் கடுகிச் செல்லும் புரவிகள் பூட்டிய தேரில் வருவதாகக் கூறப்பட் டுள்ளது. பெரும்பாலும் யாகத்துக்கு அழைக்கப்படும்.

தேவர்கள், புரவிகள் பூட்டிய தேர்களிலேயே வருவதாக குறிக் கப்பட்டுள்ளது. வாயுவின் புரவிகள் இரண்டும் சிவப்பு நிறத்தில் இருப்பன. இந்திரன் அத்தேரில் அமர்ந்து கொள்ள, வாயு அதனைச் செலுத்துகிறான். வாயு இந்திரனுடன் கற்கள் தட்டப்படுவதால் ஏற்படும் ஒலிகள் வரும் திசை நோக்கிச் செல்கின்றனர். அங்குதான் சோமச் செடியைப் பலரும் கற் களைக் கொண்டு நசுக்கி, சாறுபிழிகின்றனர். அச் சாற்றினைப் பருகவே வாயுவும், இந்திரனும் வருகின்றனர்.

வாயுவைப் பற்றி வேதம் கூறும் செய்தியாவது:

"ஓ! வாயுவே! விரைவாகச் புரவிகள் பூட்டிய தேரில் வருக! சோபானத்தின் சாற்றினைப்பருக கடிந்து வருக! தேவர் கள் வருமுன்னரே வருக! வந்து நாங்கள் விரும்புகின்ற அனைத் தையும் அளித்து உதவுக! பொன்னிறமாகவும், செந்நிறமாகவும் உள்ள புரவிகளை பூட்டிய தேரில் வரும் வாயுவே! உன்னை முந்திச் செல்பவன் எவனும் இல்லை. பாலும் நெய்யும் தர்ப் பைப் புல்லும் பரப்பி வைக்கப்பட்டுள்ளன. அவையனைத்தும் உனக்கே! வந்து, உண்டு, மகிழ்ந்து, எங்களுக்குத் தேவையான வற்றை அளித்து விட்டுச் செல்லவும்."

மித்திரன்: இருக்கு வேதம் கூறும் அசுரன் மித்திரன் ஆவான். மித்திரன் என்ற சொல்லுக்கு, நண்பன், தோழன், கூட்டாளி, (friend companio) என்று சமற்கிருதத்தில் பொருள் கூறப்பட் டுள்ளது. மித்திரன், வாரணனுடன் (வருணா) இணைத்தே சொல்லப்படுகிறான். கேட்டை (துளங்கொளி) என்ற விண்மீன் களின் தலைத் தெய்வங்களாக, மித்திரனும் வாரணனும் குறிப்பிடப்பட்டுள்ளனர். மித்திரன் என்பதற்கு நண்பன் என்று பொருள் சொல்லப்பட்டாலும் அது கதிரவனையே குறிக்கும் என்பர்.

மித்திரன் பாரசீக நாட்டில் மித்ராசு (Mitrous) எனப் பட்டான். கி.மு. 1000 ஆண்டுகளில், மித்ராசு வணக்க முறை பாரசீகத்தினின்றும் மேலை நாடுகளுக்குப் பரவியிருந்தது. உரோமர்கள் இப்புதிய தெய்வத்தைப் போற்றி வழிபட்டனர்.[638] பாரசீகத் தொன்மம் கூறும் செய்தியில், அவன் ஒரு அடங்காத காளையைக் கொன்று, அதன் குருதியினால், அந்நாட்டு மக்களின் பாவங்களை எல்லாம் கழுவித்துடைத்தான் என்று கூறுகிறது. மித்திரன் இந்த தொன்மக்கதையின் தாக்கம்,

இயேசுவின் மேல் ஏற்றிக் கிறித்துவர்களால் சொல்லப்பட்டது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மைத்திறன் என்ற தமிழ்ச் சொல்லே, மித்திரன் எனத்திரிந்தது எனலாம்.

மைத்ரேயன் - மைத்ரேயி என்ற இணையைப் பற்றிய கதையும் வடக்கே உண்டு.

மை என்பது கண்ணக்குப் புலனாகாத என்றும், திறன் என்பது இணைப்பு என்றும் பொருள் கொள்ளலாம். இருவருடைய உள்ளங்கள் (வெளியே தெரியாதவை) இணையும் நட்பையே, மைத்திறன் எனலாம்.

விசுவா மித்திரன் என்ற முனிவன் பற்றிய கதைகள் ஏராளமாக உள்ளன. விசுவம் என்பது, விரிந்து பரந்து விசும்பு அல்லது வானம் என்ற பொருள் அறியப்படும்.

விசும்பு: மாக விசும்பு (கரியவானம்).

விசும்பு: எல்லையில்லாதது, மிகவும் விரிந்தது.

விசுவ நாதன் (ச): எல்லையற்ற இப்பேரண்டத்தின் முதல்வன், தலைவன், இறைவன்.

விசுவாமித்திரன்: விரிந்துபரந்த நட்பிற்குரியவன்.

விழுவம் என்ற தமிழ்ச் சொல்லே (கதிரவன்) விசுவம் எனத் திருந்ததாகவும் சிலர் கூறுவர். மித்திரன், கதிரவனையும் குறிப்பதால், அவ்வாறு கருதப்பட்டது.

மித்திரனையும் வாரணனையும் முன்னிறுத்தி யாகம் ஒன்று செய்தார்களாம். யாகத்தில் திளைத்த இருவரும் பாலுணர்வு மேலோங்க, தங்களது உயிரணுக்களை உதிர்த்தார்களாம். அது தரையில் விழுந்து விடக்கூடாதே என வருந்திய ஊர்வசி, தனது உறுப்பில் அதனை ஏந்திக் கொண்டாளாம். அவ்வாறு ஊர்வசிக்குப் பிறந்தவனே வசிட்டன் என்று ஒரு கதையும் உண்டு.

வாரணன்:[639] வருணா என்ற சமற்கிருதச் சொல்லின் வேர், வ்ரி(vri) என்று சொல்லப்பட்டுள்ளது. வ்ரி என்பதற்கு மூடுதல் என்று பொருள் கொண்டனர் (to cover, to screen, to veil, to conceal, to hide, to hide -p. 1007 sans.) வ் ருணா என்றசொல், மூடியுள்ள வானம் எனப் பொருள் கூறி, அவனை மழைத் தெய்வமாகக் காட்டுகின்றன. தமிழில் அறியப்படும் நெய்தல் கடவுளான வாரணன் என்ற சொல் வரிந்திருத்தல் அல்லது சூழ்ந்திருத்தல் என்ற பொருளில் அறியப்படும்.

வர்-வரி-வாரி = கடலுக்குரிய பெயர். வாராவதி (ச.)

வார்+அணம் = வாரணம். வாரணஞ் சூழ்ந்த இவ்வுலகம் என்ற வழக்கை நோக்குக.

சமற்கிருதம் கூறும் வரி மூடுதல் என்ற ஒரு பொருளையோ தரும்.

வாரணம் என்ற வாரி மூடுதலுடன், பிரிந்திருத்தல் பரந்திருத்தல் என்ற பொருளையும் தரும். வாரணனே. வ்ருணா என சமற்கிரு தத்தில் திரிந்தது.

வாரணன் வானத்தின் நடுவே அறியப்படும் குடக்குறியின் (கும்பம்) உறுப்பாக உள்ள செக்கு (சதயம்) என்ற மீனின் தலை வனாகச் சொல்லப்படுகிறான். அக்காலத்தில் புரட்டாசியில் முடக்கப்படும் கடற்பயணம் மீண்டும், மாசித்திங்களில் தொடங்கும். அக்காலக் கடல் வழிப் பயணத்துக்கு கும்பமே திசை காட்டும் கருவியாக இருந்தது. இந்தக் கருத்தினை மைய மாகக் கொண்டே, வாரணனுக்கு கடல்வழிகள் அனைத்தும் தெரியும் என்று வேதம் கூறுகிறது. தமிழில் அறியப்படும் கடல் தெய்வமான வாரணனுக்கு கடல் வழிகள் தெரியாதா என்ன?

அக்னி: அனல்[640] என்றும் அக்னி சொல்லப்பட்டுள்ளது. அனல் என்ற தமிழ்ச் சொல்லே அனல என்த்திரிந்துள்ளது. அக்னி என்ப தற்குத் தீ என்றும் பொருள். குறிப்பாக, தீயின் நாக்கின் நடுவே தோன்றும் கருவட்டத்தையே அச் சொல் குறிக்கின்றது. அக்கரு வட்டம் "மை பொதி விளக்கு" என தமிழில் அறியப்படும்.

அம்கை, அங்கை, அக்கை, அக்கி என்றவாறு சொல்லப்பட்ட கருவட்டம். அக்னி என்றானது. உள்ளங்கையைப் போன்ற வடிவம், (அங்கை) என்று தமிழில் பொருள்படும்.

அக்னியாகிய தீ, வானத்துக்கும் உலகிற்கும் தூதுவனாகச் செயல்படும். வேள்வியில் தோற்றுவிக்கப்படும் தீ, வானத்துள் சென்று, வேள்வியில் வேண்டப்படும். தேவர்களுக்குச் செய்தியை அறிவித்து, அவர்களை கேள்விச் சாலைக்கு அழைத்து வருவதாகக் கூறப்படுகின்றது. தீ மூட்டாமல் வேள்வி செய்ய இயலாது. எனவே வேள்விகளுக்குப் பொறுப்பானவன் அக்னி. அரணிக் கட்டைகளில் (தீயை உருவாக்க தேய்க்கும் கட்டை) ஒளிந்திருப்பவன் அக்னி. படைக்கப்படும் பொருட்களை எரித்து, அதனை மேலே கொண்டு செல்பவன்.

ஐம்பூதங்களில் ஒன்றாகிய தீயை வழிபடுவதால், கேட்டவை கேட்ட படி கிடைக்கும் என வேதம் கூறுகிறது. அக்னியை கதிரவனோடும் ஒப்பிடுவர். தீ வழிபாடு உலகின் அனைத்து நாகரிகங்களிலும் அறியப்பட்டுள்ளது. பாரசீகர்கள் தீயை மட்டுமே வழிபட்டார்கள்.

அக்னியைப் பற்றிய குறிப்பில், "அக்கினியே! உனக்குப் பயந்து, கருமை நிறம் கொண்ட மக்கள் வெவ்வேறு மன

உணர்வுகளுடன், தங்களுடைய செல்வங்களை எல்லாம் விட்டு விட்டு ஓடினார்கள்," என்று (ரு.வே.ப 142) சொல்லப்பட் டுள்ளது.[641] இக்குறிப்பு, சிந்துவெளி மக்களையே கருத்தில் கொண்டு சொல்லப்பட்டது என்றும் சிந்துவெளி தீயினால் அழிந்தது என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பாசம் போன்ற அறிஞர்கள், வெள்ளப் பாழினால் தான் சிந்துவெளி நாகரிகம் அழிந்ததாகக் கூறுகின்றனர்.

புரவி: ருக்கு வேதம் புரவிகளின் பயன்பாடு பற்றி பல இடங்களில் குறிப்பிடுகின்றது. கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகே, புரவியின் பயன்பாடு உலகில் அறியப்பட்டதால், வேதத்தில் இணைக்கப்பட்ட புரவிகள் பற்றிய செய்திகள், ஆரியர்களால் இணைக்கப்பட்டதே என்பர். புரவி, ஆற்றலின் உருவகமாகச் சொல்லப்பட்டிருக்கலாம் என்பது, ஆய்வாளர் களின் கருத்தாகும். தேவர்கள் தங்கள் ஊர்திகளாக, புரவி களைப் பயன்படுத்துகின்றனர் என வேதம் கூறுகிறது.

அஸ்வ என்பது புரவிக்கு ஒரு சொல்லாக சமற்கிருதம் கூறுகிறது. உண்மையில் அஸ்வ என்பது, புரவியை நேரிடை யாகக் குறிக்கும் சொல் அன்று. சுவ (ஸ்வ) என்பது, நலம் என்றும், அ-ஸ்வ என்பது நலம் கெட்ட, நோயுள்ள என்ற பொருளையும் தருவது, உடல் நலம் காக்கும் மருத்துவர்கள் இருவர், புரவியின் மீதமர்ந்து இவ்வுலகிற்கு வருவதாக வேதம் கூறுகிறது. அம் மருத்துவர்களின் ஊர்தியான புரவியின் பெயரால், புரவியும் அம் மருத்துவரும் அஸ்வ - அஸ்வினி எனப்பட்டனர்.

புருஷ் என்ற பெயரும் புரவிக்கு உண்டு. அப்புரவிக்கு ஐந்து கால்களும் பன்னிரு வடிவங்களும் உள்ளன என்பர். இது உலகின் ஐந்து பருவங்களையும் (கால நிலைகள்), பன்னிரு மாதங்களையும் குறிக்கும் உருவகம் என்பர். மன்னர்கள் நிகழ்த்தும் அசுவமேத யாகம் பற்றிய செய்திகள் வேதத்தில் உள்ளன. பகைவர்களை அழிக்க நடத்தப்படும் யாகம் இதுவா கும். யாகங்களில் மிகுந்த பொருட் செலவில் நிகழ்த்தப்படுவது.

சரசுவதி: சமற்கிருதத்தில் வதி என்ற பின்னொட்டுச் சொல் பெண் ணையும், பதி என்பது ஆணையும் குறித்துச் கொல்லப்பட் டுள்ளன. வைதை என்பதே தமிழ் மூலச் சொல்லாகும்.

வை = பொருத்தம்; தை = இணைப்பு. கணவனுடன் பொருந்தி வாழ்பவள்.

பதி = இச்சொல்லும் இணைதல் என்ற பொருளைத் தருவதே.

பதி - பதிதல் - பதிவு என விரியும்.

பதியன் போடுதல் என்பது இரண்டு செடிகளை இணைத்தல் என்ற பொருளில் உள்ளதை நோக்குக. மனைவியுடன் பதிந்து வாழ்பவன்.

சர் - சர என்றவாறு விரியும் தமிழ்ச் சொல், அசைவை, ஓட்டத்தைக் குறிப்பதாகும்.

சர் - சர - சரம் = நீண்ட நெடிய.

சர் - சர - சருக்கு = வழுக்கிக் கொண்டு ஓடுதல்.

சருக்கு என்ற தமிழ்மூலச் சொல்லே, சருக்கரம் - சக்கரம் என விரிந்தது.

சர என்பது ஓட்டத்தைக் குறித்ததால், அது ஆற்றையும் குறித்தது.

சரவதி - சரசுவதி என்று, ஓராற்றைக் குறித்தது. சரயு என்பதும் ஓராறு.

திரிவேணி சங்கமம் என்ற இடத்தில், அக்காலத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகளும் இணைந் திருந்தன என்று கூறுவர். சரஸ்வதி ஆறு இன்று காணப்பட வில்லை. கால ஓட்டத்தில் சரசுவதி ஆறு மறைந்து போயிருக்க லாம் அல்லது மற்றொரு ஆற்றோடு கலந்திருக்கலாம். சிந்து வெளி நாகரிகத்துக்கு முன்பே, சரசுவதி ஆற்று நாகரிகம் இருந்தது என்றும், சிந்துவெளி நாகரிகம் அதன் தொடர்ச்சியே என்றும் சிலர் வாதிடுகின்றனர்.[642] சரசுவதி நாகரிகம், ஆரிய நாகரிகமே என்றும், அதுவும் அழ்ந்துவிட்டதாகவும் கூறுவர். கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகு சரசுவதி என்ற ஆறு அறியப் படவில்லை. ஆரியருடைய வருகைக்குச் சில ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பு சரசுவதி ஆறு இருந்திருக்கலாம். அந்த ஆற்று நாகரிகம் தமிழருடையதே என்ற கருத்துக்குப் போட்டியாக, சரசுவதியாற்று நாகரிகம் சொல்லப்படுகிறது என்பதை நோக்க வேண்டும்.

பிற்காலப் புராணங்கள், சரசுவதியாற்றை ஒரு பெண் கடவுளாகக் கூறி, அவள் கல்விக்கும் கலைகளுக்கும் உரியவள் என்ற கருத்தைப் பதிவு செய்தன.

யாமன் என்கிற எமன்: யாமன் என்ற தமிழ்ச் சொல்லே, யமன் - எமன் என்று சமற்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ளது. எமன் என்பதே, யமன் எனத் திரிந்ததாகவும் கொள்ளலாம். எம் மக்கள் என்பதே. இறந்து போன எம்மக்களின் தலை வனாக, சிவனால் பணிக்கப்பட்டவன் என்ற பொருளில் எமன்

என்ற சொல், பொருத்தமானதே. அக்காலத்தில், எமன் என்பது சமற்கிருதச் சொல் என எண்ணி, யமன் என்று அங்குள்ள வாறே தமிழில் எழுதப்பட்டிருக்க வேண்டும். யாவனர் - யவனர் என பதிவு செய்யப்பட்டதைப் போல எனக் கருதுக.

யா என்பது தென்திசையைக் குறிப்பதால், யா மன்(னன்) என்பது தென்திசைக் கொருவேந்தன் என்று திருமந்திரம் கூறுகிறது. எமன், குமரிக் கண்ட அழிவுக்குப் பின் அறியப்பட் டவனே. வேதக் கருத்தின் படி, விவசுவான் என்பவனுக்குப் பிறந்தவனே எமன் ஆவான். ஆதாமைப் போல், இவ்வுலகின் முதல் மாந்தன் எமனே என்பது ஒரு கருத்து. முதலில் இறந்த வனும் அவனே. இறந்தபின் எமன் வானுலகம் சென்றான். அங்கு எந்தப் பதவி காலியாக (காலி தமிழ்ச் சொல்லே, கால் = காற்று; காற்று கூட நிறைத்திராத இடம்) இருக்கிறது என்பதைப் பார்த்தான். ஒருலகம் காலியாக இருந்தது. அவ் வுலகிற்கு தன்னைத் தானே மன்னனாக அறிவித்துக் கொண் டான். அவன் பெயராலேயே அது எமன் உலகம் என அழைக் கப்பட்டது.

ஆரிய சமயக் கொள்கைப்படி, ஏழு பிறப்புகள் வலியுறுத் தப் படுகின்றன. இறந்தவர் எவரும் நேரிடையாக வானுலகம் செல்வதில்லை. அவர்கள் எமனுலகிற்கே செல்வர். அங்கு அவருடைய வாழ்க்கையின் நன்மை தீமைகள் எடை போடப்பட்டு, மீண்டும் ஒரு பிறவியாகப் பிறப்பர். அப்பிறப்பு எடுக்கும் வரையிலுள்ள இடைக்காலத்தில், எமலோகத்தில் இருப்பர். ஏழு பிறவிகள் முடிந்த பின், எமன் அவருக்கு நற் சான்றிதழ் வழங்கிய பின்னரே, வானுலகம் செல்வர். அதனால் எமலோகத்தைப் பிதிர் லோகம் என்றும் கூறுவர்.

பிதிர்கள் தங்களுடைய இறந்துபோன முன்னோர்கள் என்றும், அவர்கள் தென் பகுதியைச் சார்ந்தவர்கள் என்றும், மிகச் சிறந்த அறிவாளிகள் என்றும், ஆரியர்கள் கூறுகின்றனர். தென்பகுதியில் இறந்தவர்கள் குமரிக் கண்டத்துத் தமிழர்களே. ஆரியர்கள் கூறும் தென்பகுதி பற்றி அவர்கள் விளக்கவில்லை. கணக்கியலையும், வானியலையும், அறிவியலையும் கண்டு பிடித்தவர்கள் பிதிர்களே என்ற கூற்றில் தொடர்புகள் இருப்ப தாகத் தெரியவில்லை. ஒரு வேளை, வடக்கிலிருந்த தமிழர்கள், வெள்ளத்தில் மாண்டுபோன தமிழர்களின் முன்னோர்கள் பற்றி ஆரியரிடம் கூறியிருக்கலாம். கி.மு. 500 ஆண்டுகளில்

உரோமை நகரில் இனம் தெரியாமல் மாண்டுபோன மக்களின் கல்லறைகளை, லெமூரியரின் கல்லறைகள் எனக் கூறி வழி பட்டுவந்தனர் என்று உரோம வரலாறு தெரிவிக்கின்றது. பிதிர்கள் என்ற சொல்லே தமிழ் மூலத்தின் திரிபு என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

மகாளய அமாவாசை (மகாளய என்பது மாளல் அல்லது இறத்தல்) என்ற நாளில்தான் பிதிர்களுக்கு வழிபாடு செய்யப் படுகின்றது. அந்நாளில் தான் பெருவெள்ளம் குமரிக் கண்டத்தை அழித்தது என்று கருதுவதற்கும் இடமுண்டு. பிதிர்களைத் தென்புலத்தார் என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பிதிர் என்பதற்கு தந்தை, பாட்டன், முப்பாட்டன், முன்னோன் என்றவாறு பொருள் விரியும்.

மாந்தன் உறங்கும் போது காணும் கனவுகள், எமனிட மிருந்தே வருவதாகக் கூறப்படுகிறது. அவனே கனவுகளின் தோற்றம், பிறப்பிடம், தந்தை எனப்படுகிறான். கனவுகள் எமலோகத்தில் தோன்றி, உலகிற்கு வந்து, மாந்தனுக்குள் நுழைகிறது என்பர். தவறான சிந்தனைகளும், கொடு நோய் களும் கனவுகளைத் தோற்றுவிக்கின்றன. ஆழ் மனத்தின் எண்ணப் பதிவு கூறும், நிறைவேறாத விருப்பங்களும் கனவு களாக வருகின்றன என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பெரும்பாலும் மாந்தன் பார்த்த, பழகிய, தெரிந்தவைகளே கனவுகளாக வருகின்றன. நெப்டியூன் புளோட்டோ போன்ற கோள்களில் உலவுவதாக எவருக்கும் கனவுகள் வருவதில்லை. பேய்களைப் பற்றிய முழு நம்பிக்கை கொண்டவர்கள், கெட்ட கனவுகளைக் காண்பர் எனவும் உளவியல் கூறுகிறது.

அய்த்திரேய உபநிடதம் – படைப்புக் கதை:

இருக்கு வேதம் ஒரு படைப்புக் கதையைக் கூறுகிறது. அக்கதை 10 ஆவது பிரிவான புருஷ ஆக்தம் என்ற தலைப்பில் உள்ளது. புருஷ சூக்தம் வியாசரால் தொகுக்கப்பட்டது அல்லவென்றும், அது கி.பி. ஆண்டுகளில் இணைக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. டாக்டர் அம்பேத்கர், புருஷ சூக்தம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் இடைச்செறுகலாக இணைக்கப் பட்டது என்று கூறுகிறார்.[643] புருஷ சூக்தத்தின் மொழி நடையும், சொற்களும், முந்திய வேத நடைக்கு முற்றிலும் மாறுபட்டிருப்பதாகவும் கூறுகிறார். புருஷ சூக்தம் கூறும்

படைப்புக் கதை சிக்கலானதும் குழப்பமானதுமாகும். அக் கதையைப் படித்த ஒருவர், திரும்பவும் அக்கதை பற்றி பிறரிடம் கூற இயலாது. பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட கதை அது. ஆரியர்களின் தொன்மக்கதைகளில் படைப்பு கதைகள் பல்வேறு இலக்கியங்களிலும், வெவ்வேறு வகையில் சொல்லப் பட்டுள்ளன. உண்மையில் ஆரியரின் படைப்புக்கதையில் அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பது எந்தக் கதை என்று எவராலும் கூற இயலாது. தந்தை மகனைப் பெறுவதும், மீண்டும் மகனே நந்தையைப் பெறுவதுமான கதைகள், தொடர்பில்லாதவை.

தொல்தமிழர் வரலாறு என்ற இந்நூலின் முதல் பகுதியில், உலகப் படைப்பு என்ற தலைப்பில் பல்வேறு நாகரிகங்கள் உலகப் படைப்பு பற்றி என்ன கூறுகின்றன என்பது விளக்கப் பட்டன. ஆரியர்களின் படைப்பு கதைகள் பலவுள்ளன. அவற்றில் சில புரிந்து கொள்ள இயலாதவை. சில மேற்கிந்திய கதைகளின் தழுவல்கள். அய்த்திரேய உபநிடதம் கூறும் ஒரு கதையின் சுருக்கம் வருமாறு:

தொடக்கத்தில் கடவுள் மட்டுமே இருந்தார். பேரண்டம், அண்டம், உலகம் என்றும், உயிரினங்கள் என்றும் எவையு மில்லை. முதலில் கடவுள் நான்கு உலகங்களைப் படைத்தார். அவை, அம்பஸ் உலகம், மரிசி உலகம், மரித்தார் உலகம், ஆப உலகம் எனப்படும்.

அம் - அம்ப - அம்பஸ் எனத்திரிந்தது. இது நீர் உலகம். அம் = தண்மை.
மரீசி, மரீசிகா என்ற சொல்லை சுமுக்கம் என்பர்.
மரீசிகா என்பது, மாறு சேய் காட்சி எனப்படும் கானல் நீராகும்.
மாறு சேய்கா - மரீசிகா எனத் திரிந்தது.
மரித்தார் உலகம் - வானுலகம்.

ஆப உலகம் - அப்பு, அப்பி போன்ற தமிழ்ச் சொற்கள் கடலைக் குறிப்பன, நீரைக் குறிப்பன. அப்பு அணை கிடந் தோன் என்று தெய்வப் பனுவல் திருமாலைச் சுட்டுகிறது. முதலில் உலகங்களை மட்டுமே படைத்த கடவுள், இவ்வுல கங்களை பாதுகாப்பாக வைத்திருக்க காவல்களைப் படைத் தார். நீரிலிருந்து பிரம்மா என்ற தேவனைப் படைத்தார். பிரம்மா, படைக்கப்பட்டவனேயன்றி, தன்னிலே இருந்த கடவுள் அல்லன்.

பிரம்ம தேவனின் வாயிலிருந்து பேச்சு வெளிப்பட்டது. (மொழியே முதன்மை பெறுகிறது) மூக்குத் துளைகளிலிருந்து காற்று வெளிப்பட்டது.

கண்களிலிருந்து பார்வை கிடைத்தது.
பார்வையினின்றும் சூரியன் தோன்றினான்.
காதுகளிலிருந்து திசைகள் தோன்றின.
உடலை மூட தசைகள் இணைந்தன.
தசைகளில் மயிர்கள் முளைத்தன.
மயிர்களிலிருந்து மரம் செடி கொடிகள் தோன்றின.
உடல் கூட்டுக்கும் நடுவே இதயம் உருவானது.
இதயத்தில் மனம் தோன்றியது.
மனம் என்ற பகுதியினின்று நிலவு தோன்றியது.
உடலில் தொப்புள் உருவானது.
தொடர்ந்து ஆண் குறி தோன்றியது.
குறியில் விந்து ஊற்றெடுத்தது.
விந்து நீர்த் தன்மையைப் பெற்றது.
நீர் உலகெங்கும் பரவியது.

நீரிலிருந்து பிரம்மா தோன்றி, இறுதியில் விந்தாகிய நீரில் படைப்புத் தொழில் முடிகின்றது கடவுள் நீரினின்று உணவைப் படைத்தார்.

கடவுள் பின் நினைத்தார். இனி விந்துவின் மூலம் அனைத்தும் தோன்றும், வாழும், வளரும். இனி தடையின்றி அனைத்தும் நடக்கும். இதன்பிறகு நமக்கு என்ன வேலை என்று கடவுள் எண்ணினார். அதன் விளைவாக, தாமே உயிராக உடலில் புகுந்தார். மாந்த உடலின் உச்சியைப் பிளந்து, அதன் வழியே கடவுளின் உயிர் உள்ளே நுழைந்தது உச்சியில் நுழைந்த உயிர், இறப்பின் போதும் உச்சி வழியாகவே வெளி யேறியது. அந்தணர், முனிவர், பெரியோர் ஆகிய பெரு மக்களின் உயிர் தலையின் உச்சி வழியாகவே வெளியேறும். (துறவிகளை குழியினுள் அடக்கம் செய்யும் போது, அவர்களுடைய உச் தந்தலையில் தேங்காயை உடைப்பர்.) இந்த உச்சி வழியை இறைவனின் வழி என்பர் (பிரம்ம மந்திரம்). இந்த வழியுடன் சேர்த்து உடலில் 11 வழிகள் உள்ளன. உயிர், மறு பிறப்பைப் பெறும்.[644]

குழந்தை யென்பது தந்தையின் உயிரும், தாயின் உடலும் சேர்ந்து உருவானது. குழந்தை பிறந்தவுடன் க்வா, க்வா என

அழுகின்றது. க்வா என்றால் சமற்கிருதத்தில் எங்கே என்பது பொருள். அதன் விரிவான பொருள், என்னைப் படைத்த கடவுள் எங்கே, என்பது தான். உறங்கும் போது சிரிக்கும் குழந்தை, இறைவனுடன் உரையாடுவதால் தோன்றும் மகிழ்வை புன்சிரிப்பாக வெளிப்படுத்துகிறது. (கிறித்துவர்கள், குழந்தை, வான தூதர் ஒருவரிடம் விளையாடுவதாகக் கூறுவர்).

மனிதன் என்பவன் உடல் + உயிர் + ஆன்மா ஆகியவைகளின் கூட்டுப் பகுதியாகவே விளங்குகின்றான். ஆன்மாவே படைப்புக் கடவுள்; அவனே இந்திரன்; ஐம்பூதங்களும் ஆன்மாவே.

ஆன்மா பிரம்மமாக இருக்கின்றது - ருக்கு வேதம்.
நானே (மாந்தனே) பிரம்மமாக இருக்கிறேன் - யசூர் வேதம்
பிரம்மாகவே நீ இருக்கிறாய் - சாம வேதம்.
ஆன்மாவே பிரம்மம் - அதர்வண வேதம்.[645]

மேற்கண்ட செய்திகளை அனைத்தும் ஆரிய இலக்கியங்கள் பல்வேறு இடங்களில் வெளிப்படுத்தியுள்ளவை.

ஆன்மா என்ற ஒன்றைப் பற்றிய சிந்தனை உண்மையில் வேத ஆசிரியர்களுக்கு இருந்ததா எனத் தெரியவில்லை. ஆன்மா என்ற சொல்லுக்கான விளக்கங்களும் தெளிவாக இல்லை. சிலர் உயிரும் ஆன்மாவும் ஒன்றே என்பர். சிலர் ஆன்மா வேறு, உயிர் வேறு என்பர். இறந்தவுடன் உயிர் வளி மண்டலத்தில் கரைந்துவிடுகின்றது. ஆன்மா அழிவுறுவதில்லை. அது வானுலகம் செல்கிறது என்பர். ஆன்மா என்ற சொல், நீண்டு ஆத்மி (மாந்தன்) என்று சொல்லப்பட்டது என்பர். ஆத்மி என்பது, ஆள் + மெய் = ஆள்மெய் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபே. உடலோடு உள்ள மாந்தன் என்பது பொருள். மெய்யான அந்த ஆளில் பலர் உயர்வான நிலையை எட்டுவதில்லை. மா ஆள் அல்லது பெரியோரே அத்தகுதியைப் பெறுகின்றனர். மா ஆள் + மா என்ற தமிழ்ச் சொற்களே ஆன்மா என்று திரிந்தன. எனவே, ஆன்மா என்ற தத்துவத்தின் மூலமும் விளக்கமும் தமிழில் உள்ளதை அறியலாம். உண்மையில், வேதங்களும் மற்ற புராணங்களும் ஆன்மாவைப் பற்றிய தெளிவான விளக்கங்களை அளிக்கவில்லை. பிற்காலத்தில் அவைகளுக்கு எழுதப்பட்ட உரைகளின் ஆசிரியர்கள் ஆன்மாவைப் பற்றிப் பேசுகின்றனர். துவைதம்,

அத்வைதம், விகிட்டாத் துவைதம் போன்ற கொள்கைகளில், ஆன்மாவைப் பற்றிய செய்திகள் இல்லை. குறிப்பாக மேலை நாட்டுச் சமயங்களான சுமேரியம், பாபிலோனியம், எகிப்தியம் போன்ற சமயங்கள் ஆன்மாவைப் பற்றிப் பேசவில்லை. யூத சமயத்தினருக்கு ஆன்மா என்பது பற்றிய செய்தியை அச்சம யத்தின் நிறுவனர் மோசே கூறவில்லை. கிறித்துவ சமயம் ஆன்மா வைப்பற்றி விரிவாகப் பேசுகிறது. ஆன்மா என்பது இறைவனால் மாந்த உடலில் நிரப்பப்பட்டது. என்றும், அதற்கு அழிவில்லை என்றும் கூறுகிறது.

சாவோல், சால் (saawol, saul) போன்ற பழைய ஆங்கில, செர் மானியச் சொற்கள், ஆங்கிலத்தில் சோல் (soul) என்று சொல் லப்படுகிறது.

Soul: the spiritual of immaterial part of a person, regarded as immortal. (Oxford)

ஆன்மா என்பது தமிழ்ச் சொல் இல்லை யென்றும், அது சமற்கிருதச் சொல் என்றும் கருதுகின்ற சிலர், ஆன்மாவைப் பற்றிய குறிப்புகள் தமிழில் இல்லையென கூறுகின்றனர். தொல் தமிழ்ச் சமயத்தின் கிளைகளான சுமேரியம், பாபிலோனியம், யூதம் ஆகியவை ஆன்மாவைப் பற்றி எதுவும் பேசவில்லை. என்ற கருத்தும் உள்ளது. உயிர் என்பதே ஆன்மா என்று கூறுவோரும் உளர். இடைக் காலத்தில் படைக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளும், சிவஞான போதமும் ஆன்மாவைப் பற்றித் தெளிவு படக் கூறுகின்றன என்பது சிலரது கருத்தாகும்.

இருக்கு வேதம் கூறும் புருஷ சூக்தம் – படைப்புக் கதை[646].

இருக்கு வேதத்தின் பத்தாவது சூக்தம், புருஷ சூக்தம் எனப்படுகின்றது. இது உண்மையில் வேதத்தோடு தொடர் புடையதன்று என அம்பேத்கர் கூறுகிறார். பிற்காலத்தில் இச் சூக்தம் இணைக்கப்பட்டதாகவும் கருதுகிறார். புருஷசூக் தத்தின் கருத்தாவது:

“கடவுளுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலைகள் உள்ளன. அவைகளுக்குரிய கைகளும், காதுகளும், கண்களும், கால்களும், அவைகளும் ஆயிரக் கணக்கில் உள்ளன. அதாவது உலகின் ஒவ்வொரு உயிர்களையும் கடவுள் நேரிடையாகக் கண்காணிக்கின்றார் என்ற கருத்தில் ஒவ்வொருவனுக்கும் ஒரு தலை, இரண்டு கண்கள், காதுகள் என்றவாறு சொல்லப்

பட்டது. அவர் உலகம் எங்கும் பரவியிருப்பதையும் ஒரு சதுர அடி என்றவாறு, ஒவ்வொரு சதுர அடியிலும் கடவுள் தங்கி யிருக்கிறார்."

கடவுளின் உருவத்தில் நான்கில் மூன்று பங்கு அவராகவே இருக்கிறார். மீதம் உள்ள கால் பங்கு இப்பேரண்டமாக இருக்கிறார். ஆதி புருஷனாகிய கடவுளிடமிருந்து பெரும் அண்டம் (பிரமாண்டம் என்பர்) உருவாயிற்று. பிரமாண்டத் திலிருந்து பூமியையும், பூமியின் உயிர்களையும் படைத்தார்.

கடவுளையே அவிப் பொருளாக (ஆஹுத் என்பர்) வைத்து, தேவர்கள் வேள்வி நோற்றனர். இவ்வேள்விக்கு வசந்த காலம் நெய்யாகவும், கோடைக் காலம் விறகாகவும் மாரிக் காலம் நெய் வேதியமுமாயிற்று. இரவும் பகலும் ஐந்து பூதங் களும் நெருப்பாயின. இருபத்தேழு தத்துவங்களும் (விண்மீன் கள்) விறகுகள் ஆயின. பிரம்மாவை பசுவாகக் சுட்டி வைத்த தேவர்கள், வேள்வியைத் தொடங்கினார்கள். யாக புருஷன் முதலில் வேள்வியினின்று வெளிப்பட்டான். அண்ட வெளியில் தயிர் கலந்த நெய் உண்டாயிற்று. பின்னர் காட்டு விலங்கு களான மான், புலி போன்றவைகளை பிரம்மா படைத்தார்.

அந்த வேள்வியிலிருந்து ருக்கு வேத மந்திரங்களும், சாம வேத மந்திரங்களும், யாகத்திரி மந்திர சந்தங்களும் (பாடல் களும்) தோன்றின. (காயத்திரி என்பது, காலை, மாலை, மதியம் என்றவாறு வானத்தில் சூரியனால் தோன்றும் மாற்றங்கள். காயம்-வானம்; திரிபு-மாற்றம்; காயத்திரிபு - காயத்திரி) பின்னர் புரவிகளும், இரு வரிசைப் பற்களுடைய விலங்கு களும், பசுக்களும், வெள்ளாடுகளும் தோன்றின.

பின்னர் பிரம்மாவை தேவர்கள் பலி கொடுத்தார்கள். பிரம்மாவின் முகத்திலிருந்து பிராமணனும், கைகளிலிருந்து சத்திரியனும், தொடையினின்று வைசியனும், பாதங்களிலிருந்து தமிழன் உள்ளிட்ட சூத்திரர்களும் தோன்றினர். மனத்திலிருந்து சந்திரன் தோன்றினான். கண்ணிலிருந்து சூரியனும் முகத்தி லிருந்து இந்திரனும் அக்கினியும் தோன்றினர். உயிரினின்று வாயு தோன்றியது. தொப்புளிலிருந்து விண்வெளியும், தலையி லிருந்து சொர்க்கமும், பாதங்களிலிருந்து பூமியும், காதுகளி லிருந்து திசைகளும் தோன்றின. கடவுள் படைக்கப்பட்ட அனைத்திற்கும் பெயர் வைத்தார்.

மாந்தப் பிறவிகளில் பிராமணனே உயர்ந்தவன் என்றும், அவர்களுக்குப் பணிவிடை செய்யவே மற்றவர் படைக்கப் பட்டனர் என்றும் சொல்லி வந்த ஆரியர்களுக்கு, அதற்கான சான்றும் பதிவும் தேவைப்பட்டதால், ருக்கு வேதத்தில் இடைச் செருகலாக புருஷ சூக்தம் இணைக்கப்பட்டது எனலாம். புருஷ சூக்தம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே இணைக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தமிழரின் படைப்புக் கதை

பேரண்டம், அண்டம், உலகம், உலகின் உயிரினங்கள், மாந்தன் ஆகியவை படைக்கப்பட்டவைகளே என்றும், அவை தன்னிலே தோன்றியவை அல்ல என்றும் சமயங்கள் கூறுகின்றன. உலகிலுள்ள அனைத்துக் சமயங்களும் படைப்புக் கதை யொன்றைக் கொண்டுள்ளன. இத்தொகுதியின் முதல் பகுதியில், பல்வேறு சமயங்களின் படைப்புக் கதைகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சுமேரிய, மெசபத்தோமிய, யூதச் சமயங்களின் படைப்புக் கதைகள் பற்றி ஏற்கனவே விளக்கியுள்ளோம். அச்சமயங்களை கூறும் படைப்புக் கதைனளின் சூழல்கள், இடப்பெயர்கள், மாந்தப் பெயர்கள், கடவுள் பெயர்கள் அனைத்தும் தமிழ் மூலத்தைக் கொண்டுள்ளன என்பதையும் விளக்கியுள்ளோம். எனவே, தமிழருக்கும் ஒரு படைப்புக் கதை யொன்று இருந்தது; அது பற்றிய நூல்கள் அழிந்துபோயின எனக்கருத இடம் உண்டு. ஆனாலும் சங்க இலக்கியமான பரிபாடல், படைப்பு நிகழ்வொன்றைக் கூறுகிறது. அந்நிகழ்வு, தொன்மைக் காலம் தொட்டு, தமிழர்கள் கூறி வந்த படைப்புக் கதையின் விளக்கமாகவும் அமைந்துள்ளது.

பரிபாடல் என்பது பழந்தமிழ்ப் பாடல் வகையினுள் ஒன்று. இது இன்ன பாடல் என்ற இயல்பான வழக்கின்றி எல்லாப் பாடல்களையும் பொதுவாகப் பெற்றுள்ள தொகுப்பே பரிபாடல் என தொல்காப்பியர் விளக்குகிறார்.[647]

> பரிபாடலே தொகைநிலை வகையின்
> இது பா என்னும் இயல்நெறி இன்றிப்
> பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப – 1377.

திருமால், செல்வேள், வையை, கொற்றவை அல்லது கடல் ஆகியவை பற்றிய பாடல்கள் பரிபாடலில் உள்ளன. தொல்தமிழரின் கடவுள் பற்றிய சிந்தனைகள், கொள்கைகள்,

தத்துவங்கள் என தமிழர் சமயத்தின் கொள்கை விளக்கமாகவே பரிபாடல் காணப்படுகின்றது.

கடுவன் இளவெயினனார் கூறும் விளக்கம் இது.[648]

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தினுள் பொருளும் நீ; – 3:63 – 68.

உலகம் என்பது நிலம், நீர், வளி, தீ, வானம் என்ற ஐம்பூதங்களால் ஆனது என்றும், இயற்கையின் அனைத்துப் பொருட்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்றும், ஆற்றலுள்ள அனைத்தும், ஆண்டவனால் அருளப் பட்டவை என்றும், எங்கும் எதிலும் எப்போதும் நிறைந் திருக்கும் இறைவனை கடுவனார் நினைத்துப் பார்க்கின்றார்.[649]

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள;
நின் தண்மையும் சாயலும் திங்களுள;
நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள;
நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள;
நின் நாற்றமும் ஒண்மையும் பூவையுள;
நின் தோற்றமும் அகலமும் நீரினுள;
நின் உருவமும் ஒலியும் ஆ காயத்துள;
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள்;
அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏமம் ஆர்ந்தநிற் பிரிந்து
மேவல் சான்றன எல்லாம் – 4 : 25–35.

மேற்சொல்லப்பட்ட பாடலுக்கு விளக்கம் தேவையில்லை.

பூவை (5 ஆம்வரி) = காயாம்பூ
மருத்து (8 ஆம்வரி) = காற்று

மேற்கண்ட இரண்டு பாடல்களிலும் உள்ள மையக் கருத்துகள் தாம் இருக்கு வேதத்தில் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளன. கடுவனார் கையாண்ட சொற்படி, வேதம் என்பதே தமிழ்ச் சொல் எனக் கருத வேண்டியுள்ளது. வேதம் - வேத, வித்யா எனத்திரிந்துள்ளது.

தமிழ்ப் படைப்புக் கதையின் மையக் கருத்து :

கடவுள் முதலில் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார். அடுத்து படைக்கப்பட்டவை ஞாயிறும் திங்களு மாகும். அழகிழந்து காணப்பட்ட வானத்தில் விண்மீன்களைப் படைத்து அழகூட்டினார். இப்படைப்புகளுக்குப் பிறகு பல ஊழிகள் வெறுமையாகக் காணப்பட்டவை மறைந்தன. அடுத்து வந்து ஊழிகள் படைப்புக் காலங்களாகும்.

பின்னர் கடவுள் (ஏற்கனவே ஒளியைப் படைத்துவிட்ட பிறகு) ஒலியைப் படைத்தார். உருவம் இன்ன தென்று அறியப்படாத காற்று முதல் மற்ற பூதங்கள் வளர்வதற்கேற்ற வகையில் வானம் இருந்தது. இது முதல் ஊழிக் காலமாகும். முதல் ஊழியில் காற்று தோன்றியது.

(பிரிமேலழகர் உரை:[650] மண்ணுலகமும் பொன்னுலகமும் பாழ்பட ஒன்றற்கொன்று மாறிவருதலாகிய பழைய இயல் பினையுடைய மதியமும் ஞாயிறும் கெடுதலால் அழகிழந்த இயல்பிற்றாக விசும்பு கெட்ட ஊழிகள் முறை முறையாகக் கழிந்தனவாக.

"பாழ்பட" எனவும், "மரபிற்றாக" எனவுமுள்ள எச்சங்கள், "விசும்பிலூழி", என்புழி, இன்மையாகிய குறிப்பு வினை கொண்டன.

தன் குணமாகிய ஒலியுடனே தோன்றி உருவு காணப் படாத வளிமுதற் பூதங்களின் பரமாணுக்கள் வளர்கின்ற வானமாகிய முதற் பூதத்தினது ஊழியும்.

"உருவறிவாரா" எனக் குறைந்து நின்ற பெயரெச்சம், "கரு" என்னும் பொருட் பெயர் கொண்டது.

"வளர் வானம்" என்புழி வளர்தலாகிய இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்று, "தோன்றி" என்னும் வினையெச்சத்திற்கு வினை முதல் முடிபாயிற்று.

"வானத்து" என்புழி அத்து அல்வழிக் கண் வந்தது.)

பாடல்: 1. தொன்முறை வியற்கையின் மதியோ.....

2. ..... மரபிற் றாகப்

3. பசும் பொ னுலகமு மண்ணும் பாழ்பட

4. விசும்பி லூழி யூழூழ் செல்லக்

5. கருவளர் வானத் திசையிற் றோன்றி
6. உருவறி வாரா வொன்ற வூழியும்[ண]

அவ்வானத்தில் முதல் ஊழியில் படைக்கப்பட்ட காற்று அனைத்துப் பொருட்களையும் தனித்தனியாகப் பிரிக்கக் கூடியதாய் அமைந்தது. சலித்தல் அல்லது முறைப்படுத்துதல் என்றும் கூறலாம்.

அக்காற்றினின்றும் செந்தீத்தோ என்றது. செந்தீக்கள் ஞாயிறும், விண்மீன்களும் திங்களும் என்க. இது இரண் டாவது ஊழிக் காலமாகும்.

அத்தீயினின்றும் மேகம், பனி, மழை, நீர் ஆகியவை தோன்றின. இது மூன்றாம் ஊழிக் காலமாகும்.

பின்னர் நீரினின்றும் தோன்றிய நான்கு அணுக்களும் (பூதங்களும்) வாழ்வதற்கேற்ற கடலும் தரையும் (நிலமும்) தோன்றின. இது நர்ன்காவது ஊழியாகும்.

(பரிமேலழகர் உரை[652]: அவ்வானத்தினின்றும் எல்லாப் பொருட்களையும் சலிப்பிக்கும் காற்று தோன்றிய முறை முறையாகிய ஊழிகளும், அக்காற்றினின்றும் செந்தீத் தோன்றிய ஊழிகளும், அத்தீயினின்றுந் தோன்றிப் பனியும் மழையும் பெய்த ஊழிகளும், அவற்றிற்குப் பின்பு, அப்புனலினின்றுந் தோன்றுதலான் மீண்டும் வெள்ளத்தினுட் கிடந்து முன் தோன்றிய நான்கு பூதங்கட்கும் உள்ளீடாகிய இரு நிலத்தின் ஊழியும்.)

பாடல்: 7. உந்துவளி கிளர்ந்த வூழு மூழியும்
8. செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
9. தண்பெய றலைஇய வூழியு மவையிற்
10. றுண முறை வெள்ள மூழ்கி யார்தருபு
11. மீண்டும் பீடுயர் பீண்டி ய வற்றிற்கும்
12. உள்ளீடாகிய விரு நிலத் தூழியும்[653].

உ.வே. சாமி நாதையர் உரை[654]: மேற் கண்ட பாடல் வரி களை, இருக்கு வேதக் கருத்துகளுடன் உ.வே.சா. ஒப்பிடுகிறார். "பரம் பொருளிலிருத்தும் ஆகாயம் தோன்றி, அதனின்றும் காற்று தோன்றி, அதனின்றும் நீர் தோன்றி, அதனின்றும் நிலந் தோன்றிற்று". - டாக்டர் உ.வே.சா. பரிபாடலுக்கான உரை, ப.10.

மேற்கண்டவாறு பல ஊழிகளில் படைப்பு நிகழ்த்தப் பட்ட பின்பு, நெய்தலும் குவளைவும் ஆம்பலும் கங்கமும் கமலமும் வெள்ளமும் தோன்றின. இறுதியில் உயிர்கள் படைக்கப்பட்டன. குறிப்பிடப்பட்டுள்ள மலர்கள், ஒவ்வொரு நிலத்தையும் குறிப்பன என்று கருதுகின்றனர். ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிர்கள் (மாந்தன் உள்ளிட்ட) இறுதியாக படைக்கப்பட்டன. இதுவே இறுதி ஊழியாகும்.

(பரிமேலழகர் உரை655: என்றிவ்வூழிகளானே நெய்தலும் குவளையும் ஆம்பலும் கங்கமும் கமலமும் வெள்ளமுமென எண் குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய கால வீட்டம் கழிந்த பின் உயிர்கள் உளவாதற் பொருட்டு (ஒருவனை) அந்நிலத்தினை எடுத்திட்ட ஆதி முதல்வ)

பாடல்: 13. நெய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமும்
14. மையில் கமலமும் வெள்ளமு நுதலிய
15. செய் குறியீட்டங் கழிப்பிய வழிமுறை
16. கேழ நிகழ்வரக் கோலமொடு பெயரிய
17. ஊழி ஒரு வினை* யுணர்த்திலின் முதுமைக்
18. கூழி யாவரு முணரா
19. ஆதி முதல்வ! பேணுந் தொழுதும்656

*வரி 17 இல் குறிப்பிடப்பட்டுள்ள "ஒருவனை" என்பது ஒருவினையென சொல்லப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஒன்றுமுதல் பத்தொன்பது வரிகள், படைப்புத் தொழில் பற்றி செய்திகளைக் கூறுகின்றன. மொத்தம் ஏழு ஊழிகளில் இவ்வுலகம் படைக்கப்பட்ட செய்திகள் தரப் பட்டுள்ளன. ஊழி யென்பது பல்லாயிரம் ஆண்டுகளைக் கொண்ட ஒருகால அளவாகும். ஏழு ஊழிகளும் ஏறக்குறைய 70 இலக்கம் ஆண்டுகள் எனவும் கொள்ளலாம். எனவே, இவ்வுலகப் படைப்பானது 7 நாளில் நிகழ்வுற்றது என்ற கருத்து தவறானது, இயற்கைக்கு மாறுபட்டது. இன்றைய அறிவியல் கூறும் பேரண்டத் தோற்றம், உயிர்களின் தோற்றம் பற்றிய செய்திகளுக்கு ஏற்புடையதாகவே பரிபாடல் செய்தி கூறுகின்றது. பரிபாடல் தரும் படைப்புச் செய்தியை சங்க காலத்துச் செய்தியாகக் கருதக் கூடாது. இது பழங்காலம் தொட்டு, தமிழர்களால் சொல்லப்பட்டு வந்த செய்தியையே

பரிபாடல் மீண்டும் எடுத்துச் சொல்கிறது. வேதங்கள், புராணங்கள் மற்ற மற்ற குறிப்புகள் தரும் படைப்புச் செய்திகள் இயற்கையோடு முரண்பாடு கொண்டவை. ஏராளமான கற்பனைச் செறிவுகளைக் கொண்டு, தொடர் நிகழ்வாக அவை சொல்லப்படவில்லை.

மேற்கண்ட படைப்புச் செய்தியில், கடவுளின் படைப்புக்கு இடையூறு விளைத்ததீய உருக்களான அவுணர்களை, இறைவனின் சக்கரமாகிய ஆய்தம், பனங்காய்களை வெட்டிச் சீவுவது போன்று, தலைகளைத் துண்டித்து அழித்தது.[657] இந்தச் சக்கராய்தம் தமிழர்கள் பயன்கடுத்திய போர் கருவிகளில் ஒன்று. மெசபத்தோமியாவிலும், எகிப்திலும், அந்தச் சக்கரமே, மாந்த உருவில் (தலை - சக்கரம், உடல் - மனித உடல்) ஒரு கடவுளாக அறியப்பட்டடுள்ளது. அந்தக் கடவுளின் வட்டத்தலை, வட்டமான போர்க் கருவிகயினைக் குறிப்பதாகவே (disk) ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[658] எனவே தமிழ்க்கடவுள் படைப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்பு பல்வேறு தீய உருக்களை அழித்த பின்பே, அப்பணியில் ஈடுபட முடிந்தது.

இந்தக் கருத்தை அப்படியே, சுமேரிய மேசபத்தோமியக் கதைகள் எடுத்துக் கூறுகின்றன. எல் என்ற கடவுள் தீயவர்கள் (அவுணர்களை) அழித்ததாக சுமேரிய இலக்கியமும், மருதூக் என்ற கடவுள் அவ்வாறே அழித்ததாக, மெசபத்தோமிய இலக்கியமும் கூறுகின்றன.[659] எனவே அவ்விரு இலக்கியங்களும் தமிழர் சொல்லி வந்த படைப்பு நிகழ்வையே மீண்டும் கூறுகின்றன என்பதில் ஐயமில்லை. சுமேரிய மெசபத்தோமியப் படைப்புக் கதைகள் எவ்வாறு தமிழ்ச் சூழல்களைக் கொண்டு சொல்லப்பட்டுள்ளன என்பது ஏற்கனவே இத்தொகுப்பில் விளக்கப்பட்டுள்ளது.

உலகப் படைப்பைப் பற்றிக் கூறும் விவிலியம் ஆறு நாளில் கடவுள் இவ்வுலகைப் படைத்ததாகக் கூறுகிறது. உண்மையில், நாள் என்ற கருத்து, எபிறேய மொழி மூலமான விவிலியத்தில் சொல்லப்படவில்லை. யோம் (yom) என்ற எபிறேயச் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது.[660] பழைய எபிறேய மொழியில் யோம் என்ற சொல்லுக்கு ஒரு நாள் முதல் பல இலக்கம் ஆண்டுகள் வரை என்பதே பொருளாகும். எபிறேய மொழி விவிலியத்தை கிரேக்க, இலத்தீன், ஐரோப்பிய மொழிகளில் மாற்றம் செய்தவர்கள், பல்லாயிரம் ஆண்டுகள் என்ற

கருத்தை விட்டுவிட்டு, நாள் என்றவாறு பதிவு செய்து விட்டனர். ஏழு நாள் படைப்பு என்று மொழி பெயர்ப்பு விவிலிய நூல்கள் அனைத்தும் ஏற்றுக் கொண்டன. இது இயற்கைக்கு முரண்பட்டது என்பதையும், விவிலியத்தைத் தவறாக மொழி பெயர்த்ததால், விவிலியப் படைப்புக் கதை, நம்பகத் தன்மையை இழக்கக் காரணமாயிற்று என்பதையும் அறியலாம்.

விவிலியப் படைப்புக் கதை, சுமேரிய - மெசபத்தோமியக் கதைகளைத் தழுவியதே எனலாம். எனவே, உலகின் மூத்த இனமாகிய தமிழ் மக்கள் சொல்லி வந்த படைப்புக் கதையையே, சிற்சில மாற்றங்களுடன், மேற்கித்திய சமயங்கள் ஏற்றுக் கொண்டன என்பதை உறுதியாகக் கூறலாம். தமிழ் - எபிறேய மொழித் தாக்கங்களால், வேதம் மற்றும் தொன்மக் கதைகளிலும், மற்ற ஆரிய சமற்கிருத இலக்கியங்களிலும், பலவேறு செய்திகள் இணைக்கப்பட்டுள்ளதையும் அறியலாம்.

எடுத்துக் காட்டாக, உலகின் நிலப்பகுதிகளைப் பெரு மளவில் அழித்த ஊழிப் பெருவெள்ளம் பற்றிய செய்திகள், உலக சமயங்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆரிய இலக் கியங்களும் வெள்ளம் பற்றிய நிகழ்வைப் பதிவு செய்துள்ளன. ருக்கு வேதமும் வெள்ளப்பாழ் பற்றிய செய்தியைக் குறிப் பிடுகின்றது. (இந்த ஊழிப் பெருவெள்ளமே குமரிக்கண்ட நிலப்பகுதிகளை அழித்தது என்பது பற்றி ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளது).

ருக்கு வேதம், "யதா பூர்வ" என்ற சொல்லைப் பயன்படுத் துகிறது. இதற்கு "முன்பு இருந்ததைப் போலவே" என்பதே பொருளாகும். வேதச் செய்தியின்படி, வெள்ளக் காலத்தில், உலகின் எந்த உயிர்களும் தப்பிப் பிழைக்க வில்லை. முற்றிலு மாக அழிந்துபட்டன (குமரிக் கண்ட அழிவின் தாக்கமாக இருக்க வேண்டும்). மேலைச் சமய இலக்கியங்கள், வெள்ளக் காலத்தில் சில மாந்தர்களையும், சில உயிரினங்களையும் கடவுள் காப்பாற்றியதாகக் கூறுகின்றன.

வேதம் கூறும் செய்தியின்படி, இவ்வுலகம் மட்டுமல் லாது, வான மண்டலமும் அழிந்து போயிற்று என்றும், சூரியன் நிலவு விண்மீன்கள் கோள்கள் அனைத்துமே அழிந்து போயின, என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஊழிப் பெருவெள்ளத்தை

"மஹாப்பிரளயம்," என்று வேதம் கூறுகிறது. (பிறழ் + அயம் = கடல் தனது நிலையிலிருந்து மாறுபட்டது என்பது தமிழ்ப் பொருள். பிறழயம் எனத் திரிந்தது). வெள்ளக் காலத்துக்குப் பிறகு, "யதா பூர்வ" என்றவாறு வேதம் கூறுகிறது.[661] அச் சொல்லின் கருத்துப்படி, முன்பிருந்த பேரண்டத்தைப் போன்றே கடவுள் மீண்டும் ஒரு படைப்பை (இரண்டாவது முறையாக) மஹாப் பிரளயக் காலத்துக்குப் பிறகு மேற் கொண்டார் எனக் கூறுகிறார்.

பிரம்மா பழைய பிரபஞ்சத்தைப் படைத்தான். அவ்வூழிக் காலம் (வேதமும் ஊழி என்றே அதாவது யுகம் என்றே குறிப் பிடுகின்றது) முடிந்தபின் பிரளயம் தோன்றி பேரண்டத்தை அழித்தது. பின் நீண்ட காலமாக, பிரபஞ்சம் என்ற ஒன்று இல்லாமல் இருந்தது. இவ்வூழிக் காலம் முடிந்ததும் மீண்டும் பிரபஞ்ச சிருஷ்டி யுகம் வந்தது. "முன்போலவே, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம் முதலான ஸகலமும், ஸகல வஸ்துக்களும், பிரம்மரவால் படைக்கப்பட்டு, புதுப் பிரபஞ்சம் தோன்றியது." விஷ்ணு புராணத்தை இயற்றிய மைத்ரேயர் நூல் குறிப்பிடுகின்றது. (ரு.வே.ப. 188)

வேதம் கூறும் வானியல்

வானியலைக் கண்டுபிடித்து அதனை மேலை நாடு களுக்கு அறிவித்தவர்கள் ஆரியர்களே என்று கருத்து உலக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிரேக்க வானியல், ஆரியவானியலைத் தழுவியது என்ற கருத்தும் ஏற்கப்பட்டுள்ளது. இவை வரலாற்றில் தவறாக எழுதபட்ட பதிவுகளாகும். ஆரிய வானியலின் முன்னோடிகள், தமிழரே (இந்தியரே என மோனியர் விவிலியம்ஸ்) என்பதும், கிரேக்க வானியலின் முன்னோடிகள், தமிழரான பாபிலோனியர் என்பது மறைக்கப் பட்ட செய்திகளாகும். கி.மு. 1000 ஆண்டுகளில் தான் ஆரியரும் கிரேக்கரும் வரலாற்றின் வெளிச்சத்துக்கு வருகின்றனர். அவர் களுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனியர் (கி.மு.3000), தமிழர் (கி.மு.4000) போன்றோர், வானியல் பற்றிய தெளிவான முடிவுகளைக் கொண்டிருந்தனர். வேதங்கள் கூறும் வானியல் பற்றிய செய்திகளைக் கூறுபவர்வள், வரலாற்றுக் கண்ணோட்டம் இல்லாதவர்களே.

ஏற்கனவே இத்தொகுப்பு நூலில் குறிப்பிட்டுள்ள கருத்தை நினைவிற் கொள்ள வேண்டும். "வேதங்களில் சொல்லப்பட்டுள்ள வானியல் தொடர்பான செய்திகள் அனைத்தும் ஆரியர்கள் இந்தியாவிற்கு வருமுன்னரே, இந்தியப் பழங்குடியினர் கண்டறிந்து வெளிப்படுத்திய உண்மைகளாகும். இவ்வுண்மைகளை, கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகு பஞ்சாபில் குடியேறிய ஆரியர்கள் அறிந்து கொண்டனர். வியாசர் தொகுத்த வேதங்களில், இந்தியப் பழங்குடியினர் கண்டுபிடித்து வெளியிட்டிருந்த வானியல் தொடர்பான செய்திகளை, வியாசர் இணைத்துக் கொண்டார்". இச் செய்தியை மோனியர் விவிலியம்ஸ் என்ற சமற்கிருத அறிஞர், தனது ஆங்கில - சமற்கிருத அகராதியில் தெளிவு படுத்தியுள்ளார். (ப.10 15) இந்த சிந்தனையை மனதில் கொண்டு, ஆரியரின் வானியல் பற்றிய செய்திகளை அணுகவேண்டும் என நினைவூட்டலை முன் வைக்கின்றோம்.

வானில் தெரியும் உடுக்களை, சோதி என்று சமற்கிருதமும் தீக்கள் என்று தமிழும் கூறுகின்றன. தொலைவில் உள்ள தீ, சேய்தீ என்று தமிழில் சொல்லப்பட்டது; சோதி என்று திரிந்தது. சோதி இருக்கும் இடம், அதன் நகர்வு ஆகியவைகளைக் கணித்து சோதிடம் எனக் கூறினர். பெருங்காயம் என்பது உணவுக்குப் பயன்படுத்தப் படும் நறுமணப் பொருளாகும். மற்றொரு பொருள் யாதெனில் விரிந்து பரந்து கருமை நிறமான வானம் (காயம் - ஆகாயம்) என்று சொல்லப்படும். பெருங்காயத்தில் ஒளிர்கின்ற உடுக்களின் வெளிச்சம் அல்லது ஒளி, பெருங்காயம் - பிரகாசம் எனத்திரிந்தது. அனல் என்பது, அனல எனத்திரிந்தது. வான் வெளியில் காணப்படும் உடுக்களை நக்சத்திரம் என்றும் சூரியனைச் சூர்ய அல்லது சூரிய என்றும், சந்தி-தரை என்பதே, சந்த்-த்ர சந்திர என்றும் திரிந்தன. கோள்கள், க்ருக எனப்பட்டன. கருவகம் என்பதற்கு, தன்னிலே ஒளியில்லாதவை என்பதே உண்மைப் பொருளாகும். பிற ஒளிகள் அவை மீது படாவிட்டால் அவை கருமையானவேயே. க்ருக என்பது வீட்டையும் குறித்தது. சிறப்பான, உயர்வான இடம் என்றவாறு கருவகம் எனப்பட்டது.

நக்சத்ர என்ற சமற்கிருதச் சொல்லுக்குப் பல்வேறு பொருளைத் தருகின்றனர். "நக்ச" என்ற வேர்ச் சொல் நீண்டு விரிந்தது என்பர். த்ர (dra) என்பது இடம் அல்லது தரையைக்

குறித்தது. நகர் என்றால் நகருதல் என்று பொருளாகும். நகர் என்ற சொல்லே, நக்க - நக்ச எனத் திரிந்தது என்க. கூடுதலாக, நகு என்ற தமிழ்ச் சொல்லுக்கு, ஒளிர்தல் என்ற பொருளும் உண்டு. நகு - தரை, ஒளிரும் இடம் என்றும் பொருள் கூறுலாம். நக்சத்திர என்பது தமிழ் மூலத்தைக் கொண்ட சொல்லே. நக்ஷ் = நெருங்குதல் (ச)[662].

நக்சத்ர[663]: ஆற்றல் இல்லாதது, சக்தி இல்லாதது என்ற பொருளும் சொல்லப்படுகின்றது.[664] நக்கம் என்பதற்கு அம்மணம் என்ற பொருள் தமிழில் உண்டு. நக்கன் = சிவன். ஆடையில்லாதவன் அரை மனிதன் என்பது பழமொழி. ஆடை முழுமையைக் குறிக்கின்றது. ஆடையின்மை முழுமை யின்மையைக் குறிக்கிறது. எனவே, நக்கத்தரை என்பது, ஆற்றல் இல்லாதது என்ற தமிழ்ப் பொருளும் இதில் உண்டு.

தாரா-தாரகை[665]: தார் என்ற தமிழ்ச் சொல்லுக்குக் கூட்டம் என்ற பொருள் உண்டு. விண்மீன் கூட்டமும் அவ்வாறே சொல்லப்படும். வாழைத்தார் என்ற சொல்லை ஒப்பு நோக்குக. தார் - தாரா எனத்திரிந்தது.

வானத்தில் உள்ள நக்சத்திரங்கள்[666] ஏழாயிரம் என்று ஆரிய இலக்கியங்கள் கூறுகின்றன. மேலும் ஏழு இலக்கம், ஏழு கோடி என்றும் கூறுகின்றன. ஏழு என்ற எண்ணின் மடங்காக அவை சொல்லப்பட்டுள்ளன. ஏழு என்ற தமிழ் எண், பல (many) என்ற பொருளைத் தருவதாகும். தமிழரின் மாய எண்ணாக ஏழு (magic number) கருதப்படுகின்றது. பாபிலோனியரும் ஏழு எண்ணைப் போற்றினர். வேதங்களும் எண் ஏழைப் போற்றுகின்றன. ஏழு முனிவர்கள் கொண்ட மீன் கூட்டம். "சப்தரிஷ" என்று சொல்லப்பட்டது. ரிஷ - ரிஷி என்றானது. இருடி எனப்பட்டனர். இருடி என்ற சொல், கரடி என்று சொல்லப்பட்டது. கரடி - இருடி, கருமைக் குணத்தைக் கொண்டுள்ள சொற்களாகும். பெரும் இருடி - பெருங்கரடி (great bear) எனப்பட்டது.

ஐந்திரம்: இச்சொல்லுக்கான வேரும் மூலமும் சமற் கிருதத்தில் இல்லை. சிலர் இந்திரம் என்பதே ஐந்திரம் என்று தவறாகச் சொல்லப்பட்டது என்பர். ஐந்திரம் என்பது தமிழ்ச் சொல் என்பதாலும், அதற்கான பொருள் பிற்காலத்தவரால் அறியப்பட்டு, அதற்குச் சரியான மாற்றுச் சொல் கிடைக்

காமற் போனதாலும், ஐந்திரம் என்றே சமற்கிருதத்திலும் அழைத்துவிட்டனர் என்பர். ஐந்திரம் வானியல் தொடர் புடையது என்றும், சோதிடத்திலும் அச்சொல் பயன்படுத்தப் பட்டது என்றும் கூறுவர். தற்காலச் சோதிடர்கள் திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கர்ணம் என்பவையே, சோதிடத்தின் அடிப்படையான கூறுகள் என்று உரைக்கின்றனர். அவ்வாறே வருஷம், அயனம், குது, மாசம், பட்சம் என்று ஒரு ஐங்க ணக்கும் உள்ளது. இவையெல்லாம் காலத்தைக் கணிக்கும் முறைகளே எனலாம்.

வானத்தில் தெரியும் விண்மீன் கூட்டங்களை 360 பாகைகளாக வருத்து அவற்றை 12 பிரிவுகளாக்கினர். இதனை ராசி என்பர். இந்த ராசியில் ஒவ்வொரு நாளும் திங்கள் இடம் பெயர்வதைக் கணக்கிட்டு, 27 நாளில், அக்கூட்டத்தைக் கடப்பதாகக் கணக்கிட்டனர். வளர் பிறை, தேய்பிறை என்ற வாறு ஒவ்வொரு நாளும் காணப்படும் திங்களின் தோற்றத்தை, கலை அல்லது பக்கல் என்றனர். அவற்றையே திதி என்று சமற்கிருதத்தில் அழைத்தனர். ஓராண்டுக் கணக்கென்பது 12 மாதங்கள், ஆறு ருதுக்கள் (பருவங்கள்) இரண்டு அயனங்கள் என வகுக்கப்பட்டது.

விக்யான் (Vigyan) என்ற சமற்கிருதச் சொல், விஞ்ஞானம் என்று தமிழில் சொல்லப்படுகின்றது. விண் ஞானம் என்ற தமிழ் வழக்கே விஞ்ஞானம் என்றும், விக்யான் என்றும் திரிந்தன. ஞானம் என்பது அறிவு என்றும், விண்ணைப் பற்றிய அறிவே விஞ்ஞானம் என்றும் சொல்லப்பட்டது. ஞானம் என்பது, நானம் என்ற தமிழ்ச் சொல்லே. ஞாலம் என்பது உலகம் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், அதற்குத் தொங்குதல் அல்லது எந்தப் பிடிப்பும் இல்லாமல் நிலை பெற்றிருத்தல் (hanging without any support) என்பதே முதற் பொருளாகும். ஞாலுதல் = தொங்குதல். ஞாலம் - நாலம் என்றும் சொல்லப்பட்டது. நாலம் - ஞாலம்; நானம் - ஞானம்.

நாலம்: தொங்கும் தன்மை.

வானத்திலுள்ள விண்மீன்கள், கோள்கள், சூரியன், திங்கள் போன்றவை எவ்வகையான படிப்புகளும் இன்றி, தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பதையே ஞாலம் - நாலம் என்ற சொற்கள் விளக்குகின்றன.

விண் ஞானம் என்பது, தன்னிலே தொங்கிக் கொண்டிருக்கின்ற வானத்து உடுக்களைம் பற்றிய சொல்லாகும். அச் சொல்லிலேயே, விண்வெளியின் அனைத்து உடுக்களும் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்று அறிவியல் கண்டுபிடிப்பு விளக்கப்பட்டுள்ளது.

எனவே, விண் ஞானம் என்பது விண்வெளி பற்றிய அறிவு என்று கூறலாம்.

ஞானம் - நானம் அறிவைக் குறிப்பிட்டதால், நாலட்ஜ் (Knowledge) என்ற அங்கிலத் திரிபுச் சொல்லும் அறிவையே குறித்தது.

பிற்காலத்தில் அனைத்து அறிவியல் சிந்தனைகளும், விண்ஞானம் என்றே சொல்லப்பட்டன.

நக்கத் தரை: மின்னுவதை அம்மணத்தோடு தொடர்புபடுத்திய தமிழ்ச் சொல்லே நட்சத்திரம் எனப்பட்டது.

கோள்: தன்னிலே ஒளியற்ற கருமை நிறமான உலகங்கள். அவை சூரியனிடமிருந்து ஒளியைக் கொள்வதால் கோள் எனப்பட்டன.

கிருகம்: கோள்களை, கிருகம் என சமற்கிருதத்தில் அழைத்தனர். அதற்கு பிற்காலத்தில் அறியப்பட்ட வீடு அல்லது இடம் என்பது பொருள் இல்லை..கரு அகம் என்பதே, கிருதம் உனத் திரிந்தது. ஒளிபடாத போது, அவை கருஅகங்களே. தாயின் வயிற்றையும், ஆலயத்தின் மூலத்தையும் கர்ப்பக் கிருகம் என்று அழைத்ததின் பொருள் அதுவே.

சூரியன்: சுள் எனச் சுடும் உடு, சுர் - சூர் என விரிந்து, சூரியன் ஆனது. சூரியன் தமிழ்ச் சொல்லே. சூர்யா என்பது திரிபு (ச.).

சந்திரன்: உலகிற்கும் சூரியனுக்கும் இடைப்பட்டது. சந்தியில் உள்ளது அல்லது சந்து செய்வது.

திங்கள்: தீங்கள் என்பது, கள்ளைப் போன்று மயக்கம் தரும் இனிமையான கதிர்களைக் கொண்டது என்பது பொருள். தீங்கள் - திங்கள் ஆனது. மது - மதி எனப்பட்டது. நில்லாமல் (காட்சிக்கு அவ்வாறே தோன்றுவதால்) செல்வதால் நிலவு எனப்பட்டது.

வானவில் தொடர்பான சமற்கிருதம் உள்ளிட்ட உலக மொழிகளில் சொல்லப்பட்டுள்ள கலைச் சொற்கள் அனைத்தும் தமிழின் வேரினையும் மூலத்தையும் கொண்டவைகளே (மேலும் விளக்கங்களுக்கு, ஆசிரியரின் வானியலும் தமிழரும் என்ற நூலைக் காண்க).

தமிழர்கள் கண்டறிந்து பெயர் சூட்டிய 27 வின்மீண் கூட்டப் பெயர்களும் தனித்தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. இப் பெயர்களின் பொருளை உணர்ந்து, அவை சமற்கிருதத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டன. எடுத்துக் காட்டாக புணர் பூசம் என்ற விண்மீன் கூட்டம் பற்றிக் காண்போம்.

புணர் பூச என சமற்கிருதம் கூறுகிறது.[667] இது ஆடவை (மிதுனம் அல்லது ஜெமினி) என்ற கூட்டத்திலுள்ளது. புணர் - புனர் என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்குத் தலைத் தெய்வம் அதிதி என்பர்.

பூச - பூசம் என்பது உப்பியிருத்தல் என்ற பொருளைத் தருவது.

பூசி மெழுகினாற் போல (எலும்புகள் தெரியாத தசைப் பற்றுள்ள) என்பது வழக்கு.

பூசு - பூச்சு - பூச எனத்திரிந்தது.

பூசம்: உப்பியிருத்தல் அல்லது குத்திட்டிருத்தல் (errectus)

புணர் என்பது உறவைக் குறித்தது.

புணர் பூசம் என்ற விண்மீனின் தோற்றம் ஆண் குறியைப் போல் இருப்பதால். அதனைக் கழை அல்லது கழி என்று தமிழில் கூறினர்.

போல்லுதல் என்றால் புணர்தல் என்று பொருள். பொல் - பொலி (காளை) பொல் என்பது, போல் என கிரேக்கத்தில் திரிந்தது (pole).

போல் என்பது ஆண்குறியைக் குறிப்பிட்டு, அது அச்சு போன்றது என்ற பொருளில் போலக்ஸ் (Pollux) என்றனர். கிரேக்கத்தில் இதற்கு ஆண்குறியென்றே பொருள். காதல் கடவுளான ஜெமினி (Gemini) என்ற கூட்டத்தின் தலைமீன் போலக்ஸ் ஆகும்.[668]

புணர் பூசம் என்பது, உறவுக்குத் தகுதியான குறி என்று பொருள்படும்.

தமிழர் கண்டறிந்து வெளிப்படுத்திய தமிழ்ப் பெயர்களே, பலவாறு திரிபுபட்டு இன்று உலக மொழிகளில் அறியப்படு கின்றன. ஒவ்வொரு விண்மீன் கூட்டத்திற்கும் ஒருதலைத் தெய்வம் சொல்லப்பட்டு அவைபற்றிய தொன்மங்களும் பின்னப்பட்டன. மிதுனத்தின் தேவதையான அதிதி, ஏராள மான பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள் என்பது பற்றியே, ஆடவைக்குத் தேவதையாக்கப்பட்டாள்.

ஆரியர் கணக்கில் அபிசித் (Abijit) என்பது 28 ஆவது விண்மீன் கூட்டமாகச் சொல்லப்பட்டுள்ளது. அதற்குத் தலைவன் பிரம்மா ஆவான்.

தமிழரின் காலக் கணக்கு: கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னரே, வானியலை அறிந்திருந்த தமிழர்கள், அவ்வானி யலின் அடிப்படையிலேயே, தமது நாகரிகத்தையும் வளர்த்துக் கொண்டனர். காலக் குறியீடுகள் இன்றி, நாகரிகம் வளர்ச்சி

யடைந்திருக்க இயலாது. விவிலியம் குறிப்பிடும் யாநோக்கு என்ற வான்நோக்கிய வானியல் அறிஞரே ஓராண்டிற்கு 365 நாள் என்ற கணக்கைக் குறித்தார். இந்த வானியல் அறிஞரின் காலம் தற்கால புவியியல் சான்றுகளின் படி, கி.மு. 20000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. தெளிவான, துல்லியமான வானியல் அறிவைத் தமது பட்டறிவு மூலமே கற்றுவெளிப்படுத்தியிருந்த தமிழர் காலக் குறியீடுகளை விளக்கும் நாள் காட்டியை அறிமுகம் செய்தனர். அரசியல், வணிகம், வேளாண்மை, மக்களின் வாழ்க்கை ஆகிய நாகரிகக் கூறுகள், நாள் காட்டியின் துணையின்றி வளர்ந்திருக்க இயலாது. எனவே, தமிழருக்கென, தமிழர் கண்டு பிடித்துக் கூறிய ஒரு நாள்காட்டி முறை இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

குமரிக் கண்டத்திலேயே, வியாழமாலை, பரிபாடல் போன்ற வானியல் தொடர்பான நூல்கள் எழுதப்பட்டிருந்தன. அவை வெள்ளத்தால் அழிந்துபோன நிலையில், தப்பிப்பிழைத்த வர்கள், பழைய நாள்காட்டியையே தொடர்ந்தனர். சங்க இலக்கியங்கள், ஆண்டு மாதக் கணக்குகளைப் பற்றிப் பேசுகின்றன. கி.மு. 4000 ஆண்டுகளிலேயே, சுமேரியத் தமிழர்கள், 12 மாதங்கள் கொண்ட நாள்காட்டியை நடைமுறைப் படுத்தி யிடுந்தனர். தொடர்ந்த பாபிலோனியரும் 12 மாதம் கணக்கைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இந்நாள் காட்டிகள் வழியே அறிய இயலாத ஒன்று என்னவென்றால், அந்த நாள்காட்டி முறை எந்த ஆண்டைத் தொடக்கமாகக் கொண்டிருந்தது என்பதுதான். குமரிக்கண்டம் அழிந்த ஆண்டு அல்லது குடியேற்ற நாடுகளில் புகுந்த ஆண்டு அல்லது வெள்ளக் காலம் முடிந்த ஆண்டு ஆகிய நிகழ்வுகளில் ஒன்றையே ஆண்டின் தொடக்கமாக கொண்டிருக்க வேண்டும்.

இன்றைய நாள்காட்டி முறை இயேசுவின் பிறப்பை மையமாக வைத்துக் கூறப்படுவது போல், தமிழர்கள் எந்த எல்லையை மூலமாகக் கொண்டிருந்தனர் என்பதை அறிய இயலவில்லை. உறுதியாக, அவர்கள் ஓர் இலக்கை அல்லது நிகழ்வை மையமாகக் கொண்டே நாள் காட்டியை அமைத் திருக்க வேண்டும். குமரிக் கண்ட அழிவிற்குப் பின் அறியப் படும் செய்திகளில், அந்த மையப் புள்ளி ஆண்டை அறிய இயலவில்லை. அழிந்து பட்ட வியாழமாலை போன்ற வானியல் நூல்களில் அவை தெளிவுபடுத்தப்பட்டிருக்கலாம்.

இவ்வாறான தெளிவின்மையின் காரணமாகவே, தமிழர் களின் வரலாற்றை பின் னோக்கித் தள்ளிவிட்டுள்ளனர். சுமேரிய - பாபிலோனிய நாள் காட்டிகள், எந்தத் தொடக்கத்தை மைய மாகக் கொண்டு நடை முறைப்படுத்தப்பட்டன என்பதையும் அறிய இயலவில்லை. சுமேரிய - எகிப்திய வரலாறுகள், கிறித்துப் பிறப்பாண்டை மையமாகக் கொண்டே முன்னெடுத்துச் செல லப்பட்டன. வெள்ளக் காலத்துக்கு முன்பு, நாள் காட்டியின் மையம் எதுவெனத் தெரியவில்லை யென்றாலும், வெள்ளக் காலத்துக்குப் பிறகு, வெள்ள ஆண்டையே, மையமாகக் கருதி நாள்காட்டிகள் நடை முறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

இயேசு கிறித்துப் பிறப்பை, ஐரோப்பியக் கிறித்துவர்கள் மைய ஆண்டாகக் குறிப்பிட்டுக் கொண்டனர் எனக் கூறுவதில் முழு உண்மையும் இல்லை. விவிலியத்தில் சொல்லப்படும் செய் தியில், இயேசு பிறந்த போது ஒரு விண்மீன் தோன்றியதாகச் சொல்லப்பட்டுள்ளது. அவ்விண்மீனின் தோற்றத்தைக் கண்ட கிழக்கித்திய வானியல் அறிஞர்கள் மூவர், உலகில் ஒரு புதிய நிகழ்வு நடந்துள்ளது எனக் கூறியதாகவும், அந்நிகழ்வு கிறித்துப் பிறப்போடு தொடர்பு படுத்தப்பட்டதாகவும் சொல்லப்படு கின்றது.[669] அவர்களை சோதிடர்கள் (astrologers) என்று விவிலிய மொழிபெயர்ப்பாளர்கள் குறித்துவிட்டனர். சோதிடம் பார்க்காதே எனக் கூறும் கிறித்துவம், சோதிடர்களின் கூற்றை எவ்வாறு ஏற்றுக் கொண்டது எனச் சிலர் வினாவெழுப்பு கின்றனர்.

கிரேக்க மொழி பெயர்ப்பு விவிலியம் அம்மூன்று அறிஞர்களையும், சோதிடர்கள் எனக் கூறவில்லை. மாறாக, மாகி (Magi) என்றே கூறுகிறது. மாகி என்பது, கருமை (black)யைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லாகும். மாகம் (தமிழ்) --- மாகி எனத்திரிந்தது. கரிய வானத்தை மாகம் (மாகவிசும்பு) என சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கரிய வானத்து விண் மீன்களை ஆய்வு செய்யும் அறிஞர்கள் என்பதே, மாகி என்ற கிரேக்கச் சொல்லின் பொருளாகும். (அச்சொல் தான் பிற்கா லத்தில் மந்திர மாயங்களைக் குறிக்கும் Magic என்ற சொல் லாகத் திரிந்து)

தற்கால வானியலார் கூறும் செய்தியின்படி, கிறித்துப் பிறப்பு விண்மீன் (star of Bethleem) உண்மையில் ஒரு மீனின்

தோற்றம் அல்லவென்றும், அது ஒரு வானியல் அதிசய நிகழ்வு என்றும் கூறுகின்றனர். வானியலை அறிந்த காலத்தி லிருந்து வியாழனும் சனியும், மீன ஓரைக்குள் ஒரு சேர நுழைந்ததில்லை என்றும், கிறித்துப் பிறந்த போது, அந்நிகழ்வு அறியப்பட்டது என்றும் கூறுகின்றனர்.[670] (Triple conjunction of Jupitor, Saturn and Piscis). அந்நிகழ்வை மையமாகக் கொண்டே, புதிய ஆண்டு முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது எனவும் கருதலாம். இந்நிகழ்வை பலரும் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்ற அடிப்படையில், கிறித்துப் பிறப்பு மையப்படுத்தப் பட்டது. கிறித்து பிறந்தபோது நிகழ்வுற்ற அம்முக்கூட்டு இணைப்பு தற்செயல் நிகழ்வா, அல்லது அதிசய நிகழ்வா என்பதை உட்புகுந்து ஆய்வு செய்ய வேண்டியதில்லை. இந்த வானியல் நிகழ்வு தெளிவானது, ஏற்றுக் கொள்ளக்கூடியது.

மகாபாரதத்தில் ஒரு நிகழ்வு சுட்டிக் காட்டப்படுகின்றது. பாரதப்போர், காருவா நாளில் தொடங்கப்பட்டது. அன்று ஞாயிற்று மறைவும் நிகழ்ந்தது. இது ஒரு வானியல் குறிப் பாகும். இந்நிகழ்வு பற்றிய கதை வருமாறு. துரியோதனன், பாண்டவர் மீது போர் தொடுக்க நகுலனிடம் சென்று நல்ல நேரம் பார்த்துச் சொல்ல வேண்டினான். நகுலனைத் தன் பகைவன் என்றும் கருதவில்லை. தன்னைத் தோற்கடிக்க நாள் கேட்டவனுக்கு, உண்மையான நேரத்தை அவனும் மறைக்க வில்லை. வரும் அமாவாசையன்று போர் தொடங்கினால், துரியோதனன் குழுவினர் வெற்றி பெறுவர் என்று சொல்லப் பட்டது.

அமாவாசைக்கு (அமாவாஸ்யை என்பது சமற்கிருதச் சொல்லாகும்) முந்தின நாள் கண்ணன் கங்கையில் குளித்து அமாவாசைக் கடன்களை நிறைவேற்றினான். இதனைக் கண்ட முனிவர்கள் உள்ளிட்ட பிறரும் அமாவாசை நாளை நாம் மறந்துவிட்டோம் எனக் கருதி, அவர்களும் கடமைகளை ஆற்றினர். இதனைக் கண்ணுற்ற கதிரவனும் நிலவும், நாம் இன்னும் நேர்க்கோட்டில் வரவில்லையே, எப்படி இக்கடன் முடிக்கும் நிகழ்வுகள் நடக்கின்றன என வியந்து, இருவரும் ஒன்றாக இணைந்து கண்ணனிடம் வந்து விளக்கம் கேட்டனர். நீங்கள் இருவரும் ஒன்றாக வந்துவிட்டீர்கள் அல்லவா! இன்றே அமாவாசையாகி விட்டது என்றான் கண்ணன். இதனை அறிந்த துரியோதனன் அன்றே போரைத் தொடங்கினான். போரில் மாண்டான். கண்ணனின் சூது வென்றது.

இக்கதையில் வரும் கதிரவன் மறைவு நாளை (சூரியக் கிரகணம்)க் கணக்கிட்டு, பாரதப் போர், கி.மு. 2500 ஆண்டு களில் நிகழ்வுற்றதாகக் கூறுவர். தமிழர்களின் வானியல் கணக்கைக் கொண்டு, பத்தாயிரம் ஆண்டுகளில் எவ்வெப் போது கிரகணங்கள் தோன்றின, தோன்றும் எனக் கூற இயலும். ஒரு நூற்றாண்டில் சில அல்லது பலமுறை இந்நிகழ்வுகள் தோன்றும். இதில் எந்த கிரகண நிகழ்வு பாரதப் போரன்று நிகழ்ந்தது என்பதுதான் கேள்வி. இக்குழப்பத்திற்கான அடிப் படைக் காரணம், ஒரு மையத்தை மூலமாகக் கொண்டு ஆண்டுக் கணக்கு விளக்கப்படாததே எனலாம். வியாழன் ஆண்டு முறையொன்றும் அக்காலத்தில் கடைப்பிடிக்கப் பட்டு வந்தது. வியாழன் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கதிரவனைச் சுற்றி வரும் கணக்கைக் கொண்டு, 5 முறை சுற்றிய கால அளவை 60 ஆண்டுகளாகக் கணக்கிட்டு, அதற்கான பெயர்களையும் குறித்தனர். இந்த வியாழன் ஆண்டுக் கணக்கும் தமிழர்கள் கொடுத்ததே. சோதிடத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பட்ட இந்த ஆண்டுக் கணக்கை, ஆரியர்கள் வரலாற்றைக் கூறவும் பயன்படுத்தினர். மாறிமாறி வரும் சுழற்சியில் குறிப்பிட்ட ஓராண்டு ஒருவரின் வாழ்க்கையில் இருமுறைகூட வர வாய்ப்புகள் இருந்தன.

மன்னர்கள் பட்டமெய்திய ஆண்டைக் குறிக்கும் கல்வெட்டுகள், வியாழன் ஆண்டைக் குறித்தன. பின்னர் அவரது ஆட்சிக் காலத்தின் 26ஆம் ஆண்டில் இந்தக் குளத்தை வெட்டுவித்தார் எனக் குறிப்பிட்டன. இந்த குறிப்புகளைக் கொண்டு, அந்த மன்னரின் காலத்தைக் கணக்கிடுவதில் குழப் பங்கள் மலிந்தன. இக்குழப்பங்களைத் தரும் ஆண்டுக்கணக்கை ஆரியர்கள் பரவலாக நடைமுறைப்படுத்துவதற்குக் காரண மாயிருந்தனர். இதுவே, இந்தியர்களின் வரலாற்றை எழுத முற்படும்போது குழப்பங்களை விளைவித்தன.

சங்க இலக்கியங்களும் அதற்குப் பின் எழுதப்பட்ட இலக் கியங்களும் கூட, மைய ஆண்டைக் குறிப்பிடவே இல்லை. மாறாக, இசுலாமியர் வட இந்தியாவைக் கைப்பற்றிய பிறகே, முறையான ஆண்டுக்கணக்கு (ஹிஜ்ரி) தொடங்கப்பட்டது எனலாம். இசுலாமியருக்கு முன்பு விக்கிரமாதித்தன் ஆண்டு இந்தியாவில் வழக்கில் இருந்தது. விக்கிரமாதித்தன் உச்செயி னியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஆண்டு, கி.மு. 58

என்று சொல்லப்பட்டு, அவ்வாண்டின் கார்த்தீ மாதத்திலேயே புத்தாண்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதன் பொருட்டே, மழையைக் குறிக்கும் வருஷ என்ற சொல் ஆண்டிற்கும் பயன்படுத்தப்பட்டது.

தொடக்கத்தில் தமிழர் திங்களை மையமாகக் கொண்ட ஆண்டுக்கணக்கையே கொண்டிருந்தனர். அத்திங்கள் ஆண்டில் 12 முழு நிலவு நாட்களும், 12 மதி மறை நாட்களும் (பௌர்ணமி - அமாவாசை) இருந்தன. இதன்படி 354 நாட்களே திங்கள் ஆண்டில் இருந்தன. கதிரவனை மையமாகக் கொண்ட ஆண்டில், திங்கள் ஆண்டைவிட 11 நாட்கள் கூடுதலாக இருந்தன. 365 நாட்களாகக் கணக்கிடப்பட்டன. ஓராண்டிற்கு 365 நாட்கள் என தமிழர் தெளிவு படுத்தியிருந்தனர். திங்கள் ஆண்டில் குறைவுபட்ட 11 நாட்களை, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, கூடுதல் மாதமாக நிறைவு செய்தனர். (லீப் வருடம் என்பதற்கான முன்னோடிக் கணக்கு இது)

திங்களுக்குரிய ஆண்டின் மாதப் பெயர்கள் 12யும், 27 விண்மீன் கூட்டப் பெயர்களிலிருந்தே தமிழர் தேர்வு செய்திருந்தனர். அப்பெயர்கள் தொடர்ந்து கதிரவன் ஆண்டுக் கணக்கிலும் நீடித்தன. ஆட்டை (மேழத்தை) முதல் மாதமாகக் கொண்டு, கதிரவன் ஒரு சுற்று வருவதையே ஓராண்டு எனக் குறித்தனர். இது முற்றிலும் தமிழர் வகுத்த நடைமுறையாகும். காலத்தை ஆள்வதால், அது ஆண்டு எனப்பட்டதாகக் கூறுவர். சிலர் யாடு (ஆடு), யாண்டு என விரிந்ததாகவும் கூறுவர். யாப்பு - ஆப்பு, யாக்கை - ஆக்கை, யாடு - ஆடு, யாண்டு - ஆண்டு என்றவாறு சொல்லப்பட்டன. எவ்வாறான விளக்கமாயினும் ஆட்டை (மேழத்தை) முதன்மைப்படுத்திய ஆண்டுக்கணக்கே ஆண்டுத் தொடக்கமாகும்.

இந்த ஆண்டுத் தொடக்கம், கதிரவன் நிலநடுக் கோட்டைத் தொடும் காலத்தை ஒட்டியது. மார்ச் 21 ஆம் நாளில், கதிரவன் நிலநடுக்கோட்டைத் தொடும் நாளாகும். இதையொட்டியே, மேழம் உச்சத்துக்கு வரும் (ஏப்ரல் 14) நாளில் தமிழரின் ஆண்டுத் தொடக்கம் இருந்தது. இதனையொட்டியே வட இந்தியாவிலும், தென்னிந்தியாவின் பிற பகுதிகளிலும் (கன்னட, மலையாள, ஆந்திர) சில நாட்கள் முன்கூட்டியோ அல்லது அதே நாளிலோ ஆண்டுத் தொடக்கம் இருந்தது. மேழத்தை முதல் மாதமாகக் கொண்ட ஆண்டுத் தொடக்கம்

தமிழருடையது. ஆரியர்களும் இத்தொடக்கத்தை ஏற்றுக் கொண்டனர் என்பதே உண்மை நிலையாகும். இச்சூழலில், ஏப்ரல் மாத ஆண்டுத் தொடக்கம் ஆரியருடையது என்றும், தைமாதமே தமிழரின் ஆண்டுத் தொடக்கம் என்றும், சிலர் கூறிவருவது உண்மையன்று. காலக் கணக்கைப் பற்றி ஆரியர் களுக்கு எந்தப் பட்டறிவும் இருந்ததில்லை. இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளாத சிலர், தமக்குத் தெரியாத செய்திகளை, ஆரியர் மீது ஏற்றிக் கூறுவது, வரலாற்றுப் பிழையாகும். தமிழர் வகுத்த 27 விண்மீன் பட்டியலில் மேழமே முதலாவதாகச் சொல்லப்பட்டுள்ளதை நோக்குக. குமரிக் கண்டத்திலேயே இந்த நடைமுறை வழக்கில் இருந்திருக்க வேண்டும். அதன் தொடர்ச்சியாகவே, குடியேற்றத் தமிழர்களாகிய சுமேரியரும், பாபிலோனியரும், மேழத்தை முதல் மாதமாகக் கொண்ட ஆண்டைக் கடைப்பிடித்து வந்தனர்.

கடைச் சங்க காலத்தில் கூட மேழத்தை முதல் மாதமாகக் கொண்ட ஆண்டுக்கணக்கே நடைமுறையில் இருந்தது என்பதை, சிலர் உணரவில்லை. அரசியல் காரணங்களுக்காக, தாமும் ஒரு புதிய நடைமுறையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் வெளிப்பாடாக, தமிழர் நடைமுறையை அண்மையில் மாற்றி அறிவித்தனர். இதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் யாவும் வலுவில்லாதவை. ஆண்டுத் தொடக்கம் எந்த மாதத்தில் இருந்தது என்பதை சங்க இலக்கியமான நெடுநல்வாடை விளக்குகின்றது.[671]

திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து– 160 – 161.

மேழ ஓரையில் ஒளிமிக்கது அம்மெல் (Ham - el) என்ற புரவி மீனாகும் (அசுவினி). அம் - எல் என்ற கிரேக்கச் சொல், அம் = தண்மைமிக்க; எல் = ஒளியுள்ள, என்றவாறு தமிழ்ச் சொற்களையும் பொருளையும் கொண்டதாகும். புரவியே 27 மீன் கூட்டங்களில் முதலாவதாகவும் வைத்துச் சொல்லப்பட் டுள்ளது.

விடை யே (காளை) தமிழரின் தொடக்க ஓரையாக இருந்தது என்றும், பின்னர் விடையைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, மேழம் அவ்விடத்தில் வைக்கப்பட்டது என்றும் சிலர் கருதுகின்றனர்.[672] கால ஓட்டத்தில் காளை தனது செல்வாக்

கினை இழந்ததே அதற்குக் காரணமாகவும் கூறுகின்றனர். தமிழருடைய முழுமுதற் கடவுளான எல் கடவுளின் தோழனும் ஊர்தியுமாகிய காளையையே தமிழர் முன்னிறுத்தியிருந்தனர் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. கி.மு. 4000 ஆண்டு களில், எல் கடவுளும் காளையும் மேற்காசிய நாடுகளில் தெய்வங்களாக வணங்கப்பட்டனர். என்பதற்கான வலுவான இலக்கியச் சான்றுகள் உள்ளன. சுமேரியருக்கும், எபிறேய ருக்கும் (யூதர்) எல்லும், காளையும் கடவுளராயிருந்தனர். கி.மு. 1250 ஆண்டுகளில், மோசே என்ற எபிறேய இனத்தலைவன், புதிய சமயம் ஒன்றைத் தொடங்கியதை அடுத்து எல் கடவுளையும், காளையையும் வணங்கக் கூடாது என புதிய மரபு தோன்றியது.[673] அதற்குப் பதிலாக எ - கோ - ஆ என்ற புதிய கடவுளை மோசே அறிமுகம் செய்தான். இக்கடவுளுக்கு மிகவும் விருப்பமான விலங்காக ஆடு சொல்லப்பட்டது. மோசே, ஆட்டையே தேவன் பலிப்பொருளாக விரும்பியதை அறிவித்தான். அபிறகாம் முதல் இந்த நடைமுறை இருந்ததை அறியலாம். பல யூதப் பெண்டிர் ஆட்டின் பெயரையே தங்களது பெயராகச் சூடிக் கொண்டனர். மறி என்ற தமிழ்ச்சொல் மறியம் - மிறியம் என்றவாறு சொல்லப்பட்டது. இயேசுவின் அன்னையின் பெயரும் அதுவே என்க.

இவ்வாறு காளை தன் மதிப்பை இழந்தவுடன், ஆடு அவ் விடத்தைப் பிடித்துக் கொண்டது என்பர். இதன் தொடர்ச்சி யாக, இயேசுவை ஆயனாகவும், மக்களை ஆடுகளாகவும் உருவகப்படுத்திய சிந்தனைகள் தோன்றின. இந்நிகழ்வுகள் எல்லாம், வானியலில் தோன்றிய கொள்கைகளின் அடிப் படையில், சமயத்திலும் கலந்தன எனலாம். இயேசுவை ஆயனாகக் கருதியவர்கள், பிற்காலத்தில் அவரை மீனாகவும் உருவகப்படுத்தினர். தொடக்க காலக் கிறித்துவத்தின் அடை யாளமாக மீன் கருதப்பட்டது. கி.பி. 400 ஆண்டுகளுக்குப் பிறகே சிலுவை அறிமுகமானது. இதன் வழியில், ஆடும் தனது இடத்தை இழந்து மீனுக்கு அதனை அளித்துவிட்டதாகக் கூறி, மேழம், மீனத்துக்குச் சென்றுவிட்டதாகவும், இயேசு காலத் துக்குப் பிறகு மீனமே (Piscis) முதல் ஓரையாக ஏற்கப்பட்டது என்றும் சில மேற்கித்திய வானியலார் கருதுகின்றனர்.

ருக்கு வேதம், வியாழனின் உருவகங்களாக மித்திரனையும் வாரணனையும் குறிப்பிடுகின்றது. வியாழனை பெருங்கற்பதி

(பிரகஸ்பதி) என்பர். பெருங்கல் என்பது பெரியகோள் என்ற பொருளைத் தருவது. வியாழனின் குறியீடாக, கோடரி போன்ற கருவியை, கிரேக்கர்கள் குறித்தனர். கோடரி பழங்கற்கால ஆய்தங்களுள் ஒன்றாகும். வியாழன், கதிரவனைச் சுற்றிவரும் செய்தியையும் வேதம் கூறுகிறது. தமிழர்கள் வியாழச் சுற்றை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டிருந்தனர். குடந்தையில் 12 ஆண்டுக்கொருமுறை அறியப்படும் மகா மகம், வியாழனோடு தொடர்புடையது. வியாழன் தனது சுற்றை 12 ஆண்டுகளில் முடித்து, மகநாள்மீன் உச்சத்திற்கு வரும் நாளில், மகாமகம் விழா நடைபெறுகிறது. எனவே, 12 ஆண்டுச் சுற்றின் இறுதியில் அல்லது 13ஆம் ஆண்டின் தொடக்க நாளாக, மகநாளைக் கருதலாம். அன்றே வியாழ ஆண்டின் தொடக்க நாளாகவும் மாதமாகவும் இருந்திருக்க வேண்டும். சோழநாட்டில் வியாழன் ஆண்டைக் கடைப் பிடித்து வந்தனர் எனலாம். மகாமகம் அதற்கான சான்றாகும். தமிழ்நாட்டின் பிற இடங்களிலும் வியாழன் ஆண்டு வழக்கில் இருந்ததை,

> **இடபத்து வியாழன் நின்ற ஆண்டு**
> **மிருச்சிக ஞாயிற்று**
> **துலாத்தில் வியாழன் நின்ற ஆண்டு**
> **ஆனித் திங்கள்**
> **என கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[614]**

ருக்கு வேதத்தில் சூன சேவனின் பாடல் ஒன்று உள்ளது. அப்பாடலின் உட்பொருள் யாதெனில், வாரணனுக்கு வானியல் தொடர்பான நாள்காட்டிக் கணக்குகள் தெரியும் என்பதாகும். வியாழ ஆண்டு, கார்த்திகை மாதத்தில் தொடங்கி ஐப்பசியில் முடிந்ததாகக் கூறுவர்.[675] வியாழ ஆண்டின் முதல் மாதமான கார்த்திகையில் கதிரவன் அம்மீனுக்கு உச்சத்தில் இருப்பதும் அதற்கான காரணமாகும். கார்த்தீ எனப்படும், மழைக்கால விண்மீன் (ஆரல்), மழையை அல்லது அடைமழையை முடிக்கும் மீனாகக் கருதப்படுகிறது. கார்திகையோடு மழையும் போச்சு, கர்ணனோடு கொடையும் போச்சு எனக் கூறுவதை நோக்குக. புரட்டாசியில் தொடங்கும் அடைமழை ஐப்பசியில் உச்சம் பெற்று, கார்த்திகையில் நிறைவு பெறும். வார் அடை என்பது, அடைமழையைக் குறித்த சொல்லாகும். வாரடை - வருடை என்றும் சொல்லப்பட்டது. வருடை முடிந்து

தோன்றும் (புதிய) ஆண்டையும் வருடை எனத் தமிழர் குறித் தனர். வருடை - வருஷ என சமற்கிருதத்தில் திரிந்தது. வர்ஷி (ச) = மழைப் பொழிவு. ஆண்டுக்கு வருஷ என்ற சொல் குறிக்கப் பட்டதற்கு, அது மழைக்காலத்துக்குப்பின் முடிவு பெற்றதா லேயே எனலாம்.

விக்கிரமாதித்தன் ஆண்டும், கார்த்திகை மாதத்திலேயே பிறக்கும். இதுவும்கூட, வியாழ ஆண்டுத் தொடக்கத்தை அப்படியே ஏற்றுக் கொண்டதையே காட்டுகிறது. தொல் காப்பியர் காலத்தில் (கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முன்பு எனக் கொள்க) ஆவணி மாதத்தில் ஆண்டுத் தொடக்கம் இருந்து, ஆடியில் முடிந்தது. இது நிலநடுக்கோட்டிலிருந்து கதிரவன் வடக்கே சென்று கடகத்தைத் தொடும் காலமாகும். தொல் தமிழர் கடகத்தை முன்னிறுத்திய ஆண்டுத் தொடக்கத்தையும் கொண்டிருந்தனர் என்பதை தொல்காப்பியக் குறிப்பு கூறுவ தாலும், சங்க இலக்கியங்கள் இக்குறிப்பினைத் தொடாதிருப் பதாலும், சங்க காலத்துக்கும் தொல்காப்பியக் காலத்துக்கும் ஆன இடைவெளி மிக நீண்டது என்பது விளங்கும்.[676]

> **காரும் மாலையும் முல்லை குறிஞ்சி**
> **கூதிர் யாமம் என்மனார் புலவர் – தொல்காப்பியம், 952**

பொருள்: முல்லைக்குரிய பெரும்பொழுது கார், சிறு பொழுது மாலை; குறிஞ்சிக்குரிய பெரும் பொழுது கூதிர்; சிறுபொழுது யாமம் என்பர் அறிவுடையோர் (முனைவர் ச.வே. சுப்பிரமணியன் உரை).

விளக்கவுரை: "கால உரிமை எய்திய ஞாயிற்றிற்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரை யீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின் அதனை இம்முறையானே அறுவகைப்படுத்தி இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினார். (நச்சினார்க்கினியர் உரை) பன்னிரு மாதங் களையும் ஆறு வகைப்படுத்தி, இரண்டிரண்டு மாதங்களாகப் பிரித்து ஆறு காலங்கள் (பருவங்கள்) என்றனர். அவை கார் (ஆகஸ்ட் - செப்தம்பர்), கூதிர் (அக்தோபர் - நவம்பர்), முன்பனி (திசம்பர் - சனவரி), பின்பனி (பிப்ரவரி - மார்ச்), இளவேனில் (ஏப்ரல் - மே), முதுவேனில் (சூன் - சூலை). இதற்குச் சரியான தமிழ் மாதங்கள் ஆவணி - புரட்டாசியில் தொடங்குவதை அறியலாம். இந்த ஆறு பருவங்களையும்

வேதமும் குறிப்பிடுகிறது என்பதை ஒப்பு நோக்க வேண்டும். (அண்மையில் நாகர்கோயிலில், இந்நூலாசிரியர், டாக்டர் எஸ். பத்மநாபன் அவர்களைச் சந்தித்தபோது, குமரி மாவட்டத்தில், ஆண்டுத் தொடக்கம் ஆவணி மாதத்தில் இருந்தது என்பதை விளக்கினார்.)"

கடகத்தில் ஞாயிறு நிலைகொண்ட காலமும் தமிழகத்தில் ஆண்டின் தொடக்கமாக இருந்தது என்பதை தொல்காப்பியம் விளக்கும்போது, மகரத்தில் (சுறவத்தில்) ஞாயிறு நிலைபெறும் காலமும் ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளலாம். சுறவத்தில் தொடங்கும் ஆண்டைப் பற்றித் தெளிவான தகவல்கள் இல்லை. இந்தச் சூழலில், சுறவமே தமிழர் ஆண்டின் தொடக்கமாக இருந்தது என்பதை வலியுறுத்தி, ஆட்சியாளர்கள், தை மாதத்தை ஆண்டின் முதல் மாதமாக அறிவித்தது முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று. சித்திரை (மேழத்தை)யை தொடக்க மாதமாக இந்து தர்ம சாத்திரங்கள் கூறுகின்றன என்று சிலர் கூறுகின்றனர். இதன்மூலம் சித்திரைத் தொடக்கத்தை ஆண்டுத் தொடக்கமாக, ஆரியர்களே அறிவித்தது போன்ற மாயத் தோற்றத்தை அவர்கள் உருவாக்கி விட்டனர். அதனை ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிய இயலாத தமிழக அரசின் நிலைப்பாடு ஏற்கக் கூடியதல்ல. இதற்கு அரசுகளும் காரணங்களும் சரியானவை அல்ல. தை மாதத்தை ஆண்டுத் தொடக்கமாக அறிவிக்க வேண்டும் என சில தமிழறிஞர்கள் முடிவு செய்தனர் என்ற கூற்றும் ஏற்கக்கூடியதன்று. தமிழரின் தொன்மையான வரலாற்றை ஆராய்ந்து பாராத அவ்வறிஞர்கள் விடுத்த கோரிக்கையும் ஒருதலைப் பக்கமானது.

பங்குனி மாதம் முதல் நாள் தொடங்கி முப்பது நாளும் விழாக் கோலம் பூண்டு சித்திரை முதல் நாளில் இந்திரவிழா எடுத்த செய்தியை சிலப்பதிகாரம் விளக்குகின்றது. தமிழர் கடைப்பிடித்த ஆறுபருவங்களின் தலைவனாக இந்திரன் சொல்லப்படுகிறான். எனவே ஆண்டின் தொடக்கம், இந்திரனைப் பெருமைப்படுத்த, இந்திர விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்த ஆறு பருவங்களையே ருக்குவேதம் குறிப்பிடுகிறது என இ.கோஷ் (E. Ghosh) என்ற ஆய்வாளர், தனது ருக்குவேத தெய்வங்கள் என்ற நூலில் குறிப்பிடுகிறார். சிலம்பும் மேகலையும் சித்திரை விழாக்கள் பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றன.

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தன – சிலப்பதிகாரம், 5:64

இவ்வரியைத் தொடர்ந்து வரும், இந்திர விழாவெடுத்த காதை, இந்திர விழாவின் சிறப்பை விளக்குகின்றது.[677]

ஆயிரங் கண்ணோன் றன்னோ டாங்குள

– மணிமேகலை, 1:36 முதல்

இந்திரவிழாக் காட்சிகளைப் படம்பிடித்துக் காட்டு கிறது.[678]

உலகின் அனைத்து நாகரிகங்களும் மேழத்தையே தொடக்கமாகக் கொண்டுள்ள செய்திகளை அறியலாம். கிரேக்கத்தில் ஆட்டின் கொம்பைப் போன்ற குறியீடு சோதிட நூல்களில் இப்போதும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

மேழத்தைக் குறித்த மறி (Marie) என்ற தமிழ்ச்சொல்லே, ஆ என்ற எழுத்து விடுபட்டு, Arie - Aries எனத் திரிந்துள்ளதை ஒப்பு நோக்குக.

அவிசித்து:

விண்மீன்களின் கூட்டம் 27 என சொல்லப்பட்டுள்ள நிலையில், 28 ஆவது கூட்டமாக அவிசித்து (அபிஜித்) என்பது அறியப்படுகின்றது. கடைக்குளம் (உத்திராடம்), முக்கோல் (திருவோணம்) ஆகிய கூட்டங்களுக்கு நடுவில், அவிசித்து இருந்ததாகக் கூறுவர். இம்மீன் கூட்டம் இப்போது காணப் படவில்லை. தொலைவில் அது நகர்ந்து போயிருக்கலாம் என்பர். அசுரர்களின் விருப்பத்தை (சத்துவை) தேவர்கள் அழித்தனர் என்று பொருள் சொல்லப்படுகிறது. ருக்கு வேதம் இவ்விண்மீனைக் குறிப்பிடுகிறது. அவிசித்து என்ற தமிழ்ச் சொல்லுக்கு, மிகு ஒளியைச் சிந்துதல் என்று பொருள் கொள் ளலாம். அபிஜித் தமிழ் மூலத்தைக் கொண்டுள்ளதால், அது ஆரியர்களின் கண்டுபிடிப்பு எனக் கூற இயலாது. இந்த அவி சித்துவில் நிலவு ஒரு நாள் தங்கியிருந்ததாகக் கணக்கிட்டால், திங்கள் நாள் காட்டியில் மேலும் ஒரு நாள் கூடி, $29\frac{1}{2} + 1 = 30\frac{1}{2}$ நாள் என்ற கணக்கு வரும். 12 மாதங்களும் $30\frac{1}{2} \times 12 = 360$ நாள் என்ற கணக்கைத் தொடுகிறது. இம்மீன் கூட்டம் கி.மு. 5000 ஆண்டுகளில் அறியப்பட்டிருக்கலாம்.

உரோகிணி:

சகடு எனப்படும் ருஹ என்ற சொல்லின் விரிவே ரோஹினி எனப்பட்டது என்பர். ருஹ என்றால் ஏறுதல் என்று பொருள்.[679] ஏறு என்ற தமிழ்ச்சொல்லே, ஏறுக - றுக - ருஹ எனத் திரிந்துள்ளது. சகடு என்பதற்கு வட்டம் அல்லது சக்கரம் என்பது பொருள். சருக்கிக் கொண்டே செல்லுதல் என்ற பொருளில், மேலேறுவதைக் குறித்தது.

உரோகிணியின் தந்தை பிரசாபதி என்பவனாவான். தன் மகளாகிய உரோகிணியின் மேல் காமுற்ற பிரசாபதி அவளை நெருங்கினான். இந்த அடாத செயலைக் கண்ணுற்ற தேவர்கள், பிரசாபதியை ஒறுக்க எண்ணினர். ஆனாலும் எவரும் துணிந்து முன்வரவில்லை. எனவே, தேவர்கள் தங்கள் ஆற்றல்களை ஒன்று கூட்டி ஒரு வலமைமிக்கவனை உருவாக்கினர். அவன் தான் ருத்திரன் என்பவன் பிரசாபதியை வீழ்த்த ருத்திரன் முற்பட்டான். தந்தையின் பிடியினின்றும் தப்பிக்க எண்ணிய உரோகிணி மான் உருவெடுத்து ஓடினாள். பிரசாபதியும் மான் உருவெடுத்து அவளைத் துரத்தினான். இடையே புகுந்த உருத்திரன், பிரசாபதியைத் தடுத்தான். உருத்திரனை வெல்ல முடியாது எனக் கருதிய பிரசாபதி, உருத்திரனைத் தன்வழிக்குக் கொணர நினைத்தான். அவனை விலங்குகளுக்கு அரசனாக்கு வதாக பிரசாபதி உறுதி கூறினான். பதவிக்கு அடிமையான உருத்திரன், தேவர்கள் தனக்கு அளித்திருந்த ஆற்றலையும் வேண்டுகோளையும் மறந்து விலங்குகளின் அரசன் ஆனான். அன்று முதல் அவன் பசுபதி எனப்பட்டான். இதுபற்றி வேறொரு கதையும் உள்ளது. உருத்திரன் பசுக்களையெல்லாம் புணர விரும்பியதாகவும், அந்த வரம் தேவர்களால் அவனுக்கு அருளப்பட்டதாகவும் கூறுவர்.

இவ்வாறான ஒழுக்கக் கேடான கதைகளை, விண்மீன் கூட்டங்களில் உருவகப்படுத்த வேதக் கதைககள் சொல்லப் பட்டுள்ளன. தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற உருத்திரன் தனது வில்லால், மான் உருவில் துரத்திய பிரசாபதியை அடித்து வீழ்த்தினான். அடிபட்ட பிரசாபதியாகிய மான், கால்கள் நான்கையும் மேலே தூக்கியவாறு மல்லாந்து வீழ்ந்தது. இதுவே மிருக சீரிடம் (ம்ருகசீர்ஷ) என்று அழைக்கப்படும் மீனாகும். வில்லால் அடித்த உருத்திரன், வேடன் வடிவில் சொல்லப்படுகிறான். பூப்பெய்திய உரோகிணியின் குறி சிவந்து

காணப்பட்டதால், செந்நிறமாக உரோகிணியை உருவகம் செய்தனர். இவ்வாறான அருவறுக்கத்தக்க கதைகளை, கடவுள் மேல் ஏற்றிச் சொன்ன கதைகள் ஏராளமாக உள்ளன.

மான் மல்லாந்து கிடப்பதே மிருக சீரிடம் எனப்படுகிறது. மிருக (Mrug) என்ற சமற்கிருதச் சொல்லுக்கு விலங்கு என்பது நேரிடையான பொருள் இல்லை. ஆற்றல், வலம் என்பதே அதன் பொதுப் பொருளாகும். விலங்குகள் அத்தைய ஆற்றலையும் வலத்தையும் கொண்டிருந்ததால், அவை ம்ருக என அழைக்கப்பட்டன. வேடன் வடிவமாக உருவகம் செய்யப் பட்டது. ஓரியன் என்ற விண்மீன் கூட்டமே. இக்கூட்டத்தின் ஒளிமிக்க உடுவே ஆதிரை (திருவாதிரை) எனப்படும். அம் மீனே சிவனாகக் கருதப்பட்டது. உருத்திரனைப் பிற்காலத்தில் சிவனாக மாற்றிக் கொண்டனர். எனவே, ரோகிணி, மிருக சீரிடம், திருவாதிரை ஆகியவை அருகருகே காணப்படும் விண்மீன் கூட்டங்களாகும். மிருக சீர்ஷம் என்பது மானின் தலைப்பகுதியாகும். இது ரோகிணிக்கும், திருவாதிரைக்கும் இடையேயுள்ளது.

ம்ரு என்ற சமற்கிருதச் சொல் ஆற்றலைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். இதற்கான வேர்ச்சொல், சமற்கிருதத்தில் தெளிவாக இல்லை. தமிழ்க் கண்ணோட்டத்தில் இச்சொல்லைக் காண்போம்.

மறு : வலிமையைப் பயன்படுத்து, தடுத்து நிறுத்து, போரிடு என விரியும்.

மறுப்பு : ஆற்றலுள்ள எதிர்ப்பு.

மறு : அடுத்தடுத்து, மறுபடியும் (எதிர்த்தல்), இரண்டாவது முறை யாக.

மறுகு : சுழன்று (போரிடு) வருதல்.

மர் என்ற வேற்சொல், மரு என நீண்டது, மர் - மர - மரபு = தொடர்வது.

மர - மரம் = தொடர்ந்து தன் இனத்தைப் பெருக்கிக் கொள்வது.

மரம் - மராம் = கெட்டியான மரம் (கடம்பு மரம்)

மரு : தொடர்வது, தடைப்படாதது, இயல்பானது.

மரு : தொடர்ந்து மணம் வீசுவது, புகழோடு இருப்பது, போற்றுவது.

மரு + ஆதி = மருவாதி = தொடர்ந்து, தொடக்கத்திலிருந்தவாறே மணம் வீசுவது.

மருவாதி - மரியாதை என்றானது. இன்னும் சிலர் வழக்குச் சொல்லாக மரியாதையை மருவாதி எனக் கூறுவர். அதுவே சரியான தமிழ்ச் சொல்லாகும்.

மருக்கொழுந்து, மருதாணி போன்ற சொற்களை ஒப்பு நோக்குக.

மர் - மற - மறம் : வீறம், ஆற்றல்; மறவர் = போர் வீறர்.

ம்ருக என்பதே முருகன் என்றானது என்பதும் சிலரது கூற்று. இதன்படி, ஆற்றல் உள்ளவன், வலம் மிகுந்தவன் என்பது பொருளாகிறது. முருகு என்பது, மருகு என்ற சொல்லின் விரிவாகக் கொண்டால், புகழுடைய, மணம் பரப்புகின்ற என்ற பொருளைத் தரும். முருகன் என்பதற்கு அழகன் என்பது நேரிடையான பொருள் அன்று.

ம்ரி : இறந்து போதல் ; ம்ரண = இறப்பு. மரணம் என்பர்.

மற + அணம் = மறணம் = ஆற்றலை இழத்தல், அதனை இறத்தல் என்கிறோம்.

மறணம் : இறப்பு. மரணம் என்பது பொருள்தராத சொல்.

மர்கயா = இறப்பு (இந்தி)

மர் என்ற சொல்லுக்கான வேரும் மூலமும் தமிழில் உள்ளதை நோக்குக.

மறுவாழ்வு : இரண்டாவது வாழ்க்கை என்ற பொருளைவிட, இறந்த பின்பு ஏற்படும் வாழ்க்கை என்பதே சரியான பொருளாகும்.

மறு - மர் எனத் திரிந்தது போலவே, மர்டர் (murder) என ஆங்கிலத்தில் திரிந்தது என்க.

புணர் வசு:

சற்று முன்பாக இம்மீனைப் பற்றிய விளக்கம் தரப் பட்டது. தற்காலத்து வேத விற்பன்னர்கள், ஒழுக்கமற்ற வேதக் கதைகளை விளக்குவதைத் தவிர்த்து வருகின்றனர். அவ்வாறு விளக்க முற்பட நேர்ந்தால், பூசி மெழுகினாற் போன்ற விளக்கத்தை அளிக்கின்றனர். புணர்வசு, புணர் பூசம் என்பதற்கான சொற்பொருள் விளக்கங்கள் வேறானவை. வேத விற்பன்னர்கள், புணர் என்பதை மீண்டும் என்றும், வசுவென்பதை செல்வம் என்றும் விளக்கம் தந்து, மீண்டும் மீண்டும் செல்வங்கள் வந்து சேர வேண்டும் என விரும்புவதாகத் தெரிவிக்கின்றனர். உண்மையில், புணர்ச்சிக்கு நிறைய பெண்கள் வேண்டும் என்பதே அதன் உரிய பொருளாகும். இப்படியெல்லாம் கடவுளிடம் கேட்பார்களா என்பதை, சில ஐரோப்பிய ஆய்வாளர்கள் கேட்டனர்.

வேதமும் கணக்கியலும்

எண்களைக் கண்டுபிடித்தவர்கள் ஆரியர்கள் என்றும், அதனை மேலை நாடுகளில் அறிமுகம் செய்தவர் அராபியர்கள்

என்றும் தவறான பதிவை வரலாற்றில் இணைத்துவிட்டனர். ஆரியரின் கணக்கியல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தன்று. மாறாகப் பலரால் விளக்கவுரைகள் தரப்பட்டன. இதுவும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுகளுக்குப் பிறகே எனலாம். வேதம் கூறும் கணக்கியல் குறிப்புகள், இந்தியப் பழங்குடியி னரால் கையாளப்பட்டு வந்தவைகளே. வானியலுக்கு அடிப் படையானது கணக்கியல், வளர்ந்துவிட்ட நகரிய நாகரிகத் துக்கும் அடிப்படையானது கணக்கியல். உலகளாவிய வணிகத் துக்குப் பயன்பட்டது கணக்கியல். தொழில் வளர்ச்சிகளுக்கு உதவியது கணக்கியல். மேற்கண்ட அனைத்துத் துறைகளிலும், ஆரியர்கள் வருகைக்கு முன்பே சிந்துவெளித் தமிழர் சிறந் திருந்தனர் என்பதால், கணக்கியலை அறியாமல் அவர்கள் அந்நிலைகளை எட்டியிருக்க இயலாது.

"கணக" என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையே தமிழில் கணகன் என்றும் கணக்கன் என்றும் மாறியது என்றவாறு தமிழ்நாட்டு வேதவிற்பன்னர் ஒருவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவருக்கு சமற்கிருதமும் தெரியவில்லை, தமிழின் ஆழமும் புரிந்திருக்கவில்லை என்பதையே உணரமுடிகின்றது.[680]

கண் என்ற மூலச்சொல், பார்க்கும் தொழிலைச் சுட்டும்.

ஒரு பொருளைக் கண்ணால் பார்த்து, அதன் தன்மைகளை உணர்வதே அறிவு. கண் என்ற பெயர்ச்சொல், காண் என்று வினைச் சொல்லாகிறது.

கண் - கணி என்னும் வினையாயிற்று.

கண் - காண் - கணி. கண்ணால் பார்த்து அதன் தன்மைகளை அறிதல்.

கணி என்ற சொல், வானியல் தொடர்பானது. கண்ணால் பலகாலம் உற்றுநோக்கியே வானியலை வரையறை செய்தனர்.

கணி - கணித்தல் என்ற வினையைச் செய்தவன் கணியன் எனப்பட்டான். வானியல் என்பது கணித்தலை அடிப்படையாகக் கொண்டது. கணித்தல் என்பது கற்பனையாகக் கூறுவதன்று. இன்னின்ன முறைகளில் இவை இவ்வாறு நிகழ்கின்றன எனச் சான்றுகளுடன் விளக்குவது. இவ்விளக்க முறையே கணக்கியல் எனப்பட்டது. கணித்தல் என்ற சொல்லின் நீட்சியே கணக்கு எனப்பட்டது. கணக்கைச் செய்தவன் கணக்கன் எனப்பட்டான்.

கணக்கு - கணக என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

மொழிகளின் ஆழ அகலங்களைத் தெரியாத சமற்கிருத அரைகுறை அறிஞர்கள், கணக என்ற சொல்லில் இருந்தே

கணக்கு என்ற தமிழ்ச் சொல் பிறந்தது எனக்கூறுவது அவர்களது அறியாமையைக் காட்டுவதே என்க. கணித என்ற சமற்கிருதச் சொல்லுக்கு, அம்மொழியில் மூலமும் இல்லை, வேரும் இல்லை.

ஒரு முறை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்ற அறிவியல் மேதையை அணுகிய செய்தியாளர் ஒருவர், உங்களுடைய ஆய்வுக் கூடத்தை நான் பார்க்கலாமா என்று கேட்டார். அதனை உங்களால் பார்க்க இயலாது என்று கூறினார். மற்ற எவருக்கும் அதனைத் திறந்து காட்டமாட்டீர்களா, எனத் திரும்பவும் கேட்டார். என் மூளையை உங்களால் எப்படிப் பார்க்க இயலும் என ஐன்ஸ்டீன் செய்தியாளரிடம் கேட்டார். இந்நிகழ்வின்படி, ஐன்ஸ்டீனின் ஆய்வுக்கூடம் அவரது மூளையும் சிந்தனையுமே என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தொல் தமிழ்க் கணியனின் ஆய்வுக் கூடமும் அவ்வாறே இருந்தது. தொல்தமிழ்க் கணியன் தனது சிந்தனையில் தோன்றியதை மூளையில் பதிவு செய்து, வாய்வழியே மற்றவருக்கு உரைத்தான். இவ்வாறு எண்ணத்தில் தோன்றிய வழிமுறைகளே கணக்கியலாக மாறின. எண்ணம் என்ற அடிப்படையின் அலகு எண் என்ற சொல்லே. கணக்கியலின் அலகுகளுக்கும் எண் என்றே தமிழன் பெயரிட்டான். சீன மொழியில் எண், இன் என்று சொல்லப்படும். சப்பானிய நாளைய முறை யென் எனப்படுகிறது. இவையெல்லாம் எண் என்ற சொல்லின் திரிபுகளே. எண்களைக் கண்டுபிடித்தவர்கள் ஆரியர்களே என்ற கூற்றை எவ்வாறு நம்புவது?

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

எண் என்பது கணக்கு சார்ந்தது என்பது பொருளன்று. வானியல், அறிவியல், புவியியல், கணக்கியல், நாகரிகவியல் அனைத்தும் எண் என்ற சொல்லுக்கான விளக்கமாகும். அவைகளைப் பதிவு செய்த எழுத்தென்பது இலக்கியங்கள், வரலாறுகள், தொன்மக்கதைகள், சமயங்கள் என விரியும். எனவே, அறிவு சார்ந்த அனைத்தும் எண் எனவும், அதன் பதிவுகள் எழுத்தெனவும் அறியப்படும்.

உய்யுமாறு எண்ணி – ஆண்டாள்.

எண்ணின் மீதியனெம் பெருமாள் – நம்மாழ்வார்.

எண்ணிலாப் பெருமா யென – தெய்வப் பனுவல்

மேற்கண்டவாறு சொல்லப்பட்டுள்ள எண் என்ற சொல் கணக்கையே குறிக்கின்றது என்பது வைணவப் பெரியார்களின் கருத்து.

"அதனால் தமிழில் எண் என்னும் சொல்லில் குழப்பம் இருப்பதால், கணக்கு என்னும் சொல்லையே, கணிதம் என்பதற்கு ஏற்றதாக உபயோகிக்கிறோம்."[681]

எண் என்ற தமிழ்ச் சொல்லில் குழப்பம் இருப்பதாகக் கூறப்படுவது, தமிழ் மொழிச் சொற்களைப் பற்றிய தெளிவின் மையைக் காட்டுகிறது. எனவே, தெரியாத ஒன்றைப் பற்றிய விளக்கங்கள் அளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

எண் என்ற சொல்லுக்கான பொருள் : எண்ணிக்கை, அறிவுரை, இலக்கம், சோதிட நூல், மதிப்பு, வலிமை, எளிமை, எள், மெலிந்தது, சிறியது என்றவாறு பொருள் விரியும்.

எண் விரிந்து, எண்ணம் ஆனது.

எண்ணம் : நினைப்பு, நோக்கம், மதிப்பு, தற்பெருமை, நம்பிக்கை, புகழ், வலிமை, கவனிப்பு, கருத்து எனவிரியும்.

எண்ணு: வினைச்சொல். நினை, குறி, கணி, மதிப்பிடு, பெருமைப் படுத்து, சிந்தி, நம்பு, இறுமாந்திரு என விரியும்.

எண் என்பதற்கான விளக்கங்கள் தமிழில் ஏராளம் உண்டு. கணக்கியலில் மட்டும் எண் என்ற சொல் பயன்படுத்தப்பட வில்லை என்பதை மேற்கண்ட விளக்கங்கள் தெளிவுபடுத்தும். கணக்கியலின் அலகு மிகச் சிறியதென்ற பொருளில், எண் (சிறியது) என்ற சொல் இடம் பெறுகிறது. எண் என்பது அளவையும் குறிக்கும்.

எண் : அளவிடக் கூடியது; எண்ணிலா = அளவிட இயலாதது.

யுகம் அல்லது உகம்:

தமிழரின் காலப் பகுப்பென்பது, தொன்மையானது, தெளிவானது, கணக்கிடுவதற்கு எளிமையானது. நிமையம், நாழி, உழை, காலை, முற்பகல், உச்சம், பிற்பகல், மாலை, முன்னிரவு, யாமம், பின்னிரவு, நாள், வாரம், மாதம், ஆண்டு, உகம், ஊழி என அவை அறியப்படும். ஒவ்வொரு சொல்லும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் குறிப்பன.

கண் இமைக்கும் பொழுதை நிமையம் என்றனர்.

மை என்பது, கருமை நிறமான கண்ணைக் குறித்தது. நின்று, திறந்து, மூடும் கண்ணின் சுவர், நில் + மை = நிமை எனப்பட்டது. இமை என்றும் சொல்லப்பட்டது. இம் என்ற பொழுதில், திறந்து மூடுவதால் இமை எனப்பட்டது. நிமைத்தல், இமைத்தல் ஆகிய இரண்டும் ஒரு பொருளைக் குறித்த சொற்களே.

நிமைத்தலை, சிமிட்டுதல் என்றும் கூறுவர். சிமிட்டுதல் = மூடிமூடி திறத்தல். வானத்து மீன்களும், கண்கள் மூடித்திறப்பன போல், கண் சிமிட்டுகின்றன. அதனால் விண்மீன்களின் சிமிட்டலையும், நிமைத்தல் என்றனர். அதன் வழியில், விண்மீனும் நிமை என்று சொல்லப்பட்டது. நிமைக்கும் விண்மீனின் நகர்வுகளை ஆராய்ந்து, அதற்கேற்ற கால மாற்றங்களைக் கண்டறிபவன், நிமைத்தன் எனப்பட்டான். நிமைத்தன், நிமைத்திகன் என்றும் நிமித்திகன் என்றும் சொல்லப்பட்டான். நிமித்திகன் கூறிய மொழி நிமித்தம் எனப்பட்டது.[682]

மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தம்
தந்திர மிடனே காலம் கருவியென்று

– சிலப்பதிகாரம், 16:166

இளங்கோவடிகளே, மன்னர்க்குரிய தகுதியுடையவர் என்று, மூத்தவன் குட்டுவனை விலக்கிக்கூறிய நிமித்திகனின் மொழியைப் பொய்யாக்கி, துறவு பூண்ட செய்தியை அடியார்க்கு நல்லார் விளக்குகிறார். நிமித்திகன் என்ற சொல்லை, அடியார்க்கு நல்லார் விளக்குகிறார், கையாளுகிறார். (விளக்கம், சிலப்பதிகாரப் பதிகம், வரி 87) தமிழ் அகராதிகளும் இக் கருத்தையே வெளிப்படுத்துகின்றன.

நிமையம் : கண் மூடித்திறக்கும் குறுகிய பொழுது. இதுவே காலத்தை அளப்பதில் மிகக் குறுகிய அலகாகும்.

நிமையம் - நிமிஷ என சமற்கிருதத்தில் திரிந்தது. இதனையே மூலச் சொல் என்று கருதி, நிமிடம் என்று தமிழில் கூறினர். நிமையம் என்ற தமிழ்ச் சொல் இருக்க, நிமிடம் என எழுதலாமா?

சமற்கிருதத்தில் கடிகாரம் என்ற சொல் உள்ளது. கடி (gadi) என்ற சொல், சிறு பொழுதைக் குறிப்பதாகக் கூறுவர். கடி (kadi) என்பது தமிழ்ச் சொல்லே. கடித்தல், சிறு துண்டுகளாக்குதல் எனப்படும். இச்சொல்லையே, அழுத்தம் குறைத்து கடி என்று திரித்துக் கொண்டனர். கடிகாரம் என்பது,

நீர்க்குடுவைக் கருவியைக் குறிக்காது. கடிகாரம் என்பது, தற்கால நேரங்காட்டியின் முள்ளைக் குறிப்பது. கடிகரம் என்பதே தமிழ்ச் சொல்லாகும். கடிகார் (Gadikar) எனத்திரிந்தது. பழைய இந்தித் திரைப்படப் பாடல் ஒன்றுண்டு. என்னுடைய இதயம் கடிகரம் ஒலிப்பதைப் போல், உன்னைக் (காதலனை) கண்ட வுடன் அடித்துக் கொள்கிறது என்ற கருத்துடையது. "கடி கடி மேரா தில் தடுக்கே" என அப்பாடல் தொடங்கும். கடி = சிறிய அலகு அல்லது துண்டு.

உகம் என்ற தமிழ்ச் சொல்லே, யுக - யுகம் எனத் திரிந்தது. யுகம் என்ற சமற்கிருதச் சொல்லுக்கு, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கால அளவு எனப்பொருள்.

உகம் (தமிழ்) : உயர்வு, நீளம், நீட்சி எனவிரியும்.

உகு (தமிழ்) : தள்ளுதல், உதிர்த்தல், சிந்துதல், சொரிதல் எனவிரியும்.

காலத்தைத் தள்ளும் அளவே உகுத்தல் ஆகும். உகு - உக - உகம் என விரிந்தது. யுகம் நான்கு என வேதம் கூறுகிறது.

கிருதயுகம் 4000 ஆண்டுகள், திரேதாயுகம் 3000 ஆண்டுகள், துவார யுகம் 2000 ஆண்டுகள், கலியுகம் 1000 ஆண்டுகள் என வேதம் கூறுகிறது. இவை கூடுதலாக 10000 ஆண்டுகள் உள்ளன. இவை நான்கையும் சதுர் யுகம் என்றும் வேதம் கூறுகிறது. இக்கணக்கு ஓர் எல்லைக்குட்பட்டுக் கூறப்படுவதாகும். இந்த பத்தாயிரம் ஆண்டுக்கணக்கென்பது, வெள்ளக் காலத்துக்குப் பிறகு அறியப்பட்ட கணக்கே எனலாம். வெள்ளக் காலம், கி.மு. 12000 அல்லது 11000 ஆண்டுகளில் முடிவுற்றதென, புவியிய லார் கூறுகின்றனர். அதன் வழியில் கிறித்துப் பிறப்பாண்டுகள் வரையிலான கால அளவே சதுர்யுகம் எனப்படும். ஆனால், ஒவ்வொரு யுகம் முடிந்த பின்னரும் 400, 300, 200, 100 ஆண்டுகள் என இடைவெளிக்காலம் உண்டு என வேதம் கூறுகிறது. இதனைச் "சந்தியா காலம்" என்பர். எனவே, சந்தியா காலத்தையும் கணக்கிட்டால் கி.பி. 1000 ஆண்டு களுடன் சதுர்யுகக் காலம் முடிந்துவிடுகிறது. இந்தக் கணக்கின் அடிப்படையில் கி.மு. 1000 முதல் கி.பி. 1000 வரையிலான (கூடுதல் - குறைவு) காலத்தையே கலியுகம் எனலாம். வேத காலம் கலியுகக் காலம் என்று சொல்லப்படுவதால், வேதம் பதிவு செய்யப்பட்ட காலம், வரலாற்றுக் காலமே என முடிவு செய்யலாம்.

யுகம் என்ற கால அளவுக்கும், தமிழில் சொல்லப்படும் ஊழி என்ற கால அளவுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

உல் என்ற வேர்ச்சொல், உல் - உழ் என விரிந்தது.

உழ் - உழ் = இரண்டாக்கு, பிளவு படுத்து, கீழ் மேலாக்கு என்பது பொதுப் பொருளாகும். இதன்வழியில் முயல, பழக, பணி செய்ய, தொழில் முனைய என்றவாறு பொருள் விரிந்தன.

உழ - உழப்பு : பயிற்சியால் வந்த பழக்கம், முயற்சி, வலிமை, ஆற்றல் என விரியும்.

உழ - உழவு : மண்ணைப் பிரிவு படுத்துதல், கீழ் மேலாக்குதல்.

உழவு - உழவன் : நிலத்தைப் பண்படுத்தும் பணியாளன். உழத்தியர், பெண்பால், உழச்சியர் எனவும் கூறுவர்.

உழை மண் : புரட்டிப் போடப்பட்ட மண், நெகிழுந்தன்மை கொண்டது.

உழ - உழல் : எந்தவொரு பணியிலும் ஈடுபாட்டுடன் உழைத்தல்.

உழ : இரண்டாக்கு.

உழ - உழை : இருளினின்றும் பகலைப் பிரித்தல் என்ற பணியைச் செய்யும் தேவதை.

உழை - உஷா - ஆஷியா - ஆசியா என்றவாறெல்லாம் திரிபு பட்டது. (விளக்கம் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது.)

உழை : காலைப் பொழுது. குறிப்பிட்ட அளவு நீடிக்கும் விடிந்தும் விடியாத பொழுது.

உழை - உழி : குறிப்பிட்ட கால அளவு. குறிலாகச் சொல்லப்பட்டது.

உழி - ஊழி : நெடிலாகச் சொல்லப்பட்டது. நீண்ட நெடிய கால அளவு. நில் என்ற குறில் நிற்றலையும், நீல் (நீரானது) நகர் தலையும் குறித்தன போல், நெடில் நீட்சியைக் குறிக்கும்.

ஊழி : பல்லாயிரம் ஆண்டுகள். எல்லைக்குள் அடங்காதது.

இறைவன் படைப்புக் காலத்தில் எடுத்துக் கொண்ட கால அளவை ஊழி என்ற சொல்லால் பரிபாடல் விளக்கு கிறது.[683]

பராசர முனிவர் இயற்றிய விஷ்ணு புராணம், மைத்ரேயன் என்ற அவரது மாணவனுக்குக் கூறும் வகையில் அமைந் துள்ளது. அந்நூலில், வெள்ளக் காலத்துக்கு முந்திய நிலையையும், பிந்திய நிலையையும் பராசரர் விளக்குகிறார். வெள்ளக் காலத்தின் பேரண்டத்திலுள்ள அனைத்தும் அழிந்துபட்டதாகக் கூறுவது மிகையான செய்தி என்றாலும்,

மிகையை வலுப்படுத்த (அழிவை) அவ்வாறு கூறினார். வெள்ளக் காலத்துக்குப் பிந்திய காலத்தில் எல்லாம் புதியனவாக, முன்பிருந்தவாறே (யதாபூர்வ) படைக்கப்பட்டன. காலம் பற்றி விஷ்ணு புராணக் குறிப்பில், காலமானது 1. நிமிஷம், 2. காஷ்டா, 3. கலா, 4. முகூர்த்தம், 5. பகல் இரவு, 6. பக்ஷம், 7. மாஸம், 8. அயனம், 9. வருஷம் என்றவாறு சொல்லப்பட்டுள்ளன. நிமிஷம் என்பது, நிமேஷம் என்று சொல்லப்பட்டுள்ளது. நிமேஷம் என்பது, கண்களை மூடித்திறப்பது என்ற கால அலகைக் கொண்டது. தமிழில் அறியப்படும் கால அளவிலும் குறைந்த அலகுகளையே சமற்கிருதம் கொண்டிருந்தாலும், தமிழ்க் கணக்கை அப்படியே பின்பற்றியுள்ளது எனலாம். பக்ஷம் என்பது, பக்கம் என்ற சொல்லின் திரிபாகும். பக்கல் என்று தொல் காப்பியம் கூறும். முன்கை ஊர்த்தம் - முகூர்த்தம் ஆனது.

தேவர்களுக்கு ஒரு நாள் என்பது, மனிதர்களுக்கான ஓராண்டுக்குச் சமமானது. தேவ ஆண்டுகள் பற்றிய குறிப்புகளும் விரிவாக உள்ளன.

வேதங்களில் ஆண்டுகள் பற்றியும், எண்கள் பற்றியும் பல்வேறு செய்திகள் உள்ளன.

1. ஒன்று முதல் ஒரு கோடி எண் வரையில் சொல்லிக் கொண்டே போவது.
2. 1, 3, 5, 7, 9, 11 என்றவாறு ஒற்றைப்பட எண்களாகக் கூறுவது.
3. 2, 4, 6, 8, 10, 12, 14 என இரட்டைப்பட எண்களைக் கூறுவது.
4. 4, 8, 12, 16, 20, 24 என நான்கின் மடங்குகளைக் கூறுவது.
5. 5, 10, 15, 20, 25 என ஐந்தின் மடங்குகளும்.
6. 10, 20, 30, 40, 50 என பத்தின் மடங்குகளும்.
7. அவ்வாறே, 50 - 100 இன் மடங்குகளும் சொல்லப்பட்டுள்ளன.

தமிழில் 1000க்கு மேல் எண்ணுவதற்கு எண்கள் இல்லை எனச் சிலர் கூறியுள்ளனர். அவர்கள் தமிழின் தொன்மையை அறியாதவர்களே. வேதத்தில் சொல்லப்பட்டுள்ள எண்களுக்குக் குறியீடுகள் இல்லை. அனைத்தும் எழுத்துருவில் பிற்காலத்தில் எழுதப்பட்டவைகளே. ஒன்று எனப்படும் எண், ஏக என்றவாறு சொல்லப்பட்டது. ஏக என்பது பிரசாபதியையும் குறிக்கும். தமிழில் க எனப்படும் முதல் உயிர் மெய் எழுத்தே எண்

ஒன்றைக் குறித்தது. க முதல் ய வரையிலான எழுத்துகள் முறையே 1 முதல் 10 வரையிலான எண்களைக் குவித்தன. க - ஏக எனத் திரிந்தது. அவ்வாறே ஒவ்வொரு சமற்கிருத எண்ணும் எவ்வாறு தமிழினின்றும் திரிந்தன என்பதை விளக்கலாம் (மேலும் விளக்கங்களுக்கு, ஆசிரியரின் தமிழரின் எண்ணியல் என்ற நூலைக் காண்க).

தசம் என்ற சொல்லைக் காண்போம். தஸ் - தஸ - தஸம் என்பது எண் 10-ஐக் குறிக்கும். தஸ் என்பதற்கான வேர்ச் சொல்லை சமற்கிருதத்தில் அறிய இயலாது. தஸ் - தஸ்யூ என்ற சொல்லும், தஸ என்ற சொல்லோடு தொடர்பு கொண்டது. தஸ்யூ என்பது, ஆரியரல்லாதவர்களை (தமிழர்களை)க் குறித்த சொல்லாகும்.

Dasyu[684]: Inhuman, a robber, any outcast (Rig - veda), A Hindu (in the sense of Non - Aryan) who has become by neglect of the essential rites, not accep ted as witness (Manu, viii : 66) - A sans - Eng. Dictionary, p. 473.

தஸ்யூ என்பவன், முழு மனிதன் அல்லன், வழிப்பறி செய்பவன், நாடு கடத்தப்பட வேண்டியவன், சமயச் சடங்களில் கலந்து கொள்ளத் தகுதியற்றவன், நடுவர் மன்றங்களில் சான்றாளனாக (சாட்சியாக)த் தகுதியில்லாதவன்.

மேற்கண்ட விளக்கங்கள், இந்தியப் பழங்குடியினராகிய தமிழர்களைப் பற்றியதாகும். தமிழன் என்று சொல்லவில்லையே எனச் சிலர் கருதலாம்.

தஸ் என்பதற்கு தோல் (Skin) என்ற பொருளும் சமற்கிருதத்தில் உண்டு. ஒரு மக்கள் இனத்தின் பெயர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.[685] (Name of a people, Maha bharat, vi : 372)

தசை என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே தச எனப்பட்டது. தமிழனின் தசை கருமை நிறமானது. நிறத்தின் அடிப்படையில் வெள்ளைத் தோலுடைய ஆரியன், தமிழனைக் கருப்பன் என அழைத்தான். கருந்தோலைக் கொண்ட தமிழன் தஸ்யூ என அழைக்கப்பட்டான். தஸ்யூ என்பதற்கு அடிமை (slave) என்ற பொருளும் உண்டு. ஆரியனுக்கு அடிமை தமிழன் என்ற கருத்து உணரப்படுகின்றது. ஆண்டவனுக்கு அடிமையும் தஸ்யூ என்றே அழைக்கப்பட்டான். திருத்தொண்டன் என்ற தமிழ்ச்சொல் அதனைக் குறிக்கும். தமிழர்கள், ஆரிய மரபுப்

படி தங்களைத் தாஸ், தாஸன் என்று அழைத்துக் கொண்டனர். கண்ணதாசன், பாரதிதாசன் போன்ற பெயர்கள், தஸ்யூ என்ற சமற்கிருதச் சொல்லின் தமிழ்த் திரிபுகளே.

தஸ்யூ என்பது கருந்தமிழனைக் குறித்ததாலும், கரிய தசையைக் குறித்ததாலும், தசைக்குள்ள இலக்கணம் சமற் கிருதத்திலும் சொல்லப்பட்டது.

தசை (தமிழ்) : உடல் உறுப்புகளையும், எலும்புகளையும் மூடியிருக்கும் தோல், எனவே தசை என்பது ஒட்டியிருப்பது, பற்றியிருப்பது என்ற பொருளைத் தரும். தை என்ற மூலச் சொல்லுக்கு இணைத்தல், ஒட்டுதல் என்றே பொருளாகும். தை + செய் = ஒட்டியிருக்குமாறு செய்யப்பட்டது. தை செய், தசை என்றானது. தைச்சன் - தச்சன் எனப்பட்டதை ஒப்பு நோக்குக.

இனி எண்ணியலுக்கு வருவோம். ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள் ஒரு தொகுப்பாகக் கருதப்படும். இத்தொகுப்பு பத்து என்ற எண்ணுடன் தைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இதற்குச் சரியான விளக்கம் தருகிறார். ஒன்று முதல் ஒன்பது வரையிலான (ஒன்பது என்பது தொல்காப்பியர் அறிமுகம் செய்த எண். அதற்கு முன்பும் பின்பும் தொண்டு என்றே சொல்லப்பட்டது) எண்களை, ஒரு கொத்தாகத் தொல்காப்பியர் கருதினார். இத்தொகுப்பை ஒன் என்ற சொல் லால் குறித்தார். பத்து என்ற எண்ணை அது பற்றியிருப்பதால், ஒன் + பத்து = ஒன்பது என்று கூறினார். (பாவாணர் ஒன்பது என்ற சொல்லை ஏற்கவில்லை).

பத்து என்ற தமிழ்ச்சொல்லைத்தான், சமற்கிருதம் தஸ் என்கிறது. தமிழ்ப் பொருளை அப்படியே அம்மொழி ஏற்றுக் கொண்டுள்ளது. சொல்லை மாற்றிப் போட்டுள்ளது. தசை என்பது இணைக்கப்பட்டது, தஸ் என்பது இணைக்கப் பட்டது என்ற பொருளையே தருகின்றது. சமற்கிருதம் தசை என்ற தமிழ்ச்சொல்லை ஏற்றுக் கொண்டது. தமிழ் பற்று என்ற சொல்லைப் பயன்படுத்தியது. பற்று என்பதும் இணைப்பைக் குறித்த சொல்லே. பற்று - பத்து என்று சொல்லப்பட்டது. இதற்கு ஒட்டியிருப்பது என்பதே பொருள். பானையில் ஒட்டியிருக்கும் சோற்றுப் பருக்கையை பற்று அல்லது பத்து என்றே கூறுகிறோம். பத்துப் பாத்திரம் தேய்த்தல் என்ற வழக்குச் சொல்லை நோக்குக. எனவே, தஸ்

என்பது ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களோடு ஒட்டியிருப்பது என்ற பொருளையே தருகின்றது. தஸ், பத்து என்ற எண்ணுக்குச் சொல்லப்பட்டது.

சதம் என்ற சொல் நூறைக் குறித்தது. அது எவ்வாறு சொல்லப்பட்டது? தமிழில் தசை, சதை என்று இரண்டு சொற்கள் உண்டு. இதுவரையில் அனைவரும் அதனை ஒரு பொருள் தரும் இரண்டு சொற்களே எனக்கூறி வந்துள்ளனர். அது தவறான சிந்தனையாகும். சிலர் கூடுதலாக இலக்கணப் போலி என்றும் கூறினர். அதுவும் தவறானதே. தசம், சதம் ஆகிய இரண்டு சமற்கிருதச் சொற்களும் தமிழ் மூலத்தைக் கொண்ட தனித்தனிச் சொற்களே ஆகும்.

தசை - தசம் என்றும், சதை - சதம் என்று திரிந்தன.

தசை : இயல்பாக உறுப்புகளையும் எலும்பையும் பற்றியுள்ள தோல்.

சதை : இயல்புக்கு மாறாக அதிகப்படியாக வளர்ந்துள்ள தசை.

தசை - சதை ஆகிய இரண்டும் தனித்தனி மூலச் சொற்களால் உருவானவை.

தை என்ற சொல் தசை யென்றும், சள் என்ற சொல் சதை யென்றும் விரிந்தன.

சள் : மிகுதி; சளப்பு : மிகுதியான ஒலி.

சளசளப்பு : தொடர்ந்த ஒலி, மிகு ஒலி.

சள்ளை : தொடர்ந்து வரும் மிகுதியான இடையூறு; மிகுதியாக வழுக்கும் மீன்.

சளசளவென நீரோடியது; சளசளவெனப் பேசுகிறான். - வழக்குச் சொற்றொடர்கள்.

சள் - சளி = தொடர்ந்து ஊறும் கெட்டியான நீர்.

சளக்கு : மிகுதியான செயற்கையான பொருட்களால் அழகுபடுத்திக் கொள்ளுதல்.

சளக்கு சிங்காரி : தற்பெருமைக்காரி (woman with make-up).

சள் என்ற மூலச் சொல், சள் + து = சத்து என நீண்டது.

சத்து, சத்தான, சத்துள்ள, சத்துணவு போன்ற சொற்கள், சள் என்ற சொல்லின் விரிவுகளே.

சள் = சள் + தை = சதை என விரிந்தது.

சதை = தேவைக்கு மிகுதியாக உள்ள தசை. தொங்கு சதை என்றும் கூறுவர். எண்ணியலுக்கு வருவோம்.

ஒன்று முதல் 10 வரையிலான தொகுப்பு - பத்தில் அல்லது தசையில் சொல்லப்பட்டது. பல தசைகள் சேரும்போது

அல்லது தசைகள் மிகும்போது அது சதையாகிறது. 10 தசை, மேலும் பத்துத் தசைகளாகும் போது (நூறு) அது சதையாகிறது.

பத்துத் தசைகளை, சதம் என்று சமற்கிருதம் கூறுகிறது.

சதம் : 10 களின் பெருக்கம், கூடுதல், மிகுதி அதாவது நூறு.

தசை - தச - Ten எனத் திரிந்தது.

சதை - சதம் - செந்த் அல்லது சென்ட் (cent) எனத்திரிந்தது. cent - century (நூறாண்டு) என்றும், centum (நூறு) என்றும் திரிந்தன.

Percent - Percentage போன்ற சொற்கள் சதை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபுகளே.

கிளையோ (Kiliyo) என்ற கிரேக்கச் சொல்லினின்றும் உருவானதே Kilo என்ற சொல்லாகும். இதன் பொதுப் பொருள் பல கிளைகள் அல்லது துளிகள் என்பதாகும். அது ஆயிரம் என்ற சொல்லுக்குப் பயன்படுத்தப்பட்டது.

அயிர் என்ற தமிழ்ச் சொல், சிறு துளி அல்லது துகள் என்ற பொருள் கொண்டது. ஒன்றைப் பல துகள்களாக உடைத்தால், ஏற்படும் துகள்களின் எண்ணிக்கை அயிரம் எனப்பட்டது. அயிரம் - ஆயிரம் என்று வழக்கில் வந்தது.

கிராம் (gram) என்ற அளவும் கூட தமிழ் மூலத்தைக் கொண்டதே. எடையில் குன்றி மணி என்ற குறுமணியே அலகில் குறைந்த தாகும்.

குறுமணி - குறும - கிரம்ம - கிராம் எனத் திரிந்தது.

தொல்காப்பியர் கூறிய ஒன்பது என்ற சொல்லுக்கு, பத்தில் ஒன்று குறைந்தது என்றும் பொருள் கொள்ளலாம். தொண்ணூறு, தொள்ளாயிரம் போன்ற எண்ணின் பெயர்களை, தொண்டு என்ற சொல்லில் இருந்தே தொல்காப்பியர் விரிவுபடுத்தினார்.

தொள் - துளைத்தல் அல்லது தோண்டுதல்.

தோண்டு - தொண்டு. ஒற்றை மரத்தில் துளைத்தெடுக்கப்பட்ட மரக்கலம். பத்தில் ஒன்றைக் குறைத்த தொல்காப்பியரின் அறிமுகப்படி, பத்தொன்பது என்ற சமற்கிருதச் சொல், இருபதுக்கு ஒன்று குறைவு என்ற பொருளைத் தருவது.

ஏகான்ன விம்சதி என்பது எண் பத்தொன்பதைக் குறிக்கும். விம்சதி என்பது இருபது. ஏகான்ன = ஒன்று குறைவு. இவ்வாறு ஒவ்வொரு பத்துக்கும் குறைவு என்றவாறு கழித்தல் விதியை வேதம் சுட்டுகிறது.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி 2, 4, 8, 12, 16 போன்ற வரிசை முறை எண்கள் பெருக்கல் முறையைக் காட்டுவன. அக்காலத்தில் பல இலக்கம் கொண்ட எண்களை மனத்தால்

பெருக்கிக் கூறும் ஆற்றலையும் சுருக்கு வழியையும் கொண்டிருந்தனர்.

பொதுவாக, பத்து ஒன்று = பதினொன்று என்ற தமிழ் வழக்கிற்கு மாறாக, ஒன்றை முன் வைத்தும் பத்தைப் பின் வைத்தும் சொல்வது சமற்கிருத மரபு. ஒன்றுக்குக் குறைவான அலகுகள், தமிழில் ஏராளம் உள்ளன. அவைகளை விரித்தால் அது நூல் வடிவில் பெருகும். வேதமும் ஒன்றுக்குக் குறைவான எண்களைச் சுட்டுகிறது. 1,3 = அர்த்தம் சி பாதம்; பி = திரிபாதம், பி என்பது 1 இல் சிஐக் கழித்துச் சொல்லப்படுவது சதுர்பாகேனம்; 7தி = அர்த்தாஷ்டம், 9தி அர்த்த தசம்.

அர்த்த என்பது பாதி என்ற பொருளைத் தரும்.
அரை என்பதே, அரைத்தம் - அர்த்தம் எனத் திரிந்துள்ளது.

வேதம் கூறும் கணக்கியல் முறைகளிலும் விரிவான விளக்கங்கள் தமிழில் உள்ளன. அவைகளைப் பற்றிய செய்திகளை, ஆய்வாளர்களைத் தவிர மற்றவர்கள் பார்ப்பதுமில்லை, படிப்பதுமில்லை. பை (31/7) என்ற கணக்கின் சூத்திரம் தமிழில் சொல்லப்பட்டுள்ளதை எத்தனை பேர் அறிவார்கள்?

வண்டிச் சக்கரத்தின் மையப்புள்ளி, ஆரக்கால்கள், வட்டப் பட்டைகள், அதன் மேல் பரவும் இருப்புத்தகடு என்றவாறு உருவாக்கப்படும் போது, தைச்சன் அல்லது கொல்லனால் கையாளப்படும் கணக்கியல் நுட்பம் அல்லது சூத்திரமே “பை” என்று சொல்லப்படுகின்றது.[686]

விட்டம் அதனை விரைவாய் இரட்டித்து
மட்டுநான் மாதவின் மாறியே – எட்டதனில்
ஏற்றியே செப்பிமிடில் ஏறும் வட்டத்தளவும்
தோற்றும்.................................. – கணக்கதிகாரம், 50

தொல்தமிழ்க் கணியர்கள் வகுத்துக் கொடுத்த வானியல் கணக்கியல் அறிவு, சிந்துவெளியில் கி.மு. 10000 ஆண்டுகளில் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம். அங்கு கண்டெடுக்கப்பட்ட மாட்டு வண்டியின் மண் பொம்மை, அக்காலத்திலிருந்து இக்காலம் வரை மாற்றம் பெறாமலேயே பயன்பாட்டில் வந்துள்ளது. பை என்ற கணக்கியல் சூத்திரத்தை அறிந்தவர்களே, சக்கரத்தின் வட்டை மேல் பொருத்தும் பட்டையைப் பதித்திருக்க வேண்டும். ஆரியர்கள், மிகக் குறுகிய காலத்திலேயே, தமிழறின் அறிவுச்

செல்வங்களைப் பற்றி அறிந்து கொண்டனர். அது வரவேற்கப் பட வேண்டியதே. தமிழரிடமிருந்து கற்றதைத் தாமே கண்டு பிடித்ததாகப் பதிவு செய்ததுதான் கண்டிக்கத்தக்கது. ஆரிய பட்டரும் (கி.பி. 500), வராகமிகிரரும் (கி.பி. 600), பிரம குப்தரும் (கி.பி. 700) பாசுரக்கராச்சாரியாரும் (கி.பி. 1200) வடித்த கணக்கியல் தொடர்பான நூல்கள் அனைத்தும் தொல் தமிழ்க் கணியத்தின் விளக்க நூல்களே. வடபுலத்தில் வாழ்ந் திருந்த தமிழ்க் கணியர்கள் நடத்தி வந்த ஐந்திறப் பள்ளிகளே, அக்காலத்தியப் பல்கலைக் கழகங்கள் ஆகும். அப்பள்ளிகளில் ஆரியரும் பயின்று, கற்றுத் தேர்ந்தனர் என்க.

ஒன்பது என்ற எண், கணக்கியலில் ஒரு வியக்கத்தக்க எண்ணாகும். அதனைத் தொண்டு என்றே தமிழர் குறித்தனர். தொண்டு என்பதற்கு மரக்கலம் என்ற பொருளும் உண்டு. மரக்கலத்திற்கும் தொண்டிற்கும் என்ன தொடர்பு இருந்தது? எவ்வாறு, எப்பொருளில் அச்சொல் பயன்படுத்தப்பட்டது? ஏற்கனவே கூறியபடி தொள்ளுதல் (Scrapping) அல்லது குடைதல் என்ற பொருளில் தொண்டு அறியப்படுகின்றது. சமற்கிருதத்தில் தொண்டு நவ (Nava) என்றவாறு அறியப்படும். நவ என்ற சொல்லை எந்த அடிப்படையில் எண் ஒன்பதிற்குப் பயன்படுத் தினர்? தமிழ் - சமற்கிருத மொழிகளின் பல்வேறு சொற்கள் இவ்வாறு தொடர்புபடுவதுடன், தமிழ்ப்பொருளை ஒட்டிய வாறே, சமற்கிருதச் சொற்கள் திரிபுபட்டுள்ளன எனும்போது, தமிழின் ஆழ அகலத்தை அறிந்தவர்களே, சமற்கிருதச் சொற் களை உருவாக்கி இருக்கவேண்டும் எனக் கருதலாம். ஆரியர் களுக்கு அத்தகைய தமிழ்ப்புலமை இருந்ததாகக் கூற இயல வில்லை.

தமிழைப் போன்றே, நவ என்ற சமற்கிருதச் சொல்லும் எண் ஒன்பதையும் மரக்கலத்தையும் குறிக்கின்றன. தமிழ்ச் சொல்லான நாவி என்ற சொல்லை, சமற்கிருதம் எடுத்துக் கொண்டுள்ளது. நவ (சமற்கிருதம்) = மரக்கலம், எண் ஒன்பது. எனவே, கணக்கியலில் சமற்கிருதச் சொற்கள், தமிழையே முன்னிறுத்துகின்றன. நவ்வு அல்லது நாவ், மரக்கலத்தைக் குறித்தது. கிரேக்க மொழியும் நாவி என்ற தமிழ்ச் சொல்லையே மூலமாகக் கொண்டு, நோவுஸ் (Novus) எனத் திரித்துக் கொண்டது.

நாவி (தமிழ்) → நவ் (சமற்கிருதம்) → நோவுஸ் (கிரேக்கம்) → நாவிஸ் (இலத்தீன்) நாவுஸ் (செர்மன்) → நேவி (ஆங்கிலம்)

மேற்கண்ட எடுத்துக்காட்டு மரக்கலத்தைப் பற்றியது, எண் ஒன்பதையும் சுற்றியது. தமிழில் சொல்லப்பட்ட எண் ஒன்பது - மரக்கலம் ஆகிய சொற்களின் தொடர்பு, உலக மொழிகளிலும் அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. தமிழ் மொழியே உலகை ஆண்டது, இப்போதும் ஆண்டு கொண்டிருக்கிறது என்பதை அறியும் காலம் விரைவில் வரும். பாவாணர் தோன்றும் காலம் வரையில், சமற்கிருத மொழியாளர்கள் சொன்னவைகளை அப்படியே நம்பி ஏற்றுக் கொண்டிருந்த தமிழர்கள், பாவாணரின் தெளிவுமிக்க ஆய்வு களால், சமற்கிருத மொழியைப் புரிந்து கொள்ளத் தொடங் கினர். இன்று ஆரிய இலக்கியங்கள் கூறும் செய்திகளின் பின் புலத்தை ஆய்வு செய்து, மறுப்பு வெளியிடும் ஆய்வாளர்கள் பெருகியுள்ளனர். எதிர்காலத்தில் சமற்கிருத இலக்கியங்கள் அனைத்தும் தமிழ் இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளே என்கிற உண்மை நிலை உறுதியாக வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

யாசூர் என்ற தமிழ்ச் சொல்லே, யசூர் - யஜுர் எனத் திரிந்தது எனலாம். யா = சூர் என்ற சொற்கள், நீரையும் நெருப்பையும் குறிப்பன. யாசூர் வேதம், ஏறக்குறைய பெரும் பகுதியை ருக்கு வேதத்தில் இருந்தே எடுத்துக் கொண்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு 101 சாய்கைகள் (கிளைகள்) யாசூர் வேதத்தில் உள்ளன என்பர். "சுக்ல யசூர் வேதம்", என்று ஒரு பிரிவு உண்டு. சுக்லம் என்பது, ஒளிர்வது அல்லது பொலிவது என்று பொருளைக் கொண்ட, சொக்கு (சொக்கன்) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். யாசூர் வேதத்தைப் பரப்பிய வைசம் பாயனரின் மாணவன் ஒருவன் யாக்ஞவால் சியன் எனப்பட்டான். இவன் ஆசானை விஞ்சிய மாணவனாய் இருந்தான். இதனால் மற்ற மாணவர்கள், வைசம் பாயனரிடம் முறையிட்டனர். தனக்கு மாணவனாக இருக்கும் தகுதியை யாக்ஞவல்சியன் இழந்துவிட்டதாகக் கருதிய வைசம் பாயனர், இதுவரை தான் கற்பித்த யாசூர் வேதச் செய்திகளையெல்லாம் மனத்திலிருந்து வாய்வழியாகக் கக்கிவிட்டு, தன்னிடமிருந்து அகன்றுவிடும்படி கூறினார். யாக்ஞ வல்கியனும் அவ்வாறே செய்ய, சிட்டுக் குருவிகளாக மாறிய மற்ற மாணவர்கள்,

அவற்றைக் கொத்தித் தின்றுவிட்டனராம். சிட்டுக் குருவியை தைத்திரி எனக் கூறுவர். எவராலும் கட்டவியலாத கூட்டைக் கட்டுவதால் அல்லது தைப்பதால், தைத்திரி என்று சொல்லப் பட்டிருக்கலாம். இதன்பின்னர் விவசுவான் என்பவரைத் தன் ஆசானாக ஏற்றுக் கொண்ட யாக்ஞவல்சியன் வெளியிட்டதே சுக்ல யசூர் வேதம் ஆகும். அது "வாஜசனேய ஸம்ஹிதை" என்றும் சொல்லப்படும். சம்கிதையென்றால், மந்திரங்கள் (Prayers) அடங்கிய தொகுப்பாகும். செங்கதை - சம்கிதை எனத் திரிந்தது என்க.

யாகம் என்பது வேள்வி. வேள்வியின் சிறப்பான செயலே யக்ஞும். யாகம் என்பது நற்செயல்களைக் குறிப்பதாகக் கூறுவர். விஷ்ணுவுக்கு ஒருபெயர் யாகம். மொத்தமான தொகுப்பு. விஷ்ணுவின் ஒரு பிறப்பாளன் வாமனன் (குள்ளமானவன்). அத்தொகுப்பின் ஒரு பகுதியை யக்ஞும் (வாமனம்) என்பர். இந்த உலகில் உள்ள அனைத்து செல்வங்களும் யக்ஞும் என்றே சொல்லப்படும். "ஒரு காலத்தில் அசுரர்கள் பிரபஞ்சத்தைத் தன்வசம் வைத்திருந்தார்கள். தேவர்கள் அவர்களிடம் சென்று எங்களுக்குச் சிறிய பாகம், நிலம் கொடுத்தால் போதும்", என்றார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி, ஒரு காலத்தில் அசுரர்களே (தமிழர்களே) இப்பேரண்டத்தைத் தன் பிடியில் வைத்திருந்தார்கள். தேவர்களுக்கு (ஆரியர்களுக்கு) என்று எதுவுமில்லாமல் இருந்தது. அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் ஆதலால், இங்கு அவர்களுக்கு எந்த நிலபுலன் களும் இல்லை. அதனால், எங்களுக்கும் சிறிதளவு நிலம் கொடுங்கள் என்று அசுரர்களை வேண்டினர். ஆனால் அசுரர் கள் தரமறுத்து விட்டனர். எனவே, அசுரர்களை வீழ்த்தி, அச்செல்வங்களை அடைய ஆரியர் முற்பட்டனர். அதற்கான முயற்சிகளிலும் இறங்கினர். வெற்றியும் பெற்றனர். இவ்வெற்றி சூது முறைகளாலும் சூழ்ச்சிகளாலும் கிடைத்த வெற்றியாகும்.

தமிழர்களின் மேலாண்மையை வேதமே சான்றாக இருந்து விரிவாக விளக்குகின்றது. தமிழரிடமிருந்த செல்வங்களை, அதிகாரங்களைப் பெறவே, யாகங்களை ஆரியர்கள் நோற்றனர். யாகங்கள் பலவாறு சொல்லப்படும்.

சோம யாகம் : நிலவு அமுதத்தை (உணவை)த் தரும். அமுதைப் பொழியும் நிலவு என்பர். தேவர்களுக்குத் தேவையான உணவைப் பெற சோமயாகம் நோற்கப்பட்டது.

வாஜ்பேய யாகம் : உணவுக்கு அடுத்தது, வாழ்க்கைக்கான செல்வம். அச்செல்வத்தைப் பெற நடத்தப்பட்டதே வாஜ்பேய யாகம்.

ராஜசூய யாகம் : ஆட்சியையும் அதிகாரத்தையும் பெற நடத்தப் பட்டது.

புருஷமேத யாகம் : இயற்கையின் கமுக்கங்களை அறிய, அதாவது சிறந்த கல்வியைப் பெற நடத்தப்பட்டது.

சர்வமேத யாகம் : இயற்கையின் பொருட்கள், உயிரினங்கள் ஆகிய வற்றிற்கிடையேயான தொடர்புகளை அறிய வேண்டுவது. இதுவும் புவியியல், உயிரியல் தொடர்பான கல்வியே.

சௌத்திர மணியாகம் : தொடர்ந்து வரும் தோல்விகளை, வெற்றிகளாக மாற்றுவதற்கு நடத்தப்பட்ட யாகம்.

பிரவர்க்கிய யாகம் : பன்முக அறிவையும் ஆற்றலையும் (multi - personality) பெற நோற்கப்பட்டது.

அசுவமேத யாகம் : வெற்றிகளைப் பெறுவது மட்டுமல்லாது, பகைவர்களை வேரோடு ஒழிப்பதற்காக செய்யப்பட்ட யாகம்.

யாகங்களுக்கு விளக்கம் தருவது நமது நோக்கமன்று. மேற்கூறப்பட்ட யாகங்களை உன்னிப் பார்க்கும் போது, ஆரியரின் தொடக்க கால வரலாறு தெளிவாகத் தெரிகின்றது. மேற்கிலிருந்து ஒன்றுமில்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்கள், எவ்வாறு மெல்ல மெல்ல தமது நிலைப்பாட்டை உறுதி செய்து கொண்டு, இந்தியர்களை அல்லது தொல் தமிழர்களை அடிமைப்படுத்திய வரலாறு, யாகங்களின் பட்டியலைப் பார்த்தாலே வெளிப்படுகின்றது.

மகாலெட்சுமியின் சிறப்பு:

வேதங்களிலும் புராணங்களிலும் சிரீ (Sri) என அழைக் கப்படும் பெண் தெய்வமே, பிற்காலத்தில் மாகலெட்சுமி எனப்படுகிறாள். பிற்கால சமற்கிருத இலக்கியங்கள், மகா லெட்சுமியை, ஆண் கடவுளுக்கு நிகரான, ஆற்றல் மிக்க தெய்வமாகக் சுட்டுகின்றன. அவளுக்கு ஆயிரம் பெயர்கள் உண்டு. ஒவ்வொரு பெயருக்கும் உரிய கதைகளும் உண்டு. (ஆசிரியரின் இந்தியக் கடவுளர் என்ற நூலைக் காண்க) சீர் என்ற தமிழ்ச் சொல்லே, சிரீ என சமற்கிருதத்தில் திரிந் துள்ளது. சீர் என்பது, அளவுக்குக் கட்டுப்படாத செல்வம் என்ற பொருளைத் தரும். ஆரியர்கள், தங்களுக்கு அவ்வாறான செல்வங்கள் வேண்டும் என வேண்டி, அதனைத் தரும்படி அழைக்கப்பட்டவளே மகாலெட்சுமியாகும். இவ்வாறான

பொதுவாக, தற்காலத்தில் அறியப்படும் மதங்கள் அனைத்தும், ஆன்மீக வழிகளை மறந்து, துறந்து, அரசியல் தொடர்புகளைப் பெற்று, ஆள் வலிமை, கூட்டம் சேர்த்தல், பிற மதத்தவரை இழிவு படுத்துதல், அதிகாரத்தைக் கைப் பற்றுதல் போன்ற புற வழிகளில் ஈடுபட்டு வருவதைக் காண லாம். இதற்கு எந்தச் சயமமும் விதிவிலக்காக இல்லை. ஆரியச் சமயமும் இதில் அடங்கும். இறைவனை எவ்வாறு சென்றடை யலாம் என்ற வழிகளை ஒவ்வொரு சமயமும் காட்டுவதாகக் கூறுகின்றனர். தாம் வழிபடும் இறைவனே உண்மையான இறைவன் என்றும், மற்ற சமயங்களின் இறைவர்கள் போலி யானவர்கள் என்றும் ஒவ்வொரு சமயமும் கூறுகின்றன. சமயத்தின் பெயரால் இன்று நடக்கும் இனப்படுகொலைகள், குண்டு வீச்சுகள், ஆட்சி மாற்றங்கள், மாந்த நேயமற்ற செயல்கள் அனைத்தும், சமயங்களின் உள்நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன. பிறந்தது முதல், வாழ்நாள் தொடர, இறப்பது வரை, ஒவ்வொருவனும் தனது சமயத்தின் அதிகாரக் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கவேண்டும் என ஒவ்வொரு சமயமும் எதிர்பார்க்கின்றது. சமயத் தலைவர்களின் தவறான நடைமுறைகளைத் தட்டிக் கேட்கவும், சுட்டிக் காட்டவும் முயன்றால், அது சமயத்துக்கு எதிரான செயல் என்று வண்ணம் பூசப்படுகிறது. சிந்தனையாளர்கள், சமயங்களைப் புறக்கணிப்பது, சமயத் தலைவர்களின் அடக்கு முறைகளால் தான் என்பதை அறியலாம். சமயங்களுக்கு எதிரானச் சிந்தனைகள் தோன்றுவதற்கு சமயங்களே அடிப்படைக் கார ணங்களாக அமைந்துள்ளன.

வேத விளக்க நூல் ஒன்றில் பாட்டாக எழுதப்பட்ட வரிகளைக் காணும்போது, மாந்த நேயம் மறைந்தே போய் விட்டது எனக் கருதலாம்.

மலைமேலே பள்ளத்தே மாமலையின் தொடரினிலே
கலை நிறையும் கோயிலிலே, கவின் பள்ளி வாசலிலே
கிறிஸ்துவ நற்சபையினிலே சீரார் குரான் அதனிலே
ஒரு பயனும் இல்லாமல் உன்னைத் தேடி அலைந்தேன்.

சமயங்களின் போக்குகளை மேற்கண்ட பாடல் தெளி வாக விளக்குகின்றது.

யாசூர் வேதத்தின் பெரும்பகுதிகள், பிற்கால ஆரியர் களால் படைக்கப்பட்டவை. ருக்கு வேதம், பழைய இந்திய

வேதம் என்ற வழிபாட்டுத் தொடர்ச்சியைக் கொண்டது. இதில் ஆரியர்களின் படைப்பும், சேர்க்கையும் பிற்காலத்தில் இணைக்கப்பட்டவைகளே. யாசூர் வேதம் ஆரியர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் செய்திகளைக் கொண்டவை. இவ்வேதம், ஆரியர்கள் இந்தியாவில் நிலை கொள்வதற்கு முயன்ற காலங்களில் உள்ள நிகழ்வுகளை உணர்த்துபவை. யாசூர் வேதத்தின் தெய்வங்களும் தேவர்களும், இந்தியப் பழங்குடியினரின் கடவுளரே. பொதுவாக நான்கு வேதங்களும் திரும்பத் திரும்ப அதே கடவுளரையே மீண்டும் மீண்டும் அழைக்கின்றன.

சாம வேதம்

முதல் ருக்கு வேதம், தமிழர்களால் சொல்லப்பட்டவை. இரண்டாவது யாசூர் வேதம் ஆரியர்களால் வேண்டப்பட்டவை. மூன்றாவதான யாம அல்லது சாம வேதம், தமிழரின் இசையைத் தழுவி எழுதப்பட்டவை. சாம வேதம் என்பதற்கு நல்வாழ்வும் நெருப்பும் என்பதைப் பொருளாகக் காட்டுகின்றனர். ச என்றால் நல்வாழ்வு (சுகம்), ம என்பது தீ அல்லது நெருப்பு. சம - சாம எனப்பட்டது. அசாம என்ற சொல்லுக்கு தீய செயல் என்று பொருள் கூறுகின்றனர். இதன் வழியில் சாம என்பதற்கு நற்செயல் என்ற பொருளே சொல்லப்பட்டிருக்க வேண்டும். யாம என்ற தமிழ்ச் சொல்லே, சாம எனத் திரிந்திருக்க வேண்டும். யாமம் என்பதற்குத் தமிழில் பல்வேறு பொருள் சொல்லப்பட்டாலும், தெற்கு அல்லது தென்திசை என்பதும் ஒரு பொருளாகும். சாம வேதம் என்பது தென் வேதம் என்றும் பொருள் கொள்ளலாம். உண்மையில் தெற்கே தமிழ்நாட்டில் அறியப்பட்டிருந்த செய்திகளையே ஆரிய நோக்கில் சாமவேதம் கூறுகிறது.

முன் இரண்டு வேதங்களைப் போலவே, சாம வேதமும் முனிவர்களால் வளிமண்டலத்தில் பரவியிருந்த அலைகளிலிருந்து ஈர்க்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்றது. இவை எவராலும் படைக்கப்பட்டவையல்லவென்றும், இறைவனே சாம வேதத்தின் தலைவன் என்றும், முனிவர்களின் தனி ஆற்றலால் அவை வெளிப்பட்டன என்றும் நம்பப்படுகின்றது. அறிவியலும் வானியலுமே ருக்கு வேதம் என்றும், வீறத்தைப் போற்றுவது யாசூர் வேதம் என்றும், இயற்கையின் ஆற்றலைப் பெறுவது அதர்வண வேதம் என்றும், இசையோடு இணைந்த மந்திரங்களே சாமவேதம் என்றும் சொல்லப்படுகின்றன.

சிவனுக்கும் உமைக்கும் மிகவும் பிடித்தமான வேதமாக சாமவேதம் சொல்லப்படுகின்றது. உமையவளுக்கு "சாமகாளப் பிரியை" என்ற பெயரும் உண்டு. இலங்கை வேந்தன் இராவணன் சாம கானம் இசைத்தே சிவனைக் கவர்ந்தான் எனவும் கூறுவர். தனக்கு வந்த இன்னல்கள் இடையூறுகளை சாம வேதத்தின் ஆற்றலால் அவன் களைந்தான் என்பர். இராவணன் தனது உடலில் இருந்த நரம்புகளையே வீணையின் கம்பிகளாக்கி, சிவனை மயக்கினான் என்பர்.

சாமவேதத்தில் சாமன் என்பவன் ஒரு தேவனைப் போல் உருவகப்படுத்தப்பட்டுள்ளான். இசையுணர்வையே அவ்வாறு உருவம் செய்துள்ளனர். தமிழ்த் தொன்மங்கள், இசையின் நாயகன் சிவனே என்பதை உணர்த்தும். இயற்கையில் கேட்கப் படும் ஒலிகள் அனைத்தும், சிவனின் இசை வடிவங்களே என்பது தமிழரின் நம்பிக்கையாகும். காலைப் பொழுதில் கேட்கப்படும் பறவைகளின் ஒலிகளும், அலை கடல் எழுப்பும் பேரொலிகளும், வானில் முழக்க இடியும், மரங்களூடே காற்று புகுந்து எழுப்பும் இரைச்சலும், எல்லாம் இறைவனின் இசை வடிவங்களே என்பர். உலகில் கேட்கப்படும் ஒலிகள் அனைத்தும் இறைவனின் இசை வடிவங்களே. ஓம்காரமாய் விளங்கும் நாத ஒலி, சிவனிடமிருந்து பிறப்பதே. இசையின் நாயகன் ஆடல்வல்லானாகவும், அழகு தமிழ்ப் புலவனாகவும் விளங்கியதால், அவனை முத்தமிழ் வித்தகன் என்றனர். "அசையும் பொருளின் இசையும் நானே, ஆடற் கலையின் நாயகன் நானே, எதிலும் இயங்கும் இயக்கம் நானே, என் இசை நின்றால் - அடங்கும் உலகே; நான் அசைந்தால் அசையும் அகிலம் எல்லாமே." சிவனே தன்னைப் பற்றி இவ்வாறு கூறுவதாக கண்ணதாசன், சிவனைப் புகழ்ந்தார். தமிழிசையை இகழ்ந்த ஏமநாத பாகவதரை, மனம் திருந்தச் செய்தது தமிழ் இசையே என்றும், அதனை இசைத்தது சிவனே என்றும் திருவிளையாடற் புராணம் கூறும்.

கர்நாடக இசை, சாமவேதத்தினின்று பிறந்ததே என்பர். கர்நாடக இசையினின்றும் பிறந்ததே தமிழ் இசை என்பர். சாம வேதத்தின் பின்புலத்தை அறியாதவர்களின் கூற்று இது.[686] சாம வேதம் என்பது, தமிழ் இசையை அடிப்படையாகக் கொண்டும், தமிழ்ச் சூழலையும், தமிழ்த் தெய்வங்களை முன்னிறுத்தியும் தொகுக்கப்பட்டதே. கர்நாடக இசை என்ற பெயரை முந்நூறு

ஆண்டுகளுக்கு முன்பு, கர்நாடக நவாபுகளே சூட்டினர். அதற்கு முன்பு அப்பெயர் எங்கும் சொல்லப்படவில்லை. தமிழ் நாட்டில், கடந்த நூற்றாண்டுகளில் குடியேறிய வடுகர்கள், தங்களுக்கிருந்த அரசியல் செல்வாக்கினால், தமிழிசையைக் கற்று, அதனை வடுகமயமாக்கினர். கர்நாடக இசையென்பது களவாடப்பட்ட இசையே என்ற குரல் இப்போது உரக்க ஒலிக்கப்படுகின்றது. கர்நாடக இசைக்கும் தலைவனாக ஆடல்வல்லான் சிவனையே அவர்கள் மையப்படுத்துவதி லிருந்து, அது தமிழிசையே எனத் தெளியலாம்.

காட்டில் வளர்ந்த மூங்கிலில் வண்டுகள் துளைக்க, அத்துளைகள் வழியே சென்று மீண்ட ஒலியே குழல் ஒலியா யிற்று. குழல் என்பது, தமிழரின் தொன்மையான இசைச் செல்வமாகும். மூங்கிலுக்குக் கொம்பு என்ற பெயரும் தமிழில் உண்டு. கொம்பில் நுழைந்த காற்று ஊதிய ஒலியே. கொம்பூதி ஒலி எனப்பட்டது. கொம்பூதி தற்போது காம்போதி எனத் திரிந்தது என, தமிழ் இசையறிஞர்கள் கூறுவர். தமிழரின் தொன்மைக் கால இசைக்கருவி யாழ் என்பதாகும். அதன் வளர்ச்சியே இன்று வீணை என்று சொல்லப்படுகின்றது. விண் விண் எனக் கிளம்பும் ஒலியின் இசையால், அது வீணை எனப்பட்டது. பண்டைய தமிழரின் இசைக் கருவிகள், தோல் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், மிடற்றுக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என ஐவகைப்படும்.

தோற்கருவிகள் : முருடு, முரசு, தண்ணுமை, பறை, துடி, முழவு, இடக்கை, கிணை

1. முருடு[687]: மத்தளம் போன்றது. பத்தல் என்றும் சொல்லப் பட்டது.
2. முரசு[688]: மயிர்க்கண் முரசு, வீரமுரசு, மணமுரசு என விரியும்.
3. தண்ணுமை[689]: தோற்கருவி. மத்தளம் போன்றதே. பறை, முடிவு என்றும் கூறுவர்.
4. பறை[700]: தொண்டகம், சிறுபறை, ஆறெறி பறை ஆகியவை மலைநாட்டு தோற்கருவிகள்.
5. துடி[701]: தற்கால உடுக்கையை விடச் சிறியது. குறிஞ்சி மக்களின் இசைக்கருவி.

எனத் திரிந்தது. கத்திச் சொல்வது கதை. கதையுடன் இசையும் இணைந்தது கீதா. கதா - கீதா ஆகிய இரு சொற்களுக்குமான மூலச்சொல், கத்து என்பதே. யாழ்ப்பாணத் தமிழர்கள் இப்போதும் கதைத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர்.

Gita[718]: song, chanted, prasied in songs, sacred songs, singing. - Manu, ix : 42.

Gitika[719]: song, a short song, melody, hymn. Mahabharat/ 111:8173.

Giti[720]: A song consisting of 4 lines of 12 and 18 syllabic instants alternatrely. A sans - Eng. Dict., p. 356.

ருக்கு வேதப் படைப்பாளிகள் தமிழர்களே என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். சாம வேதத்தின் மந்திரங்கள் திங்களையும், சோமச் செடியையும் (moon plant) போற்றிப் புகழ்வன. மேலும் சாம வேதத்தின் பெரும்பாலான வரிகள் ருக்கு வேதத்தினின்றே கடன் வாங்கப்பட்டுள்ளன.[721] (Sama veda hymns, especially the latter, besides their own mantras, borrow largely from the Rig Veda - Sans. Dict., p. 1015) சாம வேதத்தின் மொத்த மந்திரங்கள் 1878 ஆகும். இவற்றில் சாமவேதம் கூறும் செய்திகள் 88 மந்திரங்களில் மட்டுமே உள்ளன. மீதம் உள்ள பாடல்கள், ருக்கு - யாசூர் - அதர்வண வேதங்களிலிருந்து கடன் வாங்கப்பட்டவை. இவற்றில் பெரும்பாலான பாடல்கள் ருக்குவிலிருந்து எடுக்கப்பட்டவைகளே.

ஏறக்குறைய 300 முனிவர்கள் சாம வேத மந்திரங்களுக்கு இசையை அமைத்துக் கொடுத்தார்கள் என்பர். “சந்தஸ்” என்ற சொல், ஒழுங்குப்படுத்துதல், வழியை ஏற்படுத்துதல் என்ற பொருளைத் தரும். சந்து - சந்தி என்ற தமிழ்ச்சொல்லே, சந்தஸ் எனத் திரிந்தது. அம்முனிவர்களில் சிறப்பானவர்கள் வாம தேவன், வசிட்டன், கண்ணுவன், விசுவாமித்திரன் ஆகியோ ராவர். வளி மண்டலத்தில் இசையின் ஒலிகள் பரவி இருந்தன. (ஸ்வரங்கள் - சுரம்) என்றும், அவ்வொலிகளுக்கு இசையமைத் தனர் (திரைப்படச் சொல், மெட்டுப் போடுதல் என்பதாகும்) என்பர்.

சாம வேதத்தில் நூற்றுக்கணக்கான சுரங்கள் உள்ளன என்று சிலர் கூறுகின்றனர். இக்கூற்றை மறுத்து ஏழு சுரங்கள் மட்டுமே உள்ளன என்று சிலர் கூறுகின்றனர். இதனை சப்த ஸ்வரங்கள் என்பர். ஷட்ஜம், பஞ்சமம், ரிஷபம், காந்தாரம், தைவதம், நிஷாதம், மத்தியமம் என அவை விளக்கப்படும்.

சாம வேதத்தின் அடிப்படையான செய்தி யாதெனில், தேவர்களை யக்ஞம் (யாகம்) போன்றவற்றிற்கு அழைத்து விருந்து வைத்து, இசைப்பாடல்களால் அவர்களை மகிழ்வித்து, மயக்கி, தமக்கு வேண்டி உதவிகைளப் பெற்றுக் கொள்ளலாம் என்பதே. சாமவேதத்தில் சோமன் என்ற தேவனைப் பற்றிய குறிப்புகள் நிறைய வருகின்றன. சோம யாகத்தைச் சரியாக செய்து முடித்தால் எதனையும் வென்றெடுக்க முடியும் என்பதும், தோல்வி என்பதே வராது என்பதையும் சாம வேதம் சுட்டுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக இராவணனைக் காட்டுகிறார்கள் - சாமவேதத்தின் இசையால், பூவுலகையும் வானுலகையும் வென்றவன் இராவணன்.

சோம யாகம் செய்வது எவ்வாறு?

ஆறு குழிகளை அல்லது குண்டங்களைத் தோண்டிக் கொள்வது முதல் வேலை. அக்குண்டங்களில், அது எந்தத் தேவருக்காகச் செய்யப்படுகிறதோ, அவருக்குப் பிடித்தமான பொருட்களை, அக்குண்டத்தில் இட்டு நிரப்புவது. (முதுமக்கள் தாழிகளில் வைக்கப்பட்ட பொருட்களை ஒப்பு நோக்குக) சோமனை அழைக்க வேண்டும் என்றால் சோமச் செடியை (கஞ்சாச் செடி என்பது சிலரது கருத்து) எடுத்து வந்து, அதனைக் கசக்கிப் பிடித்து சாறு எடுப்பார்கள். அதனைச் சோம ரசம் என்றும் சோம பானம் என்றும் கூறுவர். சாற்றை ஒரு கம்பளித் துணியால் (தசா பவித்திரம் எனப்படும்) வடிகட்டுவார்கள். ஒரு குடத்தில் அல்லது கலசத்தில் அதனை ஊற்றி வைப்பார்கள் (துரோண கலசம் என்பர்). விருந்திற்கு வரும் தேவர்களுக்கு அச்சாற்றினைப் பருக அளிப்பார்கள். தாமும் குடிப்பார்கள். வேதத்தில் சோம ரசம், தேவர்கள் விரும்பிக் குடிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. (தற்காலத்தில் மது விருந்து அல்லது கும்பலாகக் குடிப்பது) யாகம் செய் வோரும், அதில் கலந்து கொள்வோரும்கூட அச்சாற்றைப் பருகுவார்கள். மயக்கத்தில் திளைப்பார்கள்.

முதன் முதலில் இந்திரனுக்குத்தான் அம்மது பரிமாறப் படும். அவன் சுவைத்த பின்னரே, மற்றவர் குடிப்பர். இந்திர னுக்கே முதல் மருவாதி (மரியாதை) இந்தச் சோமன் தொடக் கத்தில் தேவருலகில்தான் இருந்தானாம். அவனைச் சில முனிவர்கள் தேவருலகிலிருந்து பூவுலகிற்கு கடத்தி வந்து விட்டதாகவும் ஒரு தொன்மம் உண்டு. அதற்குக் காயத்திரி பெரிதும் உதவி செய்தாராம்.

பிரசாபதி மூன்று வேதங்களைச் செய்த கதையொன்றும் உண்டு. அம்மூன்று வேதங்களையும், பிரசாபதிக்குத் தெரியாமல், சோமன் திருடிக் கொண்டு ஓடிவிட்டான். பிரசாபதிக்கு சாவித்திரி, சிரத்தை என்ற இரு பெண்கள் இருந்தனர். இவர் களில் சிரத்தையை சோமன் காதலித்தான். சாவித்திரி தன்னையும் ஏற்றுக் கொள்ள வேண்டினாள். சோமன் மறுத்துவிட்டான். சாவித்திரி தந்தையிடம் அணுகி உதவியை நாடினாள். பிரசா பதிக்கு மூளை வேலை செய்தது. மூன்று வேதங்களையும் சோம னிடமிருந்து பெற இதுவே நல்ல சமயம் என்பதை உணர்ந் தான். சோமச் செடியைப் பிழிந்து அவனிடம் கொடுவென மகளுக்கு பிரசாபதி அறிவுரை கூறினான். அவ்வாறே தனது கற்பை சோமனிடம் இழந்த சாவித்திரி, மூன்று வேதங் களையும் கைப்பற்றித் தந்தையிடம் சேர்த்தாள். வேதங்களைத் திரும்பப் பெற பிரசாபதி கையாண்ட உத்தியை மனிதர்கள் செய்தால் அதற்கு வேறு பெயர் கொடுத்திருப்பார்கள்.

சோமனுக்கு தனது 27 பெண்களையும் பிரசாபதி மணமுடித்த கதையும் உண்டு. (அவனைத் தக்ஷன் என்றும் சில கதைகள் கூறுகின்றன). அவர்களில் உரோகிணி மிகவும் அழகா னவள். அவள் அழகில் மயங்கிய பிரசாபதியே அவளைக் கற்பழிக்க முயன்ற கதையும் உண்டு. மற்ற 26 பெண்களும், தங்களை சோமன் சீண்டுவதில்லை என கதிரவனிடம் விண்ணப்பித்தனர். கதிரவன் சோமனைக் கடிந்து காய நோய் (காச நோய் என்பர். இது உடலை இளைக்கச் செய்து, எலும்புக் கூடுபோல் ஆக்கிவிடும்) பற்றுமாறு கூறினான். இதனால் சோமன் மெலிந்து இளைத்துப் பிறகு காணாமலே போய்விட்டான். பிரசாபதி தன் மாப்பிள்ளையைக் காப்பாற்ற கதிவனிடம் சென்று வேண்டினான். அவனும் மனமிறங்கி, தன் சொல்லைத் திரும்பப் பெற்றுக் கொண்டான் (இங்கு வாக் என்ற சமற்கிருதச் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. வாக் - வாக்கு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே). கதிரவனின் உதவியால் மீண்டும் சோமன் உடல் பருத்து நோய் நீங்கினான் என்பது ஒரு கதை.

இது, நிலவு 27 மீன் கூட்டங்களிலும் தங்கிச் செல்வதையும், வளர்பிறை தேய்பிறை போன்ற பக்கங்கள் தோன்றுவதையும் கூறும் வானியல் தொடர்பான உருவகக் கதையே என்க.

இவ்வாறு சோமனை வயப்படுத்தினால் எண்ணியவை வெற்றியாகும் என்ற கருத்தை சாம வேதம் வலியுறுத்துகிறது. இசையும், இசையோடு இணைந்த மந்திரங்களின் வலிமையும் சாம வேதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. சரியான, முறையான விதிகளின் படி சோமச்சாறு அருந்தும் ஒருவன் 17 நாள் முயற்சியில் இறப்பையும் வெல்வான் என்று சாம வேதம் கூறுகிறது. சோமனைப் பற்றிய சாமகானமே சாமவேதம் என்பர். கண்ணன் தன்னை சாமவேதத்தவன் என்று கூறிய தாகவும் குறிப்புகள் உள்ளன.

அதர்வண வேதம்[722]

அதர்வண வேதம் என்பது, மிகவும் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கி.பி. 200 ஆண்டுகள் வரையிலும் கூட, வேதங்கள் மூன்று என்றே குறிப்புகள் கூறுவதால், அக்கால அளவிற்குப் பிறகே அதர் வண வேதம் தொகுக்கப்பட்டது என்பர். இது முந்திய மூன்று வேதங்களுக்கு முற்றிலும் மாறுபட்டது. மூன்று வேதங்களின் செய்திகள் அதர்வண வேதத்திலும் சொல்லப்பட்டிருந்தாலும், இது மனிதனைப் பற்றியே சிந்திக்கின்றது எனலாம். மாந் தனுக்கு ஏற்படும் நோய்கள், தவறான சிந்தனைகள், சுற்றுப் புறச் சீரழிவு, தூய்மை, மனக்கட்டுப்பாடு, நோய்களைக் கண்ட றியும் முறைகள், அதற்கான மருத்துவமுறை ஆகியவைகளைப் பற்றிப் பேசுகின்றது. மூன்று வேதங்களில் சொல்லப்படாத பேய், பிசாசு, பில்லி, சூனியம், வசியம், பகையை வீழ்த்தப் பயன்படுத்தப்படும் மந்திரங்கள் ஆகியவை பற்றிய செய்தி களை அதர்வண வேதம் கூறுகிறது. மன்னனின் போர் முறைகள், நடவடிக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் எனவும் விளக் குகிறது. குறிப்பாக, இயற்கையில் கிடைக்கும் பச்சிலைகளும், உணவும் எவ்வாறு மக்களுக்கு மருந்தாகிறது என்பதையும் கூறுகிறது. மேற்கண்ட செய்திகளை, மந்திரங்களோடு இணைத்து அதர்வண வேதம் கூறுகிறது. மூன்று வேதங்களில் சொல்லப்பட்ட தேவர்களைப் பற்றிய குறிப்புகளும் இதில் உள்ளன.

அதர்வண வேதத்திற்குப் பல பெயர்கள் சொல்லப்பட் டுள்ளன. அதர்வ வேதம், அதர்வ வேத சம்கிதை, அதர் வாங் கீரசம், பிரம்ம வேதம், சத்திர வேதம், அதர்வணம், பைசயக்கிய வேதம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. அதர்வ வேத

சம்கிதையென்பது, மந்திரங்களின் தொகுப்பு என்ற பொருளில் சொல்லப்படுவது. அதர்வ மரபில் தோன்றிய அங்கிரசன் பெயராலும் அழைக்கப்படுகிறது. அதர்வன் என்ற முனிவன், இவ்வேதம் பற்றிய செய்திகளை விரிவாக மக்களுக்கு விளக்கி னார் என்பதாலும் இப்பெயர் வந்ததாகக் கூறுவர். பிரம்ம னுடைய வித்தைகளை, இந்நூல் விளக்குவதால், இது பிரம்ம வேதம் எனப்பட்டது. பகைவர்களை ஒறுப்பது, வெல்வது பற்றிய கமுக்கங்களை அளிப்பதால் சேத்திர வேதம் (சேத்திரர் - பகைவர்) என்றும் சொல்லப்பட்டது. ருத்திரனை நோய் தீர்க்கும் கடவுளாக அறிமுகம் செய்வதால், அதர்வணம் எனப்பட்டது. மருத்துவ முறைகள் பற்றி வேதம் கூறுவதால் பைசயச்சியம் என்றும் அழைக்கப்படுகிறது. இச்செய்திகள் மூலம் தெரிவது என்னவென்றால், நான்காம் வேதத்துக்குப் பெயர் இல்லாமல் இருந்தது என்பதையும், ஒவ்வொருவரும் தத்தம் பார்வையில், பெயர்களைச் சூட்டினர் என்பதும் புலனாகிறது. இதற்குத் துணை வேதங்கள் பல உண்டு. சர்ப்ப வேதம் என அவை விரியும். இவ் வேதத்துக்குப் பல சாய்கைகள் (சாகைகள்) உண்டு. இச்சாய்கைகளை, வடக்கேயிருந்தவர் களே பெருமளவில் பயன்படுத்தியதாகக் கூறுவர். தெற்கே இந்தச் சாய்கைகள் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லையென்றும் கூறுவர். அதர்வண வேதத்துக்கு 31 உபநிடதங்கள் உள்ளன வென்று கூறப்படுகின்றது.

அதர்வண வேதம் பற்றிய விளக்க நூல்கள் கடந்த முந்நூறு ஆண்டுகளில் ஏராளமாக எழுதப்பட்டன. கடந்த 18 ஆம் நூற்றாண்டில், அதர்வண வேதத்தின் மூல நூல் எனச் சொல்லப்பட்ட குறிப்புகள், பிரான்சு நாட்டில் வெளியிடப் பட்டது. இதனை ஆய்வு செய்தவர்கள், குறிப்பாக ரூசோ போன்றவர்கள், இது போலியானது என உரைத்தனர். ஐரோப் பியர்களுக்கு வேதங்களைப் பற்றி அறிய வேண்டும் என்ற உந்துதல் இருந்தது. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஐரோப்பியர்கள், குறிப்பாக செர்மானியர்கள், வேதங்களை ஆய்வு செய்துள் ளனர். பாரம், புளூம் பீல்டு, கிரிப்பத், வெப்பர், ருக்காட் போன்ற மேலை நாட்டவர், அதர்வண வேதத்துக்கு விளக்க நூல்களைத் தந்துள்ளனர். பலர் இவ்வேதத்தைப் போற்றியும், சிலர் தூற்றியும் நூல்களை எழுதினர்.

செர்மானியர்களுக்கு, இந்திய ஆரியர்கள் செர்மனியி லிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்களே என்ற கருத்துண்டு.

அவ்வகையில் இந்திய ஆரியரின் வேதங்கள், செர்மானிய முன்னோர்களால் சொல்லப்பட்டவை எனக் கருதினர். ஆனால், செர்மானிய மொழியில் அதற்கான சான்றுகள் இல்லா ததால், இந்திய ஆரியரின் வேதங்களைத் தம்முடையதாகவே அவர்கள் கருதினர். இந்திய ஆரியத்தைத் தாங்கிப் பிடிப்பதன் மூலம், தமது செர்மானிய இனத்தின் பெருமைகளை உலகிற்கு அறிவிக்க முடியும் என நம்பினர். ஐரோப்பிய இனங்களில் செர்மானிய இனமே மூத்தது என்றும், அது ஆளப்பிறந்த இனம் என்றும் செர்மானியர் நம்பினர். அதன் விளைவுகளே, செர்மானிய அறிஞர்களின் வேத விளக்கங்களாகும். உலகின் மூப்புடைய இலக்கியங்கள் வேதங்களே என்பதை வலியுறுத் தினர். செர்மானியரே கல்வியறிவு நிரம்பப் பெற்ற அறிவாளிகள் என உலகிற்கு உணர்த்த எடுக்கப்பட்ட உத்தியே, வேத விளக்க நூல்களை அவர்கள் எழுத முற்பட்டதற்கான காரணம் ஆகும். கடந்த நூற்றாண்டில் அறியப்பட்ட இட்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார் என்பதின் விளைவே, இரண்டாம் ஞாலப் போருக்கான அடிப்படைக் காரணமுமாகும்.

உண்மையில், வேதங்கள் உலகின் மூப்புடைய இலக்கியங் களா என்பதை ஆராய்ந்த மேலை நாட்டவரே, சில குறிப்பு களைத் தந்துள்ளனர். ருக்கு வேதக் குறிப்புகள், ஆரியர் வருகைக்கு 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியப் பழங் குடியினர் தொகுத்தவைகளே என்பது போனியர் வில்லியம்சு போன்றவர்களின் கருத்தாகும். கி.மு. 6000 ஆண்டுகளில் சொல்லப்பட்டிருந்த வேதக் குறிப்புகள் (அக்காலத்தில் ருக்கு என்றவாறு சொல்லப்படவில்லை) எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டிருந்தனவா என்பதற்கானச் சான்றுகள் இல்லை. இன்றைய வரலாற்று ஆய்வாளர்கள் தரும் ஆய்வுகளின் படி, வேதங்கள் மிகவும் பிற்காலத்தில் பதிவு செய்யப்பட்டவை களே எனத் தெரிய வருகின்றது. வரலாற்றுக் காலத்திலேய (கி.மு. 1000) வேதங்களைப் பற்றிய செய்திகள் வெளியிடப் பட்டன என்பர்.

உலக வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட குறிப்புகளைக் கொண்ட இலக்கியம் எம்மனு எலிசு (Em-manu-elish) என்ற சுமேரிய இலக்கியமே என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய் கின்றனர். இவ்விலக்கியம் கி.மு. 4000 ஆண்டுகளில் அல்லது அதற்கு முன்பு பதிவு செய்யப்பட்டது என உரைக்கின்றனர்.

கி.மு. 4000 ஆண்டுகளுக்குப் பிறகு அறியப்படும் பதிவுகள், எகிப்தியக் குறிப்புகள் ஆகும். மெம்பிசு, அமர்ணா போன்ற (Texts of Memphis and Amarana) எகிப்தியக் குறிப்புகள், கி.மு. 3000 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டவை என்பர். அடுத்ததாக அறியப்படும் இலக்கியம், கில்காமேசு (Gilgamesh) என்ற மெசபத்தோமிய இலக்கியமாகும். இது கி.மு. 2500 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டதாகக் கூறுவர். எபிறேய மொழி இலக்கியமான தோரா கி.மு. 2000 - 1500 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டவையாகும். அக்குறிப்புகளைத் தொகுத்து, மோசே என்ற அவ்வினத் தலைவன், கி.மு. 1250 ஆண்டுகளில் தோராவைப் பதிவு செய்ததாகக் கூறுவர். இக்கால அளவுக்கு முன்னும் பின்னுமாக பாபிலோனிய அசீரிய, உகாரிய, போனீசியக் குறிப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. நூசு (Nuzu) கப்படோசியா (Cappadocia)க் குறிப்புகளும் அக்காலத்தைச் சார்ந்தவைகளே. கிரேக்க இலக்கியங்கள் (ஒடிசி போன்றவை) கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகே பதிவு செய்யப்பட்டவைகளாகும். மேற்கண்ட இலக்கியங்களின் கால அளவுகளை, ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். வேதங்கள், கி.மு. 1200 ஆண்டுகளில் தொகுக்கப்பட்டவை என மாக்சு முல்லர் கருதுகிறார். எனவே, வேதப் பதிவுகள் மேற்சொல்லப்பட்ட பதிவுகளைக் காட்டிலும் மூப்புடையவை என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

தொடக்கக்கால வேதக் குறிப்புகள் (கி.மு. 1000) பதிவு செய்யப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆரியர் வருமுன்னர் சொல்லப்பட்டிருந்த ருக்கு வேதக் குறிப்புகள், உறுதியாக சமற்கிருத மொழியில் சொல்லப்படவில்லை என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். எவ்வாறெனில் சமற்கிருதம் என்ற மொழி கிறித்துப் பிறப்பாண்டுகளில்தான் வளர்ச்சி பெற்று செம்மைப்படுத்தப்பட்டது. குறிப்பாக, கிரேக்கர்கள் வருகைக்குப் பிறகே, சமற்கிருத மொழியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. முறையாக வேதங்கள் எழுத்து வடிவில் பதிவுசெய்யப்பட்டது. கி.பி. 200 ஆண்டுகளுக்குப் பிறகே என்பதையும் ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். எவ்வாறெனில், கி.பி. 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட எந்தப் பதிவுகளும் (கல்வெட்டுகள், சுவடிகள் போன்றவை) இது வரையில் கிடைக்கவில்லை. மாறாக, தமிழ் உள்ளிட்ட வட இந்திய மொழிகளில் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

இந்தியாவில் கிடைத்துள்ள ஓரிலக்கத்துக்கும் மேலான தொல்லியல் சான்றுகளில், தமிழ் மொழியில் மட்டுமே 65000க்கு மேற்பட்ட பதிவுகள் இருப்பதாக அண்மையில் தொல்லியல் துறைக் குறிப்புகள் கூறுகின்றன.

சிந்துவெளித் தமிழ் கி.மு. 10000 ஆண்டுகளில் நடைமுறையில் இருந்தது என்றாலும், இலக்கிய அளவில் எந்தப் பதிவுகளும் கிடைக்கவில்லை. எழுத்துகளின் கூட்டாகிய சொற்களின் அடிப்படையில் இதுவரையிலும் 5000க்கும் மேற்பட்ட சிந்துவெளித் தமிழ்ச் சொற்கள் பதிவு செய்யப்பட்டு, அவை நூல் வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிந்துவெளித் தமிழ்ச் சொல்லுக்கும் எண்களைக் கொடுத்து, தற்கால ஆய்வாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர். இதுபோன்று சமற்கிருதச் சொற்களைப் பற்றிய குறிப்புகள் கி.பி. 200க்கு முன்பு, இந்தியாவில் எங்கும் கிடைக்கவில்லை. சமற்கிருத மொழி மீதும், ஆரியச் சமயத்தின் மீதும் பற்று கொண்டிருந்த பலர், ஊகங்களின் அடிப்படையில், பல்வேறு தவறான செய்திகளையே பதிவு செய்தனர். எடுத்துக்காட்டாக, இராமன் 1,74,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தான் என்ற குறிப்பு, மிகையாகச் சொல்லப்பட்டதே.

தற்கால ஆய்வு நோக்கில், வேதங்கள் ஆராயப்படும் போது, அதர்வண வேதம் கி.பி. 200 ஆண்டுகளுக்குப் பிறகே தொகுக்கப்பட்டது என்பதை அறியலாம். அதர்வண வேதத்தின் துணை வேதங்களான சர்ப்ப வேதம், பைசாச வேதம், அசுர வேதம், புராண வேதம், ஆயுர் வேதம், யந்திர தந்திர வேதம் ஆகியவை, ஆரியத் தொடர்பை விடுத்து, தென்னிந்தியத் தொடர்பான தலைப்புகளாகவே உள்ளன. குறிப்பாக அசுரர் வேதம் என்ற பெயர், அது தமிழர் வேதம் என்பதையே உறுதி செய்கின்றது. சர்ப்ப வேதம் என்பது, நாகர்களின் வேதம் எனக் கொள்ள இடம் தருகிறது. ஆயுர் வேதம் என்பது, ஆயுள் வேதம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகவே உள்ளது. யந்திர (Mechanical), தந்திர (magical), மந்திர (devotional)ச் செய்திகள் பற்றிய குறிப்புகள் தமிழில் பெருமளவில் அறியப்பட்டுள்ளன.

சமற்கிருதத்தில் அறியப்படும் 18 புராணங்களும், தமிழினின்றும் மொழி மாற்றம் செய்யப்பட்டவைகளே. அப்புராணங்களில் சொல்லப்படும் செய்திகள் அனைத்தும் தமிழ் நாட்டுச் சூழல்களையே குறிப்பிடுகின்றன. தமிழரின் வழக்குகளையும்

வழக்காறுகளையுமே கொண்டுள்ளன. புராணக் கடவுளர் அனைவரும் தமிழ்க் கடவுளராகவே உள்ளனர். புராணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், தமிழ்த் திரிபுச் சொற்களாகவே உள்ளன. எனவே, சமற்கிருத புராணங்கள், தமிழர் சொல்லி வந்த தொன்மக் கதைகளின் மொழி பெயர்ப்பே என உறுதியாகக் கூற இயலும். இவ்வாறு மொழி மாற்றம் செய்யப் பட்டபோது, பல இடங்களில் தப்பும் தவறுமாக, உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ளாத நிலையில், கதையின் போக்கையே அம்மொழி பெயர்ப்புகள் மாற்றியுள்ளன. (திருவல்லிக் கேணி, ஆகம மொழி பெயர்ப்பு அதற்கான எடுத்துக்காட் டாகும்.)

எனவே, அதர்வண வேதம் என்பது, தமிழ்ச் சித்தர்களின் பதிவுகளை மொழி மாற்றம் செய்த நூலே என்பதை, அதர்வண வேதத்தை உன்னிப் பார்ப்பவர்களால் உணர முடியும். தம்பங்கிற்கு இடையிடையே பல தகவல்களை ஆரியர்கள் இணைத் துள்ளனர். ஆரியர்களுக்கு இருந்த மருத்துவ அறிவு, இயந்திர வியல் அறிவு, வானியல் அறிவு பற்றிய செய்திகள், யாசூர் மற்றும் சாம வேதத்தில் காணப்படவில்லை. அணுக்களைப் பற்றிய எந்தக் குறிப்பும் விளக்கமும் வேதங்களில் இல்லை. அவை ஐம்பூதங்களாகச் சொல்லப்பட்டுள்ளன என்பதைத் தவிர்த்து, அணுவின் அறிவியல் தன்மைகள் வேதங்களில் விளக் கப்படவில்லை. இந்தப் பின்னணிகளைக் கருத்தில் கொண்டே, அதர்வண வேதத்தை நாம் நோக்க வேண்டியுள்ளது.

தமிழ்ச் சித்தர்கள் எனப்படும் அறிஞர்கள், இடைக் காலத்தில் அறியப்பட்டவர்கள் தொல்தமிழ் மருத்துவம் கூறிய உண்மைகளை அழிந்து போகாமல் பாதுகாத்தவர்கள். சித்தர்கள் தந்த குறிப்புகளில், செய்திகள் மறைபொருளாகச் சொல்லப் பட்டன. மருத்துவ முறைகளைத் தவறாகப் பயன் படுத்துவோ ரிடமிருந்து மருத்துவத்தைக் காக்கவே அவ்வாறு மறைபொரு ளாக எழுதி வைத்தனர் என்பர். தமிழ் மருத்துவம் சொல்லும் அடிப்படையான கருத்து யாதெனில், உலகிலுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் அனைத்தும் நால் வகை அணுக்களின் காட்டே என்பதுதான். தீ, நீர், வளி, நிலம் என அறியப்படும். இந்நான்கு வகையான அணுக்களும் ஒவ்வொரு உயிரிலும், மரம் செடி கொடிகளிலும், விலங்கு களிலும், மாந் தனிலும் கலந்துள்ளன. அணுக்களின் காட்டே பொருட்

களாகப் புலப்படும். ஒவ்வொரு பொருளிலும் உள்ள அணுக் களின் அளவுகள் மாறிமாறி இருக்கும். அவ்வாறே உயிரற்ற கல், களிமண், மரக்கட்டை போன்றவைகளும் அணுக் களின் கூட்டால் ஆனவைகளே. மரம் செடி கொடிகளும் புற்பூண்டு களும் தத்தமக்குரிய அணுக்கூட்டைப் பெற்றி ருக்கும். எனவே, உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும், ஒன்றோடொன்று தொடர்புடையவைகளே. இந்நான்கு வகை அணுக்களால் ஆன அனைத்தும், ஒன்றையொன்று ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளே.

நாம் உண்ணும் உணவு, பல்வேறு தாய்வரங்கள் வழியே கிடைக்கின்றது. பழங்கள், காய்கறிகள், பச்சைக் கீரைகள் என அப்பட்டியல் நீளும். பொன், வெள்ளி, இரும்பு, செம்பு போன்ற கனிமங்களும், நமக்கு மருந்தாகப் பயன்படுபவை களே. தமிழ் மருத்துவம் என்பது எந்தெந்த பொருட்களில், எவ்வகையான அணுக்களின் திரட்சியுள்ளன, அவற்றை மாந்தன் தனது உடல் நலத்துக்கு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என விளக்குவதே. நஞ்சு என்ற பொருள் உலகில் எதுவுமில்லை. மாந்த உடலுக்குத் தேவையான அளவைவிட, மிகுதியானவற்றை எடுத்துக் கொள்வதே நஞ்சு எனப்படும். ஒவ்வொரு பொருளின் உள் கூட்டுக்குள் என்னென்ன பொதிந்து கிடக்கின்றன என்பதை விளக்குவதே தமிழ் மருத்துவம் ஆகும். இதன் வழியே, உலகில் உள்ள அனைத்து உயிரினங்கள், தாய்வரங்கள், நீரினங்கள், கனிமங்கள் பற்றிய தெளிவான அறிவை தமிழ் மருத்துவம் விளக்குகின்றது எனலாம். இதனைச் சரியான முறையில் ஆய்வு செய்து அளிப்பவர்களே மருத்துவர்கள் எனப்பட்டனர். உடலிலுள்ள உறுப்புகளின் செயல்பாடுகளையும், குறைபாடு களையும் கண்டறிந்து, குறைகளை நிறைகளாக்கி உடலைத் தேற்றுவதே தமிழ் மருத்துவமாகும். இதயத் துடிப்பைக் கண்டறிய நாடி பார்த்தறிதல், மருத்துவத்தின் முதல் நிலை யாகும். உடலில் உள்ள நோய் இன்ன தென்பதை, இதயத் துடிப்பு வெளிப் படுத்துகிறது என்பதை பட்டறிவால் உணர்ந்த வர்கள் தமிழ் மருத்துவர்களாவர். எலும்பு முறிவுக்கும் இயற்கை மருத்துவம் செய்தனர். வாளால் அறுத்துச் சுடுதல் என்பது அறுவை மருத்துவமாகும். இன்றைய ஐரோப்பிய மருத்துவ முறையின் முன்னோடி தமிழ் மருத்துவமே. நோயைக் குணப் படுத்துவது ஆங்கில முறை. நோயின் மூலத்தை அறிந்து, அம்மூலத்தையே சரிசெய்து குணப்படுத்துவது தமிழ்முறை.

மருத்துவக் குறிப்புகளை மறை பொருளாய்க் கூறுவதென்பது, தமிழ்ச் சித்தர்களின் மரபாக இருந்தது. வள்ளலாரும் இத்தகைய மருத்துவ முறைகளைப் பற்றிக் கூறுகிறார்.

வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில் குயிலாச் சுதடி

என்ற பாடல், ஏதோ மயிலைப் பற்றியும், குயிலைப் பற்றியும் வள்ளலார் கூறியதாகக் கருதக் கூடாது. நஞ்சானது உடலில் பாயும்போது நீல வண்ணமாகும் என்றும், நச்சுத் தன்மை மிகுந்தால் கருமை நிறமடையும் என்பதே இதன் பொருள் எனக் கூறுவர். அவ்வாறே, தமிழ் மருத்துவத்தின் மறைபொருள் இலக்கணத்தை அதர்வண வேதம் கூறுகிறது. அதர்வண வேதத்தில் 5847 மந்திரங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இவைகளை மந்திரங்கள் என்று கூறுவதைவிட, செய்திகள் எனக் கூறுவதே பொருத்தமானது.

தமிழில் மாடு என்பதற்கு, பசு, எருது, இடம், பக்கம், செல்வம், பொன், பொருள், மணி என விரியும். வள்ளுவர் கல்வி கற்பதனால் என்னென்ன பயன் விளைகின்றனவோ, அவற்றையெல்லாம் மாடு என்றே குறிப்பிடுகிறார்.

வேதத்தில் அதுபோல் பசு என்பதற்கு செல்வம், உலகம், வானம், ஒளி, திசை, கதிரவன், உறவு, மேகம், பேரண்டம், விஷ்ணு, பிரசாபதி, தேவர்கள், மாந்தர், மொழி, புகழ், போற்றுரை, வைரம், நீர், காளை, அறிவு, நிலவு, மனை, காயம் என விரியும். சொல்லுமிடத்துக்கு ஏற்ற பொருளை ஊகம் செய்து கொள்ளவேண்டும். பசு என்பதற்கு பெண் குறி என்ற பொருளும் உண்டு. பசுமை என்ற சொல்லுக்கு வளமை என்ற பொருள் உண்டு. பச்சைப் பசுமை என்ற வழக்கை நோக்குக. பசுமை - பசு என்றவாறு திரிந்து வளமையையும் குறித்தது.

இடவு என்பதற்கு பிளப்பு என்ற பொருளுண்டு. தரையை இரு நிலைபடுத்தி பாதையைத் தோற்றுவிக்கும் வழியையும் இடவு என்பர். காற்குளம்பு, இரு குளம்புகள் (காளை) உள்ள விலங்குகளும் இடவன் என்றே சொல்லப்படும். (புரவி ஒரு குளம்புள்ளது) வழிப் பயணத்துக்கான விலங்கு காளை. இடவன் என்பது காளைக்கும் பொருந்தும். சிவன் முன்னால் செல்வதற்கு வழியை மறைத்து நிற்பதும் காளையே. எனவே இடவம் என்பது வழி, இடையில் உள்ளது. காளை என்றவாறு

பொருள் கொள்ளப்பட்டது. இடவம், ரிஷபம் என சமற் கிருதத்தில் திரிந்தது.

அதர்வண வேதம் நோய்களையும், அந்நோய்களைக் குணப்படுத்தும் முறைகளையும், அதற்கான தகுதியுடையவை களையும் விளக்குகின்றது. நீர் அனைத்து உயிரினங்களுக்கும் தேவையானது. நீரின்றி அமையாது உலகு. நீர் மருத்துவ குணம் கொண்டது. உணவும் கூட எனக் கூறலாம். நீரினால் பல்வேறு நோய்களை விலக்க இயலும். வெட்டுப் புண்ணுக்கு ஆல் குடும்ப மரத்து இலைகளும், சூரிய ஒளி கண்ட மாலைக்கும், காமாலைக்கும், மருந்து என வேதம் கூறுகிறது. நீராலும், நிலத்தாலும், காயத்தாலும், கனவாலும் நோய்களை நீக்கும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. விலங்குகளை வயப்படுத்தும் முறைகளும் சொல்லப்பட்டுள்ளன. கதிரவன், நிலவு, விண் மீன்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் கதிர்களையும், திறமையுடன் ஈர்ப்பதன் மூலம் நோய்களை வெல்லலாம். ஆறு, குளம், கடல் போன்ற நீர் வளம் மிக்க இடங்களிலிருந்தும் நோயை நீக்கும் மருந்துகளைப் பெறலாம். பெண்களை வயப் படுத்தி அவர்களுடன் நீண்ட நேரம் புணர்வதற்கான வழி முறைகளும் உண்டு. உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி மேற் கொள்ளப்படும் பயிற்சிகள், நெடிய புணர்ச்சிக்கு வழிகாட்டு கின்றன. உயிரணுவை வேண்டும்போது வெளிப்படுத்தும் வித்தைகள் பற்றிய குறிப்புகளும் உண்டு.

தமிழர் வகுத்த நான்கு நிலங்களிலும் கிடைக்கும் பச்சிலைகள் பற்றிய குறிப்புகள் சித்தர்களின் பதிவுகளில் காணப்படுகின்றன. எண்ணிலடங்காத இலைகளைப் பற்றிய அறிவும் தெளிவும் சித்தர்களுக்கு இருந்தது. அவ்விலைகள் பற்றிய குறிப்புகளும் மாற்றுச் சொற்களாலும், மறைபொரு ளாலும் விளக்கப்பட்டுள்ளன. இரும்பைப் பொன்னாக்கும் வித்தையைக் கூட சித்தர்கள் செய்து காட்டியுள்ளனர். மரபுகள் தோறும் பரிமாற்றம் செய்யப்பட்ட மூலிகைகள் பற்றிய அறிவினை சித்தர்கள் பெற்றிருந்தனர். நஞ்சை ஊட்டவும் விலக்கவும் அவர்கள் கற்றிருந்தனர். இதனால் மக்களின் நோய்களை நீக்கி, அவர்களது வாழ் நாட்களை நீட்டித்துத் தந்தவர்கள் சித்தர்கள். ஆயுளை நீட்டும் வித்தையே, ஆயுள் வேதம் எனப்பட்டது. ஆயுள் வேதம் - ஆயுர் வேதம் எனத் திரிந்தது என்க. ஆயுள் என்பது தமிழ்ச் சொல்லே.

ஆயா என்ற தமிழ்ச் சொல்லை அறியாதவர்கள் இல்லை. நீண்ட காலம் வாழ்ந்திருக்கும் பெண்மணியை ஆயா என அழைக்கிறோம். ஆய் என்ற சொல்லுக்கு, நீண்ட, நெடிய என்ற பொருளும் உண்டு. ஆய் - ஆயா - ஆயன் - ஆயுள் (ஆய்உள்) ஆகியவை தமிழ்ச் சொற்களே. அதர்வண வேதம் கூறும் மருத்துவ முறைகளில் ஆயுர்வேதமும் ஒன்றாகும். இதனை ஆரிய மருத்துவம் எனச் சிலர் தவறாகக் கருதிவிட்டனர். ஆயுர்வேதம் ஆரியருடையது என்றும், சித்தமருத்துவமே தமிழருடையது என்றும் சிலர் கூறுவர். இரண்டுமே தமிழ் மருத்துவ முறைகள் தாம் என அறிதல் வேண்டும்.

பச்சிலைகள் பற்றிய தெளிவான அறிவு தமிழர்களிடம் இருந்தது. பச்சிலைக்கு வலிமை எங்கிருந்து கிடைக்கிறது. அது கதிரவனிடமிருந்தே கிடைப்பதாக சித்தர்கள் கருதினர். கதிரவனின் ஆற்றலை ஈர்க்கும் திறன் தாய்வரங்களுக்கு உண்டு. அவ்வாற்றலை ஈர்த்தே அவை உணவு கொள்கின்றன. இலை களில் காணப்படும் பச்சையம் என்ற பொருளை கதிவரனின் ஆற்றலிலிருந்தே இலைகள் உண்டாக்கிக் கொள்கின்றன. மரம் செடி கொடிகளுக்குத் தெரிந்த அந்த வித்தையை மனிதனும் அறிந்திருந்தான். கதிரவனின் ஒளியையும், காற்றையுமட்டுமே உணவாகக் கொண்டு உயிர் வாழ்ந்திருந்த சித்தர்கள் இருந் தனர். இதற்கு முறையான பயிற்சியும் மனக்கட்டுப்பாடுமே அடிப்படையானவை என்று சித்தர் தொன்மங்கள் கூறுகின்றன. இவையின்றி நெருப்பு, மின்னல், மேகம், முழுநிலவு நாளிலும், சூரியனின் - நிலவின் ஆற்றல்கள் பெருமளவில் வெளிப்படுவ தாகக் கூறுகின்றனர். மறைப்பு நாளில் (கிரகணம்) கூடுதலாக வெளிப்படும் என்பர்.

அதர்வண வேதத்தில் சொல்லப்பட்டுள்ள பச்சிலைகள் ஏராளமாக உள்ளன. அவைகள் சமற்கிருதப் பெயர்களால் சொல்லப்பட்டுள்ளன. அவை யாவும் தமிழ்ப் பெயர்களைக் கொண்ட தமிழ் மருத்துவ மூலிகைகளே எனலாம். குமரிக் கண்டத்தை இலமூரியா என மேலை நாட்டவர் அழைப்பர். அக்கண்டத்தில் ஏராளமான மூலிகைகள் கிடைத்தன என்ப தால், இலைமுறிவு என்ற சொல்லே, இலமூரியா எனத்திரிந்தது என்பதும் சிலரது கருத்தாகும்.

நோய்கள் மருந்துகளாலும் மருத்துவத்தாலும் மட்டுமே நீங்குவதில்லை என்றும் தீராத நோய்களை நீக்க மருத்துவர்கள்

எடுக்கும் முயற்சிகள் சில நேரங்களில் பயனளிப்பதில்லை என்றும் சொல்லப்படுவதுண்டு. மருத்துவர்கள் சரியான முறையைக் கையாளவில்லையென்பதால், நோயாளி இறந்து போனான் என்று கூறி, இக்காலத்தில் பலர் போராட்டங் களிலும் ஈடுபடுகின்றனர். அதர்வண வேதம் மருத்துவர்களைக் குறைசொல்வதில்லை. நல்ல மருத்துவரையே நாம் நாடிச் செல்கிறோம். சில நேரங்களில் இடது கண்ணில் அறுவை செய்வதற்குப் பதிலாக, நன்றாக இருக்கும் வலது கண்ணில் அறுவை செய்து விடுகிறார். வயிற்றில் ஊசியையோ, கத்திரிக் கோலையோ வைத்துத் தைத்து விடுகிறார். தவறான மருந்தைக் கொடுப்பதால், நோய் பக்கவிளைவுகளால் கடுமையாகி விடுகிறது. இதற்கெல்லாம் மருத்துவரைக் குறை சொல்லக் கூடாது என்கிறது அதர்வண வேதம். நோயாளியின் முன் வினைப் பயனாலேயே மருத்துவர் தவறான முறையைக் கையாள்கிறார் என்கிறது வேதம். (இக்கால மருத்துவர்கள் தாம் செய்யும் தவறுகளுக்கு அதர்வண வேதத்தைச் சான்றாகக் காட்டலாம்.)

திருமணம் தொடர்பான சமய நோக்குகள் ஒருதலைப் பக்கமானவையே. கடந்த கால வரலாறுகளை நோக்கும்போது, அனைத்து நாகரிகங்களிலும் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டே வந்துள்ளன. பெண்ணடிமைத் தனம் பற்றி இன்று பலரும் பேசி வருகின்றனர். நமது முன்னோர்கள் தம் மரபினருக்குக் கொடுத்துவிட்டுப் போன ஆதிக்க சிந்தனை, ஆண்களிடம் நிறையவே காணப்படுகின்றது. தமிழர் சமயத்தில் இறைவன் தனது ஆற்றலில் அரைப்பகுதியை இறைவிக்கு அளித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்திய நாட்டினர் தாய்நாட்டையும், மலைகளையும், ஆறுகளையும் பெண் தெய்வங்களாகவே கருதி வந்தாலும், சமூகத்தில் பெண்ணிற்கு உரிய இடம் இன்னும் கூட கிடைத்துவிடவில்லை. விதிவிலக்கு களாக அறியப்படும் சில பெண்களை முன்னிறுத்தி, பெண் களுக்கு விடுதலை கிடைத்து விட்டதாகச் சொல்லவும் முடியாது.

அதர்வண வேதமும் மற்ற சமய இலக்கியங்களைப் போல, பெண்களை ஆதிக்க சிந்தனையுடன் தான் நோக்கு கின்றது. திருமணமானவர்கள், எக்காலத்தும் பிரிந்து போகக் கூடாது என்ற அறிவுரை, பெண்களையே பெரிதும் சுட்டு கிறது. வேதங்களில் பிரம்மச்சரியம் என்ற நிலை சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. ஒரு பிராமணன் ஆறு அல்லது ஏழு வயதில்

பிரம்மச்சரிய நிலையை அடைவதாக வேதம் கூறுகிறது. அப்போது அவனுக்கு உபநயனம் என்கிற சடங்கு செய்யப் படுகிறது. காயத்திரி மந்திரத்தை அவனுக்குக் கற்பிக்கின்றனர். அதனை அவன் நாள்தோறும் சொல்லி வரவேண்டும். அந்த வயதில் அம்மந்திரத்தின் பொருள் அவனுக்குத் தெரியுமா என்பது பற்றி எவரும் கவலைப்படுவதில்லை. கிறித்துவ சமயத் தில் ஏறக்குறைய இதுபோன்ற ஒரு சடங்கு இதே வயதுள்ள ஆண் பெண் ஆகிய இருபாலாருக்கும் அறிமுகம் செய்யப்படு கிறது. கிறித்துவ சமயத்தின் மெய்யியல் செய்திகளை அவர் களுக்கு கற்பிப்பார்கள். அதன் பொருளை அந்த அகவையில் அவர்களால் புரிந்து கொள்ள இயலுமா என எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

பிரம்மச்சரியம், திருமணம் என்கிற கிரகஸ் தன் ஆகின்ற வரையில் தொடர்கின்றது. கிரகம் என்பது வீடு அல்லது இல்லம் எனப்படும். திருமணத்துக்கு முன்பு மணமகன் நடத் தும் ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறது. பிள்ளையாண்டான் தனக்குத் திருமணமே வேண்டாம் என்று சொல்லிவிட்டு, சந்நியாசம் (துறவு) மேற்கொள்ளப் போவதாகக் கூறி தெரு வழியே நடந்து போவான். பெண்ணின் தந்தை அவனை வழிமறித்து, தன் பெண்ணை ஏற்றுக் கொள்ளும்படிக் கூறி, துறவு முடிவைக் கைவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள் வார். இதற்கு ஜான வாச ஊர்வலம் என்று பெயர். திருமணத் தின்போது, தந்தை தனது மகளை மகணமகனுக்கு தானம் (கொடை) செய்து தருவார். இதற்குக் கன்னிகா தானம் என்று பெயர். தந்தையின் பிடியிலிருந்த பெண், கணவனின் பிடிக்குள் சிக்கிக் கொள்கிறாள். வேத காலத்தின் பெண், தனக்கேற்ற கணவனைத் தேர்வுசெய்ய, வேதவிதிகள் இடம் தரவில்லை. பெண்ணை தானம் செய்வது போன்று, பிள்ளையைப் பெற் றவன் தானம் செய்வதில்லை. ஒருவனுக்கு எவற்றையெல்லாம் கொடையாக (தானமாக)த் தரலாம் என்பதையும் வேதம் விளக்குகிறது. அவற்றில் பெண்ணும் ஒன்று. தானங்களில் இவள் மட்டும் தான் ஆறறிவுள்ள பொருளாக வேதம் கருதுகிறது.

சூரியா என்ற தன் பெண்ணை, சோமனுக்குத் தர சவிதா என்பவன் முடிவு செய்தான். அதன்படி சவிதா கன்னியாதானம் செய்து கொடுக்க, சோமன் அதனை ஏற்றுக் கொண்டான் என்று வேதம் கூறுகிறது. (அதர்வ வேதம் 14:1:9). வேதகாலத்தில்

பெண்களுக்கான எந்த உரிமையும் வழங்கப்படவில்லை யென் பதையும், கணவன் இறந்து பட்டால் மறுமணம் செய்து கொள்ள அவள் அனுமதிக்கப்படுவதில்லை யென்பதையும், மாறாக மனைவி இறந்தாலோ (இருந்தாலோ) ஆண் திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் வேதம் கூறுவது, ஆதிக்க சிந்தனைகளையே காட்டுகிறது.

யூதர்களிடையே ஒரு வழக்கம் உண்டு. ஒவ்வொரு நாளும் இரவில் உறங்கச் செல்லுமுன் கணவன் மனைவி இருவரும் கடவுளிடம் வேண்டுவர். கணவன் இவ்வாறு கூறுவான், "இறைவா! என்னைப் பெண்ணாகப் படைக்காமல் ஆணாகப் படைத்ததற்கு நன்றி கூறுகிறேன்." பெண்ணோ, "இறைவா, என்னைப் பெண்ணாகப் படைத்து, என் கணவனுக்குப் பணிவிடை செய்ய உதவியதற்கு நன்றி," என்று கூறுவாள். உலகின் எந்த இனமும் பெண்களுக்கான உரிமைகளை வழங்கவில்லை என்பதையே யூத சமயமும் விளக்குகின்றது.

வேத காலத்தில்தான் வரனுக்கு தட்சிணை அளிக்கும் முறை (கேடு) தோன்றியது எனக் கூறலாம். திருமணத்துக்கு முன்பே, இரு வீட்டாரும் பேசி முடிவு செய்தபடி வரதட் சிணையை மணமகன் இல்லத்திற்கு அனுப்பி வைத்துவிட வேண்டும். அக்காலத்தில் வரதட்சிணை என்பது, கால்நடை களே, குறிப்பாகப் பசுக்களே. இந்த பசுக்களை இருவர் மணமகனின் இல்லத்திற்கு ஓட்டிச் சென்று கொடுப்பார்கள். அந்த இருவரும் அசுவினித் தேவர்களை நினைவு படுத்து பவர்கள். பசு மாட்டோடு வருவதால் தான் அவள் மாட்டுப் பெண் எனப்பட்டாள். தனது தந்தையின் இல்லத்தில் வளர்ந்த பசு, புதிய வீட்டில், பெண்ணிற்குத் தோழமையாய் இருக்கும் என்பர்.

தந்தை தன் மகள் மணமகன் வீட்டிற்குச் செல்லும்போது, "மகளே! நீ எப்போதும் உன் கணவனுடன் மகிழ்ச்சியாய் இரு. அவனை எந்தச் சிக்கலிலும் மாட்டி வைத்துவிடாதே", என்று கூறி வழியனுப்பி வைப்பான். இந்த புதுப்பெண்ணைப் பற்றி அதர்வண வேதம் கூறும் மற்றொரு செய்தி, "இந்த இரண்டு கால்களையுடைய, அழிவைத் தரும் அரக்கி, மணப்பெண் என்ற உருவில், கணவன் வீட்டிற்கு வந்திருக்கிறாள். மணமகனே! கணவனே! எச்சரிக்கையாய் இரு", என்பதாகும்.

கணவனின் உடைகளை மனைவியோ, மனைவியின் ஆடைகளை கணவனோ பயன்படுத்தக் கூடாது என வேதம் சொல்கிறது. தலையில் முக்காடு போட்டுக் கொண்டு, உடல் முழுவதையும் மறைத்துக் கொண்டிருப்பதே பெண்ணின் அழகை மேலும் உயர்த்தும் என்கிறது வேதம். பெண் தனது சேலையை இரண்டு கால்களுக்கும் குறுக்கே நுழைத்து கட்டிக் கொள்ள வேண்டும் (மடிசார் என்பர்) என்பது விதி. இதற்கான காரணம் அருவருப்பானது. தற்காலத்துப் பிராமணப் பெண்கள் அந்த விதியை முழுக்கால் சட்டை அணிந்து கடைப்பிடிக்கி றார்கள் போலும்!

திருமணத்துக்கு முன்பு பெண்களுக்கான ஒரு கல்விமுறை இருந்தது. அது அறிவு சார்ந்ததாக இல்லை. சமையல் சார்ந்த தாகவே இருந்தது. அதர்வண வேதம் கூறும் அந்த முறைதான் தற்காலத்திய கேட்டரிங் டெக்னாலஜி என்று கூறுகிறார்கள்.

1. எப்படி சமையல் செய்வது என்பதை (பாக சாஸ்திரம்) பெண் அறிந்திருக்க வேண்டும்.
2. சமைக்கப்படும் உணவில் பித்தம் குறைவானதாக இருக்க வேண்டும்.
3. கசப்பான உணவு பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.
4. உடல் நலத்தைக் கெடுக்கும் உணவு எது என்பதை அறிந்திருக்க வேண்டும்.
5. எது மெல்ல மெல்ல உயிரைக் கொன்று விடும் என்பதைத் தெரிந்திருக்கவேண்டும்.
6. உண்ணத் தகாதவைகளை உணர்ந்திருக்க வேண்டும்.
7. சேர்க்கக் கூடாதவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளில், எந்த உணவைத் தந்தால் கணவனின் உயிரைப் பறிக்கலாம் என்பதையே முதலில் கற்றுக் கொடுக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

பிரம்மா தனது படைப்பின் போதே, இவனுக்கு மனைவி இவள்தான் என்று உறுதிப்படுத்தி விடுகிறார். அதனால், எந்தத் தடைகள் வந்தாலும் அத்திருமணம் நடந்தே தீரும் என்று வேதம் கூறுகிறது. இன்று காவல் நிலையத் திருமணங்களும்,

பிராமண சாதியினர் மற்ற சாதியினரோடு செய்து கொள்ளும் (காதல்) திருமணங்களும் கூட, பிரம்மாவின் விதிப்படியே தான் நடக்கின்றன என்பதை பிராமணர்கள் மட்டும் ஏற்றுக் கொள்வதில்லை. தற்காலத்திலும் கூட, ஆதித் தமிழ்ப் பையன், பிராமணப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதில் சிக்கல்கள் வருவதில்லை. பிராமணப் பையனைத் திருமணம் செய்து கொள்வதில்தான் சிக்கல்கள் தோன்றுகின்றன. பிரம்மா, ஒருவனுக்கு ஏற்ற பெண்ணை படைத்து எங்கே வைத்திருக்கி றான் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது. அதற்கான வழிதான் சாதகம் பார்ப்பது. ஆணுக்கும் பெண்ணுக்கும் 10 பொருத் தங்கள் உள்ளன என்பர். பிரம்மா, தனது படைப்பில் பெண் ணுக்கும் ஆணுக்கும் அந்தப் பத்துப் பொருத்தங்களும் சரியாகப் பொருந்தும் படியாகவே படைத்திருப்பான். அவனைத் தேடிக் கண்டுபிடிப்பதில் சிக்கல் இருப்பதால், பத்துக்கு ஆறு பழுதில்லை என்று தங்களையே தேற்றிக் கொண்டு பொருத் தத்தை முடித்து விடுகின்றனர். இவ்வாறு பிரம்மாவின் திட்டம் நிறைவேற்றப்படாததால் தான் கணவன் மனைவி மணவிலக்குக் கோருகின்றனரோ என்று தெரியவில்லை. எலிசெபத் டெய்லர் என்ற நடிகை, ஏழு முறை திருமணம் செய்து கொண்டதாகக் கூறுவர். அவையெல்லாம் எந்த விதிப்படி நடந்தன என்பதும் தெரியவில்லை.

யூத சமய இலக்கியமான தோரா, ஆணை (கணவனை) இச என்றும், பெண்ணை (மனைவியை) இசா என்றும் கூறுகிறது. இவ்விரு சொற்களும் எபிறேய மொழிச் சொற்களாகும். இவை, இசை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. கணவனும் மனைவியும் இசையுடன் வாழ வேண்டும் என்பதையே அச் சொற்கள் விளக்குகின்றன. இசைபட வாழ்தல் பற்றி வள்ளுவர் குறிப்பிடுவதை ஒப்பு நோக்குக.

பெண்ணிற்கு அழகு விருந்தோம்பலே என்று வள்ளுவர் கூறுகிறார். விருந்தோம்பலைப் பற்றி வேதம் விரிவாகக் கூறுகிறது.

1. விருந்தினரைத் தன்னிலும் உயர்ந்தவராகக் கருத வேண்டும்.
2. விருந்தினைரப் பெறுவது இல்லறக் கடமையாகக் கருதவேண்டும்.
3. விருந்தினரின் விருப்பப்படியே நடந்து கொள்ளவேண்டும்.
4. எப்போது ஊருக்குச் செல்ல இருக்கிறீர்கள் எனக் கேட்கக் கூடாது.

5. விருந்தினரை, தன் தெய்வம் வந்திருப்பதாகவே கருதவேண்டும்.

6. இந்திரனாக, வருணனாக, சோமனாக, பிரஜாபதியாக, அக்கினி யாக என்ன வேண்டும்.

வேதங்கள் – பொதுக்கருத்து[723]

வேதங்களைப் பற்றியும் ஆரியர்கள் பற்றியும் மிகை யான, தவறான செய்திகளை மேலை நாட்டவர் பதிவுசெய்து விட்டனர். இந்தியாவின் தொன்மையான வரலாற்றை அறியாத வர்கள், குறிப்பாகத் தமிழர்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளாதவர்கள் ஒரு சில ஐரோப்பியரின் குறிப்புகளை மூலமாகக் கொண்டு, வேதங்களைப் பற்றி எழுதியுள்ளனர். வின்சென்ட் ஸ்மித் என்ற வரலாற்றாய்வாளர், இந்திய வரலாறு, தமிழ் நாட்டிலிருந்து தொடங்காத வரை, அது முழுமையான வரலாறாக இருக்காது எனக் கூறினார். பண்டிதர் நேருவும் கூட, இந்திய வரலாற்றை வடக்கிலிருந்து தொடங்கினால், அது தொடர் நிகழ்வுகளாக இல்லாமல், இடையிடையே அறுந்துபட்ட சங்கிலி போல் அமையும் என்று கூறினார். இந்தியச் சமயத்தின் வரலாற்றை முழுமையாக அறியாதவர்கள், அது வேத காலத்திலிருந்தே தொடங்குவ தாகக் கருதினர். வேதகாலம், பிராமண காலம், இந்து காலம் என அவற்றைப் பிரித்தனர்.

வேதகாலம் என்று ஒன்று இருந்தது பற்றி ஆய்வாளர் களிடம் கருத்து வேறுபாடுகள் உள்ளன. வேதத்தின் தொடக் கக்காலச் செய்திகளுக்கும் ஆரியர்களுக்கும் எந்தத் தொடர்பும் இருந்திருக்கவில்லை என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும். வேதகாலம் என்று எதுவும் இருந்ததில்லை என்றும், பிற்கால வரலாற்றாசிரியர்கள், தவறான பதிவுகளைச் செய்துவிட்டனர் என்ற கருத்தும் உண்டு. ருக்கு வேதம், பல ஆயிரம் ஆண்டுக் கால இடைவெளிகளில் சொல்லப்பட்டது என்றும், கி.மு. 6000 ஆண்டுகள் தொடங்கி, கிறித்துப் பிறப்பாண்டுகள் வரை, இணைக்கப்பட்ட செய்திகளையும், தமது காலச் செய்தி களையும் இணைத்தே வியாசர் வேதங்களைத் தொகுத்தார் என்றும் கூறுவர். ருக்கு வேதத்தின் தொடர்ச்சியாகவோ, அல்லது அவ்வேதத்தையே பிறகு நான்காகவோ பிரித்தனர் என்ற கருத்தும் உண்டு. அதர்வண வேதம், முந்திய மூன்று வேதச் செய்திகளையும், பிற்கால மருத்துவச் செய்திகளையும் இணைத்துக் கொண்ட தொகுப்பு என்பர்.

ருக்கு வேதம் 1028 பாடல்களைக் கொண்டது. பல்லாயிரம் ஆண்டுகள் அவை, வாய்மொழி வழியாகவே பல தலைமுறை களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறுவர். காற்றில் மிதந்து கொண்டிருந்த ஒலி அலைகளில், ருக்கு வேதச் செய்திகள் இருந்தனவென்றும், முனிவர்கள் தங்களது தவ ஆற்றலால், அவ்வொலி அலைகளைப் பிரித்து, வேதப்பாடல்களை அறிந்து கொண்டனர் என்பதும், நம்பிக்கையின் பாற்பட்ட செய்தி களாகும். அவ்வாறு ஒலி அலைகளிலிருந்து செய்திகளைப் பிரிக்க இயலும் என்பதை, தற்கால அறிவியல்கூட ஏற்க முன் வரவில்லை. ருக்கு வேதத்தின் தொடக்ககாலப் பாடல்களுக்கும் பிற்காலப் பாடல்களுக்கும் நடை, மொழி, கருத்து, கொள்கை அடிப்படையில் பலவேறுபாடுகள் உள்ளன. இயற்கையை வழிபட்டு வந்த இந்தியப் பழங்குடியினர், இயற்கையில் தாம் கண்டறிந்த உண்மைகளை, கதைகளாகக் கூறிவைத்தனர். மாந்தனுக்கு உதவுகின்றவை, மாந்தனின் அச்சத்துக்குள்ளானவை ஆகிய இரண்டு வகையானவைகளும், வணக்கத்துக்குரியவை களாயின.

வேதத்தில் சொல்லப்பட்டுள்ள கடவுளர்கள் இரு வகைகளாக அறியப்பட்டுள்ளனர். அதிதி, வருணன், மித்திரன், சவிதார் போன்றோர் அசுரர்கள் என்றும், இந்திரன் உள்ளிட்ட மற்ற அனைவரும் தேவர்கள் என்றும் சொல்லப்பட்டனர். இவர்களுக்குள் பகைமை இருந்ததும், பல நேரங்களில் அவை வெளிப்பட்டதும், வேதச் செய்திகளாக உள்ளன. இவ்விரு வருக்கும் ஆசிரியர்களும் தனித்தனியானவர்களாகவே சொல் லப்பட்டுள்ளனர். தற்கால வேத விற்பன்னர்கள், இவ்விரு வகுப்பாரும் ஆரியரே என்றும், அறிவு வழியில் இறைவனைக் கண்டவர்கள் தேவர்கள் என்றும், சடங்குகள் வழியில் சென்ற வர்கள் அசுரர்கள் என்றும் விளக்கம் கூறுகின்றனர். தேவர் களை நல்லவர்களாகவும், அசுரர்களைப் பொல்லாதவர்களா கவும் கருதுகின்றனர். சோமனை அசுரனாகச் சில செய்திகளும், தேவனாகச் சில செய்திகளும் கூறுகின்றன. ஆனாலும் இரு பிரிவினரும் வேதத்தில் விசுவ தேவர்கள் என்றே சொல்லப் பட்டுள்ளனர். பிற்காலச் செய்திகள் அசுரர்களை பேய்க் கணங் களாகக் கூறுகின்றன. ஈரானிய சமய நூலான அகுரமாஸ்தா (Ahura Mazda) தேவர்களைத் தீயவர்களாகவும், அசுரர்களை நல்லவர்களாகவும் கூறுகிறது.

ஆரியர்களின் வருகைக்கு முன்பே, இந்தியர்களின் கடவுளர் 33 பேர் என்று சொல்லப்படுகின்றது. இந்த முப்பத்து மூவர் பற்றிய கருதுகோள்கள் நிறைய உள்ளன. ஆரியர்கள் தங்களுடைய கடவுளரின் எண்ணிக்கை 3300 என்றும், மிகவும் பிற்காலத்தில் 33 கோடியெனவும் உயர்த்திக் கொண்டனர். ஆரியர்களின் பதிவுகளுக்கு முன்பே, பாபிலோனியர்கள் 3300 கடவுளரை வழிபட்ட குறிப்புகள் உள்ளன. எனவே, 33 என்ற அடிப்படை எண்களைக் கொண்டே, கடவுளர் பெருக்கம் அடைந்தனர்.

இந்தியப் பழங்குடியினரின் போர்க்கடவுளாக இந்திரன் வணங்கப்பட்டான். மழை, மேகம், இடி, மின்னல், நீர் ஆகியவை களின் கடவுளாகவும் சொல்லப்பட்டான். இந்திரனை ஆரியக் கடவுளாக வேதங்கள் கூறினாலும், ஆரியர்கள் தத்தெடுத்துக் கொண்ட இந்தியக் கடவுளாகவே இந்திரனை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கரிய உருவம் கொண்ட கார்மேகமாக விரித்திரன் கருதப்படுகிறான். அவன் மழையைத் தன்னிடம் பிடித்து வைத்துக் கொண்டு, அது பொழிய விடாமல் தடுத்து வந்தான். இந்திரன் இடி மின்னல் போன்ற ஆய்தங்களால் கார்மேக விரித்திரனை வீழ்த்தி, நீரை விடுவித்தான் என வேதம் கூறுகிறது. பெரும் அணைகளை ஆறுகளின் குறுக்கே விருத் திரன் கட்டி வைத்து, நீரை வெளியேற்றாமல் தடுத்து வந்தான் என்றும், இந்திரன் அவ்வணைகளை உடைத்து நீரை விடுவித் தான் என்றும் மேலும் சில செய்திகளை வேதம் கூறுகிறது. கார்மேகமும், இடியும் மின்னலும் மழையும் தனித்தனியான வைகளன்று என்பதும், அவை ஓர் உருவின் பல நிலைகளே என்பதும் கண்கூடு. எனவே, இந்திரனும் விருத்திரனும் மழைக் கடவுளரே என்ற கருத்தும் உண்டு. சில ஆய்வாளர்களால், சிந்துவெளியில் அறியப்பட்ட மன்னர்களே இந்திரனும் விருத் திரனும் என்பர். ஆரியர்களுக்கு பாதுகாப்பாக விருத்திரன் இல்லையென்பதால், விருத்திரனை வீழ்த்த, இந்திரனின் உதவியை ஆரியர்கள் நாடினர் என்றும், விருத்திர இந்திரப் போர் என்பது பங்காளிச் சண்டையே என்றும் அதனால் பயன் பெற்றவர் ஆரியரே என்றும், இந்த வரலாற்று உண்மை களையே உருவகக் கதையாக வேதத்தில் சொல்லி வைத்தனர் என்றும் சிலர் கருதுகின்றனர். உண்மையில் சிந்துவெளி அழிவிற்குப் பின்னரே ஆரியரின் வருகை இருந்ததையும் சில ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

வாரணன் என்று தமிழில் அறியப்படும் வருணன் இரவு நேர வானத்தின் கடவுளாகக் கருதப்படுகிறான். உலகை மூடியுள்ள இரவு வானம் என்ற பொருளில், வருணா என்ற சொல் பொருள் கொள்ளப்படுகிறது. (Vru = to cover) தமிழ் இலக்கியங்கள் வாரணனை கடல் தெய்வமாகப் போற்றுகிறது. ஆனாலும் வேதம் தரும் சில செய்திகள் தமிழ்ச் செய்திகளே சரியானவை என்பதை உறுதி செய்கின்றன. கடலின் அனைத்து வழிகளையும், இரவு நேரங்களின் காலத்தையும் கூட வருணன் அறிந்திருக்கிறான் என்று வேதம் கூறுகிறது. வருணன் இந்தியப் பழங்குடியினரின் கடவுளே என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். மேலும் சிலர், இந்தியர்களின் தனியான கடவுளும் அவனே என்றும் கூறுகின்றனர். (Some scholars regarded him the most ancient single god of the Indians. - His. of Rel. p. 163) மித்திரன் என்பவனோடு வருணன் இணைத்துச் சொல்லப் பட்டான். மீத்திறன் என்பதே மித்திரன் எனத் திரிந்திருக்க வேண்டும். மித்திர வாரணர் இணைப்பு கருதி, மித்திர என்பது நட்பு என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்க வேண்டும். மித்திர என்ற சொல்லுக்கான வேர்ச்சொல் சமற்கிருதத்தில் தெளிவு படுத்தப்படவில்லை. மித்திரனைப் போர்க்கடவுளாகப் பாரசீகரும், அவர்தம் ஆட்சி மேற்கில் பரவியதை அடுத்து, உரோமை நாட்டிலும் மித்திரன் கடவுளாக வணங்கப்பட்டான். மித்திரன் என்ற (மித்ரா - மித்ராஸ் - மித்ரோஸ்) பெயரிலேயே மேற்கிலும் அறியப்பட்ட வேதக் கடவுளாக சிவன் மட்டுமே கருதப்படுகிறான்.

ருத்திரன் என்ற வேதக்கடவுளே பிற்காலத்தில் சிவனாகக் கருதப்பட்டான். ருத்திரன் என்பவன் ஒரு சிறு கடவுளாக, இடிமின்னல் கடவுளாக, மாருதி (காற்று)க்கும் இந்திரனுக்கும் தந்தையாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறான். தென்னாட்டில் சிவனுக்கு இருந்த போற்றுதலையும் வணக்கத்தையும் கண்ட ஆரியர்கள், பிற்காலத்தில் சிவனோடு தொடர்பில்லாத ருத்திரனை, சிவனாகவே அறிமுகம் செய்துவிட்டனர். இதற்கும் சில கதைகளைக் கற்பித்துக் கொடுத்தனர்.

சூரியனே முதற் கடவுளாக, உலக நாகரிங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாவான். தமிழ் வேதம் அவனைச் சிவனாகவும், பிற்காலத்தில் மாயனாகவும் வணங்கியது. சூரியனுக்கு ஒளியைத் தந்த உழையும், வெப்பத்தைத் தந்த பூசனும், சூரியனோடு தொடர்புடையவர்கள்.

பேய்களாகவும், பூதங்களாகவும், தீமையின் உருவங்களாகவும் இராக்கதர் (ராக்ஷச) என்போர் சொல்லப்படுகின்றனர். இந்திரனும் மற்ற கடவுளரும் இவர்களை அழித்து ஒழித்ததாக வேதம் கூறுகிறது. இராக்கதர் என்போர், ஆரியருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத திராவிடர்களே (தமிழர்களே) என்பது ஆய்வாளர்களின் கருத்து. (Scholars suggest that the raksasas were probably the mythological personification of the local hostile Dravidian tribes. - Hist. of Reli., p. 165) எவ்வாறெனில், ஆரியர்களின் வேள்விகளையும் சடங்கு முறைகளையும், தம்மையே கடவுளின் முதற்குடிகள் எனச் சொல்லிக் கொண்டதையும் கடுமையாக எதிர்த்தவர்கள், வடஇந்தியத் தமிழர்களே என்பதையும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

முன்னோர் வணக்க முறை (பிதிர்கள்) என்பதும், ஆரியர்களின் மரபுச் சடங்காக இருக்க வியலாது என்பதும் ஆய்வாளர்களின் கருத்து. இறந்த தமது முன்னோரைப் புதைத்த இடத்தை வணங்குவதும், பூசெய்வதும், தமிழருடைய வழக்காயிருந்தது. நாடோடிகளாய் அலைந்த ஆரியர்களின் முன்னோர்களுக்கு நினைவிடங்களை எழுப்ப, அவர்களது நாடோடி வாழ்க்கை இடம் தரவில்லை எனலாம்.

தொடக்க கால ருக்கு வேதத்தில் சாதிகள் பற்றிய குறிப்புகள் எவையுமில்லை. வேதத்தில் பிராமணனே உயர்ந்தவன் என்று எங்கும் சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்லப்பட்டதாகக் கூறப்படும் சில செய்திகள், பிற்காலத்தில் இணைக்கப்பட்டவைகளே. மனு என்ற ஆரியன், வர்ணங்கள் நான்கெனக் கூறியதாக பின்வந்தவர்கள் கூறினார்கள். மனு எந்தக் காலத்தில் வாழ்ந்திருந்தான் என்பதற்குச் சான்றுகள் இல்லை. சாதிகள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்றும், அச்சாதிக் கட்டமைப்பு குலைந்து விடாதபடி மன்னனே காத்துவர வேண்டும் என்றும், மனு கூறியதாக, ஆரியர்கள் கூறினர். மனு எழுதிய நூல் எதுவும் எவராலும் பார்க்கப்படவுமில்லை. படிக்கப்படவுமில்லை. கி.பி. 1793ஆம் ஆண்டு தான் வாய்வழி மனுச் சட்டங்கள், முதன்முதல் பதிவு செய்யப்பட்டன.

மனுவின் சட்டங்கள் என்பது, உலக வரலாற்றில் எந்தக் கொடுங்கோல் மன்னனும் இயற்றாத சட்டங்கள் ஆகும். எந்தவொரு சர்வாதிகாரி கூட இவ்வாறான சட்டங்களை இயற்றிய

தில்லை. இராக்கதர்கள் என தமிழர்களை அறிவித்த ஆரிய மனுவே, உண்மையான அரக்கன் ஆவான். கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக, இந்தியா அடிமைப்பட்டுப் போனதற்கும், அயலார் இந்த நாட்டை ஆண்டதற்கும், மக்களிடையே காணப்பட்ட, காணப்படும் சமூக அவலங்களுக்கும், இந் நாட்டின் வளங்கள் கொள்ளை போனதற்கும், மக்கள் தங்க ளுக்குள் அடித்துக் கொலைகள் புரிந்து கொண்டதற்கும், அந்நிலைகள் இன்றும் தொடர்வதற்கும் மனுவின் சாதி முறைச் சட்டங்களே அடிப்படைக் காரணங்கள் என்பதை உறுதி யாகக் கூறலாம்.

வேதம் பல நீதிகளையும், தர்மங்களையும் பாபவிமோச னங்களையும், சொர்க்கம் தேடும் வழிகளையும் போதிக்கின்றது. வேதத்தின் காவலர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டவர்கள், மனித நேயத்தைக் குழி தோண்டிப் புதைத்தவர்களாவர். தமிழ் வேதமும், ஆரிய வேதமும் தொடக்கத்தில் மாந்த நேய அடிப் படையில் இருந்தவைகளே. ஆரிய வேதங்களுக்கு விளக்கம் சொன்னவர்களும், இடையில் பல செறுகல்களைத் திணித்த வர்களும் வேதங்களை மாந்த நேயத்துக்கு எதிராகத் திசை திருப்பிவிட்டனர். தொடக்க கால ருக்கு வேதத்தில் சாதி களைப் பற்றி எந்தச் செய்திகளும் இல்லை. பின்னர் திணிக் கப்பட்ட மனுவின் சட்டங்களும், புருஷ சூக்தமும் வர்ணா சிரமத்தை நிலைநிறுத்தின. பகவானே பகவத் கீதையில் சாதிகளை நான்தான் தோற்றுவித்தேன் என்று கூறுவதைக் காணலாம். சாதிக் கட்டமைப்பைத் தகர்ப்போரை நானே அவதாரம் எடுத்து வந்து தண்டிப்பேன் என்றும் கூறினார். அதர்வண வேதம், பகைவரை செல்லவும், வீழ்த்தவும், அழிக் கவும் பல அறிவுரைகளைத் தருகின்றது.

தமிழ் வேதமாகிய திருக்குறளை ஆரிய வேதங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் பகைவனுக்கும் அருளும் பண்பை தமிழ் வேதம் போதிப்பதை உணர்வார்கள். இன்னா செய் தாரை வெட்டவும் வீழ்த்தவும் சொல்லும் ஆரிய இலக் கணங்கள் எங்கே? இன்னா செய்தார்க்கும் நல்லதே செய்த எனக் கூறும் தமிழ் வேதம் எங்கே? சமயக் கண்ணோட்டத்தில் வேதங்களைப் பார்ப்பவர்களுக்கு அது முக்திக்கு வழிகோலும் மூலங்களாகத் தெரியலாம். சமூகக் கண்ணோட்டத்தில் அணுகும்போது, அவை மக்கள் விரோதச் சட்டங்களே என்பதை உணர்வர்.

ஆரியர்கள் தங்களிடம் இல்லாத அனைத்து சமய நம்பிக் கைகளையும் திராவிடர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். ஆனால் திராவிடர்களிடம் இல்லாத வர்ணாசிரமக் கொள் கையை அவர்கள் மீது திணித்தார்கள். இதன் விளைவாகவே இசுலாமியரும், பின்னர் ஆங்கிலேயரும் இந்தியாவை வென் றார்கள் என்று, உருசிய வரலாற்று ஆய்வாளர் செர்கி தாக்க ரேவ் கூறுகிறார். (Brahmans quite easily adap ted the religion of Dravidians. But they discovered a caste society which was not knon among Dravidians, has continued nearly to this day. This was the reason why India was conquered by Muslims and later submitted to British imp erialism. - Sergi Tokerev, History of Religion, p. 177)

இந்திய நாட்டையும், மக்களையும் பாழ்படுத்திய ஆரியர் களின் மற்றவேதங்களும், உபநிஷத்துகளும், சுமிருதிகளும் என்ன போதனை செய்தும் என்ன பயன்? இந்திய மண்ணில் கலக்கப்பட்ட கொடும் நஞ்சு, இன்னும் கூட முறிக்கப்பட வில்லை. இந்தக் கொடுமையை மெத்தப் படித்த இந்தியனும், தமிழனும் கூட உணரவில்லை என்பதுதான் வெட்கக் கேடானது. சிறிதேனும் தன்மானம் உள்ளவர்களாக அறியப்பட்ட அம்பேத் கரும், பெரியாரும் தொடுத்த எதிர்த்தாக்குதல்கள் கூட, இப் போது மழுங்கடிக்கப்படும் நிலைதான் ஏற்பட்டுள்ளது. மேலை நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்ட நிறவெறிக் கொள்கை, உடைக்கப்பட்டுள்ளது. அய்க்கிய நாட்டுப் பொதுச் செய லாளர், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வரையிலும் கூட கறுப்பர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். அடிமைத்தனம் மேலை நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்ட காலங்களில் கூட, கறுப்பினப் பெண்கள், வீட்டுப்பணிப் பெண்களாகவும், ஆண்கள் பணியாளர்களாகவும் இருந்தனர். பார்த்தால் தீட்டு, தொட்டால் தீட்டு என எவரையும் அவர்கள் ஒதுக்கவில்லை. இயேசுவைக் கும்பிடவும் அவர்களுக்கு மறுப்பு தெரிவிக்கப் படவில்லை. பைபிலும் கூட சொல்லித் தரப்பட்டது. உலகம் மாறிவிட்டது, இந்தியாவும், தமிழ்நாடும் மாறவில்லை.

வேதங்கள் என்ன சொல்கின்றன என்பதே இந்தியர்களில் 99 விழுக்காட்டு மக்களுக்குத் தெரியாது. வேதங்களில் உள்ள மாந்த நேயமற்ற கொள்கைகளை, பிராமணர்களில் சில சிந்தனையாளர்களே கடிந்து பேசுகின்றனர். அக்கினி கோத்திரம் இராமானுசாச்சாரியார் போன்றோர் பிராமணச் சாதி வெறியைக்

கண்டித்து வருவதையும், பல பிராமணர்கள் கிறித்துவ சமயத்தைத் தழுவி வருவதையும் பார்க்கும்போது, பிராமணர் களிலும் மாந்த நேயம் உள்ளோர் இருப்பதை உணரமுடி கின்றது.

வேதம் கடவுளைப் பற்றி என்ன சொல்கிறது? ஒரு சமயத்துக்கு ஒரு கடவுள் இருப்பதே ஏற்றுக் கொள்ளக் கூடியது. இன்னாரை கடவுளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேதம் கூறவில்லை. கடவுளின் பண்புகளை விளக்கும் வேதம், அவர் யார் என்பதைச் சுட்டவில்லை. பிரசாபதி, பிரகஸ்பதி, பிரம்மா போன்ற சொற்கள், பொதுப்படையான பெயர்களே அன்றி, தனிப்பட்ட கடவுளின் பெயர் அன்று. கடவுள் முன்பு அனைவரும் சமம் என்றும், மக்கள் அனை வரும் கடவுளின் பிள்ளைகள் என்றும் கூறும் வேதங்கள், அதனைக் கடைப்பிடிப்பவர்களால் மறுக்கப்படுகின்றன. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இன்று அறியப்படும் கடவுள் மறுப்பாளர்கள், வேதங்கள் தரும் விளக்கங்களால் நாத்தி கர்கள் ஆனவர்களே. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று தமிழ் வேதம் கூறுகிறது.

ஒரு கடவுளை அறிவித்து, அவர் வழி நடப்பதாகக் கூறிக் கொள்ளும் அனைவரும் சமயம் சார்ந்தவர்கள் எனலாம். சமயம் என்பதற்கு கொள்கைகளும் கோட்பாடுகளும் இருக்க வேண்டும். பல்வேறு கடவுளரை வழிபடும் ஒரு சமூகம், சமயம் சார்ந்ததாக இருக்க முடியாது. அது வணக்க முறைகளைச் சார்ந்தது. வணக்க முறைகள் சமயம் என்ற தகுதியைப் பெறாது. ஆரியர் குறிப்பிடும் வேதங்கள், வணக்க முறை களாகவே உள்ளன. கடவுள் தனது தகுதியை இழந்துவிட்டார், சடங்குகளும் சம்பிரதாயங்களுமே முதன்மைப் படுத்தப்படு கின்றன. உபநயனம் என்ற சடங்கு ஏழு வயதில் கடைப்பிடிக் கப்படுகிறது. அது பிரம்மச்சர்யத்தின் தொடக்கம் என்பர். ஒரு பிரம்மச்சாரி எப்படி வாழ வேண்டும் என்று வேதம் கூறுகிறது. முப்புரி நூல் என்பது, மூன்று பெண் தெய்வங்களின் நினை வாக அணிவிக்கப்பட்டு, காயத்திரி மந்திரம் என்ற செபம் அக்குழந்தைக்குச் சொல்லித் தரப்படுகின்றது. அதன் பொருளை அக்குழந்தை அறியுமா? இன்று உபநயனத்தின் போது, பெரிய விருந்து வைத்து, வெள்ளியால் செய்யப்பட்ட திருவோட்டை அக்குழந்தைக்கு அளிக்கின்றனர். திருவோடு, பற்றற்ற

தன்மையைக் குறிப்பது. சடங்கே முதன்மை பெற்று அதன் நோக்கம் மறைக்கப்படுகின்றது. இன்று பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் சடங்குகளுக்கே அடிமைகள்; கடவுளுக்கு அல்ல என்பதை அறியலாம்.

காலம் காலமாக தமிழில் வழிபட்டு வந்த தமிழர்கள், அந்த உரிமையையும் இழந்துவிட்டனர். தமிழன் கட்டிய, தமிழன் வழிபடும், தமிழ்க் கடவுளரின் திருக்கோயில்களில், தமிழில் வழிபாடு நடத்தவும், கருவறையில் நுழையவும் தமிழனுக்குத் தகுதி மறுக்கப்பட்டது. இந்த உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்திய சித்தர்களில் பலர் கொலை செய்யப்பட்டனர். பிராமணர்களின் சொற்கேட்டு நடந்தவர்களே சத்திரியர் எனவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்தவர்களே வைசியர் எனவும், அவர்களை எதிர்த்தவர்களே சூத்திரர் என்றும் சொல்லப்பட்டனர். சூத்திரரில் கூட மூன்று பிரிவுகள் உள்ளன. சூத்திரரில் பிராமணர்களை வலியச் சென்று பணிவிடை செய்தவர்களை சத்சூத்திரர் என்று பட்டம் அளித்தனர். சத் சூத்திரர் என்றால், பணிவான சூத்திரர் என்று பொருள். இந்தப் பட்டம் தங்களைச் சிறுமைப்படுத்துகிறது என்பதை, இன்னும் கூட அவர்கள் உணரவில்லை. இந்த சத் சூத்திரர்களின் ஆளுகையில்தான் இன்று தமிழ்நாட்டின் ஆதீனங்கள் உள்ளன. ஆதீனம் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினருக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இன்று அவர்கள் தங்களை மக்களின் ஆன்மீகத் தலைவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். காஞ்சி சங்கர மடம் ஒரு சூத்திரனை சங்கராச்சாரியராக ஏற்றுக் கொள்ளாது என்பது போல், எந்தவொரு ஆதீனமும், ஒரு பறையனையோ, பள்ளனையோ, பள்ளியையோ, உடையானையோ, கள்ளனையோ, குரு சன்னிதானமாக ஏற்றுக் கொள்ளாது. இவர்கள்தான் தமிழ்நாட்டின் மூத்த குடிகளாவர். சூத்திரரில், நமக்கேன் வம்பு என்று, பிராமணர்களின் நிலைப்பாட்டில் ஒதுங்கியிருந்தவர்களே, இன்று மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களாக அறியப்படுகின்றனர். சூத்திரனில் பிராமணனை எதிர்த்தோர், பறையன் என்றும் பள்ளன் என்றும் கூறி, தீண்டத்தகாதவர்கள் ஆக்கப்பட்டனர். சித்தர்கள் போன்று கடுமையாக எதிர்த்தவர்களை, பஞ்சமன் என்று கூறினர். சூத்திரச் சாதிகள் கூட, பிராமணரின் அளவீடுகளில் தான் வரையறை செய்யப்பட்டன.

மேற்கண்ட செய்திகள் அனைத்தும் பிராமணன் என்ற மனிதனை எதிர்த்துக் கூறப்படுபவை அல்ல. அவர்கள் கடைப் பிடித்து வரும் கொள்கைகளையே என உணர்தல் வேண்டும். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற உயர்ந்த கொள்கையைத் தந்தது தமிழ் வேதம். அறத்தையே பற்றி நிற்பது தமிழ் வேதம். இவ்வேதத்தை நிலைபெறச் செய்து விட்டால், பிரித்தாலும் கொள்கை வெற்றி பெறாது எனக் கருதிய ஆரியர், தமிழ் வேதத்தையே அழித்துவிட்டனர். தமிழ் வேதத்தை, பிராமண வேதமாக மாற்றி, தம்மையே அதற்குத் தலைவர்களாக்கிக் கொண்டனர். பல்லாயிரம் ஆண்டுகளாக தனித்தன்மையுடன் விளங்கி வந்த தமிழர் வேதம், இன்று ஆரியமயமாக்கப்பட்டு, அதற்கு இந்துமதம் என்ற புதுப்பெயரும் சூட்டப்பட்டது. இந்து மதத்தின் படி, சாதி முறைகளை ஏற்றுக் கொண்ட வர்களே இன்று இந்துக்களாக இருக்க முடியும். இந்து என்றால் அடிமை என்று பொருள் என விளக்கம் கூறிய அம்பேத்கர், அம்மதத்தைவிட்டே வெளியேறினார். இன்று தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும், கிறித்துவ இசுலாமியச் சமயங்கள் வேரூன்றி வளர்ந்ததற்கு, பிராமணர்களே அடிப் படைக் காரண கர்த்தர்களாவர்.

ஆரியர்களும், அவர்தம் வேதங்களும் இந்தியர்களுக்கு என்ன செய்தனர், செய்தன என்பதை, படிப்பவர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறோம். அக்னி கோத்திரம் இராமனு சாச்சாரியாரின் மாந்த நேயப் பண்பைப் பாராட்டுகிறோம்.

சிந்துவெளித் தமிழர்கள்

சென்ற 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அறியப் பட்ட சிந்துவெளி நாகரிகம், இப்போதும் கூட பல்வேறு பார்வைகளில் நோக்கப்படுகின்றது. தொடக்கத்தில், 1924 முதல் 1932 வரையில், சிந்துவெளி நாகரிகம், ஆரிய நாகரிகமே என முடிவு செய்து அறிவிக்கப்பட்டது. வணக்கத்துக்குரிய ஈராஸ் பாதிரியர் அவர்கள், இக்கொள்கையை மறுத்தார். தொடர்ந்து பலரும், ஈராஸ் அவர்கள் கூறியபடி, அந்நாகரிகம், தமிழர் (திராவிடர்) நாகரிகமே எனக் கூறினர். அதுவரையில் அறியப்பட்டிருந்த யூப்ரதீசு - தை கிரீசு நாகரிகம், நீலாற்று நாகரிகம், மஞ்சளாற்று நாகரிகம் என்ற பட்டியலில், சிந்துவெளி நாகரிகமும் இணைக்கப்பட்டது. வரலாற்றில் மறைந்து போன பஃறுளி ஆற்று நாகரிகமும், பின்னர் முகிழ்ந்த பொருநையாற்று நாகரிகமும், அப்பட்டியலில் இடம் பெறவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட நாகரிகங்கள் கி.மு. 4000 ஆண்டுக்குப் பிறகு அறியப்பட்டவைகளே.

சிந்துவெளி நாகரிகம், கிழ். 2500 - 1800 என்றவாறு, வரலாற்று ஆய்வாளர்களால் குறிக்கப்பட்டது. மேற்கில் அறியப் பட்ட சுமேரிய மெசபத்தோமிய, எகிப்திய நாகரிகங்களுக்குப் பிற்றைய காலத்திலேயே, சிந்துவெளி நாகரிகம் அறியப்படுவ தாகக் கூறினர். தொடக்கத்தில் சூழ்ந்த முரண்பாடுகள் வலுப் பெற்ற நிலையில், சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என்று ஏற்கப்பட்டது. கி.மு. 1500ஆம் ஆண்டுகளில் பெரும் படையுடன் இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்கள், சிந்துவெளி மக்களைப் போரில் புறங்கண்டு, அவர்களைத் தென்னிந்தியப் பகுதிகளுக்குத் துரத்திவிட்டனர் என்ற கொள்கையைப் பதிவு செய்தனர். இதனைத் தொடர்ந்து, தமிழர்கள் (திராவிடர்கள்) மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த தொன்மக்குடிகள் என்றும், அங்கிருந்தே அவர்கள் சிந்துவெயில் குடியேறினர் என்றும், அங்கிருந்தும், தென்னிந்தியப் பகுதிகளுக்குள் துரத்தப்பட்டனர் என்றும் ஒரு கொள்கை வகுக்கப்பட்டது. இக்கொள்கையை,

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்த நிக்கோலா லெகவரி என்ற பிரெஞ்சு நாட்டு வரலாற்று ஆய்வாளர் உறுதிப் படுத்தினார்.[724] இதன்படி, சிந்துவெளி நாகரிகம், மெசபத் தோமிய நாகரிகத்தின் தொடர்ச்சியே என்று கருதப்பட்டது. எனவே, முதன் முதலில் உலகில் தோன்றிய நாகரிகம் மெசபத்தோமிய நாகரிகமே என்றும் உறுதி செய்யப்பட்டது.

சிந்து வெளி நாகரிகம், ஆரிய நாகரிகமே என முதலில் கூறப்பட்ட கொள்கை, மாறுதலுக்குள்ளான போதிலும், சிந்து வெளி மக்களிலும் ஆற்றலுடைய ஆரிய மக்கள் அவர்களைப் போரில் புறங்கண்டனர் என்ற கருத்து பிறகு உருவாக்கப் பட்டது. எந்த வகையிலும், ஆரியருடைய புகழை குறைத்து மதிப்பிடாத வகையில், வரலாறு பதிவுசெய்யப்பட்டது. சிந்து வெளி நாகரிகத்துக்கு முந்தியது சரசுவதி ஆற்று நாகரிகமே என்றும், அது ஆரியருடைய நாகரிகமே என்றும் ஒரு கொள்கை வலியுறுத்தப்பட்டது.[725] சரசுவதி ஆற்று நாகரிகம் பற்றிய கொள்கையை, தற்காலத்து ஆரியச் சார்புடைய வரலாற்று ஆய்வாளர்களில் சிலர் முன்வைத்தனர். இதற்குச் சான்றுகளாக, சரசுவதி என்ற ஆறு, பஞ்சாப் பகுதில் ஓடி, பிற்காலத்தில் அது மறைந்துவிட்டது என்பதையும், நாசா என்ற அமெரிக்க விண்வெளி நிறுவளம் எடுத்த புகைப்படங் களில், சரசுவதி ஆறு ஓடியிகுந்தற்கான தடயங்கள் காணப் படுகின்றன என்பதையும் முன்வைத்தனர்.

ஓராறு தன்னுடைய ஓட்டப் போக்கை மாற்றிக் கொள் வதும், மறைந்து போவதும், இயற்கையின் இடர்ப்பாடுகளால் தோன்றும் நிகழ்வே எனலாம். இதற்குப் பல்வேறு சான்று களும் கூட உள்ளன. தற்காலப் புவியியலாளர்கள், காவிரியாறு கி.மு. 2000 ஆண்டுகளில், பாலாற்றைத் துண்டித்துக் கொண்டு, தற்காலத்திய சேலம், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள் வழியே ஓடத்தலைப்பட்டது என்றும் கூறுகின்றனர். இதற்குச் சான்றாக காஞ்சி புரத்துக்கு வடக்கே, காவிரி இணைந்திருந்த பகுதிகளை (ஏறக்குறைய 35 கிலோ மீட்டர் தொலைவு) தற்போது அடையாளம் கண்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.[726] எனவே, சரசுவதி என்ற ஆறு ஒரு காலத்தில் ஓடி மறைந்து போனது என்ற கொள்கையை ஏற்பதில் தவறேது மில்லை. ஆனால், அவ்வாற்றுப் பகுதிகளில் ஆரியர்கள் வாழ்ந்திருந் தனர் எனக் கூற, பிற சான்றுகள் எவையும் முன்வைக்கப்பட

வில்லை. ஆரிய இலக்கியங்கள் கூறும் காலக் கணக்குகள், வரலாற்று நோக்கில் மெய்ப்பிக்கப்படவில்லை. சிந்துவெளி நாகரிகத்தையே, சரசுவதி நாகரிகம் என்ற பெயரில் ஆரியச் சார்புடையவர்கள் குறிப்பிடுவதாகவும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சிந்துவெளி நாகரிகம் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதன்று என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.மு. 1800 ஆண்டுகளில் இறுதியாக அழிந்த அறப்பா நகரத்தோடு முற்றுப் பெற்றது என்பர். எனவே, முற்றிலுமாக சிந்துவெளி நாகரிகம் முடிவுற்றதற்குப் பிறகே, ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்ற கருத்து, தந்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்துக்கும் ஆரிய நாகரிகத்துக்கும் எவ்வகையான தொடர்வும் இல்லையென உறுதி செய்யப்பட்டது. உருசிய நாட்டு வரலாற்றாய்வாளர், செர்கி தோக்கரேவ் என்பவரின் கூற்றுப்படி தமிழர் (திராவிடர்) நாகரிகம், ஆரியர்களுக்கு முற்றிலும் தொடர்பில்லாத, ஆரியரின் வாழ்க்கை முறைமைகளுக்கு மேம்பட்ட நாகரிகமே என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. மேற்கித்திய அறிஞர்களில் பெரும் பாலோர் இவருடைய கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். சிந்துவெளி நாகரிகம் நடை முறையில் இருந்த காலம்தான் எது என்பதில், இப்போதும் பல முரண்பாடுகள் முன்வைக் கப்படுகின்றன.

கடந்த 17.01.2002 ஆம் ஆண்டில்,திநியு இந்தியன் எக்ஸ் பிரஸ் நாளிதழ் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.[727] அச் செய்தியின் சுருக்கமாவது:

இந்திய அரசின் எண்ணெய் வளத்தைக் கண்டுபிடிக்கும் நிறுவனம் குசராத்துக்கு அருகேயுள்ள காம்பே வளைகுடாவில் 2000 ஆண்டுகளில் துரப்பணப் பணிகளை மேற்கொண்டிருந்த போது, உலக்கை போன்ற ஒரு பொருளைக் கண்டெடுத்தது. அப்பொருளின் அமைப்பினால் ஈர்க்கப்பட்ட ஒரு பொறி யாளர், அதன் வரலாறு பற்றித் தெரிந்து கொள்ள விரும்பி, அப்பொருளை, டெல்லியில் உள்ள சகானி நிறுவனத்திடம் ஒப்படைத்து, அப்பொருள் பற்றிய உண்மைகளை வெளிப் படுத்துமாறு கேட்டுக் கொண்டார். ஓராண்டு ஆய்வு செய்யப் பட்ட பின், தனது முடிவை மேலும் உறுதி செய்யும் வகையில், அவ்வாய்வறிக்கை இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. இங்கி

லாந்தில் ஆய்வு செய்யப்பட்டபின், சகானி நிறுவனம் எடுத்த முடிவு சரியானதே என்று மேலாய்வில் உறுதிசெய்யப்பட்டது. அதன்படி,

"அத்துண்டுப் பொருள் மரக்கலத்தின் ஓர் உடைந்த பகுதியே என்றும், அது மரத்துண்டே என்றும், அம்மரத் துண்டை சிறு சிறு கடல் வாழ்உயிரினங்கள் மூடிவிட்டதால், மரத்துண்டுக்கு அழிவு ஏற்படவில்லை என்றும் உறுதி செய்து, அம்மரத்துண்டின் காலம் கி.மு. 7500 ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்றும் உறுதி செய்யப்பட்டது."[727]

"அத்துண்டு கிடைக்கப்பட்ட இடம், அக்காலத்தில் அறியப்பட்டிருந்த உலைத்தளம் (Lothal) என்ற சிந்துவெளியின் துறைமுக நகருக்கு அருகில் என்பது குறிப்பிடத்தக்கது உலைத் தளத்தில், மரக்கலங்களைக் கட்டி, பழுது பார்த்து, செப்பனிடும் பணிகள் நடைபெற்றதாக ஆய்வாளர்கள் உறுதி செய்துள் ளனர். இச்செய்தியையே மேற்கண்ட நாளில் ஊடகங்களில் வெளியிட்டனர். (Underwater dig pushes back Indian civilization to 7500 B.C. என்பதே தலைப்புச் செய்தியாகும்). இச்செய்தி சிந்து வெளி நாகரிகம் பற்றியதாக இருந்தாலும், தலைப்புச் செய்தி, இந்திய நாகரிகம் என்றே குறிப்பிடுகிறது. இதற்கான காரணம் வருமாறு:

சகானி (Sahani Institute) நிறுவனத்தின் ஆய்வுச் செய்திகள் வெளியிடப்பட்டவுடன், ஊடகங்களின் செய்தியாளர்களை, மேனாள் மாந்தவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், திரு. முரளி மனோகர் ஜோஷி அவர்கள் சந்தித்தார். நேர்காணலின் போது, ஒரு செய்தியாளர், சிந்துவெளி நாகரிகம், ஆரிய நாகரிகமா, திராவிடர் நாகரிகமா என்ற கேள்விளை எழுப் பினார். அதற்கு விடையிறுத்த அமைச்சர், அது இந்திய நாகரிகமே எனக் கூறினார். தொடக்கத்தில் ஆரியநாகரிகம், எனக் கூறிவந்தவர்கள், தற்போது, தங்கள் கொள்கைகளை வலியுறுத்தவதில்லை. அதற்கானச் சான்றுகள் இல்லாததும், தொடர்ந்து வலியுறுத்தி வந்தால், மக்கள் தங்கள் கூற்றுகளை ஏற்கமாட்டார்கள் என்பதும் அதற்கான காரணங்களாகும். ஆனாலும் அது தமிழர்கள் (திராவிடர்கள்) நாகரிகம் எனக் கூறி, தமிழரைப் புகழ அவர்களுக்கு மனமில்லை. அதனால் ஆரியர்களையும் இணைத்துக் கொண்டு, அது இந்திய நாகரிகம் என்றனர். இதற்குப் பின்னரும், சிந்துவெளி நாகரிகம், ஆரிய

நாகரிகமே எனக் கூறிவருபவர்கள் தற்போதும் உள்ளனர். நரி களைப் பரிகளாக்கிய தொன்மம் ஒன்று தமிழில் உள்ளதைப் போல, அமெரிக்காவிலிருந்து வெளியிடப்படும் பிராமணச் சார்பு இதழ் ஒன்று, நரிப்படம் ஒன்றை, கணினி தொழில் நுட்பத்தால், பரியாகக் காட்டி, இதுவே சிந்துவெளிக் குதிரை என்றவாறு செய்தியுடன் வெளியிட்டனர். எவ்வகையிலேனும், அது ஆரிய நாகரிகமே என மெய்ப்பிக்கவும், அதற்கு ஒரு சிறுதுரும்பாவது சான்றாகக் கிடைக்காதா எனத் தேடியும் வருகின்றனர்.

இல்லாத ஒன்றை இருப்பது போலக் காட்ட முயலும் ஆரியச் சார்பாளர்களைப் போல், உண்மை வரலாற்றைக் கொண்டிருக்கும் தமிழர்கள், தம் வரலாற்றை எடுத்துக் கூற முனைப்பு காட்டுவதில்லை. அண்மையில் வெளியிடப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்றில் சங்கன் என்ற சொல் காணப் படுகிறது. இது கி.மு. 700 - 500 ஆண்டுக் கல்வெட்டென்று ஆய்வாளர்கள் உறுதி செய்தனர். அச்சொல்லை, ஸங்கன் என்று ஆங்கில ஊடகம் ஒன்று எழுதிக் காட்டியது. இது, சமற் கிருதச் சொல்லே, என்ற தோற்றத்தை உருவாக்க மேற் கொண்ட முயற்சியாகவேயிது கருதப்படுகின்றது.

சிந்துவெளி நாகரிகம் பற்றிய கால அளவை மதிப்பிடும் ஆய்வாளர்களுக்கு, கி.மு. 7500 ஆண்டுகள் என்ற செய்தி அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால், அக்கால அளவுக்குப் பிறகு நிகழ்வுற்ற நிகழ்ச்சிகள் எவையும் அறியப்படவில்லை. இருந்தாலும் கி.மு. 7500 ஆண்டுகளில் சிந்துவெளி நாகரிகம் நிலைபெற்றிருந்தது என்ற செய்தியை இந்திய அரசு தற்போது ஏற்றுக் கொண்டுள்ளதாக, திரு. முரளி மனோகர் ஜோஷி அறிவித்தார். அதன்பிறகு வெளியிடப்பட்ட பாடநூல்களில், அவ்வாண்டுக் கணக்கு எழுதப்படவில்லை. இந்நிகழ்வை மக்கள் மறந்திருப்பார்கள் என்ற அடிப்படையில், தொடர்ந்து வரும் நூல்கள், கி.மு. 2500 ஆண்டுக் கணக்கையே தாங்கி வெளிவருகின்றன.

உண்மையில் சிந்துவெளியில் குடியேறிய தமிழர்கள் பற்றிய முறையான ஆய்வுகளை இதுவரை இந்திய அரசுமேற் கொள் ளவில்லை. வரலாற்றில் ஆர்வம் கொண்ட ஆய்வாளர்களே இம்முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். சிந்துவெளியின் குடியி ருப்புப் பகுதிகள் புதையுண்டு கிடக்கும் இடங்கள், பெரும்

பாலும் பாகிஸ்தானில் உள்ளன. இதுவும் கூட ஆய்வுகளுக்குத் தடையாக உள்ளது. பாகிஸ்தானிய பல்கலைக் கழகங்கள் சார்பில், கடந்த 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகழ்வாய்வு களில் 39 ஆய்வாளர்கள் கலந்து கொண்டதாக ஒரு செய்தி வெளியானது. அவ்வாய்வுகளின் முடிவில், சிந்துவெளி நாகரிகம், கி.மு. 9500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிவிக்கப்பட்டது. வரலாற்றைத் தொடர்ந்து நோக்குபவர்களுக்கு, கி.மு. 2500 லிருந்து படிப்படியாக அதனுடைய காலம் உயர்ந்து கொண்டே வருவது தெரியும். ஆனாலும் உண்மையான குடியேற்ற காலம் எப்போது?

விவிலியத்தில் ஒரு செய்தி காணப்படுகின்றது. வெள்ளக் காலம் பற்றிய குறிப்பு, ஆதியாகமம், 10 ஆம் அதிகாரத்தில் காணப்படுகின்றது. அச்செய்தியில், வெள்ளத்தினின்றும் இறை வனால் மீட்கப்பட்ட நோவா என்பவனும் அவனது இல்லத் தாரும், அராரத் (Ararat) என்ற மலைமுகட்டில், மரக்கலத்தி னின்றும் இறங்கினர் என்பதாகும்.[728] அராரத் என்பது எபிறேய மொழிச் சொல்லாகும். இதற்கான பொருளும் விளக்கமும் சொல்லப்படவில்லை. மெசபத்தோமிய மொழியில், இவ்விடம் ஊராற்று (Urartu) எனக் குறிப்பிடபட்டுள்ளது. இச்சொல்லில், ஊர்+ஆறு ஆகிய இரண்டு தமிழ்ச் சொற்கள் இடம் பெற் றுள்ளன. பொதுவாக தமிழ் வழக்கில் சொல்லப்படும், ஆற்றூர் என்பதே, முன்பின்னாக, ஊராற்று என அம்மொழியில் சொல் லப்பட்டுள்ளது.

நோவாவின் மரக்கலம் தரைதட்டிய இடம் ஆற்றூர் என்பதையே, அச்சொல் குறிப்பிடுகிறது. எந்த ஆற்றூர், அதாவது எந்த ஆற்றின் அருகே இருந்த ஊர் என்பதற்கான விளக்கம் இல்லை. ஆனால், விவிலியம் தரும் குறிப்பில், யூப்ரதீசு - டைகிரீசு ஆற்றுப் படுகைகளில், நோவாவின் மக்கள் வந்து தங்கு முன்பாக, அவர்கள் கிழக்கிலிருந்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. சிந்து ஆற்றைப் பற்றி, பாரசீக, மெச பத்தோமிய, எபிறேய இலக்கியங்கள் சிறப்பாகக் குறிப்பிடு கின்றன. அதன் அடிப்படையில் கிழக்கேயுள்ள ஆற்றூர் என்பது சிந்து ஆற்றையும், சிந்துவெளியையும் குறிப்பதாகக் கருதலாம். கிழக்கு என்ற விவிலியச் சொல், இதனையே குறிப்பி டுவதாகவும் கருதலாம்.

நோவாவின் காலம், வெள்ளக் காலத்தோடு தொடர் புடையது. வெள்ளக் காலம் எப்போது என்பதற்கு சென்ற நூற்றாண்டில் புவியியல் ஆய்வாளர்கள் விளக்கம் தந்துள் ளனர். உலகின் நிலப்பரப்புகளைப் பரட்டிப் போட்டு, புதிய நிலப்பரப்புகளை உருவாக்கிய வெள்ளம். கி.மு. 18000 - 12000 ஆண்டுகளில் நிகழ்வுற்றது என, புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.[729] கி.மு 12000 ஆண்டுகளில் வெள்ளக் காலம் முடிவுற்றது எனலாம். அக்காலமே. நோவாவின் காலம் எனக் கருத இடம் உண்டு. நோவா குமரிக் கண்டத்தில் வாழ்ந்திருந்த தமிழனே என்பதை பல்வேறு சமய இலக்கியங்களின் சான்று களால் நிறுவலாம்.[730] (ஆசிரியரின், நோவா ஒரு வரலாற்று மாந்தனா? என்ற நூலைக் காண்க.) அதன் அடிப்படையில், கி.மு. 12000 - 11000 ஆண்டுகளில் நோவாவின் மக்கள் ஆற்றூரில் தரையிறங்கி, அங்கு வாழத்தலைப்பட்டனர். அப்பகுதியே சிந்துவெளி எனப்பட்டது. அங்கு மக்களினம் பெருகவே, நோவாவின் மக்களில் ஒரு பகுதியினர் மேற்கு நோக்கிப் புலம் பெயர்ந்தனர். இந்நிகழ்வே, விவிலியத்தில், கிழக்கிலிருந்து வந்தார்கள் என்ற குறிப்பால் அறியப்படுகின்றது. எனவே, சிந்துவெளியில் மக்கள் குடியேறிய காலம் கி.மு. 12000 - 11000 எனவும், மேற்கே மெசபத்தோமியாவில், அம்மக்களில் ஒரு குழுவினர் குடியேறிய காலம் கி.மு. 10000 ஆண்டுகள் எனவும் கொள்ளலாம். மெசபத்தோமிய வரலாற்றைக் கூறும் ஆய்வா ளர்கள். கி.மு. 10000 ஆண்டுகளிலேயே. அங்கு வேளாண்மைத் தொழில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டது என்ற செய் தியைத் தருகின்றனர்.[731] எனவே, சிந்துவெளியில் தமிழர்கள் குடியேறிய காலம், கி.மு. 11000 ஆண்டுகள் என்க.

சிந்துவெளியில் காணப்பட்ட பல்வேறு மண்மேடுகளைத் தகர்த்து, அகழ்வாய்வுகளை மேற்கொண்ட போது, அவற்றில் மொகஞ்சதாரோ என்ற இடத்தில் அறியப்பட்ட நகரம், பரப் பளவிலும், நாகரிகத்திலும் சிறந்து காணப்பட்டது. பத்தா யிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் அகழ்வாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மொகஞ்ச தாரோவில் கண்டெடுக்கப்பட்ட பழைய புதையுண்ட நகரம், கி.மு. 10000 ஆண்டுக் கால பழமை வாய்ந்ததாகும். அந்நகரில் கட்டப்பெற்றிருந்த வீடுகளும், மாளிகைகளும், பொது நீரோடும் இடங்களும், கிணறுகளும் சுட்ட செங்கற்களால் கட்டப்பெற்றவைகள் என ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.[732]

செயற்கையாக உருவாக்கப்பட்ட விடுமண்ணைக் கொண்டு (பிடு மண் - Bituman என்று விவிலியம் கூறுகிறது), செங்கற்களை இணைக்கும் உத்தி பயன்படுத்தப்பட்டது. அத்தகைய விடுமண்ணை, இயற்கையாகக் கிடைத்த மண்ணுடன் கரிப் பொருள் மற்றும் வைக்கோல் துண்டுகளை இணைத்து, புளிக்க வைத்து உருவாக்கியுள்ளனர். சிமெண்ட் என தற்காலத்தில் அழைக்கப்படும் சாந்து (செம்மண் சாந்து - சிமெந்து எனத் திரிந்திருக்கலாம்) ப் பொருளின் முன்னோடிக் கலவையே விடு மண்ணாகும்.

விவிலியம் தரும் மற்றொரு சுட்ட செங்கற்களை, விடுமண் கலந்து உருவாக்கிய பாபெல் கோபுரம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிந்துவெளியில் மோகஞ்சதாரோவில் அறியப்படும் செங்கல், விடுமண் பற்றிய செய்திகளை, பாபெல் கோபுர நிகழ்விலும் விவிலியம் கூறுகிறது. எனவே, மக்கள் கிழக்கிலிருந்து வந்தார்கள் என்ற செய்திக்கு, செங்கல்லும் விடுமண்ணும் சான்றுகளாக உள்ளன. பிற்காலத்தில் சுமேரியத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட ஊர் (Ur) என்ற நகரின் வரைபட அமைப்பு, மொகஞ்சதாரோ நகரின் வரைபட அமைப்பை ஒற்றிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.[733] எனவே, குமரிக் கண்ட அழிவிற்குப் பின் சிந்துவெளியில் குடியேறிய தமிழர்களில் ஒரு பிரிவினரே மெசபத்தோமியாவிலும் குடியேறினர் என்பதை அறியலாம்.

தொன்மைக் கால எழுத்து முறைகள்:

எழுத்து வடிவங்கள் எக்காலத்தில் அறிமுகமாயின என்று கூறுவது கடினம். தொடக்கத்தில் எந்தவொரு இனமும் எழுதியதாகத் தகவல்கள் இல்லை. ஒரு குழந்தை தவழ்ந்து, நடந்து, ஓடுவது போன்ற இயற்கையின் விதிகள் எழுத்துகளுக்கும் பொருந்தும். மாந்தன் தனது எண்ணங்களை மறந்துவிடாமல் இருக்கவும், பிற்காலத்தில் நினைவு படுத்திக் கொள்ளவும் சில குறியீடுகளை, பாறைகள், கற்கள் போன்றவற்றில் கீறி வைத்தான். அதன் வடிவம் அவனது எண்ண வடிவங்களாகவும் இருந்தன. அந்தக் குறியீடுகளின் பொருளை அவன்மட்டுமே அறிய இயலும். பிறரும் தனது எண்ணங்களை அறிந்து கொள்ள வேண்டும் எனக் கருதிய மாந்தன், சில உருவங்களைச் செதுக்கி வைத்தான். கை + கம்பு + விலங்கு ஆகிய படங்கள், வேட்டையாடுதலைக் குறித்தன. ஒரு பொருளைக் குறித்து

வரையப்பட்ட கோடுகள், பின்னர் விரிவடைந்து ஒரு நிகழ்வைக் குறிக்கவும் வரையப்பட்டன.

பொருளைக் குறித்த கோடுகள் பட எழுத்துகள் என்றும்[734] (Pictograph) ஒரு நிகழ்வைக் குறித்த கோடுகள் கருத்து எழுத்துகள் என்றும்[735] (Ideograph) அறியப்படும். தற்காலத்திலும் சில இளைஞர்கள் தங்கள் காதலை வெளிப்படுத்த இதயத்தினூடே அம்பு பாய்வது போன்ற படங்களை சுற்றுலாச் செல்லும் இடங்களில் செதுக்கி வைப்பதைக் காணலாம். இதயம் பெண்ணையும், அம்பு ஆணையும் குறித்து, காதல் வயப்பட்ட நிகழ்வைக் குறித்தன. இந்த குறியீடு தொடக்கத்தில் எந்த வொரு சொல்லையும் குறிக்கவில்லை. பட எழுத்துகளும், கருத்து எழுத்துகளும் இணைந்து, ஒரு தொடர் நிகழ்வைக் குறிக்கும் வகையில் எழுதப்பட்டன. இதுவே இன்றைய எழுத்து முறையின் தொடக்கம் எனலாம். தொடர் நிகழ்வைக் குறிக்க பல கோடுகள் வரையப்பட்டன. உருவங்கள் இணைக் கப்பட்டன. இவை சொற்களின் அடையாளங்களாக இருந்தன. மொழி வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒலி, ஒரு பொருளை அல்லது செயலைக் குறித்தது. இவ்வாறான ஒலி கூறுகளுக்கு இணை யான உருவப்படங்கள், எகிப்தியக் கோயில்களில் காணப்படு கின்றன. இந்தப் படவெழுத்து முறை (hicroglyphic) யை எகிப்திய ஓவியங்களில் காணலாம்.[736]

சொற்களுக்கு ஒரு படக் குறிப்பு என்ற நிலை மாறி, ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு குறி என்ற நிலை வந்த போது, அது முறையான எழுத்து முறையின் தொடக்கமாக அமைந்தது. ஆப்பெழுத்து (cuneiform) எனப்படும் முறை[737], ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு குறியீட்டைத் தந்தது. அக்குறியீடுகளை ஒலியாக மாற்றும் போது, பேசுகின்றவாறு அவை அமைந்தன. இவ்வா றான பல்வேறு எழுத்து முறைகள் மேற்கில் உள்ள நாடுகளில் காணப்பட்டன. குறிப்பாக, நடுத்தரைக் கடலுக்குக் கிழக்கே அமைந்திருந்த நாடுகளில் பரவலாக அறியப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியைச் சார்ந்தவரும் தங்களது மொழிகளின் ஒலிகளுக்கேற்ப, குறியீடுகளை உருவாக்கிக் கொண்டனர். அவைகள் பவ்வேறு நிலைகளில் மாற்றங்களையும் பெற்றன. ஒரு மொழியில் ஒலிவடிவம் என்றும் மாறாதது. வரிவடிவங்கள் காலம் தோறும் மாற்றம் பெறுபவை.

சிந்து வெளியில் காணப்படும் குறியீடுகள், மேற்கண்ட நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை என்றும், ஒவ்வொரு குறியீடும் ஓர் எழுத்தைக் குறிப்பன என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[738] மேலை நாடுகளில் அறியப் படும், சுமேரிய எகிப்திய எழுத்து முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட எழுத்துகளை சிந்துவெளியில் காண இயலும் என்பது ஆய்வாளர்களின் கருத்து. சிந்துவெளியில் பல சொற்கள் இணைந்து ஒரு தொகுப்பாக (Paragraph) அமைந்தவாறு அறியப் படவில்லை. 5000க்கும் மேற்பட்ட தனித்தனிச் சொற்களையே ஆய்வாளர்கள் இனம் கண்டுள்ளனர்.[739] சிந்துவெளியில் என்ன எழுது பொருள் பயன்படுத்தப்பட்டது என்பதை அறிய இயல வில்லை. ஓலைகளிலோ, எகிப்தில் அறியப்படும் பாப்பிரஸ் போன்றோ அவை எழுதப்பட்டிருக்க வேண்டும். அவை இயற்கையின் சீற்றங்களால் அழிந்து போயின. பானைகளிலும், கற்களிலும், பாறைகளிலும் எழுதப்பட்ட ஓரிரு சொற்களைக் கொண்டவைகளே கண்டறியப்பட்டுள்ளன. இவைகளின் எண்ணிக்கை 5000 க்குமேல் உள்ளதால், உறுதியாக அவர்கள் தொடர் சொற்களைக் கொண்ட தொகுப்பினை எழுதியிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

சிந்துவெளியில் காணப்பட்ட எழுத்துகளின் சொற்கள், இலங்கையிலும், தமிழ் நாட்டிலும், வட இந்தியப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.[740] இதன் அடிப்படையில் பஞ்சாப் முதல், இலங்கை வரையிலான நீண்ட நிலப்பகுதிகளில், ஒரு மொழியும், அந்த மொழிக் குரிய எழுத்துகளுமே பயன்பாட்டில் இருந்தன என்பது தெளிவாகின்றது. பஞ்சாபுக்கு வட மேற்கேயுள்ள பலுச்சிஸ் தானம் போன்ற பகுதிகளிலும் அவை கண்டறியப் பட்டுள்ளன. இதுவரையில் ஆயிரம் இடங்களுக்கு மேல், சிந்துவெளிக் குடியிருப்புகள் அகழ்வாய்வுகளில் கண்டறியப் பட்டுள்ளன. இருப்பினும் இவ்வெண்ணிக்கையைக் காட் டிலும் மேலும்மிகுந்துள்ள இடங்களை ஆய்வு செய்யவில்லை. சிந்துவெளியில் அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்கள், அதன் மொத்தப் பரப்பளவில் இரண்டு விழுக்காட்டுக்கும் குறை வானதே என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்த அளவில் கிடைத்துள்ள தகவல்கள், சிந்துவெளி மக்களின் வரலாற்றை முற்றிலுமாக வெளிக்கொணர்ந்து விட்டன எனக் கூற இயலாது.

அறியப்பட்டுள்ள இரண்டு விழுக்காட்டுப் பகுதிகளிலும் கிடைத்துள்ள தகவல்கள், மிகப்பழம் பெரும் நாகரிகத்தின்

வெளிப்பாடாக அமையவும் இயலாது. கிடைத்துள்ள 5000க்கும் மேற்பட்ட சொற்களைவும், பல ஆய்வாளர்கள் பலவாறு படித்துள்ளனர். குறிப்பாக, எஸ். ஆர். இராவ் என்பவர் படித்துப் பார்த்து, சிந்துவெளி மொழி சமற்கிருதமே என்று கூறுகிறார்.[741] சமற்கிருதம் என்ற மொழியே கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகே உருவானது என்ற அடிப்படையான வரலாற்றை அவர் மறந்துவிட்டார். கி.மு. 1000 ஆண்டுகளில் சமற்கிருதம் என்ற மொழி இருந்தது பற்றிய குறிப்புகள் எங்கும் இல்லை. தற்போதுள்ள சமற்கிருத எழுத்து வடிவங்கள், தமிழ் எழுத்துகளின் அடிப்படையில் உருவானவைகளே என்ற கருத்தைத் தனக்கு ஏற்புடையதாகக் கொண்டு, சிந்துவெளி எழுத்துகள் சமற்கிருத எழுத்தே என்று கூறுகிறார். அவர் படித்துச் சொன்ன பல சொற்களும், சமற்கிருத கண்ணோட்டத்தில் படிக்கப்பட்டவைகளாகும். இன்ன ஒலிக்கு இந்த எழுத்து என்று இராவ் கூறும் விளக்கம் தமிழ் மொழிக்குரிய விளக்கமே.

அஸ்கோ பர்ப்போலோ, ஐராவதம் மகாதேவன் போன்றோர், சிந்துவெளி மொழி திராவிட மொழியே என்கின்றனர். திராவிடம் என்று ஒரு மொழி இருந்ததற்கானச் சான்றுகள் எவையும் இல்லை. இந்நிலையில் முன் திராவிடம் என்று ஒரு மொழி இருந்ததாகவும் கூறுகின்றனர். அந்த முன் திராவிட மொழி எது, அதன் எழுத்துகள் யாவை, அது எங்கு பேசப்பட்டது என்பதை எவரும் விளக்கவில்லை. எஸ்.ஆர். இராவ், பர்ப்போலோ, மகாதேவன் ஆகியோர் தமிழ்மொழியே உலகின் முதன் மொழி என்ற கொள்கையை ஏற்பவர்கள் அல்லர். தமிழுக்கு எந்தச் சிறப்பும் கிடைத்துவிடக் கூடாது என்ற ஆரிய நோக்கைக் கொண்டவர்கள். சிந்துவெளி மொழி சமற்கிருதமே என்று சொன்னால் எவரும் ஏற்கமாட்டார்கள் என்பது மகாதேவனுக்குத் தெரியும். அது தமிழ் மொழியே என்று கூறுவதற்கு, அவரது ஆரியச் சார்புக் கொள்கை இடம் தரவில்லை. எனவே, திராவிட மொழி என்று, இல்லாத மொழியொன்றைக் கூறி, தன்னையும் ஆய்வாளர் பட்டியலில் இணைத்துக் கொண்டார்.

அண்மையில் கோவையில் நிகழ்வுற்ற செம்மொழித் தமிழ் மாநாட்டில், சிந்துவெளி மொழி பற்றிய ஆய்வரங்க நிகழ்வு ஒன்றுக்கு ஐராவதம் மகாதேவன் தலைமை வகித்தார். அவரது

மாணவர்கள் என்று சொல்லிக் கொண்ட இருவர், சிந்துவெளி மொழி பற்றிக் கட்டுரைகள் படித்தனர். கட்டுரைகள் படிக்கப் பட்ட பின்னர் பார்வையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, கட்டுரையாளர்கள் விடையளிப்பது வழக்கம். ஆனால் இரண்டு கட்டுரையாளர்களும் தங்கள் கட்டுரைகளைப் படித்த பின்னர், கேள்வி நேரம் இல்லை என மகாதேவன் அறிவித்துவிட்டார். இக்கட்டுரை யாளர்கள் இருவரும் படித்த செய்தி என்னவென்றால், சிந்துவெளி மொழியில், தமிழ்ச் சொற்களைவிட கன்னடச் சொற்களே, 70% - 30% என்ற அளவில் காணப்படுவதாக ஒரு கட்டுரையாளர் கூறினார். மற்றொரு கட்டுரையாளர், திருக்குறளில் காணப்படும் தமிழ்ச் சொற்கள் 20% அளவே சிந்து மொழியில் உள்ளதாகவும், யஷ் வக்ஞர் கவிதைகளின் 80% சொற்கள் உள்ளதாகவும் கூறினார். செம்மொழி மாநாட்டில், சிந்துவெளி மொழி கன்டை மொழியே என கட்டுரைகள் படிக்கப்பட்டன. பார்வையா ளர்கள் வரிசையில் அமர்ந்திருந்த பொள்ளாச்சி மகாலிங்கம் இலங்கை சிவத் தம்பி ஆகியோர் இக்கூற்றுகளுக்கு எந்த மறுப்பும் வெளியிடவில்லை.[742] இராவதம் மகாதெவனின் உள்ளக் கிடக்கை எதுவென்பதை, அம்மாநாட்டு நிகழ்வு வெளிப்படுத்தியது. இந்நிலையில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சிந்துவெளி மொழி, கன்னட மொழியே எனக் கூறி வரும் மகாதேவனுக்கு, முப்பது இலக்கத்துக்கும் மேலாக உதவித் தொகையும் வழங்கியுள்ளது. தமிழைச் சிறுமைப்படுத்தி வரும் மகா தேவனுக்கு, தமிழுக்கான வளர்ச்சி நிதியிலிருந்து பணம் கொடுத்து உதவியது. செம்மொழி நிறுவனம், தமிழ்சார்ந்த நிறுவனம் அன்று என்பதை மெய்ப் பித்துள்ளது.

ஏற்கனவே, இராவதம் மகாதேவன், சிந்துவெளி மொழி மலையாளமே என்று ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதிக் கொடுத் துள்ளார் என்பதும் நோக்கத்தகுந்தது.[743] சிந்துவெளி மொழி கன்னடம் என்று கூறுகிறார், மலையாளம் என்று கூறுகிறார். திராவிடம் என்று கூறுகிறார், ஆனால் தமிழே என்று இது வரையில் கூறவில்லை. இத்தகைய தமிழ்ப் பகைவர்களுக்குத் தான் இலக்கக் கணக்கில் தமிழ் நிறுவனங்கள் பணத்தை வாரி வழங்கி வருகின்றன.

இறுதியாக, திரு.இரா. மதிவாணன் ஒருவர் மட்டுமே, சிந்துவெளி மொழி தமிழ் மொழியே என்று கூறி வருகிறார்.

இவருடைய படிப்பு தவறானது என்று ஐராவதம் குழுவினர் கூறி வருகின்றனர். இரா மதிவாணனின் விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக உள்ளன. தன்னுடைய விளக்கங் களை மெய்ப்பிக்கப் பல்வேறு சான்றுகளை மதிவாணன் காட் டியுள்ளார்.[744] தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் வெளி வந்துள்ள Indus Script Dravidian என்ற நூலில் அவ்விளக்கங்கள் உள்ளன. எனினும் திராவிட மொழி என்று மதிவாணன் நூலுக்கான தலைப்பைக் கொடுத்துள்ளது ஏற்கக் கூடியதன்று. திராவிடம் என்ற சொல்லின் பொருளை மதிவாணன் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் இன்னும் கூடப் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் நாட்டில், தமிழர் அல்லாதார் தங்கள் நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்ளவும், தமிழ் நாட்டுத் தலைவர்களாக வலம் வரவும், திராவிடம் என்ற முகமூடியை அணிந்து கொண் டுள்ளனர். (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் திராவிடம் என்ற நூலைக் காண்க)

சுமேரிய மொழி தமிழ்மொழியே என்று ஈராஸ் பாதிரி யார் கூறினார்.[745] சுமேரிய மொழி இலக்கியங்கள் ஓரளவுக்குக் கிடைத்துள்ளன. சிந்துவெளிச் சொற்களைப் போல் அல்லாமல், சொற்றொடர்கள் அளவில் அவை கிடைத்துள்ளன. தமிழைப் பற்றி எந்த புரிதலும் இல்லாத மேலை நாட்டு ஆய்வாளர்கள், சுமேரிய இலக்கியங்களைப் படித்துப் பொருள் கூறியுள்ளனர். சூல்சு ஒப்பேர் (Jules Oppert), கிராமர் (Kramer) போன்றோர் சுமேரிய இலக்கியங்களைப் படித்தவர்களில் அடங்குவர்.[746] இவர்களது பல சொற்களுக்கான ஒலிப்புகள் தவறாகவே உள்ளன. தமிழ் என்ற சொல், ஒரு கடவுளுக்குரிய பெயராக சுமேரிய இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதனைத் தமுழ் எனப் படித்துள்ளனர். ஊர் என்ற சுமேரியத் தலை நகரின் பெயர்க்காரணம் தெரியவில்லை என்கின்றனர். ஊர் என்ற சொல்லுக்கான பொருள் தெரியவில்லையென்றும், அது எம்மொழிச் சொல் என்பது புரியவில்லை என்றும் கூறுகின்றனர்.[747] (The etymology and origin of the world ur is uncertain). இவர்கள் படித்தளித்த சுமேரிய இலக்கியங்களை தான் நாம் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. பல சொற்களை வலமிருந்து இட மாகப் படித்துள்ளனர். மாறன் (Maran) என்ற தமிழ்ச் சொல்லை, நாராம் (Naram) எனப் படித்துள்ளனர்.[748]

இதைப் போன்றே சிந்துவெளி எழுத்துகளையும் சொற் களையும் தப்பும் தவறுமாகப் படித்து, அத்தவறுகளை சமற்

கிருத மொழிக் கண்ணோட்டத்தில் திருப்பி உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், பொருளையும் எஸ்.ஆர். இராவ் கொடுத்துள்ளார். ஐராவதம், வலமிருந்து இடமாகப் படித்து, புதுப்புது சொற்களைக் கூறுகிறார். மொழிகள் பற்றியும், வரலாறு பற்றியும் தெரிந்திராத பொதுமக்கள், இத்தகைய கற்பனையான விளக்கங்களைப் படித்து, உன்மை யென்றே நம்புகின்றனர்.

அஸ்கோ பர்ப்போலோ, அடிப்படையில் ஒரு சமற்கிருத மொழி ஆய்வாளர். அவருக்குத் தமிழ் மொழி பற்றிய ஆழமான அறிவு இல்லை. அனைத்து மொழிகளையும் சமற்கிருதக் கண் கொண்டு நோக்குபவர். பர்ப்போலோவைப் போன்றே, வெளிநாட்டிலிருந்து தமிழகம் வந்து தமிழ் கற்று உரைநடை மற்றும் இலக்கியங்கள் படைத்தவர்களும் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் போன்ற மரபு நூல்களைக் கற்றே புலமை பெற்றவர்கள். இன்று வெளி நாடுகளில் அறியப்படும் வெள்ளை இனத்தாரும் அவ்வாறே.

தமிழ் நாட்டில் சிந்துவெளி மொழியை விளக்கிக் கூறும் ஐராவதம் மகாதேவனுக்கே, தமிழின் வேர்ச் சொற்கள் பற்றித் தெரியாது. இது கடுமையான குற்றச்சாட்டு என கருத வேண்டாம். உண்மை நிலை அதுவே. ஒரு சொல், தரிழ்ச் சொல்லா, அல்லது தமிழினின்றும் திரிந்த பிறமொழிச் சொல்லா எனக் கண்டறிய வேர்ச்சொல் பற்றிய தெளிவு இருக்க வேண்டும். அத்தகைய தெளிவு பாவாணர் ஒருவருக்கு மட்டுமே இருந்தது. பாவாணர் வழியில் இன்று பத்துக்கும் குறைவானவர்களே வேர்ச்சொல் அறிந்த அறிஞர்களாக உள்ளனர். எஸ்.ஆர். இராவ், பர்ப்போலோ, மகாதேவன் போன்றோர் கூறும் விளக்கங்களை வேர்ச் சொல் அறிஞர்கள் ஏற்க மாட்டார்கள். ஒரு சொல்லை தமிழ் இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுவது எளிது. அச்சொல்லுக்கான வேர்ச்சொல்லைக் காட்டுவது கடினமானது. தொல்காப்பியம், வேர்ச் சொல் பற்றிய விளக்கத்தைச் சுருக்கமாகவே தருகின்றது. அதற்குத் தொல்காப்பியர் கூறும் காரணம் யாதெனில், வேர்ச் சொற்கள் பற்றிப் புலவர்களுக்கு நன்கு தெரியும் என்பதால், அதனை மேலும் விளக்காமல் விடுக்கின்றேன் என்பதாகும்.[749] இக் கூற்றின் படி, வேர்ச் சொற்கள் பற்றிய அறிவினை தொல் காப்பியர் காலத்துப் புலவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதை உணர முடிகின்றது.

இந்த அறிவுத் திறன் நாளாவட்டத்தில் குறைந்து மறைந்தே போனது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்த மிகப்பெரும் தமிழறிஞர்களுக்குக் கூட, வேர்ச் சொல் பற்றிய சிந்தனை இருந்ததில்லை. தமிழ்த்தாத்தா உ.வே.சா. தரும் பட்டியலில், பல தமிழ்ச் சொற்களை அவர் சமற்கிருதச் சொற்களாகக் கருதுவதைக் காணமுடிகிறது.[750] மறைமலை அடிகள் கூட தனித்தமிழில் ஆர்வம் கொண்டு, தமிழ்ச் சொற்களையே பயன் படுத்திவந்தாறென்றாலும் வேர்ச் சொல்பற்றிய ஆய்வினைக் குறித்துப் பாவாணரைப் பாராட்டி எழுதியுள்ள கடிதம் வாயி லாக, தமக்கு வேர்ச் சொல்லைக் கண்டறிவதில் முயற்சியில் லாமல் போனதைக் குறிப்பிடுகிறார். எனவே, சிந்துவெளி பற்றிய சொல் விளக்கங்களை, வேர்ச் சொல் நோக்கில் அணுகி ஆராய்வதே சரியான, உண்மையான ஆய்வாக, அமையும்.

இத்தகைய வேர்ச் சொல் அறிவு இல்லாததால்தான், கங்காணியார் கால்டுவெல் தனது ஆய்வில் பல தவறுகளைச் செய்துள்ளார். பன்மொழி அறிந்தவரான கால்டுவெல், சொற் களை ஒப்பிட்டு, ஒப்பிலக்கணம் தந்தார். கால்டுவெல்லுக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழோடு பன்மொழிச் சொற்களை ஒப்பிட்டவர் பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் துரை மகனாவார்.[751] கால்டுவெல்லின் ஆய்வுகளை மதிப்பிட்ட தேவ நேயப் பாவாணர், “கால்டு வெல், சாண் ஏறி முழம் சறுக்கியவர்”, என்று கூறுகிறார். சிந்துவெளிச் சொற்களை ஆய்வு செய்த பாவாணர், அவை தமிழ்ச் சொற்களே என்றும், தமிழ் வேரினையும், மூலத்தையும், தமிழ் இலக்கண மரபுகளையும், விதிகளையும் கொண்டவைகளே எனத் தெளிவு படுத்தினார். பாவாணருக்கு மேல் ஒருவர் வந்து, சிந்துவெளித் தமிழ்ச் சொற்கள் பற்றிய விளக்கங்களை அளிக்க வேண்டிய தேவை இல்லை.

கங்காணியார் கால்டுவெல், திராவிடம் என்ற சொல்லின் தோற்றம், பொருள், ஆழம் ஆகியவற்றின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாமல், அது தென்னிந்தியாவைக் குறிக்கின்றது என்ற தவாறான தகவலைத் தந்துவிட்டார். அதன் வழியில் தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிகளைத் திராவிட மொழிகள் என்ற கட்டமைப்புக்குள் கொண்டுவந்தார். சமற் கிருதம், இந்தி, வங்காளி, குசராத்தி, காஷ்மீரி போன்ற மொழிகள், சமற்கிருதத்தை மூலமாகக் கொண்ட குடும்பம் என வரைய

றுத்தார். இதுவே, திராவிடம் என்ற சொல்லை அவர் பயன் படுத்தியதற்கான காரணமாகும். எல்லிஸ் துரை மகனார், தெலுங்கு கன்னடம், மலையாளம், துளு, கொங்கிணி போன்ற மொழிகளை, திராவிட மொழிகள் என்று கூறாமல், தென் னிந்திய மொழிகள் என்றே கூறுகிறார்.[752] இது, கால்டுவெல்லின் பார்வையை விட, சரியான, மிகச் சிறந்த பார்வையாகும். எல்லி சின் வழியில் கால்டு வெல் ஆய்வுகள் மேற்கொண்டிருந்தால், திராவிடம் என்ற இமாலயத் தவறைச் செய்திருக்க மாட்டார். எல்லிசின் குறிப்புகளை ஆராயும் போது, கால்டு வெல்லுக்கு முன்பு 40 ஆண்டுகளுக்கு முந்தியே, தென்னிந்திய மொழிகளுக் கான ஒப்பிலக்கணத்தை அவர் கொடுத்துவிட்டார் எனலாம். எல்லிசின் பல செய்திகளையே, தனது கண்டுபிடிப்பாக கால்டு வெல் கூறிக் கொள்கிறார். (எல்லிசின் குறிப்புகள் அடங்கிய ஆவணங்களை, லண்டன் அருங்காட்சியக, நூல் நிலையத்தி லிருந்து மீட்டுக் கொண்டு வந்த, பன்மொழி அறிஞர் பா. மருத நாயகம் அவர்கள், எல்லிசின் குறிப்புகள் என்ற நூலில் மேற் கண்ட செய்திகளை விளக்கியுள்ளார். உ.வே.சா. போன்றோர் பற்றிய தகவல்களும் வெளிவந்துள்ளன.)

சிந்துவெளி எழுத்துகளையும் சொற்களையும் ஆய்வு செய்த ஈராஸ் பாதிரியார், திராவிடம் என்ற சொல்லால் தமிழைக் குறிப்பிடுகிறார். ஈராஸ் பாதிரியார் காலத்தில் (1930), தமிழைக் குறிப்பதற்கு திராவிடம் என்ற சொல்லையே, வெளிநாட்டவரும் உள்நாட்டவரும் பயன்படுத்தினர் என்று கூறலாம். அவ்வழியிலேயே ஈராஸ் பாதிரியாரும் திராவிட மொழி என்று குறிப்பிடுகிறார். 1940 களில், திருச்சிராப்பள்ளி, புனிதவளனார் கல்லூரியில் பணியாற்றிய ஜெரோம் டிசூசா, ஏர்ராட் போன்ற பாதிரிமார்கள், ஈராஸ் பாதிரியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாவர். அவரிடம் பயின்ற பழைய மாணவர்களிடம், அவ்விரு பாதிரியார்களும், ஈராஸ் பாதிரியாரின் சிந்துவெளிக் கண்டு பிடிப்புகள் பற்றி வகுப்பு களில் கூறியுள்ளனர். அப்பழைய மாணவர்களில் ஒருவர் கூறுகிறார், “ஈராஸ் பாதிரியார் கண்டு பிடித்த சிந்துவெளி சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்களே என்பதையும், அதனை ஜெரோம் டிசூசா என்ற பாதிரியாரிடம் கூறி (தமிழகத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்த மங்களூர்க் காரர்), இத்தமிழ்ச் சொற்கள் தமிழ் நாட்டில் பேச்சு வழக்கில் உள்ளனவா என்று கேட்டார். தமக்குத் தெரிந்திராத சொற்கள் சிலவற்றை, தமிழ்

அறிஞர்களிடம் கேட்டும், அவை தமிழ்ச் சொற்களே என ஈராஸ் பாதிதியாரிடம் தெரிவித்தேன் என்று திருச்சி பாதிரி யார் கூறினார்," என்பதாகும்.[753] எனவே, ஈராஸ் பாதிரியார் குறித்த திராவிடம் என்ற சொல், தமிழைக் குறித்தே சொல்லப் பட்டது என்க.

சிந்துவெளி மொழி பற்றி பல்வேறு கொள்கைகள் வெளி யிடப்பட்ட போதிலும் அம்மொழி பற்றியும் நாகரிகம் பற்றியும் அறிய வேண்டிய செய்திகள் பல உள்ளன. பாரசீகத்தின் கிழக்கு எல்லை முதல் (இன்றைய ஆப்கானிஸ்தான்) கங்கைவரையிலும் மேற்குக் கிழக்காகவும், காஷ்மீர் முதல் விந்திய மலைத் தொடர் வரை வடக்குத் தெற்காக விரிந்து பரந்திருந்த சிந்துவெளி நாகரிகம், ஆய்வாளர்களின் கண்ணோட்டத்தில் குறைத்தே மதிப்பிடப்பட்டுள்ளது.

1. இப்பரந்து விரிந்த பகுதிகளில், இரண்டு விழுக்காட்டுப் பகுதிகளே அழ்வாய்வுகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2. இந்த இரண்டு விழுக்காட்டுப் பகுதிகள் தரும் செய்திகளே, தமிழ் மொழிபற்றியும், நாகரிகம் பற்றியும், வரலாறு பற்றியும் விளக்கு கின்றன.

3. மேலும் பரவலாக ஆய்வு செய்யப்பட்டால், தொல்தமிழரின் உண்மையான வரலாறு உறுதியாக வெளிப்படும்.

ஆனால், சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம் என்று உறுதியாக அறியப்பட்டதால், இந்திய அரசு மேற்கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ள அக்கறை காட்டவில்லை. பாகிஸ் தானியப் பகுதியிலுள்ள இடங்களை, அந்நாட்டின் வரலாற் றாய்வாளர்கள், அகழ்வாய்வு செய்து பார்த்துள்ளனர். அதன் முடிவாகவே அந்நாகரிகம், கி.மு. 9500 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறினர். (இந்திய அரசு கி.மு. 7500 எனக் கூறுகிறது.) குசராத்தில், கண்ணன் வாழ்ந்திருந்த அரண் மனையும் நகரமும் (துவாரகை) தற்போது கடலில் மூழ்கி விட்டதாகக் கருதுகின்றனர். கடல் கொண்ட அந்நகரை கண்டுபிடிக்க, இந்திய அரசு 300 கோடி உருவாக்கங்களுக்குமேல் செலவு செய்ய பணம் ஒதுக்கியது. ஏழாண்டுகள் தொடர்ந்து நடந்த ஆய்வுகளில், அவ்வாறான நகரம் எதுவும் கடலுள் இருப்பதைக் கண்டறிய இயலவில்லை. எனவே அத்திட்டத்தை கைவிட்டனர். இந்திய அரசின் பார்வை தமிழுக்கும் தமிழர்

களுக்கும் சார்பாக இல்லை என்பதற்கு மேற்கண்ட எடுத்துக் காட்டே போது மானது. இந்நிலையில் சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆரியச்சார்பு ஆய்வாளர்களின் மதிப்பீடுகள், உண்மை களுக்குப் புறம்பானவைகளாகவே உள்ளன எனலாம்.

ஐராவதம் மகாதேவன் எந்தவகையில் பாராட்டுக்குரியவர் என்றால், சிந்துவெளி முத்திரைகளில் காணப்பட்ட சொற் களை முறைப்படுத்தி வெளியிட்டார் என்பதே. இது கடின உழைப்பைத் தந்த பணியாகும். இப்பணியைத் திறம்படச் செய்துமுடித்த வகையில் அவர் பாராட்டுக்குரியவராகிறார். மேலும் தமிழ்நாட்டிலும், தென்னிந்தியாவின் பிற பகுதிகலும் அறியப்பட்ட கல்வெட்டுகளை இனம் கண்டு, அவற்றையும் முறைப் படுத்தியுள்ளார். ஆங்கில மொழியிலேயே அவர்தம் ஆய்வுகளை வெளியிட்டுள்ளார். சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையதன்று என்று முடிவு செய்தவகையில் அவரைப் பாராட்டலாம். ஆனால் அது திராவிட நாகரிகம் எனக் குழப் புவது ஏற்றுக் கொள்ள இயலாதது. ஐராவதம் மகாதேவன் செய்துள்ள மாபெரும் தவறு யாதெனில், அவர் முறைப் படுத்திய எழுத்துகளை, வலமிருந்து இடமாகப் படித்ததுதான். என்று கருதப்படுகின்றது. இம்முறையில் பல நூறு சொற்கள் பொருளிழந்து காணப்படுகின்றன என்பர். வலம் - இடம் முறைக்கு ஐராவதம் கூறும் காரணம் யாதெனில், சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் சொற்களின் எழுத்துகள் பெரிய உருவில் தொடங்கி வரவர சிறியதாகக் காணப்படுகின்றது என்றும், மீதம் உள்ள எழுத்துகள் வலது பக்கத்திலேயே, முதல்வரிக்குக் கீழே எழுதப்பட்டுள்ளது என்பதுமேயாகும். இக்கருத்தை மதிவாணன் ஏற்றுக் கொள்ளவில்லை. செய் தியைச் சொல்பவர் எவரும் உளி கொண்டு எழுத்துகளைக் செதுக்குவதில்லை. அதனைச் செதுக்கும் தொழிலாளிக்கு அவ்வெழுத்துகளைப் பற்றி எதுவும் தெரியாது. அவற்றை வலது பக்கம் சிலர் பொறித்துள்ளதால், சொற்கள் வலமிருந்து இடமாக உள்ளன என்பதை ஏற்க இயலாது என்பது மதிவா ணனின் கூற்று.

திரு. மதிவாணன், இடமிருந்து வலமாகவே சிந்துவெளிச் சொற்கள் உள்ளன வென்று கூறுகிறார்.[754] வலமிருந்து இட மாகப் படித்தால் சொல்லும் பொருளும் கிடைக்காத நிலையில் இடமிருந்து வலமாகப் படிக்கும் போது தெளிவாகக் கிடைக்

கின்றன என்கிறார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது. சிந்துவெளி எழுத்துகளின்றும் புதிய முறையில் உருவாக்கப்பட்ட தமிழ் எழுத்துகளைக் கொண்ட சொற்கள், சொற்றொடர்கள் அனைத்தும் இடமிருந்து வலமாகவே எழுதப் பட்டுள்ளன என்பதை உணரலாம். சிந்துவெளிச் சொற்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டிருந்தால், அதன் தொடர்ச் சியான புதிய தமிழ் முறையும் (அதனைப் பிராமி என்று பெயரிட்டுள்ளனர்.) வலமிருந்து இடமாகவே எழுதப்பட்டி ருக்க வேண்டும். ஆனால் கல்வெட்டுகளில் அவ்வாறு எழுதப் படவில்லை.

மேற்கித்திய மொழிகளான செமிட்டிக் மொழிகளும், பாரசீகம், உருதுபோன்ற மொழிகளும் வலமிருந்து இடமாகவே எழுதப்படுகின்றன. ஆனாலும் வாக்கியங்களுக்கு இடையே எழுதப்படும் எண்கள், இடமிருந்து வலமாகவே எழுதப்படு கின்றன. 2012 என்ற எண்ணை 2102 என எழுதுவதில்லை. மொழி பல்வேறு நிலைகளில் மாற்றம் கண்டு, எழுத்து முறைகளும் மாறிய போதும், எண்கள் இடமிருந்து வலமாகவே எழுதப் படுகின்றன. இதற்கான காரணம் யாதெனில், எண்களைக் கண்டு பிடித்தது தமிழர்களே என்பதும், தமிழர்கள் எண்களை இடமிருந்து வலமாகவே எழுதினர் என்பதும் நோக்கத்தக்கது. தமிழர்கள் எண்கள் முறையை ஏற்றுக் கொண்ட அராபி யரும், அவ்வாறு எழுதி வருகின்றனர். தமிழ் நாட்டில் அறியப் படும் கல்வெட்டுகளும், ஓலைச் சுவடிகளும் இடமிருந்து வலமாகவே எழுதப்பட்டன. தங்களுடைய முன்னோர் எழுதிய முறைப்படியே தமிழர்கள் எழுதிவந்தனர். எனவே, தமிழர் களின் எழுத்து முறை இடமிருந்து வலமாகவே எழுதப்பட்டது. சிந்துவெளித் தமிழும் அதற்கு விதிவிலக்கன்று. ஐராவதம் அவர்களின் ஆய்வுகளால் எந்தத் தீர்வையும் எட்ட இயலாது என்பதுடன், வரலாற்றைக் குழப்பும் செயலுமாகும் என்பது மதிவாணன் எடுத்து வைக்கும் சான்றுகளாகும்.

தமிழ் மொழியும், தமிழ் எழுத்துகளும் சமற்கிருதத்தி லிருந்து பிறந்தவை என்ற கொள்கையைக் கொண்டவர் ஐராவதம். வடக்கேயிருந்து தமிழகத்துக்கு வந்த சமணர்களே, தமிழுக்கு வரிவடிவம் கொடுத்தவர்கள் என்றும், அசோகனின் கல்வெட்டுகளே இந்தியாவின் முதல் எழுத்துவடிவங்கள் என்றும், அதன்வழியிலேயே தமிழ் எழுத்துகள் தோன்றின

என்றும் கூறப்பட்டது. பிராமி என்பது வடக்கே தோன்றிய எழுத்து முறையென்றும், அதன் வழியிலேயே, தமிழ் எழுத்துகள் தோன்றின என்றும் சிலர் கூறினர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அறியப்பட்ட அசோகனின் கல் வெட்டுகளில் காணப்படும் எழுத்துகள், கி.மு. 850 ஆண்டில் இசுராயெல் நாட்டின் மன்னன், மேஷ (Mesha) என்பவனின் ஆணைகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் காணப்படுகின்றன என்ற செய்தி பற்றி ஏற்கனவே விளக்கியுள்ளோம். சமயம், இனம், மொழி, நம்பிக்கை ஆகிய கூறுகளைச் சார்ந்து நிற்பவர்கள் ஓராய்வாளர் என்ற தகுதியை இழந்து விடுவர். நடுநிலை என்ற தகுதியற்றவர் ஆய்வாளர்களாக இருக்க இயலாது.

ஐராவதம் மகாதேவன், சமற்கிருதமே இந்தியாவின் முதல் மொழி என்ற கொள்கையைக் கொண்டவர் என்பதால், அவருடைய ஆய்வுகள் நம்பகத்தன்மை கொண்டவையல்ல என உறுதியாகக் கூறலாம். தமிழ் மொழியில் அடிப்படையான 30 ஒலிகளும், ஆய்தமும், குற்றியலுகரம், குற்றியலிகரம் என மூன்று ஒலிகளும் சேர்ந்து, 33 ஒலிக் குறிப்புகள் இருக்கின்றன. இந்த 33 ஒலிக்குறிப்புகளை, போனீசியர்கள் 22 குறியீடுகளாகக் குறைத்து, சில எழுத்துகளுக்கு புள்ளிகளிட்டு, 33 ஒலிகளைப் பெற்றனர். பிராகிருதம், தொடக்க காலப் பாலி மொழி, திபேத்திய மொழி போன்றவை 30 எழுத்துகளைக் கொண்ட மொழிகளே என்பதோடு, அவை தமிழின் கிளை மொழிகளே எனலாம். சமற்கிருதம் என்ற மொழியை ஆரியர்கள் கையாளத் தொடங்கு முன், அதற்கும் 30 எழுத்துகளே இருந்தன. சிவ சூத்திரம் என்னும் நூலில், சமற்கிருதத்துக்கு 42 எழுத்துகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பிற்கால வளர்ச்சி யாகும். பாணினி தனது சமற்கிருத இலக்கண நூலை எழுது முன் சமற்கிருதத்துக்கு 42 எழுத்துகள் இருந்தன. பாணினியே மேலும் ஒன்பது எழுத்துகளை அறிமுகம் செய்து, 51 என உயர்த்தினார். பாணினியின் காலம், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். வரலாற்றுக் காலத்தில் உருவான சமற்கிருதம், பல்வேறு காலங்களில் எழுத்துகளின் அளவுகளைக் கூட்டி வந்துள்ளது.

தமிழ்மொழியின் அடிப்படை எழுத்துகள் 30 என்பது என்றும் மாறாதது. சிந்துவெளித் தமிழ் அறியப்பட்ட காலத்திலும், அதற்கு முன்பும், தற்போதும் எதிர்காலத்திலும்,

தமிழின் அடிப்படை எழுத்துகள் 30 என்பது மாறாதது. தமிழி னின்றும் கிளைத்ததாகக் கருதப்படும் செமிட்டிக் மொழி களிலும், 30 எழுத்துகளே அறியப்பட்டன. மூன்று ஒலிகளும் இணைக்கப்பட்டன. பாபிலோனியக் கடவுளர்கள் 3300 என்றும், ஆரியத் தேவர்கள் 33 கோடி என்றும் சொல்லப்படுவதெல் லாம், தமிழின் 33 ஒலிக் குறிப்புகளை அறிவிக்கும் உருவகங் களே. தமிழை முதன் மொழியாகக் கொண்ட சமற்கிருதம், தன்னையே முதன் மொழியாகக் காட்டிக் கொள்ள முயன்றது. அம்முயற்சியில் பல வரலாற்று உண்மைகளை மறைத்தது. இருந்தாலும் சமற்கிருதம் முதன் மொழியன்று என்று உண்மையை, தன்னிடமே கொண்டு, அதை வெளிக்காட்டியும் வந்துள்ளது. இந்த உண்மைகளை, கடந்த காலங்களில் எவரும் உன்னிப் பார்த்து உணரவில்லை.

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட எழுத்து முறைகளை அறிந்து படிப்ப தெற்கென பல்வேறு அறிஞர்கள், பலகாலம் முயன்று, ஒரு முறையைக் கண்டு பிடித்தனர். அம்முறைப் படியே எகிப்திய, சுமேரிய எழுத்துகள் படிக்கப்பட்டன. அம் முறையை சிந்துவெளித் தமிழிலும் பயன்படுத்தலாம். பயன் படுத்தியிருக்க வேண்டும். ஈராஸ் பாதிரியார் இம் முறையைக் கையாண்டே, சுமேரியமும் சிந்து மொழியும் ஒன்றே எனக் கூறினார். பழைய மெசபத்தோமிய மொழியில் தாக்கங்களை அறிவித்தார். கில்காமேஷ் (Gilgamesh) என்ற சொல், மெசபத் தோமிய மொழியின் இலக்கியத்தலைப்புச் சொல்லாகும்.[755] இதே சொல், சிந்து தமிழிலும் காணப்படுவதாக ஈராஸ் கூறினார். ஆனால் இச்சொல்லுக்கான பொருள் இதுவரை அறியப்படவில்லை.

திரு. ஐராவதம் மகாதேவன், இந்திய ஆட்சிக் பணித் துறையில் பலகாலம் பணியாற்றியவர். சிந்துவெளி ஆய்வில் முனைப்புடன் ஈடுபட்டவர். மிகச் சிறந்த அறிவாளி. பயனுள்ள பட்டறிவைப் பெற்றவர். பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவர். நாளிதழ் ஒன்றிற்கு ஆசிரியராகவும் பணியாற் றியவர். தனது சமற்கிருதச் சார்புக் கொள்கையால், அவருடைய ஆய்வுகள் தடம் புரண்டு போயின. தமிழை முதன்மைப் படுத் தாமலும், அதே வேளையில், தமிழைச் சிறுமைப் படுத்தா மலும், திராவிடத்தைத் தாங்கிப்பிடிக்க நினைக்கும் சிலருக்கு, மகாதேவன் போன்றவர்கள் தேவைப் படுகின்றனர். திராவிடம்

என்ற கொள்கை, தற்காலத்தில் ஆட்சி அதிகாரத்துக்கும், பொருளீட்டவும், தமிழர்களின் தலைவர்களாகத் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் பயன்பட்டுவருகின்றது. தமிழுக்கோ, தமிழருக்கோ அது எந்த வகையிலும் பயனளிக்கப் போவதில்லை. இத்தகைய தற்சார்பு சிந்தனை கொண்ட அரசியல் தலைவர்களுக்கு மகாதேவன் மிகச் சிறந்த ஆய்வாள ராகக் காட்சியளிக்கிறார். தமிழைச் சிறுமைப் படுத்துவதை, எவரும் கண்டுபிடிக்காத அளவில், சிறுமைப் படுத்துவதே திராவிடத்தின் உத்தியாகும். இதனையே திரு. மகாதேவன் செய்து வருகிறார். இதனாலேயே திராவிடக் கொள்கையினர், அவருக்கு வேண்டுமளவு பண உதவிகளையும் செய்து வருகின் றனர்.

பொதுவாக ஆய்வாளர்களுக்குத் தற்செறுக்கு மிகுந்து காணப்படும். தங்களுடைய ஆய்வுக் கருத்துகளை, அவை தவறேயாயினும் விட்டுத் தர ஒப்ப மாட்டார்கள். அவர் களுடைய ஆய்வுகளைத் திறனாய்வு செய்பவர்களை, திட்டித் தீர்த்து விடுவார்கள். பிற ஆய்வாளர்கள் கூறுவதில் உள்ள உண்மைகளைவும் ஏற்க மாட்டார்கள். தன்னைவிட சிறந்த ஆய்வாளர்கள் எவருமிலர் என்ற மனப்போக்கு உடைய வர்கள். இத்தகைய ஆய்வாளர்களின் ஆணவப் போக்கினால், வரலாறு திசை திருப்பப் படுகிறது. குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஓராய்வாளர், அவரது ஆய்வுகாளல் பார்க்கப்படுவதில்லை. ஆய்வாளரின் சாதி, சமயம், பொருளியல், கூறுகள் அடிப் படையில் பார்க்கப்படுகிறார். பிராமணச் சாதி ஆய்வாளர் களுக்குத் தமிழ் நாட்டு ஊடகங்கள் முதலிடத்தைத் தருகின்றன. அவரைத் திறனாய்வு செய்யும் பிறசாதிக் காரரின் கட்டுரைகள் ஊடகங்களில் வெளியிடப்படுவதில்லை. சமற்கிருதச் சார்புக் கருத்துகள் முதன்மைப் படுத்தப்படுகின்றன. பிராமணர் அல்லாத சாதியினரில் அறியப்படும் ஆய்வாளர்கள், அந்தந்த சாதியினரால் போற்றப் படுகின்றனர். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளில் உள்ள அறிஞர்கள், ஆய்வாளர் களாக ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. எந்தவொரு ஆய்வா ளரின் கருத்துகளையும், அவை சரியென்றோ, தவறென்றோ, காலம் தான் முடிவு செய்கிறது. தகுதியான ஆய்வுகள், நிகழ் காலத்தில் புறக்கணிக்கப்பட்டாலும், எதிர்காலத்தில் நிலைத்து நிற்கும். பாவாணருடைய ஆய்வுகள் மேற்கண்டவற்றிற்குச் சரியான எடுத்துக் காட்டாகும். பாவாணர் வாழ்ந்த காலத்தில்,

அவருடைய ஆய்வுகள் புறந்தள்ளப்பட்டன. அவரைக் கடுமை யாகத் திறனாய்வு செய்தவர்கள், வரலாற்றில் மறைந்து போய் விட்டனர். இன்று பாவாணருடைய ஆய்வுகள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் மொழி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள்,

1. சாதி, சமய, இன, வட்டாரப் பிடிப்புகளிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

2. எந்தச் சமயத்தையும் தாங்கிப் பிடிக்கும் சிந்தனை இருக்கக் கூடாது.

3. தமிழோடு, குறைந்தது வேறு இரு மொழிகளையாவது கற்றறிந் திருக்க வேண்டும். குறிப்பாக, ஆங்கில அறிவு இருக்கவேண்டும். ஏனென்றால் உலக வரலாறுகள் ஆங்கில மொழி நூல்களாகவே உள்ளன.

4. வரலாற்றுத் துறையில் தெளிவு இருக்க வேண்டும். பெரும் பாலான தமிழறிஞர்களுக்கு வரலாற்றறிவு இருப்பதில்லை. ஆங்கிலப் புலமையும் இருப்பதில்லை. (பாவாணர் பல தகுதிகளைப் பெற்றிருந்தார்.)

5. தமிழ் மொழியில், குறிப்பாக தொல்காப்பியம், சங்க இலக்கி யங்களில் மிருந்த ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும்.

6. வட்டார பேச்சு வழக்குகள், நாட்டுப் புற மக்கள் பயன்படுத்தும் சொற்களை அறிந்திருக்க வேண்டும்.

7. சமற்கிருதம் பற்றிய தெளிவான சிந்தனை இருக்க வேண்டும்.

8. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட இனங்களின் மொழிகள் பற்றிய புரிதல் இருக்க வேண்டும்.

9. உலக சமயங்கள் பற்றிய தெளிவு இருக்க வேண்டும்.

10. ஒரு சொல், எம் மொழிச் சொல் என அறிகின்ற திறமை இருக்க வேண்டும். அச்சொல்லின் வேரும் மூலமும் அறிந்திருக்க வேண்டும். தமிழ் மொழியின் நுட்பமான இலக்கணவிதி களையும், ஆழ அகலங்களையும் அறிந்திருக்க வேண்டும்.

11. ஆய்வாளர் தாம் கூறும் விளக்கங்களுக்கு பல எடுத்துக் காட்டு களை முன் வைக்க வேண்டும்.

12. தன்னை விட சிறந்த அறிஞர் எவருமிலர் என்ற ஆணவச் சிந்தனை, ஆய்வாளர்களுக்கு இருக்கவே கூடாது.

மேலும் பலவற்றை நீட்டித்துக் கொண்டே போகலாம். இத்தகைய தகுதிகள் கொண்ட ஆய்வாளர்களின் கண்டுபிடிப் புகள் வரலாற்றில் உறுதியாக இடம்பெறும் என்பதில் ஐய மில்லை.

சிந்துவெளி மொழி தமிழே என்று, ஆய்வறிஞர் திரு. பூரண சந்திர ஜீவா ஒரு நூலை வெளியிட்டுள்ளார். மிகவும் சிறப்பான முயற்சி. நூற்றுக் கணக்கான சொற்களை விளக்கி யுள்ளார். தொடர்ந்து அப்பணிகளில் ஈடுபட்டதாகத் தெரிய வில்லை.

திரு. இரா. மதிவாணன் அவர்களே, தொடர்ந்து முனைப் போடு சிந்துவெளி ஆய்வில் ஈடுபட்டு வருகிறார். அவருடைய விளக்கங்கள் நிறைவாக உள்ளன வென்றாலும், தம்முடைய நூலுக்கு திராவிடம் என்ற சொல்லை இணைத்து அளித் துள்ளது நெருடலான செய்தி. Indus Script among Dravidian Speakers, Indus Script Dravidian போன்ற நூல்களில், திராவிடம் என்ற சொல்லைத் தவிர்த்திருக்கலாம். பலரும் செய்த பிழையை மதிவாணனும் செய்துள்ளார். மற்றபடி, திராவிடத் தைத் தாங்கிப் பிடிப்பதற்கான முயற்சியில் அவர் இறங்க வில்லை என்பது மழிச்சியைத் திருகின்றது. தனது கள ஆய்வை, வட இந்தியப் பகுதிகளில் நேரில் சென்று முடித்துள்ளார். மேலும் பல வட மாநிலங்களில் உள்ள பழங்குடி இனத்தா ரிடம் சிந்துவெளி மொழியின் தாக்கங்கள் உள்ளன வென் பதையும் கண்டறிந்துள்ளனார். தொடர்ந்து, எஸ்.ஆர். இராவ், ஐராவதம் மகாதேவன் போன்றோரின் விளக்கங்களுக்கு மறுப்பும், தெரிவித்து வருகின்றார். ஐராவதம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது போல், எவரும் மதிவாணன் அவர்களுக்கு நிதியுதவி செய்யாதது வருந்துதற்குரிய செய்தி. தமிழை முன்னிறுத்தும் ஆய்வாளர்கள் அனைவருக்கும் இதே நிலை மைகள் தான் உள்ளன. அரசாங்கப் பணத்தில் சமற்கிருதத்தின் புகழ்பாடும் ஆய்வாளர்கள், மிக எளிதாக அத்தொகையினைப் பெற்று விடுகின்றனர். தமிழ் மொழி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோர், தமது பணத்தையே செலவு செய்ய வேண்டிய நிலைமைகள் உள்ளன. ஈடுகொடுக்க இயலாதவர்கள், தங்க ளுடைய ஆய்வுகளையே நிறுத்திவிடுகின்றனர். திரு. மதிவாணன் அவர்களது ஆய்வுகள் வரலாற்றில் உறுதியாக இடம் பெறும்.

அண்மையில் செம்பியன் கண்டியூரில் கண்டெடுக்கப் பட்ட கற்கோடரியில் பொறிக்கப்பட்ட சிந்துவெளித் தமிழ் எழுத்துகள், குமரிமுதல் பஞ்சாப் வரையில் தமிழ் மொழியே பேசப்பட்டது என்ற உண்மையைக் கூறுகிறது.[756] இக்கற் கோடரியின் காலத்தை, தமிழகத் தொல்லியல் துறை குறைத்து மதிப்பிட்டுள்ளது. கி.மு. 1800 எனக் குறிக்கப்படும் அக்கோடரி, உண்மையில் அக்காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முற் பட்டது என்பதே உண்மையாகும். கி.மு. 1800 ஆண்டுகளில், உலகின் பல நாகரிகங்கள் அறியப்பட்டுள்ளன. இந்திய தொல்லியல் ஆய்வாளர்கள், ஐரோப்பியரின் கால வரை யறைகளைக் கணக்கில் கொள்கின்றனர். கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம் எனக் கூறி, அதனை இந்திய வரலாற்றோடு இணைக்கின்றனர். கி.மு. 7500 ஆண்டுகளில் மரக்கலங்கள் கட்டவும், கடல் செலவு மேற்கொள்ளவும் சிந்துவெளி மக்கள் அறிந்திருந்தனர் என்ற செய்தி வெளியிடப் பட்ட பின்பும், கி.மு. 1800 களில், கற்கோடரியைப் பயன் படுத்தினர் எனக் கூறுவது அறிவுடைமை ஆகாது. செம்பியன் கண்டியூர் கற்கோடரி பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்த போது, "அறப்பா நகர நாகரிகம், தென்னிந்தி யாவிலும் பரவியிருந்தது" என்பது தெளிவாகிறது என்றவாறு வெளியிட்டனர்.

சிந்துவெளியில் தோன்றிய நாகரிகம்,தென்னிந்தியாவிலும் பரவியது என்பது. தவறான சிந்தனையாகும். தமிழகத்தில் அறியப்பட்டிருந்த நாகரிகமே வடக்கே சிந்துவெளி வரை பரவியது என்பதே உண்மை நிலையாகும். வரலாற்றைத் தலைகீழாகப் பார்க்கும் முறையை ஏற்பதற்கில்லை. கற்காலம், புதிய கற்காலம் போன்ற காலக் கணக்குகள், ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருத்தமானவை. அது தமிழர் நாகரிக எல்லையைக் குறிக்கப் பயன்படாது. கி.மு. 7500 ஆண்டுகளில் நகரிய நாகரிகத்தில் தமிழர்கள் வாழ்த்திருந்தபோது, ஐரோப் பியரின் காலக்கணக்கீட்டு முறைகளை, தமிழர் நாகரிகத்தோடு தொடர்பு படுத்திப் பார்ப்பது, இன்னும் கூட, பிற்பட்ட, இந்திய நடைமுறைக்கு ஒத்துவராத, ஐரோப்பிய ஆய்வு முறை களை, தமிழர்கள் பற்றிநிற்பது வேடிக்கையானது. செம்பியன் கண்டியூர் கற்கோடரியின் காலத்தை, தமிழக தொல்லியல் துறையும், ஐராவதம் மகா தேவனும், குறைத்து மதிப்பிட் டுள்ளனர். அக்கற்கோடரியில், முருகு + அன் முருகன் என்ற

சொற்கள் காணப்பட்டதாக ஐராவதம் கூறுகிறார். இச்சொல், சரியான தமிழ்ச் சொல்லாயிருக்க, அது திராவிட மொழிச் சொல் என ஐராவதம் கூறுவது, வரலாற்றைத் திசை திருப்பும் முயற்சியாகும்.

வரலாற்றில் மற்றொரு தவறான அணுகு முறையும் உள்ளது. சிந்துவெளி நாகரிகம் அழிந்துவிட்டது என்று கூறுகின்றனர். நாகரிகம் என்பது, பல்லாயிரம் ஆண்டுக் கால பட்டறிவின் வளர்ச்சிநிலையாகும். அது வளர்ந்து கொண்டே தான் இருக்கும். கல்வி அறிவு பெற்ற ஒருவன், ஒரு காலத்தில் அவ்வறிவை இழந்து விடுவானா? அது போல் நாகரிகம் என்பதும் அறிவின் முதிர்ச்சியால் தோன்றுவதே. நாகரிகம் அழிந்துவிட்டது என்பது, உண்மையில் அந்நாகரிக மக்களின் குடியிருப்புகள், வாழ்ந்த பகுதிகள் அழிந்துவிட்டன என்பதையே குறிக்கும். நாகரிகம் ஒரு போதும் அழியாது. சிந்துவெளி நாகரிகம் அழிந்து விட்டது என்றால், அதன் தொடர்ச்சியாக வாழ்ந்திருந்த மக்கள், பழைய படி உணவு தேடும் முறைகளையும், வீடுகள் கட்டிக் கொள்வது எவ்வாறு எனத் தெரிந்து கொள்ள முற்பட்டார்களா? கி.மு. 10000 ஆண்டுகளில் தொடங்கிய நாகரிகம், தொடர்ந்து வளர்ந்தே வந்துள்ளது. சிந்துவெளியின் நகரக் கட்டமைப் புகள், குடியி ருப்புப் பகுதிகள் என்று உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள், அழிந்து போயினவேயன்றி, நாகரிகம் எக்காலத்தும் அழியாது. அழிந்துபட்ட கட்டமைப்புகளை, அடுத்தடுத்த தலைமுறையில் புதுப்பித்துக் கொண்ட நிகழ்வுகளே சிந்துப் பகுதியில் காணப்படுகின்றன. மேற்கே முதன் முதலில் தோன்றியதாகக் கருதப்படும் சுமேரிய நாகரிகத்தின் தொடர் நிகழ்வுகளே, பாபிலோனிய எகிப்திய நாகரிகங்கள் ஆகும். எனவே, நாகரி கங்கள் எக்காலத்தும் அழிவதில்லை அவை தொடர்ந்து பிற மக்களால் வளர்ந்ததையும், வளர்ச்சி பெற்றதையும் வரலாற்றில் நாம் காணலாம்.

எஸ். ஆர். இராவ் கூறும் சிந்துவெளிச் சிந்தனைகள்:

சிக்கரிபூர் ரெங்கநாத ராவ் என்ற பெயரைக் கொண் டவரே, எஸ்.ஆர். இராவ் என அழைக்கப்படுகிறார். இவர் ஒரு கன்னடத்துப் பிராமணர். சமற்கிருதமே இந்தியாவின் முதன் மொழியென்றும், தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருதத்தினின்றே தோன்றின என்ற கொள்கை

யுடையவர். இந்தியாவின் தொன்மக்குடியினர் ஆரியரே என்பது இவரது பார்வை. சிந்துவெளி நாகரிகம், ஆரிய நாகரிகமே என்பதும் இவரது ஆய்வு முடிவுகளாகும். கி.மு. 1500 ஆண்டுகளில் தான் ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தனர் என்ற பிற ஆய்வாளர்களின் முடிவுகளை இவர் ஏற்பதில்லை. சிந்துவெளியில் ஒரு புதிய நாகரிகத்தை உருவாக்கியவர்கள் ஆரியர்களே என்ற கொள்கையின் அடிப்படையில் பல நூல் களைப் படைத்துள்ளார். உலைத்தளமும் சிந்துவெளி நாகரி கமும் (Lothal and the Indus Civilization) என்ற தலைப்பிலும் ஒரு ஆய்வு நூலைப் படைத்துள்ளார். இவர் ஐராவதம் மகாதேவன், பர்ப்போலோ போன்ற ஆய்வாளர்களின் கொள்கைகளை ஏற்கவில்லை.[757] ஐராவதம் முரண்பாடான, தவறான செய்தி களையே தருகின்றார் என்பது இவரது கருத்து. சிந்துவெளி நாகரிகம் பற்றிப் பல செய்திகளை தமது நூலில் அவர் படைத் திருந்தாலும், மொழி பற்றிய அவரது கண்ணோட்டத்தை இங்கே காண்போம்.

எஸ். ஆர். இராவ் அவர்களுக்கு மைய அரசின் சார்பில் ஏராளமான தொகை, அவருடைய ஆய்வுகளுக்காக வழங்கப் பட்டன. குறிப்பாக காம்பே வளைகுடாவில் உள்ள, லோத்தள் என்ற கடற்கரை நகரை ஆய்வு செய்ய பலகோடி உருவாக்கள் ஒதுக்கப்பட்டன. உலைத்தளம் என்ற தமிழ்ச் சொல்லே, லோத்தள் எனத் திரிந்துள்ளது. கப்பல்கட்டவும், பழுதுபார்க் கவும் என, பல தொழிற்சாலைகள் அவ்விடத்தில் அமைந் திருந்தன. இத்துறை முகம் கி.மு. 5000 ஆண்டுக்கால பழமை வாய்ந்தது. சிந்துவெளியின் துறைமுக நகரங்களில் லோத்தள் முதன்மையானதாகக் கருதப்படுகிறது.[758] சிந்துவெளிப் பொருட்களோடு, தமிழகத்தின் வணிகப் பொருட்களும் இங்கு குவிக்கப்பட, இவ்விடம் இந்தியாவின் கடற்கரைமையமாக இருந்தது. இதுவன்றி, கராச்சிக்கு அருகே சுட்காசின்தோர் (Sutkagin - dor), சோட்கா கோ (Sotka Koh) ஆகிய துறை முக நகரங்களும் செயல்பாட்டில் இருந்தன.

1921-22 ஆம் ஆண்டுகளில் மொகஞ்சதாரோ - அறப்பா நகரங்கள் அகழ்வாய்வு செய்யப்பட்டன. இது வரையிலும் 1002 இடங்கள் அகழ்வாய்வுகளுக்குட் படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் பஞ்சாப், அரியானா, இராசஸ்தான், குசராத், மகராட்டிரம் ஆகிய மாநிலப்பகுதிகளில், சிந்துவெளிக் குடியி

ருப்புகள் இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளன. பாகிஸ் தானத்தின் தென்பகுதிகள் முழுக்க சிந்துவெளி நாகரிகத்தின் பகுதிகளாகும். இவையின்றி ஆப்கானிஸ்தான், ஈரானின் கிழக்கு எல்லைவரை கூட, இந்நாகரிகம் பரந்து விரிந்து காணப்பட்டது. களிபங்கன் (Kalibangan) நகரமும் சிறப்புக் குரிய அகழ்வாய்வு செய்யப்பட்ட நகரமாகும்.[759] சிந்துவெளிப் பேரரசைச் சரியாகக் கணக்கிட்டால், கிழக்கு மேற்காக 1600 அயிரத்தொலைவும், தென் வடக்காக 1100 அயிரத்தொலைவும் இருந்தது எனலாம்.

சிந்துவெளி எழுத்து முறை:

அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ள பொருட்கள், தங்க ளுடைய உருவங்களால் இன்றி அறியப்படுகின்றன. ஆனால், சிந்துவெளியின் எழுத்துமுறை தற்கால ஆய்வாளர்களுக்குக் குழப்பங்களைத் தோற்றுவிக்கின்றன. நேர்க்கோடுகளும், கிண்ணம் போன்ற உருவங்களும், படுக்கைக் கோடுகளும் கொண்ட சிந்துவெளி எழுத்துகள், எழுத்து முறையின் தொடக்க நிலையில் உள்ளனவா அல்லது முதிர்ந்த நிலையில் உள்ளனவா என்பதை அறிய இயலவில்லை. சில ஆய்வாளர் களின் கருத்துப்படி, கி.மு. 3000 ஆண்டுகளில் மேற்கில் அறியப் படும் சுமேரிய, மெசபத்தோமிய, எகிப்திய எழுத்துமுறை களுக்கும் சிந்துவெளி எழுத்து முறைக்கும் தொடர்புகள் உள்ளன என்பதாகும். இருப்பினும், சிலர், சிந்துவெளி எழுத்து முறை தனித்தன்மை வாய்ந்தது என்றும், உலகில் மற்ற எழுத்து முறைக்கு மாறுபட்டது என்றும் கருத்துரைக்கின்றனர் - ஆனால் பலரின் கருத்துப்படி, உறுதியாக இம்முறை பட எழுத்து, கருத்தெழுத்து முறைகளைத் தாண்டிய, எழுத்து - சொல் முறையே என்பதாகும். எழுத்துகளின் கூட்டே சொல் எனப்படும் போது, ஒவ்வொரு எழுத்தும் ஓர் ஒலியைக் கொண்டிருக்க வேண்டும். உயிர் எழுத்துளும், மெய்யெழுத்து களும் தனித்தனியாக வேறுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். சொற்கள் உயிரும் மெய்யும் கலந்து அமைந்திருக்க வேண்டும். அவ்வாறு சிந்துவெளி மொழியில் உள்ளனவா என்பதில் ஆய்வாளர்கள் முரண்படுகின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் நோக்கில் அணுகும் போது ஒருமித்த கருத்து உருவாக வில்லை. பல்வேறு முறைகளைக் கையாண்டு அக்குறியீடுகளைப் படிக்க முயன்றுள்ளனர்.

சிந்துவெளி மொழியில், ஒவ்வொரு குறியீடும் ஓர் எழுத்தையே குறிப்பதாக மதிவாணன் கூறுகிறார். தமிழில் அறியப்படும் 30 எழுத்துகளும் சிந்துமொழியில் இருப்பதாக உறுதி செய்கிறார். உயிரும் மெய்யும் கலந்த உயிர் மெய்களும் உள்ளனவென்று கூறுகிறார். புணர்ச்சி விதிகளின் படி சொற்கள் உள்ளன என்றும், அவை தமிழ் இலக்கண விதிகளை ஒட்டி அமைந்துள்ளன என்றும் கருதுகிறார். எழுத்துகளைக் கூட்டிப் படிக்க, உருவாகும் சொற்கள், தமிழ்ச் சொற்களாகவே உள்ளன என்று கூறுகிறார்.

சோவியத் மற்றும் பின்லாந்து நாட்டு ஆய்வாளர்கள், சிந்துமொழியில் 52 குறியீடுகள் உள்ளன எனக் கருதினர்.[760] இது சமற்கிருத மொழியில் உள்ள 51 எழுத்துகளுக்கு இணையானது என்பதை நோக்க வேண்டும். மேலும் சிலர் 40 அடிப்படையான எழுத்துகளே உள்ளன என்பர். தமிழில் உள்ள அடிப்படை எழுத்துகளான 30, சற்று விரிந்து 40 ஆக உள்ளது என்பது ஒரு கருத்து. தொடக்ககால சிந்துவெளிக் குறியீடுகள், பிற்கால அறப்பா நகரக் குறியீடுகளின்றும் மாறுபடுகின்றன. தொடக்காலக் குறியீடுகள் பட எழுத்துகள் என்றும் பிற்காலக் குறியீடுகள் எழுத்துகளே என்றும் கூறுவர். இது எழுத்து முறையில் தோன்றும் மாற்றங்களே எனக் கருதாலம். அறப்பன் நகர எழுத்துகளில் 15க்கும் மேற்பட்ட எழுத்துகள் செமிட்டிக் மொழியிலும் காணப்படுவதாக உறுதி செய்துள்ளனர்.[761] (15 out of 20 Harappan script are identical with the contemporary Semitic signs)

போனீசிய மன்னன் அகிராம் (Akhiram) காலத்திய பிப்லோஸ் (Byblos) நகரத்திய குறிப்புகளில் காணப்படும் எழுத்துகளில் பல, அறப்பா குறிப்புகளில் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[762] அகிராம் மன்னன், தாவீது - சாலமன் காலத்தில் (கி.மு. 850) காணப்படும் எழுத்துகள், அசோகனின் கல்வெட்டுகளிலும் காணப்படுவது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பிற்கால எழுத்து முறை (பிராமி என்று பெயர் சூட்டியுள்ளனர்.) அறப்பா எழுத்து முறையின் விரிவாக்கமே என்பதை அறியலாம். இதன் அடிப்படையில், சிந்து மொழியின் தொடக்க கால எழுத்து முறை விரிவடைந்து வளர்ந்து, பிற்கால (அறப்பா) எழுத்து முறையாக அறியப்படுகின்றது. பிற்கால அறப்பா எழுத்து

முறை மேலும் விரிவடைந்து, பிராமி என்ற முறையாக அறியப் பட்டது. இவ்விரு எழுத்து முறைகளின் அடிப்படைகளைக் கொண்டே, போனீசியர்கள் புதிய எழுத்து முறையை உருவாக் கினர் (கி.மு. 1500).[763] இந்த போனீசிய எழுத்து முறையே, அகிராம் மற்றும் மேஷ மன்னர்களின் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. பிராமி எழுத்து முறையையே அசோகன் பின்பற்றினான். எனவே, பிராமி முறையின் மறுவடிவமே போனீசிய எழுத்துமுறை என்பது தெளிவாகின்றது. போனீசி யரின் புதிய எழுத்து முறை, அவர்களது கண்டுபிடிப்பன்று, அது கிழக்கத்திய முறையின் புதுவடிவமே என்பதை தற்கால வரலாற்றறிஞர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.[764] போனீசியரின் புதிய எழுத்து முறையே, கிரேக்கம் ஏற்றுக் கொண்டது.[765] கிரேக்கம் வழியில் உரோமையும் (லத்தீன்), உரோமை வழியில் ஐரோப்பிய மொழிகளும் போனீசிய முறையைக் கைக் கொண்டன. இதன் அடிப்படையில், சிந்துவெளி எழுத்து களே, இந்தியாவில் பிராமி என்றும், மேற்கே போனீசிய முறைவழியில், ஐரோப்பிய எழுத்துகளாகவும் விரிவடைந்தன.

பணி என்ற ருக்கு வேதச் சொல், வணிகர் கூட்டத்தைக் குறிப்பதாக இராவ் கூறுகிறார். பணி என்ற வேதச் சொல்லே, பணீசியர் எனத்திரிந்து, போணீசியர் என்று சொல்லப் பட்டனர் என்ற கருத்தினால், சிந்துவெளி மக்கள் மேற்கே கொண்டிருந்த வணிகத்தொடர்பு அறியப்படுவதாக, இராவ் கூறுகிறார். போணீசியர் என்ற சொல், பணி என்ற சமற்கிருதச் சொல்லினின்றே பிறந்தது என்பதும், சிந்துவெளி மக்களின் சொல்லாக, பணி என்ற சொல் காணப்படுவதும், சிந்துவெளி மொழி சமற்கிருதமே என்பது இராவின் கருத்து. இன்னும் பல்வேறு சமற்கிருதச் சொற்கள் செமிட்டிக் மொழிகளில் காணப்படுகின்றன என்றும் அச்சொற்கள் அனைத்தும் சிந்து மொழியில் உள்ளன என்றும் கூறுகிறார். U (p), L (t), r (S) போன்ற எழுத்துகளும் ஒலிகளும் செமிட்டிக் மொழிகளில் காணப்படுவதையும், சமற்கிருதம் - சிந்துமொழிகளும் இவற்றைக் கொண்டிருக்கின்றன என்றும் இராவ் கூறுகிறார்.

பணி என்ற சொல், சமற்கிருதச் சொல் என்பதும், அது ருக்கு வேதத்தில் வணிகர்களைக் குறித்தது என்பதும் எஸ்.ஆர். இராவ் அவர்களின் கூற்றாகும். உண்மையில் பணி என்பது தமிழ்ச் சொல்லே என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

பண் - பண்ணுதல் - பண்ணியம் - பண்ணியர் ஆகிய சொற்கள் வணிகர்களோடு தொடர் புடைய தமிழ்ச் சொற்களே.

பண் - பண்ணுதல் - பண்ணியம் என்பது, இசையோடு தொடர்புடையது.

பண்ணியம் - இசை; இசைக் கருவிகள்.

பண்ணியம் - விற்பனைக் குரிய பொருட்கள்.

பண்ணுதல் - உருவாக்குதல், கூட்டுதல், இணைத்தல், சேர்த்தல் என விரியும்.

இசையைப் பண்ணுபவர் - பாணர் என்றும்,

பொருட்களைப் பண்ணுபவர் - பண்ணியர் என்றும் சொல்லப் பட்டனர்.[766]

குயிலுவர் களதொறும் பண்ணியம் பரந்தெழ - (இசை)

கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ - (வணிகப் பொருட்கள்)

- மணிமேகலை, 7 :123-124.

வண் - வண்ணுதல் என்பதற்கு வட்டம், சுற்று, சுழல் என்பது பொருள்.

வளைவு என்றும் சொல்லப்படும். பல்வேறு நாடுகளில் வளைந்து, சுற்றி, திரிந்து தங்கள் பொருட்களை விற்க முயலுவோரை, வண்ணியர் என்றனர்.

வண்ணியர் என்பது சுற்றி வருதலைக் குறித்தது. வண்ணியர் - வாணியர்.

வாணியர் - எங்கும் சுற்றி வந்த பொருள் விற்போன் - பொருள் வணிகன்.

வாணியன், வாணிகன், வனிகன் எனத்திரிந்தது.

தங்களை வணிகர்கள் என அறிமுகம் செய்து கொண்ட போணீசியர்களை, கிரேக்கர்களே பணிசீயர் எனக் கூறினர். பணீசியர் - போணீசியர் எனப்பட்டனர். அது வரையில் மேற்கே அறியப்படாதிருந்த துருவ மீனை (Pole star) போணீசியர்களே அறிமுகம் செய்ததால், அம்மீனை போணீசியர் மீன் (Phoenician Star) என கிரேக்கர்கள் அழைத்தனர்.[767] புதிய எழுத்துகளையும், அதற்கான ஒலிகளையும் அறிமுகம் செய்து, மேற்கே அந்த முறையைப் பரப்பியவர்களும் போணீசியர்களே. அதனால் சொற்களை எவ்வாறு ஒலிக்க வேண்டும் விதிமுறையை Phonetix என்று கிரேக்கர்கள் அழைத்தனர். Phone என்ற சொல்லும் கூட, அதன் வழியில் பிறந்ததே. எஸ்.ஆர். இராவ், தமிழ் மொழியில் உள்ள பணி - பண்ணியம் போன்ற சொற்களை அறியாதவர். அதனாலேயே பணி என்பது ருக்கு

வேத சமற்கிருதச் சொல் எனக் கூறினார்.[768] இவ்வாறான தம்முடைய தவறான விளக்கங்களைக் கூறும் எஸ்.ஆர். இராவ், தம்முடைய கருத்தே சரியானது எனவும் முடிவு செய்கிறார்.

பா (Paa) என்ற ருக்கு வேதச் சொல்லுக்கு காத்தல், காவல் செய்தல், அரசாளுதல் போன்ற பொருள் சொல்லப்படுகின்றன. ஜா பதி (Japati) - பிரஜாபதி என்ற சொல்லில் உள்ள பதி (Pati) என்ற சொல், பா என்ற சொல்லின் நீட்சியே என்று கூறும் இராவ், இதே சொற்கள், சிந்துவெளியில் அமர்ந்த நிலையில் உள்ள கடவுளின் உருவத்துக்கு சொல்லப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார்.[769] விலங்குகளோடு அக்கடவுள் அமர்ந்திருப்பதால், அக்கடவுளை பசுபதி என்று அழைக்கிறார். பதி (Pati) என்ற சமற்கிருதச் சொல், படேசி (Patesi) என பாபிலோனிய மொழியில் திரிந்துள்ளதாகவும்,[770] அச்சொல்லுக்கு, மன்னன், சமயத்தலைவன் என்பதே பொருளாகும் என்றும் கூறுகிறார். எகிப்திய மொழியிலும் படா (Pata) என்ற சொல் உள்ளதை இராவ் அறிந்திருக்கவில்லை.[771] அச்சொல்லை அவர் மேற்கோள் காட்டவில்லை. பாபிலோனிய மொழியில் சொல்லப்படும் அதே பொருளையே எகிப்தியச் சொல்லும் குறிக்கிறது. க என்ற எகிப்தியக் கடவுள் (க என்ற உயிர் மெய், தமிழில் கடவுளையே குறித்தது)மெம்பிஸ் நகரில் குடியிருந்தான்.[772] அக்கடவுளின் பூசாரியையும், அக்கடவுள் பணித்த மன்னனையும் படா என்ற சொல் குறிக்கிறது.

படை என்பது தமிழ்ச் சொல்லே என்பதை, இராவ் அறிய வில்லை.

படை: இறைவனுக்குரிய பொருட்களை அளித்தல்.

படைப்போன்: பூசாரி அல்லது சமயத்தலைவன்.

படை: மறவர் கூட்டம். போர் புரிவோர், போராளிகளின் கூட்டம்.

படையன்: அக்கூட்டத்தின் தலைவன் அல்லது மன்னன்.

படை என்ற தமிழ்ச் சொல், பூசாரிக்கும் மன்னனுக்கும் உரிய சொல்லாகும்.

படை - பதி எனத்திரிந்து, சமற்கிருதத்தில் தலைவன், கடவுள் என்ற பொருளையே தந்தது.

படை - பதி - படேசி - படா போன்ற பன்மொழிச் சொற்கள், படை என்ற தமிழ்ச் சொற்களின் திரிவுகளே.

எஸ்.ஆர். இராவ், சிந்துவெளி மொழி சமற்கிருதமே என்று கூறுவதை, தமிழறியாதவர்கள் வேண்டுமானால் ஏற்றுக்

கொள்ளலாம். மேற்கண்ட பதி, படை, பண் ஆகிய சொற்கள் சமற்கிருதச் சொற்களே என்பதற்கு, ஐராவதம் மகாதேவன் விடை தந்து மறுத்திருக்க வேண்டும். மகாதேவனுக்கு தமிழின் ஆழம் தெரிந்திருக்கவில்லை. அதனால்தான் சிந்துவெளிச் சொற்கள், திராவிடச் சொற்கள் என்று கூறுகிறார். எஸ்.ஆர். இராவ் இல்லாத ஊருக்கு வழிகாட்டுகிறார். மகாதேவன் போகாத ஊருக்கு வழிகாட்டுகிறார்.

சிந்துவெளிச் சொற்கள், திராவிட மொழியைச் சார்ந்தவை என சோவியத், பின்லாந்து ஆய்வாளர்கள் முடிவு செய்தனர். (Prof. Knorosv). அதற்கு அவர்கள் கூறிய காரணம் யாதெனில், சொற்களில் பாலினத்தைக் குறிக்கும் இறுதி எழுத்துக்கள், சிந்துமொழியில் காணப்படுகின்றன. அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் ஆகிய இனத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றன என்பதாம். ஓடினான், ஓடினாள், ஓடினார்கள், ஓடினான் (ஒன்றன் பால்), ஓடினாள் (ஒன்றன் பால்), ஓடினார்கள் (பலவின் பால்), ஓடின (அஃறிணை பலவின் பால்) என்றவாறு சிந்துவெளி மொழியின் ஈற்று எழுத்துகள் வேறுபடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டினர். எஸ்.ஆர். இராவ், சமற்கிருத மொழியிலும் அவ்வாறே ஈற்றெழுத்துகள் பாலினத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றன என்பதால், சோவியத் - பின்லாந்து அறிஞர்களின் கருத்தை ஏற்க இயலாது என்று கூறினார்.[773]

ராமஸ்ய (Ramasya) என்ற சமற்கிருதச் சொல்லில், இராமன் ஆண்பால், இளமையானவன் என்ற கருத்தை ஸ்ய (sya) என்ற பின்னொட்டு விளக்குவதாக இராவ் கூறுகிறார்.[774] ஸ்ய என்பது, பெரும்பாலும் படர்க்கைச் சொல்லாகவே சமற்கிருதத்தில் பயன்படுத்தப்படுகிறது என சமற்கிருத அகர முதலி கூறுகிறது. ஸ்ய என்பது சேய் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபு. சேய் என்பது இருபாலையும் குறிக்கும் தமிழ்ச் சொல் லாகும். முன்னொட்டுப் பெயர் எந்தப் பாலைக் குறிக்கின் றதோ, அப்பாலின் பொருளே அதற்கு அறியப்படும், சேய் என்ற சொல், பால் வேறுபாட்டை விளக்காது. எனவே, சமற்கிருதத்தை முன் மொழியாகக் கொண்ட இந்திய ஆரிய மொழியே (Indo-Aryan) சிந்துவெளியில் பேசப்பட்டதாக இராவ் கூறுகிறார்.[775] மீன் போல உள்ள குறியீட்டை, மின் - விண்மீன் என்று ஐராவதம் கூறுகிறார். அது முழுமையான

பொருளைத் தராது. அக்குறியீட்டிலிருந்து மில் (mil), மிட் (mit), சே (cey), வெண் (Ven) போன்ற சொற்களையும் பெற முடியும் என்று மேலும் கூறுகிறார்.[776] (Obviously Mahadevan has given word value but even there he is inconsistent. His method lacks p recision because for the same sign he assigns several word values because of addition of strokes, e.g., fish sign equated to min, mil, mit, cey, ven etc. By this method any word can be derived from any sign. - S.R. Rao)

இராவதம் மகாதேவனின் சிந்துவெளிச் சொற்களுக்கான அவருடைய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அன்று என்பது அவரது முடிவாகும். சமற்கிருதப் பார்வையில் புறந்தள்ளப்பட்ட மகாதேவன், தமிழ்க் கண்ணோட்டத்திலும் மறுக்கப்படுகிறார். இரா. மதிவாணன், மகாதேவனின் கண் ணோட்டத்தில், அவரால் எந்தச் சொற்களையும் விடுவிக்க இயலாது என்று கூறுகிறார். அஸ்கோ பர்ப்போலோ, மகா தேவனின் ஆய்வு முறைகளை ஏற்றுக் கொள்கிறார். இதனால், பர்ப்போலோவை எப்போதும் தம்முடனேயே மகாதேவன் வைத்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

சமற்கிருதத்தை முன்வைத்து இராவ் குறிப்பிடும் செய்தி களாவன:

1. சிந்துவெளி மொழியில் ஹ (ha) என்ற ஒலிப்பு இருந்தது. பிற்காலத்தில் அவ்வொலி கைவிடப்பட்டது. க என்ற தமிழ் எழுத்தின் ஒலியை, க (ka), ஹ (ha), க (kha) என்றவாறு தொடக்கத்தில் மூன்று வகையாக, பிரித்து ஒலித்தனர் என்பதும், பின்னர் அவை கைவிடப்பட்டன என்பதும் தெரிய வருகின்றன. சமற்கிருதம் குறிப்பிடும் அவ்வொலிகள், தொடக்க கால சிந்து வெளி மொழியில் இருந்தன.[777]

தமிழில் அறியப்படும் க என்ற உயிர்மெய் எழுத்தை அது இடம் பெறும் நிலைக்குத் தக்கவாறு ஒலிப்பது தமிழ் மரபு. காகம், தாகம், மேகம், மோகம், நாகம், பாகம், அகம், நகம் போன்ற சொற்களில் வரும் க ஒலிப்பு, ஹ (ha) என்றவாறே க, ஹ (ha) என்ற ஒலிப்பையும் பெறும். சமற்கிருதம் க என்ற ஒலிப்புக்கு வெவ்வேறு எழுத்துகளை இணைத்துக் கொண்டது. தமிழின் மரபு தெரிந்தவர்கள், தமிழர்கள், இடத்திற்கேற்ற வாறு க என்ற ஒலிப்பைப் பயன்படுத்துவர். தமிழின் ஆழம் புரியாதவர்கள், புதிதாக உருவாக்கிய மொழியில், வெவ்வேறு எழுத்துகளை இணைத்துக் கொண்டனர் என்க.

க என்ற ஒலி, க (ka), க்க (KKa), க (kha), க (ga), ங (gna) என்றவாறு சமற்கிருதத்தில் விரிவு படுத்தப்பட்டது. இவ்வொலிகளில் சில தொடக்ககால சிந்துவெளி மொழியில் இருந்தன என்று இராவ் கூறுகிறார்.

2. அதே போல் ட என்ற தமிழ் எழுத்தின் ஒலியும், ப என்ற தமிழ் எழுத்தின் ஒலியும் வேறுபடுத்திக் காட்டப்பட்டன. ப (Pa), ப (ba), ப்ப (ppa), ப (bha), ம (ma) என்றவாறு சமற்கிருதமும், இந்திய ஐரோப்பிய மொழிகள் குறிப்பிடும் ஒலிகளும், தொடக்க கால சிந்துவெளி மொழியில் இருந்தன. ட (ta), ட (da), ட்ட (tta), ட (dha), ண (gna) என்ற சமற்கிருத ஒலிகள், சிந்துவெளி மொழியின் (அறப்பன்) இருந்தன என்றும் கூறுகிறார். பிற்கால அறப்பன் மொழி அவ்வொலிகளைக் கைவிட்டு விட்டது என்பதும் இராவ் அவர்களின் கூற்றாகும்.[778]

இவ்வொலி வேறுபாடுகள், இடத்திற்குத் தக்கவாறு தமிழில் பயன்படுத்தப்பட்டன. படம் - பட்டம், வடம் - வட்டம், நடம் - நட்டம், கடம் - கட்டம், கட்டடம் போன்ற சொற்களில், இவ்வொலி வேறுபாடுகளைக் காணலாம். தமிழில் இச்சொற்களை ஒலிக்கும் படிப்பறிவற்றவர்கள் கூட, ஒலி வேறுபாடுகளை உணர்ந்தே ஒலிக்கின்றனர் என்பதே உண்மை நிலையாகும்.

3. தமிழில் அறியப்படாத க (ga), த்த (tha), ட (dha), ப (bha) போன்ற ஒலிகள், சிந்துவெளி மொழியில், குறிப்பாக அறப்பன் குறிப்புகளில் காணப்படுகின்றன என்று இராவ் கூறுகிறார்.[779] இவ்வொலிகள் தமிழில் அறியப்படவில்லை என்ற கூற்றை இராவ் வலியுறுத்துவது, தமிழ் மொழியின் ஆழத்தை அறியாதவர் என்பதையே காட்டுகிறது என்க.

4. சிந்துவெளி மொழியில் அறியப்படும் மேற்கண்ட ஒலிப்புகளில் பல, ஈத்திய மொழியில் (Hittite) காணப்படுவதாக இராவ் கூறுகிறார்.[780]

ஈத்தியர் என்ற இனம் பற்றிய விளக்கத்தை ஏற்கனவே கூறியுள்ளதால் மேலும் அவ்வினம் பற்றி விரித்துக் கூற வேண்டியதில்லை. பாபிலோனியர் வழிவந்த ஒரு பிரிவினர், வடக்கு மெசபத்தோமியாவில், கி.மு. 2000 ஆண்டுகளில் அறியப் படுகின்றனர். அவர்களே, கி.மு. 1500 ஆண்டுகளில், புரவியின் பயன்பாடு பற்றி அறிந்து, அதனைப் போர்களில் பயன்படுத்தி

யவர்கள். ஈத்திய மொழி பற்றிய குறிப்புகள், போகோஸ்கோய் (Boghoskoy) என்ற இடத்தில் நடத்திய அகழ்வாய்வுகள் மூலம் வெளிப்பட்டுள்ளன. அவர் தம் மொழியில், ஏராளமான சுமேரிய - அக்காடிய (பாபிலோனிய)ச் சொற்கள் இடம் பெற்றிருந்தன என்பதை ஆய்வாளர்கள் அறிந்து வெளியிட்டுள்ளனர்.[781]

தொல்தமிழர் வரலாற்றில், தமிழரின் மேலை நாட்டுக் குடியேற்றம் என்பது பிரித்துப் பார்க்கவோ, ஒதுக்கிவிடவோ இயலாத ஒன்று. இன்றைய ஆய்வுகளுக்கு தேவைப்படும் பல்வேறு சான்றுகள், குறிப்பாக தமிழரின் தொன்மைக் கால வரலாற்றை மெய்ப்பிக்கும் பல்வேறு நிகழ்வுகளும், சான்றுகளும், தமிழரின் குடியேற்ற வரலாற்றில் கிடைக்கின்றன. கி.மு. 10000 - 8000 ஆண்டுகளில், சிந்துவெளித் தமிழர்கள், மேற்கே குடியேறினர் என்பதை பல்வேறு சான்றுகள் மூலம் ஏற்கனவே விளக்கியுள்ளோம். கி.மு. 2000 ஆண்டுகளில், நடுத்தரைக் கடலை ஒட்டியிருந்த நாடுகளில் பேசப்பட்ட செமிட்டிக் மொழிக் குடும்பத்து மொழிகள், தமிழின் கிளை மொழிகளே என்பதையும் விளக்கியுள்ளோம். முதல் குடியேற்றத்தின் போது, மேற்கே பேசப்பட்ட தமிழே, பல்வேறு மொழிகளாக அங்கு கிளைத்தன என்பதையும் விளக்கியுள்ளோம். அக்குடியேற்றத் தமிழர்களின் ஒரு பிரிவினரே ஈத்தியர் என்ற இனமாகும். அவர்களது மொழியிலும் தமிழின் தாக்கங்கள் நிறையவே உண்டு.

ஆரியர்களின் தாய்நாடு எதுவென்பதை உறுதி செய்ய இயலாத நிலையில், பல்வேறு கருதுகோள்களின் அடிப்படையில், பல பகுதிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நம்முடைய ஆய்வுகளின் வழியே, வடக்கு மெசபத்தோமியாவில் (இன்றைய துருக்கியின் தென்பகுதியாகிய அனதோலியா) வாழ்ந்திருந்த ஈத்தியர்களில் ஒரு பிரிவினரே, இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் என்பதையும் உறுதி செய்துள்ளோம். எனவே, ஆரியர்களின் தாய்மொழியிலேயே தமிழ்மொழியின் தாக்கங்களும் அழுத்தங்களும் இருந்தன என்பதை மறுக்க இயலாது. வரலாற்றுக் காலத்தைப் பின்னோக்கிச் சென்று பார்த்தால், இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பம், தொல் தமிழின் ஒரு கிளையே என்பதை அறியலாம். எனவே, ஈத்திய மொழியில் ஆரியத் தாக்கம் இருப்பது இயற்கையானதே. இவ்வரலாற்று

உண்மைகளை அறிந்திராத இராவ் கூறும் மொழித் தொடர் பான செய்திகள், அரைகுறையானவைகளாகும். சிந்துவெளித் தமிழரின் ஓரினக் கிளையே, ஆரியரின் முன்னோர் என்பதே உண்மை நிலையாகும். காலம் அவர்களை ஆரியர்கள் என்று பிற்காலத்தில் அடையாளப்படுத்தியது. எனவே, ஈத்திய மொழியில் சிந்துவெளிச் சொற்கள் காணப்படுகின்றன என்பது, புதிய செய்தியன்று. இராவ், மொழி வரலாற்றைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை. (It is also observed that the early Harappan phonology has a few features similar to those of the Hittite language. - S.R. Rao).[782] சிந்துவெளி மொழியின் சில சொற்கள், ஈத்திய மொழியில் காணப்படுவதாக இராவ் கூறுவது போன்று. சில சொற்கள் அல்ல, பல சொற்கள் அங்கே காணப்படு கின்றன என்பதை இராவ் அறிந்திருக்கவில்லை எனலாம்.

இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் கிரேக்க மொழியும் இணைக்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழிக்கும் சமற்கிருதத்துக்கு நிறைய தொடர்புகள் உள்ளன என்பதை மாக்சு முல்லர் உள்ளிட்ட பல சமற்கிருத அறிஞர்கள் விளக்கி யுள்ளனர். கிரேக்கம் என்ற மொழியின் தோற்றம், வளர்ச்சி பற்றிய செய்திகளையும் ஏற்கனவே விளக்கியுள்ளோம். சிந்து வெளி மொழியின் பல சொற்கள், கிரேக்க மொழியிலும் உள்ளன என்பதாலும், கிரேக்கம் சமற்கிருதத்தின் உறவு மொழி என்பதாலும், சிந்துவெளி மொழி இந்திய - ஆரிய மொழியே என இராவ் உறுதி செய்கிறார். கிரேக்கம் என்பதே, கி.மு. 1500 - 1000 ஆண்டுகளில் தமிழின் கிளை மொழிகளான (செமிட்டிக்) அக்காடியம், எபிறேயம் போன்ற மொழிகளின் சொற்களைக் கடன் பெற்று உருவாக்கப்பட்டதே. சமற்கிருதம் போன்று, கிரேக்கமும் செம்மைப்படுத்தப்பட்ட மொழியே. கிரேக்க மொழியில் இப்போதும்கூட, ஏராளமான தமிழ்ச் சொற்கள் திரிபுபட்ட நிலையில் உள்ளன.

எடுத்துக்காட்டாக கொள்போஸ் (Kolpos) என்ற சொல்லை எடுத்துக் கொள்ளலாம். கொள்போஸ் என்பது, நிலத்தை ஊடறுத்துச் செல்லும், நீண்ட நீர்வழியைக் குறிக்கும் சொல்லாகும்.

Kolpos (Greek) : A deep inlet of the sea almost surrounded by land with a narrow mouth.

Kolpos (Greek) → Golfo (Latin) → Golfe (French) → Gulf (Eng.)

கொள்போஸ் என்ற சொல், மாட்டின் குளம்பையும் குறித்தது. குளம்பு, நடுவே நீண்ட கோடு போன்ற இடை வெளியைக் கொண்டது. இதனைக் கருத்தில் கொண்டே, நிலத்தின் ஊடே நேராகச் செல்லும் குறுகிய நீர்வழியை, கொள்போஸ் என்றனர். இது குளம்பு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்க. Gulf என்ற ஆங்கிலச் சொல்லுக்கான மூலம் குளம்பு என்ற தமிழ்ச் சொல்லே. இத்தகைய மொழித் திரிபுகளை அறியாதவர்கள்தாம் எஸ்.ஆர். இராவ், ஐராவதம் போன்றவர்கள். ஒருவேளை, கொள்போஸ் என்ற கிரேக்கச் சொல்தான், தமிழில் குளம்பு எனத் திரிந்தது என, மொழியில் தெளிவு பெற்றிருந்தால் கூறியிருப்பார்கள். இராவ் குறிப்பிடும் சொற்களாவன:[783]

1. ப் (P), ப (PA), பா (Paa), ப்பா (Ppaa), பா (Ppaa), பக் (Pah), பக்க் (Pahh), பக் (Pak), பக (Paka), பக் (Pag), பக (baka), பக (baga), பக (Pagha), பக் (Pagh), என, ப-க என்றவாறும்.
2. ப்ட் (Pt), பட் (Pat), ப்டா (Ptaa), ப்ட் (Ppt), ப்டா (Pp ta), என ப - ட என்றவாறும்.
3. ட்ர் (tr), ட்ர (tra), ட்ர - ட (tra - da) (tra - ka), ட்ரக (tra - ka) என, ட - ர என்றவாறும்.
4. ப்ர (Pra), ப்ர - ப்ர (Pra - pra), பர (Para), பரா (Paraa) என்றவாறும்,
5. மக் (Mah), மக (Maha), மகா (Mahaa) என்றவாறும்,
6. பா - ட்ர (Paa - tra), ட்ர - பா (Tra - paa), பக் - ப (Pak - pa), பக் - ப்ர (Pak - pra), பர - ட்டி (Para - tra) என்றவாறும்,
7. பக் - ப (Pak - pa), பக் - ப்ர (Pak - pra), பர - ட்டி (Para - tra) என்றவாறும்,

விரிகின்றன என்று கூறுகிறார். மேற்கண்டவை, இராவ் படித்தவாறு அறியப்படும் சொற்களாகும்.

பக - பட (Paka - Pata) ஆகிய சொற்கள் காவல், காப்பு, ஆளுகை, காத்தல், காவலுக்கான உதவி என்றவாறு சமற்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ளன. (defend, protect, rule, save, guard help are more or less convey the same meaning in sanskrit - S.R. Rao).

பக : பகவன் என்று விரிந்தது. ஆதி பகவன் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். பகு என்ற தமிழ் மூலச் சொல்லே, பலவாறு

சமற்கிருதத்தில் திரிந்தன. இறைவனுடைய செயல்களாக, தமிழில் அறியப்படும்.

பக என்பது, பகு என்ற சொல்லுக்கு முதற் சொல்லாகும்.

பக : பிரித்தல், வேறுபடுத்துதல்.

பக - பகடு : அளவில் பெரிய, உருவத்தில் பெரிய, பெருமைக்குரிய என விரியும்.

பகடு : காளை, எருது, கடவுளின் ஊர்தி.

பகடை : எதிர்பாராத உதவி, பேருதவி.

பகடு - பகட்டு : ஒளி, வெளிச்சம், ஒளிர்தல்.

பகர் - சொல்லுதல், பேசுதல், உரையாடுதல். வாக்கு எனவும் விரியும்.

வாக்கு, கடவுளிடமிருந்து வெளிப்படும் சொல்.

வாக்கு - வாக் (றயம) என சமற்கிருதத்தில் திரிந்தது. வாக் (ச), கடவுளின் வார்த்தை என்றே பொருள்படும்.

வார்த்தை : வார் + தை = தொடர்ச்சியான சொற்களின் இணைப்பு. வார்த்தை, தமிழ்ச் சொல்லே.

கடவுளே வார்த்தை, வார்த்தையே கடவுள் என்று விவிலியம் கூறுகிறது.

வார்த்தை என்பதே, word எனத் திரிந்தது. (Word is god).

"ஆதியில் கடவுள் வார்த்தையாய் இருந்தார். அதுவே கடவுளாகவும் இருந்தது." - விவிலியம்.

பக - பகல் : ஒளி, வெளிச்சம், நாளின் ஒரு பகுதி.

பக - பகவன் : கடவுள், உயிர்களுக்குத் தேவையானவற்றைப் பகுத் தளிப்பவன், பகிர்ந்தளிப்பவன். பகவன் - பக்வான் (Baghwan) என சமற்கிருதத்தில் திரிந்தது.

பகவு : பிரிப்பது, பிளப்பது, துண்டாக்குவது.

பக - பகு : இனத்திற்கேற்றவாறு பிரிப்பது. (to part, to divide, to seperate)

பகு - பகுதி : பிரிக்கப்பட்டவைகளில் ஒரு துண்டு.

பகு - பக்கு : ஒரு பகுதி, ஒரு துண்டு. பிரிக்கப்பட்ட மரப்பட்டை.

பகு = பிரிக்கப்படக் கூடியது : பகா - பிரிக்கப்படாதது.

எண் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள, இராவ் படித்தறிந்த, சமற்கிருதச் சொற்கள் என சொல்லப்பட்ட, அனைத்துச் சொற்களும் தமிழின் வேரையும் மூலத்தையும் கொண்டவைகளே.

பட : பட - படா - படை என்றவாறு பல்வேறு சொற்கள் விளக்கப் பட்டுள்ளன.

பள் என்ற தமிழின் வேர், நீர்ப்பிடிப்பு மிகுந்த வளமான நிலத்தைக் குறிப்பது.

பள் - பட என விரிந்தது. இது விரிந்து பரந்திருத்தலைக் குறித்தது. இறைவன் எங்கும் விரிந்து பரந்து காணப்படுகிறான் என்பது உருவகம்.

பட - படப்பு, படம், படர், படலம், படல், படன், படி, படு, படை, படையல், படையாளன், பட்டி, பட்டம், பட்டணம், பட்டயம், பட்டறை, பட்டை, பட்டோலை என விரியும். இச்சொற்கள் அனைத்தும், விரிந்து பரந்த என்ற பொருளைத் தருபவை.

பட - படை - படேசி (Patesi) - படா (Pata) ஆகிய பாபிலோனிய, எகிப்தியச் சொற்களும் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளன.

படி = பொருந்துதல், இணைதல், சேர்தல் என்றவாறும் பொருள்படும்.

படி - பதி என்று திரிந்தது எனவும் கருதலாம்.

எண் இரண்டில் கூறப்பட்டுள்ள சொற்களுக்கான முதற்சொற்களும், முன்வேரும் மூலமும் தமிழில் உள்ளதை இராவ் அறிந்திருக்கவில்லை.

கடவுளுக்குரிய செயல்களாக படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை சொல்லப்பட்டுள்ளன. படை - படைத்தல், தோற்றுவித்தல், உருவாக்குதல் என விரியும்.

பகுத்தல் - பகுத்தவற்றைக் காத்தலும் இறைவனின் செயலாகும்.

அழித்தல் என்பதை, பிற்கால ஆரியம் அறிமுகம் செய்தது.

தான் படைத்தவற்றை, கடவுளே அழித்தாகச் செய்திகள் இல்லை. அன்பே உருவான கடவுள், தன் படைப்புகள் மீதும் அன்பு செலுத்துவதால், அழித்தல் என்ற செயலை அவர் ஒரு போதும் செய்வதில்லை. தொல் தமிழர் சமயத்தில் அழித்தல் கடவுள் என்று எவரும் சொல்லப்படவில்லை. உலக சமயங்களான கிறித்துவம், இசுலாம் ஆகியவைகளும், கடவுளை அழிப்பவராகக் காட்டவில்லை. ஆரியச் சமயமே, அழித்தல் கடவுளை உருவாக்கிக் கொண்டது. தம்மைப் படைத்த கடவுள், தம்மை மட்டுமே காப்பதாகக் கூறிக் கொண்டு, தம் பகைவர்களை அழிப்பதாகக் கற்பித்தனர். தமிழரின் முழுமுதற் கடவுளான சிவனை, அழித்தல் கடவுளாக ஆரியச் சமயம் கற்பிக்கின்றது.

எனவே, பகுப்பதும், பகுத்தவற்றைக் காத்தலுமே இறைவனின் செயல்களாகும்.

ட்ர - ட்ரக என்றவாறு குறிப்பிட்டு விரியும் சொற்கள், கொடுத்தல், அளித்தல் என்ற பொருளைத் தருவன.

தா என்ற வேர்ச் சொல்லினின்று விரியும் சொற்கள், தருதல் என்றவாறு பொருள்படும்.

தா - தகு - தருதல் : கொடுத்தல்.

தர = கொடுக்க

தர - தரகு : உதவி செய். பிற்காலத்தில் வேறு பொருளில் (brokerage) அறியப்பட்டது.

தரவு : வெளிப்படுதல், சான்றுகள், தகவல்கள்.

மாந்தனுக்கு வேண்டிய, பயனுள்ள பொருட்களை, மரங்கள் தருவதால், அவை தரு என்றே சொல்லப்பட்டன. தரு என்பது சரியான தமிழ்ச் சொல்லே. சமற்கிருதம் அப்படியே ஏற்றுக் கொண்டது. தரு (ச) : மரம்.

தருக்கள் மாந்தனுக்கு வேண்டிய, தேவைப்பட்ட அனைத்தையும் தருகின்றன. இதன் சிறப்பையுணர்ந்த முன்னோர், தேவர் உலகத்தில் ஐந்து தருக்கள் இருப்பதாகவும், அவற்றின் பூக்கள் பொன்னாக மலர்வதாகவும், பழங்கள் சுவை மிகுந்தவைகளாகவும், கேட்கும் பொருட்கள் அனைத்தையும் அம்மரங்கள் தருவதாகவும் கற்பனை செய்து கொண்டனர். மருத்துவ குணம் கொண்ட புல்லை, தருப்பை என்றனர். அது நோயை நீக்கும் மருந்தைத் தந்தது. பை என்பது பச்சை, பசுமை என்று பொருள்படும்.

தருப்பை - பசுந்தரு என்க.

இதே கருத்தில், தர்மம் என்ற சொல்லை சமற்கிருதம் பயன்படுத்துகிறது. இடைக்காலத்தில் இருந்த சில அரைகுறைப் புலவர்கள், அறம் என்ற உயரிய தமிழ்ச் சொல்லுக்கு இணையாக, தர்மம் என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அறம் என்பது வேறு, தர்மம் என்பது வேறு.

தருதல் என்ற சொல்லின் திரிபே தருமம் - தர்மம் என்றானது.

தரு என்ற தமிழ்ச் சொல்லே, tree என ஆங்கிலத்தில் திரிந்தது என்க.

தரு (தமிழ்) → தரு (சம.) → த்ரியோ (Treo - செர்மானியம்) → த்ரியோவ் (treow - பழைய ஆங்கிலம்) → த்ரி (tree - ஆங்கிலம்).

எண் 4 குறிப்பிடும் ப்ர - பர போன்ற சொற்கள், தலைமையைக் குறிப்பதாக இராவ் கூறுகிறார்.

பர் - பர என விரியும் தமிழ் மூலம், விரிந்திருத்தலைக் குறிப்பிடுகிறது. அனைத்து இடங்களில் விரிந்து பரந்த ஆளுமை கடவுளுக் குரியது. பர - பரந்த = விரிந்த.

பர என்ற தமிழ்ச் சொல், பரவுதல் (spread), விரிதல் (extend), பெருகுதல் (multiply), எண்ணிலடங்காதிருத்தல் (innumerous) என விரியும்.

நீர், காற்று, முகில், ஒளி ஆகியவை பர என்ற சொல்லுக்கு விளக்கங்களாகும்.

பர = விரிந்த, பர - பரஸ் என சமற்கிருதத்தில் திரிந்தது.

பரஸ் (ச) = விரிந்த, அகலமான வாயையுடைய கோடரி (axe). - பரசுராமன்.

பர - பரணம் : அகன்று விரிந்த உயர்ந்த மதிப்புள்ள சீலை.

பரணம் = உயர்வு, உயரே, மேலே. பரண் - பரணி (வீட்டுக் கூரை).

பரணம் - பரணி = உயரத்தில் உள்ள மீன் கூட்டம்.

பர - பரமன் : உயர்ந்தவன், எல்லையற்று விரிந்திருப்பவன், கடவுள்.

பரமன் + சிவன் = பரமசிவன்.

பரணர் : உயர்ந்த பொருள் பற்றிப் பாடும் புலவர்.

பரணி : ஆயிரம் யானைகள், தேர்கள், புரவிகள், மறவர்களைக் கொன்று, போரில் வெற்றி பெறும் உயர்ந்த தலைவனைக் குறித்துப் பாடப்படும் தமிழ் இலக்கியம்.

பர - பரதன் : விரிந்து பரந்துள்ள நாட்டை ஆள்பவன்.

பரதன் ஆண்ட நாடு பரதம் என்றே சொல்லப்பட்டு, பாரத் - பாரதம் என்றவாறு சமற்கிருதத்தில் சொல்லப்பட்டது. பாரத் என்ற சொல்லுக்கான வேரும் மூலமும் தமிழில் உள்ளன. இந்துஸ்தான் என்பதும், சிந்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

இந்தியா, பாரத், இந்துஸ்தான் ஆகிய சொற்களால் அழைக்கப்படும் நாட்டின் பெயர், தமிழ் மூலத்தில் இருப்பதால், ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழரின் ஆளுகையிலேயே, தமிழரால் நிறைந்திருந்த நாடே என்க.

ஆடல் கலையை, பரதம் என்றும், பரதநாட்டியம் என்றும் அழைக்கின்றனர். பரதம் என்ற சொல், இந்தியாவைக் குறித்து, இந்திய நாட்டினரின் ஆடல்கலை என்ற பொருளில் சொல்லப்பட்டதன்று.

பரதம் : பரந்து விரிந்த அரங்கில், இசையுடன், பாட்டுடன் கலந்து ஆடப்பெறுவது. நாட்டியம் என்பது, நடனம் என்றும், நடத்தல் அல்லது இலங்குதல் என்ற பொருளில் அறியப்படுவது என்றும் சிலர் கருதுகின்றார்.

ஆடல் கலையைக் கற்றுத் தரும் ஆசிரியர் ஒரு கட்டையில், நட்டுவைக்கப்பட்ட கட்டையில், தாளத்தைத் தட்டி வாங்குவார். அத்தாளத்துக்கு ஏற்றவாறு ஆடல் புரிவர்.

நட்டும் கட்டையில் தாளம் வாங்குபவர், மற்றொரு கட்டையால் அக்கட்டையைத் தட்டுவார். நட்டுக் கட்டையில்

தாளம் வாங்குதல் என்ற பொருளில், நட்டு வாங்குபவர், நாட்டுவாங்கர் எனப்பட்டார். அத்தொழிலுக்கு நட்டுவாங்கம் எனப் பெயர். நட்டுக் கட்டையின் தாளத்திற்கேற்ற ஆட்டம், நட்டியம் எனப்பட்டது. (ஒருவரைப் புகழ்ந்து, கட்டி உரைப்பதை கட்டியம் என்பர்). நட்டியம் - நாட்டிய - நாட்ய என சமற்கிருதத்தில் திரிந்தது. நாட்டியம் என்று தமிழ்ப் படுத்திக் கொண்டனர். இக்கலையில் மூலமும் வேரும் தமிழில் உள்ளதை அறிய வேண்டும். சிலப்பதிகாரம், அரங்கேற்றுக் காதை, தமிழரின் ஆடற்கலைக்குக் கட்டியம் கூறுகிறது. பரதநாட்டியம், ஆரியர்கள் பிற்காலத்தில் கற்றுக் கொண்ட, தமிழரின் ஆடற்கலையே என்க.

தமிழில், நாடகத்தமிழ் என்பது மூன்றாவது வகை.

நாத்தகம் - நாத்தகை - நாத்தகைமை என்பது, உரத்துப் பேசுவது.

ஆயிரம் பேர் கூடியுள்ள அரங்கில் உரத்துப் பேசுவது சிலருக்கே கைவந்த கலையாகும்.

நாத்தகை - நாடகை - நாடகம் என்றவாறு சொல்லப்பட்டது. நாட்டியத்தோடு இணைந்தது என்பதால், அப்பெயர் வந்ததாகவும் கூறுவர்.

எண் ஐந்தில் குறிப்பிடப்பட்டுள்ள, மக - மகா போன்ற சொற்கள், பெரிய, மிகப்பெரிய, தலைவன், இறைவன் என்ற பொருளைக் குறிப்பதாக இராவ் கூறுகிறார்.

ம என்ற உயிர்சொல் எழுத்து, மனத்தைக் குறித்தது. மனம், எண்ணத்தின் பிறப்பிடமாகக் கருதப்பட்டது.

மனத்தால் எண்ணுவதை, கணக்கில் அடங்குவது எனவும், கணக்கில் அடங்காதது எனவும் கருதலாம்.

கணக்கில் அடங்குவதை ம என்ற சொல்லும், அடங்காததை மா என்ற சொல்லும் குறிக்கும். தமிழர் கையாண்ட மரபு இது.

ஒரு நாட்டின் மக்கள் தொகையை, ஓரளவு கணக்கிட முடியும்.

ஒரு நாட்டின் மக்கள் அல்லாத உயிரினங்களைக் கணக்கிட இயலாது.

மக்கள் : ம + கள் = கணக்கில் வருபவை. (Ma = numarable).

மாக்கள் : மா + கள் = கணக்கிலடங்காதவை. (Maa = innumarable).

ஒரு சொல், அல்லது எழுத்திலேயே பொருளை விளக்கும் வித்தையைக் கொண்டது தமிழ்மொழி.

மக்கள் - மாக்கள் என்ற சொற்கள் மேற்கண்ட பொருளில் அறியப் பட்டவையே. மா என்பது பிற்காலத்தில் பெரிய, அளவிட இயலாத, மிகப்பெரிய என்ற பொருளில் கையாளப்பட்டது.

தன்னுடைய பிள்ளைகளில் மிகச்சிறந்த, உயர்ந்த பிள்ளையாகக் கருதப்பட்டவனை மாப்பிள்ளை என்பது தமிழர் மரபு.

மாகரி, மாகாணி, மாமரம், மாவிளக்கு, மாநாடு, மாதவம், மாதேவன், மாதேவி, மாமுகில், மாமூலன், மாமுனி, மாநகர், மாவலி போன்ற சொற்களை ஒப்பு நோக்குக.

க என்ற தமிழ்ச் சொல்லுக்கு, கடவுள், இறைவன் என்பது பொருள்.

உயிரும் மெய்யும் இணைந்த முதல் தமிழ் எழுத்து, உயிரையும் உடலையும் தந்த கடவுளுக்கே அந்த எழுத்தை, சொல்லை, தமிழர்கள் உருவகப்படுத்தி ஏற்றிப் போற்றினர். கடவுள் பெரியவர், மிகப் பெரியவர் என்ற பொருளில் மா + க என்ற தமிழ்ச் சொற்கள் தோன்றின.

மாக என்ற தமிழ் மரபு, மகா என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

மா - ம என்றும், க - கா என்றும் திரிந்தன.

மகாதேவன், மகாதேவி என்றவாறு சொல்லப்பட்டன.

எஸ்.ஆர். இராவ் குறிப்பிடும் மக - மகா ஆகியவை, தமிழ்த் திரிபுகளே.

க என்ற உயிர்மெய், கடவுளைக் குறித்தது போலவே, க (ka) என்ற சிந்துவெளிச் சொல் பிரஜாபதி (Prajapati) யைக் குறிப்பதாக இராவ் கூறுகிறார்.

கக அல்லது காக (ka ka) என்ற சொல், பாதுகாப்பு (Protect) என்ற பொருளில் கூறுகிறார். காக்க என்பது சரியான தமிழ்ச் சொல்லே.

படை என்பது படா, பட (Pataa, Pata) எனத் திரிந்துள்ளது. இதற்குத் தலைவன் அல்லது இறைவன் எனப் பொருள் கூறுகிறார்.

படை - படைத்தவன் என்பது இறைவனைக் குறிக்கும் தமிழ்ச்சொல்லே.

ஆ (Aa) என்ற சமற்கிருதச் சொல்லுக்கும் சிவா என்று பொருள் கூறுவது, தமிழோடு அச்சொல் எவ்வளவு தொடர்பு கொண்டது என்பதைக் காட்டுகிறது.

ஆ என்ற தமிழ்ச் சொல்லுக்குத் தொடக்கம் என்று பொருள்.

ஆல்பா என்ற கிரேக்கச் சொல், கடவுளை உருவகப்படுத்துவது.

ஆ என்பது, இறைவியைக் குறித்து, அவளே உயிரினங்களின் தொடக்கம் அல்லது தாய் என்ற பொருளையும் தருவது.

ஆ = ஆவுடையான், ஆவுடையப்பன் என்ற சொற்கள் சிவனைக் குறிக்கின்றன. தாண்டயா (Tanandaya) என்ற சொல், ஆள்பவன் (ruler), கடவுள் ஆகிய பொருள்களில் சொல்லப்பட்டு, ஒறுப்பவன்

அல்லது செய்பவன் (Judge) என்ற பொருளிலும் சொல்லப்பட்டுள்ளது.

தண்டு என்ற தமிழ்ச் சொல்லே, தண்டயா - தாண்டயா எனத் திரிந்துள்ளது. தண்டு அல்லது கோல், அல்லது கம்பு என்ற அடையாளம், தலைவனுக்குரியது என தமிழ் மரபு கூறுகிறது.

முல்லை நிலத்து ஆயனுக்குரிய தண்டு, ஆயத்தலைவனுக்கு அடையாளமாயிற்று. அக்கோல், மருதநிலத்துத் தலைவனான மன்னனுக்கும் பொருந்துவதாயிற்று. அக்கோலை செங்கோல் என்றனர். செங்கோல், நடுநிலையுடன் ஆள்வதைக் குறிக்கின்றது. நீதி தவறும் மன்னனின் கோல், வளைந்ததாக, சிலப்பதிகாரம் கூறுகிறது.

தீயோரை ஒறுத்து, நல்லோரைக் காக்கும் மன்னனின் செயல்களுக்கு அடையாளமாக செங்கோல் விளங்குகிறது.

சிந்துவெளி ஆய்வுகள்

திரு. எஸ்.ஆர். இராவ் சமற்கிருதத்தினின்று மட்டுமல் லாமல் செமிட்டிக் மொழிகளிலிருந்தும், ஈத்திய மொழியி லிருந்தும், உருசிய மொழியிலிருந்தும், செர்மானிய மொழியி லிருந்தும், கிரேக்க மொழியிலிருந்தும், பல்வேறு சொற்களை எடுத்துக்காட்டி அவை சிந்துவெளி மொழியில் காணப்படுவ தாகக் கூறுகிறார். குறிப்பாக இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலிருந்து ஏராளமான சொற்களை விளக்கிக் காட்டுகிறார். இந்த எடுத்துக்காட்டுகளால், சிந்துவெளி மக்கள், ஆரியர்களின் முன்னோர்கள் வாழ்ந்திருந்த பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் என்பதையும், ஆரிய இனத்தோடு அவர்கள் நெருங்கி இருப்பவர்கள் என்பதையும் விளக்குகிறார். எனவே, ஐராவதம் மகாதேவன், பர்ப்போலோ கூறுவது போல், சிந்து வெளிமக்கள் திராவிடர்கள் அல்லர் என்பது இராவ் எடுத்துள்ள முடிவுகளாகும்.

இராவ் கூறுகின்ற மேற்கண்ட மொழிகள் அனைத்தும், இன்னும் இராவ் குறிப்பிடாத பலமொழிகளும் கூட, தமிழ் மொழியின் கிளை மொழிகளே என்பதை, இதுவரை 30000க்கு மேற்பட்ட சொற்களை, குறிப்பாக மேற்கில் பேசப்பட்ட அனைத்து மொழிச் சொற்களையும் மேற்கோள் காட்டி 50க்கும் மேற்பட்ட நூல்கள் வாயிலாக விளக்கியுள்ளோம். எந்த நோக்கில் ஆய்வு செய்தாலும், சிந்துவெளி மொழி உள்ளிட்ட இராவ் குறிப்பிடும் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் பொதிந்து கிடைப்பதைக் காண முடியும். தமிழின் தொன்மையும், ஆழமும், வேரும், மூலமும் அறிந்திராத திரு. எஸ்.ஆர். இராவ் உள்ளிட்ட அனைத்து ஆய்வாளர்களின் முடிவுகளும், குறிப்பாக மொழிகள் பற்றிய விளக்கங்கள் தவறானவை என்பதை நம்மால் மெய்ப்பிக்க இயலும். திரு. இராவ் அவர்கள், சமற்கிருதம் தனி மொழியென்றும், தமிழ்மொழி (திராவிடம்) தனிமொழி என்றும் கருதுகிறார். இதுவே அடிப்படையில் தவறான கண்ணோட்டமாகும்.

சமற்கிருதம் உள்ளிட்ட, இந்திய - ஐரோப்பிய மொழிகள் அனைத்தும் தமிழின் கிளை மொழிகளே என்பதை, இராவ் உள்ளிட்ட ஏனைய அறிஞர்களும் அறிந்திருக்கவில்லை. தமிழ்நாட்டில் பிறந்த வளர்ந்த ஐராவதம் மகாதேவனுக்கே தமிழின் ஆழம் தெரியாத போது, கன்னடரான இராவுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சமற்கிருதம் இந்தியாவின் முதன்மொழி, தேவமொழி, சமயமொழி, அதற்கிணையான மொழிகள் இந்தியாவில் இல்லையென்ற தற்குறித்தனமும், ஆணவப் போக்குமே, பெரும்பாலான ஆய்வாளர்களிடம் காணப்படுகின்றன.

தாம் கூறுவதையும், தாம் எடுத்த முடிவுகளையும், மறுத்துக் கூற, தமிழில் சான்றுகளைக் காட்ட, எவரும் முன்வர மாட்டார்கள் என ஒரு காலத்தில் எண்ணிக் கொண்டிருந் தனர். ஆனால் தற்காலத்தில் ஆய்வுகள், தமிழ்மொழியின் தொன்மையையும், தமிழ்ப் பகைவர்களின் உண்மையற்ற செய்திகளையும், சான்றுகளுடன் மறுக்கின்றன. தொல்தமிழரின் வரலாறு என்ற இந்நூலின் முற்பகுதிகளில், கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த பல்வேறு இனங்களின் வரலாறுகளும், அவர்தம் மொழிகளும், அவர்களது இலக்கியங் களும், தமிழ்க் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. கி.மு. 2000 முதல் கி.பி. 1000 வரையிலான கால அளவுகளில் படைக்கப்பட்ட இலக்கியங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள் ளப்பட்டுள்ளன. ஏறக் குறைய 35க்கும் மேற்பட்ட இனங்கள், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டுள்ளன. இது வரை வெளிவந்துள்ள ஆசிரியரின் 50க் கும் மேற்பட்ட நூல் களில், தொல்தமிழரின் வரலாறுகள், அவர்களது தாய் நிலம், குடியேற்றங்கள், குடியேற்ற நாடுகளில் அவர்கள் படைத்த இலக்கியங்கள், அவர்கள் பேசிய மொழிகள், அவை திரிபுற்ற தன்மைகள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன. எனவே, தமிழ்க்குடியே உலகின் முதற்குடி என்பதையும், தமிழே உலகின் முதன் மொழி யென்பதையும் பல்வேறு சான்று களுடன் நிறுவியுள்ளோம். தொல்தமிழர் வரலாற்றில் வெள் ளக்காலமும், அதனைத் தொடர்ந்து நிகழ்வுற்ற பிற நாட்டுக் குடியேற்றங்களும், சிறப்பிடம் பெற்றுள்ளன. இராவ் உள்ளிட்ட அறிஞர்கள் கூறுவதைப் போன்று, தமிழர்கள் மேற்கிலிருந்து வந்து, கிழக்கில் குடியேறியவர்கள் அல்லர் என்பதையும், தமிழரின் தாய்நிலம் குமரிக் கண்டமே என்பதையும், சிந்து வெளித் தமிழர்கள், வெள்ளக் காலத்துக்குப் பிறகு, வடக்கே

சென்று குடியேறியவர்களே என்பதையும், உணர்தல் வேண்டும். மேற்கே, மெசப்பத்தோமியாவில் குடியேறிய இனம், தமிழினமே என்பதையும், அவர்தம் கிளைகளே, நடுத்தரைக் கடலை யொட்டிய நாடுகளில் பல்கிப் பெருகி, பரவி வாழ்ந்தனர் என்பதையும் விளக்கியுள்ளோம். எனவே, திரு. சிக்கரிபூர் ரெங்கநாதராவ் கூறும் சிந்துவெளி நாகரிகம் தொடர்பான செய்திகள், உண்மைகளுக்குப் புறம்பானவை என அறிக. இராவ் அவர்களின் மொழி மற்றும் எழுத்துகள் தொடர்பான செய்திகளையே இப்பகுதியில் எடுத்து விளக்கியுள்ளோம். மேலும் அவர் ஆய்வு செய்துள்ள சிந்துவெளி மக்களின் வேளாண்மை, தொழில், கலை, குடிசைத் தொழில்கள், வணிகம், போக்குவரத்து, சமயம், சமூக வாழ்க்கை, நீத்தரின் இறுதிச் சடங்குகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் தொல்தமிழரின் வரலாற்றை எடுத்துக் காட்டுபவைகளே என்பதையும் பல்வேறு நூல்கள் வாயிலாக விளக்கியுள்ளோம். (ஆசிரியரின் சிந்துவெளி நாகரிகம் என்ற நூலைக் காண்க).

அடுத்து, சிந்துவெளி பற்றி ஆய்வு செய்தவர்களில், சிறப்புக்குரியவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர் திரு. அஸ்கோ பர்ப்போலா (Asko Parpola) ஆவார். இவர் அடிப்படையில் ஒரு சமற்கிருத அறிஞர் ஆவார். இவருடைய ஆய்வுகள், சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகமே என்ற கொள்கையைக் கொண்டது. தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களுடைய ஆய்வுகளோடு, பர்ப் போலாவின் ஆய்வுகள் இணைந்திருப்பவை. எனவே, பர்ப் போலாவின் ஆய்வுகளை, திராவிடக் கொள்கை கொண்ட இயக்கத்தினர் வரவேற்கின்றனர். அவர்தம் ஏற்பாடுகளில் நிகழ்வுறும் மாநாடுகளில், இவருடைய உரையும், ஆய்வுகளும் சிறப்பிடம் பெறும். 2010ஆம் ஆண்டில், கோவையில் நிகழ்வுற்ற உலகச் செம்மொழித் தமிழ் மாநாட்டில்கூட, இவரது உரை இடம் பெற்றது. பர்ப்போலாவின் ஆய்வுகளை இனி காண் போம்.

பெரும்பாலான ஆய்வாளர்கள், சிந்துவெளி நாகரிகத்தின் தொடக்க காலம் பற்றித் தெளிவாகக் கூறுவதில்லை. மேலெ ழுந்தவாரியாக, கி.மு. 3000 என்பதை மேல் கணக்காகவும், கி.மு. 1800 என்பதைக் கீழ்க் கணக்காகவும் காட்டுகின்றனர்.[784]

குறிப்பாக, அறப்பா நாகரிகத்தையே பெரும்பாலான ஆய்வாளர்கள், தேர்வு செய்துள்ளனர். அறப்பா நாகரிகம், கி.மு. 2600 முதல் கி.மு. 1800 வரையிலான கால அளவில் நீடித்திருந்தது என்பது அவர்தம் முடிவுகளாகும். அறப்பா நகர நாகரிகம் முடிவுற்றபோது, அதுவே சிந்துவெளி நாகரிகம் முடிவுற்ற காலமாகவும் கருதினர். இக்கால அளவில் கிடைத்த பல்வேறு மொழித் தொடர்பான சான்றுகளையே ஆய்வுகளுக்காகவும் எடுத்துக் கொண்டனர். அவைகளில் குறிப்பிட்ட 40 அடையாளங்கள், செமபத்தோமியப் பகுதிகளில் கிடைத்துள்ள அடையாளங்களுடன் ஒற்றுமைப்படுவதாகவும் கூறுகின்றனர்.[785] இக்கணக்கு, ஆய்வாளர்களால் கூடுதலாகவும் குறைத்தும் சொல்லப்பட்டுள்ளன. சிந்துவெளிக்கும் மெசபத்தோமியாவிற்கும் இடையே காணப்பட்ட வணிகத் தொடர்புகளே இதற்குக் காரணமாகவும் சொல்லப்பட்டுள்ளன.

சிந்துவெளியில் பொறிக்கப்பட்ட சொற்களும் எழுத்துக்களும், அந்நாகரிகம் அழிந்தவுடன் மறக்கப்பட்டன. அவை தொடர்ந்து மக்களால் பயன்படுத்தப்படவில்லையென்பது பெரும்பாலோரின் கருத்து. இவ்வெழுத்து முறை, ருக்கு வேதம் சமற்கிருத மொழியில் எழுதப்படுவதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பே அழிந்துவிட்டது என பர்ப்போலோ கூறுகிறார்.[786] பல்வேறு ஆய்வாளர்கள், சிந்துவெளி முத்திரைகள் பட எழுத்துகள் என்றும், கருத்தெழுத்து முறையென்றும் கூறும் வேளையில், பர்ப்போலோ, அது முறையான எழுத்து முறையே (real writing script) என்று கூறுகிறார். சிந்துவெளி எழுத்துகளை ஆய்வு செய்தவர்கள், ஒரு தவறான கோணத்தில் ஆய்வு செய்தனர் என்றும், சிந்துவெளிக் காலத்துக்குப் பிறகு நடைமுறையில் இருந்த எழுத்து முறையை (பிராமி) அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்தனர் என்றும் பர்ப்போலா கருதுவதோடு, சிந்துவெளி எழுத்துமுறை செமிட்டிக் முறையைத் தழுவியது என்றவாறு எவரும் நோக்கவில்லை என்றும் கூறுகிறார். இதன்படி, சிந்துவெளி நாகரிகத்துக்குப் பிறகு இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்ட எழுத்துமுறைக்கும், சிந்துவெளி எழுத்து முறைக்கும் தொடர்புகள் இல்லை என்பது அவரது கருத்தாக உள்ளது.

ஆய்வாளர்களின் கருத்துப்படி, சிந்துவெளி நாகரிகம், மெசபத்தோமிய - சுமேரிய நாகரிகங்களுக்குக் காலத்தால்

பிந்தியது என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, அறியப்படாத மொழிகளின் சொற்களை, அறியப்பட்ட மொழிகளோடு தொடர்புபடுத்தி ஆய்வதே மரபாக உள்ளதென்றும், சிந்துவெளி எழுத்துகளை, அம்மரபுப் படி எவரும் ஆய்வு செய்யவில்லையயென்றும் பர்ப்போலா கூறுகிறார். சிந்துவெளி நாகரிகத்துக்குப் பிறகு அறியப்பட்ட இந்திய இலக்கியங்கள் எவையும், அந்நாகரிகம் பற்றிய எந்தச் செய்திகளையும் தரவில்லை என்பதை பர்ப்போலா சுட்டிக் காட்டுகிறார்.

சிந்துவெளி நாகரிகத்துக்கு முன்பு அறியப்பட்ட அல்லது சமகால மேற்கித்திய இலக்கியங்கள், மெளுகா (Meluhha) என்ற நாட்டைக் குறிப்பிடுவதாகவும், அது தொலைவிலுள்ள நாடு என்றும், அது சிந்துவெளியையே குறிப்பதாகவும் பர்ப்போலா குறிப்பிடுகிறார்.[787] (Contemporary cuneiform soruces speak of the most distant land Meluhha widely understood to denote Greater Indus Valley, but they offer little further information. - Parpola)

மெளுகா என்ற நாடு தொலைவிலுள்ள சிந்துவெளியையே குறிப்பிடுகின்றன. சுமேரிய - மெசபத்தோமிய இலக்கியங்களில் இச்சொல் காணப்படுகிறது. தொலைவிலுள்ள நாடு என்பதால், அது சிந்துவெளியையே குறிப்பதாக, ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மீள் என்ற தமிழ்ச் சொல்லுக்கு விடுபடுதல், வெளியேறுதல் என்பது பொருளாகும்.

மள் என்ற மூலச்சொல், பள்ளத்தைக் குறிக்கும்.

மள் - மாள் என்பது, விடுபட இயலாத, இறந்து போதலைக் குறிக்கும்.

மள்ளில் (பள்ளத்தில்) வீழ்ந்தவர், மாள்வது இயல்பானது.

மாறாக, மீள்வதென்பது வெளியேறுதலைக் குறிப்பது.

மள் - மாள் - மீள் ஆகிய சொற்களிடையே காணப்படும் தொடர்பினை நோக்குக.

எனவே, மீள் என்பது, வெளியேறுதலையே குறித்தது.

அகம் என்பது நாட்டையும், வீட்டையும் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

மீள் + அகம் = மீளகம் என்பது, அதுவரையில் குடியிருந்து, பிறகு வெளியேறிய இடம் என்பதால், தொடக்கத்தில் குடியிருந்த இடத்தையே மீளகம் என்ற சொல் குறித்தது. மேற்கே குடியேறியவர்கள், சிந்துவில் வாழ்ந்திருந்தவர்கள் என்பதாலும், அவர்கள்

பல்வேறு காரணங்களால் மேற்கே சென்று குடியேறினர் என்பதாலும், தங்களுடைய தாயகம், தொலைவில் இருந்ததை உணர்ந்திருந்ததாலும், தங்கள் தாயகத்தை மீளகம் எனக்குறிப் பிட்டனர் எனலாம்.

பல்வேறு மெசபத்தோமிய - சுமேரியச் சொற்களைப் படித்தவர்கள், பலவற்றைத் தவறாகவே படித்துள்ளனர் என்ற அடிப்படையில், மீளகம் என்பதை, மெளுகா எனப்படித் துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

மெளுகா என்ற நாடு தொலைவில் உள்ளது என சுமேரிய ஆப்பெழுத்துக் குறிப்புகள் கூறினாலும், தென் மெசபத்தோ மியப் பகுதியில், மெளுகா என்ற சிற்றூர் அறியப்பட்டுள்ளது. அச்சிற்றூரில் குடியேறி வாழ்ந்திருந்தவர்களின் பெயர்கள் யாவும், சுமேரியப் பெயர்களாகவே அறியப்பட்டுள்ளன.[788] (The cuneiform texts in fact sp eak not only of a distant country Meluhha but also of a village in southern Mesopotamia called Meluhha whose inhabitants had purely Sumerian names.) சுமேரியர்கள் சிந்துவெளியினின்றும் மேற்கே குடியேறிய தமிழர்களே என அறியப்படுவதாலும், அவர்கள் குறிப்பிடும் பெயர் மீளகம் என்ற தமிழ்ச் சொல்லாக இருப்பதாலும், சிந்துவெளியை, மீளகம் என்றே சுமேரியர்கள் அழைத்தனர் என்பதை அறிய முடிகின்றது. இந்தச் சுமேரியப் பெயர்கள், அறப்பன் சொற்களிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதன்மூலம், இவ்விரு இனமும் ஓரினமே என்ற முடிவுக்கு வர இயலும். ஆனால், ஆய்வாளர்களோ, சிந்துவெளி - மெசபத் தோமிய வணிகத் தொடர்புகளின் காரணமாகவே, சுமேரியப் பெயர்களை, அறப்பன் மக்கள் சூடிக்கொண்டனர் என்ற பொருந்தாக் காரணத்தைக் கூறுகின்றனர். மேலும், அறப்பன் வணிகர்கள், சுமேரிய மொழியையும் கற்றுக் கொண்டு, இரண்டு மொழிகளைப் பேசுபவர்களாகவும் இருந்தனர் எனக் கருதினர். அதன்வழியில், அறப்பன் குறிப்புகளில், சுமேரியப் பெயர்களையும் எழுதி வைத்தனர் எனக் கூறுகின்றனர். உண்மையில், சுமேரிய - சிந்துவெளி மக்களின் இனத் தொடர் புகள் பற்றி ஆய்வாளர்கள் அறிந்திருக்கவில்லையென்றே எண்ணத் தோன்றுகிறது.

அக்காலத்தில் பாரசீகத்தில் பேசப்பட்ட மொழி (Indo - Iranian), இந்தியச் சிந்துவெளி மற்றும் கிரேக்க - அர்மீனிய

மொழிகளின் கலவையாக இருந்தது என்பர். ஏறக்குறைய கிழக்கு - மேற்கு ஆகிய நாடுகளின் இணைப்புப் பாலமாக, பாரசீகம் இருந்துள்ளது. வடக்கே அறியப்படும் வோல்கா - ஊரல் மலைத் தொடர்களில் வாழ்ந்திருந்த மக்களே, கி.மு. 3000 ஆண்டுகளில், புரவியின் பயன்பாட்டை அறிந்திருந்தனர் என்று சொல்லப்படுகின்றது. ஆனால், நடுத்தரைக் கடல் நாடுகளில், கி.மு. 1600 ஆண்டுகளுக்குப் பிறகே புரவியின் பயன்பாடு அறியப்பட்டுள்ளதாக, ஆய்வாளர்கள் கூறுகின் றனர்.[789] (The Hyksos of Hittite origin was the introducers of horses in north Mesopotamia during 1600 B.C.) இந்த வோல்கா மக்கள் மெசபத்தோமியப் பகுதிகளில் குடியேறி, புரவியின் பயன் பாட்டை, அவர்களுக்கு அறிமுகம் செய்தனர் என்ற கருத்தும் உண்டு. இந்தியாவில் புரவிகளுடன் குடியேறிய ஆரியர்கள், வோல்கா மக்களா அல்லது ஈத்திய மக்களா என்பதை ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தவில்லை. அண்மையில் (சென்ற நூற்றாண்டில்), ஈத்தியர்களின் தலைநகரான போகஸ் கோய் (Boghoskoy) என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய் வுகளில், பல்வேறு செய்திகள் வெளிப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், இந்தியாவில் குடியேறியவர்கள், ஈத்திய (வடக்கு மெசபத்தோமிய) மக்களில் ஒரு பிரிவினரே பயன் பாட்டை அறிந்திருந்தனர் என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்வதால், சிந்துவெளி மக்கள் ஆரியர்கள் அல்லர் என்பதை திட்டவட்டமாகக் கூற இயலும் என பர்ப்போலா தெளிவு படுத்துகிறார். அவ்வாறு வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாத சிந்துவெளி மக்கள் யார் என்ற கேள்வி எழும்போது, அவர்கள் திராவிடர்களே என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது என பர்ப்பலா தெரிவிக்கின்றார்.[790] (The only remaining alternative among the well known potential linguistic relatives of the Harapp an language is the Dravidian language family. - P arpola.)

திராவிட மொழியின் கிளைகளாக இன்று 26 மொழிகள் அறியப்படுகின்றன. இம்மொழிகள், மைய இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் பேசப்படுகின்றன. திராவிட மொழிகளில் ஒன்றான பிராகுயி (Brahui), பலுச்சிஸ்தான் பகுதியில் அறியப் படுகின்றது. இந்தியாவின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் திராவிட மொழிகளைப் பேசி வருகின்றனர். பர்மிய, திபேத்திய, மலாய், பாலி பகுதிகளில் பேசப்படும் பல மொழிகள், திராவிட மொழிகளுடன் தொடர்புடையன.

சமற்கிருத மொழியிலும் திராவிட மொழிகளின் தாக்கங்கள் உள்ளன. மேற்கண்ட செய்திகளை பர்ப்போலா விளக்குகிறார்.[791]

சமற்கிருதம் என்ற மொழியின் தோற்றம் குழப்பமானது, முரண்பாடுகளைக் கொண்டது. இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்துடன் தொடர்புப்படுத்தப்படுகிறது. இந்திய - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தின் மூலமொழி எதுவெனத் தெரியவில்லை. ஆனாலும் ருக்கு வேதத்தில் திராவிட மொழித் தாக்கம் உள்ளதை மறுப்பதற்கில்லை.

முகம் (Mukam = face, front, mouth)
களம் (Kalam = threshing floor)
பழம் (Phalam = fruit; Pazam = repe fruit)
குண்டம் (Kundam = pit)
காணா (Kaana = blind in one eye; not seeing)
காயாம்பூ (Kiyaambu = watery plant; taro, ariod, colocasia)

மேற்கண்ட சொற்கள் ருக்கு வேதத்தில் காணப்படுவதை, பர்ப்போலா சுட்டுகிறார்.[792] முகம் என்ற சொல், சமற்கிருதச் சொல்லே என உ.வே.சா. கருதுகிறார். அதுபோல் குண்டம் என்பதும் சமற்கிருதச் சொல்லே எனக் கருதப்படுகின்றது. பழம் என்ற சொல்லில் உள்ள ழகரம் சமற்கிருதத்தில் இல்லையென்றாலும், அச்சொல் இடம்பெற்றுள்ளது. காணா என்ற சொல்லுக்கு, பார்வையில்லாத ஒரு கண் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. காயாம்பூ, காசாம்பூ என்றும் தமிழ் நாட்டில் வழக்கில் உள்ளது. பொதுவாக, யகரம் சகரமாக வழக்கில் உள்ளது. வியாழன் - விசாழன், குயவன் - குசவன் என்றவாறு.

ஆய்வாளர்கள் உணர்த்தும் மேற்கித்திய எழுத்துகளில் எலாமைட் (Elamite) எனப்படும் எழுத்து முறையும் ஒன்று. எலாம் (Elam) எனக் குறிப்பிடும் பகுதி, பாபிலோனுக்குக் கிழக்கே அமைந்திருந்ததாகும்.[793] இன்றைய ஈரானின் மேற்குப் பகுதியாகும். இச்சொல்லில் உள்ள ழகரத்தை அறியாதவர்கள், ஈ என்ற எழுத்தை எ எனப்படித்தவர்கள், ஈழம் என்ற தமிழ்ச் சொல்லை, தவறாக எலாம் எனப் படித்து அந்த ஒலியையே பதிவு செய்து விட்டனர். உண்மையில், ஈழம் என்ற குமரிக் கண்டத்துப் பகுதியிலிருந்து குடியேறிய தமிழர்கள், தங்களது

பகுதியின் பெயரையே, குடியேற்ற நாட்டுக்கும் வைத்துக் கொண்டனர். ஈழம் என்ற சொல்லின் பொருள் தெரியாத ஆய்வாளர்கள், அது ஒரு புதிய நாடு எனத் தவறாகக் கருதி விட்டனர். இக்கருத்தை, தமிழ்நாட்டிலுள்ள சில ஆய்வாளர் களிடம் நூலாசிரியர் விளக்கிக் கூறியபோது, அதனை ஏற்க மறுத்தனர். மேலை நாட்டவர் சிந்தனைகளிலேயே, தமிழ் நாட்டவரும் இருப்பதை உணர முடிகின்றது. இத்தகைய ஆய்வாளர்களால் உண்மையான வரலாற்றை வெளிக் கொணர இயலாது எனலாம். குமரிக்கண்ட அழிவிற்குப்பிறகு, தமிழர்கள் மேலை நாடுகளில் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர் என்பதை, தமிழ் அறிஞர்களே ஏற்க மறுக்கின் றனர்.

இத்தகைய போக்குகளினால்தான், தமிழருடைய தொன் மையான வரலாறு அறியப்படாமல் முடக்கப்படுகின்றது. மேலை நாட்டு ஆய்வாளர்கள் கூறும் செய்திகளை, தமிழ்க் கண்ணோட்டத்தில் அணுகிப் பார்க்க எவரும் முன்வருவ தில்லை. எலாமியர் எனக் கூறப்படும் ஈழ மக்கள் பயன்படுத்திய எழுத்து முறை, முற்றிலுமாக சிந்துவெளி எழுத்துகளோடு ஒற்றுமைப்படவில்லையென்றும், ஒரு சிலவே ஒற்றுமைப் படுகின்றது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புதிய குடியேற்ற நாடுகளில் வாழ்ந்திருந்த தமிழர்கள், தங்கள் புதிய சூழலில், பட்டறிவில், புதிய எழுத்து முறைகளையோ, அல்லது சிலமாற்றங்களையோ செய்திருக்கக் கூடும். அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையானதே. சுமேரிய, பாபி லோனிய, எகிப்திய எழுத்துமுறைகள், தமிழ் மூலத்திலிருந்து மாற்றம் பெற்றவைகளே. பிற்காலத்தில் போனீசியர்கள் உருவாக்கிய எழுத்து முறை, இந்தியாவில் தமிழர்கள் தோற்றுவித்த புதிய எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டது என்பதை தற்காலத்தில் ஆய்வாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

சுமேரிய எழுத்து முறைகளில் காணப்படும் சொற்கள், பல்வேறு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன என்பது ஆய்வாளர்களின் கருத்து. எடுத்துக்காட்டாக, அம்புக் குறியிட்ட ஒரு சொல், அம்பை (arrow) மட்டுமே குறிக்கவில்லை யென்றும், உயிர் (life), எலும்பு (rib) ஆகியவற்றையும் குறித்தது என்பர். இம்மூன்று பொருளையும் உள்ளடக்கிய அச்சொல்,

தை (ti) என்று அறியப்படுகின்றது.[794] (In Sumerian script the drawing of an arrow meant arrow, but in addition, life and rib, because all these words were pronouneed alike in sumerian language, namely "Ti". - Purpola.)

தை என்ற தமிழ்ச்சொல், இணைப்பு, பிணைப்பு என்றவாறு பொருள்படும். அம்பு ஒன்றின் மீது தைப்பதாலும், உயிர் (life) என்பது உடலோடு தைக்கப்பட்டிருப்பதாலும், எலும்புகள் தசையோடு தைக்கப்பட்டிருப்பதாலும், தை என்ற தமிழ்ச் சொல்லை, சுமேரியர்கள் பயன்படுத்தினர். தை என்ற சொல், தமிழ்ச் சொல்லே என்பதை இதுவரை எந்த ஆய்வாளரும் புரிந்து கொள்ளவில்லை. அது ஏதோ ஒரு புதிய சுமேரியச் சொல் என்றே கருதினர். இவ்வாறு பல சொற்கள் மேலை மொழிகளிலே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன.

தை என்ற தமிழ்ச் சொல்லின் ஆழம் மேலை நாட்டவருக்குத் தெரியவில்லை. தை + செய் என்பதே, தசை (skin) எனப்பட்டது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள இயலாதது அவர்கள் குற்றமன்று. தைக்கும் தொழிலைச் செய்தவன், தை + செய்யன் எனப்பட்டான். தை + செய், தைச்செய்யன், தைச்சன் என்று சொல்லப்பட்டது. தைச்சன், தச்சன் என பிற்காலத்தில் மருவியது. மரப்பலகைகளை இணைத்தவன், தைத்தவன், தச்சன் எனப்பட்டான். தசை, சதை என்ற பொருள் விளக்கம் ஏற்கனவே இத்தொகுப்பில் சொல்லப்பட்டுள்ளது.

தச்சன் என்பவன் தொழில் நுட்பம் அறிந்தவன். அதற்கேற்றவாறு பொருட்களை வடிவமைத்துப் பொருத்துபவன். தைச்சன் அல்லது தச்சன் என்ற தமிழ்ச்சொல், Taccan என்றவாறே, கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டது. சி (உ) என்ற எழுத்து, ச என்ற ஒலியைத் தந்தது. கிரேக்கத்திலிருந்து இலத்தீனுக்குச் சென்ற அச்சொல், ச ஒலி, க ஒலியாக மாற்றம் பெற்றது. Dekkan எனப்பட்ட அச்சொல், பிற்கால கிரேக்க மொழியில், techne என்று மாற்றம் பெற்றது. Techne, Tekne ஆகிய கிரேக்கச் சொற்களுக்கு, கலை (art) என்று பொருள் உணரப்பட்டது. ஆங்கிலத்தில் Technic என்று திரிந்தது.

Origin : Thachchan (Tamil) → Taccan (Greek) → Techne (Greek) → Tekne (Latin) - Technic (Eng.)

தை என்ற தமிழின் வேரும் மூலமும், இன்றைய ஆங்கில மொழியில், Technic, Technical, Techni colour, Technique, Techno, Technology, Tectonic, Tectorial என்றவாறெல்லாம் திரிந்து விரிந்துள்ளதை நோக்குக.

தை என்ற தமிழ்ச் சொல், எவ்வாறு நீண்டு, உலக மொழிகளில் நிலைகொண்டுள்ளது என்பதை, மேலை நாட்டு ஆய்வாளர்கள் அறிய மாட்டார்கள். அவர்களுக்கு, அச்சொற்கள், தமிழ் மூலத்திலிருந்தே விரிந்தன என்பதை, நாமும் அவர்களுக்கு எடுத்துக் கூறத் தவறிவிட்டோம்.

தச்சன் என்ற சொல், தொடக்க காலத்தில் கருமானையும் உள்ளடக்கிய பொருளைக் கொண்டிருந்தது. காயன் (காய்ச்சுபவன், காய்ச்சி வடிப்பவன்) என்ற கருமானைப் பற்றிய சொல் காயின் (Cain) என்றே சொல்லப்பட்டுள்ளதை, எபிறேய மொழியில் காணலாம். துவட்டன் (கனிமங்களைத் துவட்டி எடுப்பவன்) என்ற சொல்லும் கருமானையே குறித்தது. அது, துவஷ்டா (Twashta) என சமற்கிருத மொழியில் திரிந்துள்ளதை அறியலாம். Twashta (Sans.) = Technician, black smith.

தொல் தமிழரிடையே “மீன்” என்ற சொல், பரவலாக அறியப்பட்டு, பயன்பாட்டில் இருந்தது. குமரிக்கண்டத்துப் பாண்டிய மன்னர்கள், தங்களுடைய அரசுச் சின்னமாக மீனையே பயன்படுத்தினர் என்பதை அறியலாம். அதன் தொடர்ச்சியாக, இடைக்காலத்துக்குப் பிறகு முடிவுற்ற பாண்டிய மன்னர்களின் அரசு முத்திரையாகவே அது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. குமரிக் கண்டத்துப் பாண்டியர்கள், மீன் முத்திரையை ஏன் தேர்வு செய்தார்கள் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

மின் என்ற மூலச் சொல்லுக்கு ஒளிர்தல் என்பதே பொருளாகும். அதன் வழியிலேயே, தற்காலத்தில் மின்சாரம், மின்னியல், மின் பொருட்கள் என்றவாறு அச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மின் என்பது ஒளி என்ற பொருளைக் குறித்ததே. தொல் தமிழர், மின் என்பதிலிருந்தே, மீன் என்ற சொல்லை உருவாக்கினார்கள்.

நீரில் ஒளிர்வதையும், வானில் மின்னுவதையும், மீன் என்ற ஒரு சொல்லாலேயே பயன்படுத்தினர்.

உலகச் சமயங்களின் படைப்புக் கதைகளை நோக்கும் போது, ஒளியே முதன்முதலில் இறைவனால் படைக்கப் பட்டது என்ற கருத்து, அனைத்துச் சமய நூல்களிலும் வலியுறுத்திச் சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம். விவிலியம் கூறும் படைப்புக் கதையில் இறைவன் தன் உருவமாக வெளிப்பட்டு நின்றது ஒளியே என்ற கருத்து இழையோடு வதைக் காணலாம். இக்கருத்தைத் தமிழ் இலக்கியங்களும், அண்மையில் மறைந்த வள்ளலாரும் கூடப் பற்றி நின்றனர். மின் என்பது இறைவனைக் குறித்த சொல்லே என்பதைத் தமிழரின் மரபுகள் வெளிப்படுத்துகின்றன.

பண்டைக் காலத்துப் பாண்டியர்கள் தேர்வு செய்த மீன் என்ற அடையாளம், முதலில் நீரின் மீனைக் குறித்ததா அல்லது வானத்து மீனைக் குறித்ததா என்பதை எவரும் இதுவரை விளக்கவில்லை. இரண்டையும் குறித்தே சொல்லப்பட்டது என்பர். வானத்து மீனே முதலில் அவ்வாறு சொல்லப்பட் டிருக்க வேண்டும். மீன் தெய்வமாகவோ அல்லது தெய்வத் தோடு தொடர்புடையதாகவோ அறியப்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. சிந்துவெளியில் மீன், நீர்மீனைப் போலவே அடையாளம் காட்டப்பட்டுள்ளது. மீனைப் போன்ற உடலும், அதன் பக்கங்களில் இரண்டு கோடுகளும், வால் பகுதியில் விரிந்த இரு கோடுகளும் கொண்ட முத்திரைகள் பல காணப் படுகின்றன. இவை நீர் மீன்களையும், வானத்து மீன்களையும் குறித்தன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சுமேரிய - மெசபத்தோமிய மக்கள் விண்மீனை வானத்தின் கடவுளாகக் (Sky god) கருதினர். அன் (an) என்ற கடவுள், வானக் கடவுளாகவே அறியப்படுகிறான். சுமேரியரின் நாள் காட்டியும் விண்மீன்களை அடிப்படையாகக் கொண்டதே என்பர். சுமேரிய மற்றும் மெசபத்தோமியக் கடவுளர்கள், விண்மீன்களின் பெயர்களைக் கொண்டிருந்தவர்களே. மொகஞ் சதாரோவில் அறியப்பட்ட கடவுள் முத்திரையில் (பசுபதி என்று எஸ்.ஆர். இராவ் கூறுகிறார்), கடவுளின் தலையில் உள்ள இரண்டு கொம்புகள், உள்பக்கமாக வளைந்து, ய போன்றவாறு காணப்படுகின்றது. அவ்வளவுகளுக்குள் பக்கத் துக்கு ஒன்றாக இரு விண்மீன்கள் காணப்படுகின்றன. அவை, நீர் மீன்கள் உருவத்திலேயே உள்ளன. அறப்பன் சொற்களில் காணப்படும் பல பெயர்கள், மீன்களின் பெயர்களாகவே

உள்ளன. பிற்கால ருக்கு வேதம், சிந்துவெளியில் அறியப்பட்ட பல்வேறு விண்மீன்களைத் தேவர்களாகப் போற்றுகின்றது. இப்பெயர்கள் யாவும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே.

மீன் என்றே படிக்கப்பட்ட சிந்துவெளிச் சொல், தமிழ்ச் சொல்லே என்பதை பர்ப்போலா போன்ற ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டாலும், அது திராவிட மொழிச் சொல் எனப் பதிவு செய்துள்ளனர்.[795] திராவிட மொழி எதுவென்பதையும், அதன் தோற்றம் வளர்ச்சி பற்றியும் எவரும் விளக்குவதில்லை. எவரோ சொன்ன திராவிடம் என்ற சொல்லை, ஆய்வாளர்கள் பற்றி நின்றனர். திராவிடமும் தமிழும் ஒரு மொழியா அல்லது வெவ்வேறு மொழிகளா என்பதற்கு எவரும் விளக்கம் தரவில்லை. திராவிடம் என்ற மொழிக்கு முன்னதாக, முன் திராவிடம் (Proto - Draviclian) என்ற மொழி இருந்ததாகவும். கூறுகின்றனர். திராவிடமே கற்பனையான மொழி என்று கருதப்படும்போது, முன் திராவிடம் என்றொரு மொழி இருந்தது என்பது, வரலாற்றில் மெய்ப்பிக்கப்படாத ஒன்றாகும். மின் (min) என்ற வேர்ச் சொல்லில் இருந்தே, மீன் (miin) என்ற சொல் தோன்றியது என்பதை ஒப்புக் கொள்ளும் பர்ப்போலா, மின் - மீன் ஆகியவை தமிழ்ச்சொற்கள் எனக் குறிப்பிடாமல், திராவிட மொழிச் சொல் என்று குறிப்பிடுகிறார்.[796] (The most commonly used for fish in Dravidian languages is miin and has the homophone miin meaning, star. Both words may be derivatives of the root min "to glitter". - Parpola.)

பர்ப்போலாவின் சிந்தனை அது தமிழ்ச் சொல்லே என்பதை உறுதிப்படுத்தினாலும், அவருக்கு முந்திய ஆய்வாளர்களின் மொழி மரபுப்படி, அச்சொல்லை திராவிடச் சொல் எனக் குறிப்பிடுகிறார் என்பதை அறிய முடிகிறது. (இவ்வாறான தவறான திராவிடச் சிந்தனையை விதைத்தவர் கால்டுவெல்லே என அறியவும்) தவறான தங்கள் சிந்தனைகளுக்கு மேலும் உறுதிப்பாடுகள் வேண்டி, முன் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தினர்.[797] (Of course one must check that the words in assumed readings are represented in more than one subgroup and can be re-constructed for Proto - Dravidian. Tamil speakers who call these two things with the same word, have imagined the stars to be fish swimming in the ocean of night sky. - Parpoea)

திராவிட மொழிகள், மீன் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன என்ற ஆய்வாளர்களின் கருத்து உண்மையானால்,

செமிட்டிக் மொழிகளும், சமற்கிருதமும் கூட, மீன் என்ற சொல்லை எவ்வாறு பயன்படுத்தின என்பது குறித்து ஆய்வாளர்கள் விளக்கம் தரவில்லை. பாபிலோனில் இலார்சா (Larsa) நகரத்தின் தெய்வமாக உடு (Utu) என்ற கடவுள் சொல்லப்பட்டுள்ளது.[798] மீன் என்ற சொல்லே, மனு என்றவாறு சமற்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேற்கே அறியப்படும் பலமொழிகளிலும் மீன் என்ற சொல், சில திரிபுகளுடன் காணப்படுகின்றது.

மீனசு (கிரேக்கம்), மீனோஸ் (கிரீட் மொழி), மெனஸ் (எகிப்தியம்), மெனு (சமற்கிருதம்), மனு (எபிரேயம்) ஆகிய சொற்கள், மீன் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபுகளே. இச்சொற்கள் இறைவனோடு தொடர்புடைய சொற்களே. மெனு என்ற சமற்கிருதச் சொல், விஷ்ணுவின் மச்சாவதாரத்தைக் குறிப்பிடுகிறது. எம் - மனு - எல் (Em - manu - el) என்ற எபிரேயச் சொல், கடவுளைக் குறிக்கின்றது. பல்வேறு சமயங்களிலும் மீன் இறைவனோடு தொடர்புடையதாகக் காண்கிறோம். கிறித்துவ சமயம் தோன்றி முதல் நான்கு நூற்றாண்டுகள் வரையிலும், இயேசுவை மீன் அடையாளமிட்டே வணங்கி வந்துள்ளனர். எனவே, பாண்டியரின் மீன் சின்னம் இறைவனைக் குறித்துத் தேர்வு செய்யப்பட்டதே எனலாம். தற்கால அறிவியல் கூற்றின் படி, முதல் உயிர் கடலில் தோன்றியதாகவே கருதுகின்றனர். மீனின் பரிணாம வளர்ச்சியே மற்ற உயிரினங்களுக்கு மூலமாக இருந்ததாகவும் கருதுகின்றனர். சிந்துவெளி மீனும், உலக நாகரிகங்களில் அறியப்படும் மீன் முத்திரைகளும், தமிழ் மூலத்தினின்றும் விரிவடைந்தவைகளே எனலாம்.

தமிழர்கள் தங்கள் நாள்காட்டியைத் தேர்வு செய்த போது, பலவாறு நூற்றாண்டுகள் தோறும் மாற்றங்கள் செய்யப்பட்டு, இறுதியில், சூரிய - திங்கள் சுழற்சி முறையைக் கொண்ட நாள் காட்டியை இறுதியாக்கினர். அந்நாள் காட்டியின் மாதங்கள் அனைத்தும் மீன்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. 27 மீன் கூட்டங்கள், 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் சூரியன் கடந்து போகும் காலத்தையே ஒரு மாதம் என்ற அளவில், 12 மாதங்கள் வகுத்துள்ளனர். தமிழர்கள் மேழத்தையே முதல் மாதமாக வைத்தனர். இந்த நடைமுறையை பாபிலோனிய நாள்காட்டியிலும் எகிப்திய மற்றும் எபிரேய முறைகளிலும்

அறியலாம். ஆரியர்களும் மேழத்தை முதன்மையாகக் கொண்டே நாள் காட்டியே பின்பற்றினர்.

எனவே சிந்துவெளியில் அறியப்பட்ட சொற்கள் அனைத்தும், தமிழ்ச் சொற்களே என்பதை, இரா. மதிவாணன், திரு. பூராண சந்திர ஜீவா போன்றவர்கள், பல்வேறு சான்று களுடன் நிறுவியுள்ளனர்.

ஆறு பக்கக் கோடுகளைக் கொண்டது ஆரல் என்ற விண்மீனே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அது ஏழு விண்மீன்களைக் கொண்ட கூட்டமாயினும் (Pleiades) ஒன்று ஒளி குறைந்து காணப்பட்டதால், ஆறு என்றே கணக்கிட் டனர். இதனைக் கார்காலத்தில் ஒளிரும் கார்த்தீ என்றே தமிழர்கள் அழைத்திருக்க வேண்டும். கார்த்திகா என சமற் கிருதத்தில் திரிந்துள்ளது. நான்கு கோடுகள் கொண்ட முத்திரையை மீன் என்றும், ஆறு கோடுகள் கொண்டது ஆரல் என்றும் ஆய்வாளர்களால் படிக்கப்பட்டுள்ளன. இடப்பக்கம், நட்டாக நிற்கும் ஏழு கோடுகளும் அதற்கு வலப்பக்கம் உள்ள மீன் முத்திரையும் இணைத்துப் படிக்கப்பட்டு, அது எழுமீன் என்று படிக்கப்பட்டது. ஏழு முனிவர்களின் கூட்டம் என்ற வாறு தமிழில் கூறுவர். பெருங்கரடி (great bear) என்றும் அழைப்பர். இக்கூட்டம், இரவு நேரங்களில் நகர்ந்து செல் வதை வைத்து, நேரத்தையும் கணித்தனர். வெறும் கண்களுக்கே புலனாகும் இந்த எழுமீனை, அதன் நகரும் தன்மையைக் கொண்டு ஊரும் மீன்கள் என்றவாறு சொல்லியிருக்க வேண்டும். அதுவே, ஊர்சா (Ursa) என்றவாறு கிரேக்கத்தில் சொல்லப் பட்டது. கிரது, புலகன், புலத்தியன், அத்திரி, அங்கிரன், வசிட்டன், மரிச்சி என்று அழைக்கப்பட்ட அம்முனிவர்கள் எழுவரையும், வெள்ளக்காலத்தில் விஷ்ணு காப்பாற்றியதாக வும், அவர்களது தூய்மையான, நல்லொழுக்க வாழ்வைக் கருத்தில் கொண்டு, விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டதாகவும், அவர்களை சப்தரிஷிகள் என்றும் வேதம் கூறுகிறது. எழு மீனைப் பற்றிய இச்செய்தி, ஆரியர்கள் இந்தி யாவிற்கு வருமுன்னரே இந்தியப் பழங்குடியினரால் சொல் லப்பட்டு வந்தது என்பதை ஆய்வாளர்கள் உணர்த்துகின்றனர்.

ஆரல் மீன் கிழக்கில் தோன்றும் போது, எழுமீன் வடக்கில் இருக்கும். இந்தத் தொடர்பைக் கொண்டு ஆரல் மீன்கள், ஏழு முனிவர்களின் மனைவியர் என்று சொல்லப்பட்டது. ஆரலில்

ஏழு மீன்கள் உண்டு. ஒன்று ஒளி குறைந்து, தன்னை ஒளித்துக் கொண்டிருக்கும். அக்கினி என்பான் (சிவன் என்றும் கூறுவர்), அந்த ஏழு முனிவர்களின் மனைவியரை ஈர்த்துவிட்டான். அவர்களில் ஒருத்தி மட்டும், அக்கினியின் விருப்பத்துக்கு இசைய மறுத்தாள். அவளே வசிட்டனின் மனைவி என்று சொல்லப்படுகிறாள். அக்கினியின் பார்வையிலிருந்து தன்னை ஒளித்துக் கொண்ட அவளை, அருந்ததி என்று அழைக்கின் றனர். அறுந்த தீ என்ற தமிழ்ச்சொல், ஒளியிழந்த மீன் என்ற பொருளைத் தரும். மதியிழந்த அம்மனைவியரை, அம்முனி வர்கள் தள்ளிவைத்தனர்.

தமிழர்கள், ஆரல் மீன் உச்சம் பெறும் மாதத்தைப் போற்றினர். அதன்வழியில் கார்த்திகை மாதத்தை ஆண்டின் முதல் மாதமாகக் கொண்ட நாள் காட்டியையும் உருவாக் கினர்.[799] தமிழகத்தில் இவ்வாறான ஆண்டுக் கணக்கும் இருந்தது. திசம்பர் 21ஆம் நாளில், சூரியன் மகரக் கோட்டைத் தொடும் நாளையே, ஆண்டுத் தொடக்கமாகக் கருதினர்.

மேலே சொல்லப்பட்ட அக்கினியின் கதையை, புராணங்கள் சிவனை முன்னிறுத்திக் கூறுகின்றன. தங்கள் மனைவியரை மயக்கிய சிவனை ஒறுக்க எண்ணிய முனிவர்கள், சிவனுடைய ஆண் குறியைத் துண்டித்துவிட்டனர். தரையை நோக்கி விழுந்து கொண்டிருந்த அக்குறி, தரையில் பட்டால், உலகம் தீப்பற்றிக் கொள்ளும் என அஞ்சிய அம்முனிவர்கள் அதனைத் தாங்கிப் பிடிக்க, பெண் குறி யொன்றைப் படைத்து விட்டனர். இதனால் உலகம் காக்கப்பட்டது என்பது கதை. இதுவே லிங்க வழிபாடாக மாறியதாகவும் கூறுவர். இக்கதைகள் எல்லாம், கிழக்கே ஆரல் தோன்றும்போது, அதற்கு வடக்கே எழுமீன் இருக்கும் வானியல் உண்மையை விளக்குவனவாகும்.

அறப்பாவில் கண்டெடுக்கப்பட்ட பானையொன்றில் அத்திமரக்கிளையும், மூன்று இலைகளையும் கொண்ட இலைச்சினை காணப்படுகிறது. நடுவில் உள்ள இலையின் தலையில், நான்கு பக்கக் கோடுகள் உள்ளன. இக்கோடுகள், அத்தி மரத்துக்கும் காற்றுக்கும் உள்ள தொடர்பை வெளிப் படுத்துவதாகக் கருதுகின்றனர். அத்திமரம் தனது பிடிப்பைக் காற்றில் பதிய வைத்துள்ளது (air - root) என்பர்.[800] இக்குறியீடு, பல்வேறு வானியல் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அத்திமரம் என்பது குறிஞ்சியில் வளரும் மரமாகும். அத்தி, ஆல் ஆகியவை ஒரு குடும்பத்தைச் சார்ந்த மரங்களாக தற்கால மர அறிவியல் கூறுகிறது. இவ்விரண்டும் கயிறு அல்லது வடம் போன்ற விழுதுகளைத் தரையில் இறக்கும் தன்மை கொண்டவை. உருவில் பெரிய அம்மரங்கள், தாய் மரத்தின் வேர்கள் தரும் நீர் அதன் வளர்ச்சிக்குக் குறைவாயுள்ளதால், விழுதுகளை இறக்கி நீரைப் பெறுகின்றன. அத்திமரத்தின் கிளைகள் வெண்ணிறமாக இருக்கும். இதன் கனிகள் உதிர்ந்து கீழே கொட்டும். நீர்ப்பிடிப்புள்ள இடத்தில் இருந்த அத்தி மரத்தின் பழம் ஒன்றின்மேல் பல நண்டுகள் ஏறி மிதித்து அக்கனியைச் சிதைக்கும். இக்காட்சியைக் குறுந்தொகை விளக்குகின்றது.[801] தலைவனைப் பிரிந்துள்ள தலைவியின் நெஞ்சு, அத்திப் பழத்தைப் போன்று சிதைந்துள்ளது. தலைவனின் வருகை நீள்வதால், நண்டுகள் மிதித்த பழம்போல், மேலும் தலைவியின் நெஞ்சம் சிதைக்கப்படுவதாக அப்பாடல் கூறுகிறது.

ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த வொருபழம் போல

– குறுந்தொகை, 24:3–4

அத்திக் கிளையின் மேல் உள்ள நான்கு கோடுகள், காற்றைக் கட்டியிழுக்கும் வேர்களாகக் கருதப்படுகின்றன. அத்திமரம் தமிழ்நாட்டுக்குரியது என்பதும், மேலை நாடுகளில் அம்மரம் வளர்வதில்லை என்பதும் மர அறிவியல் கூறும் செய்தியாகும். மேலைநாட்டு மொழிகளில், அத்தி மரத்திற்குச் சொற்கள் இல்லை. கிரேக்க மொழி, அத்திமரத்தை Ficus Indica என்றே குறிப்பிடுகிறது. அத்திமரத்தின் விழுதுகளைக் கருத்தில் கொண்டு, அது வடமரம் (rope tree) என அழைக்கப்பட்டது. வடம் என்பது, கயிற்றைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். வேதத்திலும், வேதத்திற்குப் பிந்திய காலத்திலும், அத்தி மரத்தை வட (Vata) என்றே சமற்கிருதம் கூறுகிறது. இது தமிழ்ச் சொல்லை ஏற்றுக் கொண்ட செய்தியை விளக்குகிறது.

வட, வடம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு, வடக்கு என்ற பொருளும் உண்டு. வடுத்தல் என்றால் நீளுதல் என்று பொரு ளாகும். குமரிக் கண்டத்தின் தெற்கே கடல் இருந்ததால், அங்கு நிலம் நீண்டிருக்கவில்லை. வடக்கேயிருந்த நிலப்பகுதிகள் நீண்டு விரிந்திருந்தன. அதுபற்றியே, வடுத்தல் திசை, வடதிசை அல்லது வடக்குத்திசை என சொல்லப்பட்டது.

அறப்பா குறியீடுகளில், மற்றொரு பானையில், அத்தி மரத்தோடு, மீன் குறியீடும் காணப்படுகின்றது. அத்தி மரத்துக்கும் மீனுக்கும் என்ன தொடர்பு எனக் கேட்கத் தோன்றும். ஒரு வானியல் செய்தியை இக்குறியீடுகள் வெளிப்படுத்துகின்றன.

அத்திமரம் + மீன் ஆகிய இரண்டும் இணைந்து, வட மீன் என்ற பொருளைத் தருகின்றன. வடமீனை, வேதத்தில் "துருவ" மீன் எனக் குறிப்பிட்டுள்ளனர். வானில் காணப்படும் மீன்கள் அனைத்தும் நகர்வது போல் தோன்றுகின்றன. ஆனால் வடமீன் மட்டும் எப்போதும் நகர்வதில்லை. அது நிலையாக ஓரிடத்திலேயே உள்ளது. போனீசியர்கள் தங்களது கடற் பயணங்களுக்கு வடமீனையே திசையறியப் பயன்படுத்தினர். துருவ மீன் என்பதற்கு அசையா மீன் என்று சமற்கிருதத்தில் பொருள் சொல்லப்பட்டுள்ளது. தமிழில், துருவ என்பதற்கு சுழல்கின்ற என்றவாறு பொருள் விரியும். துரப்பணம் செல்லும் நகர்வை நோக்குக. வடமீன் நிலையாக நிற்க, மற்றமீன்கள் சுற்றிச் சுழன்று வருவதாகக் கருதப்பட்டது. இந்த வடமீன் தனது காற்றுக் கயிற்றால் (air rope) மற்ற மீன்களைக் கட்டிவைத்துச் சுழலச் செய்கிறது என்பது கருத்து.

தமிழ்நாட்டில் இவ்வடமீன், வடதிசையில் தாழ்வான பகுதியிலும், ஐரோப்பிய நாடுகளில் தலைக்கு மேலேயும் தெரியும். மணமகனின் பார்வையில் கோளாறு இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளவும், மணமகன் இளைஞனே என்பதை உறுதி செய்து கொள்ளவும், வடமீனையும், அருந்ததியைப் பார்க்கச் சொல்வது தமிழர் வழக்காறு. அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து என அது சொல்லப்படும். வேதத் திருமணச் சடங்குகளில், வடமீனைப் பார்க்கச் சொல்வது, பிராமணர்களின் மரபாக இருந்துள்ளது.

ஓர் அத்திமரக் கிளையையும், அருகே ஒரு மீனையும் வடித்து, வடமீன் பற்றிய வானியல் உண்மையை, சிந்துவெளித் தமிழர்கள் விளக்கியுள்ளனர். சிந்துவெளிக் குறியீடுகளைத் தமிழ்க் கண்ணோட்டத்தில் நோக்காத வரை, அக்குறியீடுகளுக்கு எவராலும் பொருள் சொல்ல இயலாது என்பதை ஆய்வாளர்கள் உணர்தல் வேண்டும்.

தமிழ்க் கடவுளான முருகனை, ருத்ர ஸ்கந்தன் என்று சமஸ்கிருத புராணங்கள் கூறுகின்றன. குறிப்பாக, ஸ்கந்த

புராணம், முருகனை, சிவனுடைய மகனாகக் கூறுகிறது. அதன் காரணமாகவே குமாரன் என்று கூறினர். குமரன் என்ற தமிழ்ச் சொல்லே, குமார எனத்திரிந்தது. குமரன் என்ற சொல், மகன் என்ற பொருளைக் குறிக்கவில்லை. இளையவன், இளைஞன், இருபது அகவைகளுக்குட்பட்டவன் (teenager) என்றவாறு, குமரன் என்ற சொல் பொருள் கொள்ளப்படும்.

கும் - கும்முதல் : உருண்டு திரளுதல்.

கும் + அரன் = குமரன். வாளிப்பான உடற்கட்டு கொண்ட இளைஞர்.

குமரன் x குமரி எனப் பெண்பாலில் சொல்லப்பட்டது.

குமரி என்ற சொல், சோற்றுக் கற்றாழையைக் குறிக்கும்.[802]

அதன் உருண்டு திரண்ட சதைப்பிடிப்பான தண்டுகளால், அது குமரி எனப்பட்டது. கற்றாழை பெருமளவில் காணப்பட்டதால், குமரிக் கண்டம் எனப்பட்டது என்பர்.

குமரி என்பவள் திருமணம் ஆகாதவள். குமாரி என்று சமற்கிருதம் கூறும்.

இளம் கன்னியைக் குமரி என்றும், முதிர் கன்னியைச் செல்வி என்றும் அழைப்பர்.

முருகனைப் பற்றிய செய்திகள் சிந்துவெளிக் குறிப்புகளில் கிடைத்துள்ளன என்று சிலர் கூறுகின்றனர். அதற்கான நேரிடைச் சான்றுகள் இல்லையென்றே சொல்ல வேண்டும். மேற்கண்ட செய்திகளில் அறியப்பட்ட அறுமீன் பற்றிய குறிப்புகளே சிந்துவெளியில் காணப்படுகின்றன. அறுமீனை முருகனோடு தொடர்புபடுத்தும் செய்திகள் பிற்காலத்தவைகளாகும். வேதமும் புராணங்களும் கார்த்திகேயனை அறிமுகம் செய்கின்றன. முருகனை கார்த்திகைப் பெண்டிர் வளர்த்த கதை, ஸ்கந்த புராணத்தில் காணப்படுகின்றது. அறுமீனின் எழுச்சி (Sun's heliacal rise in the pleiades), உருத்திரனின் பிறப்போடும் தொடர்புடையது. உருத்திரனையும் ஸ்கந்தனையும் பற்றிய புராணக் குறிப்புகள், பலவாறு ஒற்றுமைப்படுகின்றன. இருவரும் இரு பெயர்களில் அறியப்படும் ஒருவரையே குறிப்பிடுவதாக உள்ளன. உருத்திரனையும் ஸ்கந்தனையும் முதல் தகுதி பெற்ற கடவுளராகக்கூட புராணங்களும் வேதமும் கூறவில்லை. உருத்திரனை அசுரன் என்று ருக்கு வேதம் சொல்வதால், அவன் ஆரியக் கடவுளன்று எனப் பலரும் கருதுகின்றனர். தமிழர்களின் முழு முதற்கடவுளான சிவன், தென்னாட்டில்

வலிமை பெற்ற தெய்வமாகக் கருதப்பட்டதால், ஆரியர்கள், உருத்திரனை சிவனாக மாற்றினர்.

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட குறியீடுகளில், பஞ்சிலிருந்து நூலை உருவாக்கும் கருவியின் குறியீடு உள்ளது. இதனைக் கதிர் என்பர். சிந்துவெளியில் பருத்தி பயிர் செய்யப் பட்டதென்பதையும், மக்கள் பருத்தி ஆடைகளை அணிந்தி ருந்தனர் என்பதையும் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். கதிர் என்ற தமிழ்ச்சொல், கதிரவன் என்றவாறு விரிந்து, சூரியனைக் குறித்தது.

கதிர் : பஞ்சிலிருந்து நூலை உருவாக்கும் கருவி (device).

கதிர் : ஒளியைக் கதிர்களாக்கி விரிக்கும் சூரியன்.

சூரியனுடைய கதிர், நூலைப் போல நீண்டிருந்தலை ஒப்பு நோக்கு.

(The rays of the sun and the thread making spindle are said as Kathir in Tamil)

கதிர் என்பது, சூரியனைக் குறித்துப் பின்னர் முருகனையும் குறித்தது.

முருகனை, கதிரேசன் என்றும் அழைப்பர். கதிர்க் கடவுள் = முருகன்.

இலங்கையிலுள்ள கதிர் காமம் (கிராமம் என்ற சமற்கிருதத்தின் மூலத் தமிழ்ச்சொல்) முருகனின் குடியிருப்பு ஊர் என்று பொருள்படும்.

அறுமீன் அறியப்பட்டதைப் போலவே, நூல் சுற்றும் கதிர்க் குறியீடும் முருகனைக் குறித்ததாகக் கருதுகின்றனர்.[803]



முருகனைக் குறித்த இரண்டு நட்டக் கோடுகளும், ஒன்றில் ஒன்று உட்புகுந்து வரும் இரண்டு நீள் வட்டங்களும், கதிர் என்ற கருவியை (device)க் குறிப்பதாகக் கருதுகின்றனர்.

மற்றொரு குறியீட்டில், கடவுள் அமர்ந்திருக்க, அவரது தொண்டர்கள் முட்டிக் காலிட்டு வணங்குவதுபோல் உள்ளனர். அதே குறியீட்டின் இருபக்கங்களிலும் பாம்பின் உருவம் தென்படுகின்றது. பாம்புக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்பைக் காட்டி, அமர்ந்திருக்கும் கடவுள் முருகனே என்பது ஒரு கருத்து.[804]

இரண்டு வளையங்கள் ஒன்றுக்குள் ஒன்று இணைந்து (intersecting) காணப்படுவது பற்றிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. முருகன் என்றால் இளைஞன் என்பது பொருளாகும். இக்கருத்தை வலியுறுத்திப் பல்வேறு சொற்களை ஆய்வு செய்துள்ளனர்.

மல் என்ற வேர் நீண்டு, மல் - மர் - மர என விரிந்தது.

மர - மரம் = கெட்டியானது, வலிமையானது.

மரம் - முரம் - முரம்பு = பாறை.

முர - முரி = ஒடித்தல், பாழ்படச் செய்தல்.

முரி - முரு - முருகு : காதணி அல்லது காது வளையம், அகில் போன்ற மணம் தரும் மரம், அழகு, இளமை, தேன், கள், எழுச்சி, வாசனை (சதுரகராதி).

முருக்கு = விரைந்து வளரும் மரம்.

முருங்கை: விரைந்து வளரும் மரம்

முரு என்ற சொல், இளமை. வளையம், வட்டம், வளைவு, வளைதல் ஆகிய சொற்களையும், ஆற்றல், வலிமை, திறமை ஆகிய பொருளையும் தரும். இவையனைத்தும் தமிழில் அறியப்படும் விளக்கங்கள் ஆகும்.

முருகு - முருகன்: இளைஞன், வலிமையானவன், ஆற்றலுள்ளவன், அழகன், திறமையானவன், பகையை அழிப்பவன் என விரியும்.

கந்தன், குமரன் ஆகிய சொற்கள், சமற்கிருதத்தினின்றும் தமிழில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறான கண்ணோட்டமாகும்.

கந்து: இணைப்பு. தரையின் பிடியில், தரைக்கு மேல் உயர்ந்து நிற்கும் மரம், கல், தூண் ஆகியவற்றைக் குறிக்கும்.

கந்துதல்: அழித்தல், சிதைத்தல்.

கந்தை: சிதைந்து பட்ட துணி அல்லது ஆடை.

தொல் தமிழர்கள், குமரிக் கண்ட அழிவிற்குப் பின், உயர்ந்த கோபுரங்களை உள்ளடக்கிய கற்றளிகளைக் கட்டியதாகத் தெரியவில்லை. இப்போது தமிழகத்தில் அறியப்படும் கோயில்கள், கிறித்துப் பிறப்பாண்டுகளுக்குப் பிறகு எழுப்பப்பட்டவைகளே. சிந்துவெளியில் கூட, உயர்ந்த கற்றளிகள் இருந்ததற்கானச் சான்றுகள் கிடைக்கவில்லை. அத்தகைய கற்றளிகளை உருவாக்கும் தொழில் நுட்பம் தமிழரிடையே காணப்படவில்லை என்றும் கூறிவிட இயலாது. குமரிக்கண்ட அழிவு, உயர்ந்த கற்றளிகளை உருவாக்கும் எண்ணத்தைச்

சிதைத்திருக்க வேண்டும். தமிழரின் அச்சவுணர்வே அதற்கு அடிப்படைக் காரணம் எனலாம். அதனால், கோயில்கள் என்ற தற்கால அமைப்புகள் போல் அல்லாமல், இயற்கையாக வளர்ந்த மரங்களையும், கற்றூண்களையும், இயற்கையாக உயர்ந்திருந்த பாறைகளையும் வழிபட்டனர். கற்பாறைகளின் வழிபாடே, இலிங்க வழிபாடாக உருவெடுத்தது. குடியேற்றத் தமிழர்களின் வரலாற்றில், கற்களை நட்டு வழிபட்ட செய்திகள் ஏராளமாக உள்ளன. தொடக்கத்தில் கற்களை நட்டு வழிபட்ட முறை, வடிவமைக்கப்பட்ட கற்றூண்களை அமைத்து வழிபடும் வகையில் முன்னேற்றம் கண்டது. குறிப்பாக, முருக வழிபாடு கற்றூண் வழிபாடாகவே அமைந்தது. கடவுள், கற்றூண் வடிவில் நிற்பதாகத் தமிழர் நம்பினர். இப்போதும் பல கோயில்களில், கற்றூணே முதல் தெய்வமாகக் கருதப் படுகிறது. கம்பப்பெருமாள் என தற்போதும் அழைக்கின் றனர். கலிய பெருமாள் என்ற கடவுள், கற்றூணாகவே காட்சி தருகிறார். கலிய என்ற சொல் கூட, கல்லிய என்ற சொல்லின் சுருக்கமே. கல்லையும், நடுகல்லையும், உருவாக்கப்பட்ட கற்றூணையும் கந்து எனத் தமிழில் குறிப்பிடுவர்.

சமற்கிருதம் கூறும் ஸ்கந்த என்ற சொல், தமிழ்ப் பொருளுக்கு மாறுபட்டது. முருகு என்ற சொல்லுக்கு மணம் என்ற பொருள் இருப்பதைப் போல, ஸ்கந்தம் என்பதற்கும் மணம் என்ற பொருளும் உண்டு. கந்து என்பது, வெளிப் படுவது (தரையிலிருந்து) என்ற பொருளைத் தருவதால், ஸ்கந்து என்ற சொல்லும் வெளிப்படுதலையே குறிக்கின்றது.[805]

ஸ்கந்தம்: வெளிப்படும் மணம்.

ஸ்கந்து: வெளிப்படும் விந்து.

உருத்திரனின் வெளிப்பட்ட விந்துத்துளிகளிலிருந்தும் பிறந்தவனே ஸ்கந்தன் என்றவாறு சமற்கிருதத்தில் பொருள் சொல்லப்பட் டுள்ளது.

எனவே, கந்து என்ற தமிழ்ச் சொல்லே, ஸ்கந்து எனத் திரிந்தது என்க.

முருவு - முருகு என்ற தமிழ்ச் சொல்லில் இருந்தே முருகன் என்ற சொல் தோன்றியதாக, சமற்கிருத ஆய்வாளர்களே ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் முருகு என்ற சொல்லை தமிழ்ச் சொல் எனக் கூறாது, திராவிடச் சொல் என்றும், அது முன் திரவிடத்திலும் இருந்தது என்பதை ஏற்க இயலவில்லை.

முருகு என்ற சொல்லுக்கு, வளைவு என்றும் பொருள் இருப்பதால்,

வளை என்ற மூலச் சொல்லினின்றும் விரிந்த வளைவு, வளையல் போன்ற சொற்கள் உள்ளதால் முருகு - வளை ஆகிய இரு சொற்களும் வட்டம், வளையல், வளைவு ஆகிய பொருளைத் தருகின்றன என பர்ப்போலா கூறுகிறார். இது சரியான தமிழ்க் கண்ணோட்டத்தில் சொல்லப்பட்டதே. இப்பொருளை, ஒன்றுக்குள் ஒன்று நுழைந்துள்ள சிந்துவெளியின் இரண்டு வளையங்களோடு, பர்ப்போலா தொடர்பு படுத்துகிறார்.

முருகு: காதில் அணியப்படும் அணிகலன், வளைவானது, வட்ட வடிவமானது. திபேத்திய முறைகளில், இரட்டைவளையங்களா லான காதணிகளை, மன்னர்கள் பயன்படுத்தினர் இரு வளையங் களையும் காதில் அணிந்தனர்.[806]

முருகு: வளையம், வளையல் (bangles).

தொன்று தொட்டு, தமிழரின் அணிகலன்களில், வளையல் சிறந்து விளங்கிவந்துள்ளது. சிந்துவெளியில், கல் மற்றும் செம்பிலான வளையல்களும், வேலைப்பாடுகள் நிறைந்த பொன்வளையல் களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வளையல்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்புகள் என்ன?

வளையல்களுக்கும் சிறு குழந்தைகளுக்கும் உள்ள தொடர்புகள் என்ன?

மரபுகள் காட்டும் வளையல் அணியும் முறைகளுக்கும் பெண் களுக்கும் இடையே உள்ள தொடர்புகள் என்ன?

வளையல்கள், அணிகலன்களா அல்லது தெய்வீக உட்பொருள் கொண்டவையா? மேற்கண்ட கேள்விகள் அனைத்திற்கும் நெருகிய தொடர்புகள் உள்ளன எனலாம்.

மிகப் பழங்காலம் தொட்டு, தமிழ்ப் பெண்கள், தங்களது இரு கரங்களிலும் மணிக்கட்டிலிருந்து முழங்கை வரையிலும் கூட வளையல்களை அணிந்து வந்துள்ளனர். குறிப்பாக, பெண்கள் முதன் முதலில் கருக் கொண்ட ஏழாம் மாதத்தில், வளைகாப்பு என்ற நிகழ்வை நடத்தி வருகின்றனர். இருகை களிலும் நிறைய வளையல்களை அப்பெண்களுக்கு அணிவிப்பர். அதற்கான காரணம் யாதென பெரும்பாலான தமிழ்ப் பெண் களுக்குத் தெரிவதில்லை. சில படித்த பெண்கள், வளையல் களால் ஏற்படும் தொடர் ஒலிகள், வயிற்றில் வளரும் குழந்தையின் புலன்களைத் தூண்டுகின்றன என்றும், குறிப்பாக செவிப்புலனை அது தூண்டும் என்றும் கூறுகின்றனர். இந்த

அறிவியல் காரணத்தை யொட்டியே, வளைகாப்பு நிகழ்ச்சி நடை பெறுவதாகக் கூறுகின்றனர். இக்கருத்தும் கூட உண்மை யாக இருக்கலாம்.

உண்மையில், அந்நிகழ்வு தெய்வத்தோடு தொடர் புடையது என்றும், குறிப்பாக முருகனோடு தொடர்புடையது என்றும் கருதலாம். வயிற்றில் வளரும் குழந்தைகளை, தீயஉருக்கள் (evil spirits) அழித்துவிடும் என்ற நம்பிக்கை, தமிழரிடையே காணப்பட்டது. வளையம், வளையல்கள் முருகனை அடையாளப் படுத்துகின்றன. முருகன் அத்தீய உருக்களை அண்டவிடாமல் காப்பான் என்பது நம்பிக்கை. திருமண நிகழ்வை, இடைக்காலத்தில் கையிலெடுத்துக் கொண்ட பிராமணர்கள், வளைகாப்பு நிகழ்வில் அழைக்கப் படுவதில்லை. மாறாக, அகவையில் முதிர்ந்த தாய்மார்கள், சூலுற்ற பெண்ணுக்கு வளைகாப்பு நிகழ்வை நடத்துகின்றனர். திருமணங்கள் கூட, இன்றைக்கும் செட்டி நாட்டுத் தமிழர்கள் இல்லங்களில், பிராமணர்களை அழைத்து நடைபெறுவ தில்லை. முதிர்ந்த வயதுடைய பெரியவர் ஒருவர் தலைமையி லேயே, செட்டி நாட்டுத் திருமணங்கள் நடக்கின்றன.

முருகனை வளையல்களாக உணர்ந்து பெண்கள் அணிவதற்கான மற்றொரு காரணம்யாதெனில், அடுத்தடுத்து குழந்தைகளை அத்தாய் பெற்றெடுக்க வேண்டும் என்பதே. அதர்வணவேதம், இவ்வாறு வளையல் அணியும் நடைமுறை யை விளக்குகின்றது. வளையலை, பரிவட்டம் (வட்டமான வளையம்) என்ற சொல்லால் குறிப்பிடுகிறது. அச்சொல், பரிஅஸ்ட (Pari hasta) என்றவாறு திரிபு பட்டுள்ளது.[807] “இவள் ஒரு மகனைப் பெற்றெடுக்க வேண்டும்”, என்ற விருப்பத்தை உணர்த்துவதாக, அதர்வண வேதத்தில் அறியலாம். கருப்பை யை, தீய உருக்கள் மூடிவிடுவதாகவும், கடவுளின் அருளால் அவை திறக்கப்படுகின்றன என்ற கருத்தை, விவிலியம் கூட எடுத்துரைக்கின்றது.

தொன்மையான இந்திய மரபுச் சமயம், வளையல்களை தெய்வத்தன்மை கொண்ட மரங்களுக்குப் படைப்பதை வலியுறுத்துகிறது. குறிப்பாக, நாவல் மரத்தை தெய்வத்தன்மை கொண்டதாக, பழங்குடியினர் கருதினர். சம்புகேசுவர் என ஆனைக் காவில் குடியிருக்கும் சிவன், நாவல் மரத்தை முதன்மைப் படுத்தும் ஊரில் குடியிருப்பவன் என்பதை

அறியலாம். வில்லியம் குருக் என்ற ஆய்வாளர், வட இந்தியாவில் சமயமும் தொன்மை மரபும் என்ற நூலில் இதனைக் குறிப்பி டுவதாக, பர்ப்போலா கூறுகிறார்.[808]

கர்நாடகத்தில் "எல்லம்மா" என்ற தெய்வத்துக்கு வளையல்களைப் படைக்கின்றனர். எல் என்பது, தமிழரின் கடவுளான சிவனைக் குறித்த சொல்லாகும். எல் அம்மா சிவனினின் எல்லம்மா, சிவனினின் மனைவியாகும் உமைய வளைக் குறித்தது.[808] இப்பெண்தெய்வம் குறித்த செய்திகள், அறப்பன் நாகரிகத்தில் அறியப்பட்டுள்ளன. மொகஞ்சதா ரோவில் கண்டெடுக்கப்பட்ட சிவனுடைய முத்திரையில் (அதனைப் பசுபதி என்று எஸ்.ஆர். இராவ் கூறுகிறார்), அக் கடவுள் இரு கை நிறைய வளையல்களை அணிந்திருப்பதைக் காணலாம். பின்புறமாகக் காட்சியளிக்கும் பெண்கள், அக்கடவுளை வணங்கியவாறு உள்ளனர். அவர்கள் எழுவராக இருப்பதைக் கொண்டு, அவர்கள் முருகனை வளர்த்த தாயரே என்பதை அறிய முடிகிறது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முருகன், சூலுற்ற பெண்களுக்குத் தெய்வமாக இருக்கின்றான் என்ற நம்பிக்கையை, அந்த முத்திரை விளக்குவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

புத்த சாதகக் கதைகள், பிள்ளைப் பேறு வேண்டி மரங் களை வழிபடுவதைப் பற்றிக் கூறுகின்றன. தமிழ் நாட்டிலும் அரசமரத்தை அண்டி, அதனைச் சுற்றி வழிபடுவது இன்றும் நடை முறையில் உள்ளது. வங்காளத்தில் ஆல மரத்தைச் சுற்றி வந்து வழிபடுவர். ஆல், அரசு ஆகியவை ஒரு குடும்பத்தைச் சார்ந்த மரங்களே. வங்காளிகள், சஸ்த்தீ (Sasthei) என்ற பெண் கடவுளை வழிபடுவதாகக் கூறுகின்றனர். இவள் பிள்ளைப் பேற்றினை அருளும் தாய் எனக் கருதப்படுகின்றது. சஸ்த்தீ என்ற சொல், சேய் + தாய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு எனலாம். இப்பெண் கடவுளுக்கு அரிசிச் சோற்றில் வளையல் போல், செய்து, வழிபடுகின்றனர். தமிழ்நாட்டிலும் இன்று பிள்ளைப் பேறு வேண்டுவோர் முருகனை வேண்டுவதும் பிறக்கும் குழந்தைக்கு முருகன் பெயரையே சூட்டுவதும் வழக்கமாக உள்ளது.

நாவ்சரோ (Nausharo) மற்றும் நிந்தோவாரி (Nindowari) ஆகிய இடங்களில் காணப்படும் குறியீடுகளில், அணில் (squir-rel) ஒன்று தனது வாலை நிமிர்த்தியவாறு, தலையை மரக்கிளை

யொன்றில் சாய்த்துப் படுத்திருப்பது போன்ற முத்திரைகள் காணப்படுகின்றன. அணில், சிந்துவெளியில் பரவலாக அறியப் பட்டிருந்தது. குளிர்ந்த பருவநிலையில், சூரியனைப் பார்த்த வாறு, தலையை மரக்கிளையின் மேல் பதிய வைத்து சில குறிப்பிட்ட பருவங்களில், அணில் காணப்படும் என, விலங் கியல் அறிஞர் இராபர்ட்ஸ் (T.T. Roberts) தனது, பாக்கிஸ்தான் நாட்டுப் பாலூட்டிகள் என்ற நூலில் குறிப்பிடுகிறார், என பர்ப்போலா கூறுகிறார்.[809] தமிழ் நாட்டில் அணிலை, அணில் என்றும் அணிப்பிள்ளை யென்றும் அழைப்பர். கிளிப்பிள்ளை, கீரிப்பிள்ளை, அணிப் பிள்ளை என விலங்குகளின்குஞ்சுகள் அழைக்கப்படும். தென்னம்பிள்ளை மர வகையில் அவ்வாறு அழைக்கப்படுகிறது. இதற்கான காரணம் யாதெனில், பிள்ளை என்ற பிள்ளைகளைப் போலவே அவற்றையும் கருதுவர் என்றும் கொள்ளலாம். வளர்ந்த தென்னம் பிள்ளையை வெட்டுவதைக் கூட தமிழர்கள் தவிர்த்தனர். இப்போதும் இவ்வழக்கு நடை முறையில் உள்ளது. தென்னை மரத்தை வெட்டுவது ஒரு கைப்பிள்ளையைக் கொலை செய்வதற்கு ஈடானது என்பது தமிழரின் கருத்து. தமிழர்கள், முருகனையும் பிள்ளை என்றே அழைக்கின்றனர். யாழ்ப் பாணத்துத் தமிழர்கள், முருகப் பிள்ளை என அழைப்பர்.

இரண்டு வளையங்கள், ஆறு கோடுகள் கொண்ட மீனின் உருவம், மரக்கிளை (மரம்), அணில் பிள்ளை, ஆறு பெண்கள் ஆகிய குறியீடுகள் எல்லாம், முருகனையே குறிக்கின்றன என பர்ப்போலா கருதுகிறார். ஆனால் முருகன் என்றோ, சேய் என்றோ முருகனின் பெயர்களைக் குறிக்கும் வேறு பெயர் களோ, நேரிடையாகச் சொல்லப்படவில்லை, முருகனைப் பற்றிய இக்கருதுகோள், சரியாகவும் இருக்கலாம். சரியாகவே சொல்லப்பட்டுள்ளன என பிற ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண் டால், உண்மையில் மகிழ்ச்சி அடைபவர்கள், பெருமைப் படுபவர்கள், தமிழர்களைத் தவிர்த்து வேறு எவரும் இருக்க இயலாது.

முருகவேள், கந்தவேள், குமரவேள் என்றவாறு தமிழில் அறியப்படும் முருகனின் பெயர்களில் உள்ள வேள் என்ற ஈற்றுச் சொல், பழந்தமிழ்ச் சொல்லாகும். இதன் அடிப் படையில் சிறப்புற்ற சிலருக்கு தமிழவேள், நடிகவேள், பாவேள் என்றவாறு பட்டங்களை வழங்குகின்றனர். வேள்

என்ற சொல், விருப்பம் என்ற பொருளில் சொல்லப்பட்டாலும் ஆண்மகன், காமன், இளையோன், காதல் தலைவன், கொடையாளி என்றவாறும் பொருள் விரியும். இப்பொருள் அனைத்தும் முருகனுக்கும் பொருந்தும்.

வேள் (விருப்பம்) என்ற சொல்லே, வேள்வி என நீண்டது.

வேள்வு என்ற சொல்லும் தமிழில் உண்டு. திருமணப் பரிசுகளாக உணவுப் பொருட்களை பெண் வீட்டார் பிள்ளை வீட்டாருக்கும், பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கும் அனுப்பும் வழக்கை வேள்வு என்பர். இதுவும் விருப்பத்தின் பால் சொல்லப்பட்டதே.

வேல் என்ற சொல், முருகனோடு தொடர்புடையதாயினும், அது ஆய்தம் என்ற போர்க் கருவியைக் குறிப்பதாலும் பழனிவேல், முருகவேல், மாயவேல், மாணிக்கவேல், முத்துவேல், சக்திவேல் போன்ற பெயர்கள், முருகனை நினைவு படுத்தும் பெயர்களே.

வெல் என்பது வினைச் சொல். வெல்வதற்குப் பயன்படும் ஆய்தம் வேல் என விரிந்தது போருக்குரிய ஆய்தமாக வேல் கருதப் பட்டது. போர்க் கடவுளான முருகனை வாழ்த்தி, போருக்குப் புறப்படுவதும் தமிழர் மரபு. வெற்றிவேல், வீர வேல் என முழுங்கியே மறவர்கள் போருக்குப் புறப்படுவர்.

வேலவன், வேல் முருகன், வேலாய்தம், வேல் பிள்ளை (வேலுப் பிள்ளை யெனவும் அழைப்பர்) ஆகிய பெயர்கள், தமிழர்கள் சூடிக் கொள்ளும் முருகன் புகழ்பாடும் பெயர்களாகும். வேலை வணங்குவதே வேலை யென வாரியார் முனிவர் அடிக்கடி கூறுவார்.

செவ்வேள் என்ற பெயர். செம்மை சிவப்பு ஆகிய பண்புகளைக் குறிக்கும். செவ்வேள், கதிரவனோடும் தொடர்புடைய பெயராகும். தமிழில் சொல்லப்படும் சேயன், சேயோன் ஆகிய பெயர்கள், மகன் - குறிஞ்சித் தலைவன் ஆகிய பொருளைக் கொண்டவை.

விள் என்ற தமிழ் மூலச் சொல்லுக்கு, பிளத்தல், இரண்டாக்குதல், இருகூறாக்குதல் என்று பொருள்.

விள் - விளா: இரண்டாதல்

விளா: விளாம்பழம். உடைத்தால் ஓடும் பழமும் தனித்தனியே பிரியும்.

விளா: இரண்டு உயர்ந்த நேர்க்கோட்டுப் பகுதிகளுக்கு இடையே தோன்றும் பள்ளம். கலப்பையால் உழும் போது ஏற்படும் பள்ளம். இரு மேடுகளுக்கு இடைப்பட்ட பள்ளம்.

விளாகம்: இரண்டு படைகள் சந்திக்கும் போர்க்களம்.

விள் - விளை: நிலத்தைப் பிளந்து மேற்கொள்ளும் பயிர்த் தொழில்.

விள் - வெள் - வேள் - வேளான் அல்லது வேளாளன் = எனப்பட்டான்.

விள் - வெள் - வெள்ளி = இருளைப் போக்கும் தீ, ஒளிரும் விண்மீன், வெள்ளி எனப்படும் கோள், வெண்மை நிறமான கனிமம்.

வெள் - வெளி: மீன்களும் கோள்களும் நிறைந்துள்ள பரந்த இடம், ஆகாயம்.

வெளி = பரந்த நிலப்பரப்பு, சமவெளி.

வெளி - வெளிச்சம்: ஒளி, பகல்.

வெளி - வெளில்: அணில். பரந்த இடங்களில் சுற்றித் திரிவது.

வெளிறு: தூய்மை, வெண்மை. (வெள் + மை = வெண்மை).

வெளுத்தல்: ஆடையில் கறைகளைப் போக்குதல், விடியல் பொழுது.

வெள் - வெள்ளை: தூய்மை, வெண்ணிறம்.

வெள் என்ற சொல்லை முன்னொட்டாகக் கொண்ட சொற்களாவன: வெள்ளந்தி (கவடில்லாதவன்), வெள்ளாடு, வெள்ளாந்தை, வெள்ளாமை, வெள்ளாம்பல், வெள்ளாவி (ஆடைகளை வெளுத்தல்), வெள்ளெலி, வெள்ளெழுத்து (பார்வைக் குறைவு) வெள்ளெருக்கு என விரியும்.

வெள்ளம்: வெண்மையான நுரையுடன் ஓடிவரும் ஆறும், நீரும்.

வெள்ளரி: வெள் + அரியெனப் பிரியும். அரி = முதிர்தலால் உடைதல்.

வெள்ளி: பெண் பொன், கோள், கிழமை, வெண்மை.

வெள்ளியைச் சுக்கிரன் (சுக்ர) என்று சமற்கிருதத்தில் கூறுவர்.

சொக்கு என்பதற்கு வெண்மை அல்லது ஒளிர்தல் என்று பொருள்.

சொக்கன் + அரன் = சொக்கரன் --- சுக்கிரன்.

வெள் - வேள் என நீண்டது. பிறரைத் தன்பால் ஈர்க்கும் அழகை அல்லது உருவத்தைக் கொண்ட ஆண்மகன், முருகன்.

வீனஸ் என்ற கிரேக்கச் சொல் (Venus), வெண் என்ற தமிழ் முன்னொட்டைக் கொண்டது.

வெள் + மீன்: ஒளிரும் விண்மீன்; வெள் - வெண் - வெண்மை.

வெண்மீன்: ஒளிரும் விண்மீன், வெள்ளி.

வெளி + தீ: வெள்ளீ - வெள்ளி எனப்பட்டது. தீ யென்பது உருவைக் குறித்தது.

வெள்ளி என்ற சொல், மீனையும் கோளையும் குறித்தது. வெள்ளி மீது குறியீடு சிந்துவெளியில் காணப் படுகின்றது என்பதை பல ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். வெள்ளி முருகனையே குறித்ததாகவும் கூறுவர்.

வெள்ளி மீனுக்கு இடப்பக்கம் தெரியும் கோடுகள் (இரண்டாகவும், மூன்றாகவும் உள்ளன) வான் வெளியைக் குறிப்பன

என்றும், அது நீரில் உள்ள மீன் அன்று, வீண்மீனே என்றும் விளக்கப்படுகிறது.

மூன்று கோடுகள், மூவுலகையும் குறிப்பதாகக் கூறுகின்றனர்.

வெளி என்ற சொல், விள் - விண் என்றவாறும் விரிந்து பொருள் தரும்.

விண்: புடைத்திருப்பது, மேல் எழுவது, உயர்ந்திருப்பது.

உயர்ந்து மேலே காணப்படும் ஆகாயம், விண் என்றே சொல்லப் படும்.

விண்ணகம், விண்டலம், விண்ணவன், விண்ணுலகம், விண்ணேறு (இடி), விண்மணி (கதிரவன்), விண்ணும் மண்ணும், விண்மீன், விண்வீழ்கொள்ளி எனவிரியும்.

விண் + து = விண்டு. விண்ணில் காணப்படும் துளிகள், துளிகளின் கலவை.

விண்டு: காற்று, முகில், மலை, மூங்கில்.

விண்டு என்ற சொல், கதிரவனையும் குறித்து, விஷ்ணு எனத் திரிந்தது.

விண்ணப்பம்: விண்ணிலுள்ள கடவுளிடம் கேட்கும் உதவி. பின்னர், உதவிகள் பெற வேண்டும் மடல் என்ற பொருளிலும் சொல்லப் பட்டது.

வீணையின் நரம்புகள் விண்ணென எழுதல், விரல் வீக்கம் விண்ணெனத் தெறித்தல், அடித்த பந்து விண்ணென எழும்புதல் போன்றவை வழக்கில் உள்ளவை.

விண்ணை, வானம் என்றும் அழைப்பர்.

வண் என்ற மூலச் சொல்லுக்கு, வளைவு என்று பொருள். வண்ணுதல் = வளைதல்.

உடலை வளைத்து வரவேற்பது வணக்கமாயிற்று.

வண் - விண் என விரிந்தது. வளைவான (தோற்றம் கொண்ட) வானம்.

வண் - வாண் - வான் - வானம் எனவும் விரிந்தது.

விண் என்பது நீண்டு வெளியெனப்பட்டது.

விண்வெளி, வான்வெளி ஆகிய சொற்கள், பரந்து விரிந்து வளைவாகத் தோன்றி, உலகினின்றும் பிரிக்கப்பட்ட பகுதி என்றவாறு பல் பொருளைத் தருவது.

மேற் கண்டவாறு தமிழ்ச் சொற்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களை பர்ப்போலா அறிந்திருந்தாரா என்பது தெரிய வில்லை. ஆனாலும், பல பழந்தமிழ்ச் சொற்களை மேற்கோ ளாகக் காட்டுகிறார். சமற்கிருத அறிஞரான பர்ப்போலா காட்டும் தமிழ்ச் சொற்கள் பொருள் பொதிந்தவை; நுணுக்க

- **Fredrick W. Bunce,** Editor, An Encyclopaedia of Hindu Deities, Demi Gods, Godlings, Demons and Heroes, D.K. Printworld (p) Ltd., New Delhi, 1935.
- **P. Marudanayagam and others,** The Earliest Complete Grammar studies in Tolkappiyam.
- **Philip Steele,** Pocket Atlas, DP Dempsey, Italy, 1998.
- **Fodor,** Greece, Hodder and Stoughton, Aukland, 1987.
- **Baly Denis,** The Geography of the Bible, Harpers, New York, 1957.
- **A.E. Cowely,** Gesenius Hebrew Grammar, Oxford, 1910.
- **Hartman Louis, F.,** Encyclopedic Dictionary of the Bible, McGraw Hill, New York, 1963.
- **Heidal Alexander,** The Babylonian Genesis, University of Chicago, 1951.
- **Pritchard James, B.,** Editor, Ancient Near Eastern Texts, Relating to the Old Testament, Princeton Universitiy, 1955.
- **Kramer,** Samuel Noah, From the Tablets of Sumer, Indian Hills, Colorado, 1956.
- **Meissner Bruno,** Babylonian and Assyrian, Heidelburg, 1920.
- **Moscati Sabatino,** The Face of the Ancient Orient, Double Day Anchor, New York, 1962.
- **Saggs, H.W.F.,** The Greatness that was Babylon, Hawthorn Books, New York, 1963.
- **Burrows Millar,** The Dead sea scrolls, Viking Press, New York, 1955.
- **Cross Frank, M.,** The Ancient Library of Qumran, Double Day, Garden City, 1958.
- **M. Monier Williams.,** A Sanskrit - English Dictionary, Motilal Banarsidass Pullications, New Delhi, First Publication, 1899.
- **Rev.Fr. Heras.,** Bombay Journals, 1932.

- **ஏ.எஸ்.ஆர். முபாரக் பூரி,** அர்ரஹீக் அல் மக்தூம், தரூல் உதா, சென்னை, 2007.
- **டாக்டர் சூ. இன்னாசி,** பதிப்பாசிரியர், சதுரகராதி, மாதா பதிப்பகம், சென்னை, 1989.
- **கணேசையர்,** பதிப்பாசிரியர், தொல்காப்பியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.
- **டாக்டர் அ. கிருட்டிணன்,** தமிழர் பண்பாட்டியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.
- **எம். கிறித்தோபர்,** பரிசுத்த வேதாகமத் துணை நூல், செம்ஸ், குழித்துறை, 2008.
- **எம்.ஆர்.எம் முகம்மது ஹனீபா,** சொற்பிறப்பியல் – வியத்தகு உண்மைகள், உலகத் தாய்மொழி – தமிழ், எம்.ஆர்.எம். முதன் மொழிப் பதிப்பகம், திருச்சி, 2009.
- **வடுவூர் நாராயணன்,** ருக், யசூர், ஸாம, அதர்வண வேதங்களும் பத்து உப நிஷதங்களும், நர்மதா பதிப்பகம், சென்னை, 2009.
- **முனைவர் ச.வே. சுப்பிரமணியன்,** சங்க இலக்கியம் மூலம் முழுவதும். மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.
- **புலியூர்க் கேசிகன்,** புறநானூறு தெளிவுரை, பாரி நிலையம், சென்னை, முதல் பதிப்பு 1958.
- **தொல்காப்பியம்**
- **சங்க இலக்கியங்கள்**
- **இடைக்கால இலக்கியங்கள்**
- **பிற்கால இலக்கியங்கள்**
- **தற்கால இலக்கியங்கள்**

ஆங்கில நூல்கள்:

- **Good News Bible,** with Deuterocanonical Books, Apocrypha, Todays English Version, St. Pauls, 1975.
- **Prof. Masudul Hasan,** History of Islam, Adam Publishers and Distributors, New Delhi.
- **Hephzibah Jesudasan,** Count-Down from Solomon, Institute of Asian Studies, Chemmenchery, Chennai, 1999.
- **Dr. R. Mathivanan,** Indus Script Dravidian, Tamil chanror Peravai, Madras, 1995.

நூற்பட்டியல்

- **வித்துவான் க. பால சாரநாதன்**, திவ்வியப் பிரபந்த அருஞ்சொல் அகராதி, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1994.
- **நடன. காசிநாதன்**, கையெழுத்துக்கலை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.
- **இரா. அரங்கசாமி**, தமிழ்மொழி வரலாறும், ஒப்பிலக்கணமும்.
- **புலவர் இரா. இளங்குமரன்**, பதிப்பாசிரியர், "தேவநேயம்", 14 தொகுதிகள், பாவாணர் அறக்கட்டளை, சென்னை, 2004.
- **முனைவர் இரா. சாரங்கபாணி**, முதன்மைப் பதிப்பாளர், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியத் தொகுப்புகள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2001.
- **சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர்**, பதிப்பாசிரியர், தமிழ்ச் சொல்லகராதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
- **தியாகு,** பதிப்பாசிரியர், விவிலியக் களஞ்சியம், விவிலிய அறிமுகம், தியான ஆசிரமம், சென்னை, 1991.
- **மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்),** உரையா சிரியர், திருக்குர்ஆன், இசுலாமிய நிறுவனம், டிரஸ்ட், சென்னை, 2005.
- **வெ. வேதாசலம்,** பதிப்பாசிரியர், ஆவணம், தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2006.
- **ந. சுப்பிரமணியன்,** பதிப்பாசிரியர், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007.
- **தமிழண்ணல் (எ) இராம. பெரிய கருப்பன்,** சங்க மரபு, சிந்தாமணிப் பதிப்பகம், மதுரை, 2009.

836. El shaddai : The god of Jews. - Bible.

837. Yaa or Ea : The supreme god of Mesopotamia and the god of Isaelites who revealed himself in Mount Sinai.

838. Ka - Patah : The god of Memphis.

839. Kain and Abel : Ka - il and Ab - il - Arab version.

840. திருப்பதி : அக்னிகோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார், "இந்து மதம் எங்கே போகிறது?" – நக்கீரன் வெளியீடு.

841. சைவம் – வைணவம் : ஆதிசங்கரர் – இராமானுஜர்.

842. குறிஞ்சி மலர்கள் : குறிஞ்சிப்பாட்டு, கபிலர், 61 – 95.

843. குறிஞ்சி நிலத் தொழில், சங்க இலக்கியங்களின் தொகுப்பு.

844. மரங்கள் : மேலதே.

845. முல்லை நிலம் : மேலதே.

846. மருத நிலம் : மேலதே.

847. உயிரினங்கள் : மேலதே.

848. நெய்தல் நிலம் : மேலதே.

849. P hoenicians : Lebanon, p. 11.

850. கடல் ஆய்வுகள் : ஒரிசா பாலு என்கிற பாலசுப்பிரமணியன், தகவல், சங்கொலியில் வந்த கட்டுரை, 17.8.2012.

851. பாலை நிலம் : சங்க இலக்கியங்கள்.

852. பாலை : குறுந்தொகை, குறுந்தொகை, 396:5.

853. அகப்பொருள் : தொல்காப்பியம், அகத்திணை, 56.

854. பொழுதுகள் : குறுந்தொகை, 32:1–3.

816. Horn : The horns of ram, goat or bull are common figures in Hebrew, Babylonian, Sumerian, Egyptian texts. Horn is a symbol of strength and dignity. - I samuel, 2:1 (Bible)

817. எருது : எல் + து என அச்சொல் பிரியும் என், மாகறல் கார்திகேயனார் விளக்குகிறார்.

818. எருது வழிபாடு : விவிலியத்தின் விடுதலைப் பயணம் (Exodus) என்ற அதிகாரத்தில், காளை வழிபாடு சொல்லப்பட்டுள்ளது. - Exodus, 32.

819. Tree : Tree of knowledge, Genesis, chap ter 2.

820. Western gods : History of Religion (Mesopotamian Religion) pp. 202-216.

821. திராவிடம் : சிந்துவெளியில் முந்து தமிழ் – பூரண சந்திர ஜீவா, தய்யல் பதிப்பகம், 2004.

822. Proto language : There was one speech in the world and the people used the words of the same lanugage. Genesis, 11:1.

823. இந்தோ – ஐரோப்பியம், தினமணி, நாள் 24.08.2012.

824. Indo - European : The sons of Jepath are Indo - Europeans who settled in Asia Minor, north coast of black sea, the Aegan archipelago and continental Greece. - D.O.B., p. 865.

825. மீன் குறியீடு : சிந்துவெளி முந்து தமிழ், ப. 31.

826. சிவன் : மேலதே, ப. 247.

827. தமிழ் : மேலதே, ப. 248.

828. Ozone : Cambridge Encyclop edia, p. 553.

829. Ice age, Ibid.

830. New land scape : Ibid.

831. குமரிக்கண்டம் : விவிலியம், பழைய ஏற்பாடு, ஆதியாகமம், 1 முதல் 11 வரையிலான அதிகாரங்கள்.

832. குமரிக்கண்டம் : தமிழர் வரலாறு – பாவாணர்.

833. பல்லாவரம் கற்கருவிகள் : இந்து நாளிதழ்.

834. எருது : மாகறல் கார்த்திகேயனார்.

835. Kabah : Islamic Encyclopedia.

தெழுகுளிறு மிதித்த வொருபழும் போல – குறுந்தொகை, 24:1–4.
வெண்கோட் டதவம் = அத்திமரம்.

802. குமரி : சோற்றுக் கற்றாழையின் மடல்கள், எப்போதும் வாடுவதில்லை. அதனால் குமரி எனப்பட்டது. சித்த மருத்துவத்தில் முருங்கை, கிழவி என்று சொல்லப்படுகின்றது.

803. Murukan : Two intersecting circles and the two long vertical strokes may be a name of Murukan - Parpola, p. 40.

804. Snake : Ibid, p. 41.

805. Skanda (Sans) = Semen, also related with fragranee. Kanda (Tamil) = Projection upward from the earth.

806. Intersecting Circles : Tibetean Buddhist art represents the royal rings. - Ibid, p. 41.

807. Pari - hasta : Bracelet, - Adarva Veda, 6:81.

808. Champaka tree Religion and Folklore of Northern India, William Crooke, 1926/ p. 417.

809. Squirrel : The Mammals of Pakistan, T.J. Roberts, 1977, p. 228.

810. Asko Paropola : 58 evidences are presented as bibliography for his "A Dravidian solution to the Indus Script Problem."

811. பூமி (சமற்.) : பூமி, சமற்கிருதச் சொல்லாகும். பூ என்பது விரிந்து பரந்த என்ற பொருளைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும். மீ என்பது, உயர்ந்து நிற்கும் அனைத்தையும் குறிப்பது. மரம், செடி, குன்று, மலை என விரியும். பூமீ என்பதே தமிழ்ச் சொல்லாகும். பூமீ – பூமி எனத்திரிந்தது.

812. களி பங்கன் (Kalibangan) : வங்கு – வங்கண் = வளைந்த, வட்டமான; களி = கரிசல் நிலம்; களிவங்கண்; கரிசல் நிலப்பகுதி. களிவங்கணம், களி பங்கன் எனத்திரிந்தது.

813. சிந்துவெளிச் சிவன்: மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட இம்முத்திரை சிந்துவெளி மக்களின் சமயம், கடவுள், வணக்க முறையாய் பல்வேறு செய்திகளை அறிவிக்கும் சிறப்புக்குரிய சான்றாகக் கருதப்படுகின்றது.

814. முன்னோர் வழிபாடு : தென்புலத்தார் வணக்கமே, பித்ரு வழிபாடாக ஆரியரால் நடைமுறைக்கு வந்தது. தென்புலத்தார் வணக்கம் பற்றிய செய்தியை, திருவள்ளுவரும் குறிப்பிடுகிறார்.

815. ஒகநிலைப் பொம்மைகள் : எஸ்.ஆர். இராவ் இவ்வுருவப் படங்களை, தனது நூலில் வெளியிட்டுள்ளார் (Lothal, and the Indus - scrip t.)

789. Horse : The Dictionary of the Bible.

790. Dravidian language family : Asko Parpola, p. 30.

791. 26 Dravidian languages : The 26 Dravidian languages are mainly spoken in Central and South India. However, one Dravidian language Brahui, has been spoken in Baluchistan in the northwest for atleast a thousand years as far as the historical sources go. The Dravidian speakers until recently constituted one fourth of India's population - Paropola.

792. Rig Vedic words : Ibid, p. 31.

793. Elam : A small kingdom and country Elam was known cast of Babylon around 2000 B.C., - D.O.B.

794. Arrow : Parpola, p. 32.

795. Fish - Dravidian : There is some external evidence supporting the proposed Dravidian rebus reading of the fish sign - Parpola.

796. Miin - star : Parpola, p. 34.

797. Proto - Dravidian : Ibid.

798. Utu of Larsa : History of religion, Sergei Tokerev - p. 216.

799. Pleiads : The pleiads constitute the first constellation of the Vedic star calender, its heliacal rise at the vernal equinox is thought to have marked the beginning of the New year. This and the position of marking stars in the sky dates the calendar to the twenty third century B.C.E., and sugests its Harappan origin. The Vedic people did not inherit the calendar from the Indo - Iranian tradition but adopted it in India - Ibid, p. 36.

800. Fig tree: The three branched Fig tree motif occurs on Harappan pottery from the early through the Mature to the Late phase. In one varient from the time when the Indus Script was created, four strokes are attached to either side of the middle stem. The strokes seem to represent the air root of the banyan Fig. - Ibid, p. 38.

801. அத்தி : கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்

nection it may be pointedout according to Macdonell the aspirate media which represents the same Indo - European sound is a media combined with h, for example, lh - dh is written with seperate letters l and h. A circular seal from Harappan by using seperate characters for l and h, but they are combined in another inscription. The first two nassals as well as the whole series of "retroflex" or "cerebral" consonants namely, t, th, d, dh and n are absent in the Late Harappan script. Both g, th, d and b which do not occur in Tamil, are present in the Late Harappan script. - Ibid.

779. No sound in Tamil: Ibid:

780. Hittite phonology: It is also observed that the early Harappan phonology has a few features, similar to those of Hittite languages - Ibid.

781. Boghoskoy: Many materials discovered during the excavation at the Boghoskoy site (Hittite's Capital). They are similar in sound and meaning with Sumerian tongue - D.O.B

782. Hittite language: Lothal, p.131.

783. Observation of S.R. Rao: Ibid, pp 131, 132, 133.

784. Period: Historians dated the newly found Indus civilization to the third millennium B.C., and radio carbon dating has fixed the duration of the Mature Harappan phase during which the Indus Script was used to 2600 - 1900 B.C.E.,

   - A Dravidian solution solution to the Indus Script Problem, Seminar Essay, Classical Tamil conference, p. 27.

785. Indus Valley - Gulf : About 40 Harappan seals come from the Gulf and Mesopotamia, left them sea farimg Indus merchants - Ibid.

786. Vanished Script : The Indus script vanished together with the Indus Civilization, which collapsed many centuries before hymns composed in Vedic Sanskrit the historical period in South Asia around 1000 B.C.E. - Ibid.

787. Melahha : Ibid.

788. Sumerian : Ibid.

770. Patesi : Babylonian priest and king. History of religion, Sergi Tokavev, p. 176.

771. Patah : Egyptian head priest and king (Pharoah) - Ibid.

772. Ka of Patah : God of Memphis (Egypt).

773. Gender variations : A reference to the structural analysis made by Soviet and Finnish scholars with the help of computers is necessary. According to Prof. Knorozov the more frequently occurring terminals called variables and semi variables are said to indicate a grammatical function such as case - ending and gender making, while the less frequently occurring ones called constants to which the former are added, are said to be root - morphemes. It must however, he pointed out that if frequency and position are indicative of function there are atleast three other signs which the Soviet scholars have ignored, perhaps because of the initial position they occupy, which disproves their theory that the Indus language had only suffixes and was therefore, Dravidian. It is a well known fact that in Indo - Aryan, too, gender and case are identified by suffixes and not by prefixes. - SR. Rao, Lothal, p. 130.

774. Ramasya : We say in Sanskrit Ramasya (and not Syarama) of Rama. - Ibid.

775. Indo - Aryan. If the presence of suffixes indicative gender and case is the main consideration Indus laguage can as well be treated as Indo - Aryan. - S.R. Rao, Ibid.

776. Inconsistant : Ibid.

777. Ha sound : The retention of voiceless sound h in the late Harapan script and one more sign for h in the mature Harappan script in addition to the aspiration h supports the "laryngeal theory," and suggests that the Harappan language is earlier than the Vedic language which had dropped the voiceless h and hk. - Ibid.

778. La sound : There are no seperate signs for aspirates (except th) both in the Late Harappan script and Harappan script. The aspirate sound values were however, derived by adding the sign for h to k, g, t, d, p, b and even to me in Harappan script. In this con-

757. Comments on Mahadevan : Obviously Mahadevan has given word value but even there, hs is inconsistant. - S.R. Rao, Lothal and the Indus Script, p. 130.

758. Lothal : The visible vestiges of the ancient city now known as Lothal, comprise a low - lying mound gradually rising to a height of 3.5 metres from the surrounding flat and featureless plains. The site is now approachable by a good motorable road and lies 80 kms. South West of Ahmadabad. Sandwiched as it is between the Bhogawo and Sabarmati rivers, Lothal is subject to frequent floods when the river overflow its banks. The alluvial plain known as Bhal extending from the gulf of Combay in the south to the Little Ramn of Kutch in the north formed the hinterland of this important port. As the sea has receded several kilometres during the last four thousand years, owing to the deposition of silt in the Gulf of Combay by the mighty rivers. Lothal is now land locked. - Ibid, p. 50.

759. Kalibangan : Is is situated in Ganga nagar district of Gujarat.

760. Soviet team : Indus Script Dravidian, p. 3.

761. Seimitic script : Lothal, p. 127.

762. Akiram period : Ibid, p. 128.

763. Phoenician Script : A new invention in the west, during 1500 B.C., by the Phoenicians. - Lebanon, Lonely planet, p. 9.

764. Oriented script : By Anne Jousuffe an eminent historian of Lebanon. - Ibid.

765. Greek : The new script was introduced into Greece by Cadmus, the Phoeniciant merchant, registered by Heredotus. - Ibid.

766. பணி : மணிமேகலை, 7:123–124.

767. Pole star : Called Phoenician star by the Greeks. - Lebanon, p. 13.

768. Panis : The Phoenicians are usually identified with the Panis mentioned as a trading community in the Rig Veda. - Lotha, p. 129.

769. Pa (sans.) Inclus god Pasupathi is mentioned in pages 92, 128, 129, 135 and 190 in Lothal by S.R. Rao.

740. Bilingual seal : Prof. Indrapala of Jaffna University has discovered Indus script on a metal seal. "Is it an Indus - Brahmi Epigraph?" - The Hindu, 26.04.1981.

741. Indus Script : Lothal and the Indus Civilization, S.R. Rao.

742. Dr. I. Mahadevan at Coimbatore Tamil conference : Wintessed by the author.

743. Indus - Malayalam by Dr. I. Mahadevan, research paper is available at Kerala University, Trivanathapuram.

744. Dr. R. Mathivanan : Indus Script Among Dravidian speakers, Indus Script Dravidian.

745. Sumerian Script : Ancient Tamil Script, by Fr. Heras, and recently supported by "The Mirror", a popular English Magazine. Issue published on 7.9.2012. (செய்தியை நூலின் இறுதிப் பகுதியில் காண்க.)

746. Sumerian script : Dr. S.N. Kramer, through Jerome Biblical commentary.

747. Ur : The Etymology and meaning uncertain. Dictionary of the Bible, p. 781.

748. Naram : History of Religion, Dr. Takarov.

749. வேர்ச்சொல் : தொல்காப்பியம், எழுத்து உரியியல்.

750. தமிழ்த்தாத்தா : குறுந்தொகை விளக்கவுரை, முன்னுரை.

751. எல்லிஸ் : புதிய தகவல்களைத் தந்து உதவியவர் டாக்டர். ப. மருதநாயகம், மூத்த ஆய்வாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்.

752.. எல்லிஸ் : மேலதே.

753. ஈராஸ் பாதிரியார் : தகவல், பேரா.இ. சூசை, தமிழ்த்துறை, தூய வளவனார் கல்லூரி, திருச்சி.

754. இடமிருந்து வலம் : கட்டுரை, முதன்மொழி இதழ், இரா. மதிவாணன்.

755. Gilgamesh : The epic of Mesopotamia which tells about the great flood. Gilgamesh is a semi - god who meets Ut-na-pishtim the hero of the flood, seeking immortal life.

756. செம்பியன் கண்டியூர் : தமிழ் எழுத்துகளின் தொன்மையை உறுதிப்படுத்து கிறது. கோ காங்கன் என்று இவ்வெழுத்துக்களை இரா. மதிவாணன் படித்துள்ளார் – கல்வெட்டு இதழ், ஏப்ரல், 2006, ப. 65.

722. அதர்வண வேதம்: 1. அக்கினி கோத்திரம் இராமானுசாச்சாரியார், இந்து மதம் எங்கே செல்கிறது – நக்கீரன் வெளியீடு.

2. ருக், யஜுர், ஸாம, அதர்வண வேதங்களும் பத்து உபநிஷதங்களும், வடுவூர் நாராயணன், நர்மதா பதிப்பகம்.

3. A Sanskrit - English Dictionary. Monier Williams.

மேற்கண்ட நூல்களினின்றும் தொகுக்கப்பட்டவை.

723. வேதங்கள் – பொதுக்கருத்து : பல்வேறு நூல்களினின்றும் தொகுக்கப்பட்டது.

724. Dravidians : Dr Nicholas Lehovary. Indus people were none but the Babolonian Dravidians.

725. Saraswathi River Civilization. Dr. Murali Manohar Joshe, on various occassions.

726. Cavery : Dr. C. Padmanabhan, also an eminent civil engineer talk in Chennai.

727. Indus Valley : Interview with Dr. Murali Manohar Joshi on 16.01.2012, news published on 17.01.2002, The New Indian Express.

728. Ararat : Genesis, 10th chapter.

729. Ice Age : Cambridge Encyclopedia,

730. நோவா : நோவா வரலாற்று மாந்தனா? – ம.சோ. விக்டர்.

731. Agriculture in Mesopotamia : Jerome Biblical Commentary Chapter, II.

732. Bitumen : A mortar used in ancient Mesopotamia for the construction of buildings. Also refer in Genesis, 11th chapter.

733. Ur : An essay by Fr. Heros.

734. Pictographic : Egyptian, read by Dr. Champollion.

735. Ideographic : Dr. Hans Bauver.

736. Hieroglyphic : Dr. Forrer and Dr. Bossert.

737. Cuneiform : Sumerian script read by Dr. Jules Oppert.

738. Indus Script : Dr. R. Mathivanan.

739. Indus words : Dr. Iravatham Mahadeven.

688. முரசு : மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி – மேலதே, ப. 5:88.

689. தண்ணுமை : சிலப்பதிகாரம் குறிப்பிடும் மரபுவழி இசைக்கருவிகள், முனைவர் பெ. சுப்பிரமணியன், பழனி.

690. பறை : தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின், மேலதே, குன்றக்குரவை, 15.

701. துடி : சூர்த்திறன் கடந்தோன் ஆடிய துடியும், – மேலதே, கடலாடுகாதை, 51.

702. முழவு : முழவு கண் துயிலாது முடுக்கடு வீதியும் – மேலதே, இந்திர விழாவூர், 187.

703. இடக்கை : ஆமந்திரிகை யோடந்தர மின்றி – மேலதே, 3:143, இடக்கை = ஆமந்திரிகை.

704. திணை : தென் திணைப் பொருநர் – மேலதே, 10:138.

705. சங்கு : திருமுருகாற்றுப்படை, வரி 120.

706. குழல் : பெரும்பாணாற்றுப்படை, 175 – 179.

707. கொம்பு : சிலப்பதிகாரம் வேட்டுவ, 41.

708. சின்னம் : மேலதே, 40 – 43.

709. நிலயாழ் : முனைவர் பெ. சுப்பிரமணியன், மேலது கட்டுரை.

710. ஆதியாழ் : சிலப்பதிகாரம் உரை, உ.வே.சா. பதிப்பு, ப. 9.

711. வில் யாழ் : பெரும் பாணாற்றுப்படை, 176 – 184.

712. பேரியாழ் : சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை, ப. 100.

713. மகர யாழ் : மேலதே.

714. சகோட யாழ் : மேலதே.

715. செங்கோட்டி யாழ் : மேலதே.

716. மிடற்றுக் கருவி : சிலப்பதிகாரம், 3:26.

717. கஞ்சக் கருவிகள் : மேலதே, 24:15–18.

718. Gita : Manu, ix:42.

719. Gitika : Mahabharat, 111:8173.

720. Giti : A Sans - Eng. Dictionary, p. 356.

721. Sama Veda : Ibid, p. 1015.

672. Bull : The Phoenician bull god, called the father of men was given the title of El, meaning bull, but which translates into English as the word god. The bull as a god has long since lost his power, having slipped from the equinox position around 2000 B.C., but it is from this period that the mythological symbolism was firmly stamped upon his celestial image. - Fixed stars, p. 231.

673. Bull to Aries : After two thousand years or so the spring equinox slipped from Taurus (bull) into Aries the ram, hearalding the birth of yet another new god, this time emerging from the Israelites. They distinguished themselves from the bull worshippers by using the blood of the lamb as a sacred fluid and symbol. For Moses was leading his people, chosen with lamb's blood, to a new religion. Returning from Mount sinai with the new laws of the new world order, Moses was angered that his chosen people were looking backwards to the bull (the golden calf) instead of forward to the lamb.

- Hamlet's Mill, de Santillana, p. 60.

674. கல்வெட்டுகள் : Glossary of the Madras Presidency, p. 439.

675. வியாழன் : நெடுநல் வாடை, 160–163.

676. வியாழ ஆண்டு : தொல்காப்பியம், 952.

677. சித்திரை : சிலப்பதிகாரம், 5:64.

678. இந்திரன் : மணிமேகலை, 1:36 முதல்.

679. Ruha (sanskrit) : meaning climbing, sans. Dict.

680. கணக. ருக்வேதம், வடுவூர் நாராயணன், ப. 186.

681. எண் : ருக்குவேதம், வடுவூர் நாராயணன், ப. 187.

682. நிமித்தம் : சிலப்பதிகாரம், 16:166.

683. ஊழி : பரிபாடல், பாடல் 2.

684. Dasyu : A Sans. - Eng. Dictionery, p. 473.

685. Basyu : Ibid, p. 372.

686. பை : கணக்கதிகாரம், 50.

687. கர்நாடக இசை : ருக் வேதம், வடுவூர் நாராயணன், ப. 435.

660. Yom : A word used in Genesis, denoting the time and intervels of creation. It doesn't mean a day but to known from a minute to millions of years.

661. யதா பூர்வ : ருக்குவேதம், வடுவூர் நாராயணன், ப. 188.

662. Naksh : to come near, app roach, arrive at, Sans. Eng. Dictionary, p. 524.

663. நக்ஷத்ர : ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் போகிறது என்று பொருள். – ருக்குவேதம் வடு. நாராயணன், ப. 253.

664. நக்ஷத்தரம் : சக்தி இல்லாதது – மேலதே.

665. தாரா : கடந்து செல்லுதல் என்று பொருள். (Passing away) - Sans. Dict. p. 438.

666. Nakshatra : A star or a heavenly body, some times collectively stars, constellations. (27, after 28) - Ibid, p. 524.

667. புனர்பூச : புனர்வசு என்றும் கூறுவர்.

668. Gemini : Castor and Pollux are the shining stars of Gemini. தமிழில் காமன், சாமன் என்ற இரட்டையர்களாக உருவகம் செய்யப்பட்டனர். இவ்விருவரும் பாலியல் உணர்வுகளைத் தூண்டக் கூடியவர்களாவர்.

669. Astrologers : "Some men who studied the stars, came from the east and asked" where is the baby born to be the King of Jews? We saw his star when it came up in the east.
- Bible, Matt. 1:1-2.

670. Star of Bethlehem : The coming of the age of Piscis, the new world order, was eagerly awaited, heralded in 6 B.C., by a triple conjunction of Saturn and Jupiter in Piscis. In his fourth Eclogue, Virgil announced it would be the return of the golden age. This conjunction was the astronomical highlight of the time, eagerly awaited and watched, and was later named, in christian mythology, the star of Bethlehem. (This association is more of an attempt by Christianity to claim Christ as the herald of the new age, rather than having any real basis in historical facts.)
- Fixed stars, p. 311.

671. மேழம், நெடுநெல்வாடை, 160–161.

635. Usha : Dawn, Ibid.

636. Asiah : Is. Encyl. p. 39.

637. சோமம் : வின்சுலோ அகராதி விளக்கம்.

638. Mithras : History of Religion, p. 212.

639. Vruna : Sans. Dictionary, p. 1007.

640. Anala : Fire, Ibid.

641. அக்கினி : வடுவூர் நாராயணன், ப. 142.

642. சரசுவதி நாகரிகம், இந்திய இந்து சமயத்தாரின் (ஆர்.எஸ்.ஆர்) கருத்து.

643. புருஷ சூக்தம் : "சூத்திரன் யார்?" டாக்டர் அம்பேத்காரின் who is sutra என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பில்.

644. படைப்புக் கதை : ஐதரேய உபநிஷத்தம், வடுவூர் நாராயணன், ப. 175 – 186.

645. ஆன்மா : மேலதே.

646. புருஷ சூக்தம், வடுவூர் நாராயணன், ருக் வேதம், ப. 215.

647. பரிபாடல் : தொல்காப்பியம், 1377.

648. பரிபாடல் : 3:63–68.

649. பரிபாடல் : 4:25 – 25.

650. பரிமேலழகர் உரை : பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், ப. 9.

651. பரிபாடல் : 2:1–6.

652. பரிமேலழகர் உரை : மேலதே, ப. 9.

653. பரிபாடல் : 2:7:12.

654. உ.வே.சா. உரை : மேலதே, ப. 10.

655. பரிமேலழகர் உரை : மேலதே, ப. 10.

656. பரிபாடல் : 2:13–19.

657. அவுணர் : மாய வவுணர் மருங்கறத் தபுத்தவேல், – பரிபாடல், 5:7.

658. Disk. A god structure in Egypt, Lonely Planet, p. 19.

659. Demons : History of Religion, p. 212.

612. சாகை: ருக், யஜுர், சாம, அதர்வண வேதங்களும், வடுவூர் நாராயணன், ப. 40.

613. பத்து முனிவர்கள் : ரிக்வேத ஸம்ஹிதை, ப. 43.

614. Veda : Knowledge, Sans - Eng. Dictionary, p. 1015.

615. Veda : History of Religion, p. 210.

616. William Jones : Ibid.

617. சமற்கிருதம் : சமற்கிருத மொழிக் கல்வெட்டுகள், கி.பி. 150 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் எங்கும் காணப்படவில்லை.

618. ரிக்கு வேதம்: ரிக்வேத ஸம்ஹிதை, முன்னுரை.

619. காஞ்சி சங்கராச்சாரியார் : தமிழ் நீச மொழி என உரைத்தார்.

620. தேவர்கள் : பரிபாடல், 3:7–10.

621. Adi : A sans - Eng. Dictionary, p. 136.

622. Aditi : Ibid, p. 18.

623. Aditi : Daughter of Dhaksha, Rig Veda, vii : 101 : 15.

624. Ashwin : Panini, 5:2:14.

625. Indra : History of Religion, p. 212.

626. Indra - Rain : Sans - Eng. Dictionary, p. 166.

627. Indra : Ibid.

628. Indra : Ibid.

629. இந்திரவிழா : சிலப்பதிகாரம் விரிவாகப் பேசுகிறது.

630. போகி : ஆயிரக் கண்களைப் பெற்ற இந்திரன், போகி எனப்பட்டான் போகம் : பாலியல் நுகர்வு.

631. முருகன் : குறிஞ்சி – மருத நிலத் தொடர்பாளன்.

632. சிந்துவெளி : இதன் அழிவு, வெள்ளத்தால் ஏற்பட்டது என்பது பாசம் போன்ற ஆய்வாளர்களின் கருத்து.

633. வாக்சூக்தம் : பிரஹஸ்பதியானவர் பொருள்களுக்குப் பெயரை அளிக்கும் போது "வாக்"யையே அனுப்பி வைத்தார்.

– வடுவூர் நாராயணின் ருக்வேதம், ப. 70.

634. Word : Word is god. - Genesis, Chapter 1.

monly called Zend or Zand, the old Persiam or Akhamenian, Pahlavi, modern Persian and in connection with these, Armenian and Pushtu. The six European lines are, a) Keltic, b) Hellenic, c) Italic, d) Tuetonic, e) Slavonic, F) Lithuanian, each branching into various sub lines as exhibited in the present languages of Europe."

- Monier Williams, Introduction, p. xii.

606. Inflective Semitic : The name Semitic or Shemitic is applied to Assyrian, Hebrew, Aramaic (Aramean), Arabic, and Himyaritic, because in the tenth chapter of Genesis. Shem is represented as the father of the principal nations speaking these languages, - e.g., Assur (Assyria), Aram (Syria) and of Arphaxad, grandfather of Eber, from whom came the Hebrews - or Trans - Eaphratian race, the name Hebrew commig from (Apiru) and really meaning "one who lives beyond the river," and Joktan, the many of the tribes inhabiting South Arabia. It is usual too. to reckon among Semitic races, the people of Abyssinia whose sacred and literary language is Ethiopic or Ge'ez, while their spoken dialects are Tigre the north and north east, and Amharic for the centre and south, all presenting affinities with the ancient Himyaritic Arabic of South Arabia (yaman.) Hence, speaking generally we may classify semitic languages under the two heads of : 1) North Semitic comprising Assyrian, Hebrew and Aramaic; 2) South Semitic comprising Arabic, Himyaritic and Ethiopic.

Now, if I am asked a second question, as to what most stricking feature distinguishes all these languages from the Semitic, my answer is, that the main distinction lies in the character of their roots or radical sounds; for although both Aryan and Semitic forms of speech are called "inflective", it should be well understood that the inflectiveness of the root in the two cases implies two very different processes. - Monier Williams, Ibid.

607. Bhu : Ibid, p. xiii.

608. Hinglish : Coincise Oxford, p. 674.

609. வேதம் : ரிக்வேத ஸம்ஹிதா, முன்னுரை.

610. வேதம் : ரிக்வேத ஸம்ஹிதா, முன்னுரை.

611. Veda : Knowledge, Sans - Eng. Dictionary, p. 1015.

through which the religion was splitted as Mahayanam and Hinayam. - Indian History.

594. இடைக்காலச் சோழர்கள், சதாசிவப் பண்டாரத்தார்.

595. தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் : திரு. காமராசர், திரு. பக்தவச்சலம், திரு. பன்னீர் செல்வம் ஆகிய மூவர் மட்டுமே பிறப்பால் தமிழராவர். மற்றவர் அனைவரும் பிராமணர், தெலுங்கர், கன்னடியர் என்றவாறு பட்டியல் கூறுகிறது – தமிழர் சமயம், மாத இதழ், சனவரி, 2012.

596. William Jones (1746 - 1794) : Governor of East India Company and the Judicial officer of Calcutta. He found Asian Vidhvajan Sangh in 1784 and also the founder of Journal of Asiatic Society Sakuntala and Manu Smriti were translated from Sanskrit to English. He had tried to connect the linguistic similarties between Sanskrit and the western languages, German, Keltic and Persian. He compared the Indian female dieties with the Greek and Roman goddesses. - Rig Vedha Samhita.

597. Rig veda samhita : Mahirishi, Royapetta.

598. Ahama : South Indian History, Bhishma Publications 1948.

599. Rishis : Rig Vedha.

600. Christianity : Mahirishi, Rig - Vedha Samhita.

601. Dharma : Ibid.

602. சீர்வாணம் : மகிரிஷியின் முன்னுரையில்.

603. Sanskrit and Pragrit : By Monier Williams.

604. Pragrit : A Sanskrit - English Dictionary, p. 703.

605. Asiatic and European lines : "I reply that the Aryan languages (of which Sanskrit is the oldest sister and English one of the youngest) proceeded from a common but nameless and unknown parent, whose very home somewhere in Central Asia cannot be fixed with absolute certainty, though the locality may conjecturally be placed somewhere in the region of Bactria (Balk), Sogdiana or not far from Bohhara and the first course of the river Oxus. The two Asiatic lines are a) the Indian - comprising Sanskrit, the various ancient Prakrits, the Pali and the Ardha Mahadhi. b) the Iranian comprising the Avesta language com-

580. Three Kindgoms : Ibid.

581. Heth : The forefather of Hitties. - Genesis, 10:15.

582. Hyksos : The Egyptian historian Manetho as quoted by Josephus, interpreted the name Hyksos, as shepherd kings (nomad chieftains); modern etymologists identify the word as the Egyptians, rulers of foreign lands. They reached the peak of power about 1590 - 1560 under Apophis I. They were ultimately expelled from Egypt after 1580 B.C. by the Egyptian kings of the 18th Teban dynasty who pursued them into Canaan and succesfally besieged them. - Ibid.

583. Israelites in Egypt : Most scholars agree that the Hyksos period is the most likely background for the story of Joseph (son of Jacob) and the settlement of Israelites in Egypt. It is not improbable that there was some kinship between the two groups. During no other period is it conceivable that the Israelites could have enjoyed the royal favour which is described in their traditions. - Ibid.

584. Horses : The chief contributions of Hyksos were in warfare; they included the horse and the chariots into Egypt and massive earthwork type of fortification is regarded by some scholars as a Hyksos invention. - Ibid.

585. Indus sites : Lothal, S.R. Rao, Introduction.

586. Indus cities. Ibid.

587. Indus Civilization : Journals of Bombay, Rev. Fr. Heras, 1938.

588. Ellis : Dr. M. Marudhanayagam, Possesser of Ellis, original manuscripts, taken from London.

589. Aryan Civilization : Decipherment of Indus Script, Dr. S.R. Rao.

590. Tamil Civilization : Etymological principles of Prof. D.N. Pavaanar, Indus Script Dravidian, Dr. R. Mathivanan, pp. 10-12.

591. Aryans : A branch of Hittites of Anatolia. Ancient Near Eastern Texts.

592. Hittites : Lothal, S.R. Rao, p. 139.

593. Buddhism : Naharjuna, a South Indian Brahmin introduced a new doctruie in Buddhism and Buddha was exhalted to the status god

557. அணுக்கொள்கை : மணிமேகலை, 27:110–119.

558. அணுக்கொள்கை : மேலதே, 126–131.

559. அணுக்கொள்கை : மேலதே, 138–141.

560. Al-magest : Fixed stars, p. 11.

561. விசும்பு : மணிமேகலை, 6:5.

562. மாக விசும்பு : புறநானூறு, 60 : 1–2.

563 - 572. Greek Gods : H.O.R., pp. 249-260.

573. Hittites : The Hittites mentioned in the Bible (Gen. 23:3) refer loosely to the non - Semitic element. - J.B.C., p. 107.

574. I Kings, 10:23.

575. Indo - Europeans : By 2000 B.C., the population of Asia Minor had been infiltrated by various groups of Indo - Europeans, the most influential of whom called themselves Hittites. - J.B.C., p. 675.

576. Kingdom in Asia Minor : The Hittites had gradually unified the land and by the mid 16th century B.C. a strong Hittite kingdom existed in Eastern and Central Asia Minor and was pressing northward into Syria. In a daring thrust down the Euphrates, the Hittites sacked Babylon in 1530 B.C. Hittite power then retreated into Asia Minor for over a century, but in babylon the Kassites seized control and held power for some 400 years plunging Mesopotamia into a dark age. - Ibid, p. 675.

577. Law Codes : The Hittite law code was found amid the ruins of Boghazkoy and dates to 1450 B.C. Two tablets have preserved 200 laws - ANET, 189 - 197.

578. Indo - European : Coincise Oxford Dictionary, p. 725.

579. Boghoskoy : The Hittites are known from their own records and remains only since the excavation begun at Boghoskoy in Turkey in 1906 A.D. Boghoskoy in Turkey in 1906 A.D. Boghoskoy alone yielded extensive ruins of the royal cityof the Hittites and over 10000 cuneiform records. These with records discovered at other sites, added a new chapter to the history of the ancient Near East.

- D.O.B., p. 363.

531. Macedon : The power vacuum filled by Philip II of Macedon, as a great diplomat as he was a general. The Athenian orater Demosthenes, still championed the obsolate city state, but in 338 B.C., Philip crushed the uncommonly united Greeks at chaeronea Macidonians garrisoned the many towns and at a Panhellenic congress at Isthmia, Philip was elected leader with full executive power and commander of a crusade against Persia. Philip was murdered in 336 B.C. - Fodder Greece, p. 51.

532. Alexander to Augustus Ceaser : Ibid, pp. 51-52.

533. Ion : The word derived from the Hebrew word Yaavan. - D.O.B., p. 326.

534. Yaavan The son of the South. - Gen. 10:2.

535. Yaaman : The son of the South - Gen. 35:16.

536. தென்திசை வேந்தன் : திருமந்திரம், கடவுள் வாழ்த்து.

537. Phoenicians : Phoenician traders taught the alphabet and commerce - Fooder, p. 62.

538. Ion : D.O.B., p. 414.

539. யவனர் : பெரும்பாணாற்றுப்படை, 316–317.

540. பள்ளியறைக் காவலர் : முல்லைப்பாட்டு, 59–66.

541. யவனர் : சிலப்பதிகாரம், 4:35.

542. யவனர் : மேலதே, 5:9–10.

543. யவனர் : மேலதே, 14:66–67.

544. யவனர் : மேலதே, 28:141.

545. யவனர் : மேலதே, 29:25:1.

546. யவனர் : பதிற்றுப்பத்து, இரண்டாம் பத்து, பதிகம்.

547. யவனர் : மணிமேகலை, 19:108.

548. Greek Thinkers : Fodder, pp. 33-35.

549. Dekaulion : A legendary figure of Greece, like the Biblical Noah. - Ibid, p. 31.

550-556. Fodor's Greece, pp. 31-39.

Muhammed and by reason of its in comparable excellence is celled al - lugheh or the language. This classical language is often termed by the Arabian themselves and is a compound of many sister dialects, very often differing among themselves which were spoken throughout the whole of peninsula before the religion of Prophat Muhammad incited the nation to spread its conquering armies over foreign countries. - Ibid, p. 33.

524. Arabic in Egypt : Arabic is the official language of Egypt. However the Arabic spoken on the streets differs greatly from the standard Arabic written in newspapers, spoken on the radio or recited in prayers at the mosque. Egyptian colloquial Arabic is fun but difficult to learn.

- Egypt, Lonely Planet, p. 514.

525. Arabic alphabet : There are 28 letters and 32 sounds. Short vowels are a, e, i, o, u and long vowels are aa, ee, ii, oo, uu. You may also see long vowels transliterated as double short vowels. Aw, Ay, El are the diphthongs (vowel combinations) - Ibid.

526. Arabic words : Glossary, Lonely Planet, p. 521.

527. Greek : The term Greek (Hellen in Greek) was used after 700 B.C., by the Greek themselves to designate the group of peoples, cities and states which possessed a common language, religion, civilization literature and art. - D.O.B., p. 326.

528. Dawn : The Greek awakening dawned on the shores of Asia Minor and the nearby islands, to which neumerous Ionians had fled during the dark ages. Phoenician traders taught the humble refugee settlements the alphabet and commerce, which enabled them to turn from the crude struggle for survival to things spiritual. The offshore island of chios claimed Homer and the wandering minstrels of the 9th and 8th centuries B.C., who celebrated in epic strains a cycle of stories revolving round the siege of Thebes, the Trojan War and the return of heroes. Homer fashioned gods in the likeness of man in two great epic poems, the Iliad and Odessey.

- Fodor's Greece, p. 63.

529. Polis : D.O.B., p. 326.

530. Phillip : Fodder Greece, p. 69.

514. Midians : Hebrew Midyaan, etymology uncertain. A nomadic tribe. Israelite kinship with Midian was recognised in the geneology of Abraham which included Midian among the descendants of Abrahma through Kethura. (Gn. 25:24) They appear as traders both in an early story where the group is called Ishmaelites. (Gn. 37:28) and in the late prophetic message. (Is. 60:6). Moses fled from Egypt to Midian and married a Midianite wife, and the vision of the burning bush occurred in Midian. (Ex. 3:1). The father - in - law of Moses, Jethro or Reuel was a Midianite priest. These early friendly relations with Midian were not maintained. Midian appears as a nomadic tribe every time it is mentioned and hence occupied no territory, but nomadic tribes exercised a vague claim to certain pasture lands.

- Ibid, p. 574.

515. Arabs : The great peninsula of Arabia is regarded by many ethnologists as the motherland of all the Semitic peoples, which have emerged in almost regular irruptions to settle in the surrounding area of the Fertile crescent. Whether this theory is rigourously valid, it is true that such irruptions have occurred often in the historical period, and that the Semitic peoples of biblical lands and history belong racially, culturally and linguistically to the same group with Arabs. - Ibid, p, 49.

516. Arabia : The word probably signifies a barren place, desert. - Is. Encyl., p. 29.

517. Ptolemy : Ptolemy divides Arabia into three parts, Arabia Petrea, Arabia Felix, and Arabia Deserta. - Ibid.

518. Divisions of Arabia : The Arabian geographers divide it into Tahama, al - Hijaz, an - Nagid, al - Aruz and al - yamam - Ibid, p. 29.

519. Clans : The races which have peopled Arabia are divided into three sections as al - Adh, al - Samud and al - Tasm. - Ibid. - Ibid.

520. Adh : Ibid.

521. Samud : Ibid, p. 30.

522. Tasm : Ibid.

523. Arabic Language : The classical language of Arabia is held to be the language of Quran and of the traditions of Prophat

B.C., was contemporary with the Aramean invasion of Syria. In Babylonia, they established a number of states which resisted extinction and assimilation during the Assyrian conquests of the 8th - 7th centuries B.C., and under the dynasty of Nebachadnezzar destroyed the Assyrian empire (625 - 609 B.C) and succeeded to its rule over Mesopotamia and Syria. The Chaldean empire inturn fell to Cyrus of Persia in 539 B.C.

The advances of Babylonia in astronomical observation and astrology led to the use of the word Chaldean to designate astrologer in classical Greek and Latin writers, this image is reflected in Daniel, 2:2. Ur of chaldeans is also mentioned in Dn. 5:11.

- Ibid, p. 126.

510. Canann : Kenaan in Hebrew, the name of land lying between Syria and Egypt in which the Israelites settled. The name occurs both in Egyptian and in cuneiform records during the second millennium B.C.,

- Ibid, p. 116.

511. Origin of Canaanites : The origin and meaning of Canaanites, are uncertain. But some scholars suggest Canaan means purple wool. The etymology. however, could run in the opposite direction, purple wool would be a product of Canaan, a phenomenon often observed in linguistic borrowing. - Ibid, p. 117.

512. Kenites : A non - Isracelite clan closely associated with Judha. Kein mentioned as a town of Judha (Jos. 15:57), doubtlessly refers to the clan of the Kenites and the situation of the Kenites found in other passages.

- Ibid, p. 471.

513. Origin : The story of Cain, the first son of Adam, the eponymous ancestor of Kenites as the first murderer. (Genesis, 4:2-15) can scarcely have come from the Kenites, particularly since Cain appears as a peasent, while the Kenites were nomads. But Genesis, 4:15-17 contains independent legends of Cain which originally were unconnected; why the story of the murderer should have been attached to him is not evident. The name means Smith and many scholars believe the Kenites were nomad smiths.

- Ibid, p. 472.

ics is included in Aintiram mentioned above, which was highly appreciated by late Prof. Barlinge.

At this time their was incipient 5th ice age and in the Andean mountains in South America, where the tribe of Mayasura was staying, the low radiation from the sun had stopped the yield from the Kalpataru from which they were drawing substance. So they had to migrate. Everywhere else, obviously then were killed or eaten but in India where the Vedic Rishis had aquired high level knowledge, the knowledge brought in by the people was verymuch appreciated and they were welcome. Today it is difficult to distinguish the knowledge that they had brought in to India so thouroughly did the merge into the Indian society.

- Heral Magazine, dated Sept. 29, 2003.

by Dr. R.R. Karnik, professionally an Engineer.

501. வைகம் பாயனம் : பதிப்பாசிரியர் கணபதி ஸ்தபதி, பாண்டியன் அண்ணாமலைப் பதிப்பகம், சென்னை.

502. கம்பியர் : சிலப்பதிகாரம், 5:104–106.

503. Lanka : An island exists in the middle of a viver - History of India, Prof. N. Neelakanta Sastri.

504. Elam : The ancient territory of Elam lay to the East and North East of the Valley of the Tigris and the Euphrates in the Zagros mountains. The ancient inhabitants of Elam are thought by modern scholars to belong to the Armeniod race. Elam seems to have governed by feudal lords, some of whom occasionally obtained preeminence, rather than by a monarchy in the true sense. The Elamites are mentioned also by Sargon of Akkad and Naram - sin (about 2300 B.C.) some times as enemies some times as allies. - D.O.B., p. 225.

505. Nakunta : Ibid.

506. God's wish : Ezekiel, 37:9.

507. Archers : Isaiah, 22:6.

508. Chaldea : Kasdim, Hebrew and Kaldu Akkadian, meaning uncertain.

509. Ur of Chalcleans : A semitic tribe connected with the Arameans who invaded the Southern Babylon from the 10th - 8th centuries

496. Ibid.

497. El god : From the Ugarit texts the dominent place of El in the Canaanite pantheon is clear. This same name is used in the Old Testament of the Bible, in the same sense of god (general meaning) and refers to yahweh on one stele found at Ras shamra, El is dipicted as seated upon a throne with the Ugarit king making an offering before him. (ANEP. 168, 493) Here the god is represented as advanced in years, fatherly and full of majesty. El's consort was Ashera of the sea the counselor of the gods. Baal (or Aliyan Baal) their son, was the god of rain, storms and consequently of the vegetation on one stele proper moisture. He is dipicted on one stele holding a mace aloft with his right hand and a kind of thunderbolt with spear head (pointed downward in his left hand - ANEP, 168 and 490).

The Ugaritic texts use sacrificial terminology regarding worship, speaking of sacrificial animals in a way that externally resembles the Biblical language of worship. Verbal and idiological contacts between the Bible and the Ugaritic writings are numerous and important, but as far as basic religious belief is concerned, they are more external and do not bridge the greater left differentiating Israelite monotheism from Ugaritic polytheism. - J.B.C., pp. 215, 216.

498. வள்ளலார் : உள்ஒளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ஒளி காட்டிய மெய்யருட் கனவே.
– அருட்பெருஞ்சோதி அகவல் – 1540.

499. Pre - historic period : From various sources.

500. Mayan, the author of Ancient Sciences.

The originator of all these ancient sciences is one known as Mayasura of the (Tamil) tribe that constructed the Mayasabha of Mahabharata. But the period is that of Ramayana some 16000 years ago. Mayasura if father of Manodari, father - in - law of Ravana. One of his nice was Sita, who had married Rama an error of judgement started the epic war. Mayasura was master in many subjects. Some of these are: Vastu shastra, Jyotirganita, Surya Siddhanta, Aintiram, the high seas navigation and cartography of Surya Siddhanta, Fundemental Physics, the Brahma Principle, the Yogasastra of Patanjala yoga. Their contribution to Aesthet-

481. Edom : A high land region of Seir, south of Wadi Zered. - Genesis, 36:8.

482. Sela : Meaning rock in English, Petra in Greek. The capital of Edom. - J.B.C., p. 216.

483. Hori : A nomadic tribe, perhaps an outlying branch of the Hurrians, a non-semitic people. - Ibid, p. 217.

484. Teman : The southern part of Edom. - Ibid.

485. King's Highway : The mountain dwellers of Edomite plateau, who lived in "the elefts of the rock," could not themselves by farming or herding flocks. They mined copper from the mountains and they taxed Caravans that plied the King's highway, which ran north south along their plateau.
- The Civilization of Elomites, N. Glueck, pp. 77-84, 1947.

486. Hurrians : A people of western Asia of the 2nd mill. B.C., and the recent studies have clarified the use of certain names in ancient records. Hurrain is an elthnic name. The Hurrians (Hori - Hebrew) are placed in the hull country of seir in Edom in the time of Abraham.
- Genesis, 14:6.
They were disposed by the Edomites (Dt., 2:12)

487. Genesis, 14:6.

488. Ibid, 36:20.

489. Esau : Bible traces the Edomites, despite some intermingling of races to Esau (Edom), brother of Jacob - Genesis, 36:10-14.

490. Malek : The god of Edomites. (Molock - Ammonite god).
Malik : Arab word for god, ruler, lord. (Is. Encyl., p. 371)
Another Edomite god was Ai.

491. Ras shamra : D.O.B., p. 907.

492. Ugarits : Ibid.

493. Ibid.

494. Ibid.

495. Ibid.

and Deutaronomy, 2:4-7, 28 are in Aramaic and the Aramaic documents of the Persian foreign office quoted in Ezra are now generally thought to be authentic. It was the common language of Palestine in Jesus times and used by Jesus, with different dialects (Matt. 26:73).

The wide diffusion of Aramaic led to the development of several dialects.

I Eastern Aramaic:

a) Babylonian Aramaic (the Babylonian Talmud).

b) Dialect of the Mandean and Manichean literature.

c) Syriac, developed from the dialects of Edessa into several dialects of its own with an extensive christian literature.

II Western Aramaic:

a) The Jewish Aramaic (the Targums)

b) Palestinian Aramaic (Jerusalem Talmud), the language used by Jesus, but no literary remains until several centuries later.

c) Samaritan.

d) Palmyrene (inscriptions)

e) Nabatean (inscriptions) - D.O.B., pp. 59-60.

478. Wars : II Samuel, 10:1-11.

479. Nahas : (Serpent). King of Ammon. He besieged some Israel areas and was defeated by Saul - I Samuel, 11).

480. Molek : Molek was the Ammonite deity for whom Solomon built a high place shrine, east of Jerusalem. - I Kings, 11:7.

References also taken from :

(Phoenicians, Moabites, Ammonites and Edomites).

1. The Bible and the Asian Near East, W.F. Albright New york, 1961.
2. Notes on Ammonite History, W.F. Albright, New York, 1954.
3. Annual of the American Schools of Oriental Research, Glueck, N., New Haven, 1940.
4. Biblical Archaeological Reader, vol. I "The Material Civilization of Ammonites," Landes, G.M., New York, 1961.
5. AASOR : "Explorations in Eastern Palestine" New York, 1935.
6. Jacob - Esau - Edom, Maag, V., New York, 1957.
7. Catholic Biblical Quarterly, pp. 409 - 417, Noth, M.

475. Moab's religion : Little is known of the religion of Moab, the chief deity was chemosh. - D.O.B., p. 581.

476. Ammonites : (Hebrew, Ammon - bene ammon, sons of Ammon or the sons of Israel). An Aramean tribe which settled on the upper yaabok river, probably not much earlier than the 12th century B.C. The Aramaic origin of the Ammonites is expressed by the Hebrew account of their descent from Lot (Genesis, 19:38), inwhich they are also connected with the ancestors of Hebrews. They are represented as already settled at the time of the entrance of Israelites into Canaan (Deut., 2:19), but the tradition may be anachronistic, in any case, the settlement of the Ammonites must have been closely contemporaneous with that of the Israelites. The river yaabok was the border of the two peoples from early times. - D.O.B., p. 25.

477. Aramaic : The language of Ammonites or Arameans, and possibly of the Hebrews before the settlement of Canaan. In any case the Arameans did not themselves adopt Canaanite but retained their own language. It is classified as a northwest Semitic language. The wide diffusion of the Arameans and their commercial activities carried the language through the entire area of Palestine, Syria and Mesopotamia, but the language reached its great diffusion after the Aramean states ceased to have any political importance. Its use on international diplomatic language is seen in II Kings, 18:26, where it is known by the Assyrian and Hebrew officers but not by the people. It's use had become, common by the period of the Neo - Babylonian empire and after the 6th century B.C., it became the semitic language most commonly used.

It's alphabitical script, borrowed from the Canaanitc made it much simpler medium of written communications than Akkadian. It was the common language of the peoples of the Persian empire and the official language of the imperial government. It enjoyed this general use until the spread of Hellenism, but even after Greek became the language of literary culture, politics and commerce, Aramaic remained the language of common people until it was replaced by Arab after the Mohammedan conquests of the 7th century A.D., and later. The papyri from the Jewish colony of Egypt (Elephantine) in the 5th century are Aramaic. In the Old Testament the passages Ezra, 4:8-6; 18; 7:12-26; Jeremiah 10:11

அடிக்குறிப்புகள்

464. Moab : Mo - ab, (Hebrew), meaning uncertain.
A geographic and gentilic name designating the territory East of the Dead Sea and South of the river Arnon, the modern Wadi - el - Mojib, and the people who inhabited the territory. - D.O.B., p. 581.

465. Nelson Glueck : The explorations of Nelson Glueck revealed the existance of a flourishing urban civilization in Transjordan between the 23rd and the 20th centuries B.C., which was suddenly ended about 1900 B.C., probably by a catastrophe which is not yet identified. Between the 20th and 13th centuries there was no sedentry occupation of the territory. - Ibid.

466. Mesha's stone : The Moabite stone of Mesha shows that Hebrews and Moabites and their language were practically same and similary. The two peoples possessed substantially the same material culture. - Ibid.

467. Suggestions of A. Wilson : Ibid, p. 582.

468. Lot : Israelite folklore reckoned Moab as the descendants of Lot and his daughter - Genesis, 19:37.

469. Lot and Abraham : Genesis, 12:4.

470. Sodom : Genesis, 19:1-26.

471. The sons of Lot : Deuteronomy, 2:9.

472. Lot's story : The story of Lot contains a popular pun on these names. Moab - Hebrew Me - ab, "from the father and Ammon from Ben - Ammi son of my Kinsman. - Psalms, 83:9."

473. Mesha - a shepherd king : II Kings, 3:4.

474. Moab : The wealth of Moab may have accounted on the sheepfolds. - J.B.C., 641.

நிறுவனத்திடம் உதவி கேட்டும், இதுவரையிலும் கூட அவர்கள் பதில் தரவில்லை.

பல்வேறு காரணங்களால், இத்தொகுப்பில் உள்ள வரலாற்றுக் குறிப்புகள் சுருக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு படிப்பவருக்கு புதிய சிந்தனையைத் தூண்டும் என்ற நம்பிக்கை உள்ளது. தொல் தமிழரின் வரலாற்றுக்கு, சங்க நூல்களையே நம்பியிராமல், தமிழர் குடியேறிய நாடுகளுக்கெல்லாம் சென்று, தரவுகளைத் திரட்ட ஆர்வம் உள்ளது. காலம் கனியும் வரைக் காத்திருப்போம். நன்றி!

உலக மொழிகளை, வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மொழிகள் எனவும், பிற்பட்ட மொழிகள் எனவும் பிரிப்பர். பெரும்பாலான இவ்விரு மொழிகளிலும் உள்ள இலக்கியங்கள் சமயம் சார்ந்தவை. சங்க இலக்கியங்கள் இயற்றப் பட்ட காலங்களில் இவை அறியப்பட்டவை. சுமேரிய இலக்கியங்கள், சங்க இலக்கியங்களுக்கு காலத்தால் முற்பட்டவை. எனிதும் சங்க இலக்கியங்கள் மட்டுமே, சமயத்தை விடுத்து, மக்களைப் பற்றிப் பேசுகின்றன. அழிந்தவை போக, கிடைத்துள்ள இலக்கியங்களின் எண்ணிக்கையைப் போல் உலகில் எந்த மொழிகளிலும் அக்கால இலக்கியங்கள் இல்லையென்பதும் தமிழுக்குப் பெருமை.

தொல்தமிழர் வரலாறு என்ற இந்நூல் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழர் நாகரிகம், எவ்வாறு மேலை நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்ற வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கி இத்தொகுப்பு எழுதப்பட்டுள்ளது. தமிழர் பற்றிய பல்வேறு செய்திகளை அளித்துள்ள போதிலும், குமரிக்கண்டம் பற்றிய செய்திகளைக் கூறி இத்தொகுப்பை முடிப்பதே சரியாக அமையும். என்றாலும் குமரிக்கண்டம் பற்றி விரித்தெழுவ தென்பது ஒரு நூலாகவே அமையும். ஏற்கனவே குமரிக் கண்டம் என்ற தலைப்பில் நாம் நூலொன்றை எழுதியுள்ளதாலும், அந்நூலைப் பலரும் படித்துள்ளதாலும், குமரிக் கண்டம் பற்றிய செய்திகளைக் கூறாமல் விடுத்துள்ளோம். இருப்பினும் இத்தொகுப்பில் ஆங்காங்கே குமரிக்கண்டம் பற்றிய செய்திகளையும் இணைத்துள்ளோம்.

தமிழுக்குப் புதிய அறிமுகமாக, தொல்தமிழர் வரலாறு எழுதப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் கூறப்பட்டுள்ள செய்திகள் தமிழர்களுக்குப் புதியவைகளே என்று நம்புகி றோம். எதிர்காலத்தில், தமிழ் இனத்தின் மேற்கித்திய கிளைகள் பற்றி, தனித்தனியாக ஆய்வு நூல்களை எழுத முயற்சி மேற்கொள்ளலாம் என்ற சிந்தனை உள்ளது, ஆர்வமும் உள்ளது. பொருளியல் தொடர்பான இடர்ப்பாடுகள், ஆய்வுப் பணிகளைப் பல நேரங்கில் முடக்கிப் போடுகின்றன. தேவைப் படும் நூல்களை வாங்கவும், களப்பணியாற்றச் செல்லவும் தற்போதை சூழலில் வாய்ப்புகள் குறைந்தே காணப்படு கின்றன. இது தொடர்பாக, செம்மொழித் தமிழாய்வு மத்திய

உடுக்களும் தோன்றி ஒளிர்கின்றன. ஆம்பல் கூம்புகின்றது. முல்லையும் பகன்றையும் மலர்கின்றன. கடலும் கானலும் தனிமைப்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்கள் இல்லத்திற்குத் திரும்புகின்றனர். விதைக்கச் சென்ற உழவர், விதை கொண்டு சென்ற வட்டியில் மலர் கொய்து மீள்கின்றனர். ஆநிரைத் தொழுவத்தில் அடைக்கத் திரும்பும் ஆயன், முல்லை மலரைச் சூடி வருகிறான். பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பு கின்றன. மகளிர் வீடுகளில் ஒளியேற்றுகின்றனர். வேலை மேல் சென்ற தலைவனை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். கன்றுகள் தாயைக் கூவி அழைக்கின்றன. இவ்வாறான காட்சிகளைப் புலவர்கள் தம் கற்பனைத் திறத்தால் அழகுறப் பாடுவர். இப்பொழுதில் தலைவனைப் பிரிந்த மகளிர், காம நோய் மேலிட்டு வருந்துவதைப் புலவர்கள் சுவைபடப் பாடுவர்.

இரவின் இடைப்பகுதி யாமம் எனப்படும். இது ஜாம என்று சமற்கிருதத்தில் திரிந்தது. எல்லோரும் உறங்குகின்ற அப்பொழுதில், தலைவனைப் பிரிந்த தலைவியர், அன்றில் பறவையின் குரலையும், ஆனேறுகளின் மணியோசையையும் கேட்டு தூங்காது வருந்தி இருப்பர். கடலின் அலைகள் ஆர்ப்பரித்து மிகுந்த ஒலியை எழுப்பும். ஊர்க்காவலர் சுற்றி வருவர். இவர்களை யாமக் காவலர் என்பர். நாழிகைக் கணக்கர் தூங்காது விழித்திருந்து பொழுதுக் கணக்கை அறிவிப்பர். நொச்சி மலர், யாமப் பொழுதில் உதிரும்.

விடியல் என்ற வைகறைப் பொழுதில், சேவல் கூவும். பொழுது புலரப் போவதை உணர்த்தும். தலைவனோடு படர்ந்த தலைவி, இரவு முடியப் போவதை அறிந்து, அப்பொழுதை இழித்துக் கூறுவாள். "வாள் போல் வைகறை" என்பாள். சேவலையும் வெறுப்பாள்.

காற்று பெரும் பொழுதுகளைக் காட்டும் கருவியாக உள்ளது. காலத்தை அது துண்டிப்பதால் (கால் + து = காற்று) அச்சொல் வழங்கப்படுகிறது. தென் திசையினின்று தென்றலும் (அசைவளி என்றும் கூறுவர்), சூறைக்காற்று கடுவளியாகவும், கீழ்க்காற்று கொண்டல் எனவும், வடதிசைக் காற்று வாடை எனவும், குளிர் காற்றை ஊதை எனவும் கூறுவர். கரு, உரிப்பொருள் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. தொல் தமிழர் வரலாற்றில் எழுத்தில் வடிக்க இயலாத அளவுக்கு நிகழ்வுகள் உள்ளன.

மான்கள் பிணையொடு அறுகம்புல்லை உண்டும், தெளிந்த நீரை அருந்தியும் இளைப்பாறும், தலைவியர் கார்காலத்தைப் பகைப்பதாக புலவர்கள் கூறுவர்.

கூதிர் : ஐப்பசி, கார்த்திகை கூதிர் காலமாகும். இக்காலத்தில் குளிர் காற்று வீசும். கரும்பு தடித்து வளரும். ஈங்கை மலரும். இக்காலக் குளிரால் மக்களும் மாக்களும் நடுங்குவர். இக்காலத்தில் தலைவனோடு இணைந்திருப்பதைத் தலைவி விரும்புவாள்.

முன்பனி : மாசி, பங்குனி மாதங்கள் பின்பனிக் காலமாகும். பின்பனிக் காலத்து பனித்துளிகள், நூலற்ற முத்துக்கள் போன்று தோன்று வதாக ஒரு புலவர் பாடுகிறார்.

வேனில் : இக்காலம் இளவேனில், முதுவேனில் என இருவகைப்படும். இளவேனில் காலத்தில் கோங்கும் இருப்பையும் மலரும். அரைத்த சந்தனம் மணந்து வீசும். நன்மகளிர் பூப்பெய்துவர்.

சிறு பொழுதுகள் ஐந்தென்றும், ஆறென்றும் கூறுவர்.[854]

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சி யாமமும் விடியறு மென்றிப்
பொழுது.................................– குறுந்தொகை, 32:1–3

காலை, பொழுது புலந்ததற்குப் பின்னுள்ள பொழுது,
பகல், நண்பகலை உள்ளிட்ட பொழுது,
மாலை, கதிரவன் மறையத் தொடங்கும் பொழுது,
யாமம், இடையிரவும் பொழுது,
விடியல், இரவின் இறுதி யாமப் பொழுது,

என அறியப்படும். எற்பாடு (எல் + பாடு) என்ற ஆறாவது பொழுதும் உள்ள தென்பர்.

காலை : கால் + ஐ என விரியும். சூரியனின் அழகான கால்கள் (கதிர்கள்) விரியும் பொழுது.

பகல் : நாளைப் பகுப்பது பகல். இது நாள் முழுவதுமுள்ள பொழுதைக் குறிப்பதால், நண்பகல் எனக் குறிப்பிடுவர்.

மாலை : மாலை, மால் + ஐ என விரியும். மால் = இருள்; ஐ = அழகு. அழகிய இருள் சூழும் பொழுது.

யாமம் : யா என்பதற்கு இரவென்ற பொருளும் உண்டு. இரவில் வருவதால் யாமனுக்கு அப்பெயர் வந்தது.

விடிதல் அல்லது விடியல் : விடித்தல், தோன்றுதல்.

சிறுபொழுதுகளில் மாலைப் பொழுதே புலவர்களின் கவனத்தை ஈர்த்தது. கதிரவன் மறைந்த பின்னர், நிலவும்

செய்யுளாக விரிவுபடுத்தப்படும். முதல் என்பது நிலமும் காலமும் பற்றியது. கருவென்பது தெய்வம் சார்ந்தது. உரி என்பது திணைக்குரிய ஒழுக்கங்களாகும். இந்தக் கட்டுப் பாட்டுக்குள் தம்மை அடக்கிக் கொண்டே, சங்கப்புலவர்கள் இலக்கியங்களைப் படைத்தனர். இவ்வாறு படைக்கப்பட்ட இலக்கியங்களில் புலவர்களின் கவித்துவம் மேன்மை பெறும். அம்மேன்மையின் காரணமாக, உலகில் நடக்க இயலாதவற் றையும், நடந்தது போல் காட்டுவர்.[853] உலகியல் கண்ணோட் டத்தில் இலக்கியங்களைப் பார்க்கக் கூடாது. இருப்பினும் பல உலகியலுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

நாடக வழக்கிலும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் – தொல்.அகத். 56

புலவர்கள் தங்களது சொற்களின் ஆளுமையைக் கொண்டும், கற்பனைத் திறன் கொண்டும், பல்சுவையுடன் காட்சிகளைத் தருவர். தாம் கூறியவாறே உலகில் நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என புலவர்கள் எதிர்பார்ப்பதில்லை. சில நேரங்களில் நிகழ்வதும் உண்டு. வெளியூர் சென்றிருந்த தலைவனுக்கு, தலைவி தென்றலைத் தூதுவிடுகிறாள். பத்து நாளுக்குள் திரும்பவேண்டும் எனக் கூறச் சொல்கிறாள். பத்துநாளில் தலைவன் திரும்பி விடுகிறான். தலைவி தென்ற லுக்கு நன்றி கூறுகிறாள். இப்படியொரு செய்தியைப் புலவர் தமது கற்பனைத் திறத்தால் விளக்குவார். தென்றல் யாரிடமும் பேசுவதில்லை, தூதும் செல்லாது. தலைவி சொன்னபடி தலைவன் வந்து சேர்ந்தது இயல்பாய் நிகழ்வுற்றது. எனவே, செய்யுட்கள் உலகியல் சார்ந்து இருக்க வேண்டும் என்பதில்லை.

முதற்பொருளான நிலத்தைப் பற்றி ஏற்கனவே விளக்கி யுள்ளோம். காலம் என்பது பொழுதுகள் என்றும் சொல்லப் படும். முதல் பொருளின் வகையாகிய பொழுது பெரும் பொழுது சிறு பொழுது என இருவகைப்படும். கார், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும் பொழு துகள் ஆகும்.

கார் : ஆவணி, புரட்டாசி ஆகிய இரு திங்களும் கார் காலத்தைச் சார்ந்தவை. கார்காலத்து மாலையில் முகில்கள் திரண்டு, மின்னல் கள் ஒளிர, இடிமுழங்க மழை பெய்யும். இக்காலம் முல்லை நிலத்துக்குரியது. முல்லை நிலம் நீரால் குளிர்ந்து வளம்பெறும். பீர்க்கம் பூ மலரும். கொன்றையும் குருந்தும் முகிழ்க்கும்.

தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கண மரபுகள்:

பழந்தமிழ்ப் பாடல்களை இயற்றிக் கொடுத்த சங்ககாலப் புலவர்கள் தமிழ் இலக்கியத்தின் தொன்மையான மரபுகளைத் தழுவியே, தம் படைப்புகளை அளித்தனர். மரபு மாற்றத்தை அவர்கள் ஒரு போதும் கடைப்பிடிக்கவில்லை. தொல் தமிழ் மரபினை ஒட்டி, தமது அறிவையும், புலமையையும், கற்பனை வளத்தையும் தம் பாக்களில் நிரப்பி வைத்தனர். அவர்கள் கையாண்ட நடை, தேர்ந்தெடுத்த சொற்கள், அச்சொற்களை அழகுற கோர்த்த வரிகள், அவ்வரிகளில் புகுத்திய பொருள் விளக்கங்கள், இயற்கையின் எழிலை எடுத்துக்காட்டிய மாட்சி ஆகிய நற்றியல்களால் சங்க இலக்கியங்கள் இன்றும் போற்றப் படுகின்றன.

புலவர்கள் தங்கள் பாக்களில் காட்சிப் பொருளையும் விளக்கினர். காட்சிப் பொருளை விளக்குவதைக் காட்டிலும் கருத்துப் பொருளை விளக்குவதில் தான் புலவரின் அறிவுத் திறமை வெளிப்படும். காட்சிப் பொருள் என்பது ஐம்பொறி களால் அறியப்படுபவை. கருத்துப் பொருள் என்பது உள்ளத் தால் உணரப்படுவது. காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும் படிப்பவர்களின் மனத்திரையில் ஓடவிட்ட வர்கள் சங்கப் புலவர்கள். கண்களால் காணும் இயற்கையின் அழகை, நேரில் காண்பதுபோல் சொல்லி விளக்குவர். அன்பு, காதல், நட்பு, இரக்கம், பொறுமை, மதிநுட்பம் ஆகிய கருத்துப் பொருளை, காட்சிப் பொருள் போல் விளக்குவதில் ஆற்றல்மிக்கவர்கள் சங்கப் புலவர்கள்.

தலைவனும் தலைவியும் ஒருவயப்பட்ட நிலை, யாரும் பார்க்காத சோலைகளிலும் அடவிகளிலும் கண்டுபேசி மகிழ்வது, தலைவியைப் பிரிந்து ஒரு கணமேனும் உயிர் வாழேன் எனச் சூளுரைப்பது, பிறர் அறியா களவொழுக்கம், தோழியின் வழியில் தலைவியின் காதலை பெற்றோர் அறிவது, தலைவன் தலைவியை மணமுடிப்பது, பொருள் ஈட்டச் செல்லும் தலைவனின் பிரிவால், தலைவி வருந்துவது, உடல் நலிவது, தென்றல், நாரை, மதி ஆகியவற்றைத் தூதனுப்புவது போன்ற செய்திகள் அகப்பொருளில் அமையும். இவை கருத்துப் பொருளாகவும் கருதப்படும்.

அகப்பொருள் ஐந்து திணைகளாகப் பிரியும். ஒவ்வொரு திணைக்கும் முதல், கரு, உரியென்ற மூவகைத் தலைப்புகளில்

எழால் (எகால் என்பது வழக்குச் சொல்) என்ற பறவைக்கு அஞ்சிப் பதுங்கும்.

பாலையின் தலைவியாக கொற்றவையைக் கூறுவர். இவளை ஆரலைக் கள்ளர்கள் வழிபடுவர். பயணம் மேற்கொள் பவர்களுக்கு கொற்றவை உதவுவாளா என்பது தெரியவில்லை.

மேற்கண்ட ஐந்து நிலங்களில், பாலை தவிர்த்த நான்கு நிலங்களே சிறப்புக்குரியனவாகக் கருதப்பட்டன. நன்னிலங்கள் நான்கு என்பது தமிழர் வழக்கு. இந்நான்கு நிலத்தவரும் தத்தம் வாழ்க்கை முறைமைகளை யொட்டி, வழிபாடுகள் செய்வர், விழாக்கள் எடுப்பர். நான்கு நிலங்களில் வாழ்ந்திருந்த மக்களின் வழிபாடுகள் தொடர்பான சடங்குகளும், மரபுகளும் தனித் தனித் திணைகளாக அறியப்படும். இவையே நான்மறை என்று சொல்லப்படும். இந்நான் மறைகளையும் அறிந்த சான்றோர்கள் தமிழ்நாட்டில் இருந்தனர். இவர்கள் நில வேறுபாடுகளைக் கடந்தவர்கள். நானில மக்களுக்கும் அறிவுரை கூறுபவர்கள். நான்கு வழிபாட்டு முறைகளையும் போற்றியவர்கள். நான்கு நிலத்துக்குரிய வழிபாட்டு ஒழுக்க நெறிகளே நான்மறை என்று சொல்லப்பட்டது. ஒவ்வொரு நிலத்தில் நிகழும் விழாவிலும், நான்மறைச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சான் றோர்களை அந்தணர் என்றும், ஆசான் என்றும், பார்ப்பார் என்றும் தமிழர்கள் அழைத்தனர். வீட்டுச் சடங்கு முதற் கொண்டு, நாட்டு விழாக்கள் வரை, அந்தணர்கள் இன்றி நடப்பதில்லை. அந்தணர் என்ற தகுதியை இடைக்காலத்தில் வந்த ஆரியர்கள், தமக்குத் தாமே சூடிக் கொண்டனர். அந்தணர்கள் ஆற்றிய பணிகளை, வலிந்து தாமே மேற்கொண் டனர். ஆசாரியன், பார்ப்பான் என்றும் தங்களை அழைத்துக் கொண்டனர். ஆசான் என்ற பொருளில் சொல்லப்பட்ட ஐயன் என்ற தகுதியையும் எடுத்துக் கொண்டனர். தம்மை ஐயர் என்னும் → விகுதி கொடுத்து அழைத்துக் கொண்டனர். தெலுங்கில் அறியப்பட்ட ஐயர், ஐயங்காரு என்று (காரு என்பது பெயருக்குப் பின்னால் சேர்க்கப்படும் “அவர்கள்” என்ற பொருளைக் கொண்டது) எனப்பட்டனர். தமிழில் ஐயங்கார் என அழைத்துக் கொண்டனர். ஐயங்கார் என்ற தமிழ்ச்சொல்லுக்கு, கருப்பு ஐயன் என்றும், திருட்டு ஐயன் என்றும், வன்னெஞ்சு ஐயன் என்றும் பொருள் விரியும்.

தமிழ்த்திரிபு மொழிகளில் நீரைக் குறித்தே சொல்லப்பட்டுள்ளது. பட்டைகளில் தேக்கியுள்ள நீரின் காரணமாக, இது யாமரம் எனப்பட்டது. யா என்பது நீரைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். யா என்ற சொல் பாபிலோனிய மொழியில் நீரைக் குறித்தது. யம் என்ற சொல், எகிப்திய அராபிய, எபிரேய மொழிகளில் கடலைக் குறித்தது. அயம் என்ற தமிழ்ச் சொல் குளத்தைக் குறித்தது. இவை அனைத்தும் யா என்ற மூலச் சொல்லி னின்றும் விரிந்து திரிந்தவைகளே. பாலை நிலத்தில் காணப் படும் மற்றொரு மரம் வேம்பு. அடிமரம் கருத்துக் காணப் படும். இதன் பழங்களைக் கிளிகள் விரும்பியுண்ணும்.

செந்நாய் என்ற விலங்கு பாலைவனத்தில் திரியும். சிறு விலங்குகளை வேட்டையாடி உண்ணும். பள்ளங்களில் உள்ள கலங்கல் நீரை அருந்தும். புலிக்கு செந்நாய் நல்ல உணவாகும். ஓந்தி எனப்படும் ஓணான் பாலையில் மிகுந்திருக்கும். இதன் முதுகுப் பகுதியை கருக்கரிவாளுக்கு உவமை கூறுவர். ஓந்தியில் ஆண் போத்து எனப்படும். பாலை நிலத்தில் பயணம் மேற்கொள்பவர்கள் ஓந்தியின் அசைவுகளை நிமித்தமாகக் காண்பர். பல்லி, பாலை நிலத்துக் கள்ளிச் செடிகளில் காணப்படும். இதன் கால்கள் செந்நிறமானவை. தன் காதலை வெளிப்படுத்த, பெண் பல்லிக்கு ஆண் பல்லி ஒருவகையான ஒலியை எழுப்பும். கிச் கிச் என்ற அவ்வொலி, எயினர் தம்முடைய அம்புகளை பாறையில் தீட்டும் போது எழும் ஒலியைப் போல இருக்கும்.

கணந்துள் என்ற பறவை பாலையில் வாழும். நீண்ட காலையுடையது. கூட்டம் கூட்டமாக வாழும். இப்பறவைகள் எழுப்புகின்ற ஒலியும், இறக்கைகளை படபடவென அடித்துக் கொள்ளும் செயலும், தொலைவில் ஆரலைக் கள்வர்கள் இருப்பதை வழிப்போக்கர்களுக்கு உணர்த்தும். பருந்து பாலை நிலத்தில் சுற்றித்திரியும். ஞெமை மரத்தில் அமரும். புறா, பாலை நிலத்தைச் சார்ந்தது. ஓமை மரத்திலும், கள்ளிச் சந்துகளிலும் வாழும். இதன் கழுத்தில் புள்ளிகள் இருக்கும். குறுகிய அடிகளை எடுத்து வைக்கும். இரை தேடப்போன ஆண் புறா, வந்து சேர தாமதம் ஆனால், பெண்புறா ஆணை அழைக்க, அடிக்கடி கூவும். வங்கா என்ற பறவை பாலையில் வாழும். இதன் கால்கள் சிவந்த நிறம் கொண்டவை. இது எழுப்பும் ஒலி வேய்ங்குழலின் ஓசையைப் போல் இருக்கும்.

நீரை அருந்துவர். ஆண் யானையான களிறு, தன் இணையான பிடியின் நீர்வேட்கையைத் தணிக்க, மரப்பட்டைகளைப் பிழிந்து, தன் பிடிக்குக் கொடுக்கும். மான் தனது மறிக்கு நிழலூட்ட, வெயிலில் நின்று, தன் நிழலால் தன் மறியைப் போர்த்தும். அத்தன்மையை "வழுவினைஞ்சு" எனப் புலவர் பாராட்டுவர். இத்தகைய காட்சிகளையெல்லாம் காணும் தலைவன், தன் தலைவியை நினைத்து வருந்துவான். விரைவில் தலையை அடைய வேண்டும் என முடிவு செய்வான்.

இருப்பை (இலுப்பை) பாலை நிலத்து மரங்களுள் ஒன்று. இது வேனிற் காலத்தில் மலர்ந்து, அப்பகுதியெங்கும் மணத்தைப் பரப்பும். இதன் மலர்கள் உதிர்ந்து, பாலை நிலத்தின் ஒற்றையடிப் பாதையை மூடி நிற்கும். உகாய் என்றொரு மரம் உண்டு. அம்மரத்தின் கனிகள் உருண்டு செந்நிறமும் மஞ்சளும் கலந்து காணப்படும். உதிரும் காய் என்பதே. உகாய் எனச் சொல்லப்பட்டது. கள்ளிச்செடி பாலையில் மிகுந்து காணப்படும். தடித்த தன் பட்டைகளில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும். கள்ளியின் காய் வெடித்துச் சிதறும். அப்போது ஓர் ஒலியும் கேட்கும். "சுவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி", என்று புலவர் உரைப்பர். கோங்கு என்று ஒரு மரம், இலவ மரத்தைப் போன்றிருக்கும். இளவேனில் மலரும் அம்மரம், மலரும் காலத்தில் இலைகளை உதிர்த்து விடும். அம்மலர்களின் மொட்டுகளில் வண்டுகள் மொய்க்கும். ஞெமை என்ற பாலை நிலத்தின் மரத்தின் இலைகள் உதிர்ந்த மரக்கிளையில் பருந்து தன் பெடையோடு அமர்ந்திருக்கும்.

மூங்கில், குறிஞ்சியிலும் பாலையிலும் வளரும். குறிஞ்சி மூங்கில் உயர்ந்தும் தடித்தும் காணப்படும். பாலை நிலத்து மூங்கில், வெப்பத்தால் உலர்ந்து, வளர்ச்சியின்றி, கூழையாக நிற்கும். அமை, கழை, பணை, முந்தூழ், வெதிர், வேய், வேரல் என்றும் சொற்களால் மூங்கிலை அழைப்பர். மூங்கில் விரைவில் வளரும் புல்லினத்தைச் சார்ந்தது. முங்கி வளர்வதால் மூங்கில் எனப்பட்டது. பாலையில் காணப்படும் மற்றொரு மரம், யாமரம். தடித்த பட்டையையும், வயிரம் பாய்ந்ததாகவும் இம்மரம் விளங்கும். யானைகள், இதன் பட்டைகளில் உள்ள நீரினை அருந்த, இதன் பட்டைகளை முறித்து, முறுக்கும். யா மரம் என இது ஏன் அழைக்கப்பட்டது என்பது உரையாசிரியர்கள் விளக்கம் தரவில்லை. இருப்பினும் யா என்ற சொல்

கடல் மீன்களை நாரையும், கழிவு மீன்களைக் காக்கைகளும் உண்ணும். அயிரை, ஆரல் மீன்களை நாரைகள் விரும்பி யுண்ணும். ஆரல் மீன்களின் முட்டைகள் ஞாழற் பூவைப் போலத் தோன்றும். சுறாமீனை வலை வைத்துப்பிடிக்க இயலாது. எறியுளி ஒன்றை எறிந்து சுறாவைப் பிடிப்பர். மிக்க வலிமையுடையது வலிச்சுறா எனப்படும். புலவர்கள் கயல் மீன்களைப் பெண்களின் கண்களோடு ஒப்புமைப்படுத்துவர்.

பாலைநிலம்[851]:

வெப்பமான நிலப்பகுதி பாலை நிலமாகும். தமிழகத்தில் பாலை என்றொரு தனி நிலப்பகுதி இல்லை. கோடையில் குறிஞ்சியும் முல்லையும் வெப்பத்தால் திரிவதால், அது பாலை என்று சொல்லப்பட்டது. குறுந்தொகை, 852.

வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவா அன். 396 – 5.

என்று கூறுகிறது.

பாலை நிலத்தில் வெப்பம் மிகுந்து, நீர் நிலைகள் வற்றி, செடி கொடிகள் காய்ந்து பொலிவிழந்து காணப்படும். சில பள்ளமான பகுதிகளில் நீரும் சேறும் கலந்து காணப்படும். அந்நீரை “வெவ்வேறு கலுழி” என்பர். வெம்மையாலும், உயிரினங்கள் கலக்கியதாலும், அவ்வாறு சொல்லப்பட்டது. அக் கலங்கிய நீரையும் கூட, தலைவனோடு செல்லும் தலைவி விரும்பி அருந்தினாள் என்பர். தலைவன் மீது கொண்ட காதல், நீரின் தன்மையை மறக்கச் செய்தது. பாலை நிலத்தில் உள்ள நெல்லி மரம், நீர்வேட்கையைத் தணிக்க உதவும். அதன் கனிகள், நீர்விடாயைக் கட்டுப்படுத்தும். அதனை “அறந் தலைப்பட்ட நெல்லி” என்று கூறுவர்.

பாலை நிலத்தின் வழியே உப்பு வணிகர்களின் ஊர்தி களின் ஒலி எப்போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். வெப் பத்தால் உயிரிழந்த விலங்குகளையுண்ண, பருந்துகள் பாலை நிலத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். பாலை நிலத்துக் குரியவரை எயினர் என்பர். இவர்களை ஆறலைக் கள்வர் என்றும் கூறுவர். சிறிதும் இரக்கமற்ற எயினர்கள், தமது அன்புகளைப் பாறையில் தீட்டி, அதனை நகத்தை வெட்டிக் கூர்மை பார்ப்பர். பாலைவழி செல்வோரை மடக்கிப் பிடித்து அவர்தம் உடைமைகளைக் கவர்ந்து செல்வர். நீர் விடாய்த் தோன்றினால் மரப்பட்டைகளைக் கிழித்து, அதில் வழியும்

ஆனால் அதுபற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. இன்று தமிழகத்தில் வழக்கில் உள்ள கருவாடு என்ற சொல்லை, போர்த்துக் கீசியர்களே அறிமுகம் செய்தனர். அது போர்த்துக் கீசியச் சொல்லாகும். கரு + அடு என்ற தமிழ்ச் சொற்களே, கருவாடு (Carvadum) என்று திரிந்துள்ளது. அடுத்தலால் (வெப்பத்தால்), கருகிப்போகும் மீன் என்பது அதன் தமிழ்ப் பொருளாகும்.

கடற்கரைப் பரப்பில் நீண்டு வளரும் நீர்கொடியை நெய்தல் என்றே அழைப்பர். அதன் மலர்கள் நீண்டு குத்திட்டு வளர்வன. தலைவியைக் காணவரும் தலைவனின் தேர்ச் சக்கரங்களைச் சுழலவிடாமல், இக்கொடிகள் இடைமறிக்கும். இதனால் பல கொடிகள் துண்டிக்கப்படும். நெய்தல் பூவை நாரைகள் விரும்பியுண்ணும். நறுமணம் கொண்ட அம்மலரைச் சுரும்புகள் மொய்க்கும். நெய்தல் மகளிர், அடும்புப் பூவுடன், நெய்தலையும் சேர்த்து சூடி மகிழ்வர்.

நெய்தல் நிலத்தலைவன் வாரணன். கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன் ஆகியோர் சமூகத் தலைவர்களாவர். மேற்குக் கடற்கரையில், கொண்கன் என்ற தமிழ்த் தலைவன் ஆண்டநாடு, கொண்கானம் எனப்பட்டது. கானம் என்பது நெய்தல் மலரையும் குறித்த சொல்லாகும். கணைக் கான நெய்தல் என்றும் அம்மலர் சுட்டப்படுகிறது. இன்றைய கொங்கண நாடும் மொழியும் தமிழர் வழிவந்த, தமிழர் ஆண்ட தமிழ்ப் பகுதிகளே என்க. குசராத் முதல், வங்காளம் வரையிலான நீண்ட கடற்கரை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

புன்கு, புன்னை, முள்ளிச்செடி, தென்னை போன்றவை நெய்தல் நிலத்திற்கு அழகு சேர்த்தன. ஆமைகள், கடற்பரப்பு மணலின் கீழ் முட்டைகள் இடும். இவற்றை நாய்களும் நரிகளும் தேடிக் கண்டுபிடித்து உண்ணும். கடற்கரையில் சிறு நண்டுகள் மிகுந்து காணப்படும். தமிழகத்து மீனவர்கள், கடல்வாழ் மீன் இனங்களின் பெயர்களைப் பட்டியல் இட்டுக் கூறுகின்றனர். அவை நினைவில் வைத்துக் கொள்ள இயலாத அளவில் நீண்டதொரு பட்டியலாகும். அவைகளில் சில, அயிரை, ஆரல், இறால், கயல், கெண்டை, சுறா, வாளை, வெளவால் எனவிரியும். மீனைப் பிடித்து மண்டையெனும் கலத்தில் வைப்பர். கடற்கரையில் உலர்த்தப்படும் மீன்களில்

நீந்தாமலேயே மிதந்து செல்கின்றன என்பதை தொல்தமிழா் அறிந்திருந்தனர். அந்த ஆமைக் கூட்டத்தின் வழியே, கடல் நீரோட்டத் திசையில், பல நாடுகளுக்கும் தமிழர் சென்று வந்தனர். சிறிய படகு போன்ற மரக்கலங்களில் கூட பயணம் மேற்கொண்டனர். மலாகா, மலேசியா வழியாக, சீனாவுக்கு சென்று வருதலை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். தமிழர்கள் எளிதாகக் கடலோடியதின் நுணுக்கம் தற்போது வெளிப்பட்டுள்ளது. இத்தகைய கடல் மேலாண்மை அறிவை இப்போதுள்ள தமிழ் மீனவர்களும் அறிந்துள்ளனர்."

மருத நிலத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் உலகிற்கு எடுத்துச் சென்று அறிவித்தவர்கள் நெய்தல் நில மக்களே. நெய்தல் நில மக்களே இன்றும் தமிழரின் வரலாற்றைத் தாங்கிப் பிடிக்கும் தூண்களாக உள்ளனர். மருத நில மக்களும் நெய்தலைச் சார்ந்தே வாழ்ந்திருந்தனர். சங்க இலக்கியங்கள், நெய்தல் மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்கினவேயன்றி, அவர்களது மரக்கலம் கட்டும் தொழில் நுட்பம், கடலோடும் ஆற்றல் பற்றிய செய்திகளைத் தெரிவிக்க வில்லை. தமிழர்களின் வரலாற்றைத் தூக்கி நிறுத்திய நெய்தல் மக்கள் இப்போதும் வறுமையில்தான் வாடுகின்றனர். தமிழர் களின் பழங்காலத் தொழில் நுட்பங்களை வெளியே கொண்டு வருவதில் மைய அரசுக்கு ஆர்வம் இல்லை.

தமிழகத்தின் கடற்கரைக் குடியிருப்புகள் சிறுநல்லூர், குப்பம், பாக்கம், சிறுகுடி என்றவாறு அழைக்கப்பட்டன. மணல் மேடுகளில் குடில்களை அமைத்துக் கொண்டு, அம் மக்கள் குடியிருந்தனர். கடற்கரையையொட்டி தென்னந் தோப்புகளும் சோலைகளும் இருந்தன. அவற்றைக் கானல் என்று குறிப்பிடுவர். மற்ற நிலங்களுக்கு உப்பை விளைவித்துத் தந்தவர் நெய்தல் நிலமக்களே. உப்பும் மீனும் பிறபொருட் களுக்காக பண்ட மாற்றம் செய்யப்பட்டன. உப்பளங்கள், கடற்கரையை ஒட்டி பரந்து காணப்படும். மீன் பிடித்தலில், சுறா, பெருஞ்சுறா போன்ற மீன்களைப் பிடிப்பதிலும் தமிழர்கள் திறமை பெற்றிருந்தனர். சில நேரங்களில் சுறாக்கள் மீனவர்களைத் தாக்குவதும் உண்டு.

விற்ற மீன்கள் போக, எஞ்சியிருந்த மீன்களை, கடற் பரப்பில் உலர்த்துவர். சூரிய வெப்பத்தால் அவை நீர் வற்றி, வற்றலாகும். உலர் மீனை வற்றல் என்றே தமிழர்கள் குறித்தனர்.

நாடுகளில் அறிமுகம் செய்தவர்கள் சுமேரியத் தமிழர்களே.

இம்மாபெரும் மரக்கலங்களை உருவாக்கத் தமிழன் அறிந்திருந்தான் என்ற செய்தி, குமரிக்கண்ட அழிவின்போது, தப்பிப் பிழைக்க, மரக்கலம் ஒன்றை உருவாக்கிய தமிழனைப் பற்றிய செய்தியை விவிலியம் விளக்குகிறது. ஆங்கிலேயர் காலம் வரை மிகப்பெரிய மரக்கலங்களை வடித்த தமிழர் களின் பணிகளை, ஆங்கில அரசு முடக்கிச் சட்டமியற்றியது. 400 டன்களுக்கு மேல் ஏற்றிச் செல்லும் மரக்கலங்களை இந்தியர்கள் உருவாக்கக் கூடாது என்ற ஆங்கிலேயரின் சட்டம், தமிழர்களைக் கருத்தில் கொண்டே இயற்றப்பட்டது.

வாஸ்கோட காமா, மடகாஸ்கர் நீர்வழியில் ஆறு மாதங்களுக்கும் மேல் தங்கி, இந்தியாவுக்குச் செல்வதற்கான வழி தெரியாது திகைத்த போது, அவனுக்கு வழிகாட்டி அழைத்து வந்தது ஒரு தமிழனே என்பது வரலாற்றுச் செய்தி. இத்தகைய வியக்கத்தக்க கடலறிவு தமிழனுக்கு எவ்வாறு உரித்தாயிற்று என்பதற்கு விடை, தமிழன் கடலுக்கு அடியில் செல்லும் நீரோட்டங்களைத் துல்லியமாக அறிந்திருந்தான் என்பதுதான்.

இன்றைய கடலியல் அறிஞரும் ஆழ்கடல் ஆய்வாளரு மான ஒரிசா பாலு என்கிற பால சுப்பிரமணியன், பல்வேறு அதிர்ச்சியான, தொல் தமிழரின் கடல் மேலாண்மை பற்றிய தகவல்களைத் தருகிறார்.[850] அத்தகவல்கள் வருமாறு: (சங்கொலி, 17.8.2012)

"இந்தியப் பெருங்கடலை மையமாகக் கொண்டு, பல்வேறு நீரோட்டங்கள் உள்ளன. அவை உலகின் பல நாடுகளையும் இணைக்கின்றன. தென் அமெரிக்க நாடான பெரு, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, சீனா, சப்பான், பிலிப் பைன்ஸ் தீவுகள், போர்னியோ ஆகிய நாடுகளிலிருந்து ஆமைகள் தமிழகத்துக்கு வந்து முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கின்றன. அவை தமிழகத்தில் 56 நாள் அடை காக் கின்றன. குஞ்சுகள் வெளிவந்தவுடன், அக்குஞ்சுகளுடன் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே சென்றுவிடுகின்றன. இந்த ஆமைகள் எவ்வாறு பல்லாயிரம் அயிரத் தொலைவுகளில் நீந்திச் செல்கின்றன என்பது வியப்புக்குரிய செய்தி. அவை, கடல் நீரோட்டங்களைக் கண்டறிந்து, அவற்றின் வழியே,

வாழ்ந்திருந்த குமரிக்கண்டத்து மக்களுக்கு, கடலோடு தொடர்பு கொள்ள வேண்டிய கட்டாயமும், தேவையும் இருந்தன. இதன் மூலம் தமிழர்கள் பெற்றிருந்த பட்டறிவு, உலகின் எம்மக்களும் கொண்டிராத கடல் அறிவு இயற்கையாகவே அவர்களுக்குக் கிடைத்தது. மீன் பிடித்தலும், முத்துக் குளித்தலும், கடலோடுதலும் தமிழர்களுக்கு கைவந்த கலையாயிற்று. இதனால், பல்வேறு மரக்கலங்கள் உருவாக்கவும், அவைகளை மிகுந்த தொழில் நுணுக்கங்களோடு அமைக்கவும் தொல்தமிழர் அறிந்திருந்தனர். கடலின் ஆழ அகலங்களைத் தம் பட்டறிவால் அறிந்திருந்த தமிழர்கள், கடலின் அடியில் தோன்றும் நீரோட்டங்களையும், திசைமாறி வீசும் காற்றின் தன்மைகளையும் அறிந்திருந்தனர். இக்காலத்திலும்கூட, தென்தமிழ் நாட்டு மீனவர்கள் கொண்டிருக்கும் கடல் அறிவை, முறையாக சொல்லித்தரும் கடல் சார்ந்த கல்வி நிறுவனங்களும், அதன் பேராசிரியர்களும் கூட அறிந்திருக்கவில்லை எனலாம். கடலோடும் கலைக்கு முன்னோடி தமிழனே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

தொல் தமிழரின் கடல் மேலாண்மையையும், மரக்கலங்களை உருவாக்கும் தொழில் நுட்பங்களையும், தமிழ்நாட்டினின்றும் மேற்கே குடியேறிய போனீசியர்கள் கடைப் பிடித்து வந்தனர். மேலை நாடுகளில் கடல் மேலாண்மையை நிலைநாட்டி, அவற்றில் வெற்றி கண்டவர்களும் போனீசியத் தமிழர்களே. கி.மு. 2000 ஆண்டுகளில், ஆப்பிரிக்காவைச் சுற்றி வலம் வந்தவர்களும், அட்லாண்டிக் கடலைக் குறுக்கே கடந்து, தென் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பியவர்களும் போனீசியர்களே.[849] அவர்களிடமிருந்தே கிரேக்கர்கள் கடலறிவைப் பெற்றனர். தமிழ்நாட்டுடன் கடல் வணிகம் மேற்கொண்ட அராபியர்களும் தமிழரிடமிருந்து கற்றவை ஏராளம். 2500 டன் ஏற்றிச் செல்லக் கூடிய மரக்கலங்களை உருவாக்கியவர்கள் தமிழர்களே. இராசேந்திர சோழனின் கடாரப் படையெடுப்புக்கு இம்மரக் கலங்களே பயன்படுத்தப் பட்டன. இத்தொழில் நுட்பத்தை, கி.மு. 4000 ஆண்டுகளிலேயே தமிழர் அறிந்திருந்தனர். இராசேந்திர சோழனுக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பே, பெரும்படையை கடலில் நடத்தி, பாரசீக வளைகுடா வழியே சென்று, பாபிலோனில் போர் புரிந்து, அந்நாட்டைக் கைப்பற்றி 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி செய்து, தமிழரின் நாகரிகத்தை மேலை

நை - நைதல் - நைந்து போதல். ஒன்று பலவாக மாறுவது.

நை - நொய் - நொய்தல். மனம் சுக்கு நூறாக உடைவதை நொந்து போதல் என்பர்.

நை - நெய் - நெய்தல் : நீர் வடிவில் சிதறுதல்.

எனவே, நெய்தல் என்பது பாறையின் துகள்களான மண்ணையும், மணலையும், நீர்த்துளிகளையும் குறிப்பது. கடலும், கடல் பரப்பில் உள்ள மணலும் நெய்தல் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுவன.

நெய்தல் : ஒன்று பலவாக உடைந்து போதல்.

நெய்தல் : பலவாக உடைந்தவற்றை ஒன்றாக்கி இணைத்தல்.

நெய்தல் என்ற ஒரு சொல், நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் உள்ள பொருளைத் தரும் சொல்லாகும். தமிழில் இவ்வாறான சொற்கள் ஏராளமாக உண்டு.

வளை, வானம், ஒளி போன்ற சொற்கள் இரண்டு வகையான, எதிர்மறையான பொருளைத் தரும் சொற்களாகும். இவ்வாறான சொல் மரபும், பொருள் மரபும் தமிழைத் தவிர வேறு மொழிகளில் இல்லை.

தமிழில் சொல்லப்படும் நெய்தல் என்ற சொல், திடப் பொருளையும் நீர்ப்பொருளையும் குறிக்கும். சமற்கிருதத்தில் நெய்தல் நிலத்தை, க்ஷீர பூமி என்பர். க்ஷீரம் என்பது நீர்த் தன்மையைக் குறித்தது. க்ஷீரம் - சீரம் என்று தமிழ்ப்படுத்தப் பட்டது. நீர்த்தன்மையுள்ள, நெய் (எண்ணெய்), சீழ், சீழும் குருதியும் கலந்த நீர் என்றவாறும் அறியப்படும்.

நீர் என்பதே, க்ஷீர் எனத்திரிந்தது என்க.

மற்ற நிலங்களில் மலர்களாலும், மரத்தாலும் நிறத்தாலும் (பாலை) அறியப்பட்ட சொற்கள், நெய்தலில் உடைந்து போதலைக் குறித்தது.

குமரிக்கண்டம் ஒரு தீவாகவே இருந்தது என்பர். கோண்டுவானாத் தீவு உடைந்து அல்லது உருமாறி குமரிக்கண்டமாக உருப்பெற்றது. ஆஸ்திரேலியா போன்று, நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட பெருநிலப்பரப்பாகக் குமரிக்கண்டம் இருந்தது என்பர். நாவலந்தீவு என்பதும் குமரிக் கண்டத்தையே குறித்தது. இவ்வாறு நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட குமரிக் கண்டத்தில், நீண்ட நெடிய கடற்கரைப் பகுதிகள் இருந்தன. மிகப்பரந்த நெய்தல் நிலப்பரப்பில்

செல்வதற்கான அமைப்புகளும் இருந்தன. பொதுக்கிணறு களும் குளங்களும், ஏரிகளும் இருந்தன. ஊர் அவை தேர்ந்தெடுக்கப்பட்டது. ஊர் மன்றங்கள் கூடி, சட்டத்தின் ஆளுமையை நிறைவேற்றின. ஊர் மன்றங்கள் ஊரின் நலத் திட்டங்களை நிறைவேற்றின. நடுவர் மன்றங்கள் பிணக்கு களுக்குத் தீர்ப்பு வழங்கின. இசை, நாடகம் போன்ற பொழுது போக்குக் கலைகளும், கலை விழாக்களும் நிகழ்வுற்றன. அதற் கான அரங்குகள் இருந்தன. இன்னோரன்ன வளர்ச்சிகளால் பொலிவுற்றிருந்த நகரின் புறத்தோற்றத்தை, நகரிகம் என்றனர். அது நாகரிகம் என பிற்காலத்தில் அழைக்கப்பட்டது.

தலைவன் தலைவியைக் கொண்ட இல்லம், ஆண் பெண் பிள்ளைகள் என அமைந்த குடும்பம் ஒரூரின் முதல் அலகாகக் கருதப்பட்டது. தலைவன் தலைவியின் களவொழுக்கம், கற்பொழுக்கம், அக்காதலரிடையே உள்ளக் கிளர்ச்சிகளை ஊக்குவித்தன. காதலர்கள் தாம் விரும்பியவாறு மணத்தால் இணைந்தனர். இருவருக்கிடையே அன்பும், காதலும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பிள்ளைகளைப் பேணி வளர்த்தனர். அவர் கள்பால் அன்பு செலுத்தினர். உறவினர்களை அரவணைத் தனர். விருந்தோம்பல் இல்லறத்தின் சிறப்புக்குரிய நிகழ்வாக இருந்தது. வந்த விருந்தினரை மகழ்வோடு அனுப்பிவைத்து, வரும் விருந்துக்காகக் காத்திருந்தனர். இவ்வாறு இல்லம், உள்ளம் தொடர்பான அன்பின் முதிர்ச்சியே பண்பாடு எனப் பட்டது. தமிழர்கள், நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். மருதநிலம் வளர்ந்து, நாட்டின் பெருமைகளை உயர்த்தியது.

நெய்தல் நிலம்[848]:

கடலும் கடலைச் சார்ந்த இடங்களும் நெய்தல் எனப்படும். நெய்தல் என்றால் பின்னுதல், பாவுதல், முடைதல் என்று பொருள்படும். கெட்டித் தன்மையுள்ள ஒரு பொருள் பல்வேறு துகள்களாக உடைவதையும் நெய்தல் என்பர். நைதல் என்றும் நொய்தல் என்றும் கூடச் சொல்லப்படும். மாவை நைய அறைத்தல், தவசங்களில் நொய்களைப் பிரித்தல் போன்ற பணிகளில் பயன்படுத்தப்படும் சொற்களை ஒப்பு நோக்குக. விதைகளிலிருந்து எடுக்கப்படும், பிழியப்படும் சிறு கூறுகளையும் நெய் என்பர். அது நீர் வடிவில் இருக்கும். எனவே, நெய்தல் என்ற சொல் நை என்ற மூலச் சொல்லின் நீட்சியாகும்.

ஓமை, கரும்பு, கருவிளை, கவலை, கள்ளி, காஞ்சி, காந்தள், காயா, குரவம், குருந்தம், குவளை, குளவி, குறிஞ்சி, குன்றி, கூதளி, கொறுக்கை, கொன்றை, கோங்கு, சந்தனம், சிலை, சேம்பு, ஞாழல், ஞெமை, தடா, தாமரை, தாழை, தாளி, தினை, நரந்தம், நெய்தல், நெருஞ்சி, நெல், நெல்லி, நொச்சி, பகன்றை, பஞ்சாய், பயறு, பருத்தி, பலா, பலாசு, பவழம், பனை, பாதிரி, பிடா, பித்திகம், பிரம்பு, பீர்க்கு, புன்கு, புன்னை, மரல், மராம், மருதம், மாணை, மா, மிளகு, முல்லை, முள் முருங்கை, முள்ளி, மூங்கில், யா, வரகு, வழை, வள்ளி, வாகை, வெட்சி, வேங்கை, வேம்பு என விரியும்.

விலங்குகள்:

அணில், ஆடு, ஆமான், ஆமை, எருமை, எலி, எறும்பு, ஒந்தி, கடமா, குதிரை, குரங்கு, செந்நாய், தவளை, நண்டு, நாய், நீர்நாய், பசு, பல்லி, பாம்பு, புலி, மரை, மான், மீன், முதலை, யானை, வருடை, வரையா, வெருகு என விரியும்.

பறவைகள்:

அன்றில், அன்னம், எழால், கணந்துள், காக்கை, கிளி, குயில், குருவி, குறும்பூழ், கூகை, கொக்கு, கோழி, நாரை, நுளம்பு, பருந்து, புறா, மகன்றில், மயில், யானையங் குருகு, வங்கா, வண்டு, வெளவால்.

மருத நிலத்தூர்கள் குறிச்சி, காடு, குடி, ஊர், கரந்தை என்ற பெயர்களில் முடியும். பொதுவாக மருத நிலம், ஆறுகளால் வளமை பெற்றவை. ஆறு, நகர் என்னும் சொல்லால் அக்காலத்தில் அழைக்கப்பட்டது. நகர் - நகர்தல் என்ற பொருளில் ஆறு சொல்லப்பட்டது. ஆற்றங்கரைகளில், மக்களின் குடியிருப்புகள் மிகுந்து காணப்பட்டன. ஆற்றங் கரைகளையொட்டி, நீர் வளமும் நிலவளமும் செறிந்து காணப்பட்டன. ஆற்றங்கரையின் குடியிருப்புகள் ஊர் எனப் பட்டன - ஊர், ஊர்ந்து, நகரமாயிற்று. பெருங்குடியிருப்பு நகர் எனப்பட்டது. நகரும் நகர்ந்து, மாநகரமாயிற்று.

நகர் என்ற ஆற்றின் கரைகளில் அமைந்திருந்த பேரூர்கள், நகர் என்றே அழைக்கப்பட்டன. நகரில் குடியிருந்த மக்கள் தங்கள் இல்லங்களை அழகுற அமைத்துக் கொண்டனர். வீடுகள் காற்றோட்டமுள்ளவைகளாக கட்டப்பெற்றன. அகலமான தெருக்களும், தெருக்களின் ஓரத்தில் கழிவு நீர்

நெல், கரும்பு, வாழை, வெற்றிலை ஆகியவை மருதநிலப் பயிர்களாகும். தலைவன் - தலைவி, உழவன் - உழத்தி, வாணன் - வாணி போன்றவை மருதநில மக்களைக் குறிப்பவை.

சங்க இலக்கியங்களில் குதிரையைப் பற்றிய செய்திகள் உள்ளன. மருதநில மக்களே குதிரைகளைப் பயன்படுத்தினர். குறிப்பாக மன்னனும் மன்னனைச் சார்ந்தவர்களும் மிகுதி யாகப் பயன்படுத்தினர். குதிரை, புரவி, பரி என்றவாறு அழைக் கப்படும் இவ்விலங்கின் பயன்பாட்டை தமிழர்கள் அறிந்திருக் கவில்லை என்று கருதப்படுகின்றது. தமிழ்நாட்டில் அறியப் பட்ட காட்டுக் குதிரைகள், உயரத்தில் குறைந்த மட்டக் குதிரைகளே என்பர். மன்னர்களின் பயன்பாட்டிற்கு மேலை நாடுகளில் இருந்தே புறவிகள் இறக்குமதி செய்யப்பட்டன. குளிர் - நாடுகளில் இருந்த புரவிகள், உயர்ந்தும், ஆற்றலுள் ளவைகளாகவும் இருந்தன. புரவிகளே தமிழ்நாட்டிலும் சிந்து வெளியிலும் இல்லை என்றும் சிலர் கூறுகின்றனர்.

செல்வர்களே அவ்விலங்கைப் புரந்ததால், புரவியென்றும், குதித்து ஓடுவதால் குதிரையென்றும், காற்றிலும் விரைந்து செல்வதால் பரியென்றும் சொல்லப்பட்டன.

அஸ்வ என்று சமற்கிருதத்தில் புரவியை அழைப்பர். ஸ்வ என்பது தன்னிலே தோன்றுவது அஸ்வ என்பது பிறரால் அல்லது கடவுளால் படைக்கப்பட்டது அல்லது பக்குவப் படுத்தப்பட்டது.

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் புரவியை ஊர்தியாகப் பயன்படுத்த அதற்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இப்பொருளில்தான் அஸ்வ என்ற சொல் அறியப்படும்.

தமிழகத்தின் பகுதிகள், ஏறக்குறைய ஒரே வெப்ப நிலையைக் கொண்டிருப்பதால் மரங்கள், செடி கொடிகள், விலங்குகள், ஊர்வன, பறப்பன போன்ற இனங்கள், அனைத்து நிலங்களிலும் கூடக் குறையக் காணப்படும். இவற்றைத் திணை மயக்கம் என்பர். தமிழ் இலக்கியங்கள் தரும் செய்திகளின்படி, தமிழ்நாட்டின் உயிரினங்கள் வருமாறு:[847]

மரம், செடி, கொடிகள்: அகில், அசோகு, அடும்பு, அத்தி, அரலை, அவரை, அறுகு, ஆம்பல், ஆல், ஆவிதை, இருப்பை, இற்றி, ஈங்கை, உகாய், உழுந்து, எருக்கு, எள், ஐயவி, ஐவளம்,

முயல் என்ற சொல்லை, முசல் என்று நாட்டுப்புறங்களில் கூறிவருகின்றனர். முயல் என்பதற்கு முயற்சி செய் என்ற பொருளே விஞ்சி நிற்கிறது. அது முயலுக்குப் பொருத்த மானதா என்பது ஒரு கருத்து. முயலின் உடலில் காணப்படும் முசுமுசுப்பான மயிர், முயலுக்கு அழகைக் கொடுக்கிறது. முசுமுசுப்பு என்ற பொருளில் முசல் எனக் கூறுவதே சரியானது என்று சிந்திக்கலாமா?

குறிஞ்சி முல்லைக்கு அடுத்து விரிவு கண்ட குடியிருப்பு மருதநிலமாகும். முன்னவை இரண்டிலும் நிலையான குடியி ருப்புகள் இல்லை. மருத நிலத்தில் நிலையான குடியிருப்பு களும், குடியிருப்புகளைச் சுற்றி தனியுடைமை பெற்ற வயல் களும் பெருகின. மாந்த நாகரிகத்தின் முழு வளர்ச்சியையும் மருத நிலத்தில் காணலாம். ஊரவை, நாட்டவை, அரசு, சட்டங்கள், பாதுகாப்பு, மொழி வளர்ச்சி, இலக்கியங்கள் ஆகியவை மருத நிலத்தின் படைப்புகளாகும். குறிஞ்சி முல்லை மக்களின் வாழ்க்கை முறையின் தொடர்ச்சியே மருத நில நாகரிகம் எனக் கூறுவதும் பொருந்தும். முன்னிரெண்டு நிலங்களில் பெற்ற பட்டறிவு, மருதத்தில் மலர்ந்தது. மருத நிலப் பயன்பாட்டில் முதலிரு நிலங்களின் தாக்கங்களும் உண்டு. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில் ஆகியவை மருதநிலத்தின் வளர்ச்சி நிலைகளாகும். வீட்டு விலங்குகளான ஆடு, மாடு, கோழி, நாய், பன்றி என விரியும் அவ்விலங்குகள் யாவும் குறிஞ்சி முல்லை நிலங்கள், மருதத்திற்கு தந்த கொடை களே. மருத நிலத்தின் சிறப்புக்குரிய விலங்காக எருமை கருதப்படுகின்றது. இதுவும் கூட, காட்டெருமையின் வழியில் வந்ததே.

இரு + மெய் என்ற சொற்கள், இருமெய் - இருமை - எருமை என்றவாறு சொல்லப்பட்டது. இருமெய் என்பதற்கு கருமையான உடல் என்பது பொருளாகும். எருமை என்பதின் பழஞ்சொல், இருமெய் என்பதே. மைசூரைச் சுற்றியுள்ள மருதநிலங்கள் பற்றியே, அது இருமெய்யூர், இருமையூர், எருமையூர் என்று சொல்லப்பட்டது. மையூர் - மைசூர் என்றானது.

குறிஞ்சி, முல்லை நிலங்களின் மரங்களும் மருதத்தில் வளர்ந்தன. ஆல், அத்தி, இற்றி (இத்தி என்பர்), காஞ்சி (வயல் களுக்கு அருகில் வளரும் மரம்) வாழை, மாமரம் என விரியும்.

பொருளைத் தருவது. வேய் - வேயல் - வயல் எனப்பட்டது. நீர்வளம் மிகுந்த நிலத்தை வயல் என்பர். அது நன்றாக வேளாண் பணிகள் செய்து முடிக்கப்பட்ட நிலமாகும். நன்றாகச் செய்தல் என்பதே நன்செய் எனப்பட்டது. புதர் களையும் முட்செடிகளையும் கொன்று (அழித்து), வேளாண் மைக்கு உட்படுத்தும் நிலங்கள், வானம் பார்த்த நிலங்களாகக் கருதப்படும். கொல்லி எடுத்தலால் அது கொல்லை எனப்பட்டது. நன்றாகச் செய்ய இயலாத புன்மைத் தன்மை கொண்டதால் அது புன்செய் எனப்பட்டது. பெரும்பாலும் நன்செய் நிலங்கள் மருதத்திலும் புன்செய் நிலங்கள் முல்லையிலும் காணப்படும். மருதம் என்ற மரம், மிகுந்து வளர்ந்துள்ளதால், அந்நிலம் மருதநிலம் எனப்பட்டது. மருத நிலத்து அம்மரங்கள், செந்நிறமான பூக்களையுடையவை.

மரு என்ற சொல்லிற்கு மணம் என்ற பொருளும், சிவத்தல் என்ற பொருளும் உண்டு.

மருக்கொழுந்து மணம் பரப்புதலையும், மருதோன்றி சிவப்புத் தன்மையைத் தருவதிலும், இச்சொல்லுக்கான பொருள் விளங்கும்.

மதுரை என்ற நகரின் பெயரை, அந்நகரைச் சுற்றியுள்ள நாட்டுப்புற மக்கள் மருதை என்று கூறி வருகின்றனர். அதன் உண்மையான பெயர் மதுரையா? மருதையா?

மதுரையே என்று கூறுவோர், அது மது என்ற சொல்லின் நீட்சியே என்பர். மதுவைப் போன்ற மகிழ்வை அளிக்கும் ஊர் என்ற விளக்கத்தை அளிக்கின்றனர். மதுவை முன்னிறுத்தி ஊர்ப் பெயர்களை வைப்பார்களா என்றும் சிலர் வினா வெழுப்புகின்றனர். மதி என்ற பெயர்க் காரணமும் உண்டு.

மருதநிலத்தின் மையத்தில் அமைந்த ஊர் மருதை என்பதே சரியான சொல் என்றும் சிலர் கூறுகின்றனர். மருதை, மருதூர், மருதுபாண்டியர், மருதநாயகம், மருதமுத்து போன்ற பெயர்களைச் சுட்டி மருதை என்றே அவ்வூர் அழைக்கப்படல் வேண்டும் என்பதும் சிலரது கருத்து. பொதுவாக, நாட்டுப் புறங்களில் பயன்படுத்தப்படும் பல சொற்களைக் கொச்சை யானது என்று கருதுகின்றனர். நல்ல தமிழ்ச் சொற்கள் இன்றும் நாட்டுப்புறங்களில் தான் காணப்படுகின்றன, பேசப் படுகின்றன.

என்று கூறுவர். இது மேயும் போது நிலத்தைக் தொட்டு நிற்கும். கால்நடைகளின் கழுத்தில் சிறு மணி யொன்றைக் கட்டி வைப்பர். இரவுக் காலங்களில் அம்மணியோசை, தலைவியின் தூக்கத்தைக் கெடுக்கும். கால்நடைகளை அடைக்கும் இடத்தை பட்டி, தொழுவம், மன்று, மன்றம் என்றும் அழைப்பர்.

கார் முகிலைக் கண்டால், இடையர்கள், மகிழ்வர். தங்களது கால்நடைகளுக்கேற்ற நல்லுணவை மழையாகத் தரும் கார்முகில்கள், ஆயர்களின் வணக்கத்துக்குரியதாயிற்று.

முல்லை நிலத்துக்குரிய மரங்களில் கொன்றை சிறப் பானது. இம்மரம் மலரத் தொடங்கும்போது, கார் காலம் நெருங்கிவிட்டதை இடையர்கள் உணர்வர். இம்மலர் மாலை போல் பூத்துக் குலுங்கும். கொடியிணர் என்று இப்பூங் கொத்து சொல்லப்பட்டுள்ளது.

நெருஞ்சி, முல்லை நிலத்துக்குரியது. இதன் மலர் சிறுத்து கண்கொள்ளக் காட்சியாகப் பரவி இருக்கும். மலரால் கவரப்பட்டவர்கள், அதன் முள் குத்துவதால் துன்புறுவர். தொடக்கத்தில் இனிமையாகப் பழகி, பிரிதலில் துன்பத்தைத் தரும் தலைவனை உருவகப்படுத்திப் புலவர்கள் பாடுவர்.

நிலத்தின் பெயரால் அழைக்கப்படும் முல்லை மலர் பூக்கத் தொடங்கியதும், கார்காலம் வந்துவிட்டதைத் தலைவி உணர்வாள். முல்லை மலரைப் பெண்கள் விரும்பிச் சூடுவர். தலைவன் நாள் கடந்து தலைவியைக் காணவரும்போது, முல்லைக் காட்டில் பூத்திருக்கும் மலர்கள், தலைவியை இப்படி ஏமாற்றலாமா என்று, வெண்பற்களைக் காட்டிச் சிரிப்பது போல் இருக்கும். மகளிர் பல்லும் பூனையின் பல்லும் விண்மீன்களும் முல்லையின் அரும்பிற்கு உவமையாகச் சொல்லப்படும். ஆணின் உடலும், பெண்ணின் நெற்றியும் முல்லை மலரின் மணத்தையுடையன என்று கூறுவர்.

முல்லுதல் என்பதற்கு முகிழ்த்தல் - முகிழ்தல் என்று பொருள். ஐ என்பது அழகைக் குறிக்கும். முல் + ஐ என்ற சொற்களே, முல்லை எனப்பட்டது.

மருத நிலம்[846]:

வயலும் வயலைச் சார்ந்த நிலங்களையும் கொண்டது. வேய்தல் என்பது, பரந்த, மேடு பள்ளமில்லாத என்ற

மந்தையின் எண்ணிக்கையில், செல்வத் தகுதி அறியப் பட்டது. இதனால் கால்நடைகளைப் பெருக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர். குமரிக் கண்டத்து மக்கள், இயற்கை யோடு இணைந்த கருவுறும் உத்திகளைக் கொண்டு, தமது மந்தைகளைப் பெருக்கினர். குமரிக்கண்ட அழிவிற்குப் பிறகு, மேலை நாடுகளில் குடியேறிய தமிழர்கள், அங்கும் முல்லை நில வாழ்க்கையை மேற்கொண்டனர். கால்நடைகளைப் பெருக்கும் உத்திகளைக் கையாண்டு, அம்முயற்சியில் வெற்றி கண்டனர் என்ற செய்திகளை, விவிலியம் விளக்குகின்றது. இம்மக்கள் குழுக்களாகச் சுற்றித் திரிந்தனர். அதனால் இவர்கள் நாடோடிகள் என்றும் அழைக்கப்பட்டனர். கால் நடைகளைப் பெருக்குவதில் கவனம் செலுத்துவர். முதலாளித் துவம் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட கொள்கை உருவான இடம் முல்லை நிலமே.

ஆனைந்து என்று சொல்லப்படும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் எனப்படும் பொருட்கள் எப்போதும் இவர்களிடம் இருக்கும். முல்லை நிலத்துப் பெண்களை ஆய்ச்சியர் என அழைப்பர். கோழி கூவும் காலை வேளையில் எழுந்து, புரையிடப்பட்ட பாலைக் கடைவர். மோர், வெண்ணெய் எனப் பிரிப்பர். அவைகளைப் பிற நிலங்களுக்கு எடுத்துச் சென்று விற்பர். நெல்லையும் மீனையும் உப்பையும் பண்டமாற்றிக் கொண்டு வருவர். பால்சோறு இவர்களது சிறப்பான உண்டாகும். மலையடிவாரங்களில் வரகு போன்ற தவசங்களை விதைப்பர். உழுந்து எனப்படும் பயிரையும் வளர்ப்பர். முன்பனிக் காலத்தில் உழுத்தங்காய் உதிரும். உழுந்தை மான் கூட்டங்கள் வந்து தின்று அழிக்கும். மான்களை விரட்டக் காவல் செய்வர். செம்புலமான முல்லை நிலத்தில் வரகு நன்றாக வளரும். வரகுக் கதிரை அரிந்த நாள், "குறைத்தலைப் பாவை" என சொல்லப்பட்டுள்ளது.

ஆனிரை முல்லை நிலத்துக்குரியது. காலையில் மேயச் சென்ற பசு மாலையில் திரும்பி வரும். வரும்போது தனது கன்றை நினைத்த பசுவின் மடியினின்றும் பால்சுரந்து நிலத்தில் சிதறும். தாயை எதிர்நோக்கிக் கன்றும் காத்திருக்கும். தாய் - கன்று உறவை, தலைவன் - தலைவியோடு ஒப்பிட்டுப் புலவர்கள் பாடுவர். பசு அருகம்புல்லை விரும்பியுண்ணும். பசுவின் தோலுக்குக் கீழே உள்ள தசை மடிப்பினை அணல்

தொழிலாகக் கொண்டிருந்தனர். கால் நடைகளுக்குத் தேவைப் படும் உணவினைத் தேடி, அவற்றை ஓட்டிச் செல்வர். நிலையான குடியிருப்பை அவர்கள் கொண்டிருக்கவில்லை. கார்காலத்தில் முல்லை நிலம் செழித்திருக்கும். பெரும்பாலும் செம்மண் பகுதிகளைக் கொண்ட முல்லை நிலத்தை, செம்புலம் என்றும் அழைப்பர்.

இந்நிலத்தில் பெரிதும் காணப்படும் முல்லை என்ற மலரால், இந்நிலம் அழைக்கப்பட்டது. முல்லை நிலம் நாகரி கத்தின் நாற்றங்காலாகும். தனியுடைமை என்ற கொள்கை முல்லை நிலத்திலேயே உருவானது. கால்நடைகளின் எண்ணிக் கையால், ஒருவன் செல்வனாகக் கருதப்பட்டான். இந்நிலத்து மக்களை இடையன் என்றும் ஆயர் என்றும், கோனார் என்றும் கூறுவர். குறிஞ்சி வாழ்க்கைக்கும் மருதநில வாழ்க் கைக்கும் இடைப்பட்ட நிலவாழ்க்கையை இவர்கள் மேற் கொண்டிருந்ததால், இவர்கள் இடையர்கள் எனப்பட்டனர் என்று கூறுவர். ஆய்தல் என்பது இலைகளைப் பறித்தல் என்றும் அறியப்படும். ஆய்தலால், அவர்கள் ஆயர் எனப்பட் டனர். (ஆ = கால் நடைகள்) கோ என்ற பசுவை வளர்த்ததால் கோனார் எனப்பட்டனர். வடஇந்தியாவில் அறியப்படும் யாதவ் என்ற மரபினர், முல்லை நிலத்து மக்களே. ஆடு, யாடு என்றும் சொல்லப்படும். யாட்டை வளர்த்தவர்கள் யாடவர்கள் என்று சொல்லப்பட்டனர். யாடவர் - யாதவ் எனத்திரிந்தது.

கால் நடைகளை இரவில், பாதுகாப்பான வேலிகளை அமைத்து, அவற்றில் அடைப்பர். இதற்குப் பட்டி என்று பெயர். தம்மிடமுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை அறிவதற்கு, தலைக்கு ஒரு சிறு கூழாங்கல்லை வைத்திருப்பர். அக்கற்களை ஒரு பையில் வைத்திருப்பர். பட்டியில் அடைக் கப்படும் கால்நடைகள் ஒவ்வொன்றுக்கும், ஒரு கூழாங்கல்லை எடுத்து வைப்பர். கற்கள் கூடுதலானால், கால்நடை வழி தவறி விட்டதைத் தேடிக் கண்டுபிடிப்பர். சரியான எண்ணிக்கை வந்தால் அமைதியடைவர். கற்கள் குறைந்தால், புதிய வரவுகள் வேறிடத்தினின்றும் தம் மந்தையில் இணைந்து கொண்டதை உணர்வர். எண்களின் தொடக்கம் முல்லை நிலமே. எண் களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னோடிகளாக இருந்தவர் களும் முல்லைநிலமக்களே.

எந்நில மருங்கில் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்தவாகும். – அகத்திணை, 19.

மரங்கள்:

குறிஞ்சி நிலத்தின் மரங்களில் அகிலும் ஒன்றாகும். அகிலையும் சுட்டு தினைப் புனத்தில் உருமூட்டுவர். அதனால் எழும்புகை, வெண்ணிறமாக இருக்கும். மகளிர் நீராடிய பின் தம் கூந்தலுக்கு அகில் புகையைக் காட்டி உலர்த்துவர். அசோடு, அரலை, (அரளி, அலரி என்றும் கூறுவர்) ஆல், அத்தி, சந்தனம், சிலை, சேம்பு, பலா, கடம்பு, மூங்கில், வேங்கை என விரியும். நெல்லி மரம் பாலைக்கும் குறிஞ்சிக்கும் உரியது.

செடிகொடிகள்:

அவரை, அறுகு, ஆம்பல், ஈங்கை, குன்றி, கொறுக் காந்தட்டை என்றவாறு விரியும். மாணைக் கொடி மிக நீண்டு வளர்ந்து, பாறைகளில் படரும்.

மலர்கள்:

கருவிளை, காந்தள், குவளை, குளவி (மலை மல்லிகை), குறிஞ்சி, கூதளி என விரியும். குறிஞ்சிப்பாட்டில் வரி 61 முதல் 95 வரையிலான, கபிலர் கூறும் குறிஞ்சி நில மலர்களின் பட்டியலைக் காண்க.

விலங்குகள்:

புலி, யானை, மான், காளை, மலைப்பசு, ஆடு, பூனை யென விரியும்.

கடவுள்:

சேயோன் என்னும் சிவனும், சேயன் என்னும் முருகனும்.

முல்லை நிலம்[845]:

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்படும். பொதுவாக, மலையின் அடிவாரப் பகுதியே முல்லை எனப்படுகின்றது. குறிஞ்சியில் தோன்றிய மக்கள் இனம், காலப்போக்கில், மலையை விட்டுக் கீழ் இறங்கி, காடுகளிலும், புல்வெளிகளிலும் வாழத் தலைப்பட்டனர். முல்லையில் வாழ்ந்த மக்கள் கால்நடைகளை வளர்ப்பதையே

மரத்திலுள்ள கணுக்களை (கண்களை)க் கழிக்காமல், சாற்றி ஏறும் முறையாகும். இப்போதும் இந்தக் கண்ணேணிகளை இந்தோனேசியக் காடுகளில் வாழும் பழங்குடி இனத்தவர் பயன்படுத்தி வருகின்றனர். தேனையும் கடவுளுக்குப் படைப்பர். கடம்ப மரம் அம்மக்களுக்குத் தெய்வம் குடியிருக்கும் மரமாக இருந்தது. கடம்ப மரத்தில் முருகன் குடியிருப்பதாக நம்பினர். கடம்ப மரத்தைச் சுற்றி மேடை அமைப்பர். அம்மேடை மன்றம் என்று சொல்லப்பட்டது. தீயோரிடமிருந்தும் கொடிய விலங்குகளிடமிருந்தும் தம்மைக் காக்குமாறு வேண்டுவர். குறவர்கள் தம்மக்களுக்குப் புலிப்பல்லைக் கோர்த்த தாலியை அணிவிப்பர். (தாலி என்பது கயிற்றைக் குறித்த சொல்லாகும். விலங்குகளின் தோலை அல்லது நரம்பை, கயிறு போல் அறுத்து அதில் விலங்குகளின் பற்கள், நகங்கள் இவற்றை தலைவன் தலைவிக்குப் பரிசாக அளிப்பான். அது கயிற்றை விட வலிமையாக, அறுந்துபடாமல் இருக்கும். தோலினால் செய்த அணி தோலி என்றே சொல்லப்பட்டது. பிற்காலத்தில் தாலி என்று மருவி, இன்னும் பிற்காலத்தில் பெண்ணின் மங்கல அணியாயிற்று). குறிஞ்சி நிலத்து ஊர்கள் சிறுகுடி, பாக்கம் என்று அழைக்கப்பட்டன. கள்ளுண்டு மகிழ்ந்திருந்த மக்கள் வாழ்ந்திருந்த ஊரை, “நறவு மலிப் பாக்கம்” என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன.

குறிஞ்சி நிலத்துக்கு வளமையைத் தருவது அருவிகளே. இரவில் பெய்யும் கடும் மழையால் அருவிகளில் வெள்ளம் ஏற்படும். அருவின் கரையோரங்களில், நீர் வளத்தால் காந்தள் மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கும். வேங்கை மரங்கள் மிகுதி யாக வளரும். அருவி நீரை மடைமாற்றி, ஐவனம் என்ற நெல்லை விளைவிப்பர். இந்த அருவிகள் பலாச் சுளைகளையும், வாழைப் பழங்களையும், காந்தள் மலர்களையும், கொறுக்குத் தட்டைகளையும் மேலிருந்து கீழ் நோக்கி அடித்துக் கொண்டு ஓடிவரும். இதுபற்றிய செய்திகளைக் குறுந்தொகை விளக்கு கின்றது.

ஐவகைத் திணைக்குரிய மரங்கள், மலர்கள், செடி கொடிகள் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் காணப் படுகின்றன. [844] சில, திணைகளில் கலந்தும் காணப்படும். இதனைத் திணை மயக்கம் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் நடுப்பகுதிகளில் உள்ள, மக்களுக்கு. குறிஞ்சித் தமிழரே விதைநெல்லையும் கொடுத்து, வேளாண் முறைகளையும் சொல்லிக் கொடுத்தனர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவற்றோடு பருத்தி, மலை அவரை போன்ற பயிர்களும் அறியப்பட்டுள்ளன. உணவிற்காக தினையையும், தினையோடு கலந்து தேனையும் உண்டனர். தேனும் தினை மாவும் குறிஞ்சி மக்களின் சிறப்பான உணவாகும். மொச்சப் பயிறும் உணவாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. பருத்தியி னின்றும் நூல் எடுத்து ஆடைகளை நெய்து கொண்டனர்.

தினைக் கொல்லையில் பரண்கள் அமைத்து, பறவை களின் அழிவினின்று காப்பர். தினையை உண்ண வரும் யானை களைக் கவண் எறிந்து விரட்டுவர். இரவில் தினைப் புனத்தைக் காப்பவர்கள், தீயை மூட்டி, கொள்ளிக் கட்டைகளை வைத்திருப்பர். விலங்குகள் தீயைக் கண்டு விலகிவிடும். பலா மரத்தில் பழுத்திருந்த பலாக் கனிகளை குரங்குகள் கடித்துக் குதறிவிடாதபடி, வலைகளை அப்பழங்களின் மீது கட்டுவர். பகல் வேளையில் பெண்களும் பரண்களில் அமர்ந்து தினைப் புனம் காப்பர். கவணில் கல்லை வைத்து எறிவர். கிளிகள் போன்ற பறவைகளைத் துரத்துவர். மலையருவிகளில் குளித்து மகிழ்வர். சுனைகளில் பூத்துக் குலுங்கும் மலர்களைச் சூடிக் கொள்வர்.

வேட்டுவர் கூட்டமாகச் சென்று வேட்டையாடுவர். சீழ்க்கை அடித்து ஒலிகளை எழுப்பியும், கற்களை வீசியும், புதர்களில் மறைந்துள்ள விலங்குகளை உசுப்பி எழுப்புவர். அவ்வேட்டுவர்கள் சிறிதும் இரக்கமில்லாத வன் நெஞ்சர்கள். ஆண் மானிடமிருந்து பெண்மானைப் பிரித்துக் கொல்வர். மான் ஊனைச் சுட்டு உணவாகக் கொள்வர். அவர்களது உணவுப் பட்டியலில் கவலைக் கிழங்குகளும் சிறப்பிடத்தைப் பெறும். நிலத்தை அகழ்ந்து கவலைக் கிழங்குகளை எடுப்பர். கள்ளும் அவர்களது தேவைகளில் ஒன்று.

சங்க இலக்கியங்களுக்கு உரையெழுதியவர்களின் செய்தி களின் படி, முருகனைக் குறவர்கள் வழிபடுவர். தினையரிசிச் சோற்றில், ஆட்டுக் கறியைச் சமைத்து, அரளி மலர்களைப் படைத்து வழிபடுவர். உயர்ந்த இடங்களில் உள்ள பெரிய தேன் கூடுகளை அழிப்பர். இதற்கு கண்ணேனி என்ற ஏணியைப் பயன்படுத்துவர். கண்ணேணி என்பது, ஒற்றை மூங்கில்

மாகக் கருதப்படுகிறது. இமய மலையிலுள்ள கையிலை ஆயம் (உள்ளங்கை அளவுள்ள ஆல இலை), அக்கடவுள் ஒரு காலத்தில் ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்ததை நினைவூட்டுகிறது.

மேற்கண்ட செய்திகளின் படி, உலகிலுள்ள சமயங் களுக்கு தாயகமாய் விளங்கியது குறிஞ்சி நிலமே எனலாம். குறிஞ்சி நிலத்தைப் பற்றிப் பாடியுள்ள சங்கப்புலவர்களில் கபிலர் சிறப்புக்குரியவராவர். ஐந்திணைக் காதல் வாழ்க்கை, மலையின் இயற்கை அழகு, அந்நிலத்து மக்களின் வாழ்க்கை நெறி, அந்நிலத்துக்குரிய புணர்தல் என்ற உரிப்பொருளில் பல்வேறு துறைகள், கபிலரின் குறிஞ்சிப் பாட்டில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக மலைநாட்டு மன்னர்களான அகுதை, இருங்கோவேள், ஓரி, செல்வக் கடுங்கோ வாழியாதன், சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, நள்ளி, மலையமான் திருமுடிக் காரி, மலையன், விச்சிக்கோன், வேள் பாரி, வையாவிக் கோப் பெரும் கோன் ஆகியோரைப் பற்றிப் பாடியுள்ளார். இவை யன்றி கொல்லி மலை, பறம்பு மலை, முள்ளூர் மலை எனவும் விரியும். தமிழகத்தின் குறிஞ்சி நிலத்தை கபிலரைப் போல் வேறு எவரும் சிறப்பித்துக் கூறவில்லை. உலகின் முதல் தாய்வர வியல் அறிவியலாளராக (Botanical Scientist) கபிலர் அறியப்படு கிறார்.

இன்று மரம் செடி கொடிகள், மலை மரங்கள், பூக்கள் போன்ற இயற்கையின் வளங்களை ஆய்வு செய்வோருக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டு குறிஞ்சி நிலத்தில் அறியப்பட்ட பூக்களின் பட்டியலைக் கபிலர் தந்துள்ளார். கபிலரே மலைவள ஆய்வில் மிகச்சிறந்த அறிஞராகவும், அறிவியலாளராகவும் இருந்துள்ளார் என்பதை அவரது பூக்களின் பட்டியல் எடுத்துக் காட்டுகின்றது.[842] (இன்று கபிலர் கூறிய பூக்களை அடையாளம் கண்டு, அப்பூக்களின் வண்ணப் படங்களோடு அவற்றின் பெயர்களையும் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர்.)

குறிஞ்சி நிலத் தொழில்:[843]

காடவர், காளவர், குறவர் போன்ற மலைமக்கள், மரங் களை வெட்டி, அவற்றைத் தீயிட்டுக் கொளுத்துவர். சுடப் பட்ட நிலப்பகுதிகளில் தினை என்ற தவசங்களை விதைப்பர். ஐவனம் என்ற நெல், மலைப் பகுதிகளில் பயிரிடப்பட்டது.

குறிஞ்சி நிலத்தாரை கானவர், குறவர், புனவர் என அழைப்பர். மகளிரை குறத்தியர் கொடிச்சியர் என அழைப்பர். குறிஞ்சி நிலத்தலைவன் நாடன் எனப்பட்டான். நாடன் குழுத் தலைவனாகவே அறியப்பட்டான். நாளும் வேட்டையாடுவன் வேடுவன் வேடன், வேட்டுவன் எனப்பட்டான். இம்மக்களே உலகின் முதல் மக்களாவர்.

மலைகள் இல்லா நாடுகள் கூட இருக்கலாம். எதிர் காலத்தில் அந்நாட்டில் கூட மலைகள் தோன்றலாம். இமயமலையும் அவ்வாறு தோன்றியதே. குமரிக் கண்டத்தில் குமரி என்ற பெயரிலேயே பெருமலைத் தொடர் இருந்ததாகக் கூறுவர். இன்றைய செயற்கை மதியின் நிழல்படத்தில், அராபியக் கடலின் நடுவே தோன்றிய தடிப்பான கோடு ஒன்று தென்முனை வரை வடமேற்கு, தென்கிழக்காக நீண்டு செல்கின்றது. இதனை கடலுள் மாய்ந்த மலைத்தொடர் என்கின்றனர். குமரிக் கண்டத்திலிருந்த மேரு மலையும் குமரி மலையும் நீண்ட மலைத் தொடராய் இருந்தன. அம்மலைப் பகுதிகளிலிருந்து குமரி பஃறுளி போன்ற பேராறுகளும் பல சிற்றாறுகளும் மேற்கினின்றும் கிழக்காகப் பாய்ந்து குமரிக் கண்டத்தை வளப்படுத்தின. இன்று தமிழ்நாட்டில் அறியப் படும் மேற்கு மலைத்தொடர் அங்கு கிடைக்கும் பல்வேறு பாறைகள், அம்மலைத் தொடர் தோன்றி 20 மில்லியன் ஆண்டுகளாகின்றன எனக் கூறுகின்றனர். இமயமலையிலும் மூப்புடையது மேற்கு மலைத் தொடர். இது மேரு மலைத் தொடரின் ஒரு பக்க நீட்சியாக இருந்திருக்க வேண்டும்.

மேல் உரு என்ற சொற்களே மேரு எனச் சுருங்கின. உயரத்தில் வளர்ந்திருந்த பேருருவம் போன்ற மலை என்பதே, மேரு என்ற சொல்லிற்கான உட்பொருளாகும். இம்மேரு மலையில்தான் தமிழர்கள் வழிபட்ட முழுமுதற் கடவுளும், குறிஞ்சித் தலைவனுமாகிய தமிழ்த் தெய்வம் குடியிருந்ததாக கருதினர். குமரிக்கண்டம் அழிந்தபோது, அங்கிருந்து வெளி யேறி பல நாடுகளிலும் தமிழர்கள் குடிபெயர்ந்தனர். மேரு மலையும் கடலுள் மூழ்கியதால், குடியேற்ற நாடுகளின் உயரமான மலைகள் மேரு மலைகளாயின. எகிப்து நாட்டி லுள்ள சினை மலை (சினாய் என்று தவறாகக் கூறினர்)யில் கடவுள் குடியிருந்த வரலாறு விவிலியத்தில் காணப்படுகிறது. கிரேக்கத்தின் ஒளிம்பசு மலை, சேயுஸ் கடவுளின் உறைவிட

நிலங்களுக்குமான இயற்கைச் சூழல்கள் தமிழரின் தொன்மை நிலத்தில் இருந்தன. ஐவகைப் பிரிவினை என்பது குமரிக் கண்டத்திலேயே வழக்கில் இருந்தன என்பதை, அக்கண்டம் பற்றிய செய்திகளால் அறியலாம். குமரி என்ற சொல் சோற்றுக் கற்றாழை என்ற குறிஞ்சி நிலத்தின் குறுஞ்செடியைக் குறிக்கும் என்பர். அது நீரைத் தனது இலைகளில் தேக்கி, வீங்கிப் பெருத்து, கும் எனக் காட்சியளிக்கும். கும் என்ற வேரினின்றே, குமரி என்ற சொல் விரிந்தது. குமரி என்ற சொல்லிலிருந்தே குமரன் என்ற சொல் விரிந்தது. குமரன் என்பதற்கு வாளிப்பான உடல் கொண்ட, அழகிய தோற்றம் கொண்ட ஆணழகன் என்பதே பொருளாகும். மகன் என்ற பொருள் சமற்கிருதத் திரிபில் கிளைக்கப்பட்டது. குமரன் - குமார எனத் திரிந்தது. குமாரன் : மகன்.

தமிழரின் தொன்மை நிலமான குமரிக் கண்டம், ஒரு செடியின் பெயரால் அழைக்கப்பட்டது என்றும், அச்செடி அக்கண்டம் முழுவதும் செழித்து வளர்ந்திருப்பது என்பதும் ஒரு கருத்து. இந்த உருவகம், நிலத்துக்கும் பொருந்தி, வளமான நிலங்களைக் கொண்ட நாடு என்றவாறு, குமரிக் கண்டத்திற்குப் பொருள் கூறுவர்.

குறிஞ்சி:

மலையும் மலையைச் சார்ந்த இடங்களையும் குறிஞ்சி நிலம் என்பர். குறிஞ்சி என்ற மலர், அம்மலைப் பகுதிகளில் பூத்துக் குலுங்கும் அழகினைக் கருத்தில் கொண்டு, அந்நிலத்திற்கும் குறிஞ்சி என்றே பெயரிட்டனர். குறு என்ற சொல் சிறிய, குள்ளமான என்ற பொருளைத் தரும். சிறிய அளவிலான அப்பூ குறுஞ்சி - குறிஞ்சி எனப்பட்டது.[841]

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு – குறுந்தொகை 3:3

குறிஞ்சி நிலத்திலேயே மாந்தவினம் தோன்றியது என்பர். குறிஞ்சியில் வளர்ந்த மக்களுக்கு கனிகளும், தேனும், கிழங்குகளுமே இயற்கை தந்த உணவாயின. வேட்டையாடி விலங்குகளை உண்ணும் வித்தையையும் மாந்தன் கற்றுக் கொண்டான். கற்கத்தி, கற்கோடரி, கற்றுளி போன்றவை அவனுக்கு ஆய்தங்களாயின. நெருப்பின் பயனை இயற்கையிடமிருந்தே குறிஞ்சி மாந்தன் அறிந்தான். அதனைத் தான் விரும்பிய நேரத்தில் உருவாக்க முயன்று வெற்றி பெற்றதே மாந்தனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எனலாம்.

பதில்: அண்மையில் அறியப்பட்ட தொல்லியல் சான்றுகளின் மூலம், இந்தியத் துணைக் கண்டத்தில் பேசப்படும் தமிழ்மொழி, சிந்துவெளி நாகரிக மக்களாலும், சுமேரிய நாகரிக மக்களாலும் பேசப்பட்ட மொழி என்பதைக் கூறுவதற்கு இயலும். 10000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து பின் வறண்டு மறைந்து போன ஆறுகளைப் பற்றிய செய்திகளை தமிழ் இலக்கியங்கள் மேற்கோள் காட்டிப் பேசுகின்றன. உண்மையில், தமிழ்மொழியே சமற்கிருத மொழிக்கும், அனைத்து இந்திய - ஐரோப்பி மொழிகளுக்கும் வேராகவும் மூலமொழியாகவும் உள்ளது என்பதற்கான வாய்ப்புகள் மிகுதி.

The Mirror/ Question Time, dt. 9.7.2012.

Question: What is the world's oldest language still spoken to-day? - C. Mayo, Rotherham.

Answer: A recent archaeological evidence suggests that Tamil spoken in the Indian sub - continent could have been the language used by the Indus civilization and even the Sumerians. References to rivers that dried up 10000 years ago are seen in Tamil literature. Infact, there is a possibility that Tamil was the root of Sanskrit, in turn the root of all Indo-Europ ean languages.

Flora Pulman,

Editor, The Mirror,

Ivy Bridge,

Devon, England

நிலப்பாகுபாடுகள்:

தமிழர்களின் நம்பிக்கைகளின்படி, முதல் தெய்வம் ஒன்றும், குடித் தெய்வங்கள் மூன்றும் என அறியப்பட்டுள்ளன. பாலையை இணைத்தால் அவை நான்காகின்றன. இருப்பினும் நானிலம் என்றும், நன்னிலம் என்றும், நான்கு நிலங்களை முதன்மைப்படுத்தும் செய்திகளே தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. பிற்காலத்தில் அறியப்படும் குழுத் தெய்வங்கள் (Clan godor or rural gods), தங்கள் மரபில் அல்லது குழுவில் தோன்றிய முன்னோர்களே என்க.

தமிழர்கள் தங்கள் நாட்டை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரித்தனர். இவ்வைந்து

பெண்ணொரு பாகன் என்ற அர்த்த நாரீசுவரத் தோற்றம் பற்றி சமற்கிருத இலக்கியங்கள் பேசுகின்றன. அரி என்பது பாதி என்ற பொருளைத் தரும். நாரம் என்பது தண்மையைக் குறிப்பது. ஆணை வெப்பமானவன் என்றும், பெண்ணைத் தன்மையானவள் என்றும் அழைப்பது மரபு. வலது புறத்தைத் தனக்கெனவும், இடதுபுறத்தைப் பெண்ணுக்கெனவும் இறைவன் ஒதுக்கியுள்ளதாகத் தொன்மங்கள் கூறுகின்றன. வலம் என்பது ஆற்றலைக் குறிக்கும். இடம் என்பது அளித்தலை, கொடுத் தலை, இடுதலைக் குறிக்கும்.

நம்பிக்கை என்பதற்கு எல்லையில்லை. கால மாற்றங் களில், கடவுளர் பற்றிய கருத்துகளிலும் மாற்றங்கள் தோன்றின. நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றிய தொன்மங்களும் அறிவுக்கும் தெளிவுக்கும் அப்பாற்பட்டவைகளாக அமைந்தன. சமற்கிருத இலக்கியங்கள் கூறும் சரசுவதி, இலக்குமி, பார்வதி, துருக்கை, அம்பாள், உஷா போன்ற பெண் கடவுளர், அடிப்படையில் ஒருவரே. இலக்குமிக்கு சமற்கிருதத்தில் ஆயிரம் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெயருக்கும் பின்னால் ஒரு தொன்மக் கதையும் உண்டு. இவ்வாறான சகஸ்ர நாமம் (ஆயிரம் பெயர்கள்) சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் கூட சொல்லப்பட்டுள்ளன. இவையெல்லாம் அக்கடவுளரைப் போற்றிப் புகழும் அடைமொழிகளே.

மேற்கண்ட செய்திகள், தமிழருடைய சமயவரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. இன்று உலகில் அறியப்படும் சமயங்களின் மூலமும் தோற்றமும் தமிழர் சமயத்திலேயே காணப்படுகின்றன. அதுபோல், உலகச் சமயங்களின் கடவுளர் பெயர்களும் தமிழின் வேரினையும் மூலத்தினையும் தொட்டு நிற்பவைகளே. (ஆசிரியரின் தமிழர் சமயம் என்ற நூலில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன).

அண்மையில், இங்கிலாந்தில் வெளிவரும் "தி மிர்ரர்" (The Mirror) என்ற நாளிதழில் (9.7.2012), சிந்துவெளி நாகரிகம் பற்றி ஒரு செய்தி வெளிவந்துள்ளது. ரோதர் ஹாம் நகரி லிருந்து (Rotherham), சி. மாயோ (C. Mayo) என்பவர் மிர்ரர் இதழில் ஆசிரியருக்கு ஒரு கேள்வியை அனுப்பியுள்ளார்.

கேள்வி : இன்றும் பேசப்பட்டு வரும் உலகின் பழமை யான மொழி எது?

வாரி : கடல், ஏரி எனவும் பொருள்படும்.

வார் + அணன் = வாரணன். அணன் = தேவன், தேவ மாந்தன்.

சுறா மீனின் கொம்புகளை நட்டு, அதனை நெய்தல் நில மக்கள் வழிப்பட்டனர்.

மாயோனும், இந்திரனும், வாரணனும் நீரோடு தொடர்புடையவர்களே. முகில், மழை, நீர் ஆகிய நிலைகளில் அவர்கள் சொல்லப்பட்டுள்ளனர்.

கொற்றவை: கொல்லும் அரிவையே கொற்றவையெனக் குறுகியதென்பர். தீயோரை ஒறுப்பதும், பாலையைப் பாதுகாப்பதும் அவளது பணியாயிற்று. கொற்றவை வழிபாடு எக்காலத்திலிருந்து தொடங்குகிறது என்பதை அறிய இயலவில்லை. ஆனாலும் சிந்துவெளியில் அது அறியப்பட்டுள்ளது. குமரிக் கண்டத்திலேயே கொற்றவை வழிபாடு நடந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. கொற்றவையே பிற்காலத்தில் காளி எனப்பட்டாள். சினத்தின் கடவுளாக அறியப்படும் காளியின் கரங்களில் எண்ணமுடியாத ஆய்தங்களை அளித்துள்ளனர். ஆரிய மயமாக்கப்பட்ட காளி, காண்பதற்கே அச்சம் தரும் உணர்வை வெளிப்படுத்துபவளாகக் கருதப்படுகிறாள்.

காள் என்பது கருமையைக் குறித்த தமிழ்ச்சொல். காள் = காளம் என்று காட்டைக் குறித்தது. காளம் - காளி என்றாயிற்று. காளிக்கோட்டம் - காளிக்கட்டம் - கல்கத்தா என்றாயிற்றென்பர். தற்போது கொல்கத்தா என்று மாற்றப்பட்டுள்ளது. காளி செய்யும் பணியாகிய கொல்லுதலைக் குறிக்கின்றது.

காளியை, அங்கையர்க் கண்ணி, அங்காளம்மன் கோலவிழியம்மன் (முண்டக்கண்ணி என்றிருந்ததை தற்போது மாற்றியுள்ளனர்) என்று அழைப்பர்.

கோலா (coco - cola) என்ற ஆங்கிலச் சொல், காள் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

பெண் தெய்வ வணக்கம், சிந்துவெளியிலும், மேலை நாடுகளிலும் அறியப்பட்டுள்ளன. சிந்துவெளியில் பல்வேறு பெண் உருவங்கள் அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ளன. அவை உடைகளுடனும், அம்மணமாகவும் உள்ளன.

கொற்றவையைக் குறிஞ்சி நிலத்தலைவனின் மனைவியாகக் கருதுவதும், சிவன் - உமை என்ற இணையராகப் போற்றுவதும் பிற்கால வளர்ச்சியென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பிடிக்கப்பட்டு வந்த தமிழர்களின் சமய மெய்யியல் கொள்கைகள் புறந்தள்ளப்பட்டன. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று அன்பின் அடிப்படையில் அறியப்பட்ட தமிழர் சமயம், ஆரிய மயமாக்கப்பட்டது. சீவாத்துமாவும் பரமாத்துவமாவும் ஒன்றே என்பன போன்ற, உலகின் எந்தச் சமயங்களிலும் காணவியலாத, தான் தோன்றித் தனமான கொள்கைகளை, துவைதம் - அத்வைதம் - விசிட்டாத்து வைதம் என்று கூறினர். இக்கொள்கைகள் கடவுளைப் பின்னுக் குத்தள்ளி, பிராமணரை முன்னிலைப்படுத்துவதாக உள்ளன. இதற்கு விளக்கங்கள் கூறுவோர், அதன் கருப்பொருளை மறைத்து, பொய்யான விளக்கங்களைக் கூறிவருகின்றனர்.

தமிழில் அறியப்பட்டிருந்த தொன்மக்கதைகளைத் திருடி, அவற்றை சமற்கிருதத்தில் தப்பும் தவறுமாக மொழி பெயர்த்துக் கொண்டு, தமிழ் மூலங்களை அழித்து, அம்மொழி பெயர்ப்பு வழி நூல்களை மூல நூல்கள் போல் காட்டி, அவைகளுக்குப் புராணங்கள் என்ற பெயரைக் கொடுத்தனர். கந்த புராணம், சிவபுராணம் உள்ளிட்ட 18 வகைப் புராணங்களும், தமிழினின்றும் மொழி பெயர்க்கப் பட்டவைகளே. தமிழில் இருந்த ஆகம விதிமுறைகளையும் தமது போல் காட்டிக் கொண்டனர். ஒரு வீட்டைக் கூடக் கட்டத் தெரியாத ஆரியர்கள், மிகப்பெரிய கோயில்களைக் கட்டுவதற்கான வரைபடங்களையும், விதிகளையும் வகுத்துக் கொடுத்தனர் என்று கூறுவது எவ்வளவு நகைப்பிற்கிடமானது. ஆகமம் என்பது தமிழ்ச்சொல்லே. ஆகம விதிகளைத் தந்தவர் களும் தமிழர்களே. தமிழ்மொழியில் சமற்கிருதச் சொற்களைக் கலந்து, தமிழைச் சிதைத்தது போலவே தமிழர் சமயத்தையும் சிதைத்துவிட்டனர்.

வாரணன்:

நெய்தல் நிலப் பாதுகாப்புத் தெய்வமாக வாரணன் கருதப்பட்டான். வாரணனை வருணா என்று சமற்கிருதத்தில் அழைக்கின்றனர். வருணா நீர்த்தேவனாக அறியப்படுகிறான்.

வார் என்ற தமிழ்ச்சொல், நீண்ட நெடிய என்ற பொருளைத் தரும்.

வார் : நீண்ட கச்சை, நீண்ட கயிறு.

வாரை : நீண்ட கம்பு அல்லது கழி.

வாரி : நீண்ட நீரோடும் வழி, வாய்க்கால். வாரிசு = தொடரும் தலை முறை.

காளிகோயிலாகத்தான் இருந்தது.[840] (இந்த மோசடிக் கும்பல் பற்றி, அக்கினிகோத்திரம் இராமானுசாச்சாரியார், தனது நூலான "இந்துமதம் எங்கே போகிறது", என்ற நூலில் விலா வாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.)

கிறித்துப் பிறப்பாண்டுகள், வரையிலும் குழப்பமில்லாமல் வழிபட்டு வந்த தமிழ் மக்களை, சமயத்தின் பேரால் புத்த சமயத்தாரும், சமண சமயத்தாரும், ஆதிசங்கரரும், இராமா னுசரும் கூறு போட்டனர். இந்த சமயங்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகளால், இலக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டனர். பல்லாயிரம் பேர், தமிழ்காட்டைவிட்டே ஓடிப் போயினர். கழுவில் ஏற்றப்பட்ட ஆறு இலக்கம் சமணர்களும் தமிழர்களே. சங்கரர் தொண்டர்களும் இராமானுசர் தொண்டர்களும், பொதுமக்களிடம் புகுந்து குழப்பங்களைத் தோற்றுவித்து, ஊருக்கு ஊர் அடிக்கடி சண்டைகளையும், ஊக்குவித்தனர். ஆனால் ஒரு கொள்கையில் மட்டும் சங்கரரும் இராமானுசரும் ஒன்று பட்டிருந்தனர். அதுதான் வர்ணாசிரம தர்மம். சாதிப் பாகுபாட்டை இருவருமே பேணிக் காத்தனர். சங்கரர் தனது வர்ணாசிரமக் கொள்கையை விட்டுவிட வில்லை.

தமிழர் சமயம், இரு ஆரியப் பிராமணர்களால், சைவம் - வைணவம் எனப்பிரிந்தது, பிரிக்கப்பட்டது.[841] இரண்டு சமயங் களுக்கும் ஆரியப் பிராமணரே தலைமைப் பொறுப்பேற்றனர். தமிழ் மொழி கோயில்களிலிருந்து அகற்றப்பட்டது. தமிழர் சமயம் அழிக்கப்பட்டதின் கடந்த கால சுருக்கமான வரலாறு இதுவே எனலாம். இடைக் காலத்தில் சிவ நெறியைப் போற்றிய சமயக் குரவர்களும் பிறரும், தமிழிலேயே இறைவனைப் போற்றினர். என்றாலும் தமிழ்மொழி ஆலயங்களிலிருந்து அகற்றப்பட்டபோதும், சமற்கிருதம் அவ்விடத்தில் திணிக்கப் பட்டபோதும் வாய்மூடி ஊமைகளாயிருந்தனர். சாதிக் கொடு மையை எதிர்த்து எந்தச் சமயக்குரவரும் குரல் கொடுக்க வில்லை. தமிழர்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தர முயற்சிக் காத சமயக்குரவர்களின் திருமுறை நூல்கள், சமற்கிருத வளர்ச்சிக்கே துணை நின்றன. சாதியின் பெயரால் சைவ மடங்கள் தோன்றி, மேலும் தமிழர்களைப் புறக்கணித்தன.

கடவுளை முன்னிறுத்த, மக்களை அவளது தொண்டர் களாகவும், அன்பர்களாகவும் பிள்ளைகளாகவும் கடைப்

சமற்கிருத மொழி புகுத்தப்பட்டு, தமிழ் மொழி அகற்றப் பட்டது. சிவன் கோயில்கள் அனைத்தும் சமற்கிருதப் பிராம ணர்களின் கட்டுப் பாட்டுக்குள் வந்தன. தமிழ்க் கடவுளாகிய சிவன், ஆரியக் கடவுளாக மாற்றப்பட்டார். சிவனிய நெறிக்கு ஆரிய பிராமணர்களே தலைமை ஏற்றனர்.

இக்கால அளவில் பிராமணர்களிடையே நிலவிய சமயத் தலைமை போன்ற போராட்டக் குழப்பங்களில், சில பிராம ணர்கள் தாங்கள் எதிர்பார்த்த பதவிகளும், வருவாய்களும் கிடைக்காமல் ஏமாந்து போயினர். சில பிராமணர்கள், உணவுக்கே வழியின்றி, கொள்ளை, வழிப்பறி திருட்டு போன்ற செயல்களிலும் ஈடுபட்டனர். மதுராந்தகத்துக் கருகில் நான்கு பிராமணர்கள் வழிப் பறிக் கொள்ளையில் ஈடுபட்டதற்காக, அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்ட செய்தி, கல்வெட்டுக் குறிப்புகளில் பதிவாகியுள்ளது. இந்தச் சூழலில் இராமானுசர் என்ற ஆரியப் பிராமணர், திருமாலின் புகழ்பாடத் தொடங்கினார். ஆதிசங்கரருக்கு மாற்றாக இவர் புதிய கொள்கையை அறிவித்தார். திருமாலே முழுமுதற் கடவுள் என பறை சாற்றினார். சிவ மரபை ஒதுக்கித் தள்ளுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். ஏற்கனவே ஆதிசங்கர் வழியில் பலர் மடங்களை நிறுவி, சங்கரர் வழியில் செயல்பட்டுவந்தனர்.

இராமானுசர், திருமாலை முன்னிறுத்தி புதிய சமயத்தைத் தோற்றுவித்தார். தன்னுடைய கொள்கையை விரிவுபடுத்த தொண்டர்களைத் திரட்டினார். இவர் எதிர் பார்த்த அளவில், பிராமணர்கள் இவரிடம் வரவில்லை. ஏற்கனவே பதவியும், வருவாயும் இழந்து இடறல்பட்டு வந்த சில பிராமணர்கள், தங்கள் பழைய வழியை விட்டு, இராமானுசரின் தொண் டர்களாயினர். பிராமண சமயத்துக்கு நிகராக, தனது நெறிக்கு ஆட்களைத் திரட்ட முயன்று தோல்வி கண்ட இராமானுசர், பறையர், பள்ளர், பள்ளி, இன்னபிற சாதியினருக்கும் பூ நூலை அணிவித்து, பிராமணர்களாக்கிக் கொண்டார். (வடகலை, தென்கலை குழப்பங்களுக்கு இதுவே காரணமாகும்.)

திருப்பதியில் இருந்த காளிகோயில் அம்மலையில் வாழ்ந்து வந்த பழங்குடியினரால் வணங்கப்பட்டு வந்தது. அங்கு சென்று இராமானுசர், தனது மாமன் ஒருவரின் துணையுடன், மோசடி யான வழிகளில் ஈடுபட்டு, காளிகோயிலை, பெருமாள் கோயி லாக மாற்றினார். இராமானுசர் காலத்துக்கு முன்பு அது

கிறித்துப் பிறப்பாண்டுகளில் தமிழர் சமயத்தில் புதிய சிந்தனைகள் தோன்றின. அவை, அக்காலத்தில் தமிழகத்தில் பரவி வந்த புத்த சமண சமயங்களின் தாக்கங்களால் விளைந் தவை. சமணம், புத்த சமயத்தைவிட விரைவாகப் பரவியது. இதனை ஈடுகொடுக்கும் வகையில் முருகவழிபாடும், மால் வழிபாடும் வலியுறுத்தப்பட்டன. இவ்வழிபாட்டு முறை களைப் பின் பற்றியவர்கள், ஏறக்குறைய இரண்டு சமயங் களைப் போலவே கொண்டு செல்லத் தொடங்கினர். ஒரு கட்டத்தில் சிவ வழிபாடு பற்றிய சிந்தனை கூட மக்களிடம் இல்லாமற் போனது. சங்க இலக்கியங்களிலும், அதற்குப் பின்னர் எழுதப்பட்ட இலக்கியங்களிலும், சிவனைப் பற்றிய செய்திகளும் குறிப்புகளும் குறைந்து போயின. மாறாக முருகனைப் பற்றிய செய்திகள் முதலிடத்தைப் பிடித்தன. திரு முருகாற்றுப்படை, முருகனைப் போற்றிப் பாடப்பட்டது. பரிபாடல் முருகனையும் மாலையும் ஏற்றிப் போற்றியது.

இந்தச் சூழலை நன்குணர்ந்த திருமூலர், சிவனை மீண்டும் தமிழ் இலக்கியங்களில் அறிமுகம் செய்தார். சிவனைப் போற்றியே திருமந்திரத்தை எழுதினார். தொடர்ந்து காரைக் கால் அம்மையாரும் சிவனைப் போற்றினார். சிவ வழி பாடுகளைச் செய்தார். மதுரையில் அம்மையார் தங்கியிருந்த போது, சிவவழிபாடு செய்வதற்குக் கூட இயலவில்லை என்று மதுரையை விட்டு வெளியேறினார். பல்லவர் காலம் வரை, தமிழகத்தில் புத்தம், சமணம், முருகவழிபாடு, திருமால் வழிபாடு, சிவ வழிபாடு என பல்வேறு வழிபாடுகள் நடந்தன. மக்கள் எந்தத் திசையை நோக்கிச் செல்வதென்று தெரியாது விழித்தனர்.

இடைக்காலம் வரை தொடர்ந்த இச்சமயக் குழப்பங்கள், சமணம் அழிக்கப்படும் வரையில் தொடர்ந்தது. அடுத்து தோன்றிய சமயக் குரவர்கள், சிவனியத்தைப் போற்றிப்புகழ்ந் தனர். இடைக் காலச் சோழப் பேரரசு சிவனுக்குச் சிறப்பினை அளித்தது. கி.பி. எட்டம் நூற்றாண்டில் தோன்றிய ஆதி சங்கரர், சிவனியத்தை ஆரியத்தோடு இணைத்தார். சிவ நெறிக் குப்புதிய விளக்கங்களை அளித்தார். சமற்கிருத மொழியைத் தாங்கிப் பிடித்தார். வர்ணாசிரமக் கொள்கையை வலியுறுத் தினார். அதுவரையிலும் தமிழர்களிடமிருந்த சிவ வழிபாடு, ஆரிய பிராமணர்களின் கைக்கு மாறியது. கோயில்களில்

வேலும் ஈட்டியும் அவனை குறிஞ்சி நிலத்தலைவனாகக் காட்டு கின்றன என்பர். பாம்பும் சேவலும் அவன் பாதுகாப்பில் இருந்தன. வள்ளி என்ற குறிஞ்சிப் பெண்ணையும் மணந்தான். இவைகளே, உரையாசிரியர்கள் முருகனை குறிஞ்சித் தலை வனாகக் காட்டியதற்கான காரணங்கள் ஆகும். ஏற்கனவே குறிஞ்சிக்கு ஒரு தலைவன் இருந்தான். அவனே முழுமுதற் கடவுள் என ஏற்கப்பட்டிருந்தான்.

முருகனைப் பற்றிய பிற செய்திகள், அவனை மருத நிலத் தோடு தொடர்பு படுத்துகின்றன. பகட்டான மணிமுடியும், பட்டாடைகளும், அணிகலன்களும், பொன்னகைகளும் அவனை மருத நிலத்தோடு தொடர்புபடுத்துகின்றன. மருத நிலத்தின் போர்க் கடவுளாகவே முருகன் கருதப்பட்டான். வெற்றி வேல், வீரவேல், என்று போருக்குச் சொன்ற மருதநில மறவர்கள் முழங்கினர். மருதம் - முருகன் ஆகிய இரண்டு சொற்களுக்கும் இடையே மொழியியல் வழியில் தொடர்புகள் உண்டு.

மர் என்ற வேர்ச் சொல், மர - மரம் என்றவாறும், மரு - மருதம் என்றவாறும், முரு - முருகன் என்றவாரும் விரிந்தன. உரையாசிரியர்கள் குறிஞ்சித் தலைவனாகக் காட்டிய போதும், முருகனைப் பற்றிய ஆய்வுகள், அவனை குறிஞ்சிக்கும் மருதத் துக்குமான இணைப்பாளனாகக் காட்டுகின்றன. தொல்காப் பியர் குறிப்பிடும் சேயோன், முருகன் அல்லன் எனக் கருதலாம்.

சேய் என்பதற்கு, தொலைவு, தொலைவிலுள்ள மலை என்றவாறு பொருள் விரியும்.

சேய் என்பதற்கு, மகன் என்றும், குழந்தை என்றும் கூட பொருளுண்டு.

பொருளையும் இடத்தையும் மாற்றி உரையாசிரியர்கள் விளக்கிவிட்டனர் என்றே எண்ணத்தோன்றுகிறது. தமிழரின் முதற்கடவுளான எல்லும், சிவனும், உரையாசியர்களின் விளக்கத்தில் காணப்படவில்லை. சிவன் இல்லாத தமிழ்மக்கள் இல்லை என்பதால் சேயோன் என்பது சிவனையே குறித்தது என்க. (பிற்காலத்தில் தேவர்களின் தலைவனாக, கணபதியை ஏற்றனர். கணபதி, கணநாதன், கணேசன் ஆகிய பெயர்கள், தேவர்களின் தலைவன் என்ற பொருளைச் சுட்டுகின்றன. மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் சேயோன் என்ற நூலைக் காண்க)

ஆயர்களின் குடித் தெய்வமாகிய மாயோனுக்குத் தொடக் கத்தில் கோயில்கள் இல்லை. முல்லை நில நாகரிகம் வளரத் தொடங்கிய போது, மாயோனுக்கு மேலும் சிறப்புகள் செய்யப்பட்டன. கிறித்துப் பிறப்பாண்டுகளில், மாயோன் தனிக் கடவுள் தகுதியைப் பெற்றான். மாயோனைப் பற்றிய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. தொல்காப்பியம், மாயோனை முல்லை நிலத்தலைவனாகக் குறிப்பிடுகிறது.

இந்திரன்: முல்லை நிலநாகரிகத்தின் தொடர்ச்சியாக மருத நில நாகரிகம் தோன்றியது. நிலையான குடியிருப்பு களும், உரிமையுள்ள வயல்களும் கொண்டு, மக்கள் நிலத்தின் உரிமையாளர்களாயினர். இந்திரன் என்ற சொல் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. மாயோனினின் மறு உருவமே இந்திரன் ஆவான். இந்திரனை மாதளி என்று ருக்கு வேதம் கூறுகிறது. மாமழை என்பது அதற்குப் பொருளாகும். மருத நில மக்களுக்குத் தேவையான மழையையும் நீரையும் இந்திரனாகப் போற்றினர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இந்திரனுக்குச் சித்திரை மாதத்தில் பெருவிழாவினை எடுத்தனர். மருத நில நாகரிக வளர்ச்சியில், மன்னனும் ஆட்சி அதிகாரங் களும் பெருகின. தனியுடைமைகள் வளர்ந்தன. அவ்வுடைமை களைப் பிறர் கவர்ந்து செல்லாத வகையில் பாதுகாப்புத் தேவைப்பட்டது. தங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவனை பாதுகாவ லனாக மக்கள் தேர்வு செய்தனர். அவன் மக்களின் உடைமை களைக் காத்தான். அவனே மன்னன் என்றும் சொல்லப் பட்டான். தனியுடைமைக் கொள்கை வளர்ந்த போது, மேலும் மேலும் செல்வம் சேர்க்கும் அவா, மக்களிடையே தோன்றியது. மன்னன், மக்களின் அவாவினை நிறைவு செய்யப் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டான். போர்கள் தவிர்க்க இயலாதவைகள் ஆயின. போரில் ஈடுபடவும், வெற்றி காணவும், போர்க்கடவுள் ஒருவன் மக்களுக்கும் மன்னனுக்கும் தேவைப்பட்டான். அப்போர்க் கடவுளே முருகன் ஆவான். இந்திரன் பெற்று வந்த வணக்க முறைகளும், அவன் பெற்றிருந்த அதிகாரங்களும், முருகனுக்கு மாற்றப்பட்டன. தேவர்களின் தலைவன் என்ற தகுதியை இந்திரன் இழந்தான். முருகன் அவ்விடத்தில் வைத்துப் போற்றப்பட்டான்.

உரையாசிரியர்கள், முருகனை குறிஞ்சி நிலக்கடவுளாகக் காட்டுகின்றனர். காட்டுக் கோழியும், கவின் மிகு மயிலும்,

சிந்துவெளியில் அறியப்படும் கடவுளையும் எல் என்றே அழைப்பது பொருத்த மாயிருக்கும். அதனை விடுத்து, பசுபதி, மகாதேவ, ருத்ரன் போன்ற பெயர்களால் அழைக்க ஆய்வா ளர்கள் முயல்கின்றனர். குறிஞ்சி நிலக்கடவுளான எல் கடவுளே, தமிழரின் முழு முதற்கடவுள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மாயோன்: மை என்ற வேர்ச் சொல்லினின்றும் விரிந்ததே மாயோன் ஆகும். மாயோன் என்பது, கருமையையும், மறைதலையும், குறிக்கும். அதாவது கருமையில் கலந்து போதல்.

மை = கருமை,இருட்டு, இரவு, மழைமேகம், நடுப்புள்ளி எனவிரியும்.

மை - மாய் - மாயம் = மறைந்து போதல்.

மாயோன் = கருமையானவன், அடிக்கடி மறைந்து போகின்றவன்.

இச்சொல், கடவுளைக் குறிப்பதைவிட, கார்மேகத்தையே குறிக்கின்றது எனலாம்.

மாயம் என்பது மந்திர தந்திர வித்தைகளைக் குறிப்பவரையும் சுட்டும்.

மாய் - மாய்கி - மாகி (Magi) என, கிரேக்க மொழியில் திரிந்து, Magic என்ற சொல்லுக்கு மூலமாலிற்று.

மாகம் என்ற சொல்லும் கருமையைக் குறிப்பது. மாகவிசும்பு = கரியவானம், இரவுநேரத்து வானம் என்று சொல்லப்படும்.

மை - மாயம் - மாகம் என விரிந்தது. மாகம் - மாகி - மாகிக் (கிரேக்கம்) - மாஜிக் (ஆங்கிலம்)

முல்லை நிலத்துமக்கள், தங்கள் கால்நடைகளுக்கு உணவாக புல்தரையை நம்பியிருந்தனர். கார் முகிலின் வரவு அவர்களைக் களிப்படையச் செய்தது. தங்களது முன்னோர் களின் முழுமுதற்கடவுளான குறிஞ்சிக் கடவுளோடு, கார் முகிலையும் வணங்கினர். ஆயர் குடியில் பிறந்த கண்ணனையும் மாயோன் என்றே அழைத்தனர்.

மாயோனை, மால் என்றும் அழைப்பர். மால் என்ப தற்கும் காரிருள் என்பதே பொருளாகும். மா + அல் = மால் எனப்பட்டது. பெரிய இருள் அல்லது காரிருள்.

மால் என்பது இருட்டையும் கருமையையும் குறித்ததால், குற்றமுள்ள நெஞ்சையும் இருள் மண்டிக் கிடப்பதாகக் கூறுவர். அதன் வழியில், மால் என்பது குற்றம் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. மால் என்ற சொல், குற்றச் செய்கை என்ற பொருளில் (Malpractice) என்று ஆங்கிலத்திலும் சொல்லப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள் (Olduwai, Tanzania) இரண்டு இலக்கம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என அறிவியலார் கூறும் வேளையில், 15 இலக்கம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கருவிகள் தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்டதை எவரும் கவனத்தில் கொள்ளவில்லை.

உலகில் எந்த மக்கள் இனமும் தாங்கள் உலகின் முதல்குடிகள் எனக் கூற முன்வரவில்லை. தமிழர்கள் மட்டுமே அவ்வாறு கூறி வருகின்றனர். அதற்கானச் சான்றுகள் இருப்பதால் அவ்வாறு சொல்ல முடிந்தது. தமிழன் தன்னைப் படைத்த கடவுளுக்கு எல் என்றே பெயரிட்டு அழைத்தான். அதற்கானச் சான்றுகள், தமிழ் இலக்கியங்களில் இல்லை. மாறாக விவிலியம் இச்செய்தியைத் தெளிவு படுத்துகிறது. குர் ஆன் அக்கருத்தை ஏற்றுக் கொள்கிறது முதல் மாந்தனின் ஆதாம் என்ற பெயர், தமிழ்ப் பெயரே என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம். முதல் தாயின் பெயரை ஆயா என்று விவிலியம் குறிப்பிடுகிறது. ஆதாமும் ஆயாவும் பெற்றெடுத்த இருவர் பற்றிய குறிப்பில், முதல் மகள் க - எல் (Ka - el) என்றும், இரண்டாம் மகன் அப் - எல் என்றும் இசுலாம் கூறுகிறது.[839] அப் என்பது, அப்பா என்ற எபிறேயச் சொல்லின் சுருக்கமாகும்.

க - எல் (Ka - el): க என்பது கடவுளுக்குத் தமிழர்கள் சூட்டிய பெயர் என்பதை எல் என்ற கடவுள் என்பதே பொருளாகும். கடவுளை க என்றும் எல் என்றும் தமிழர்கள் அழைத்தனர் என்பதற்கு இப்பெயரே சான்றாக உள்ளது.

இரண்டாம் மகனை அப் - எல் (Ab-el) என்று விவிலியம் கூறுகிறது. இவ்விரண்டும் தமிழ்ச் சொற்களே. எல் கடவுள் தந்தையைப் போன்றவர் (El is god or God is el) என்பது பொருளாகும்.

தனக்கு இருமகன்களை அளித்த கடவுளுக்கு நன்றியாக, முதல் மாந்தன் தன் மக்கள் இருவருக்கும் கடவுள் பெயரையே சூட்டினான். குறிப்பாக தமிழ்ப் பெயர்களையே வைத்தான். மேற்கண்ட இரு பெயர்களுக்கும் சரியான விளக்கங்களை, மேலை நாட்டவர் இதுவரை அளிக்கவில்லை. அவை தமிழ்ப் பெயர்கள் என்பதையே அறியாதிருக்கின்றனர்.

தமிழர்கள் தங்கள் முழுமுதற்கடவுளுக்குச் சூட்டிய பெயர்களே இன்று உலக சமயங்களில் அறியக்கிடக்கின்றன.

என்று போற்றுகின்றன. மிகச் சிறந்த சிந்தனையாளர்கள், கடவுளை ஆணாகவோ, பெண்ணாகவே, ஆண்பெண்ணாக வோ கருதவில்லை. கடவுளுக்கு அவ்வாறான உருவங்களைக் கொடுத்தவர்கள் மனிதர்களே என்பதும், கடவுள் உருவங் களைக் கடந்த பேரொளியாய் இருப்பவர் என்பதும் சித்தர்கள் போன்றவர்களின் கருத்து. இது சிந்தனைகளின் மிக உயர்ந்த நிலை என்று கருதலாம். மக்களுக்கு ஏதோவொரு உருவங் களைக் காட்டும் போது, அந்த உருவத்தைப் பதியவைத்துக் கொண்டு, கடவுளை வழிபடும் சிந்தனை முதிர்ச்சியில்லாத வர்களுக்குத் தேவைப்படுவது. கடவுள் தன்னைப் பலருக்கு வெளிப்படுத்தியதாக சமய நூல்கள் கூறுகின்றன. அவ்வாறு தன்னை வெளிப்படுத்திய கடவுள் எந்த உருவத்திலும் வெளிப்படவில்லை யென்று சமய நூல்கள் கூறுகின்றன. கடவுள் தன் உருவத்தை ஒளியாகவே காட்டினார் என, யூத - கிறித்துவ சமய நூல்கள் கூறுகின்றன. தமிழிலும் எல் என்பதற்கு ஒளியென்றே பொருள் கொள்கிறோம். வள்ளலாரும் கடவுளை ஒளியாகவே (சோதி) கருதினார். கடவுளுக்கு உருவமில்லை என்பதை சிந்தித்து ஏற்றுக் கொள்வதென்பது, கல்வியறிவற்ற மக்களால் கற்பனை செய்து பார்க்க இயலாது. எனவே, அவர்களுக்கும் கடவுள் நெறியை கற்பிக்கவே, கடவுளுக்கு உருவம் கொடுத்தனர் என்பர். உருவ வழிபாடு செய்யும் சமயத்தில் உள்ள சிந்தனையாளர்கள், கடவுளை எந்த உருவத்திலும் வழிபடுவதில்லை. அதைத் தவறான முறையென எவரும் கூற இயலாது. உருவ வழிபாடு என்பது அவரவர் கடவுளை அறியும் தன்மையைப் பொருத்ததே என்க.

முதல் மாந்தன் அல்லது மக்கள் இனம் குமரிக் கண்டத்துக் குறிஞ்சி நிலப்பகுதியில் தான் தோன்றினர் என்பதை மொழி, சமயம், இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். உலகின் பெரும் பாலான மக்களால் (உலக மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர்) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கிறித்துவமும் இசுலாமும், உலகப் படைப்பைப் பற்றிக் கூறும் செய்திகள், குமரிக் கண்டத்தையும், தமிழரையும், தமிழ் இனத்தையுமே சுட்டுகின்றன எனலாம். குறிப்பாக இசுலாம் கூறும் செய்தி முதல் மாந்தன் வாழ்ந்திருந்தது இலங்கையிலேயே என்று கூறுகிறது. முதல் மாந்தவினம் தோன்றியது குமரிக் கண்டத் திலேயே என்ற செய்திகளை உலகச் சமயங்கள் தெளிவு படுத்துகின்றன. ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதிகளில்

நிலம் இல்லை. கோடையில் முல்லையும் குறிஞ்சியும் மயங்கு வதால் தோன்றுவதே பாலை எனக் கூறுகின்றனர். உண்மையில், பாலை என்ற நிலத்தைத் தனியே பிரித்துப் பார்ப்பதற்கான எல்லைகள் எவையும் இல்லை. சிந்துவெளித் தமிழர்களின் பகுதிகளில் பாலை நிலம் இருந்தது என்றும், அவர்களே பெண் தெய்வ வழிபாட்டைத் தோற்று வித்தவர்கள் என்றும், கடவுள் பற்றிய சிந்தனையின் முதிர்ச்சியே பெண்தெய்வம் என்றும் சிலர் கருதுகின்றனர். சிந்துவெளியில் பெண் தெய்வம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிந்துவெளியினின்று மேற்கே குடியேறிய தமிழர்கள், பெண் தெய்வங்களை வழிபட்டதாக மேலை இலக்கியங்களில் காண முடிகின்றது. குறிப்பாக எபிறேய மக்கள், பெண் தெய்வத்தை வழிபட்டு வந்துள்ளனர். பெண் தெய்வம் பற்றி, தமிழர்களில் சிலருக்கு மாறுபட்ட கருத்து இருந்திருக்க வேண்டும். தமிழரில் சில சிந்தனை யாளர்கள், கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்தது போல, சிலர் பெண் தெய்வ வழிபாட்டையும் மறுத்திருக்க வேண்டும். கி.மு. 1300 ஆண்டுகளில் மோசே என்ற எபிறேயத் தலைவனால் தோற்றுவிக்கப்பட்ட புதிய சமயத்தில் (யூத சமயம்), பெண் தெய்வ வழிபாடு மறுக்கப்பட்டுள்ளது. யூதச் சமயவழியில் தோன்றிய கிறித்துவமும் இசுலாமும் பெண் தெய்வத்தை ஏற்க வில்லை.

குமரிக் கண்டத்தில் பெண் தெய்வ வழிபாடு இருந்திருக்க வில்லை என்று சிலரும், இருந்தது என்று சிலரும் முரண்பட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். குமரிக் கண்டத்தில், முன் பாலை நாடு, பின்பாலை நாடு என்ற பகுதிகள் இருந்தன. அப்பாலை நிலப்பகுதிகளுக்கு கொற்றவை, தலைவியாகச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். என்றும், அதன் தொடர்ச் சியாகவே சிந்துவெளி மக்கள் பெண் தெய்வத்தைக் கொண்டி ருந்தனர் என்றும் கூறுவர். பெண் தெய்வத்தின் தோற்றம் பற்றித் தெளிவான குறிப்புகள் இல்லையென்றாலும், கி.மு. 10000 ஆண்டுகளிலேயே, பெண் தெய்வ வணக்க முறையைத் தமிழர்கள் கைக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

கடவுள், ஆணும் பெண்ணுமாகவே படைத்தார் என சமய நூல்கள் கூறுவதால், தங்களைப் படைத்த கடவுளை ஆணும் பெண்ணுமாகவே, கருதினர் என்று சிலர் விளக்கம் தருகின்றனர். பிற்காலத் தமிழ் இலக்கியங்கள், கடவுளை அம்மையப்பன்

யா: மெசபத்தோமிய, பாபிலோனிய மொழிகளில் கடவுகளைக் குறித்தது.[837] சங்க இலக்கியங்கள் நேரிடையாகக் குறிப்பிட வில்லை. என்றாலும், தென் திசைக் கடவுள், தென்னாடுடைய சிவன் என்ற பொருள் சொல்லப்பட்டுள்ளது. பிற்கால எபிறேய மொழியில் (கி.மு.1300) யா என்ற சொல், கடவுளைக் குறித்துக் கையாளப்பட்டுள்ளது. சினை மலையில் குடியிருந்த மலைக் கடவுளை, யா-கோ- ஆ என மோசே குறிப்பிடுகின்றான். இது, யா என்ற மூலச்சொல்லின் நீட்சியே என்பது, எபிறேய மொழி ஆய்வாளர்களின் கருத்து.

க: தமிழில் அறியப்படும் முதல் உயிர்மெய் எழுத்து. உயிரையும் உடலையும் தந்து, மாந்தனாகப் படைத்த கடவுளை, க என்ற வாறே தமிழர் அழைத்தனர்.

க - கட - கடவு - கடவுள் என பிற்காலத்தில் விரிந்தது.

க என்ற சொல், கடவுளைக் குறிப்பதாக, பழைய எகிப்திய, க - படை (Ka + Patah) என்று எகிப்திய வரலாறு குறிப்பிடுகிறது.[838]

எல் என்ற சொல், தமிழர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட் டிருந்தாலும், மற்ற சொற்களும் தமிழரால் பயன் படுத்தப்பட் டவைகளே.

சடையன், சொக்கன், ஆவுடையான், பெருவுடையான், ஆண்டி, அம்பலத்தான் என்றவாறும் பிற்காலத் தமிழ் இலக் கியங்கள் கடவுளைக் குறிப்பிடுகின்றன.

தமிழர்கள், எல் அல்லது சிவனையே முழுமுதற்கடவு ளாகக் கொண்டிருந்தனர் (Supreme god). மற்றவர்களுக்கு அத்தகுதி வழங்கப்படவில்லை.

மாயோன், இந்திரன், வாரணன் ஆகியோர் முழுமுதற் கடவுளாக அறியப்படவில்லை. இவர்கள் ஒவ்வொரு நிலத்தின் பாதுகாவலர்களாக (guardians) மட்டுமே சொல்லப்பட்டனர். இதன் பொருள் யாதெனில், முழுமுதற்கடவுளால் இவர்கள் அந்தந்த நிலங்களைப் பாதுகாக்கப் பணிக்கப்பட்டவர்களே. குடித்தெய்வங்கள் என பிற்காலத்தில் அறியப்பட்டவர்கள் போல் (குடித் தெய்வங்கள், குறிப்பிட்ட குழுவின் மறைந்து போன முன்னோர்களே), நிலத்தெய்வங்களாக அறியப்பட்டனர்.

பெண்கடவுளைப் பற்றிய சிந்தனை, தொடக்கத்தில் தமிழரிடையே இருந்ததாகத் தெரியவில்லை. தொல்காப்பியம், பாலைநிலப் பாதுகாப்புக்கென, கொற்றவை என்ற தெய்வம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. தமிழ் நாட்டில் பாலை என்ற

குமரிக் கண்டத்திலேயே கல்வழிபாடு தொடங்கியது எனலாம். வடிவமைக்கப்பட்டகல், பிற்காலத்தில் நடு கல்லாக உயர்ந்து வளர்ந்தது. கற்றூண்கள் நடும் வழக்கு பிறகு சோன்றியது. கற்றூண்களைக் (கல்+து) = கந்து என்றவாறு கூறினர். இக்கற்தூண்களில் பிற்காலத்தில் முருகனுடைய உருவமோ பெயரோ பொறிக்கப்பட்டு, அக்கடவுளை கந்தன் என்று கூறினர். தமிழ்க் கந்தனுக்கும், சமற்கிருத ஸ்கந்தனுக்கும் பொருள் வேறுபாடு உண்டு.

குதிஞ்சியில் தோன்றிய கடவுளையே தம் முதற்கடவுளாகக் கருதினர். அக்கடவுளை உயர்ந்த ஆலமரத்திலும், மலை முகட்டிலும் தமிழன் குடிவைத்தான். மலையில் உறைந்த கடவுள் மலைக் கடவுள் எனப்பட்டான். அக்கடவுளின் விரிந்த சடை மலைத் தொடரைப் போல் நீண்டிருந்ததை, எல் சடை (El Shaddai) என்ற எபிறேயச் சொல் விளக்குகிறது.[836] சடை என்பதற்கு மலைத் தொடர் என்று எபிறேய மொழியில் பொருள் கூறப்பட்டுள்ளது.

சள் - சடு - சடத்தல் = நீளுதல், விரிதல்.

சடை: நீண்ட கயிறு, மயிர்க்கற்றை, வேர் எனவிரியும்.

சடை, ஜடா என சமற்கிருதத்தில் திரிந்தது; ஷடை என்று எபிறேய மொழியில் சொல்லப்பட்டது.

சடையன்: நீண்ட மயிரைக் கொண்ட சிவன்.

தமிழில் கடவுளின் நீண்ட மயிர் என்றும், எபிறேய மொழியில் கடவுள் குடியிருக்கும் நீண்ட மலைத் தொடர் என்றும் சொல்லப்பட்டுள்ளன.

எல், சிவன், யா, க போன்ற சொற்களால், தொல்தமிழர் கடவுளை அழைத்தனர்.

இச் சொற்கள், எந்தத் திரிவும் இல்லாமல் மேலை மொழிகளில் காணப்படுகின்றன.

எல்: தமிழ், சுமேரியம், எபிறேய மொழி.

எல் (El), எல்லோயிம் (Ellohim), எல் சடை (El shaddai) ஆகிய சொற்கள் எபிறேய மொழியில் கடவுளைக் குறிப்பன.

சிவன்: இச்சொல்லும் பழமையான சொல்லே. ஆனால் சங்க இலக்கியங்கள் இச்சொல்லைப் பயன்படுத்தவில்லை. திருமூலரே இச்சொல்லைப் பயன்படுத்தினார் என்பர். ஆனால் பாபிலோனிலும், எகிப்திலும் இச்சொல், கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே பயன்பாட்டில் இருந்தது குமரிக் கண்டத்து மக்கள் இச் சொல்லைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

வரும் போது நிறைவு கூர்ந்தான். அக்கல் காற்றிலும் மழையிலும், வெயிலிலும் கிடப்பதைக் கண்டவன், அக்கல்லைக் காணும்போதெல்லாம் நீரூற்றிக் கழுவினான். விலங்குகள் அதனை நெருங்காதவாறு சுற்றிலும் கல் அரண் அமைத்தான். பறவைகள் எச்சமிடாதவாறு சிறு கூரையை வேய்ந்தான். பாதுகாப்பிற்கென வேலியை அமைத்தான். தமிழன் கட்டிய முதல் கோயில் இவ்வாறு உருவானதே. மேற்கண்டவாறு சொல்லப்பட்டவை கற்பனையாகச் சொல்லப்பட்டவை எனக் கருத வேண்டாம். குடியேற்றத் தமிழன் ஒருவன் இவ்வாறு ஒரு கோயிலை அமைத்ததை விவிலியம் விளக்குகிறது. கடவுளை உருவப் படுத்துவதற்கு கல்லைத் தவிர வேறொரு பொருள் சரியானதெனப்பட வில்லை. நடப்பட்ட கல் ஒழுங்கற்றுப் பல முகங்களைக் கொண்டதாகவே இருந்தது. வணக்கமுறை வளர்ச்சியுற்ற போது, அக்கல்லைச் செதுக்கி வழவழப்பாக்கி, நல்ல உருவத்தைக் கொடுத்தான். அக்கல்வழிபாடு பற்றிய செய்திகள் தமிழகத்திலும் மேலை நாடுகளிலும், சிந்துவெளியிலும் ஏராளமாகக் காணக்கிடங்கின்றன. இதுவே இலிங்க வழிபாட்டின் தொடக்கம் என்றும் சிலர் கூற, அதனை மறுப்பாரும் உள்ளனர்.

அபிறகாம் என்ற எபிறேயத் தமிழனும் அவளது மகனான இசுமயெல்லும், அராபியாவிலுள்ள மக்கா நகரில் ஒரு கோயில் அமைத்தனர் என்று விவிலியமும் குர் ஆனும் கூறுகின்றன. உண்மையில் அதனைக் கோயில் என்று கூறுவதை விட, ஒரு கல் நடப்பட்டது என்பதே உண்மை நிலையாகும். அக்கல்லையே தனது எல் கடவுளாக அபிறகாம் வழிபட்டான். காலப் போக்கில் அக்கல்லை மூடி, கட்டிடம் எழுப்பப் பட்டது. அக்கட்டிடமே இன்று இசுலாமியர்கள் தொழும் தலைமைக் கோயிலான காபா எனப்படுகிறது. உண்மையில் காபா என்பது ஒரு கல்லை மூடியுள்ள கட்டிடமே என்க.[835] இதனைச் சிவலிங்கமே என்றும் சிலர் கருதுகின்றனர். (The stone, the kabah is none but a siva linga).

கல்லைக் கல்லாகத் தமிழன் காணவில்லை. அதனைக் கடவுளாகவே கண்டான். கல்லைப் பார்த்தவனுக்கு நாயகன் தெரியமாட்டான். நாயகனைக் கண்டால் கல்லைக் காணோம் கல்லைக் கண்டால் நாயகனைக் காணோம் என்ற பழமொழியை பிற்காலத்தவர் கொச்சைப்படுத்திவிட்டனர்.

இருப்பான் என்ற கருத்தில், கடவுளைச் சிவன் என்று அழைத் தான் சிவந்த ஒளிக்கான மற்றொரு தமிழ்ச் சொல்தான் எல் என்பது. தொல்தமிழ்ச் சமயத்தை சிவளியம் என்றோ (இன்றைய வழக்கு வேறு பொருளைத் தரும்) எல்லியம் என்றோ அழைப்பதில் தவறில்லை.

விலங்குகளில் சில தொல் மாந்தனுக்கு இணக்காமாயி ருந்தன. வேட்டையாடிய உணவுபொருட்களைத் தன் தோளில் சுமந்து இருப்பிடத்தை அடைய, பல்வேறு இடையூறுகளும் இயலாமையும் எதிர்ப்பட்டன. மலைகளில் சுற்றித் திரிந்த ஆடுமாடுகள் மாந்தனுக்கு இடையூறு விளைவிக்க வில்லை. மாறாக, மாந்தன் அவற்றைத் தொடவும், நெருங்கிப் பழகவும் அவை இடம்தந்தன. தன் உடைமைகளையும், உணவுப் பொருட்களையும் தூக்கிவர, தனக்கு உற்றதுணையாய் காளை இருக்கும் என்பதையுணர்ந்த மாந்தன், காளையை நட்பாக்கிக் கொண்டான். அது மாந்தனுக்கு தூக்கியாகப் (carrier)கப் பயன் பட்டது. தன்னைப் போலவே தன் உடைமையான காளைக்கும் உணவளித்து வளர்த்தான். மாந்தனுக்கும் காளைக்கும் இடையே ஏற்பட்ட நட்பே, இயற்கையின் முதல் நட்பாகும்.

மாந்தன் வணங்கிய கடவுளுக்கும், தனது நண்பனை அறிமுகம் செய்தவன், கடவுளுக்கும் தூக்குத் தூக்கியாக காளை இருக்க வேண்டும் என்பதையுணர்ந்தான். மாந்தன் காளை கடவுள் என்ற முக்கோண வடிவில் முதல் நட்பு வளர்ந்தது. காளை மாந்தனுக்கு ஊர்தியாக மாறியபோது, தன் கடவுளுக்கும் காளையை ஊர்தியாக்கினான். காளை மாந்த னின் வாழ்வில் சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொண்டது. கடவுளையும் காளையையும் சேர்த்து வழிபட்ட மாந்தன், பிற்காலத்தில் இருவரும் ஒருவரே என்ற எண்ணத்தைக் கொண்டான். எல் என்ற கடவுளின் துணையாக காளையை மாந்தன் வைத்தான் என்பதை, அச்சொல்லின் வரலாறே உறுதிப் படுத்துகிறது. எல் + துணை - எல் + து - எழுது என்றானது. எல்லுக்கும் எருதுக்கும் உள்ள உறவை, தமிழ் சொல்லே உறுதிப் படுத்துகிறது.[834]

தொடக்கத்தில் கடவுளுக்கென எந்த உருவத்தையும் வடிவத்தையும் தமிழன் வெளிப்படுத்தவில்லை. தனது கோரிக்கை கடவுளால் ஏற்கப்பட்ட தென்று அறிந்த இடத்தில், ஒரு கல்லைப்புரட்டிப் போட்டு, அவ்விடத்தை மறு முறை

பட்டன. இரவில் பாதுகாப்பாக உறங்க இடங்கள் தேவைப் பட்டன. மக்கள் பெருக்கம் தொடர்ந்த போது, மக்களைத் தாக்கிய நோய்கள், அச்சுறுத்திய விலங்குகள், இயற்கையின் சீற்றங்கள், இறப்புகள் ஆகியவைகளிலிருந்து விடுபட மாந்தன் விரும்பினான். நீண்ட நெடிய இரவுகள், இரவில் எழும் ஓசைகள், தோன்றும் அசைவுகள், இனம் தெரியாத அச்சத்தில் மாந்தனை ஆழ்த்தின.

தனது கண்ணுக்கும் கருத்துக்கும் காட்சிக்கும் புலப் படாத ஏதோவொன்று தன்னைச் சுற்றி இருப்பதை உணர்ந் தான். அதனை எதுவென்று உணர அவனால் இயலவில்லை. ஆனால் தொடர்ந்து அந்த உணர்வினின்றும் மீள இயலாத நிலையில், தன்னையும் மீறிய ஆற்றல் ஒன்று, தன்னருகில் இருப்பதை உணர்ந்தான். அந்த ஆற்றலுடன் நட்பு கொண் டால் தனது அச்சவுணர்வு மறைந்து போகுமென்றும், தனது தேவைகளும் கிட்டும் என்றும் நம்பினான். அந்த ஆற்றலைத் தீயில் கண்டான், நீரில் கண்டான், காற்றில் கண்டான், மொத்தத்தில் இயற்கையில் கண்டான். இந்த ஆற்றல்களின் முழு உருவமாகக் கதிரவனைக் கண்டான். தீயும் வெப்பமும் நீரும் காற்றும் கதிரவனிட மிருந்து வெளிப்படுவதாக உணர்ந்த மாந்தன், கதிரவனையே தன் தலைவனாகவும் கொண்டான். அவனைக் கடவுள் என்று கூப்பிட்டு அழைக்க அப்போது அவனுக்கு மொழி என்று ஒன்று இருந்திருக்கவில்லை.

தொல்தமிழரின் கடவுள் கொள்கை, இயற்கையின் நடப்புகளால் உருவானதே. இயற்கையில் அச்சம் தரும் அனைத்தும் அவனது கவனத்தை ஈர்த்தன. இரவில் அசைகின்ற மரம், மரங்களைப் பிளந்து எரித்த இடி, கொடிய நஞ்சுள்ள நாகம், உயர்ந்துள்ள மலை, பெருக்கெடுத்தோடும், ஆறு, ஆர்ப்பரிக்கும் கடல், என அவனது வணக்கத்துக்குரியவையென விரிந்தன. இவ்வாற்றல்களையெல்லாம் கட்டுப்படுத்தும் பேராற்றல் ஒன்றிருப்பதை காலப்போக்கில் உணர்ந்தமாந்தன், அப்பேராற்றலையே தொழுது நின்றான். தமிழனின் கடவுள் அவன் பட்டறிவில் தோன்றிய முடிவு. கடவுளை எவரும் தமிழருக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. தமிழனே கடவுளைப் பிறருக்கு அறிமுகம் செய்து வைத்தான். சிவந்த வண்ணமாய், கதிரவன் வெளிப்படுத்திய நாக்குகளும், தீயினின்று வெளிப்பட்ட கொழுந்துகளும், இறைவன் செம்மேனியாய்

நீர்நிலை களையும், காடுகளையும் அளந்து வரைபடங்களை உருவாக்கினர். அவ்வாறு மேற் கொண்ட பணிகளின் போது, சென்னையை அடுத்த பல்லாவரத்திலும், திருவள்ளூரிலும் பல கற்கருவிகளைக் கண்டெடுத்தனர். அவை பல்வேறு வடிவங் களில் இருந்தன. வெட்டவும், கிழிக்கவும், நறுக்கவும், நசுக்கவும் என பலவாறு அவை அமைந்திருந்தன. அக்கற்கருவிகள் எக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன என்பதை அறிவதற்கு அந்நூற்றாண்டில் அளவுகோல் எதுவும் இலலாமற் போனது. இருபதாம் நூற்றாண்டில் அவைகளை ஆய்வுகளுக்குட் படுத்திய போது, அக்கற்கருவிகள் 15 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டவை என்ற உண்மை வெளிப்பட்டது எனவே, 15 இலக்கம்களுக்கு முன்பே மாந்த இனம் தமிழ் நாட்டில் இருந்தது உறுதி செய்யப்பட்டது. (அக்கற்கருவிகள் இன்றும் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன. அண்மையில் அவை கண்டெடுக்கப்பட்ட 150 ஆண்டைக் குறித்து, பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.)[833] 15 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மாந்த இனத்தின் கற்கருவிகள் உலகின் வேறெந்த நாடுகளிலும் இதுவரை அறியப்பட வில்லை. அக்கால அளவில் தமிழ்நாடு என்கின்ற இன்றைய நிலப்பகுதி குமரிக்கண்டம் என்ற அழிந்து போன நிலப்பரப்பின் வடபகுதியாக இருந்தது என்று கருதலாம். 15 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த அம்மக்களை என்ன பெயரிட்டு அழைக்க முடியும்? தமிழர்கள் என்றுதான் அழைக்கமுடியும். தொல் தமிழர்கள் என்றும் அழைக்கலாம்.

எனவே, கற்கருவிகளைப் பயன்படுத்திய தொல்தமிழனின் வரலாறு, 15 இலக்கம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதாலும், வேறுபல சான்றுகளாலும், உலகின் முதல் குடி, மூத்தகுடி, தமிழ்ச் குடியே என்று கூறுகிறோம். கல்தோன்றி மண்தோன் றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி என்று அழைப்பது, தமிழ்க் குடிக்குப் பொருத்தமான பெயராகும். (கல் என்பது குறிஞ்சியையும் மண் என்பது மருதத்தையும் குறிப்பன. மீண்டும் ஒரு முறை இப்பொருளில் அவ்வரியைப் படித்துப் பார்க்கவும்). குறிஞ்சியில். தோன்றிய தமிழினம், தொடக்கத்தில் உணவு மட்டுமே தேவை எனக்கருதியது. கால ஓட்டத்தில், உணவுக்கும் விஞ்சிய தேவைகள் இருந்ததை உணர்ந்தனர். குளிரையும் வெப்பத்தையும் தாங்க ஆடைகள் தேவைப்

தாக்குதல்களாலும் தொடுக்கப்பட்ட இரு முனைத்துவட்டடல் களால் துவண்டு போன தமிழரின் சமயம், தனது முகவரியையும் இழந்து போயிற்று. இனப்பகை தமிழர் சமயத்தின் மீதே முதல் போரைத் தொடுத்தது. சமயமே தொல்தமிழரின் வரலாறாக இருந்ததால் அச்சமய வரலாறு தகர்க்கப்பட்டது. இனப்பகை தமிழ்ச் சமயத்தின் முகவரியை அழித்துவிட்டு, அச்சமயத்தின் நம்பிக்கைகளையும் கூறுகளை யும் அழிக்க சமயத்தில் நச்சு விதைகளைக் கலந்தது. அவை வளர்ந்து பெருத்து கனிகளைத்தந்த போது, அந்நச்சுக் கனி களை உண்ட தமிழர், அறிவில் மயங்கினர், ஆற்றலில் தளர்ந் தனர், உண்மைக்கும் போலிக்கும் உள்ள வேறுபாடுகளை அறிய இயலாமற் போயினர். தமிழர் சமயம் மாற்று முகவரியில் மலர்ந்தது. தன்முகவரியை இழந்த தமிழன் மாற்று முகவரியில் கலந்து போனான், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொலைத்துவிட்ட தனது முகவரியை தமிழன் இப்போது தேடிக் கொண்டிருக்கிறான்.

மலைக்காடுகளில்தான் முதல் மாந்தன் தோன்றினான் என்று அறிவியலார் கூறுகின்றனர். அதனையே குறிஞ்சி என்று தமிழ் வரலாறு கூறுகிறது. கிரவுஞ்சி என்று சமற்கிருதம் சொல்கிறது. இமய மலையைச் சார்ந்த பகுதிகளை கிரவுஞ்சி என சமற்கிருத இலக்கியங்கள் சுட்டுகின்றன. மலையில் தோன்றிய மாந்த இனம், தொடக்கத்தில் வேட்டையாடி கிடைத்த உணவை உண்டு உயிர்வாழ்ந்திருந்தது. அப்போது அவர்களுக்குத் தேவைப்பட்டது உணவு மட்டுமே. உண்ணவும் உறங்கவும் மட்டுமே மாந்த இனம் பிறந்து வளர்ந்தது, வாழ்ந்தது. உணவுப் பொருட்களைத் தேடவும், வெட்டவும், நறுக்கவும் சில கற்களை மாந்தன் பயன் படுத்தினான். அவை கைகளைக் கிழித்துவிடாமல் இருக்க, அக்கற்களைச் செம்மைப் படுத்தினான், வழவழப்பாக்கினான், வாய்ப் பகுதிகளைக் கூர்மையாக்கினான். அவை உணவுப் பொருட்களை வெட் டவும் நறுக்கவும், துண்டுகளாக்கவும் பயன்பட்டன. இவை களே மாந்தனின் முதல் கருவிகளாகும்.

கி.பி. 1850 ஆண்டுகளில், கிழக்கிந்திய ஆங்கிலேயக் குழுமம், இந்திய நாட்டைக் கவர்ந்து, ஆட்சி மேற் கொண்ட போது, தங்கள் ஆட்சி முறையை எளிமைப்படுத்த, இந்தியா முழுவதையும் பல பகுதிகனளாகப் பிரித்து, நிலங்களையும்,

தொடக்க அதிகாரங்கள் குமரிக் கண்டச் செய்தி களையே சுற்றி வருகின்றன.[831]

குமரிக் கண்டத்துச் செய்திகள், புதிய தரவுகள் பற்றி பலரும் இன்று அறிந்திருக்கவில்லை. குமரிக் கொள்கை எதிர்ப்பாளர்களும் இதுவரை அறியவில்லை. குமரிக் கண்டம் என்பது கற்பனைக் கண்டமாகவே இருந்து விட வேண்டும் என்ற உள்ளுணர்வு, தமிழ்ப்பகைவர்களிடையே காணப்படு கின்றது. இக் கொள்கையை எவ்வாறேனும் மெய்ப்பித்து விடுவார்களோ என்ற அச்சவுணர்வும் அவர்களிடையே காணப் படுகின்றது. குமரிக் கண்டக் கொள்கை நிறுவப்பட்டு விட்டால், இதுவரையில் தமிழைப் பற்றியும், சமற்கிருதம் மற்றும் திராவிடம் பற்றியும் கூறிவந்த கொள்கைகளின் உண்மை நிலை புலப்பட்டுவிடும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். அக்கொள்கை வழியில், சிந்துவெளி மக்கள் தமிழரே என்பதையும், சுமேரியர், பாபிலோனியர், எகிப்தியர், எரேபியர், அராபியர் ஆகியோர் தமிழ்க் கிளைகளின் வழிவந்தோரே என்று கூறும் உண்மை நிலை புலப்பட்டுவிடும் எனவும் அஞ்சுகின்றனர். ஆரியர்களைப் பற்றியும், அவர்தம் வேதங்களைப் பற்றியும் இதுவரை சொல்லி வந்த செய்திகள் அனைத்தும் பொய்த்துப் போகும். அது பற்றியே குமரிக் கண்டக் கொள்கையை எதிர்த்து வருகின்றனர். குமரிக் கண்டதைப் பற்றியிருந்த காரிருள் தற்போது விலகி வருகின்றது. மிகக் குறுகிய காலத்துக்குள் இக்கொள்கை உறுதியாக வெல்லும்.

தமிழர்களே! தமிழ் அறிஞர்களே! ஆய்வாளர்களே! குமரிக் கண்டக் கொள்கையைப் பற்றி நில்லுங்கள். அது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், தமிழ் இனமும், மொழியும் மீட்டெடுக்கப் படும். "குமரிக் கண்டம், கற்பனைக் கண்டமே என்று நினைக்கும் தமிழன் எவனும் தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதியை இழந்து விடுவான்," என்று பாவாணர் கூறிய கருத்தை எண்ணத்தில் வையுங்கள்.[832]

தமிழர் சமயம்: சிந்துவெளி மக்கள் தமிழர் என்றும் அவர்கள் கடைப்பிடித்து வந்த சமயம் தமிழர் சமயம் என்றும் கருதப்படும். தமிழர் சமயம் என்பது பொதுப்பெயராக உள்ளது. அக்காலத்தில் அதற்கு இருந்த பெயர்தான் என்ன? இயற்கையின் தாக்குதல்களாலும், இனப் பகைவர்களின்

போல்தான் இருக்கும். எனவே, புதிய உலக வரலாறு, குமரிக் கண்டத்திலிருந்தே தொடங்குவதை ஆய்வாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வின்சென்ட் ஸ்மித் கூறுவது போல், இந்தியவரலாறு மட்டுமல்லாது, புதிய உலக வரலாறும் தெற்கேயிருந்து தான் தொடங்குகிறது என்பதை உறுதியாகக் கூற இயலும். (ஆசிரியரின் பல்வேறு நூல்களில் மேற்கண்ட செய்திகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.)

குமரிக் கண்டத்து மக்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள் எங்கும் கிடைக்கவில்லை என்று இதுவரையில் கூறி வந்தார்கள். தமிழர்கள், தங்கள் முன்னோர்களின் இலக்கியங்கள் எல்லாம் அழிந்து போய்விட்டனவே என கவலைப்பட்டார்கள். இறையனார் அகப்பொருள் உரை, புறநானூற்றுச் செய்தி, சிலப்பதிகாரம் கூறும் தகவல்களையே திரும்பத்திரும்பக் கூறி, கேட்பவர்களுக்குச் சலிப்பையே ஊட்டி வந்தார்கள். பாவாணர் தனது ஆய்வுகள் மூலம் புதிய தகவல்களைத் தந்தார். மேலை நாட்டு ஆய்வாளர்கள் குறிப்பாக மதாம் பிளாவட்ஸ்கி, புதிய நோக்கில் இலெமூரியாக் கண்டத்தைப் பார்த்தார். விவிலியத்தின் தொடக்கப் பகுதியான ஆதியா கமத்தின் முதல் பதினோரு அதிகாரங்கள் குமரிக் கண்டத்தின் மக்களுடைய வாழ்க்கை முறை, நகரங்களை உருவாக்குதல், வேளாண்மையைப் பெருக்குதல், கால்நடைகளைப் பெருக்க புதுப்புது உத்திகளைப் பயன்படுத்துதல், வானியலை ஆய்வு செய்தல், கணக்கியலைக் கண்டுபிடித்தல், இசைக் கருவிகளை மீட்டி கலைகளை வளர்த்தல் போன்ற பல்வேறு செய்திகள், சொல்லப்பட்டுள்ளன. ஆதி மனிதன் ஆதாம் வாழ்ந்தது குமரிக்கண்டப்பகுதியான இலங்கையே என்று திருக்குர் ஆன் கூறுகிறது. வெள்ளத்தால் மக்கள் அழிந்து போன செய்தியை விவிலியம், குர் ஆன் உள்ளிட்ட பதின் மூன்றுக்கும் மேற்பட்ட உலகச் சமய இலக்கியங்கள் கூறுகின்றன. விவிலியம் தரும் செய்திகளும், குர்ஆன் தரும் தகவல்களும் குமரிக் கண்டத்து மக்களின் வாழ்க்கை முறைமைகளையே சுட்டுகின்றன என்ற நோக்கில் இதுவரை எவரும் அறிய முற்படவில்லை. சிந்து வெளி மக்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள், ருக்கு வேதத்தில் பொதிந்து இடப்பட்டதைப் போல், குமரிக் கண்டத்து மக்கள் பற்றிய செய்திகள் விவிலியத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கி.மு. 1250 ஆண்டுகளில் பெயர் தெரியாத மேலை நாட்டு, எபிறேய மொழி ஆசிரியரால் எழுதப்பட்ட விவிலியத்தின்

வெளியில் வாழ்ந்திருந்த தமிழர்களுக்கு, சிந்து ஆறும் அதன் கிளை ஆறுகளும் அவ்வப்போது அச்சவுணர்வைத் தந்து கொண்டிருந்தன. மீண்டும் ஏற்படும் வெள்ளச் சூழலைத் தவிர்க்க சிந்துவெளியிலிருந்தும் பல குழுக்கள், மேற்கு நோக்கிப் புலம் பெயர்ந்தன. இப்பெயர்ச்சிகள் கி.மு. 10000 ஆண்டுகள் தொடங்கி, கி.மு. 3000 ஆண்டுகள் வரைவிலும் நிகழ்வுற்றன. இப்பெயர்ச்சிகள் தொடர்பான செய்திகளை, மேலை இலக்கியங்கள் தருகின்றன.

சிந்துவெளியினின்றும் அல்லது தமிழகத்தினின்றும் புலம் பெயர்ந்த மக்களே, தங்களது முன்னோர்களின் நாகரிகத்தை மீண்டும் மெசபத்தோமியாவில் மலரச் செய்தனர். மெசபத் தோமியருக்கும், தமிழருக்கும் இடையே காணப்பட்ட மொழி, இன, நாகரிக, சமயக்கூறுகள், இவ்விருவரும் ஓரினமே என்பதை உணர்த்துகின்றன. இவ்வாறான ஒற்றுமைக் கூறுகளைக் கண்ட மேல் நாட்டு ஆய்வாளர்கள், மெசபத்தோமியரே சிந்துவெளியில் குடியேறிய மக்கள் என்ற தலைகீழ்க் கொள்கையை அறிவித்தனர். சிந்துவெளியினின்றும், தமிழகத்தினின்றும் மேற்கே புலம் பெயர்ந்த மக்கள் பற்றிய வரலாறுகளை, இதற்கு முன் பகுதிகளில் வெளிப்படுத்தியுள்ளோம். ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்ட மேற்கித்திய இனங்கள் தமிழ் மரபைச் சார்ந்தவைகளே என்பதையும் விளக்கியுள்ளோம்.

சிந்துவெளியினின்றோ அல்லது தமிழகத்தினின்றோ மக்கள் மேற்கே புலம் பெயர்ந்தார்கள் என்று கூறுவதற்கானச் சான்றுகளும் ஏராளமாக உள்ளன. சுமேரிய, பாபிலோனிய, எபிறேய மொழி இலக்கியங்கள் இப்புலப் பெயர்வுகளை உறுதி செய்கின்றன. கிழக்கிலிருந்த மக்கள், யூப்ரதீசு - தைகிரீசு ஆற்றங்கரைகளில் குடியேறிய செய்திகளை விவிலிய நூல் தெளிவாக விளக்குவதையும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். தொல் தமிழர் வரலாற்றில், குமரிக் கண்ட அழிவும், அதனைத் தொடர்ந்து, தமிழரின் குடியேற்றங்களும், ஒன்றையொன்று தழுவிச் செல்லும் நிகழ்வுகளாகும். இவை இரண்டையும் பிரித்துப் பார்க்கும் போது குழப்பங்களே மிஞ்சும். ஆய்வா ளர்கள் இவ்விரு நிகழ்வுகளையும் இணைத்துப் பார்க்காமல், வரலாற்றை எழுத முற்பட்டனர். குமரிக் கண்டம், தமிழரின் மேலை நாட்டுப் பரவல் ஆகிய இரு நிகழ்வுகளையும் இணைத்துக் கூறாத உலகவரலாறு அறுபட்ட சங்கிலி

தமிழரின் வரலாற்றில் ஏற்பட்ட இக்கட்டான நிகழ்வே, குமரிக் கண்ட அழிவாகும். பல்லாயிரம் மக்கள் மாண்டு போனது, அவர்களின் நாகரிக நகரங்கள் அழிந்துபோனது, அவர்கள் படைத்திருந்த இலக்கியங்கள் மறைந்து போனது, தொல் தமிழரின் வரலாற்றில் துயர நிகழ்வாகும். இதுவே, புதிய உலகைத் தோற்றுவிக்கவும், புதுப்புது நாகரிகங்கள் வளரத் தொடக்கமாகவும் அமைந்தது. இன்றைய தமிழகமும் இலங்கையும் குமரிக் கண்டத்தின் எச்சங்களாகக் கருதப்படு கின்றன. குமரிக் கண்டத்தின் வரைபடத்தைக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடிமையான செயலாகும். அடிப்படையில், தமிழகத்துக்குத் தெற்கே, இந்தியப் பெருங்கடலில் குமரிக் கண்டம் நிலை பெற்றிருந்தது என்பதை அறியலாம். கிழக்கே இந்தோனேசியா தொடங்கி, மேற்கே மடகாஸ்கர் வரையி லான, குமரிக்கண்டத்தின் எச்சங்கள், அவை ஒரு காலத்தில் பரந்த நிலப்பரப்பாக இணைந்திருந்தன என்பதைக் கூறுகின்றன.

குமரிக் கண்ட அழிவின் போதும், பின்னரும் தமிழர்கள் பேரச்ச உணர்வில் இருந்தனர். அழிவினின்று தப்பிப் பிழைத்த மக்கள், மீண்டும் வெள்ள நிகழ்வு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில், வடக்கு நோக்கிச் சென்றனர். குமரிக் கண்டத்தின் எச்சங்களாக இருந்த தமிழகமும் இலங்கையும் கூட, தமிழர் களின் பாதுகாப்பான நிலமாக இருக்காது எனக்கருதினர். இதன் அடிப்படையில் தமிழகத்தினின்றும் வடக்கு நோக் கியும், கிழக்கு மேற்குத் திசைகள் நோக்கியும் தமிழர்கள் குடியேறத் தலைப்பட்டனர். இக்குடியேற்றங்கள் கூட்டங் கூட்டமாக (Exodus) நிகழ்ந்ததாகக் கருத இடமுண்டு. இவ்வாறு இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் குடியேறியவர்களே, சிந்துவெளி மக்கள் எனப்படுவர். சிந்துவெளி மக்கள் யார் என்ற கேள்விக்கு, அவர்கள் தமிழகத்தினின்றும் வெள்ளத் துக்கு அச்சப்பட்டு வடக்கே குடியேறிய தமிழர்களே என்பது தான் விடையாகும்.

சிந்துவெளி மக்கள் தமிழர்களே என்பதற்கான பல்வேறு சான்றுகள் இன்று தெளிவு படுத்தப்பட்டுள்ளன. தங்களது முன்னோர் குமரிக்கண்டத்தில் தோற்றுவித்த நகரிய நாகரி கத்தை, மீண்டும் சிந்துவெளியில் உருவாக்கினர். இதே கால அளவில், தமிழகத்தினின்றும் பல குழுக்கள் மேற்கே சென்று குடியேறினர் என்பதற்கானச் சான்றுகளும் உள்ளன. சிந்து

வெளிப்படத் தொடங்கிய காலத்தில், பனிப்பாறைகள் உருகத் தொடங்கின. இவ்வாறான பனி உறையும் காலத்தையும், மீண்டும் அது உருகி நீராகும் காலத்தையும் ஓசோன் மண்டல மாறுபாடுகளே உருவாக்கின. புகை மண்டிக்கிடந்த காலத்தை பனிக்காலம் (ice age) என்றும், பனிஉறைக்காலம் (age of geciation) என்றும் கூறுவர்.[829]

காடுகளில் பற்றிக் கொண்ட தீயின் வெப்பத்தால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த பல உயிரினங்கள், தங்கள் இனங்களை விட்டுச் செல்லாமலேயே அழிந்து போயின. தீனோசர் எனப்படும் உருவில் பெரிய விலங்கினமும் இவ்வாறு அழிந்து போனதாக அறிவியலார் கூறுகின்றனர். இயற்கையின் சுழற்கியில் புதுப்புது உயிர்கள் தோன்றுவதும், பழையன மறைவதுமான சுழற்சக்கரம் ஓடிக் கொண்டே இருப்பதாகவும் அறிவியலார் கூறுகின்றனர்.

இவ்வாறு புவி வெப்படைவதும், குளிர்வதும், பனி உறைவதும், பின் உருகுவதும் காலம் தோறும் நடந்து வந்துள்ள நிகழ்வுகளாக உள்ளன. அண்மையில் ஏற்பட்ட பனி உருகல் காலம், கி.மு. 18000 - 12000 ஆண்டுகள் என அறிவி யாலர் கூறுகின்றனர். இக்கால அளவில் உருகிய பனியால், கடல் நீரின் உயரம் 400 அடிகள் வரை இருந்தது என்பர். இதனால், கடல் தனது எல்லையை விரிவாக்கிக் கொண்டு, பல நிலப்பகுதிகளைக் காவு கொண்டது. கி.மு. 20000 ஆண்டுகளில் இருந்த உலகின் தரைப் பகுதிகள், கி.மு. 12000 ஆண்டுகளில், முற்றிலுமாக மாறிப் போயிருந்தன. பல நிலப் பகுதிகள் (400 அடிகளுக்குட் குறைந்தவை) கடலில் மூழ்கின. புதிய எல்லைகளைக் கொண்ட நிலப் பகுதிகள் தோன்றின.830

இக்கால அளவில் தான், குமரிக் கண்டம் (6000 ஆண்டுகளாக) சிறிது சிறிதாகத் தனது பரப்பளவை இழந்து. சில நிலப்பகுதிகளையும் தீவுகளையும் எச்சங்களாக்கி விட்டு மறைந்து போயிற்று. குமரிக் கண்டத்தைக் கொடுங்கடல் கொண்ட இந்நிகழ்வை, உலகின் பல்வேறு நாகரிகங்கள் தங்கள் இலக்கியங்கள் வாயிலாகவும் மரபுக் கதைகள் வாயிலாகவும் எடுத்தியம்புகின்றன. இலக்கியங்கள் மட்டுமே சுட்டிக் காட் டிய பனி உருகல் காலத்தை, இன்று அறிவியல் தெளிவுபடுத்து கிறது.

கூறுகின்றனர். இவ்வுலகின் நீர், நிலப்பகுதிகள் எப்போதும் நிலையான வடிவங்களைப் பெற்றிருக்கவில்லை. இயற்கையின் பல்வேறு தாக்குதல்களால், அவை உருமாறிக் கொண்டே வந்துள்ளன. தற்போது, புவி வெப்பமடைதல் பற்றி (global warming) அறிவியலாளர்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர். புவி மண்டலத்தைச் சுற்றியுள்ள தடுப்புச் சுவர் போன்ற பகுதி இயற்கையாகவே அமைந்துள்ளது (Ozone). தரையிலிருந்து 22 கி.மீ (14 கல்) உயரத்தில் அமைந்துள்ள இவ்வட்ட மண்டலம், சூரியனின்று வரும் புற ஊதாக் கதிர்கள், காற்று மண்டலத்திலுள்ள உயிர்க்காற்றுடன் கலப்பதால் (O_3), உருவாகின்றது என்பர். இத்தடுப்புச் சுவர், சூரியனிடமிருந்து வெளிப்படும் பல்வேறு வெப்பக் கதிர்களைத் தடுத்து விடுகிறது. அதனால் புவியின் வெப்பநிலை சீராக அமைவதற்கு அத்தடுப்பு உதவி வருகிறது.[828]

இத்தடுப்பு மண்டலத்தில் அவ்வப்போது ஓட்டைகள் விழுகின்றன என்றும், அந்த ஓட்டைகள், புவியில் ஏற்படும் வெப்ப உயர்வால் ஏற்படுகின்றன என்றும் அறிவியலார் கூறுகின்றனர். உலகம் தோன்றிய நாளிலிருந்து பல முறை இவ்வாறான நிகழ்வுகள் நடந்துள்ளன என்பர். அக்காலத்தில் தரைப் பகுதிகளை காடுகளே நிறைத்திருந்தன. காடுகளில் இயற்கையாகத் தோன்றும் தீ, பல நூறாண்டுகள் கூட எரிந்து, காடுகளை அழித்தன என்பதும், அச்சாம்பல்களே உரங் களாகி, மீண்டும் காடுகள் வளர்ந்தன என்பதும், இயற்கையின் சுழற்சி நிலைகளாகும். பலநூறு ஆண்டுகளாக எரிந்து கொண்டிருந்த காடுகளில் எழுந்த தீயின் தாக்கங்களால், ஓசோன் உறை கிழிந்து போன தென்றும் கூறுவர். ஓசோன் படலத்தில் ஏற்படும் மாற்றங்கள் புவியின்மேல் பெரும் தாக்கங்களைத் தோற்றுவித்தன.

காடுகளில் எழுந்த தீயின் புகை புவியைச் சுற்றிப் பரவி, சூரியனின் கதிர்களைத் தடுத்ததோடு பல நூறு ஆண்டுகள், சூரியஒளி புவியின் மேல் படராதவாறு செய்தன. இதனால் புவியின் தன்மை மேலும் குளிர்ந்து, நீர் நிலைகள், பனிப் பாளங்களாக உருவெடுத்தன. வட, தென், முனையிலிருந்து பல ஆயிரம் கிலோ மீட்டர்கள் தொலைவுக்கு கடல் பகுதிகள் பனிப்படலங்களாயின. உலகெங்கும் பனிப்படலமே காட்சி யளித்தது. புகையின் தாக்கங்கள் குறைந்து, சூரியக் கதிர்கள்

சிந்துவெளி மக்கள் யாவர்?

இந்திய வரலாற்றை எழுதமுற்படுவோர், அதனைத் தெற்கிலிருந்துதான் தொடங்க வேண்டும் என்று, வின்சென்ட் ஸ்மித் என்ற வரலாற்று ஆய்வாளர் கூறுகிறார். இதேகருத்தை பண்டிதர் நேருவும் உறுதிப் படுத்திகிறார். ஆனால் இந்திய வரலாறு வடக்கிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட்டுள்ளது. அதனால்தான் இந்திய வரலாற்றுக் சங்கிலி பல இடங்களில் அறுந்து தொங்குகிறது. அவ்வெற்றிடங்களை இதுவரை எவரும் நிறப்ப முயற்சிக்கவில்லை. இந்திய வரலாற்றை இன அடிப்படையிலும், சாதி அடிப்படையிலுமே நோக்கி எழுதினர் என்பது பலருடைய கருத்து. தெற்கிலிருந்து தொடங்க வேண்டும் என்றால், அது குமரிக் கண்டத்திலிருந்தே தொடங்க வேண்டும். அப்போதுதான் தமிழர்கள் யார் என்ற கேள்விக்கு விடை கிடைக்கும். சிந்துவெளியில் வாழ்ந்திருந்தவர்கள் ஆரியர்களே, திராவிடர்களே என்ற நிலைப்பாட்டிற்கான காரணம், அது தெற்கிலிருந்து தொடங்கப்படாததே எனலாம்.

சிந்துவெளியில் மக்கள் குடியேற்றம் கி.மு. 2500 ஆண்டுகள் தொடங்கி, கி.மு. 3500, கி.மு. 7500 என்று நீண்டு, பாகிஸ்தானிய வரலாற்றை அறிஞர்களால், அது கி.மு. 9500 ஆண்டுகள் என அண்மையில் அறிவிக்கப்பட்டது. இப்போதும் கூடச் சிலர் பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருக்கின் றனர். கி.மு. 12000 - 1000 ஆண்டுகளில் சிந்துவெளியில் தமிழர்களின் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதற்குப் பல்வேறு சான்றுகளைத் தர இயலும். பாகிஸ்தானிய அறிஞர் சத்தார், தனது ஆய்வு முடிவுகள் பற்றி அறிவித்தபோது, சிந்துவெளி நாகரிகம் கி.மு. 9500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றார். அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் சிறப்பிற் குரியது கண்ணாடி (glass)யாகும். இடைக்காலத்து பெல்ஜியம் நாட்டுக் கண்ணாடிகளுக்கு இணையான வழவழப்பைக் கொண்ட கண்ணாடிகளை சிந்துவெளி மக்கள் பயன்படுத் தினர் என்பது புதிய தகவலாகும். அந்தத் தொழில் நுட்பம் பிற்காலத்தில் ஏன் அறியப்படவில்லை என்பது புதிராகவே உள்ளது.

உலகில் புவியியல் வரலாற்றைக் கூறும் ஆய்வாளர்கள், இவ்வுலகின் நீர்ப்பகுதிகளும் (73%) நிலப் பகுதிகளும் காலம் தோறும் தமது எல்லைகளை மாற்றிக் கொண்டு வந்ததாகக்

விட்டுச் சென்றுள்ளது. முறையான ஆய்வுகள், குமரிக்கண்ட வரலாற்றையும், தொல்தமிழர் வரலாற்றையும் எடுத்துக் கூறும் எனலாம்.

சீவா, ஏராளமான முத்திரைகளைப் படித்துக் காட்டியுள்ளார். அவற்றில் இரண்டு முத்திரைகள் குறிப்பிடத்தக்கன. பெரும்பாலான ஆய்வாளர்களைக் கவர்ந்த முத்திரை எண் 2420, சிந்துவெளிச் சிவன், பசுபதி என இராவ் அவர்களால் படிக்கப்பட்டது. மோர்ட்டிமர் வீலர், ஆதி சிவன் என்று படித்தார்.[826] சீவா, அம்முத்திரை தமிழ்க் கடவுளைக் குறிப்பதாகவே கூறுகிறார். எண் 2068 முத்திரையில், தமிழ் என்ற சொல்லே பொறிக்கப்பட்டுள்ளதாக சீவா கூறுகிறார். வேறு எந்த ஆய்வாளரும் தமிழ் என்ற ஒரு சொல் இருப்பதாகக் கூறவில்லை.[827] (ப.248)

சிந்துவெளி எழுத்துகளில் க என்ற உயிர்மெய்யைக் குறிக்க பல்வேறு வடிவங்கள் உள்ளன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனைப் போன்றே ஒவ்வொரு எழுத்துக்கும் எண்ணுக்கும் பல்வேறு வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றில் எந்த குறியீட்டைப் பொருத்திப்பார்ப்பது என்பதில் குழப்பம் ஏற்படும். இவை எழுத்து வடிவங்களின் வளர்ச்சியா அல்லது அவை வேறு எழுத்துகளா என்பதை ஆய்வாளர்கள் விளக்க வேண்டும். சீவாவின் "சிந்துவெளியில் முந்து தமிழ்" என்ற நூல், புதிய முயற்சி என்பதோடு, ஏராளமான எழுத்துகளும் சொற்களும் இந்நூலில் படிக்கப்பட்டுள்ளன. நூலின் தமிழ்நடை சிறப்பாகவே உள்ள தென்றாலும், பலரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமைப் படுத்தியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

சொற்கள் படிக்கப்பட்ட அளவில், அச்சொற்களுக்கான பொருள் தரப்படவில்லை. அச் சொற்களைத் தழுவிய பொருள் விளக்கத்தையும் அளித்திருக்கலாம். நூலைப் படித்து முடித்தபோது, மிகுந்த களைப்பும் சோர்வும் ஏற்படுகின்றன. எழுதியவருக்கு எவ்வாறு களைப்பும் சோர்வும் மிகுந்திருக்கும். சீவா போன்ற ஆய்வாளர்களுக்கு அரசாங்கம், செம்மொழி நிறுவனம், பல்கலைக் கழகங்கள் நிறைவான பொருளுதவிகள் செய்ய வேண்டும்.

ஆசியா (இன்றைய துருக்கி) பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு வந்தவர்களே ஆரியர்கள் என்ற தகவலை, 2004 ஆம் ஆண்டில் வெளியான "எபிறேயத்தின் தாய் மொழி தமிழே" என்ற நூலிலும், அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட நூல்களிலும் நாம் தெளிவு படுத்தியுள்ளோம்.

மெசபத்தோமியாவில் பேசப்பட்ட முன்மொழி (Proto - language) பற்றிய குறிப்பு விவிலியத்தில் காணப்பட்டாலும், அது மொழி என்பதை விவிலியம் விளக்கவில்லை. பல்வேறு மொழிகளை (செமிட்டிக், ஆமெட்டிக், இந்தோ ஐரோப்பியம்) ஆய்வு செய்ததின் அடிப்படையில், அந்த முன் மொழி தமிழே என்பதை ஏறக்குறைய ஏழு நூல்கள் வாயிலாக நிறுவியுள் ளோம். எனவே, மேற்கூறப்பட்ட மூன்று மொழிக் குடும்பங் களிலும் தமிழ்மொழியின் தாக்கங்கள் நிறையவே இருந்தன, இருக்கின்றன, இந்தோ ஐரோப்பிய மொழிகளிலும் தமிழின் பரவலான தாக்கங்கள் உண்டு. அதன் அடிப்படையில், இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியரின் தாய்மொழியிலும் தமிழ்ச் சொற்கள் இருந்தன என்பதையும் நிறுவியுள்ளோம்.

நாம் இதுவரையில் வலியுறுத்திச் சொல்லி வந்த மொழிக் கொள்கையை, "புதிய ஆராய்ச்சி முடிவு" என்ற பெயரில், தினமணி செய்தியாக வெளிவந்துள்ளது. நாம் இதே ஆய்வு முடிவை வெளியிட்டபோது, எந்த ஊடகமும், திறனாய்வு களும் கண்டு கொள்ளவில்லை. இன்று மேலை நாட்டார் கூறியவுடன், "புதிய ஆராய்ச்சி" என்ற பெயரில் ஊடகங்களில் வெளிவருகின்றன. தமிழன் உலகத்தரம் வாய்ந்த ஆய்வுகளை வெளியிட மாட்டான் என்ற கருத்தைக் கொண்டிருப்பவர் களுக்கு, மேற்கண்ட செய்தியைப் படைக்கின்றோம்.

பர்ப்போலா கூறும் மீன் வடிவ எழுத்து பற்றி ஏற்கனவே விளக்கியுள்ளோம். ஆரல், வெள்ளி போன்ற விளக்கங்க்ளுக்கு அப்பாற்பட்டு, மீனுடன் 73 இணைவடிவங்களும், மைம் மீனுடன் 59 இணை வடிவங்களும் உள்ளன என்பதை சீவா எடுத்துக் காட்டுகிறார்.[825] இவ்வெழுத்துகளுக்கெல்லாம் இவ்வாறு வடிவங்கள் அறியப்பட்டுள்ள போது, ஏனைய இடங்களும் அகழ்வாய்வுகளுக் குட்படுத்தப்பட்டால், வியப்பும் மலைப்பும் தான் தோன்றும். பாபிலோன், எகிப்து போன் றில்லாது, மிகப்பரந்த பகுதிகளைக் கொண்டிருந்த சிந்து வெளிப் பேரரசு, ஏராளமான வரலாற்றுத் தடயங்களை

கி.மு. 10000 ஆண்டுகளில் கிழக்கிலிருந்து வந்தவர்கள் (சிந்துவெளி), தைகிரீசு ஆற்றைக் கடந்து, யூப்ரதீசு - தைகிரீசு ஆறுகளுக்கிடையிலான சமவெளியில் தங்கினார்கள். அவர்கள் ஒரே மொழியைப் பேசியவர்கள். சில நூற்றாண்டு களில், அம்மக்கள் பல்கிப் பெருகினர். இனிமேலும் இப் பகுதியில் வாழ்வதற்கும் வேளாண் தொழில் செய்வதற்கும் சிந்து சமவெளியில் இடமில்லை என்பதால், அனைவரும் ஒத்த கருத்துடன், பல்வேறு திசைகளில் பிரிந்து செல்வதென முடிவு செய்தனர். இதுவரையிலும் ஓரிடத்தில் ஒன்றாக வாழ்ந்திருந்த அந்த ஓரின மக்கள், தாங்கள் பிரிந்து செல்லு முன், தாங்கள் ஒன்றாக வாழ்ந்திருந்ததை நினைவு கூறும் வகையில், கோபுரம் ஒன்றை எழுப்பினர். சுட்ட செங்கற் களாலும், விடுமண் (pritumen) என்ற சாந்துப் பொருளாலும் கட்டப்பட்ட அக்கோபுரம் முற்றுப்பெறும் வேளையில் நின்று போனது. அதற்கான காரணம் தெரியவில்லை. அவ்விடத்தினின்றும் வெளியேறிய மக்கள் கனான் (பால்ஸ் தீனம்), அரேபியா, எகிப்து, எத்தியோப்பியா போன்ற தென் திசை நாடுகளுக்கும், சிறிய ஆசியா, அனதோலியா, கருங்கடல், கிரேக்கம், கரட்டுத் தீவு (கிரீட்) போன்ற மேற்கு, வடமேற்கு நாடுகுளுக்கும் பரவிச்சென்றனர். ஒரு பகுதி மக்கள், பழைய இடத்திலேயே தங்கினர். பிரிந்து சென்றமக்கள், தங்கள் மூல மொழியினின்றும் கிளைத்த மொழிகளைப் பேசத் தலைப் பட்டனர். உலக வரலாற்றில் முதன் மொழி, மூல மொழி, பல்வேறு மொழிகளாக அப்போது முதல் கிளைக்கத் தொடங் கியது. தென் மக்கள் பேசியது ஆமெட்டிக் என்றும், நிலைத்த மக்கள் பேசியது செமிட்டிக் என்றும், மேற்கே வடமேற்கே (காஸ்பியன் முதல் கருங்கடல் வரை) சென்றவர்கள் பேசியது இந்தோ - ஐரோப்பிய மொழியென்றும், பிற்கால மொழியி யலார் வகுத்தனர்[824]

மேலே சொல்லப்பட்ட நிகழ்வுகளை, விவிலியம் விளக்கு கிறது (அதிஆகமம், 11 அதிகாரம்). வடக்கே, வட மேற்கே சென்றவர்கள் பேசிய இந்தோ ஐரோப்பிய மொழி, அனதோ லியா, சிறிய ஆசியா போன்ற பகுதிகளில் பேசப்பட்டு, மேற்கே கிரேக்கம் வரை பரவியது என்பர். அனதோவிய அரசின் தலை நகரமான போகஸ்கோய், அண்மையில் அகழ்வாய்வு செய்யப் பட்டபோது, பல்வேறு வரலாற்று உண்மைகள் வெளிப்பட்டன. அத்தகவல்களின் அடிப்படையிலேயே, அனதோலியா, சிறிய

களைக் கூறுவதில்லை, எழுதுவதில்லை என சொல்லி வருபவர்களுக்கு, இச்செய்தியை முன் வைக்கின்றோம்.[823]

நியூயார்க், ஆக்.24: இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட இந்தோ ஐரோப்பிய மொழிகளின் பிறப்பிடம், இன்றைய துருக்கி என புதிய ஆராய்ச்சி ஒன்று தெரிவிக்கின்றது. நியூசிலாந்தின் ஆக்லாந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்து பரிணாம உயிரியல் விஞ்ஞானியான குவெண்டின் அறிவித்த செய்திகள் நாளிதழ்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மிகத் தொன்மையான மொழிகள், இன்றைக்குப் பேசப்படும் மொழிகள் என நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளிலிருந்து ஏராளமான சொற்களை ஆராய்ந்ததில், அவை அனைத்தும் உருவான இடம் அனடோலியா என்னும் பிரதேசம் எனத் தெரியவந்துள்ளதாக, அந்த ஆய்வு தெரிவிக்கிறது. பண்டைய காலத்தில் அனடோலியா என அறியப்பட்ட இடம் தான் துருக்கி.

இந்தி, ஆங்கிலம், ரஷியன், ஜெர்மன், ஸ்பானிஷ், கிரேக்கம் உள்ளிட்ட இந்தோ ஐரோப்பிய மொழிகளை, உலகின் அனைத்துக் கண்டங்களிலும் ஏறத்தாழ 300 கோடிப் பேர் பேசுகின்றனர்.

இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கருங்கடல் காஸ்பியன் பகுதியையொட்டிய பான்டிக்ஸ்டெப்பீஸ் என்ற பிரதேசத்தில் தோன்றியவை என்ற கோட்பாடு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் அனடோலியா பிரதேசத்தில் 8 ஆயிரம் அல்லது 9500 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மொழிக் குடும்பம் தோன்றியிருக்கலாம் என்று புதிய ஆராய்ச்சி கூறுகிறது. விவசாய முறைகள் பரவிய போது, மொழிகளும் வேறு இடங்களுக்குப் பரவின என்கிறது இக்கோட்பாடு.

103 மொழிகளில் புழக்கத்தில் இருக்கும் சொற்களின் உருவாக்கத்துடன் நோய்களின் தோற்றம் அவை பரவியது உள்ளிட்ட விவரங்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியதில் புதிய முடிவுகள் கிடைத்துள்ளன. - நன்றி: தினமணி.

தொடக்க காலம் முதல் இடமிருந்து வலமாகவே எழுதப் பட்டன என மதிவாணன் கூறுகிறார். தமிழினின்றும் இணைந்த மொழிகளான செமிட்டிக் மொழிகள், வலமிருந்து இடமாக எழுதப்படுகின்றன. இதற்கான காரணங்களைச் சற்று விரிவா கவே, ஆய்வு செய்தல் வேண்டும். செமிட்புக் மொழியினின்றும் இணைந்த கிரேக்கம், இலத்தீன் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகள் இடமிருந்து வலமாக எழுதப்படுகின்றன. இந்த நடை முறைகளுக்கு எங்கோ ஒரு மையப்புள்ளி இருக்கிறது. அம்மையப்புள்ளியைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ஆரியர்களே சிந்துவெளியின் மக்கள் என்ற நிலைப்பாடு தற்போது தளர்ந்து போய்விட்ட போதிலும், அதனையே சிலர் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றனர். ஆரியர்களுக்கும் சிந்து வெளி நாகரிகத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற கொள்கையில் சீவா தெளிவாக இருக்கிறார். ஆரியருடைய தாயகம் வடக்கு மெசபத்தோமியாவே (தற்காலத் துருக்கி) என்பதை நாம் வலியுறுத்தியுள்ளோம். ஈத்தியர் இனத்தா ருக்கும் ஆரியருக்கும் உள்ள தொடர்புகளை, நாம் ஏற்கனவே விளக்கியுள்ளோம். இந்த அணுகுமுறை தெளிவாகவே உள்ளது. போகோஸ்கோய் நகரத்திய அகழ்வாய்வுகள், இந்திய ஆரியரை மூடியிருந்த திரை விலகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதை சீவா சுட்டிக் காட்டுகிறார்.

இந்திய ஆரியரைச் செர்மானியர் என்றும், வடக்கு ஐரோப்பியர் என்றும், வட முனையிலிருந்து வந்தவர்கள் என்றும் ஆய்வாளர்கள் கணித்தனர். எட்டு ஆண்டுகளுக்கு முன்பே இந்திய ஆரியர், வடக்கு மெசபத்தோமியாவைச் சார்ந்த அனதோலியப் பகுதியைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்பதை, விவிலிய ஆய்வாளர்கள் தரும் செய்திகளைக் காட்டி, விளக்கியிருந்தோம். இவ்வாறான கருத்தை மேலை ஆய்வாளர்களும் தெரிவிக்கவில்லை. இது பற்றி நம்மிடம் விளக்கம் கேட்ட பலருக்கு, பொது மேடைகள், தொலைபேசி அழைப்புகள் மூலமாக விளக்கம் அளித்துள்ளோம். எமது கருத்தை சீவாவும் ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழனாகிய நாம் தமிழில் இக்கருத்தை வலியுறுத்திய போது, அக்கருத்துக்கு வலிமை கிட்டவில்லை.

24.08.2012 அன்று கினமணி நாளிதழில் வந்த செய்தியை, தமிழ்நாட்டு ஆய்வாளர்கள் உலகத்தரம் வாய்ந்த கருத்துக்

முந்தி முந்தி ஆய்வு முடிவுகளை எடுக்கப்பட்ட நிலையே. இரும்பு என்ற சொல்லுக்கான மூலமும் வேரும் உலக மொழிகளில் தமிழிலேயே காணப்படுகின்றன என்பதால், இரும்புக்கு அப்பெயரை இட்டவன் தமிழனே என்க,

தமிழகத்து ஆய்வாளர்களின் ஆய்வுகள், உலகத்தரம் வாய்ந்ததாக இல்லை என்று சிலர் அடிக்கடி கூறி வருகின்றனர். உலகத் தரத்துக்கு இவர்கள் என்ன அளவு கோலை வைத் திருக்கிறார்கள் என்பது புரியவில்லை. இப்படிக் கூறுவதின் மூலம் தங்கள் மிகச் சிறந்த திறனாய்வாளர்கள் என்று பிறர் கருத வேண்டும் என நினைக்கிறார்கள் போலும். தங்களுடைய தகுதியின்மையை மறைக்க, தகுதியானவர்களை கொச்சைப் படுத்துவது, தங்களைப் பற்றிய மாயத்தோற்றத்தை உருவாக்கிக் கொள்ள முயல்கிறார்கள் என்க. ஆங்கிலத்தில் எழுதினால் அது உலகத் தரம் வாய்ந்தது என்று சிலர் கருது கின்றனர். பர்ப்போலோ, இராவ் போன்றவர்களின் ஆய்வுகள் ஆங்கிலத்தில் உள்ளனவென்பதால், அது உலகத்தரத்தைப் பெற்று விடுகின்றன. சீவா மதிவாணன் போன்றோர் தமிழில் எழுதுவதால், அது உலகத்தரத்துக்கு உயரவில்லை போலும். சீவாவின் ஆய்வுகள் உலகத்தரம் வாய்ந்தவை என உறுதியாகக் கூறமுடியும். சற்றுக் கூடுதலாகவும் மதிப்பிடலாம். அவருக் குள்ள தகுதியின்மை, அவர் தமிழில் எழுதுவது தான். இரா. மதிவாணன், சீவா ஆகியோரின் ஆய்வுகளில் முரண்பாடுகள் இருக்கலாம். ஆய்வுகள் முரண்பாடு என்ற இலக்கணத்திற் குட்பட்டது தான். அதனால் அவர்களுடைய ஆய்வுகளை எவரும் குறைத்து மதிப்பிட இயலாது. பாவாணருடைய ஆய்வுகள் உலகத்தரம் அற்றவை என்று அப்போது கூறினார்கள். இப்போது எவராவது கூறுவார்களா?

தமிழ்ச் சொற்கள் இடம் இருந்து வலமாக எழுதப் பட்டதா அல்லது வலமிருந்து இடமாக எழுதப்பட்டதா என்ற ஆய்வு இன்னும் முற்றுப் பெறவில்லை. இரா. மதிவாணன் இடமிருந்துவலம் என்ற நிலையில் உள்ளார். சீவா வலமிருந்து இடம் எனக் கூறுகிறார். இந்த நிலைப்பாடுகளில் மேலும் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இடம் வலம், வலம் இடம் ஆகிய கருத்துகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் இதுவரை தரப்படவில்லை. சான்றுகளுடன் நிறுவப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. தமிழ்ச் சொற்கள்

யால், தமிழின் பெருமை குறைக்கப்பட்டு, சிறுமைப்படுத்தப் படுவதாகவும் உணர்கிறோம்.

திராவிடம் தவிர்த்த சீவாவின் சிந்துவெளி ஆய்வுகள் மிகச் சிறப்பாக உள்ளன. சங்க காலக் கணக்கை, கி.மு. 300 - கி.பி. 300 என்றவாறு ஏற்றுக் கொள்வதும் அதற்குரிய சான்றுகளால் விளக்கப்படவில்லை. ஆங்கிலேயர் வகுத்த கற்காலம். புதிய கற்காலம், செம்புக்காலம், இரும்புக்காலம் என்ற கால வரையறைகள், தமிழர் வரலாற்றுக்குப் பொருந்தாது. சிந்துவெளியின் கால அளவுகளைக் கூட, இந்த அளவுகோளில் எடைபோடுகின்றனர். சங்க காலம், கி.மு. 900க்கு முற்பட்டது என்று சீவா கூறுவது ஏற்கக் கூடியதே. அதற்கான சான்றுகளைக் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அவை, கண்டிப்பாகக் கிடைக்கும். அதற்கான முயற்சிகளைக் கடுமையாக்க வேண்டும். சங்க காலம் என்பது, கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது நமது கருதுகோளாக உள்ளது. சங்ககாலம் என்று ஒன்றில்லை. அது வரலாற்றை வரன்முறைப்படுத்தவே சொல்லப்பட்டது. என்ற கருத்தையும் சிலர் கூறுகின்றனர். தமிழர் வாழ்ந்திருந்த காலங்கள் தோறும், தமிழை ஆய்வு செய்தனர், இலக்கியங்களைப் படைத்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ் மன்னர்கள் அனைவருமே தமிழைப் போற்றி வளர்த்தனர், புரந்தனர் எனலாம். சங்க காலம் பற்றிய செய்திகளின் அடிப்படையிலேயே, வேதகாலம் என்ற கருத்தை ஆய்வாளர்கள் வகுத்தனர். வேதகாலம் என்ற ஒன்று இருந்ததில்லையெனப் பலரும் கூறிவருகின்றனர்.

சிந்துவெளியின் கால அளவை, ஆங்கிலேயரின் அளவுகோலில் பார்க்கக் கூடாது. சிந்துவெளியில் தமிழர்கள் நகரிய நாகரிகத்தில் வாழ்ந்திருந்தபோது, ஐரோப்பாவின் மேற்கு வடமேற்குப் பகுதி மக்கள் வேட்டையாடிக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயருக்குக் கற்காலம் என்பது, தமிழர்களுக்கு நாகரிகத்தின் முதிர்ச்சிக் காலமாகும். சிந்துவெளியில் செம்பு மட்டுமே கிடைத்துள்ளது என்பதால், இரும்பின் பயன்பாடு அங்கு அறியப்படவில்லை என்பர். நூற்றுக்கு இரண்டு பங்கு பகுதிகளே அறியப்பட்ட நிலையில், சிந்துவெளியில் இரும்பி பயன்பாடு இல்லை என்று முடிவு செய்து விடக்கூடாது. சேலத்தின் இரும்பு, துருக்கி வரையில் அறியப்பட்டுள்ளது எனும்போது, சிந்துவெளியில் அறியப்படவில்லை என்பது

பட்டவை. இப்போது கூட, தமிழ் எழுத்துகளில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்ற கருத்து சிலரிடம் உள்ளது. அது போலவே, தமிழ் மொழியில் அறியப்படும் சொற்களும், காலம், குடியிருக்கும் நிலப்பகுதிகள், இயற்கையின் மாறு பாடுகள், புதிய கண்டு பிடிப்புகள், புதிய சூழல்கள் ஆகிய காரணிகளைக் கொண்டு மாற்றம் பெறுவது இயற்கையே. அம்மாற்றங்கள் அனைத்தும் தமிழ் வேரினைத் தொட்டு, அதனை விட்டு அகலாதவாறே மாறிவந்துள்ளன. தொல் காப்பியர் காலத்துச் சொற்களில் பல சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. புதிய சொற்கள் அறிமுகப் படுத்தப்பட் டுள்ளன. சங்க காலத்துச் சொற்கள் இடைக்காலத்தில் அறியப்படவில்லை. இடைக்காலச் சொற்கள் தற்காலத்தில் இல்லை. எதிர்காலத்தில் மேலும் பல சொற்கள் தமிழில் தோன்றும். இவ்வாறு காலம் தோறும் மாறிமாறி அறியப்படும் சொற்கள், தமிழ் வேரினையே தொட்டு நிற்கின்றன.

கண் என்ற மூலச் சொல், காண் என விரிந்தது. காண் - கணி என விரிந்தது. கணித்தவர் கணியர் எனப்பட்டனர். கணியர், கணக்கர் என்றும் சொல்லப்பட்டனர். தற்காலத்தில் அச் சொற்களின் தொடர்ச்சியாக, கணினி என்ற சொல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், கணினி என்ற சொல் காணப்படவில்லை. எனவே, அதனைத் தமிழ்ச் சொல் என ஏற்க இயலாது என்ற சொல் முடியுமா? எனவே, தமிழ்மொழி என்பது ஒன்றுதான், அதன் வளர்ச்சி, காலம் தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. சீரிளமைத் தமிழ் என்று கூறுவது, அதன் தொடர்ந்த நிலைப்பாட்டை விளக்கு வதாகும். எனவே, பழங்காலத்தமிழை, தொல் தமிழ் என்றோ, முன் தமிழ் என்றோ அழைப்பதில் தவறில்லை. அதன் தொன்மையான நிலைப்பாட்டை மறைக்கும் வகையில், திராவிடம் - முன் திராவிடம் என அழைப்பது, தமிழ்ப்பகை வர்களுக்குத் துணைபோகும் செயலே என ஆய்வாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எந்த வகையிலும் தமிழ் மொழி யோடு திராவிடம் என்ற சொல்லை இணைத்துப் பேசு வதையும் எழுதுவதையும் தவிர்க்க வேண்டும். திராவிடம் என்ற சொல், தமிழ்ப்பாலில் கலக்கப்படும் நஞ்சு என்பதை உணர வேண்டும். இந்த ஒரு கொள்கையோடு நாம் முற்றிலுமாக முரண்படுகின்றோம். மேலும் திராவிடம் என்ற கொள்கை

திராவிட மயக்கம் சிந்துவெளி ஆய்வாளர்களைப் பற்றிக் கொண்டிருப்பது ஆய்வுகளின் அடிப்படைகளையே திசை திருப்பி விடும். வெளிநாட்டவர் விதைத்த திராவிட வித்து, முதன் மொழி எதுவென்று தெரியாதவர்களால் விதைக்கப் பட்டது. அது இந்திய, தமிழ் ஆய்வாளர்களாலும் ஏற்கப் படுவது, வரலாற்றின் போக்கையே மாற்றிவிடும் என்பது, இப்போதும் கூட உணரப்படவில்லை. வெளி நாட்டவர் விதைத்த திராவிடம் என தென்னகம் அழைப்பதும், அதனை மற்றவர்கள் ஏற்கவேண்டும் என விரும்புவதும், கடந்த காலத்திய ஆய்வாளர்களின் சிந்தனையாக இருந்துள்ளது.

செமிட்டிக் மொழிகள் பற்றிய ஆய்வுகளை மேற் கொண்ட மேலை நாட்டவர், செமிட்டிக் மொழி, ஒரு மூலமொழியினின்றும் இணைத்த மொழிக் குடும்பமே என்றனர். அம்மூல மொழி எதுவென்று சொல்ல இயலாத ஆய்வாளர்கள், அதனை முன்மொழி என அழைப்பது ஒரு நடை முறையாகவே வகுத்துவிட்டனர்.[822] ஆப்பிரிக்க மொழிகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள், அம்மொழிகள், எகிப்திய அல்லது செமிட்டிக் மொழிகளிலிருந்து கிளைத்தவையே எனக் கூறினர். மதாம் பிளாவட்ஸ்கி என்ற பிராஞ்சு நாட்டு ஆய்வாளர், ஆப்பிரிக்க மொழிகளும், எகிப்திய செமிட்டிக் மொழிகளும், தமிழ் மொழியினின்றும் கிளைத்தவைகளே எனக் கூறுகிறார். மூலத்தைக் காட்ட இயலாமல், ஒரு மொழியைப் பற்றிய கருத்தைக் கூறுவது, அவர்தம் உண்மையான கண்டுபிடிப்புகளைக் கூட, கருது கோள்கள் என்ற நிலைக்குத் தள்ளிவிடும். இதுவரையில் சிந்து வெளி மொழிபற்றி ஆய்வு செய்தவர்கள் அங்கு பேசப்பட்ட மொழி தமிழ்மொழியே என்று எவரும் கூறவில்லை. ஆனால் அவர்கள் மேற்கோள் காட்டுகின்ற சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. அப்படி இருக்கையில், சிந்துவெளி மொழி, தமிழ் மொழியே எனக் கூறத் தயக்கம் தோன்றுவதேன் என்பதைப் புரிந்து கொள்ள இயலவில்லை.

தமிழ் மொழியின் அடிப்படையான உயிரும் மெய்யும் உயிர்மெய்யும், எக்காலத்தும் மாற்றம் பெறவில்லை. அவை களைக் குறிக்கும் வரிவடிவங்களான எழுத்துகளின் உருவங்கள் காலங்கள் தோறும் மாறிவந்துள்ளன. தமிழ் மொழியின் ஒலி வடிவங்கள் மாறாதவை, வரிவடிவங்கள் மாறுதலுக்குட்

கூறவில்லை என்ற செய்தியை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ருக்கு வேதம் கடவுளைத் தேடுகிறது என்பதே அது தரும் செய்தியாகும். ருக்கு வேதத்தில் போற்றப்படும் குறு அல்லது சிறு தெய்வங்களும் (பலர் அசுரர்களே), சிந்துவெளி மக்கள் வழிபட்டு வந்த குடித் தெய்வங்களே என்பதை, அவற்றிற்கு கடவுள் யாரென்று காட்டப்படாத நிலையில், சிந்துவெளி மொழியில், ருக்கு வேதச் சொற்களைக் கொண்டு கடயுளைக் காட்ட முற்படுவது பொருத்த மற்றது.

சிந்துவெளி நிலப்பரப்பில் நூற்றுக்கு இரண்டு பகுதிகள் அளவே, அகழ்வாய்வுகள் செய்யப்பட்டு, அம்மொழி உணரப் பட்ட நிலையில், தமிழ்மொழியே அங்கு பேசப்பட்டு, எழுதப் பட்டு நடைமுறையில் இருந்தது என்பதைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் திராவிடக் கொள்கையை வலியுறுத்தினாலும், எடுத்துக் காட்டுகள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளதை நோக்க வேண்டும். தமிழ் மொழிக்கு முதன் முன் தமிழ் (Proto - Tamil) என்ற ஒரு மொழியெல்லாம் இருந்ததில்லை. முந்து மொழி யான சிந்துமொழி, தமிழ் மொழியே. தொல்தமிழ் என்றும், தொல்தமிழர் என்றும் அழைப்பதில் தவறில்லை.

“சிந்துவெளி மக்கள் பேசிய மொழி திராவிட மொழி தான். இன்று வழக்கில் உள்ள தமிழ் முதலான மொழிகள் அடங்கிய திராவிடக் குழுவின் ஒரு பழைய மொழியே - வடிவமே சிந்துவெளி மொழி என்று தெரிகின்றது. தமிழுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. இம்மொழி மூலத் திராவிட மொழி சிந்துவெளி மொழியை விட மிகப் பழமையானது என அறிகிறோம்.”[821]

சிந்துவெளி மொழிபற்றிய சீவாவின் கருத்து மேலே சொல்லப்பட்டுள்ளது. இக்கூற்றின் படி, முன் திராவிடத் திலிருந்து, திராவிடம் பிறந்து, திராவிடத்திலிருந்து இக்கருத்து தமிழே முதன்மொழிகள், மூலமொழி என்ற கொள்கையை மறுப்பதாகும். கன்னடம், தெலுங்கு, மலையாளம் போல் தமிழும் ஒரு கிளைமொழியே என்ற கருத்து ஏந்தக் கூடிய தன்று. வரலாற்றுக் காலத்தில் உருவான, தமிழினின்றும், கிளைத்த மொழிகளோடு தமிழை ஒற்றுமைப் படுத்த முடியாது. திராவிடம், முன் திராவிடம் என்ற மொழிகள் பற்றி தொல்காப்பியமோ, சங்க இலக்கியங்களோ குறிப்பிடவில்லை.

வெளியிட்டுள்ள செய்தியைமுன் வைக்கிறோம். திரு. நாகசாமி அவர்களே! இனிமேலாவது திருந்துங்கள்.

சிந்துவெளி எழுத்துகளை ஆய்வு செய்தவர்களில், தமிழரான பூரணசந்திர சீவாவும் ஒருவர். சிந்துவெளி ஆய்வுகளை கட்டுரைகளாகவும் நூல்களாகவும் தந்தவர்கள், அவைகளை ஆங்கிலத்திலேயே கொடுத்துள்ளனர். சீவா தமிழில் அவருடைய ஆய்வுகளைப் பலநூல்களாகத் தந்துள்ளார். இரா. மதிவாணனும் ஒரு சிறுநூலைத் தமிழில் தந்துள்ளார் என்றாலும் சீவாவின் நூல்களைத் தமிழர்கள் படிக்கவும் புரிந்துகொள்ளவும் வாய்ப்புகள் உள்ளன. கடந்த 35 ஆண்டுகளாக, சிந்துவெளி ஆய்வில் தன்னை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். அளப்பரிய காலமும், கடின உழைப்பும், விடாமுயற்சியும் அவரது நூல்களில் வெளிப்படுகின்றன. பல்வேறு செய்திகளை அறிவிக்கும் முறைகளில், சீவா மற்ற ஆய்வாளர்களோடு முரண்படுகிறார். இருப்பினும் எஸ். ஆர். இராவ், பர்ப்போலோ போன்றோரின் ஆய்வுக் குறிப்புகள் சிலவற்றை ஏற்றுக் கொள்கிறார். குறிப்பாக இராவ் அவர்களை ஒரு நோக்கில் பாராட்டுகிறார். திராவிடச் சிந்தனையுள்ளவர்கள், சிந்துவெளி எழுத்துகளை ஓவிய எழுத்துகள் என்றும், குறியீட்டு வடிவங்கள் என்றும் கூறுகையில், எஸ். ஆர். இராவ், அவை ஒலியெழுத்துகள் என்றும், உயிர்மெய் எழுத்துகள் என்றும், உயிர்மெய் கலந்த ஒலியுடையவை என்றும் கூறுவதாக சீவா கருதுகிறார். இது இந்திய ஆய்வாளர்கள் அறிந்து கொள்ள இயலாத முறையாக உள்ளது எனவும் கூறுகிறார். எஸ். ஆர். இராவ், சிந்துமொழி, சமற்கிருதமே என்ற கொள்கையுடையவர் என்றாலும், அவரது அணுகுமுறை, அம்மொழிக்கும், எழுத்துகளுக்கும் வலுசேர்க்கும் என்பது சீவாவின் கருத்து.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இராவ் கூறும் பக, பகா, மக, மகா போன்ற சொற்கள், கடவுளைக் குறிப்பன. அச்சொற்களுக்கான கடவுள் யார், அவரது குறியீடு சிந்து வெளியில் அறியப்பட்டுள்ளதா என்ற தகவலை இராவ் குறிப்பிடவில்லை. ருக்கு வேதத்தில் கூட, மேற்கண்ட சொற்களை எடுத்துக்காட்டும் இராவ், அச்சொற்களுக்கு உரிய கடவுளர் பற்றிய விளக்கங்களை வேதத்திலும் காட்டவில்லை. உண்மையில், ருக்குவேதம் எந்தக்கடவுளைப் பற்றியும்

இச்சூழலில், சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகமே என முதன் முதலில் அறிவித்த வணக்கத்துக்குரிய ஈராஸ் பாதிரி யாரை நினைவு கூர்கிறோம்.

அண்மையில், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைகளின் மேனாள் இயக்குநர் திரு. நாகசாமி, "Mirror of Tamil and Sanskrit" என்ற நூலை எழுதியுள்ளார். அந்நூலில், ஆரிய நஞ்சைக் கொட்டிக் குவித்திருக்கிறார். தமிழ் நாட்டில் பிறந்து தமிழால் வளர்ந்து, தமிழ் நாட்டரசால் ஊதியம் பெறப்பட்டு, தமிழ் நாட்டுக் கோயில்களை ஆய்வு செய்ததால் கிடைத்த வருமா னத்தில் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொண்ட திரு. நாகசாமி, தன்னை ஒரு தமிழ்ப் பகைவனாக வெளிக்காட்டி யுள்ளார். இது நாள் வரை வருமானத்துக்காக வாய் மூடிக் கிடந்தவர், ஓய்வு பெற்றவுடன் ஆரிய - பிராமண உருவத்தைக் காட்டியுள்ளார்.

சமற்கிருதத்தினின்றே தமிழ் மொழி பிறந்தது என்றும், சமற்கிருதத்தால் தமிழ் வளமை பெற்றது என்றும், சமற்கிருத மொழியினின்றே தமிழ் எழுத்து முறைகள் தோன்றியது என்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட் டுள்ளார். தமிழ் நாட்டில் இருந்த ஆரியப் பிராமணர்கள் தாம், வேதக் கருத்துகளைத் தமிழில் கூறி, தமிழ்ப்புலவர்கள் அக்கருத்துகளை இலக்கியங்களாக வடித்தனர் என்றும் கூறுகிறார். தொல்காப்பியம் சமற்கிருத இலக்கண நூலின் தமிழ் மொழி பெயர்ப்பே என்றும், தொல்காப்பியர் தமிழர் அல்லர் என்றும், அவர் ஆரியப் பிராமணரே என்றும் திரு. நாகசாமி கூறுகிறார்.

அந்நூலை உச்சி முகர்ந்து, ஒருவர் திறனாய்வு செய் துள்ளார். அத்திறனாய்வுக் கட்டுரையை, தி இந்து (The Hindu) என்ற தமிழ்ப்பகை நாளேடு வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டின் வரலாற்றுக் கூடங்களை (ஆதித்த நல்லூர், அரிக்கமேடு) ஆய்வு என்ற பெயரில், அதன் காலத்தை கி.மு. 1000 எனக் கூறி, தமிழரின் வரலாற்றைப் பின்னுக்குத் தள்ளியவர் தான் இந்த நாகசாமி. திரு. நாகசாமியின் கருத்துகளை வன்மையாக் கண்டிப்பதுடன், இது போன்ற உண்மைக்குப் புறம்பான ஆய்வுகளை இனிமேலும் நூலாக வெளியிட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறோம். திரு. நாகசாமியின் பார்வைக்கு, அடுத்த தலைப்பின் இறுதியில், தி மிர்ரர் நாளேடு

1. சிந்துவெளியில் சொல்லப்படும் செய்திகள் காலத்தால் முந்தியவை.
2. மெசபத்தொமிய - பாபி லோனிய நாகரிகத்துக்கும் முற்பட்டவை.
3. எகிப்திய - ஈத்திய சமயங்களுக்கும் பல ஆயிரம் ஆண்டுகள் மூப்புடையவை.
4. ஆரிய சமயம் என்பது காலத்தால் மிகவும் பின்னால் அறியப் படுவது.

முதலில் அறியப்பட்ட சமயத்தோடு, முடிவில் அறியப் படும் சமயத்தைத் தொடர்பு படுத்துவது அறிவுடைமை ஆகாது. ஆரியச் சார்பாளர்கள் முன் வைக்கும் எக் கருத்தையும், செய்திகளையும் மொழியியல், வரலாற்றியல் துணை கொண்டு, அவை உண்மையல்ல, என்பதை நம்மால் உறுதியாகக் கூற இயலும். எதிர்ப்பாரும், மறுப்பாரும், இல்லாத காலத்தில் கூறப்பட்ட செய்திகளை, மீண்டும் மீண்டும் கூறிவருவது, ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பத் கூறும்போது அது உண்மையாகிவிடும் என்ற உத்தியின் அடிப்படையில் தான் என்பதை பலரும் உணர்ந்துள்ளனர். தற்போது ஆய்வாளர்களிடையே ஒரு மாற்றம் தெரிகின்றது. தங்களுடைய ஆரியச் சார்புக் கொள்கைகளை இப்போது அவர்கள் ஒலிப்பதை நிறுத்திவிட்டனர். சிந்துவெளி நாகரிகம். இந்திய நாகரிகமே என்ற புதிய உத்தியைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். ஆரிய நாகரிகம் எனத் தொடர்ந்து கூறிவருவது, ஏற்கப்படப் போவதில்லை என்ற உண்மையை அவர்கள் உணர்ந்துள்ள தால் ஏற்பட்டுள்ள மாற்றமே, இந்திய நாகரிகம் எனக் கூறத் தலைப்பட்டதாகும். இப்போது, அது தமிழர் நாகரிகமே எனக் கூற அவர்களால் முடியவில்லை. பொய்யான தகவல்களைக் கூறிவந்ததால் ஏற்பட்ட நாணமும் வெட்கமும் அவர்களிடையே காணப்படுகின்றன. பாகிஸ்தானிய ஆய்வாளர் டாக்டர் சத்தார் கூறுவது சிந்துவெளி நாகரிகம் கி.மு. 9500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற அண்மைச் செய்தி ஆரியச் சார்பாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்றே கூறலாம். உண்மைகளை, சிலகாலம் மறைக்கலாம், பிறகு உண்மை நிலை வெளிப்பட்டே தீரும் என்பர். சிந்து வெளி நாகரிகம், தமிழர் நாகரிகமே என்பதால், தமிழர்கள் தங்கள் முன்னோரின் நாகரிக நகரிய வாழ்க்கை முறைகளை அறிந்து பெருமைப்பட்டுக் கொள்வதில் தவறேதுமில்லை.

விளக்கியுள்ளோம். இவர்களே, இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் என்ற கருதுகோள் தற்போது வலுப் பெற்று வருகின்றது) ஈத்திய சமயத்தில், யா என்ற கடவுள், விஷ்ணு வாகவும் (Yae - Vishnu) நாவ் (Nau) என்ற சொல் கப்பலையும் குறிப்பதைச் சுட்டுகின்றனர். நேயாசு என்ற கடவுள் சிவனையும், (the destroyer god kneyash), சாந்தாசு (Shantash) என்பவன் இந்திரனையும் (thunder god), சியாயுசு (Shiyash) என்பவன் சேயுஸ் என்பவனையும் குறிப்பிடுகின்றன என்பர். நடையா (Nataya) என்ற கடவுள் நடராசன் எனவும், உஷிசு (Ushish) என்ற பெண் தெய்வமே உஷா என்றும் இன்னும் பல்வேறு கடவுளரின் பெயர்களை, ஆரியக் கடவுளோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.[820]

மேற்கண்ட கடவுளர்கள் அனைவரும் பாபிலோனியக் கடவுளரே என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். பாபிலோனில் பலகாலம் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு பகுதி யினர், வடக்கு மெசபத் தோமியாவில் குடியேறி, அவர்கள் அனதோலியர் (ஈத்தியர்) என அழைக்கப்பட்டனர் என்று வரலாறு கூறுதிறது. பாபிலோனியர், சிந்துவெளியினின்றும் மேற்கே புலம் பெயர்ந்தவர்களே என்ற உறுதியான நிலைப் பாட்டில், சிந்துவெளி நாகரிகம் பாபிலோனில் முகிழ்த்தது என்ற கருத்தை மறுப்பதற்கில்லை. வரலாற்றுச் சுழற்சியில் வெவ்வேறு பெயர்களில் அறியப்படும் ஆரியர்கள், ஒரு காலத்தில் தமிழ்க் கிளையிலின்றும் பிரிந்தவர்களே என்பதை மேலை இலக்கியங்களே கூறுவதை அறியலாம். இந்த வரலாற்று உண்மைகளை அறியாத மேலை நாட்டு ஆல்வாளர்களும். ஆரியச் சார்பு ஆய்வாளர்களும், சிந்துவெளி மக்களை மேலை நாட்டு மக்களே எனத் தவறாகக் கருதினர். சிந்துவெளிக் கடவு ளருக்கும் மேலைக் கடவுளருக்கும் உள்ள ஒற்றுமைகளை, தமிழ் அறிஞர்கள் கூறுவதையும் விடச் சிறப்பாகக் கண்டறிந்து ஆரியச் சார்பாளர்கள் விளக்கியுள்ளனர். பாபிலோனிய - ஈத்தியக் கடவுளரின் பெயர்களும், அவர்களது பணிகளும், தமிழ் மூலத்தையும், தமிழ்த் தொன்மங்களையும் அடிப்படைக் களங்களாக கொண்டவை என்பதை, ஏற்கனவே விளக்கியுள் ளோம். இந்த உண்மைகளை அறிந்திராத ஆய்வாளர்கள், புதிய கண்டு பிடிப்புகள் போல் அவற்றைக் கூறி வருகின்றனர். அவைகளில் சிறப்பாகக் கூறப்படுவது தான் ருத்திரனே சிந்துவெளிக் கடவுள் என்பதும், பிரம்மனே தலைவன் என்பதுமாகும்.

முத்திரைகள் குறிப்பிடுகின்றன எனலாம். காளையின் ஆற்றலும், யானையின் வலமும் இவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளன. இக் குறியீடுகளை ஆய்வு செய்தவர்கள், மேற்கிலிருந்த மக்களே, சிந்துவெளியில் குடியேறினர் என்ற கருத்தை வெளியிட்டனர். இக்கருத்து எவ்வாறாயினும், சிந்துவெளிச் சிந்தனைகள் மேற்கிலும் அறியப்பட்டிருந்தன என்ற உண்மை வெளிப்படுவதைக் காணலாம். பிற்காலத்திய கிருஷ்ணனின் அவதாரக் கதைகளை மேற்கோள் காட்டி, ஆரியத் தொன்மங்களின் தாக்கங்கள், சிந்துவெளியில் காணப்பட்டதாகக் கூறினர். சிந்துவெளியின் முத்திரை முகங்களே அவதாரக் கதைகளுக்கு மூலமாய் அமைந்தன என்பதே உண்மை நிலையாகும். மீன், ஆமை, பன்றி, அரிமா போன்ற முகங்களில் கிருஷ்ணாவதாரம் சொல்லப்பட்டுள்ளது. வராக அவதாரத்தை, சிந்துவெளியில் காணப்படும் ஒற்றைக் கொம்பன் (rhinoceros) விலங்கோடு இணைக்கின்றனர்.

சிந்துவெளியில் பூமாதேவி (Mother of earth) வழிபாடு இருந்தது என்பர். இவ்வழிபாடு ஆரியர்களுடையது என்றும் கருதப்படுகிறது. சிந்துவெளியில் காணப்பட்ட பல்வேறு வழிபாட்டுக் கூறுகள், ஆரிய சமயத்திலும் காணப்படுவதால், சிந்துவெளி மக்களுக்கும் ஆரியர்களுக்கும் உள்ள தொடர்பு உறுதிப்படுவதாகவும் கூறுகின்றனர். இதன் மூலம் மேற்கேயிருந்த ஆரிய இனத்தின் ஒரு பிரிவினரே, ஆரியருக்கு முன்பு சிந்துவெளியில் குடியேறினர் என்பதை வலியுறுத்துகின்றனர். சிவ வழிபாடு சிந்துவெளியில் காணப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ளும் ஆரியச் சார்பு ஆய்வாளர்கள், அத்துடன் மரங்கள், பாம்புகள் போன்றவற்றையும் வழிபட்டனர் என்றும், இவ்வழிபாடுகள், சிந்துவெளியினரின் வழிபாட்டு மாற்றங்கள் என்றும் கூறுகின்றனர். எவ்வகையிலும், சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகம் என்பதை மறைக்கவும் மறுக்கவும் என்னென்ன உத்திகள் உண்டோ அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, அவை உண்மைக்குப் புறம்பாயிருப்பினும், தொடர்ந்து கூறி வருகின்றனர்.

சிந்துவெளியில் காணப்படும் சில கடவுளர்கள், வடக்கு மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த ஈத்தியர் (Hittites) என்ற இனத்தாரின் கடவுளரே என்பதை சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (இவ்வினம் பற்றிய செய்திகளை ஏற்கனவே

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு முத்திரையில், ஒரு மரம் இருகிளைகளாகப் பிரிந்து காணப்படுகின்றது. கிளைகளுக்கிடையே ஒரு தெய்வம் கொம்புகளுடன், விரிந்த கூந்தலுடன் உள்ளது. அத்தெய்வத்துக்கு வலப்புறத்தில் முட்டிக் காலிட்டவாறு ஒரு பற்றாளர் காணப்படுகிறார். ஒரு மாந்த முகமும் காளை அல்லது ஆட்டு உடலும் கொண்ட உருவம் காணப்படுகின்றது. கீழே விரித்த கூந்தலுடன் எழுவர் நின்று கொண்டிருக்கின்றனர். மேற்கண்ட காட்சி, மர வழி பாட்டை உணர்த்துவதாகவும், அம்மரக்கிளைகளின் நடுவே உள்ள உருவம் பெண் தெய்வம் என்றும், மாந்தத் தலை யுடைய விலங்கு, உள்ளூர் காமத் தேவதை (கிராமத் தேவதை) என்றும் மார்ஷல் கூறுகிறார். அறப்பாவிலும் இது போன்ற முத்திரை யொன்று கண்டறியப் பட்டுள்ளது. இதன்வழியே, சிந்துவெளி மக்கள், மரவழிபாடு நடத்தியவர்கள் என்று கருதப்படுகின்றனர். மரம் என்பது தனியாகக் கடவுள் தன்மை பெற்றதன்று. அம்மரத்தில் குடியிருக்கும் தெய்வத்தால் அம் மரம் சிறப்பு பெற்றது. அப்பெண் தெய்வமும் கொம்புகளுடன் காட்சி தருவதால், காளைக் கடவுளுடன் அப்பெண் தெய்வத்துக்குத் தொடர்புண்டு எனக் கருதப்படுகிறது. ஆனால் முன்பு சொல்லப்பட்ட சிந்துவெளிக் கடவுளும் கொம்பு களுடன் காட்சியளித்தாலும், இந்த ஆண் பெண் தெய்வங் களுக்கான உறவு முறைகள் எவையும் தெரியவில்லை. சில ஆய்வாளர்கள், இருவரும் கணவன் - மனைவி உறவில் உள்ள கடவுளர் எனக் கருதுகின்றனர். தமிழ்க் கண்ணோட்டத்தில் அவர்களை சிவனும் உமையும் என்று கூறுவது பொருத்த மானது. ஆரியர்களுக்குப் பெண் கடவுளர்கள் இல்லையென் பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

மாந்த முகத்தில் காணப்படும் விலங்குகளின் குறியீடுகளும் உள்ளன. மாந்தமுக, ஆடு, மாடு, எருது எனவும், காளை முகத்தில் யானை உடலும் கொண்ட முத்திரைகள் காணப்படுகின்றன. சுமேரிய தொன்மக்கதைகளிலும் இவ்வாறான மாந்த - விலங்கு உயிரினங்கள் அறியப்பட்டுள்ளன. மெசபத்தோமியாவின் யா என்ற கடவுள், மாந்த முகத்தையும் மீனின் உடலையும் கொண்டவன். எகிப்தியச் சிற்பங்கள் மாந்த உடலையும் விலங்குகள், பறவைகளின் முகங்களையும் கொண்டிருக் கின்றன. இவைகள் உணர்த்தும் செய்திகள், விலங்குகளில் குறிப்பிட்ட ஆற்றல்களைக் கொண்ட மாந்தர்களையே அம்

அச்சொல்லே, அப்பெயரே அது தமிழரின் நாடு என்பதை உணர்த்தும்.

சிந்துவெளியில் காணப்படும் முத்திரையில் உணரப்படும் செய்திக்கும் இலிங்க வழிபாட்டிற்கும் தொடர்புண்டு என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தங்களுடைய தேவைகள் நிறைவேறிய இடங்களில், அத்தேவைகளை அளித்த கடவுளுக்கு நன்றி கூற, ஒரு கல்லைநட்டு, அவ்விடத்தை வழிபட்ட நிகழ்வுகள் பல உண்டு. இவ்வாறு நடப்பட்ட நடுகற்களே, இலிங்க வழிபாடுகளாக மாறின என்ற கருத்தும் உண்டு. பெரும்பா லான மேலை நாட்டு ஆய்வாளர்கள் இலிங்க வழிபாடு தமிழர்களுடையதே என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். மேற் கண்ட செய்திகள் அவைதரும் விளக்கங்களின் அடிப்படையில், சிந்துவெளியில் அறியப்பட்ட கடவுள், தமிழ்க் கடவுளே என்பதை உறுதியாகக் கூற முடியும். காளையை அக்குறி யீட்டில் காண இயலவில்லை என்பதால், அது தமிழ்க்கட வுளன்று என்றும் சிலர் வாதிடுகின்றனர். அக்கடவுளின் தலையில் உள்ள கொம்புகளே, காளையை உணர்த்தும் குறிகள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. (The non - association of the bull suggests that the bull cult was distinct from the shiva culin the Indus Valley - S.R. Rao).

குறிப்பிட்ட சில மரங்களில் தெய்வம் குடியிருப்பதாக நம்பியதின் விளைவாக மரவழிபாடு தமிழர்களிடையே பரவலாகக் காணப்பட்டது. ஆல், அத்தி, அரச மரங்களில் இறைவன் வீற்றிருப்பதாகத் தமிழர் நம்பினர். இவை மூன்றும் ஒரு குடும்பமே, புத்த சமயத்தினரும் மரவழிபாட்டைப் பின்பற்றியவர்கள். புத்தர் தனது புத்தொளியை ஆலமரத்தின் கீழ் அமர்ந்து பெற்றதாகக் கூறப்படுகிறது. அதனைப் போதி மரம் என்பர். பொதி என்ற தமிழ்ச் சொல்லுக்கு, உருவத்தில் பெரிய என்பது பொருளாகும். பொதி - பொதிகை என்ற தமிழ்ச் சொல்லை ஒப்பு நோக்குக. பொதி - போதியாற்று. விவிலியம் கூறுகின்ற அறிவின் மரம் (tree of knowledge) அல்லது வாழ்வின் மரம் (tree of life) என்பது கூட, சமயத்தில் மரம் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது என்பதை விளக்கும்.[819] பிற்கால ஓவியர்கள், விவிலிய மரத்தை ஆப்பிள் மரம் போல வரைந்து காட்டிவிட்டனர். அது ஒரு பழ மரம் என்பது தான் கருத்தே தவிர. அது என்ன மரம் என்று சொல்லப்படவில்லை. ஆல் அல்லது அத்திமரமாகக் கூட இருக்கலாம்.

கூறுகின்றனர். அப்பகுதியில் தோன்றும் குறியொன்று, ஆண் குறியே என சில ஆய்வாளர் கருதுகின்றனர். நட்டமாக உயர்ந்திருக்கும் அக்குறி, வெளிப்படையாகத் தெரிவதாகவும் கூறிகின்றனர். அக்காலத்துச் சிலைகளும், பொம்மைகளும், முத்திரைகளும் அம்மணத்தோற்றத்திலேயே ஆண், பெண் கடவுளரைக் காட்டுகின்றன.

சில ஆய்வாளர்கள், அது ஆண்குறியன்று, இடையில் கட்டப்பட்டுள்ள கச்சையின் நுனித் தோற்றமே அதுவெனவும் கூறுகின்றனர். பொதுவாக, அது ஆண்குறியே என்பதை பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இது இலிங்க வழிபட்டின் விளக்கத்தைத் தருவதாகவும் சிலருடைய கருத்து. இலிங்க வழிபாடு பற்றி முரண்பாடான செய்திகள் உள்ளன. அது உயிர்களின் தோற்றத்தை விளக்கும் குறியீடே என்றும், அத்தோற்றத்துக்கு முதல்வன் இறைவனே என்ற கருத்தையே அக்குறியீடு விளக்குவதாகவும் கூறுகின்றனர். அக்கடவுளின் குறியை, தமிழ்க் கடவுளான சிவனோடு தொடர்பு படுத்தும் செய்திகள், பிற்காலத்தில் பெருமளவில் கூறப்பட்டன. தமிழில் அறியப்படும் ஆவுடையார், பெரு வுடையார் போன்ற சொற்கள், ஆண் - பெண் குறிகளை இணைத்துக் கூறும் விளக்கச் சொற்களே.

லிங்க என்பது சமற்கிருதச் சொல்லென்றும், லிங்கவழி பாடு தமிழர்களுடையதன்று என்றவாறும் சொல்லப்படு கின்றது. ஆரியர்கள் லிங்க வழிபாட்டைக் கடைப் பிடிக்க வில்லை என்று தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இலங்கு - இலங்குதல் - இலங்கம் போன்ற தமிழ்ச் சொற்கள், தோற்றம் என்ற பொதுப் பொருளைச் சுட்டுவன. கண்ணுக்குப் புலனாகும் தெளிவான காட்சியை, இலங்கம் என்ற சொல் உணர்த்தும். ஒரு குறிப்பிட்ட இடத்தினின்றும் மேலெழுந்து நிலத்திடையே, அல்லது நீரிடையே தோன்றும் மேடான பகுதியைக் கூட இலங்கம் என்ற சொல் குறிக்கும் என்பது, நீலகண்ட சாத்திரியாரின் கருத்து. இலங்கை என்ற சொல்கூட இவ்வாறான பொருளில் சொல்லப்பட்டதே. அது நீரிடை உயர்ந்து நிற்கும். நிலப்பகுதியைக் குறிப்பது. இலங்கம் என்ற தமிழ்ச் சொல்லே, லங்கா (Lanka), லிங்க (Linga) என்றவாறு சமற்கிருதத்தில் திரிந்தன. தென்னிலங்கையைச் சீரிலங்கை (Srilanka) என தற்போது பெயர்மாற்றம் செய்துள்ளனர்.

மகளான உரோகிணியின் மீது காமுற்று அவளைப் புணர முயன்றதாகவும், அந்த அடாத செயலை ருத்திரன் தடுத்த தாகவும், தன்னைத்தடுக்க வேண்டாம் என ருத்திரனை பிரசாபதி கேட்டுக் கொண்டதாகவும், அதற்குப் பரிசாக ருத்திரனை விலங்குகளுக்குத் தலைவனாக பிரசாபதி பணித்த தாகவும் சொல்லப்படும் கதையில் சொல்லப்பட்ட ருத்திரனே, சிந்துவெளிக் கடவுள் என்று ஆரியச் சார்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ருத்திரனுக்கும் குறிஞ்சிக் கடவுளுக்கும் தொடர் பேதும் இல்லை என்பது ஒருபுறமிருக்க, தமிழ்க்கடவுளை, வேதக் கடவுளாகக் காட்டும் கதையே மேற் சொல்லப் பட்டதாகும்.

இடைக்கச்சை: சிந்துவெளிக் கடவுள் இடையில் கச்சை யொன்றைக் கட்டியிருப்பது போல், அம் முத்திரையில் காணப்படுகிறது. அக்கச்சை, கோவணம் போன்ற சிற்றரையே எனக் கருத இடம் உண்டு. கோ+அணம் என்ற இரு சொற்களே, கோவணம் என்றானது. கோ என்பது கடவுளையும், அணம் என்பது உயர்வையும் குறிக்கும் தமிழ்ச் சொற்களாகும். சிறப்புக்குரிய இடத்தில் அணியப்படும் சிறிய ஆடை எனவும் பொருள் கொள்ளலாம். அக்காலத்து முனிவர்கள், கோவணம் ஒன்றையே ஆடையாக அணிந்திருந்தனர் எனவும், அக்கோ வணமும் இல்லாது இருந்தனர் எனவும் சொல்லப்படுகின்றது. கிரேக்கக் குறிப்புகளில், இந்திய முனிவர்கள் அரைகுறை ஆடையுடன் காட்சியளித்ததாக குறிப்பிடப் பட்டுள்ளன. இந்நிலையை அம்மணம் என்ற சொல் விளக்குகிறது. அதற்கு குளிர்ந்த, மணம் உடைய, என்ற இருபொருள் விளக்கம் பொதுவானதாகும். அம்மணம் என்பது தமிழ்ச் சொல்லே, இது, கம்மண, கிம்னோ என்று கிரேக்க மொழியில் திரிந் துள்ளது. (Gymno). விளையாட்டு வீரர்கள் இவ்வாறான சிற்றா டையைப் பயன்படுத்துவதால், அவர்கள் மேற்கொள்ளும் பயிற்சியும் கிம்னோ என்றே சொல்லப்பட்டது. பிற்காலத்தில் உடற் பயிற்சியைக் குறிக்கும் Gymnastic என்ற சொல் உருவானது. இச்சொல்லுக்கான மூலம், அம்மணம் என்ற தமிழ்ச் சொல்லே என்க.

எனவே, அம்மண நிலை என்பது அருவருப்புக்குரியதாக அக்காலத்தில் கருதப்படவில்லை. சிந்துவெளிக் கடவுள் அவ்வாறான நிலையிலேயே அமர்ந்திருப்பதாக ஆய்வாளர்கள்

மட்டுமே வழிபட்ட இனங்களும் அறியப்பட்டுள்ளன. பழைய எபிறேய மக்கள் எருதை வழிபட்டதற்கான செய்தியை விவிலியம் தெரிவிக்கின்றது.[818] எனவே, கொம்புகள் என்பது, எருதை குறிக்கும். எருது, கடவுளின் ஊர்தியாகக் கருதப்படும். எல்லும் எருதும் இணைந்த தோற்றத்தையே சிந்துவெளி முத்திரை வெளிப்படுத்துகின்றது. காளையை வழிபட்டவர் தமிழர். மாறாக, ஆரியர்கள் பசுவை வழிபட்டனர் என்ற செய்திகளை அவர்தம் இலக்கியங்கள் சுட்டுகின்றன. காளையை ஆரியர்கள் வழிபடவில்லை. என்பதை அறியலாம்.

இக்கொம்புகளுடன் கூடிய தலை அணிகலன், மூன்று பகுதிகளாகத் தோன்றுகின்றது. அதனைத் திரிசூலம் என்று கூறுகின்றனர். தமிழ்க் கடவுளின் ஆய்தமாகவும் சூலம் அறியப் படுகின்றது. உண்மையில், சூலம் ஆண்குறியைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உயிர்களின் மூலம், ஆணினின்றே வெளிப்படுவதை சூலம் உருவகப் படுத்துகின்றது. சூலத்தில் இணைக்கப்பட்ட உடுக்கை, பெண்குறியைக் குறிப்பதாகவும் கருதுகின்றனர். சூல் என்ற உயிரின் தோற்றத்தை விளக்கும் சொல்லே, சூலம் என்று விரிந்துள்ளது எனலாம். சுல் - சூல் எனவிரிந்த தமிழ்ச் சொல், வெப்பத்தையும் குறிப்பதாகக் கருதலாம். இவ்வாறான சூல முத்திரையையே, சிந்துவெளிக் கடவுள் அணிந்துள்ளார்.

அக்கடவுளைக் சுற்றி விலங்குகள் காட்சியளிக்கின்றன. இக்காட்சி, அக்கடவுளை குறிஞ்சிக் கடவுளாகக் காட்டுகிறது எனலாம். யானை, ஒற்றைக் கொம்பன், எருமை, புலி ஆகிய விலங்குகள் அம்முத்திரையில் காணப்படுகின்றன. வேதங்களில் புலியைப் பற்றிய குறிப்புகள் இல்லை. மாறாக புரவியைப் பற்றிய குறிப்புகளே பெருமளவில் உள்ளன. சிந்துவெளி முத்திரைகளில், புரவி பற்றிய குறிப்புகள் எவையும் இதுவரை யிலும் கிடைக்கவில்லை. எனவே, புரவியின் பயன்பாடு அறியப்பட்ட காலத்துக்கு முன்பே, சிந்துவெளி நாகரிகம் அறியப்பட்டது என்ற கருத்து, ஆய்வாளர்களால் சொல்லப் படுகின்றது.

விலங்குகள் புடை சூழ அமர்ந்திருக்கும் கடவுள், குறிஞ்சி நிலக்கடவுளே என்பதை அம்முத்திரை வெளிப்டுத்துகிறது. பிற்காலத்தில் சொல்லப்பட்ட கதையொன்று, சிந்துவெளிக் கடவுளோடு தொடர்பு படுத்தப்பட்டது. பிரசாபதி தனது

வளையல்கள் நினைவூட்டுகின்றன. தொல்தமிழ்ப் பெண்டிர் வளையல்கள் அணிந்திருந்தது பற்றிய செய்திகள் ஏராளமாக உள்ளன. சிந்துவெளியிலும், அகழ்வாய்வுகளில் வளையல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் வளையல்களை அணிவதின் நோக்கம் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. ஆரிய வேதங்களில், பெண்கள் வளையல்கள் அணிவது பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. தொடக்க கால ஆரிய நம்பிக்கை களில் பெண் கடவுளரோ, பெண்மையைத் தன்னுள் வைத் துள்ள கடவுளர் பற்றியோ குறிப்புகள் இல்லை. பூமாதேவி, அதிதி, கங்கை, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்கள், முதல் கடவுள் தன்மை பெற்றவர்கள் அல்லர். அவர்கள் தேவதைகள் போன்றே விளக்கப்பட்டுள்ளனர். எனவே, கங்கைவெளிக் கடவுள் அணிந்துள்ள வளையல்கள், கடவுள் ஆணும் பெண் ணுமாக (சிவனும் உமையுமாக) இருக்கிறார் என்ற உண்மையை விளக்குவதாகும்.

திரிசூலம் போன்ற அணிகலன்: உலக நாகரிகங்கள் காட்டும் கடவுளரின் தலைகளில் ஏதோவொரு அணிகலன் அமைந்துள்ளது. அவற்றில் இரண்டு கொம்புகள் கொண்ட அணிகலன்கள் பரவலாக அறியப்படுகின்றன. சுமேரிய - பாபிலோனிய - எகிப்திய - எபிறேய இனங்களின் கடவுளர்கள் கொம்புகளைக் அணிந்துள்ளனர்.[816] அக்கொம்புகள் ஆளுமை, ஆற்றல், வலிமை ஆகியவற்றை உணர்த்துவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த வழியில் பல மன்னர்களின் தலைமுடி களும் கொம்புகளைக் கொண்டவாறே காணப்படுகின்றன. இசுராயெல் நாட்டில், கொம்புகளை ஊதி, செய்திகளை வெளிப்படுத்தினர். போருக்கு முன்னரும் பின்னரும் கொம்பு களைக் கொண்டு ஊதி ஒலி எழுப்புவர். இது வெற்றியின் அடையாள மாகக் கருதப்பட்டது.

தமிழர்கள் வழிபட்ட சிவனுடைய தோழனாகவும், ஊர்தி யாகவும் காளை கருதப்பட்டது. எல் என்ற தமிழ்க்கடவுளின் ஊர்தியாக, எருது (எல்+து) கருதப்பட்டது.[817] எல்லும் எருதும் பிரிக்க இயலா தவைகளாயிருந்தன. இதே நடை முறை சுமேரிய - எபிறேய நாகரிகங்களிலும் காணப்படுவதை அறிய லாம். சுமேரியக் கடவுளும் எல் என்றே சொல்லப்பட்டான். எருதை நினைவூட்டும் கொம்புகளை, கடவுள் அணிந்திருந் தார் என்பதை அறியலாம். மேலை நாடுகளில், எருதை

ஓகத்தின் மூலம் உடலும் உள்ளமும் உயர்வான நிலையை அடைதலை, ஓகக் கலைப் பயிற்சியால் பெறமுடியும். இப் பயிற்சியை உடலையும் உள்ளத்தையும் ஒருங்கிணைப்பவ ராலேயே செய்ய இயலும். பலகாலம் முயன்று அறிந்த பட்டறிவின் முதிர்ச்சியே ஓகக் கலையாகும். இதனை ஆரியரே அறிமுகம் செய்ததாக வரலாற்றில் பதிவு செய்துவிட்டனர். ஆரியர்களின் இந்திய வருகைக்கு முன்னரே, இந்தியாவில் ஓகக் கலைபற்றிய நுணுக்கமும் பயிற்சியும் தெளிவும் இந்தியப் பழங்குடியினரிடையே காணப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அறப்பாவில் கண்டெடுக்கப்பட்ட 13 மண் பொம்மைகள், ஓகக்கலையின் இருக்கைகளை (ஆசனங்கள்) விளக்கும் வகையில் உள்ளன.[815] ஒவ்வொரு இருக்கை பற்றிய உருவத்தினை பொம்மைகளாக வடித்து, சிந்துவெளி மக்கள் காட்சிக்கு வைத்திருந்தனர் என்பதை அம்மண் பொம்மைகள் தெரிவிக்கின்றன. முழு வடிவத்தில் கிடைத்தவை மட்டும் எண்ணிக்கையில் பதின் மூன்று. சிதைந்து போனவைகள் எத்தனையோ!

சிந்துவெளிக் கடவுள், தன் இரு பாதங்களும் ஒன்றை யொன்று தொட்டுக் கொண்டிருக்குமாறு அமர்ந்திருக்கிறார். பயிற்சியினால் அன்றி இவ்வாறு நீண்ட நேரம் அமர்ந்திருக்க இயலாது. தொடைகளும் முன்கால்களும் படிந்துள்ளவாறு அந்த முத்திரை காணப்படுகின்றது. இந்த அமர்வு ஒப்பற்ற ஓக நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இடுப்பிலிருந்து கழுத்துவரையிலான வயிறு மற்றும் முதுகின் பாகங்கள், வளைவின்றி நேராகவும் விரைப்பாகவும் காணப்படுகின்றன. இந்த ஓகக்கலைபற்றி வேதங்கள் எதனையும் தெரிவிக்க வில்லை.

கை வளையல்கள்: இரண்டுகைகளிலும், மணிக்கட்டு முதல் தோள்பட்டை இணைப்பு வரையிலும் வளையல்கள் காணப்படுகின்றன. ஆண்கள் வளையல் அணியும் வழக்கு இருந்ததாகத் தெரியவில்லை. மணிக்கட்டில் காப்பும், முழங்கைக்கு மேல் ஒருகாப்பும், இருகைகளிலும் ஆடவர் அணிந்திருந்தனர். கைநிறைய வளையல்களை அணிந்துள்ள கடவுளின் கூறுகளில், பெண்மையும் அடங்கியுள்ளது என்பதையே அக்குறியீடு காட்டுகின்றது. கடவுள், ஆணும் பெண்ணுமாக இருக்கிறார் என்ற மெய்யியல் கருத்தை

டிருக்கும். தொல்தமிழர் வரலாற்றை நோக்கும் போது, ஆலமரத்திலேயே தமது முதல் கோயிலைத் தமிழர்கள் அமைத்துக் கொண்டனர். ஆலமர்ச் சொல்வன் என்றவாறு தமிழ்க் கடவுள் அழைக்கப்பட்டதை நோக்குக. அயம் என்ற சொல், பரந்து விரிந்துள்ள நீர் நிலைகளைக் குறித்தாலும், விரிந்து பரந்துள்ள ஆலமரத்தையும் குறித்தது. ஆல் + அயம் என்பது, விரிந்துபரந்த ஆலமரம் என்று பொருள். இதுவே பிற்காலத்தில் ஆலயம் என்றவாறு கோயில்களைக் குறித்தது. ஆலமரத்தின் உறுப்புகள் அனைத்தும் பயன்பட்டதைக் கருத்தில் கொண்டே, all என்ற ஆங்கிலச் சொல் தோற்றுவிக்கப்பட்டது. கடவுள் அமர்ந்திருக்கும் மேடையை அல்லது படைப் பொருட்கள் உள்ள மேடையை ஆல்டர் (alter) என்ற ஆங்கிலத்தில் கூறுவர். இது, ஆல்தரு (ஆலமரம்) என்ற தமிழ்ச் சொற்களின் திரிபே என்க. உயர்ந்த மேடை, இறைவனுக் குரியது என்ற வழியில், மன்னனுக்கும் பிற்காலத்தில் உயர்ந்த மேடையை அமைத்துக் கொண்டனர். ஆரியர்களின் தொடக்ககால வரலாற்றில், எந்த மேடைமீதும் கடவுளை அமர்த்தி வழிபட்டதற்கானச் சான்றுகள் இல்லை. தமிழரின் மேடை நடைமுறை, மேலை நாட்டுச் சமயங்களிலும் காணப் படுகின்றன. எனவே, உயர்ந்த மேடை என்ற சிந்துவெளித் தோற்றம், தமிழருடையதே என்க.

முனிவரின் தோற்றம்: சமூகத்தில் அறியப்பட்ட மக்களில் ஒரு சிலரே கடவுள் பற்றுடன், கடவுளுக்காகத் தங்கள் வாழ்க் கையைத் தொடர்ந்து முனிவர்களாயினர். முனிவர்களுக்கும் கடவுலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பின் காரணமாகவே, கடவுளையும் முனிவர்களைப் போன்ற சாயலில் மக்கள் கண்டனர். கடவுளுக்கு உருவம் கொடுத்தவர்கள், சான்றோர்கள் கூறிய வடிவத்தையே, அவர்களது வழிகாட்டுதலில், சிலை களாகவும் சிற்பங்களாகவும் வடித்தனர். ஒவ்வொரு நாட்டுக் கடவுளரும் அவர்தம் நாகரிகத்தி வெளிப்பாட்டு உருவங் களாகவே அமைந்தன. தமிழ் முனிவர்கள், இடையில் கச்சை யொன்றை மட்டுமே அணிந்திருந்தனர். சிந்துவெளிக்கடவுளும் அவ்வாறே காணப்படுவதை நோக்குக.

ஓக நிலை: ஓகம் என்பது தமிழ்ச் சொல். ஒக்கு - ஒக்கம் - ஓக்கம் - ஓகம் எனவிரியும். உயர்வு, உயர்வான நிலை என்பதே இதன் பொதுப் பொருளாகும். உடலோம்பும் கலையான

சிந்துவெளியில் வாழ்ந்த நாட்டுப்புற பழங்குடி மக்கள், இயற்கையை வழிபட்டனர் எனக் கருதுகின்றனர். விலங்குகள், மரங்கள், காற்று, தீ, நிலம் ஆகியவை வட்டாரங்களில் வழிபடப்பட்ட குறுந்தெய்வங்களாகும். இந்த வட்டாரக் குறுந்தெய்வங்களே ருக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தேவர்கள் என்ற நிலையைப் பெற்றவர்களாவர். ருக்கு வேதத்தில் ஒரு கடவுள், மூன்று கடவுள், பல கடவுளர் பற்றிய குறிப்புகள் எவையும் இல்லை. சிந்துவெளி மக்களின் வழி பாட்டு முறைகளை ஏற்றுக் கொண்ட ஆரியர்கள், சிந்து வெளிக் குறுந்தெய்வங்களில் சிலரை, கடவுளர் நிலைக்குப் பிற்காலத்தில் உயர்த்திக் கொண்டனர். விஷ்ணு, ருத்திரன் போன்றவர்கள், வேதத்தில் சொல்லப்பட்ட தேவர்களே, இவர்களையே பிற்காலத்தில் பிரம்மாவையும் இணைத்து முக்கடவுளாரக்கி, பிரம்மா - விஷ்ணு - சிவன் என்று மாற்றிக் கொண்டனர். உண்மையில் ருக்கு வேத ருத்திரணுக்கும் சிவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதுபோல விஷ்ணு வுக்கும் கிருஷ்ணனுக்கும் தொடர்பில்லை. மக்களிடையே பரவலாக அறியப்பட்டவர்களைத் தம் கடவுளராக ஆரியர்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதே உண்மை நிலையாகும்.

பிற்காலத்தில் சொல்லப்பட்ட கடவுளரோடு, ருக்கு வேதக் குறுந்தெய்வங்களை அல்லது தேவர்களை முடிச்சுப் போட்டுக் கொண்டனர். அதன்விளைவே, சிந்துவெளிக் கடவுளை பசுபதி என்று கூறினர். ருத்திரனை விலங்குகளுக்குத் தலைவனாக்கியவன் பிரசாபதி என்ற கதையின் மூலம், விலங்குகளுடன் அமர்ந்திருக்கும் கடவுள் ருத்திரனே என்றனர். பிற்கால வழக்கப்படி மகாதேவ என்றும் பெயர் சூட்டினர். அறப்பன் மக்கள் நான்கு முகம் கொண்ட கடவுளை (ஒன்று மறைந்திருப்பதாகக் கூறி)யும் வழிபட்டு வந்தனர் என்றும், அவனே பிரம்மா என்றும் கூறினர். எனவே, சிந்துவெளியில் காணப்பட்ட முத்திரையில் உள்ள கடவுள், தமிழ்க் கடவுளான எல் அல்லது சிவனே என்க.

உயர்ந்த மேடை: பழங்காலத்துக் கோயில்கள் என்பது உயர்ந்த மேடைகளே. இவ்வாறான மேடைகள், மொகஞ்சதாரோ நகரில் அறியப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின் றனர். அந்த உயர்ந்த மேடைக்கு முன்பு சிறிய மேடை, கடவு ளுக்கான படையல் பொருட்களை வைக்க அமைக்கப்பட்

ஆட்களாக இருக்கிறார் என்றும், அவர்கள் மூவரும் தனித்தனி கடவுளர்கள் அல்லர் என்றும், முதன் முதலில் அறியப்படும் மூவொரு கடவுள் கொள்கையே சுமேரியருடையது என்றும் அறிய முடிகின்றது. மெசபத்தோமியக் கடவுள் யா என்ற முழு முதற்கடவுளாவன்; அவனது மகனே மருதூக் என்பவனாவான். இந்த இரு கடவுளர் முறை, ஏறக்குறைய சிவன் - முருகன் கொள்கையைப் போன்றது. எபிறேயர்கள், ஒரே கடவுளை ஏற்றுக் கொண்டனர். இம்மூன்று மரபினரும் தமிழ்க் கிளையிலின்றும் பிரிந்த இனங்களே என்பதை அறியலாம். ஏறக்குறைய ஒரே பகுதியில் வாழ்ந்திருந்த இம் மூன்று இனங்களும், மூன்று கடவுள் கொள்கையைக் கொண்டிருந் தனர். எகிப்தியர் க என்ற ஒரு கடவுளையே வழிபட்டனர். பிற்காலத்தில் பெயர்களில் மாற்றங்கள் தோன்றின. அராபி யர்கள் பல கடவுளரை வழிபட்டவர்கள். தொல் தமிழரின் கடவுள் பற்றிய சிந்தனை எவ்வாறு இருந்தது என்பதற்கு மேற் சொல்லப்பட்ட கடவுள் கொள்கைகள் எடுத்துக்காட்டாக உள்ளன.

முன்னோர்களைத் தமிழர் வழிபட்டனர். அவர்களைக் கடவுளாகக் கருதாமல், சான்றோர் என்ற நிலையில் போற் றினர்.[814] ஆரியர்கள் வகுத்த மறுபிறவிக் கொள்கை தமிழரி டையே இருந்ததற்கானச் சான்றுகள் இல்லை. எவ்வாறெனில், முன்னோர்கள் வழிபாடென்பது, ஒரு முறை இறந்தவர்கள், பிறகு பிறக்க மாட்டார்கள் என்ற கருத்தை வலியுறுத்து வதாகும். ஆரியச் சமய மென்பது, தமக்கென எந்தக் கொள் கையும் இல்லாது, தமிழர் சமயத்தினின்றும் பல்வேறு கூறு களைத் தனதாக்கிக் கொண்டு, தமக்குச் சார்பானவைகளையும் இணைத்துக் கொண்ட கலப்படமான சமயமாகும். இச்சமயம் கூட, தொடக்கத்தில் அறியப்படவில்லை. வேதங்கள், வழி பாட்டு முறைகளாகவே அறியப்படும்.

எனவே, மூன்று முகங்களைக் கொண்டு சிந்துவெளிக் கடவுளை ஆரியக்கடவுள் எனக் கூறுவதற்கு எந்தச் சான்று கூறும் இல்லை. இக்கடவுள் வழிபாடு அறியப்பட்டிருந்த காலங்களில், ஆரியர்கள் இந்தியாவில் இல்லை. சிந்துவெளியில், ஒரு கடவுள் மூன்று நிலைகளில் அறியப்பட்ட கொள்கை இருந்தது என்பதையே, ஓர் உடலும் மூன்று முகங்களும் கொண்ட முத்திரை விளக்குகிறது எனலாம்.

1. மூன்று முகங்கள்: கடவுளின் மூன்று முகங்கள் வெளிப்படுத்தும் உட்பொருள் யாது? படைத்தல், காத்தல், அழித்தல் என்ற கடவுளின் பணிகளை உணர்த்துவதாக ஆரியச் சார்பாளர்கள் கூறுகின்றனர். வேறு சிலர், நான்காது முகமும் உண்டு, அது மறைந்திருக்கிறது. என்பதால், அக்கடவுளை பிரம்மா என்றும் கூறுகின்றனர். படைத்தல், காத்தல், அழித்தல் என்பது ஆரியக் கொள்கையாகும். மூன்று உலகங்களுக்கும் அவரே கடவுள் என்பது தமிழர்தம் கொள்கையாகும். கடவுள் ஒருவரே, அவர் மூன்று உலகங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதையே மூன்று நிலைகள் பற்றிய தெளிவான விளக்கங்கள், கடவுளைப் பற்றி தொல் தமிழர்கள் பலவாறு சிந்தித்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்களும் இடைக்கால இலக்கியங்களும் இயம்புகின்றன. ஒரு கடவுள் கொள்கை, பல கடவுள் கொள்கை, கடவுளே இருக்க வாய்ப்பில்லை என்ற கொள்கை என்றவாறு சிந்தனை மோதல்கள் தமிழரிடையே காணப்பட்டன. கடவுளைப் பற்றிய உண்மைகளை அறிய முற்பட்ட தின் வெளிப் பாடுகள் இவை. அறிவார்ந்த மக்கள்தாம் இவ்வாறான சிந்தனை களில் ஈடுபட முடியும்.

சங்கப் புலவர்களில், கடவுள் மறுப்புக் கொள்கை கொண்ட புலவர்களும் இருந்துள்ளனர். தொல்தமிழ் நூல்கள் இயற்கைக்கு இரையாகிப் போனதால், கடவுள் பற்றிய தமிழரின் எண்ணங்களை முழுமையாக அறிய இயலவில்லை. ஆனால் மேற்கே சென்று குடியேறிய தமிழர்கள் விட்டுச் சென்ற இலக்கியக் குறிப்புகள் பரவலாகக் கிடைத்துள்ளன. என் - உம்மா - என் - இசு (Enuma Elish) என்ற சுமேரிய இலக் கியம், கடவுள் கொள்கை பற்றிய செய்திகளைத் தருகிறது. எல் என்ற கடவுள் மூன்று நிலைகளில் அறியப்படுகிறான். வானம், காற்று, நீர் என்றவாறு பிரிந்து, அவற்றிற்குக் கடவுளராகச் சொல்லப் பட்டிருக்கிறான். அன் (an), என்லில் (enlil), யா (yaa) என்றவாறு படிக்கப்பட்ட அக்கடவுளின் பெயர்கள், வானம் காற்று நீர் ஆகியவற்றிற்கான பொறுப்புளைக் கொண்டுள் ளனர். இச்சொற்கள் தவறாகப் படிக்கப்பட்டுள்ளன என்ற கருத்தும் உண்டு. வான் என்பதை, அன் என்றும், என்லில் என்பதை காற்று என்றும், யா என்பதை நீரென்றும், கூறுவ தால், அச்சொற்கள் தமிழ்த் திரிபுச் சொற்களாகவே உள்ளன. என்லில் என்பதற்கான சரியான விளக்கம் தரப்படவில்லை. விளக்கங்கள் எவ்வாறு இருந்தாலும், ஒரு கடவுள் மூன்று

எம்முடைய என்ற சொற்களை மடாதிபதிகள் தாம் பயன் படுத்துவார்கள், மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது என யார் சொன்னது? தொல்காப்பியர் மரபியல் அதிகாரத்தில், புலவர்கள், உரையாசிரியர்கள் (தற்காலத்திய எழுத்தாளர்கள், ஆய்வா ளர்கள்) எவரும், நான், எனது, என்னுடை, எனக்கு என்ற சொற்களைப் பயன்படுத்தவே கூடாது என்று, கண்டிப்புடன் கூறுகிறார். நான் என்ற அகந்தைக்கு அன்றே சாவு மணி அடித்தவர்கள் தான் நமது முன்னோர். பெருமைப்பட வேண்டியவர்கள் தமிழர்கள் அல்லவா!)

சிந்துவெளித் தமிழர்களின் சமயம் பற்றிய குறியீடுகள் பல இருந்தாலும், மோகஞ்ச தாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை, அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கின்றது. இதே குறியீடுகள் கொண்டமுத்திரைகள் களிவங்கணம் (Kalibangan) அறப்பாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[812] இவை, சிந்துவெளிச் சமயம் யாது என்பதை உறுதி செய் கின்றன.

1. மூன்று முகங்களைக் கொண்ட உருவம்,
2. உயர்ந்த மேடையில் அமர்ந்திருப்பது.
3. முனிவருடைய அமர்வு போல் காணப்படுவது.
4. இரண்டு கால்களும் மடக்கிய நிலை.
5. பாதங்கள் ஒன்றெயொன்று தொட்டுக் கொண்டிருப்பது.
6. இரண்டு கைகளும் முழங்கால்களின் மீது படிந்திருப்பது.
7. இரண்டு கைகளிலும் வளையல்களை அணிந்திருப்பது.
8. நெஞ்சின் மீது நான்கு முக்கோண வடிவமுள்ள பட்டைகள்.
9. இரண்டு பட்டைகளைக் கொண்ட இடைக்கச்சை.
10. தலையில் திரிசூலம் போன்று காணப்படும் இரண்டு கொம்புகளைக் கொண்ட அணி.
11. சுற்றிலும் எருமை, ஒற்றைக் கொம்பன், யானை, புலி ஆகிய விலங்குகள் சூழ்ந்திருப்பது.
12. இடைப் பட்டையின் உள்ளே நிமிர்ந்து நிற்கும் ஆண்குறி (Penis erectus)?

ஆகிய தோற்றங்கள் தெளிவாக உள்ளன.[813]

யாகக் கொண்டது என்பதையும் விளக்குகிறார். அவ்வாறான சிவனை, அழித்தல் கடவுளாக, ஒறுக்கும் கடவுளாக, கொலை காரக் கடவுளாக மாற்றியவர்கள் ஆரியர்கள்.

சிவன், தொல்தமிழரின் முழுமுதற் கடவுளாவான். குறிஞ்சியில் தோன்றி வழிபாட்டில் சிறந்திருந்த சிவனுடைய தாக்கங்களே தமிழர் சமயம் முழுவதும் எதிரொலிக்கக் காண லாம். சிவனை முன்னிறுத்தியே தமிழர் சமயம் சுழல்கிறது. தென்னாடுடை சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற தமிழர் தம் சமயக் கொள்கையை விளக்க முற்படின் அது ஒரு நூல் அளவில் விரியும் (அண்மையில் நூலாசிரியர் மலேசியா சென்றிருந்த போது, அங்குள்ள கிறித்துவ ஆலயம் ஒன்று, தமிழ்க் கிறித்துவர்களால் வழிபடப் பட்டு வருவதைக் காணவும், அங்கு உரையாற்றவும் வாய்ப்பு கிடைத்தது. அக்கோயிலின் பீடத்துக்கு முன்பாக மேல் தளத்தில் (roof), 25 அடிநீளத்தில், 2 அடி உயர தமிழ் எழுத் துகளில், "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி என எழுதப்பட்ட பதாகை தொங்கவிடப்பட்டிருந்தது. இப்போது கூறுங்கள், சிவன் யாருடைய கடவுள்?") நூல் அளவில் கூட அன்றி, பல தொகுதிகளாக அதன் விளக்கங்கள் விரியும்.

சிவன் என்ற பரம் பொருளின் வெவ்வேறு பெயர்களே, பிற சமயங்களில் காணப்படுகின்றன என்பதை, தெளிவாக விளக்க முடியும் (ஆசிரியரின் சேயோன் என்ற நூலைக் காண்க) அண்மையில் நாம் பிரான்சு நாட்டில் சொற்பொழிவுக்காகச் சென்றிருந்தபோது, பாரீசு நகரத்திலுள்ள சிவன் கோயிலின் அறங்காவலர்கள் நம்மை அணுகி, தங்கள் கோயிலில் உரை யாற்ற வருமாறு அழைத்தனர். நம்முடைய இயலாமையைப் பலவாறு கூறியும் அவர்கள் ஏற்கமறுத்தனர். "உங்களை உபந்நியாசம் பண்ணவோ, மதப்பிரசங்கம் செய்யவோ நாங்கள் அழைக்கவில்லை. சிவன் என்ற கடவுளின் தோற்றம், உலக சமயங்களில் சிவனுடைய தாக்கங்கள் எவ்வாறு உள்ளன என்பதை விளக்கி, வரலாற்றுச் சொற்பொழிவை நிகழ்த் துங்கள்," எனக் கூறினார். "சிவன்" என்ற தலைப்பையே நமக்கு அளித்தனர். ஊடகங்களிலும், தொலைக் காட்டியிலும், இணைய தளங்களிலும் விளம்பரம் செய்தனர். அவர்களது அன்பு ஆணையை நாம் நிறை வேற்றினோம். (நாம், நமது, எம்,

கடவுள் (பிரசாபதி), அப்படைப்புத் தொழிலை மேற்கொள்ள மனிதத் தகுதிகளுக்கு மேம்பட்ட ஒருவரை (பிரம்மா) உருவாக்குகிறார். அவரே இந்த உலகைப் படைக்கிறார். பிரம்மா என்பது கூட பொதுவான சொல்தானேயன்றி, பெயர் இல்லை. தமிழ்க் கண்ணோட்டத்தில், பெரும் ஆள் என்பதே, பிரம்மா என்று திரிந்துள்ளது. தமிழர்கள் பெருமாள் என்கின்றனர்; ஆரியர்கள் பிரம்மா என்கின்றனர்.

ஆரியர்களுக்கென வேத நூல்கள் உள்ளனவே, அதனை சமயவரம்பிலிருந்து எவ்வாறு புறந்தள்ள முடியும் என வினவலாம். ருக்கு வேதம், எந்தக் கடவுளின் பெயரையும் குறிப்பிடவில்லை. எந்தக் கடவுளை வழிபட்டால் முற்றி கிடைக்கும் என்பதை வேதங்கள் கூறவில்லை. வேதங்களில் சொல்லப்பட்டுள்ளவர்கள் அனைவரும் கடவுள் தகுதிக்கும் கீழான தேவர்கள். ருக்கு வேதத்தை உன்னிப் பார்ப்பவர்களுக்கு, அவ்வேதம் உண்மையான கடவுளைத் தேடுவதையே அறிய முடிகின்றது. அவர்கள் தேடிய முழுமுதற்கடவுள் அவர்களுக்கு அகப்படவில்லை என்பதனால், ருக்கு வேதத்தில் கடவுளின் தேடலோடு அதன் விளக்கங்கள் உள்ளன. இந்திரன், வாயு, அசுவினி, சோமன், மத்திரன், வருணன் போன்றோர், சில நேரங்களில் மாந்தர்களாகவும் (அசுரர்கள் என்ற சொல்லுக்கு அதுவே பொருளாகும்), சில நேரங்களில் தேவர்களாகவும் சொல்லப்பட்டுள்ளனர். எனவே, ஆரிய வேதம் இன்னும் கடவுளைத் தேடிக் கொண்டிருக்கிறது என்றே கூறலாம்.

இந்து சமயத்தில் கடவுளர்கள் இல்லையா? அதனைச் சமயம் என்று கூற என்ன தடையுள்ளது எனக் கேட்கலாம். இந்து சமயக்கடவுளர்கள் வேறு, ருக் வேதத்தின் தேவர்கள் வேறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்து சமயத்தில் அறியப்படும் கடவுளுக்கும் ஆரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்து சமயம் கூறும் சிவன், உமை, மால், முருகன் ஆகிய நால்வரும் தமிழரது கடவுளரே, ருக்கு வேதத்துக்கு விளக்கம் அளித்தவர்கள், ருத்திரனைச் சிவனாகவும், உமையவளைப் பூமிமாதா எனவும்,[811] மாலை விஷ்ணு எனவும், முருகனை ஸ்கந்தன் குமாரன் எனவும் மாற்றிக் கொண்டனர். ருத்திரனை அழித்தல் கடவுளாகவும் மாற்றினர். அன்பே சிவம் என்பதை அறியாமல் இருக்கின்றார்களே எனத் திருமூலர் வருந்துகிறார். சிவம் என்பது அன்பை அடிப்படை

மட்டுமே கொண்டது. அது 200 ஆண்டுகளுக்கு முன்பே, ஆங்கிலேயர்களால் இந்து சமயம் என்று பெயரிடப்பட்டது. அதற்கு முன்பு அச்சமயத்திற்கான பெயர் என்ன வென்று தெரியவில்லை. பிராமண சமயம் இந்திய எல்லைகளைக் கடந்து செல்லாததற்கான காரணம் யாதெனில், மற்ற நாடு களில் பிராமணர்கள் இல்லை; இந்தியாவில் அவர்கள் தோற் றுவித்ததைப் போல சாதிக்கட்டமைப்புகள் இல்லை. பிராமண சமயக் கொள்கைப்படி, பிராமணனை முதல் குடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு சொல்லப்படும் சாதிக்கட்ட மைப்புகளை ஏற்காதவர்கள் இந்துக்களாக இருக்கமுடியாது. இந்த விதிகளை ஏற்றுக் கொள்ள எந்த நாடும் முன்வராது. இடைக்கால இந்தியாவில் இருந்த மக்களைவிட, வெளிநாட்டு மக்கள் விழிப்படைந்திருந்தனர். மேலும் ஒரு சிறப்பான காரணம் யாதெனில், ஓர் இந்துவானவன் கடல் கடந்து செல்லக் கூடாது என்பதாகும். ஆரியர்கள் கடற் பயணத்தின் மீது கொண்டிருந்த அச்சத்தின் காரணமாக இவ்விதியை வகுத்தனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் உண்மை அதுவன்று. இந்துக்கள் வெளிநாடுகளுக்குச் சென்றால், அங்கு சமயத்தவர் ஏற்றத்தாழ்வின்றி இருப்பதை அறிந்து கொள்வார்கள், இந்தியாவில் இயற்கைக்கு முரணான விதிகள் இந்து சமயத்தில் இருப்பதை அறிந்து கொள்வார்கள், அதனால் தங்களுடைய நிலைப்பாடு சிதைந்து போகும் என்ற தன் நலத்தின் காரணமாகவே, இந்துக்கள் வெளி நாடுக்குச் செல்ல தடைவிதிக்கப் பட்டது.

ஆரியச் சமயம் என்ற கூறப்படும் பிராமன சமயம், இந்திய நாட்டுச் சமயம் என்று கூறப்பட்டாலும், சமயம் என்ற இலக்கணத்துக்குள் அது வருமா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். பிற நாட்டுச் சமயங்களுக்கும் உலகச் சமயங் களுக்கும், ஒரு கடவுளோ அல்லது பல கடவுளரோ இருப்பர். அவருக்கு ஒரு பெயர் இருக்கும். அவரது பெயரைச் சொல் லியே அம்மக்கள் வழிபடுவார்கள். எடுத்துக்காட்டாக யாகோவா (யூதர்), யா (பாபிலோனியர்) க (எகிப்தியர்) இயேசு, அல்லா, புத்தர் என அப்பட்டியல் நீளும். ஆனால் ஆரியச் சமயத்தில் கடவுள் என்றுதான் பொதுவாகச் சொல்லப்பட் டுள்ளதே அன்றி, அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. பிற சமயங்களில் சொல்லப்படும் இன்ன கடவுளரே இவ்வுலகைப் படைத்தனர் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆரிய சமயக்

குறியீடுகளும் படங்களும் தெளிவுபடுத்துகின்றன. அது என்ன சமயம்? அதன் பெயர் என்ன? அதன் கொள்கை என்ன? என்ற கேள்விகளுக்கு, அக்குறியீடுகளே விடையளிக்கின்றன. ஆனால் எஸ்.ஆர். இராவ் உள்ளிட்ட பல ஆய்வாளர்கள், அது என்ன சமயம் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாது; ஆனால் அதன் தொடர்ச்சிகள் ருக்கு வேதத்தில் உள்ளன என்பதை மட்டுமே கூறுகின்றனர். அதன் மூலம், ருக்கு வேதத்தின் முன் சமயமாக சிந்துவெளிச் சமயம் இருந்தது என்பதையும், அதன் தொடர்ச்சியே ருக்கு வேதம் என்பதையும் உணர்த்துகின்றனர்.

சமயம் என்பதற்கும், வழிபாட்டு முறைகள் என்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன. ஒரு சமயம் என்பது பல்வேறு இனக் குழுக்களும் இணைந்துள்ள கூட்டமைப்பாக இருக்க வேண்டும். அதற்கென மெய்யியல் கோட்பாடுகளும், வணக்க முறைகளும், சடங்குகளும் இருக்க வேண்டும். அவைகளை விளக்குகின்ற நூல்கள் இருக்க வேண்டும். ஆட்சி செய்வோர் அதனை ஏற்றிருக்க வேண்டும், ஆட்சியாளர்களும் அச்சமயத் தோடு இணைந்திருக்க வேண்டும் அல்லது அதனைத் தடை செய்யாதிருக்க வேண்டும். அது உலக மக்களை ஒன்றினைக்கும் கருவியாக விளங்க வேண்டும். முறைப்படியான அதிகாரப் படிநிலைகள் அதற்கிருக்க வேண்டும்.

வணக்க முறையென்பது, ஒரு சிலரோ அல்லது ஒரு குழுவோ கொண்டிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையிலான தாகும். மேற்சொல்லப்பட்ட இலக்கணங்கள் இதற்கு இருக் காது பல இனங்கள், தத்தமக்குரிய வழிபாட்டு முறைகளைக் கொண்டிருக்கும். சமூகத்தின் பொது மறையாக அது இருக்காது. வழிபாட்டு முறை யென்பது, முதிர்ச்சியடையாத, நம்பிக்கைகளில் வடிகால்களாக அமையும்.

மேற்கண்ட இலக்கணப்படி, சமயங்கள் நோக்கப்படு கின்றன. அவை நாட்டுச் சமயங்கள், உலகச் சமயங்கள் என இருவகைப்படும். நாட்டுச் சமயம் (National religion) அந்த குறிப்பிட்ட நாட்டின் எல்லைகளைத் தாண்டி அறியப்படுவ தில்லை. உலகச் சமயம் என்பது, பல்வேறு நாடுகளில் உள்ள, பலமொழிகள் பேசும், பல இனத்தாரும் பின்பற்றும் சமயம் ஆகும். ஆரிய பிராமணச் சமயத்தை, நாட்டுச் சமயம் என்றும், கிறித்துவம், இசுலாம், புத்தம் போன்றவற்றை உலகச் சமயங்கள் என்றும் கூறுவர். பிராமணச் சமயம் இந்திய எல்லைகளை

நாட்டினர். ஆனால் அத்தகைய ஆய்வாளர்களின் ஒவ்வொரு அசைவையும், சொல்லையும். எழுத்தையும் இன்று மறுக்கவும், அவர்தம் கருத்துகளை பொய்யெனக் கூறவும், தமிழ் நாட்டில் அறிஞர்கள் வெளிப்பட்டுள்ளனர். கடந்த காலத்திய ஆரியச் சார்பு வரலாற்று ஆய்வாளர்களின் கொள்கைகள், இன்று சான்றுகளுடன் மறுக்கப்படுகின்றன. பாவாணர் காலத்துக்கு முன்பு அத்தகைய சூழல் தமிழ் நாட்டில் இல்லாததும், சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்த தமிழறிஞர்களில் பலர், சமற்கிருத மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததுமே அதற்கான காரணமாகும்.

குமரிக் கண்டக் கொள்கை, முன்னைக் காட்டிலும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. குமரிக்கண்ட நிலைப் பாட்டிற்கான சான்றுகள், இலக்கிய அளவிலேயே இருந்த நிலை மாறி, இன்று மொழி ஆய்வு, புவியியல் ஆய்வு, வானியல் ஆய்வு, ஆழ்கடல் அகழ்வாய்வு எனப் பல்வேறு துறைகள் வழியே வெளிக் கொணரப்பட்டு வருகின்றன. எந்த உண்மை வெளிப்பட்டால், தமிழன் தொல்குடி இனத்தவன் என்று வெளிப்படுவானோ என்று கருதிய தமிழ்ப் பகைவர்கள், அந்த ஓட்டத்தை, சில ஆரியச் சார்பு ஆய்வாளர்களின் கொள்கை களால் சில காலம் தடைப்படுத்தி இருந்தது உண்மை. இனிமேலும் அந்நிலை நீடிக்காது என்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்கள், தற்போது திராவிடம் என்ற உத்தியைக் கையாள்கின்றனர்.

குமரிக் கண்ட அழிவிற்குப் பிறகு, வடக்கே சென்று குடியேறிய சிந்துவெளி மக்கள் தமிழர்களே என்பதை உலக ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். திராவிடர்கள் என்ற மேல்பூச்சு இன்று கலைந்துவிட்டது, கரைந்து விட்டது. இருந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை. திராவிடம் என்பது, தமிழ் மொழியை, தமிழ் இனத்தை அழிக்கக் கையாளப்படும் உத்தி என்பதைத் தமிழர்களில் பலர் உணர்ந்துள்ளனர். திராவிட மாயை கலைந்தால்தான், தமிழ்மொழியின் மேன்மை வெளிப்படும் என்க.

சிந்துவெளிச் சமயம்:

சிந்துவெளியில் சமயம் என்று ஒன்று இருந்தது; அது பரவலாக மக்களால் அறியப்பட்டிருந்தது என்பதை, அதன்

தமிழர்களை ஏமாற்றுவதற்காக, திராவிடம் என்ற முகமூடியை அணிந்து கொண்டுள்ளனர். திராவிட மொழி என்ற கொள் கையை வற்புறுத்தும் ஆய்வாளர்களுக்கு அரசுநிதியிலிருந்து ஏராளமான தொகைகளை வழங்கி வருகின்றனர். ஐராவதம் மகாதேவன், பர்ப்போலா போன்றவர்கள். திராவிடக் கொள்கை கொண்டவர்களே. தமிழே சிந்துவெளியில் பேசுப்பட்டது என்பதைத் தனது ஆய்வுகள் வழியே மெய்ப்பித்து வரும் இரா. மதிவாணன் கூட, தனது ஆய்வு நூல்களுக்குத் திராவிடம் என்ற சொல்லைத் தலைப்பாகக் கொடுத்திருப்பது ஏன் என்பது விளங்கவில்லை.

திராவிடம் என்ற சொல்லின் வரலாறு தெரியாத கால்டு வெல், இன்று திராவிட இயக்கத்தினரால் போற்றப் படுவதற் கான காரணம், திராவிடத்தை ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்து வைத்தார் என்பதற்காகத் தான் என்பதை உணர்தல் வேண்டும். தமிழைச் சிறுமைப் படுத்தி, திராவிடத்தை முன் வைத்த கால்டு வெல்லின் கொள்கையை ஏற்காத பாவாணர், சாண் ஏறி முழம் சறுக்கியவர் என்று குறிப்பிட்டார்.

சிந்துவெளி மக்கள் திராவிடர்களே என்ற கருத்தை வலியுறுத்தி, அவர்கள் ஆரியர்களின் படையெடுப்பால், தமிழ கத்துக்கு வந்தனர் என்றவாறு, பாடப்புத்தகங்களிலும் பதிவு செய்தனர். சிந்துவெளி மக்கள், மெசபத்தோயொவினின்றும் வந்து பஞ்சாபில் குடியேறியவர்களே என்ற ஆய்வின் மூலம், தமிழர்கள் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள் அல்லர், அவர்கள் வெளி நாட்டினின்றும் குடியேறியவர்களே என்ற பொய்யைப் பதிவு செய்தனர். இதற்கான காரணம் யாதெனில், ஆரியர்கள் தாங்கள் இந்தியா வின் மூத்த குடியினர், முதன்மைக்குடியினர் என்ற பொய்யை எவரும் ஏற்க மறுத்த நிலையில், தமிழர்களும் தம்மைப் போல் வெளி நாட்டினின்றும் வந்தவர்களே என்ற கருத்தை விதைத்தனர். அண்ணன் முன்னால் வந்தான், தம்பி பின்னால் வந்தான் என்று கூறு வதைப் போல, தமிழர்களும் தம்மைப் போல் வெளி நாட்டினரே என்றும், இந்நாட்டின் தொன்மக்குடியினர் அல்லர் என்றும் கூறினர்.

தமக்கிருந்த அறிவு, ஆட்சி அதிகாரம், சாதிமேன்மை, கல்விச் செறுக்கு ஆகிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தி, தமிழ்மொழியின் புகழைச் சிதைத்த ஆய்வாளர்கள், தங்களது நோக்கங்களை ஓரளவுக்கு, குறுகிய கால அளவிற்கு, நிலை

மொழிகள், அத்திராவிடத்தினின்றும் கிளைத்தன என்ற கொள்கையை வலியுறுத்துவதாகும். இக் கொள்கை, தமிழ் மொழியை பல்லாயிரம் ஆண்டுகள் பின்னுக்குத்தள்ளுவ தோடு, வரலாற்றுக் காலத்தில் அறியப்பட்ட தென்னிந்திய மொழிளோடு, தமிழையும் இணைப்பதாகும். இத்திராவிடக் கொள்கையைப் பற்றி விளங்கிக் கொள்ளாத தமிழர்கள் பலர், தமிழ் என்ற சொல்லின் சமற்கிருதச் சொல்லே திராவிடம் எனக் கூறி வருகின்றனர். தமிழைத் தமிழ் என்று கூறாமல், திராவிடம் எனக் கூறியதற்கான காரணங்கள் யாவை யெ ன்பதை இதுவரை எவரும் விளக்கவில்லை. சமற்கிருதத்தைச் சமற்கிருதம் என்றே தமிழர்கள் கூறும் போது, தமிழ் எவ்வாறு திராவிடமாயிற்று.

பழம் பெரும் மொழி திராவிடம், அதற்கும் முன்மொழி முன் திராவிடம் எனக் கூறும் ஆய்வாளர்களுக்கு ஒரு கேள்வி. வேதங்களிலும், புராணங்களிலும் திராவிடம் என்ற சொல் காணப்படாதது ஏன்? சங்கத் தமிழ் இலக்கியங்களில் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தாதது ஏன்? சமற்கிருதப் பண்டி தர்களே, திராவிடம் என்ற சொல் கி.பி. ஏழாம் நூற்றாண் டுக்குப் பிறகே, சமற்கிருதக் குறிப்புகளில் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். அச்சொல்லை சமற்கிருதத்தில் அறிமுகம் செய்தது யார்?

ஒரு மொழியின் பெயர்க் காரணத்தை ஓரளவாவது அம்மொழியினர் விளக்க முன்வேண்டும். திராவிடம் என்ற மொழிக்கு உரிமையாளர்கள் யார்? தென்னிந்தியர்களே என்று கூறும் ஆய்வாளர்களின் கருத்தை, தற்காலத்தில் கன்னடர் களும், தெலுங்கர்களும், மலையாளிகளும் ஏற்க மறுப்பது ஏன்? தங்களைத் திராவிடன் என்று தமிழனைத் தவிர்த்த வேற்று மொழியினர் தம்மை அழைத்துக் கொள்ளாதது ஏன்? தமிழ் மொழியின் மூப்புத் தன்மையை மறைக்க, தமிழே சிந்துவெளியில் பேசப்பட்டது என்ற வரலாற்று உண்மையைக் கொச்சைப் படுத்த, தமிழும் ஒரு கிளை மொழியே என்பதை உறுதிப் படுத்த, தமிழ்ப் பகைவர்கள் கையாளும் தந்திரமே, திராவிடம் ஆகும்.

தமிழ்நாட்டில் திராவிடம் என்ற பெயரில் இயக்கங்கள் நடத்துகின்றவர்களும், அவைகளைத் தொடங்கியவர்களும் தமிழர்கள் அல்லர், தங்களது அரசியல் பதவிகளுக்காக,

மானவை. தமிழறிஞர்கள் சிலர் அவருடைய ஆய்வுகளுக்கு உதவியிருக்க வேண்டும். முருக வணக்கம் சிந்துவெளியில் காணப்பட்டது. என்பதை மெய்ப்பிக்கப் பல்வேறு சான்று களைத் தந்துள்ளார்.[810] வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கை முறை, சமயம், வணிகம், அறிவியல் தொழில் நுட்பம், ஆகியவைகளை மெய்ப்பிப்பதற்கு, அவர்கள் பேசிய மொழியே முதற்சான்றாக விளங்குகிறது. மொழியை முன்னிறுத்திச் செய்யப்படும் ஆய்வுகளைத் தொடர்ந்து, மேலும் பல புறச்சான்றுகளைப் பெற முயல வேண்டும்.

எஸ். ஆர். இராவ், சமற்கிருதப் பற்றாளர், ஆரியச் சார்பாளர் என்பதால், அவரது ஆய்வுகள் ஒரு தலைப் பக்கமாக அமைந்துவிட்டன. இரா. மதிவாணன் தமிழையே முன் நிறுத்துவதால், அவரையும் சிலர் புறக்கணிக்கின்றனர். அஸ்கோ பர்ப்போலா காட்டும் சான்றுகள், முழுமையும் தமிழ்ச் சொற்களைச் சார்ந்தே காணப்படுகின்றன. சில சமற் கிருதச் சொற்களே மூலம் எனக் கருதி (ஸ்கந்தன், குமாரன்) அவை தமிழில் திரிந்தன என்று அவர் கூறுவதை ஏற்க இயலாது. பர்போலோ தமிழின் ஆழத்தை முழுமையாக அறிந்தவர் அல்லர். சமற்கிருதப் பொருளில் அவர் காட்டும் வேர்ச்சொற்கள், தமிழினின்றும் எடுத்துக் கொள்ளப்பட் டவைகளே என்பதை பர்ப்போலாவுக்கு எவரும் தெரிவிக்க வில்லை. தனது ஆய்வுகளில் தமிழ்ச் சொற்களையே மேற் கோள்களாகக் காட்டும் அவர், அச்சொற்களை திராவிட மொழியென்றும், அத்திராவிட மொழிக்கும் முதலில் இருந்தது, முன்திராவிட மொழியென்றும் கூறுகிறார். அம் முன் திராவிட மொழியே சிந்துவெளியில் பேசப்பட்டது என்றும், எழுதப்பட்டது என்றும் கூறும் கருத்தை ஏற்பதற் கில்லை.

திராவிடம் என்பதே குழப்பமான சொல் எனும் போது, முன்திராவிடம் என பர்ப்போலா உள்ளிட்ட அறிஞர்கள் வலியுறுத்திக் கூறுவது, தமிழைச் சிந்துவெளி மொழியென அவர்கள் ஏற்க வில்லை என்பதையே காட்டுகிறது. தமிழுக்கு முன் மொழி திராவிடம் என்றும், திராவிடத்துக்கும் முன் மொழி முன் திராவிடம் என்றும் கூறும் கொள்கையின்படி, முன்திராவிடம் பல்லாயிரம் ஆண்டுகள் பேசப்பட்டு, அதனின்றும் திராவிடம் கிளைத்தது; தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய

யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர், அரியலூர் – 621 713
அலைபேசி: 98432 73914
மின்னஞ்சல்: yaathisaibooks@gmail.com